https://t.me/tamilpdfebooks

விகடன் பிரசுரம்



பெருந்தலைவர் காமராஜர்

எஸ்.கே.முருகன்

https://t.me/tamilpdfebooks

பெருந்தலைவர் காமராஜர்

https://t.me/tamilpdfebooks

பெருந்தலைவர் காமராஜர்



எஸ்.கே.முருகன்

விகடன் பிரசுரம்

https://t.me/tamilpdfebooks

Title :
PERUNTHALAIVAR KAMARAJAR

© S.K.MURUGAN

ISBN : 978-81-8476-365-2

விகடன் பிரசுரம்: **600**

நூல் தலைப்பு:
பெருந்தலைவர் காமராஜர்

நூல் ஆசிரியர்:
© எஸ்.கே.முருகன்

அட்டை ஓவியம்:
© மணியம் செல்வன்

முதற்பதிப்பு : **ஜூலை, 2011**

விலை : **₹ 105**

பதிப்பாளர்:
பா.சீனிவாசன்

ஆசிரியர்:
கே.அசோகன்

முதன்மை பொறுப்பாசிரியர்:
பொன்ஸீ

தலைமை உதவி ஆசிரியர்:
எஸ்.கோபால்

உதவி ஆசிரியர்கள்:
எம்.நாகமணி, கே.பாகமணி, சிவராஜ்

முதன்மை வடிவமைப்பு:
மு.ராம்குமார்

தலைமை வடிவமைப்பு:
அ.அன்பழகன்

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துமூலமான முன் அனுமதி பெறாமல் மறுபிரதி செய்வதோ, அந்த மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ கம்ப்யூட்டர் சுட்டப்பட தடை செய்யப்பட்டதாகும். புத்தக விமர்சனத்துக்கு மட்டும் இந்தப் புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்ட அனுமதிக்கப்படுகிறது.

விகடன் பிரசுரம்
757, அண்ணா சாலை, சென்னை-600 002.

எடிட்டோரியல் பிரிவு போன்:044-28524074 / 84
விற்பனை பிரிவு போன்: 044-42634283 / 84
e-mail:publications@vikatan.com

https://t.me/tamilpdfebooks

கர்மவீரர் வாழ்க!



ஸ்பெக்ட்ரம் ஊழல் கலர் கலராக ஆடும் இன்றைய காலகட்டத்தில், ‘காமராஜரைப் போல ஒரு அரசியல்வாதி மீண்டும் பிறந்து நாட்டைச் சீர்திருத்த மாட்டாரா’ என ஏக்கத்துடன் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள் மக்கள். காரணம், மக்கள்நலன் ஒன்றை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்த நேர்மையான அரசியல் துறவி அவர்.

காமராஜர், தேசிய அளவில் காங்கிரஸ் தலைவராக இருந்தபோதே, ‘மூத்த காங்கிரஸ் தலைவர்கள் பதவிகளைத் துறந்து, கட்சிப் பணிகளில் ஈடுபட வேண்டும்’ என்கிற ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அதற்கு முன்னுதாரணமாக தானே பதவியிலிருந்து விலகினார்! அவரது செயலைக் கண்ட பிரதமர் நேரு தவித்து, காமராஜரை வழியனுப்ப முடியாமல் நெகிழ்ந்திருக்கிறார்!

தன் தங்கையின் பேரன், நல்ல மார்க் எடுத்து மெடிகல் கவுன்சிலுக்குத் தகுதி பெற்றும், அவரை மருத்துவக் கல்லூரிக்குப் பரிந்துரைக்காமல், கோவை விவசாயக் கல்லூரிக்குப் போகச் சொல்லி அறிவுறுத்தியிருக்கிறார் காமராஜர்!

இதுபோன்ற, மனதை ஈர்க்கும் சம்பவங்கள் மக்களைக் கவர்ந்ததாலேயே அவர் ‘பெருந்தலைவர்’ என்று அழைக்கப் பட்டார். கிராமம் தோறும் கல்விக்கூடங்கள், மதிய உணவுத் திட்டம், தொழிலாளர் நலனுக்காக தொழிற்பேட்டைகள், விவசாயம் செழிக்க அணைத் திட்டங்கள் போன்ற அரிய செயல்களைச் செய்ததால் ‘கர்மவீரர்’ என்று போற்றப்பட்டார்.

காமராஜரின் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை, ஆவணங்களின் உதவியுடன் உறுதி செய்துகொண்டு, சுவைபட எழுதியிருக்கிறார் நூலாசிரியர் எஸ்.கே.முருகன்.

அரசியல் வாழ்க்கை நடத்துபவர்களும், புதிதாக அரசியலுக்கு வரும் இளைஞர்களும் இந்த நூலைப் படித்தால் காமராஜரைப் போல நேர்மையாளராக வாழ வேண்டும் என்ற வைராக்யம் ஏற்படும்.

https://t.me/tamilpdfebooks

- **ஆசிரியர்**

https://t.me/tamilpdfebooks

இறுதிவரை போராளி!

என்னுடைய படிப்பு, பெருந்தலைவர் காமராஜரால் தொடங்கப்பட்டது என்பது ஓர் ஆச்சர்ய உண்மை. விருதுநகர், முத்துராமன்பட்டியில் இருக்கும் எங்கள் வீட்டில் இருந்து 100 அடி தூரத்தில் கட்டப்பட்ட 'கி.பெ.பெரியகருப்ப நாடார் ஆரம்பப் பள்ளி' காமராஜர் கரங்களால் திறக்க ஏற்பாடு நடந்து கொண்டு இருந்தது. காமராஜர் திறக்கும்போது, மாணவர்களால் நிரம்பி இருக்க வேண்டும் என்பதற்காக அக்கம் பக்கத்து வீடுகளில் இருந்த பிள்ளைகளை எல்லாம் அந்தப் பள்ளியில் சேர்த்தார்கள். கையால் தலையைச் சுற்றி மறுபக்கக் காதைத் தொட்டால், படிக்கும் வயது வந்துவிட்டது என்று அர்த்தம். பள்ளியின் எதிர்வீடு என்பதால், எனக்கு அதிலும் சலுகை கிடைக்கவே, நான்கு வயதிலேயே முதலாம் வகுப்பில் சேர்க்கப்பட்டேன். காமராஜர், பள்ளியைத் திறந்துவைத்ததும், ஒவ்வொரு மாணவனுக்கும் ஆரஞ்சு மிட்டாய் கொடுத்தது புகைமூட்டம் போல் நினைவில் இருக்கிறது.

தந்தை கந்தசாமி, தாய் பெரியாயி படிக்காத கூலிப் பணியாளர்கள் என்றாலும் அண்ணன் உத்தமபாண்டியன், அக்கா வாசுகி மற்றும் என்னையும் முடிந்தவரை படிக்க வைத்தார்கள். எங்கள் குடும்பத்தில் முதல் பட்டதாரி என்ற அளவில் என்னுடைய படிப்பு முடிந்தது. ஆனால், அந்தப் படிப்புதான் சென்னைக்கு வந்து வேலை தேடும் தைரியம் கொடுத்தது.

சிறுவயதில் விருதுநகரில் இருந்த காலம்வரை, காமராஜரை ஒரு தலைவர் என்ற ரீதியில் தெரியுமே தவிர, பிரமிக்கும் அளவு தெரியாது. காமராஜர் நினைவு இல்லத்தை ஆயிரம் முறை கடந்து போயிருந்தாலும், உள்ளே சென்று பார்க்க வேண்டும் என்ற எண்ணம் வந்தது இல்லை.

சென்னைக்கு வந்து, பத்திரிகைப் பணியில் சேர்ந்த பிறகே அரசியல்வாதிகளைப் பற்றி அறிய முடிந்தது. தங்கள் சுயநலத்துக்காக அரசியலைப் பயன்படுத்துவதைக் கண்டு ஆதங்கம் வந்தது. சிறந்த அரசியல்வாதிகளைத் தேடி அறியும் ஆர்வம் வந்தது. அந்த தேடுதலில் அப்பழுக்கற்ற அரசியல்வாதியாக, நேர்மையான தலைவராக நான் கண்டவர், பெருந்தலைவர் காமராஜரை மட்டுமே.

காந்தி, நேரு, நேதாஜி, படேல், திலகர், வ.உ.சி., ராஜாஜி, பெரியார் போன்றவர்கள் எல்லாம் தலைவராக இருந்தார்கள் என்றால், அவர்களுக்குப் பின்னே வசதியான குடும்பம் அல்லது உயர் கல்வி இருந்தது. ஆனால், இவை எதுவுமே இல்லாமல் உழைப்பையும், உறுதியையும் மட்டுமே காட்டி இமயம் வரை உயர்ந்தவர் காமராஜர் மட்டுமே.

தனக்கென ஒரு குடும்பம் வேண்டாம், சொந்தம் வேண்டாம், நட்பு வேண்டாம் ஏன்... பெற்ற அன்னையின் அரவணைப்புகூட வேண்டாம்

https://t.me/tamilpdfebooks

என்று பற்றற்ற ஞானியாக அரசியலில் திகழ்ந்தவர் காமராஜர்.

ஒரு நாடு முன்னேற வேண்டும் என்றால், முதல் தேவை, 'அனைவருக்கும் கல்வி' என்பதைக் கண்டுகொண்ட மாமேதை அவர். படிப்புக்கு இடையூறாக உணவு, கட்டணம், தூரம் போன்ற எதுவுமே இருக்கக்கூடாது என்று அத்தனைத் தடைகளையும் உடைத்து, குழந்தைகளை பள்ளிக்கு வரவழைத்த ஏழை பங்காளன்.

ஒரு சொட்டு தண்ணீர்கூட வீணாகக்கூடாது என்று, காட்டாறு ஓடிக் கொண்டிருந்த இடங்களில் எல்லாம் அணைகளைக் கட்டியவர். தொழிற்புரட்சிக்கான அஸ்திவாரம் எழுப்பியவர். வெற்றி, தோல்விகளைச் சமமாகப் பார்த்தவர். அதனால்தான் தான் தோற்றதை, 'ஜனநாயகத்தின் வெற்றி' என்று தன்னைத் தானே விமர்சனம் செய்துகொண்டார்.

நாட்டு நலனுக்காக ஆங்கிலேயரை எதிர்த்துத் தொடங்கிய இவரது போராட்டம், இந்திரா காந்தியின் எமர்ஜென்ஸி வரையிலும் நீடித்தது. கடைசி நொடி வரையிலும் ஒரு போராளியாகவே வாழ்ந்தார். பணம், பதவி, அந்தஸ்து, செல்வாக்கு, சிற்றின்பம் போன்றவற்றால் காமராஜரை வீழ்த்தவே முடியாத நிலையில் பக்குவப்பட்டவராக உயிர் வாழ்ந்தார்.

இந்த நூல் எழுதுவதற்கான சுமார் ஒரு வருட காலமும் காமராஜர் நினைவிலேயே வாழ்ந்தேன். காமராஜர் பற்றிய புத்தகங்கள், காமராஜருடன் பழகியவர்கள், காமராஜரின் உறவினர்கள் என தேடித்தேடி தகவல்களைச் சேகரித்தேன். இத்தனை அரிய மனிதரின் ஆரம்பகால வாழ்க்கை குறித்த முழுமையான தகவல்கள் முறைப்படி அரசாங்கத்தால் பதிவு செய்யப்படவில்லை என்பதுதான் வேதனை. அதனால், இந்த நூலில் காமராஜர் முதல் அமைச்சராகச் செய்த சாதனைகளைவிட, சொந்த வாழ்வுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து இருக்கிறேன். முடிந்தவரை சரியான தகவல்களையே கொடுத்து இருக்கிறேன். தகவல்கள் விடுபட்டிருந்தால், தயவுகூர்ந்து தெரிவியுங்கள், அடுத்த பதிப்புகளில் திருத்திக்கொள்ளவும், வரலாற்றைச் சரியாகச் சொல்லவும் வாய்ப்பாக இருக்கும்.

இப்படி ஒரு மனிதர் நம்மிடையே வாழ்ந்தார் என்பதே வருங்கால சந்ததியினருக்கு ஓர் ஆச்சர்யமாகத்தான் இருக்கும். காமராஜரின் வாழ்க்கையைப் படிப்பவருக்கு தன்னம்பிக்கையும், நாட்டுப்பற்றும் பீறிட்டு எழும் என்பது உறுதி.

இந்த நூலை வெளியிடத் துணையாக இருந்த விகடன் பிரசுர ஆசிரியர் குழுவினர் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காலம் உள்ளவரை காமராஜர் புகழ் ஓங்கட்டும்!

-எஸ்.கே.முருகன்

yeskeymurugan@gmail.com

https://t.me/tamilpdfebooks

இந்த நூல்...

இதயம் வரை இனிக்கும்

ஆர்.பிரபாகரன்,

அரசு கிருத்திகா

ஆகியோருக்கு...

https://t.me/tamilpdfebooks

1

பாலபருவம் 1903-1919

நம் பாரத தேசம் ஆங்கிலேயரின் அராஜக ஆட்சியில் அடிமைப்பட்டுக் கிடந்த காலம். தமிழகத்தின் தென் பகுதியில் இருந்த நெல்லை மாவட்டத்துக்குள் திருமங்கலம், அருப்புக் கோட்டை, சாத்தூர், சிவகாசி ஆகிய ஊர்களுக்கு நடுவே இருந்தது விருதுபட்டி. அந்த விருதுபட்டி கிராமம்தான் இன்றைய விருதுநகர்.

கரிசல் பூமி என்று சொல்வதைவிட கந்தக பூமி என்றுதான் சொல்ல வேண்டும். மழை எப்போதாவது எட்டிப் பார்க்கும் என்பதால் பருத்தி, உளுந்து, சோளம் போன்றவைதான் இந்தப் பகுதியின் விளைபொருட்கள். தண்ணீர் இல்லாமல் வளரக்கூடிய பனைமரம் நிறைய இருப்பதால் கள், பதநீர், நுங்குக்குப் பஞ்சம் இருக்காது.

மழை பெய்தால் மட்டுமே கரை புரண்டு ஓடும் கௌசிக மகாநதி, பெரும்பாலும் காய்ந்தே கிடக்கும். ஆதலால் குடி தண்ணீர் தேடி மண் பானைகளுடன் அலைவதுதான் பெண்களுக்கு மிகப்பெரிய வேலை.

விருதுபட்டி நாடார் இன மக்களிடையே மேகவர்ணம், நாட்டாண்மைக்காரர், வெள்ளைக்கண்ணு, கீழக்கடைகாரர், மேலக்கடைகாரர், பவளக்காரர் என்று ஏராளமான பிரிவுகள் உண்டு. இத்தனை பிரிவுகள் இருந்தாலும், நாடார் என்ற வகையில் ஒற்றுமையாகவே இருந்தார்கள். விருதுபட்டியில் நாட்டாண்மைக்காரர் வகையறாவில் பெயர் சொல்லக்கூடிய அளவு முக்கியஸ்தர் சுலோசன நாடார். விருதுபட்டி பஞ்சாயத்து போர்டில் உறுப்பினராகவும், விருதுபட்டியை ஒட்டி இருந்த முத்துராம்பட்டியின் கிராம முன்சீப்பாகவும், அதாவது அன்றைய மணியக்காரராகவும் இருந்தார். சொல்வன்மை மிக்கவராகவும் இருந்ததால் சுலோசன நாடாருக்கு ஊருக்குள் நல்ல பெயர்.

இவரது தங்கை பார்வதிக்கும் மேகவர்ணம் வகையறாவைச் சேர்ந்த சின்னப்ப நாடாருக்கும் திருமணம் வெகு சிறப்பாக நடந்தது. ஆண்டுகள் உருண்டன. ஆனாலும் இந்த தம்பதிக்கு மகப்பேறு வாய்க்கவில்லை. ஊரில் சக்தி வாய்ந்த மாரியம்மன் கோயிலுக்கும், குலதெய்வமான

https://t.me/tamilpdfebooks

காமாட்சி அம்மனுக்கும் தினம் தினம் பூஜை செய்தும் பார்வதிக்குக் குழந்தை பாக்கியம் கிட்டவில்லை.

இதனால் கவலை அடைந்த பார்வதியிடம், 'நம்ம காமாட்சி அம்மனுக்கு பூ கட்டிப் போட்டு பார்த்திடுவோம். சிவப்புப் பூ வந்தா காத்திருப்போம், வெள்ளைப் பூ வந்தா தத்து எடுத்துக் கொள்வோம்' என்று வழி காட்டினார் சுலோசன நாடார். அண்ணன் சொல்லுக்கு மறுபேச்சு கிடையாது என்பதால் குடும்பத்தினர் அனைவரும் காமாட்சி அம்மன் கோயிலில் கூடி நிற்க, பூசாரி இரண்டு பொட்டலங்களில் பூ வைத்து அம்மன் சந்நிதி முன் குலுக்கிப் போட்டார். கூட்டத்திலிருந்து ஒரு சிறுமியைத் தேர்ந்து எடுத்து சீட்டு எடுக்கச் சொன்னார்கள்.

'குழந்தையை தத்து எடுத்துக்கொள்' என்று அம்மன் கட்டளை போட்டு இருந்தது. உடனே குழந்தையை தத்து எடுத்துக்கொள்ளும் பணியை அண்ணன் மேற்கொண்டார். ஊருக்குள் சல்லடை போட்டுத் தேடினார்கள். மேகவர்ணம் வகையறாவிலிருந்து குமாரசாமி என்ற சிறுவனைத் தேர்வு செய்தார்கள். தத்து எடுப்பதை, ஒரு பெரிய விழாவாகவே கொண்டாடினார்கள்.

பார்வதியும் சின்னப்ப நாடாரும், தங்களுக்குக் கடவுள் கொடுத்த குழந்தை என்றே குமாரசாமியை அன்புடன் வளர்த்தார்கள். குமாரசாமி அதிர்ந்துகூட பேசாத அமைதி குணம் கொண்டவராக வளர்ந்தார். கூட்டத்தைக் கண்டாலே விலகிப் போகும் அளவுக்கு சாந்தமானவர்.



காமராஜர்

https://t.me/tamilpdfebooks

குமாரசாமி வாலிபப் பருவம் அடைந்ததும், தனது அண்ணன் மகள் சிவகாமியை திருமணம் செய்துவைத்து அழகு பார்த்தார் பார்வதி. அவர்கள் விருதுபட்டிக்கு அழகு சேர்க்கும் வகையில் ஊருக்கு நடுவே அமைக்கப்பட்டிருந்த தெப்பக்குளத்தின் எதிரே இருந்த ஒரு குட்டித் தெருவான சுலோசன நாடார் தெருவில் குடியமர்த்தப்பட்டார்கள். இந்த தெருவில்தான் அண்ணன் சுலோசன நாடார் வீடும் இருந்தது.

விருதுபட்டியில் 1903, ஜூலை 15-ம் தேதி, குமாரசாமி-சிவகாமி தம்பதிக்கு முதல் குழந்தை பிறந்தது.

முதல் குழந்தைக்கு குலதெய்வத்தின் பெயர் வைப்பது வாடிக்கை என்பதால் பிறந்த குழந்தைக்கு, 'காமாட்சி' என்று பெயர் சூட்டினார் பாட்டி பார்வதி. ஆனால், தந்தை குமாரசாமியும், தாய் சிவகாமியும் குழந்தையை, 'ராஜா' என்று வாய் நிறைய அழைப்பதையே விரும்பினார்கள். 'குலதெய்வத்தின் பெயர் வைத்தும், கூப்பிடாவிட்டால் சாமி குற்றமாகிவிடும்' என்று பயந்தாள் பார்வதி. அதனால் காமாட்சி என்றுதான் கூப்பிடவேண்டும் அழுத்தமாகக் கட்டளை இட்டார். அதனால் பாட்டி சூட்டிய காமாட்சி, தாங்கள் சூட்டிய ராஜா ஆகிய இரண்டையும் சேர்ந்து 'காமராஜ்' என்று அழைத்தார்கள்.

விருதுபட்டியில் தேங்காய் மொத்த வியாபாரத்தில் பங்குதாரராக தொழில் நடத்திவந்தார் குமாரசாமி. சரக்குகளை வைப்பதற்கு என்று தனி கிடங்கு வைத்து பெரிய அளவிலேயே வியாபாரம் நடந்தது. செல்வம் கொழிக்கவில்லை என்றாலும் நிம்மதியான, வசதியான வாழ்வு வாழ்ந்தார்கள். குமாரசாமிக்கு நிலம், வீடு, நகை, பணம் எல்லாமே போதுமான அளவுக்கு இருந்தன.

காமராஜரின் பாட்டி பார்வதி

https://t.me/tamilpdfebooks

காமராஜர் பிறந்த நான்கு வருடங்கள் கழித்து, குமாரசாமி, சிவகாமி தம்பதிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அந்த குழந்தைக்கு நாகம்மாள் என்று பெயர் சூட்டினார்கள். தங்கை நாகம்மாள் மீது காமராஜருக்கு அன்பு அதிகம். 'பாப்பா... பாப்பா...' என்று அழைப்பார். விளையாட்டுகளில் எல்லாம் தன்னுடன் தங்கையைச் சேர்த்துக்கொண்டு கொட்டம் அடிப்பார்.

தாய் சிவகாமி

சின்ன வயதில் காமராஜருக்கு மிகவும் பிடித்த விளையாட்டு பொம்மலாட்டம். பத்திரிகை, நோட்டீஸ் ஆகியவற்றில் வரும் உருவங்களை வெட்டி எடுத்து, அட்டைகளில் ஒட்டி வைத்து பொம்மைகள் தயாரிப்பார்கள். வீட்டிலிருந்து வேட்டியை எடுத்து வந்து திரையாகக் கட்டுவார் காமராஜர். சிம்னி விளக்கு ஏற்றப்பட்டு, திரைக்குப் பின்னால் பொம்மைகளை கைகளில் வைத்துக்கொண்டு ஆட்டம் காட்டி, பாட்டுப் பாடுவார்கள். இருள் சூழ்ந்ததும் தெருவில் உள்ள சிறுவர்கள் அனைவரும் ஒன்றுகூடி அமர்ந்து, காமராஜரின் பொம்மலாட்டத்தை ரசிப்பார்கள். சில சமயம் பெரியவர்களும் ரசித்துப் பாராட்டுவார்கள்.

https://t.me/tamilpdfebooks

தங்கை நாகம்மாள்

சிவகாமியின் சகோதரர்களில் ஒருவரான கருப்பையா நாடார், விருதுநகரில் ஜவுளிக்கடை வைத்திருந்தார். இன்னொருவரான காசி நாராயண நாடார் திருவனந்தபுரத்தில் மரக்கடை நடத்திவந்தார்.

கல்வி

அந்தக் காலத்தில் ஐந்து வயது பிறந்ததும் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பும் முன்னர், 'ஏடு தொடங்குதல்' என்ற சடங்கை, மகிழ்ச்சி விழாவாக நடத்துவது வழக்கம். அதாவது சரஸ்வதி பூஜை அன்று தாய் மாமன் மடியில் குழந்தையை அமரவைத்து, புத்தாடை அணிவித்து, நகைகள் பூட்டி, பூக்கள் சூட்டி திண்ணைப் பள்ளிக்குக் கொண்டுபோய் சேர்ப்பார்கள்.

அதன்படி தந்தை குமாரசாமி, காமராஜரைப் பள்ளியில் சேர்ப்பதற்கு தடபுடலான ஏற்பாடுகள் செய்தார். நாட்டாண்மைக்காரர் சுலோசன நாடார் அளவில்லாத ஆனந்தத்துடன் ஓடியாடி வேலை செய்தார். பாட்டி பார்வதியும், தாய் சிவகாமியும் வீட்டைக் கழுவி, மாவிலைத் தோரணம் கட்டி, அலங்காரம் செய்து, விருந்து ஏற்பாடு செய்தனர். உற்றார் உறவினர் எல்லோரும் வந்து சேர, தாய் மாமன் கருப்பையா நாடார் தோளில் காமராஜரை உட்காரவைத்து ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள்.

வேலாயுதம் என்ற ஆசிரியரின் ஏட்டுப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டார் காமராஜர். வேலாயுதத்தின் கால்கள் சற்றே ஊனம் என்பதால் அவரை 'நொண்டி வாத்தியார்' என்று அழைப்பார்கள்.

அந்தக் காலத்தில் ஆரம்பப் படிப்பு என்பது பெரும்பாலும் ஆசிரியர் கூறுவதைக் கேட்டு வாய்மொழியாக ஒப்பிப்பது. அரிச்சுவடி, ஆத்திசூடி, கொன்றைவேந்தன், உலகநீதி போன்றவற்றை ராகம் போட்டு வாத்தியார் பாட, மாணவர்கள் திருப்பி ஒப்பிக்க வேண்டும். இதைத்

https://t.me/tamilpdfebooks

தவிர, மணலில் தமிழ் எழுத்துகளை எழுதச் சொல்லித் தருவார்கள். கற்றுத் தருவதற்கு வாத்தியார் கூலியாக ஒரு படி நெய் கொடுத்து காமராஜரை படிக்க அனுப்பினார்களாம்.

வேலாயுதம் மிகவும் கண்டிப்பானவர். மாணவர்கள் சரியாக மனப்பாடம் செய்து ஒப்பிக்காவிட்டாலும், சேட்டை செய்தாலும் கடுமையாக தண்டித்துவிடுவார். தலையில் வலி ஏற்படும்படி பலமாகக் குட்டுவார்; தலை வீங்கிவிடும். காதைப் பிடித்துத் திருகுவார். பல நேரங்களில் காமராஜர் தலையில் குட்டு வாங்கி, அழுதுகொண்டே வீட்டுக்கு வருவார். இதனால் மனம் வருந்திய பாட்டி பார்வதி அந்தப் பள்ளிக்குத் தொடர்ந்து காமராஜரை அனுப்ப மறுத்துவிட்டார்.

பின்னர், காசுக்கடைத் தெருவில் இருந்த முருகையா வாத்தியாரின், 'ஸ்ரீமத் ஏனாதிநாத நாயனார் வித்யாசாலை'யில் காமராஜரை சேர்த்துப் படிக்க வைத்தார்கள்.

ஸ்ரீமத் ஏனாதிநாத நாயனார் வித்யாசாலையில் சர்வ அலங்காரத்தில் காமராஜர்

ஸ்ரீமத் ஏனாதிநாத நாயனார் வித்யாசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுடன் காமராஜர், சர்வ அலங்காரத்துடன் அமர்ந்து இருக்கும், 14-12-1908 அன்று எடுத்த, புகைப்படம்தான், நமக்குக் கிடைத்திருக்கும் அவரது சிறு வயது புகைப்படம். இது ஒன்றுதான் அவரது மாணவப் பருவ புகைப்படம்.

அன்று காமராஜருக்கு செய்யப்பட்டு இருந்த அலங்காரத்தை சிவகாமி,

https://t.me/tamilpdfebooks

பின்னாட்களில் ஒரு பத்திரிகையில் கீழ்க் காணும்படி பதிவு செய்திருக்கிறார்.

"ஐயாவுக்கு அந்த வருஷந்தான், 'மகர் நோன்பு' சட்டை வேட்டி எடுத்தோம். கை அகல சரிகை போட்ட பட்டுக் கெண்டை வேஷ்டி! ஊதா வெல்வட் பட்டுச் சட்டை! கால்ல வெள்ளித் தண்டை... ரெண்டு கையிலும் தங்கக் காப்பு! அதுக்கு மேலே தோள்ல பூட்டும் பாசிப் பந்து. கழுத்துல தங்கக் கெவுடு! (ருத்ராட்சம்), காதுல வெள்ளைக் கடுக்கன். பாட்டி பார்வதி பட்டுப் போல தலையை வாரி ஜடை பின்னிவிட்டாங்க... தலையிலே கவர்னர் (ஜரிகை) தொப்பி. நெத்தியிலே சந்தனப்பொட்டுன்னு நம்ம ஐயா முருக வாத்தியாரோட மக்களோட நாற்காலியிலே ஜோரா உட்கார்ந்திருந்தார். அந்த அழகே அழகுய்யா! உம்... ஐயாவோட செல்வம், சீர் எல்லாம் அவங்க ஐயாவோட காலத்தோட போச்சு..."

சிவகாமியின் வார்த்தைகளைச் சேர்த்து, அவர் கண்களை மனதில் கொண்டுவந்து புகைப்படத்தைப் பார்த்தால் அது இன்னும் அதிகமாகப் பேசும்.

சின்ன வயதிலிருந்தே துணிச்சலும் தைரியமும் நிறைந்தவராக காமராஜர் வளர்ந்திருக்கிறார் என்பதற்கு, ஒரு சம்பவத்தை உதாரணமாகச் சொல்ல முடியும்.

மகர நோன்பு தினத்தன்று சுவாமி அம்பு போடுவது, சிறுவர்களின் கும்மி, கோலாட்டம், பெரியவர்களின் சிலம்பம், புலி வேஷம் என்று ஊரே கொண்டாட்டமாக இருக்கும். அன்று சிறுவர்களுடன் சேர்ந்து விளையாடிக்கொண்டு இருந்த காமராஜரை முருகையா வாத்தியார் அழைத்து, "நொண்டி வாத்தியார் வீட்டுக்குச் சென்று, சித்தர் பாடல் புத்தகம் வாங்கி வா" என்று சொல்லி அனுப்பினார்.உடனே சிறுவர்களுடன் நொண்டி வாத்தியார் வீட்டுக்குச் சென்றார் காமராஜர். நொண்டி வாத்தியார் தனிக்கட்டை. அந்தப் பிற்பகல் நேரத்தில் தனியே படுத்துத் தூங்கிக் கொண்டு இருந்தார். உள்ளே நுழைந்த சிறுவர்களுக்கு அதிர்ச்சி! வாத்தியார் அருகே ஒரு பாம்பு வளைந்து, நெளிந்து சென்றுகொண்டிருந்தது!

காமராஜருடன் வந்திருந்த வஸ்தாத் ராம் நாடாரின் இளைய மகன் நாராயணன் முதல் ஆளாக அலறியடித்துக்கொண்டு வெளியே ஓடினான். மற்றவர்களும் காமராஜரை, "வாடா வெளியே ஓடலாம்..." என்று சொல்லி, சட்டையைப் பிடித்து இழுத்தார்கள். ஆனால், காமராஜர் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு நொண்டி வாத்தியார் அருகே சென்று, பாம்பின் வாலைப் பிடித்து நொடியில் சுழற்றிச் சுவரில் அடித்தார். அதற்குள் சிறுவர்களின் அலறல் கேட்டு நொண்டி வாத்தியார் விழித்துக்கொண்டார். அக்கம்பக்கத்தினரும் வந்து சேர்ந்தார்கள்.

https://t.me/tamilpdfebooks

தங்கை நாகம்மாளுடன் இந்திரா காந்தி

‘சின்ன வயசானாலும் என்னா துணிச்சல்... நாட்டாண்மை வீட்டுத் தம்பி வாத்தியார் உசுரைக் காப்பாத்திடுச்சு’ என்று வந்தவர்களும், நொண்டி வாத்தியாரும் ஆச்சர்யப்பட்டார்கள். சமயோசிதமும், துணிவும் கொண்ட மகனைப் பெற்றதற்காக குமாரசாமி மனம் மகிழ்ந்தார்.

காமராஜரின் வளர்ச்சியையும், எதிர்கால சாதனைகளையும், இந்திய நாட்டின் தலையெழுத்தையே மாற்றி எழுதிய துணிச்சலையும் பார்க்கத்தான் தந்தை குமாரசாமிக்கு கொடுத்து வைக்கவில்லை.

க்ஷத்திரிய வித்தியாசாலை

ஸ்ரீமத் ஏனாதிநாத நாயனார் பள்ளியில் ஒரு வருடம் மட்டுமே படித்த காமராஜர் அடுத்து, விருதுபட்டியில் தலைசிறந்த பள்ளியாகத் திகழ்ந்த ‘பிடி அரிசிப் பள்ளி’ எனப்படும் ‘க்ஷத்திரிய வித்தியாசாலை’ பள்ளியில் ஆங்கில மீடிய படிப்பில் சேர்ந்தார். இந்தப் பள்ளி கட்டப்பட்ட விதமே அலாதியானது. ஆகவே, இந்தப் பள்ளி காமராஜர் வாழ்க்கையில் ஒரு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

‘விருதுபட்டியில் மாடிக் கட்டடத்துடன் சிறந்த இலவசப் பள்ளி ஒன்றைத் துவக்க வேண்டும்’ என்று விருதுநகர் நாடார் வியாபாரிகள் முழு முயற்சி எடுத்தார்கள். விருதுநகரில் உள்ள வியாபாரிகள் அனைவருமே பில் போடும்போதே, மகமைக்கு என்று சிறு தொகையை வசூல் செய்வது வழக்கம். அப்படி வசூலித்த மகமைப் பணம் கட்டடம் கட்டுவதற்குப் போதவில்லை. அப்போதுதான், இலவசப் பள்ளிக்குக் கைகொடுக்க முன் வந்தார்கள் விருதுபட்டி பெண்மணிகள்.

https://t.me/tamilpdfebooks

நிஜலிங்கப்பாவுடன்...

ஊரில் இருந்த வீடுதோறும், பெண்களிடம் ஒரு மண்பானை தரப்பட்டது. ஒவ்வொரு நேரம் சமையல் செய்யும்போதும் ஒரு கைப்பிடி அரிசி எடுத்து பானையில் போட்டு சேமிக்க வேண்டும் என்று திட்டம் இடப்பட்டது. பணக்கார வீடுகளில் பெண்கள் அள்ளி அள்ளிச் சேமித்தார்கள், மற்றவர்கள் தங்களால் இயன்றவரை சேமித்தார்கள். ஊரெங்கும் எல்லா வீடுகளிலும் இந்தச் சேமிப்பு மும்முரமாக நடைபெற்றது. சிறு துளி பெரு வெள்ளமாகி மூட்டை மூட்டையாக அரிசி சேர்ந்தது. அத்தனை அரிசியும் விற்கப்பட்டு, பள்ளி கட்டுவதற்குத் தேவையான பணம் சேர்க்கப்பட்டது.

பிடி அரிசியின் மகிமையால் வளர்ந்த பள்ளி ஆதலால், அந்தப் பள்ளிக்குப் பிடி அரிசிப் பள்ளி என்ற பட்டப்பெயரும் உண்டு. அதனால்தான் அந்தப் பள்ளியின் இலச்சினையில் பிடி அரிசியால் ஆலமரமாக எழுந்த பள்ளி என்பது விளக்கப்படமாகவும் பாரதியின் பாடல் வரியான, 'புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்' என்ற வாசகமும் இடம் பெற்று இருக்கும். அங்கே படித்ததால், பிடி அரிசித் தத்துவத்தை நெஞ்சில் நிறுத்திக்கொண்டார் காமராஜர்.

காமராஜர் கூத்திரிய வித்தியாசாலையில் சேர்ந்த சில மாதங்களிலேயே, குதூகலத்துடன் வாழ்ந்து வந்த அந்தக் குடும்பத்தில் ஓர் எண்ணிக்கை குறைந்தது. காமராஜரின் தாத்தா சின்னப்ப நாடார், எதிர்பாராத வகையில் திடீரென மரணம் அடைந்தார். இந்த சோகத்திலிருந்து குடும்பம் மீண்டு வருவதற்குள், அதாவது காமராஜருக்கு ஆறு வயதே ஆன நேரத்தில், அந்தக் குடும்பத்தில் மீண்டும் ஒரு பெரிய இடி விழுந்தது.

https://t.me/tamilpdfebooks



குல்சாரிலால் நந்தாவுடன்...

தந்தை மரணம்

விருதுபட்டியில் சனிக்கிழமைகளில் வியாபாரம் படு ஜோராக நடக்கும். அக்கம்பக்கத்து ஊர்களிலிருந்து ஆட்கள் கூடுவார்கள். கடைக்காரர்களுக்கு உட்கார நேரம் இருக்காது. தேங்காய் மண்டியிலும் வியாபாரம் மிகவும் பரபரப்பாக நடந்தது. எப்போதும் மதியம் ஒரு மணிக்கே சாப்பாட்டுக்கு வீட்டுக்குக் கிளம்பும் குமாரசாமி, அன்று கூட்டம் அதிகமாக இருந்ததால் தொடர்ந்து வேலை செய்துகொண்டே இருந்தார். சுமார் மூன்று மணிக்குதான் கொஞ்சம் ஓய்வு கிடைத்தது.

உழைத்துக் களைத்துப் போயிருந்த குமாரசாமி அகோரப் பசியுடன் வீட்டுக்கு வந்தார். பசியுடன் வந்தவர், அவசரம் அவசரமாக வயிறு புடைக்க சாப்பிட்டார். திடீரென, 'மயக்கம் வருகிறது, தலை நோவு எடுக்கிறது' என்று சொன்னபடி படுத்தார். தொட்டுப் பார்த்த சிவகாமி அதிர்ச்சி அடைந்தார். உடல் கொதித்தது. உடனே நாட்டு வைத்தியருக்குத் தகவல் பறந்தது. நாட்டாண்மைக்காரர் சுலோசன நாடாரும் ஓடோடி வந்தார். வைத்தியர் வந்து பார்த்து கஷாயம் கொடுத்தார்.

https://t.me/tamilpdfebooks



குழு புகைப்படத்தில் நேருஜியுடன் காமராஜர்

'விடிந்தால் சரியாகிவிடும்' என்று நாட்டு வைத்தியர் நம்பிக்கை தந்துவிட்டுப் போனார். ஆனாலும் குமாரசாமிக்குத் தலைவலி குறையாமல் இருக்கவே, அந்த நாளில் விருதுபட்டியில் ஆங்கில வைத்தியம் தெரிந்த லோகல் பண்ட் ஆஸ்பத்திரி டாக்டர் ராயரை குதிரை வண்டி வைத்து அழைத்து வந்து, குமாரசாமிக்கு சிகிச்சை செய்தனர். குமாரசாமி மாத்திரைகள் சாப்பிட்டார், என்றாலும் உடல் நிலையில் எந்த மாற்றமும் இல்லை.

குமாரசாமிக்கு உடல் சரியில்லை என்ற செய்தி பஜாரில் பரவியதால், வியாபாரிகளும், பஜாரில் வேலை செய்பவர்களும் கூட்டம் கூட்டமாக வந்து பார்த்து ஆறுதல் சொல்லிவிட்டுப் போனார்கள். சிவகாமியும், பாட்டி பார்வதியும் கலங்கிப் போய், எதுவும் செய்யத் தோன்றாமல் சாமி மாடத்தில் விளக்கு ஏற்றி வைத்துக் கும்பிட்டார்கள். தெரிந்த அத்தனை கடவுளுக்கும் நேர்த்திக்கடன் போட்டார்கள்.

நள்ளிரவு தாண்டியதும் குமாரசாமிக்கு விழிப்பு வந்தது. முகம் கொஞ்சம் தெளிவானது. குடும்பத்தினருக்கு நம்பிக்கை வந்தது. அனைவரும் குமாரசாமியைச் சுற்றி அமர்ந்தபடி நலம் விசாரித்தார்கள். அவர் ஏதோ சொல்லத் துடித்தார்; ஆனால், வார்த்தை வெளிவரவில்லை. 'விடிவெள்ளி முளைக்கிறது. ஆகா... விடியப் போகிறது, கணவர் நலமடையப் போகிறார்' என்று சிவகாமி சிந்தித்த வேளையில் கண் திறந்தார் குமாரசாமி.

https://t.me/tamilpdfebooks

லால் பகதூர் சாஸ்திரி, காமராஜர், நேருஜி

சிவகாமியின் கையைப் பிடித்தார். கையை உயர்த்தி ஏதோ சொல்ல வாய் எடுக்கும் முன்னரே... அவர் கரம் தாழ்ந்தது, கண்கள் மூடின, முச்சு நின்றது! எதற்கும் கலங்காத சுலோசன நாடார் இரு பெண்களையும் பார்த்துக் கதறி அழுதார். அவரது அழுகை விருதுபட்டி முழுவதும் எதிரொலித்தது!

நீங்காத துயிலில் ஆழ்ந்துவிட்ட குமாரசாமியின் சடலத்துக்கு எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டினார்கள். பழக்கடை வியாபாரிகள் பன்னீர் ஊற்றினார்கள். குருக்கள் பால் ஊற்றினார். சந்தன நீர் விட்ட பிறகு புத்தாடை போர்த்தப்பட்டது. சீவி முடித்த சின்னக் குடுமி, விரிந்த நெற்றி நிறைந்த விபூதிப் பூச்சு, சந்தனப் பொட்டு என்று குமாரசாமியின் சடலம் ஊர் பார்க்க, வீட்டுக்கு முன் கிடத்தப்பட்டது.

ஊரில் இருந்த நாடார்கள் மட்டும் இன்றி அத்தனை ஜாதி பிரமுகர்களும் வந்து கூடினார்கள். ஊர்வலம் ஒன்றரை மைல் தூரம் நீண்டது என்று சொல்லும் அளவுக்கு சவ ஊர்வலம் நடைபெற்றது. சாத்தூர் ரோட்டில் இருந்த இடுகாட்டில் குமாரசாமியின் உடல் எரியூட்டப்பட்டது. காமராஜர் கொள்ளிக் குடம் உடைத்தார். அனைத்து சடங்குகளையும் செய்தார். ஆனால், தந்தையின் இழப்பையும்... சோகத்தையும் உணர்ந்துகொள்ளும் பக்குவமும் வயதும் காமராஜருக்கு அப்போது இல்லை. குமாரசாமியின் ஞாபகமாக ஒரு புகைப்படம்கூடக் கிடையாது என்பது பெரும் சோகம்.

கணவர் இறந்தவுடன் வெள்ளை ஆடை உடுத்தத் தொடங்கிய சிவகாமி குழந்தைகளை வளர்ப்பதற்காக தெளிவான ஒரு முடிவு எடுத்தார். தன் காதுகளில் தொங்கிக்கொண்டு இருந்த பாம்படங்களைத் தவிர அத்தனை நகைகளையும் விற்றார். அன்றைய மதிப்பில் அவை மூவாயிரம் ரூபாய்க்கு விலை போனது. சுலோசன நாடார் ஆலோசனையின் பேரில் அந்தப் பணத்தை நம்பிக்கையான ஒரு வியாபாரிக்கு வட்டிக்கு விட்டார். அதனால் ஒவ்வொரு மாதமும் ரூபாய் முப்பது வட்டி வரும்படி செய்துகொண்டார்.

https://t.me/tamilpdfebooks

உடன்பிறந்த சகோதரர்கள் உதவி செய்யத் தயாராக இருந்தபோதும், தன் குடும்பத்தைத் தானே காப்பாற்ற வேண்டும் என்று முடிவு எடுத்து, அதைச் செயல்படுத்தினார் சிவகாமி. அன்றைய மதிப்பில் முப்பது ரூபாய் என்பது கணிசமான தொகையானதால், குடும்பம் வறுமையிலிருந்து தப்பியது. ஒவ்வொரு செலவையும் சிக்கனமாகச் செய்தாலும் குழந்தைகளுக்கு வறுமையின் சுவடே தெரியக்கூடாது என்று நினைத்தார்.

குடும்பத்தின் குலவிளக்கு என்று காமராஜருக்கு அதிக செல்லம் கொடுத்து வளர்த்தார்கள். தந்தை இல்லாத குறை தெரியக்கூடாது என்பதற்காகவே கேட்டதை எல்லாம் வாங்கிக் கொடுத்து, வளர்த்தார்கள். பாட்டி பார்வதியும், தாயார் சிவகாமியும் ரொம்பவும் பாசமாக வளர்த்ததால், அதிகம் ஊர் சுற்றினார். அதனால் காமராஜருக்கு படிப்பின் மீது நாட்டம் குறைந்தது.

கண்டிக்க யாரும் இல்லாத சூழலில் காமராஜர் மனம் போன போக்கில் சுதந்திரப் பறவையாக வளர்ந்தார் என்பதை அவரது தாயார் சிவகாமி சொல்லி இருக்கிறார்.

"அவன் வீட்டுலேயே தங்க மாட்டான், தலை முழுக வர மாட்டான். என்னைய பாடாப் படுத்துவான். கொட்டற மழையிலே எங்கே போவானோ, எங்கே திரிவானோ? வலை போட்டுத் தேடினாலும் அகப்பட மாட்டான். ஆனா ஒண்ணு... காய்ச்சல், தலைவலின்னு எப்பவும் படுத்ததே இல்லை. சின்னப் பிள்ளையிலே ரொம்பக் கோபக்காரனா இருந்தான். ரொம்ப அடம் பிடிப்பான்.

இப்போ எங்கே போச்சோ அந்தக் கோபமெல்லாம்? அப்படி இருந்தவனா இவ்வளவு அறிவாளியாயிட்டான்னு எனக்கே அதிசயமா இருக்கய்யா... அந்த முருகப் பெருமான்தான் இவ்வளவு அறிவைக் கொடுத்திருக்கணும்" என்று மனம் திறந்து பேசி இருக்கிறார்.

https://t.me/tamilpdfebooks

காமராஜரின் இளமைப் பருவம்

படிப்புக்கு முழுக்கு!

கூழத்திரிய வித்தியாசாலை மிகவும் கண்டிப்பான பள்ளி என்பதால் செல்லமாக வளர்ந்த காமராஜருக்கு படிப்பு கசந்தது. நன்றாகப் படிக்க வேண்டும் என்ற எண்ணத்தில், அவருக்கு இரவுப் பாடம் ஏற்பாடு செய்யப்பட்டது. காலையில் பள்ளியில் படிப்பு முடித்து, இரவு தனியாக ஆசிரியரிடம் டியூஷன் படித்தார்.

'பட்ட காலிலேயே படும், கெட்ட குடியே கெடும்' என்பதைப் போல காமராஜர் குடும்பத்தில் மீண்டும் ஓர் இருள் சூழ்ந்தது. ஆம், குடும்பத்தின் ஆணி வேரான நாட்டாண்மை சுலோசன நாடாரும் மரணம் அடைந்தார். குடும்பமே சோகத்தில் மூழ்கியது. சுலோசன நாடாரின் மூத்த மகன் கருப்பையா நாடார் நாட்டாண்மைப் பொறுப்பையும், குடும்பப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டார்.

படிப்பைவிட பராக்கு பார்ப்பதிலும், ஊரில் நடக்கும் கூட்டங்களில் கலந்துகொள்வதையும் காமராஜர் வழக்கமாக்கிக் கொண்டதை தெரிந்துகொண்ட மாமா கருப்பையா நாடார் கோபமானார். அதனால் காமராஜரிடம், "நீ படிச்ச வரை போதும். இனி படிப்பு வேண்டாம், கடை வேலை பார்க்கலாம்" என்று சொல்லிவிட்டார். அதனால், ஆறாம் வகுப்பு முடிக்காமலேயே காமராஜர் படிப்பு முடிவுக்கு வந்தது.

அப்போது விருதுபட்டியில் இருந்த பெரும்பான்மையான நாடார்

https://t.me/tamilpdfebooks

சமூகத்தினர் வியாபாரத்தில்தான் இருந்தனர். பருத்தி, காபி, ஏலக்காய், மிளகாய், எண்ணெய் வித்துகள் வியாபாரம் அமோகமாக இருந்தது. அதனால், தங்கள் பிள்ளைகளுக்கு ஓரளவு கணக்குப் பார்க்கத் தெரிந்தாலேபோதும் என்றே நினைத்தார்கள். நிறையப் படித்து அரசாங்க உத்தியோகம் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் அப்போது விருதுபட்டியில் இல்லை.

ஆறாம் வகுப்பிலேயே காமராஜருக்கு தமிழ் நன்றாக எழுதப் படிக்கத் தெரிந்துவிட்டது, கணக்கும் இங்கிலீஷும் பரவாயில்லை என்ற நிலை. அதனால் இதுவே போதும் என்ற முடிவுக்கு வந்தார் மாமா. முக்கியமாக காமராஜர், வயதுக்கு மீறி, பொது விஷயங்களில் தலையிடுவதை மாமாவால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. படிப்பை நிறுத்திவிட்டு வேலைக்கு அனுப்பினால்தான் உருப்படுவான் என்று நினைத்து, படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்தார். உண்மையில், மாமாவின் முடிவு காமராஜருக்கு சந்தோஷத்தையே கொடுத்தது. ஆனால், அவருடைய தாய்தான் மிகவும் வருத்தப்பட்டார். காமராஜரை பத்தாவது வரையாவது படிக்கச் சொன்னார். ஆனால், காமராஜர் கேட்கவே இல்லை.

விருதுபட்டியில் கிருஷ்ணசாமி நாயுடுவும் காமராஜரும்

"படிக்கப் போங்கய்யா..." என்று தாயார் கெஞ்சிக் கேட்ட போதும், "மூளைக்கு எட்டல... போகப் பிடிக்கல" என்று காரணம் சொல்லி பள்ளிக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார் காமராஜர்.

'கையெழுத்துப் போடவும், கடிதம் படிக்கவும் தெரிந்தால் போதும்' என்று எல்லோருமே காமராஜருடைய பள்ளிப்படிப்பு முடிவுற்றதை ஏற்றுக்கொண்டனர். அண்ணனை மீறி, அடம்பிடிக்கும் பிள்ளையை வலுக்கட்டாயமாக அனுப்ப சிவகாமிக்கும் மனமில்லை. அதனால், காமராஜரின் படிப்பு அறைகுறையாக முடிவுக்கு வந்தது.

விளையும் பயிர்

பள்ளியில் படித்த காலத்தில் காமராஜர் வாழ்வில் நடந்த சில

https://t.me/tamilpdfebooks

சம்பவங்கள் அவரது தனித்தன்மையைக் காட்டுபவை. பள்ளிப் பருவத்தில் சடுகுடு விளையாட்டில் ஆர்வமாக இருந்தார் காமராஜர். ‘பிடி... பலி... சடுகுடு, நான்தான்டா வீரன், நல்ல மருது வீரன், வெள்ளிப் பிரம்பெடுத்து விளையாட வந்தேன்டா... தங்கப் பிரம்பெடுத்து தாலிகட்ட வந்தேன்டா’ என்று மூச்சுப்பிடித்தபடி சடுகுடு பாடுவதில் சமர்த்தர் காமராஜர்.

ஆட்களை அவுட் ஆக்கிவிட்டுத் தப்பித்து வருவதிலும், பாட்டுப் பாடி தம் கட்டி வருகிறவர்களை அமுக்கிப் பிடிப்பதிலும் காமராஜர் கெட்டிக்காரர்.

ராமச்சந்திரன் என்ற மாணவன் நல்ல வெள்ளையாக இருப்பான். அதனால் அவனை, ‘ஒயிட்’ ராமச்சந்திரன் என்றே அழைப்பார்கள். சடுகுடு போட்டியில் கில்லாடியான அவன் ஒரு நாள் காமராஜரைப் பார்த்து, "நான் கலர்ல மட்டுமில்ல, சடுகுடுப் போட்டியிலயும் வெள்ளைக்காரன்டா... என்னய யாராலும் ஜெயிக்க முடியாது" என்று சவால்விட்டான்.

அது வரை அமைதியாக இருந்த காமராஜர், உடனே அவனை வெள்ளைக்காரனாகவே நினைத்துக் களத்தில் குதித்தார். ‘நான்தான்டா வெள்ளைக்காரன்’ என்றபடி, பாடிவந்த ஒயிட் ராமச்சந்திரன் மீது பாய்ந்து, அமுக்கி, சரியான உடும்புப்பிடி போட்டார் காமராஜர். அவன் அலறிய பின்னரே விடுவித்து, வெற்றிவீரனாகக் களத்திலிருந்து வெளியேறினார் காமராஜர். வெள்ளைக்காரன் என்ற சொல் அவரை அத்தனை தூரம் உசுப்பேற்றியது.

காமராஜர் இரண்டாவது வகுப்பு படித்தபோது, விருதுபட்டிக்கு அருகில் உள்ள ரோசல்பட்டி கிராமத்தைச் சேர்ந்த பெருமாள் என்ற மாணவனும் உடன் படித்தார். மதிய உணவு நேரத்தில், பெரும்பாலான மாணவர்கள் வீட்டுக்குச் சென்று சாப்பிட்டுவிட்டு வருவது வழக்கம். ஆனால், தொலைவில் இருந்த தன் வீட்டுக்குச் சென்றுவர பெருமாளால் இயலாததால் மதிய நேரத்தில் பெரும்பாலும் தண்ணீர் குடித்தே பசியை ஆற்றிக்கொள்வார்.

இதைத் தற்செயலாக அறிந்துகொண்ட காமராஜர் அடுத்த நாளே ஒரு காரியம் செய்தார். பாட்டி பார்வதியிடம், "இனி, மதிய நேரம் சாப்பிட வீட்டுக்கு வர முடியாது... சாப்பாடு கட்டிக் கொடுங்கள்" என்று அடம்பிடித்து மதிய உணவு எடுத்துக்கொண்டு போனார். தன்னுடன் பெருமாளைச் சேர்த்துக்கொண்டு இருவரும் சேர்ந்து பசியாறினார்கள்.

‘சின்னப் பையன் எப்படி அவனாகச் சாப்பிடுவான்?’ என்று பாசத்துடன் ஓடி வந்த பாட்டி, காமராஜரின் செயலைக் கண்டு திகைத்து, ஆச்சர்யமும் ஆனந்தமும் அடைந்தார்.

பாட்டியைக் கண்டு காமராஜர் பதற, அவரோ வாஞ்சையுடன் இருவரையும் அருகே அமரவைத்து வயிறார உணவை ஊட்டிவிட்டு, ஆளுக்குக் காலணா கொடுத்து தின்பண்டம் வாங்கிக்கொள்ளச் சொல்லிக் கிளம்பினார். அதற்குப்பின் தினமும் பெருமாளுக்கும் சேர்த்தே கூடுதலாக உணவு கொடுத்து அனுப்பினார். தன்னுடன் படித்த

https://t.me/tamilpdfebooks

ஒரு நண்பன் பசியோடு இருக்கக்கூடாது என்ற காமராஜரின் சின்ன வயதுச் சிந்தனைதான், இந்த நாட்டு மாணவர்கள், மக்கள் அனைவரது வயிற்றுப் பசியையும் போக்கியது என்றே சொல்லலாம்.

விநாயக சதுர்த்தி

கூஜத்திரிய வித்தியாசாலா பள்ளியில் விநாயக சதுர்த்தி, ஆயுத பூஜை போன்ற பண்டிகைகளை சிறப்பாகக் கொண்டாடி மாணவர்களுக்குப் பொங்கல், சுண்டல், பொரி, கடலை, தேங்காய், பேரிக்காய் ஆகியவை தருவது வழக்கம். இதற்காக மாணவர்களிடம் இருந்து ஒன்றே காலணா பெற்றுக் கொண்டார்கள்.

கொண்டாட்டம் முடிந்த பின்னர் மாணவர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது. மாணவர்கள் முண்டியடித்து பிரசாதம் வாங்க முயன்றார்கள். அதைக் கண்டித்து அனைவரையும் நிதானமாக, வரிசையாக வரச்செய்து, சமமாகப் பிரசாதம் வழங்க வேண்டிய பொறுப்பில் இருந்த ஆசிரியரோ அதைப் பொருட்படுத்தாமல் இருந்தார். முதலில் சென்றவர்களுக்கு தேங்காய் பத்தை, வெல்லக் கட்டி, வாழைப்பழம், விளாம்பழம், பேரிக்காய், அவல், பொரி என்று அனைத்தும் கிடைத்தன. கூட்டம் குறையக் குறைய கொடுக்க வேண்டிய பொருட்களும் குறைந்தன. முண்டியடிக்காமல் ஓரமாக ஒதுங்கி நின்று கடைசியில் வாங்கிய காமராஜருக்கு எஞ்சியதே கிடைத்தது.

எல்லா மாணவர்களும் மேல் துண்டு நிறைய பிரசாதம் வாங்கி வந்தபோது, பேரன் சிறிதளவு மட்டுமே எடுத்து வருவதைப் பார்த்து, பாட்டி காரணம் கேட்டார். அதற்கு காமராஜர், "எல்லா மாணவர்களையும் வரிசையில் நிற்க வைத்து அனைவருக்கும் சமமாக ஆசிரியர் கொடுத்திருக்க வேண்டும். அப்படி செய்யாமல் வாத்தியார் தவறு செய்துவிட்டார். அதனால் நான் வாங்க விரும்பவில்லை. வாத்தியார் ஏன் இப்படி நடந்துகொண்டார்? முண்டியடிச்சு சண்டை போட்டாத்தான் பொரி கிடைக்குமா? காசு சரியா கொடுத்த எனக்கு ஏன் குறைவா

https://t.me/tamilpdfebooks

போடணும், நாளைக்கே வந்து வாத்தியாரை என்னன்னு கேளுங்க" என்று ஆதங்கப்பட்டார்.

எல்லோருக்கும் எல்லாம் சமமாகக் கிடைக்க வேண்டும் என்ற சிந்தனை அந்த வயதிலேயே காமராஜரிடம் இருந்திருக்கிறது. அதுமட்டும் இன்றி தனக்கென எதையும் அள்ளிக்கொள்ளும் அற்ப குணம் இல்லாதவர் என்பதையும் இந்த சம்பவத்திலிருந்து அறிய முடிகிறது.

பிடித்த உணவு

சின்ன வயதிலிருந்தே காமராஜருக்கு சாப்பாட்டில் அதிக ஈடுபாடு கிடையாது. அசைவம் வேண்டும், சுவையான உணவு வேண்டும் என்று அடம்பிடிக்க மாட்டார். விளையாட்டுப் பிள்ளையாக இருந்ததால், எது கிடைக்கிறதோ அதை உண்பார். வெந்தயக் குழம்பு, வெங்காய வடகம், கூழ் அப்பளம் ஆகியவைதான் அவருக்குப் பிடித்த உணவு. அரைக்கீரை கடைந்தது என்றால் கூடுதலாக சாப்பிடுவார். காரம், இனிப்பு ஆகியவை மிகுதியாக இருந்தால் பிடிக்காது. இந்த உணவுப் பழக்கம் காரணமாக கடைசி காலம் வரை காமராஜருக்கு எந்த உடல் தொந்தரவும் ஏற்படவில்லை.

முட்டைக் கணக்கு

மூன்றாம் வகுப்பில் காமராஜருக்கு ஆசிரியர் தங்கையா. அவர் கணக்கு சொல்ல, மாணவர்கள் நோட்டுப் புத்தகத்தைப் பார்க்காமல் பதில் எழுத வேண்டும். ஒருமுறை, 'ஒரு வீட்டில் அம்மா, அப்பா, பாட்டி, அண்ணன், தங்கை என அனைவருக்கும் ஆளுக்கு இரண்டு முட்டை கொடுக்க வேண்டும் என்றால், மொத்தம் எத்தனை முட்டைகள் வாங்க வேண்டும்?' என்று கணக்குக் கேட்டார்.

காமராஜருக்கு முன்னால், நன்றாகக் கணக்குப் போடும் மாணவன் ராமையா இருந்தான். அவன் ஒரு நொடியில் கணக்குக்கு விடை எழுதிவிட்டான். நீண்ட நேரமாக எதுவும் எழுதாமல் இருந்த காமராஜரைக் கவனித்து, 'பாவம், ஆசிரியரிடம் அடி வாங்க நேரிடுமே' என்று பரிதாபப்பட்டு சிலேட்டைக் காட்டினான். ஒரு முறை நிமிர்ந்து பார்த்த காமராஜர், வேகமாக விடை எழுதினார்.

https://t.me/tamilpdfebooks

அந்த நேரம் பார்த்து, பள்ளியைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு வந்த தலைமை ஆசிரியர் மாணிக்கவாசகம், ராமையா சிலேட்டைக் காட்டுவதையும், அதைப் பார்த்து காமராஜர் எழுதுவதையும் பார்த்துவிட்டார். உடனே ஆவேசமாக வகுப்பு அறைக்குள் நுழைந்து, "காப்பியா அடிக்கிறே" என்று சொல்லிப் பிரம்பை எடுத்து காமராஜரை விளாசினார்.

ஆசிரியர் தங்கையாவுக்கு காமராஜரின் குணம் நன்றாகத் தெரியும். ஆதலால் ஓடோடி வந்து தடுத்தார். என்ன என்று தலைமை ஆசிரியரிடம் விளக்கம் கேட்டுப் புரிந்து கொண்டவர், மாணவன் ராமையா, காமராஜர் ஆகிய இரண்டு பேருடைய சிலேட்டையும் வாங்கிப் பார்த்தார். பார்த்தவர் முகத்தில் சந்தோஷம், ஒரு திருப்தி. ஏனென்றால் ராமையா பத்து என்று விடையை சரியாக எழுதி இருந்தான். ஆனால், காமராஜரோ எட்டு என்று விடை எழுதியிருந்தார். தலைமை ஆசிரியர் ஒரு கணம் தடுமாறினார்.

"நீதான் அவன் சிலேட்டைப் பார்த்தியே... இருந்தும் ஏன் தப்பா எழுதினே?" என்று கேட்டார்.

அதற்குக் காமராஜர், "எங்க வீட்டுல ஒருத்தருக்கு முட்டை இல்லை சார்!" என்றார்.

"யாருக்கு?"

"எங்கய்யாவுக்கு..." காமராஜரின் குரல் தழுதழுத்தது; கண்ணீர் பெருகியது. காமராஜருடைய தந்தை இறந்ததை தலைமை ஆசிரியர் அறிவார். தான் செய்த தவற்றை உணர்ந்து, இரக்கத்துடன் காமராஜருக்கு ஆறுதல் சொன்னார்.

மந்திரம், தந்திரம்!

அந்தக் காலத்தில் மாரியம்மன் கோயில் திடலில் அவ்வப்போது ஜால வித்தை செய்பவர்கள் வந்து ஜமுக்காளம் விரித்து தந்திரங்களை மந்திரம் போன்று செய்து காட்டுவார்கள். ஒருசமயம், பீதாம்பர அய்யர் என்பவர் தொடர்ந்து பதினைந்து நாட்கள் ஜால வித்தை செய்து

https://t.me/tamilpdfebooks

காட்டினார். காமராஜருக்கு ஜால வித்தையின் மீது ஆர்வம் இருந்ததால் அந்த நேரத்தில், அவர் கூடவே இருந்து உதவிகள் செய்தார். அவர் ஊருக்குப் போகும் முன்னர் காமராஜருக்கு சில தந்திரங்களை சொல்லிக் கொடுத்து விட்டுப் போனார். அதை மாணவர்கள் மத்தியில் செய்துகாட்டிப் பெயர் வாங்கினார் காமராஜர்.

வீட்டில் பாட்டி, அம்மா போன்றவர்கள்கூட, காமராஜர் தந்திரம் செய்கிறார் என்பது புரியாமல், மந்திரக்காரன் ஏதோ செய்துவிட்டான் என்று முதலில் பயந்தது உண்டு. ஆனால், அதன்பின் அனைவருக்கும் தந்திர ரகசியத்தை உடைத்துச் சொல்லிவிட்டார். ஆனாலும், கத்தியிலிருந்து ரத்தம் வடிய வைப்பது, முட்டையைத் தானே ஆடச்செய்வது, பீடியை சுற்ற வைப்பதைப் போன்ற மேஜிக்குகளைத் தொடர்ந்து செய்து காட்டி நண்பர்களிடம் பெயர் வாங்கினார் காமராஜர்.

உயிர் காப்பான் தோழன்!

விடுமுறை என்றாலே காமராஜர் நண்பர்களுடன் சேர்ந்து காடு, ஆற்றுமேடு என்று சுற்றிக்கொண்டு இருப்பது வழக்கம். கிணற்றில் மூழ்கி நீச்சல் அடிப்பது, சொர்க் அடிப்பது என்று விளையாட்டுத்தனம் அதிகமாகவே இருக்கும். தண்ணீருக்குப் பயந்துகொண்டு நண்பன் தனுஷ்கோடி அதில் குதிக்காமல் இருக்கவே, ஒருநாள் யாரும் எதிர்பார்க்காதபோது கிணற்றுக்குள் தனுஷ்கோடியைத் தள்ளிவிட்டார். தனுஷ்கோடி தத்தளிப்பதைக் கொஞ்ச நேரம் வேடிக்கை பார்த்துவிட்டுப் பின்னர் அவனை வெளியே தூக்கிவிட்டார்.

"வெளியே இருக்கும் வரை நீச்சல் கற்றுக்கொள்ள முடியாது. தண்ணீரில் இறங்கினால்தான் பயம் போகும்" என்று கற்றுக் கொடுத்தார்.

ருசியான சப்பாத்திக் கள்ளிப் பழம் சாப்பிடுவது சிறுவர்களுக்கு மிகவும் பிடித்தமான ஒன்று. ஆனால், அதை சாப்பிடுவது ஒரு கலை. கவனமாக சாப்பிட வேண்டும். பழத்தின் அடிப்பாகத்தை கிள்ளி வாயில் வைத்துக்கொண்டு, அண்ணாந்து பார்த்தபடி, கைகளால் பழத்தை நசுக்கினால் உள்ளே இருக்கும் சுளை குபுக்கென்று வெளியே வந்து தொண்டைக்குள் விழும். இந்த பழத்தின் உள்ளே நட்சத்திர வடிவில் முள் இருக்கும். பழத்தை நசுக்கும்போது முள் தொண்டைக்குள் போகாமல் கைகளில் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.

https://t.me/tamilpdfebooks

கிருஷ்ணசாமி நாயுடுவுடன் காமராஜர்

நண்பர் பட்டாளத்துடன் காமராஜர் சப்பாத்திக் கள்ளிப் பழ வேட்டையில் இருந்த சமயத்தில், சிறுவன் சின்னமணிக்கு மொத்தமாகப் பழங்கள் கிடைத்தன. உடனே, ஆசை ஆசையாக எடுத்து உண்ணத் தொடங்கினான். அவசரத்தில் நட்சத்திர முள் தொண்டையில் சிக்கிக்கொண்டது. அவ்வளவுதான்! சின்னமணியின் வாயிலிருந்து ரத்தமும் நுரையும் வந்தது. பயந்துபோய் மல்லாந்து விழுந்தான் சின்னமணி. மற்ற நண்பர்கள் பயந்து போய் ஓடினார்கள்.

ஒரு கணம் சிந்தித்த காமராஜர், சின்னமணியைத் தோளில் தூக்கிக்கொண்டு, பாரம் தாங்காமல் தட்டுத் தடுமாறி நடந்து ஒருவழியாக ஊருக்கு வந்துசேர்ந்தார். ஊருக்குள் நுழைந்ததும், கூட்டம் சேர்ந்தது. ஒரு பெரியவர் சின்னமணியை வாங்கிக் கொண்டு, மேலரத வீதியில் இருந்த வைத்தியர் நமச்சிவாயம் வீட்டுக்குக் கொண்டு சென்றனர்.

நிலைமையை அறிந்த வைத்தியர், ஓர் ஊதுகுழலை சின்னமணியின் வாயில் வைத்து உறிஞ்சினார். நல்லவேளையாக உடனே அந்த நட்சத்திர முள் வெளியே வந்தது; சின்னமணியின் உடலும் அசைந்தது. அதற்குள் விஷயத்தைக் கேள்விப்பட்டு சின்னமணியின் உறவினர், காமராஜரின் தாய், பாட்டி ஆகியோர் வைத்தியர் வீட்டுக்கு வந்தார்கள்.

ஊர் மக்கள் அனைவரும் காமராஜரைப் பாராட்டினார்கள். ஆனால், தாயும் பாட்டியும் பதறினார்கள். இனிமேல் சப்பாத்திக் கள்ளியைத் தேடிச் செல்லக்கூடாது என்று கண்டித்தனர். அதற்குப் பின் காமராஜரும் பழம் தேடுவதை அறவே கைவிட்டு விட்டார்.

மாரியம்மனுக்கு வேடம்

பங்குனி பொங்கல் என்றால் விருதுபட்டி களைகட்டும். அக்கம்பக்கத்து கிராமங்களிலிருந்து மக்கள் எல்லாம் ஒன்றுகூடி பொங்கல் வைத்து, தீச்சட்டி வேண்டுதல்களை நிறைவேற்றுவார்கள். பெண்கள், ஆண்கள் என்ற பாகுபாடு இன்றி பெரும்பாலோர் இருபத்தியொரு நாள் உண்ணாவிரத நோன்பு இருப்பார்கள். சிறுவர்கள் அதிகாலையில் எழுந்து மாரியம்மனுக்கு தண்ணீர் ஊற்றுவார்கள். காமராஜருக்கும்

https://t.me/tamilpdfebooks

இதில் அதீத ஆர்வம் உண்டு.

சிறுவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து 'சேத்தாண்டி' வேடம் போடுவார்கள். உடம்பில் கரும்புள்ளி, வெண்புள்ளி குத்தி, வெறும் டிராயர் மட்டும் அணிந்து கொண்டு கரி மற்றும் சுண்ணாம்பைக் கரைத்து, உடல் முழுவதும் பொட்டு வைத்துக்கொண்டு, தட்டு ஏந்தி, வீடு, கடைகளில்ல் காசு வாங்கி அம்மன் உண்டியலில் போட்டு வேண்டுதலை நிறைவேற்றுவார்கள்.

வேடம் பூணுவதில் காமராஜருக்கு அலாதிப் பிரியம். வேடம் போட்டதும், கொடுக்காய்ப்புளி விதைகளை எடுத்து, நூலில் கோத்து, மாலையாகப் போட்டுக்கொண்டு, 'ஆகோ... அய்யாகோ... ஆத்தாத்தா... பெரியாத்தா... அஞ்சாறு பிள்ளைகளை பெத்தாத்தா... என்னையும் சேர்த்து பெத்தாத்தா... எனக்கு நாழி போடாத்தா' என்று பாட்டுப்பாடிக்கொண்டு ஊர்வலம் செல்வார். இன்றும் இந்த வழக்கம் விருதுநகரில் நிலவி வருகிறது.

ஆசிரியர் சற்குணம்!

காமராஜர் கூத்திரிய வித்தியாசாலைப் பள்ளியில் படிக்கும்போது அவருக்குப் பாடம் கற்பித்தவர் ஆசிரியர் அ.சற்குணம். விளையாட்டுச் சிறுவனாக, விடுதலைப் போராட்ட வீரனாக, முதல் அமைச்சராக காமராஜரைக் கண்டு ரசித்தவர். அவர் காமராஜரை இளம் வயதிலேயே அடையாளம் கண்டவர் என்று சொல்லலாம்.

"'டேய் காமராஜா!' என்று அழைத்த குரலுக்கு ஓடி வருவான் சிறுவன் காமராஜர். படிப்பில் அக்கறை இல்லாமல் இருப்பதைக் கண்டு அடிக்கடி புத்தி சொல்வேன். ஆனால், அவனோ அதை எல்லாம் காதில் போட்டுக்கொள்ளவே மாட்டான். பள்ளி மாணவர்களிடையே அவன் பேசுவது எல்லாம் காந்தி, சத்தியாகிரகம் என்பதாகவே இருக்கும். அவனது அரசியல் ஆர்வத்தைக் கண்டு, 'பிற்காலத்தில் அரசியலில் பெரும் பங்கு வகிப்பான்' என்று நினைத்திருக்கிறேன்.

https://t.me/tamilpdfebooks



நான் எதிர்பார்த்தபடியே, படிப்பைத் தொடராமல் நிறுத்தி விட்டான். அரசியலில் தீவிரமாக ஈடுபட்டு விருதுநகரில் விடுதலைப் போராட்ட வீரராக, அரசியல் தலைவராக, பின்னர் கனம் காமராஜர் என்று அழைக்கும் அளவுக்குப் பெரும் மனிதராக மாறினார்" என்று சொல்லி இருக்கிறார் சற்குணம்.

காமராஜர் முதல் அமைச்சரானதும் அவரை நேரில் சந்திக்கும் வாய்ப்பு சற்குணத்துக்குக் கிடைத்தது. அதைப்பற்றி விவரித்து இருக்கிறார் ஆசிரியர் சற்குணம்.

"ஒருநாள் விருதுநகருக்கு பெரிய அதிகாரிகள், இரண்டொரு மந்திரிகள், பல்வேறு பிரமுகர்களுடன் காமராஜர் வந்திருந்தார். பழைய ஆசிரியனாக நான் அங்கே நின்றுகொண்டு இருந்தேன். என்னைக் கண்டதும் என் மாணவன் முகம் மலர்ந்தது. அந்தஸ்து, பதவி எல்லாவற்றையும் மறந்து எனக்கு முன்னால் கை கூப்பி வணங்கி, 'சார்! சௌக்கியமா?' என்று பணிவுடன் விசாரித்துவிட்டு, சுற்றி நின்றவர்களிடம், 'இவர் எங்க வாத்தியார்' என்று அறிமுகம் செய்து வைத்தார். உண்மையில் அத்தனை பெரிய மனிதரிடம் இருந்து அப்படி ஒரு பணிவை எதிர்பார்க்கவில்லை" என்று கண்ணீர் சிந்தி இருக்கிறார் சற்குணம்.

பயம் அறியாத வயது

https://t.me/tamilpdfebooks

காமராஜர் விளையாட்டுத்தனமாக இருந்தாலும், பயம் என்பதை அறியாமல் வளர்ந்தார் என்பதற்கு இன்னொரு சாட்சி கோயில் யானைக்கு மதம் பிடித்த சம்பவம்.

விருதுபட்டி வெயிலுகந்தம்மன் கோயிலில் யானை கட்டப்பட்டு இருக்கும். பள்ளிக்கு அருகே கோயில் இருந்ததால் அவ்வப்போது யானையுடன் விளையாடச் சென்றுவிடுவார். விடுமுறையின்போது எப்போதும் யானைக்கு அருகிலேயே இருந்து, யானைப்பாகன் மாரியப்ப தேவருடன் நட்பாகிவிட்டார். புல் எடுத்துப் போடுவது, பக்தர்கள் கொடுக்கும் வாழைப்பழத்தை வாங்கிக் கொடுப்பது என்று யானையுடன் மிகவும் பிரியமாக இருந்தார்.

யானை, சாணம் போட்டதும் ஓடோடிச் சென்று, அதன் மீது ஏறி மிதிப்பது உண்டு. ஆவி பறக்கும் சாணத்தை மிதித்தால் காலில் முள் குத்தாது, பித்த வெடிப்பு ஏற்படாது, தேக வலிமை ஏற்படும் போன்ற நம்பிக்கைகள் இருந்ததுதான் காரணம். அப்போது ஓர் அசம்பாவிதம் நடந்தது!

பாகன், யானையைக் குளிப்பாட்டக் கொண்டு சென்ற சமயத்தில் அதற்கு மதம் பிடித்து கண்டபடி ஓடத் தொடங்கியது. யானைப்பாகன் என்ன செய்வது என்று தெரியாமல் தவிக்க, பொதுமக்கள் ஆளுக்கு ஒரு திசையில் சிதறி ஓடினார்கள். யானையைக் கட்டும் சங்கிலியை அதன் துதிக்கையில் கொடுத்து, அழைத்து வருவது வழக்கம். அன்று யானைப்பாகன் சங்கிலி கொண்டுவர மறந்துவிட்டதை காமராஜர் கவனித்தார். உடனே கோயிலுக்கு ஓடிச் சென்று சங்கிலியை எடுத்து வந்து யானையின் துதிக்கையை நோக்கி வீசினார்.

அவ்வளவுதான்! அது வரை வெறியாட்டம் போட்டுக்கொண்டு இருந்த யானை அப்படியே அடங்கிவிட்டது. காமராஜர் பயம் துளியும் இன்றி அருகே சென்று அதைத் தட்டிக் கொடுத்தார். அமைதி அடைந்த யானையைப் பாகன் எவ்வித சிரமமும் இன்றி அழைத்துச் சென்றான். காமராஜரின் இந்த தீரச்செயல் ஊர் முழுவதும் பரவியது.

எல்லோரும் பாராட்டினாலும் தாயும் பாட்டியும் பதறிப் போனார்கள்.

https://t.me/tamilpdfebooks

இப்படி விளையாட்டுத்தனமாக இருக்கிறானே, இப்படியே வளர்ந்தால் உயிருக்கு ஆபத்து நேருமே என்று கவலைப்பட்டார்கள்.

உடற்பயிற்சி

ஊர் சுற்றுவது மிகவும் பிடித்தாலும், உடலை முறுக்கோடு வைத்துக்கொள்ள வேண்டும் என்பதிலும் அதிக அக்கறை செலுத்தியவர் காமராஜர். சாத்தூர் ரோட்டில் உள்ள அறுபத்திமூவர் மட குஸ்திப் பள்ளியில் தினமும் காலையில் ஆஜராகி தண்டால், சிலம்பம், கர்லா கட்டை சுற்றுதல் போன்ற பயிற்சிகளைச் செய்துவந்தார். சின்ன வயதானாலும் குஸ்தி சண்டை பழகுவதிலும் ஆர்வமாக இருந்தார். விருதுபட்டியில் நடந்த வண்டிப் பந்தயத்தில் கலந்துகொண்டு ஜெயித்திருக்கிறார். கம்பி பார், அந்தர் பல்டி, யோகாசனம் போன்றவை அங்கு நடந்தாலும் காமராஜர் அவற்றில் ஆர்வம் காட்டவில்லை. காமராஜர் சுற்றிப் பழகிய கர்லா கட்டை இப்போதும் அவர் வீட்டு மாடியில் காட்சிப் பொருளாக இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

முறுக்கு மாலை

காமராஜருக்கு முறுக்கு மிகவும் பிடிக்கும். அதனால் வீட்டில் எப்போதும் முறுக்கு சரம் மாலை போல் தொங்கும். அதை எடுத்து ஒவ்வொன்றாகச் சாப்பிடுவது வழக்கம். ஊரில் நடைபெற்ற பாம்பே ஷோவைப் பார்க்க, முறுக்கு மாலையுடன் கிளம்பினார் காமராஜர். அந்த ஷோவில் வெள்ளைக்கார வில்சனுக்கு தனிப் பெருமை ஒன்று உண்டு.

வில்சன் 144 அடி உயர கம்பத்தின் மீது ஏறி நின்றான். கீழே தண்ணீர்த் தொட்டி இருந்தது. மேலே ஏறிய வில்சன் ஓர் அங்கியால் தன்னை மூடி, இறுகக் கட்டிக்கொண்டான். முதுகில் கட்டியிருந்த டின்னிலிருந்து மண்ணெண்ணெய்யை தன் மீது ஊற்றிக்கொண்டு, தீ பற்ற வைத்தான். தீ குபுகுபுவென எரிய, அங்கிருந்து நேராகத் தண்ணீர்த் தொட்டியில் குதித்தான். உள்ளே விழுந்தவன் சிறிது நேரத்தில் தொட்டியிலிருந்து அங்கி இல்லாமல் வெளியேறி, கூட்டத்துக்கு சல்யூட் அடிக்கவே விசில் சப்தமும், கைதட்டல்களும் குவிந்தது.

ஷோவைப் பார்க்கவந்த சப் கலெக்டர் அவனுக்கு மாலை அணிவித்துப் பாராட்ட, பலரும் நோட்டு மாலை போட்டனர். பாராட்டுகளும், பரிசுகளும் குவிந்தபோது, திடீரென வில்சன் கழுத்தில் முறுக்கு மாலை விழுந்தது. ஆம்! காமராஜர்தான் தன்னுடைய மகிழ்ச்சியை முறுக்கு மாலை போட்டு வெளிப் படுத்தினார்.

ஆனால், வில்சன் ஆவேசப்பட்டான். தன்னை ஒரு சிறுவன் அவமானப்படுத்திவிட்டான் என்று கருதி காமராஜரை அப்படியே தூக்கினான். நிலைமை விபரீதம் ஆவதை காமராஜர் உணர்ந்ததும், திடுக்கென்று, முறுக்கு மாலையில் இருந்து ஒரு முறுக்கைப் பிடுங்கி வில்சனின் வாயில் திணித்தார். முறுக்கு ருசி வில்சனை மயக்கியது. உடனே, தூக்கிய சிறுவனை விடுவித்துப் பாராட்டினான். அதன் பின் விருதுபட்டியில் சர்க்கஸ் நடக்கும்வரை இருவருக்கும் நட்பு நீடித்தது.

வேலைக்குச் சேர்ந்தார்

https://t.me/tamilpdfebooks

விருதுநகரிலேயே காமராஜர் இருந்தால் அவருடைய மனதை மாற்ற முடியாது என்று சிவகாமி நினைத்தார். ஆதலால், முதலில் போடிநாயக்கனூரில் உறவினர் கடைக்கு அவரை வேலைக்கு அனுப்பினார். அங்கு தங்க மனம் இன்றி, சுவரில் அடித்த பந்து போலத் திரும்பி வந்தார். அதன்பின் திருவனந்தபுரத்திலிருந்த ஓர் உறவினர் வீட்டுக்கு அனுப்பி வைத்தார். அங்கும் அதே நிலைதான்.

அதனால் வேறு வழி இன்றி விருதுநகர் பஜாரில் துணிக்கடை வைத்திருந்த தனது சகோதரர் கருப்பையா நாடார் கடைக்கு காமராஜரை அனுப்பி வைத்தார். விருதுபட்டியிலேயே வேலை, அதுவும் நண்பர்கள் இருக்கும் பஜாரில் கடை என்றதும் காமராஜர் சந்தோஷமானார். மகிழ்ச்சியுடன் கடை வேலைக்குச் சென்றார்.

நேர்மையான வியாபாரி

கீரை வியாபாரம் செய்யும் அம்மணி என்பவர் தனது பேத்தி தமயந்திக்காக சீட்டித் துணி எடுத்தார். துணியின் நிற அழகில் மயங்கிய பாட்டி, காமராஜரிடம் பணத்தைக் கொடுத்து, மீதியை வாங்கிக்கொண்டு நடையைக் கட்டினார். துணியை வாங்கிக் கொண்டு, நான்கு தெருக்கள் தாண்டி போனவுடன், பின்னால் யாரோ ஓடி வருவது தெரிந்து நின்றார். காமராஜர்தான் தபதபவென ஓடிவந்தார்.

"என்ன தம்பி ரூபாயை கூட கொடுத்திட்டியா? இல்லேன்னா வேற ஏதாவது விஷயமா? ஏன் ஓடி வர்றே?" என்று கேட்டாள்.

"இல்லே... ரூபாய் மீதம் குடுத்தேனே சரியா இருக்கா?" என்று கேட்டார் காமராஜர்.

"சரியா இருந்திச்சு, எண்ணித்தானே பைக்குள்ளே வைச்சேன்."

"நான் சரியாத்தான் கொடுத்தேன்... நீங்களும் சரியா எண்ணிப் பார்த்தீங்க. ஆனா, சுருக்குப் பையில வைக்கும்போது மூணு துட்டை கீழேயே வைச்சுட்டீங்க... இந்தாங்க" என்று நீட்டினார்.

https://t.me/tamilpdfebooks

அம்மணிக்கு ஆனந்தம் தாங்கவில்லை. "நாட்டாண்மைக்கார வீட்டுப் பிள்ளைன்னா தங்கம்தான். சங்கிலி கருப்பசாமி... நீ என்னைக்கும் இந்த ராசாவுக்கு துணையா இருப்பா" என்று வேண்டிக்கொண்டு புறப்பட்டார் அம்மணி.

துணி வாங்கப் பகலில் ஆட்கள் வருவது குறைவு என்பதால், அப்போது கடைகளில் இருந்த நாளிதழ்களை ஆழ்ந்து, முழுவதுமாகப் படித்துவிடுவார். காமராஜரின் அடுத்த கட்ட வளர்ச்சி இந்தக் கடையில்தான் தொடங்கியது. ஆம், சுதந்திரப் போராட்டத்தில், காங்கிரஸ் கட்சி எப்படி எல்லாம் செயல்பட்டு வருகிறது; யார்யாரெல்லாம் தலைவர்களாக இருக்கிறார்கள்; என்னவெல்லாம் பேசுகிறார்கள் என்பதை நாளிதழ் படித்து மனதில் பதிந்துகொண்டார். இந்திய நாட்டைப்பற்றியும், இந்திய அரசியலைப்பற்றியும் இங்கேதான் அறிந்துகொண்டார்.

தான் கற்றுக்கொண்டதையும், தன் கருத்துகளையும் நண்பர்களுடன் பகிர்ந்துகொண்டார். பஜாரில் இருந்த ஞானம் பிள்ளை பொடிக்கடையில் காமராஜர் நண்பர்கள் அனைவரும் ஒன்று கூடுவார்கள். காமராஜர் சொல்வதை ஆர்வத்துடன் நண்பர்கள் கேட்டுக்கொள்வார்கள். நாடு சுதந்திரம் அடைய ஏதாவது செய்ய வேண்டும் என்று அவர்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

விருதுபட்டி திடலில் பொதுக்கூட்டங்கள் நடைபெறும். ஆரம்பம் முதல் முடியும் வரை கூட்டத்தில் பேசப்படும் கருத்துகளை கவனத்துடன் கேட்பார் காமராஜர். அவருடைய மனதில் இருந்த சுதந்திர தாகம் எல்லை மீறியது.

ஆரம்பத்தில், துணிக் கடையை மூடிய பின்னர் கூட்டங்களுக்குச் சென்றவர், பின்னர் ஏதாவது சாக்கு போக்கு சொல்லிவிட்டு மாலை நேரத்திலேயே கடையிலிருந்து வெளியேறத் தொடங்கினார். காமராஜரின் கவனம் திசை மாறுவதை அறிந்த அவர் மாமா, மிகவும் கவலை அடைந்தார். உடனே வீட்டுக்கு வந்து சிவகாமி முன்னிலையில் அறிவுரை வழங்கினார்.

‘அரசியல் சோறு போடாது... சின்ன வயதினர் யாரும் அதில் கலந்துகொள்ளக்கூடாது. தேவையில்லாத சிக்கல்கள் வரும். போலீஸ், ஜெயில் என்று வாழ்க்கை கெட்டுப் போகும். பணம் சம்பாதிக்க முடியாது, வாழ்க்கை சிறப்பாக அமையாது’ என்று நிறையவே அறிவுரை சொன்னார். காமராஜர் அனைத்தையும் அமைதியாகக் கேட்டுக்கொண்டாரே தவிர, செயல்பாடுகள் எதையும் மாற்றிக்கொள்ளவில்லை. சொல்லப்போனால், அரசியல் ஆர்வம் இன்னும் அதிகரித்தது.

https://t.me/tamilpdfebooks

பொறுப்பு வர வேண்டும் என்பதற்காக, பெரும்பாலான நேரம் காமராஜரை நம்பிக் கடையைத் தனியே விட்டுச் சென்றார் மாமா கருப்பசாமி.

இந்த நிலையில் காங்கிரஸ் தலைவர் டாக்டர் வரதராஜுலு நாயுடு விருதுபட்டியில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசினார். கடைக்கு மாமா வந்தவுடன், அவரிடம் பொறுப்பைக் கொடுத்து விட்டு மீட்டிங் செல்ல வேண்டும் என்று காத்துக்கொண்டு இருந்தார் காமராஜர். இந்த விவரம் தெரிந்தே கடைக்குச் செல்வதைத் தவிர்த்தார் கருப்பசாமி. நேரமாக நேரமாக இருப்புக் கொள்ளாமல் தவித்த காமராஜர், இறுதியில் கடையை மூடிவிட்டு பொதுக்கூட்டத்துக்குச் சென்றுவிட்டார்.

இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர், காமராஜரை இனி கட்டுப்படுத்த இயலாததை உணர்ந்துகொண்ட அவரது மாமா, அதன்பின் கடையை காமராஜர் வசம் ஒப்படைப்பதை தவிர்த்துவிட்டார். இது காமராஜருக்கு மிகவும் வசதியாகிவிட்டது. முன்னிலும் அதிகமாகப் பொது வேலையில் ஈடுபட்டார். நண்பர்களுடன் இணைந்தும் தனியாகவும் தாய் நாட்டுக்காக சுதந்திர போராட்டத்தில் இறங்க முடிவெடுத்தார். அது வரை பொதுக்கூட்டங்களில் கலந்துகொண்டு, அரசியல் தலைவர்கள் பேச்சைக்கேட்டு அரசியல் அறிவை வளர்த்துக் கொண்டு இருந்த காமராஜருக்கு, விருதுபட்டியில் தானே முன்னின்று பொதுக்கூட்டங்கள் ஏற்பாடு செய்து, தேச பக்தியைப் பரப்ப வேண்டும் என்ற ஆர்வம் வந்தது.

https://t.me/tamilpdfebooks

உடனே நண்பர், பொடிக்கடை ஞானம் பிள்ளையிடம் இது குறித்து விவாதித்தார். பிற நண்பர்களுக்கும் அரசியலில் ஆர்வம் இருந்தாலும், விருதுபட்டியில் காங்கிரஸ் கட்சிக்கு அப்போது அதிக ஆதரவு இல்லாததால், அதற்கு நேரடியாக ஆதரவு திரட்டத் தயங்கினார்கள்.

நீதிக்கட்சி

நாடார்கள் அதிகம் வசித்த விருதுபட்டியில், திராவிடர் நலனை முன்வைத்து 1912-ல் தொடங்கப்பட்ட 'தென்னிந்திய நல உரிமைக் கழகம்' அதிக செல்வாக்கோடு இருந்தது. தமிழர் மத்தியில் நிலவிய ஜாதிக் கொடுமைக்கு வைதீகத்தையும், பிராமணர்களையும் குற்றம் சாட்டி, 'ஜாதி பாகுபாடு அற்ற சமூகம் அமைய வேண்டும்' போன்ற கோரிக்கைகளுடன் ஆரம்பிக்கப்பட்டது அந்த இயக்கம். தாழ்த்தப்பட்ட இனத்தவர்களாகப் பிறர் கொடுமைக்கு உள்ளான நாடார்களுக்கு இந்தக் கழகம் கைகொடுத்தது. தென்னிந்திய நல உரிமைக் கழகத்தின் அரசியல் பிரிவுதான், பின்னர் 'நீதிக்கட்சி' என்ற பெயருடன் இயங்கிய ஜஸ்டிஸ் கட்சி!

சுதந்திரத்தைவிட ஜாதிக் கொடுமையை தீர்ப்பதற்கே முன்னுரிமை என்ற கொள்கையுடன் தீவிரமாக இயங்கியது நீதிக்கட்சி. அதனால், விருதுபட்டியில் இருந்த பெரும்பாலான வியாபார நாடார்கள் ஜாதிக் குறைபாட்டை நீக்குவதற்காக நீதிக்கட்சிக்கு ஆதரவு தெரிவித்தார்கள்.

ஆங்கிலேயர்களால் 1919-ல் கொண்டுவரப்பட்ட, மாநிலங்களுக்கு பொறுப்பாட்சி தரும் 'இரட்டை ஆட்சி முறை'யை காங்கிரஸ் எதிர்த்தபோதும் நீதிக்கட்சி ஆதரித்தது. அதனால் நீதிக்கட்சியை அரியணை ஏற்ற வெள்ளை அரசும் துடித்தது.

இந்தச் சூழலில்தான் காங்கிரஸ் கட்சிக்காகக் குரல் கொடுக்க களத்தில் இறங்கினார் காமராஜர். உண்டியல் மூலம் பணம் திரட்டி, சிக்கனமாக அரசியல் கூட்டங்களை விருதுபட்டியில் நடத்தினார். நாட்டுப்பற்றுடன் திகழ்ந்தவர்கள் இளம் வயதிலேயே செயற்கரிய செயல்கள் செய்யும் காமராஜரைப் போற்றிப் பாராட்டினார்கள்.

ஆனால், தன்னுடைய ஒரே மகன் குடும்பப் பொறுப்பு இல்லாமல் எந்த நேரமும் கட்சி, பொதுக்கூட்டம் என்று வீணாக அலைவதைக் கண்டு தாய் உள்ளம் வருந்தியது. வயதான பாட்டி, ஆதரவு இல்லாத தாய், விவரம் புரியாத தங்கை என்று பெண்கள் மட்டுமே உள்ள குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய தலைமகன் வீட்டைப்பற்றி கவலைப்படாமல் நாட்டுப்பணி செய்தார்.

காங்கிரஸ் உறுப்பினர்

காந்தியடிகளின் சத்தியாகிரக போராட்டத்தை நசுக்க, 1919-ல் ரௌலட் சட்டத்தை இயற்றியது வெள்ளையர் அரசு. ஆர்ப்பாட்டக்காரர்களை, அரசை எதிர்ப்பவர்களை விசாரணை இன்றி ஜெயிலில் அடைக்க இந்தச் சட்டம் வழி வகுத்தது; பத்திரிகைகளின் குரல்வளையை நெரித்தது. அதனால் இந்த சட்டத்துக்கு நாடெங்கும் எதிர்ப்பு பெருகியது. ஆட்சியாளர்களுக்கு எதிராக ஊர்வலங்களும் பொதுக்கூட்டங்களும்

https://t.me/tamilpdfebooks

நடைபெற்றன.

பஞ்சாபில் உள்ள அமிர்தசரஸ் நகரில் ஜாலியன் வாலாபாக் என்ற இடத்தில், 1919, ஏப்ரல் 13-ம் தேதி, ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எனப் பல்லாயிரக்கணக்கானவர்கள் ஒரு திடலில் ஒன்று திரண்டனர். இந்தத் திடல் நாற்புறமும் உயர்ந்த மதில் சுவர்களால் சூழப்பட்டது; ஒரே ஒரு வாசல் கொண்டது.

அந்த இடத்துக்கு ஜெனரல் ரெஜினால்ட் டயர் என்பவன் 100 வெள்ளைக்காரப் படையினரையும், 50 இந்திய சிப்பாய்களையும் வரவழைத்தான். தேசப்பற்றுடன் மக்கள் ஒன்றுகூடுவதைக் கண்டு ஆத்திரம் அடைந்தான். அதனால், எந்த முன்னெச்சரிக்கையையும் தராமல் கூட்டத்தை நோக்கி சுடுவதற்கு, படையினருக்கு உத்தரவு இட்டான்.

கிருஷ்ணமேனனுடன்...

துப்பாக்கிச் சூட்டை எதிர்பாராத மக்கள் திறந்திருந்த வாயிலை நோக்கி முண்டியடித்துக்கொண்டு ஓடிக் கீழே விழுந்தனர், சுவர்களில் ஏறித் தப்பிக்க பலர் முயன்று கீழே விழுந்தனர். பலர் துப்பாக்கி சூட்டிலிருந்து தப்பிக்க திடலின் நடுவே இருந்த கிணற்றில் விழுந்தனர். பயந்து ஓடியவர்களின் காலில் மிதிபட்டுப் பலர் இறந்தனர். யாரும் சுதாரிப்பதற்கு முன்னரே ஒரு மாபெரும் கொடூரம் அரங்கேறியது.

அன்றைய தினம் 379 பேர் கொல்லப்பட்டனர்; ஆயிரக்கணக்கானவர்கள் படுகாயம் அடைந்தார்கள். இந்தத் துயர நிகழ்ச்சி நாடு முழுவதும் பெரும் பதற்றத்தை உண்டாக்கியது; இந்தியர்கள் மனதில் பெரும் வன்மத்தை உருவாக்கியது.

ஜாலியன் வாலாபாக் படுகொலை செய்தியை ஞானம் பொடிக்கடை திண்ணையில் ஏராளமான கூட்டத்தினர் நடுவே, சுதேசமித்திரனைப் படித்து அறிந்து, காமராஜரின் இதயம் வெடித்தது. வழக்கமாக சுதேசமித்திரனைப் படித்து முடித்ததும் கலகலப்பாக அனைவரிடமும் நாட்டு நிலவரத்தை விவாதிக்கும் காமராஜர், அன்று எதுவும் பேசாமல்,

https://t.me/tamilpdfebooks

அதிக மன அழுத்தத்துடன் மௌனமாக வீடு திரும்பினார்.

உணவு சாப்பிடவும், உறங்கவும், கடைக்குச் செல்லவும் அன்று காமராஜருக்கு மனம் இன்றிக் கிட்டத்தட்ட பித்துப் பிடித்த மன நிலையில் சுற்றிக்கொண்டு இருந்தார். அவரது வாய்மட்டும், 'படுபாவி டயர் இத்தனை பெரிய கொலைகாரனாக இருக்கிறானே... ஆயிரக்கணக்கான மக்களை சுட்டுக்கொல்ல எப்படி மனம் வந்ததோ? அநியாயம்... இந்த அராஜக ஆட்சிக்கு முடிவு கட்டியே தீரவேண்டும்' என்று முணுமுணுத்துக்கொண்டே இருந்தது.



அன்று இரவு சங்கிலி கருப்பசாமி கோயிலில் ஒன்று கூடிய நண்பர்கள் கூட்டத்திலும் காமராஜர் வாய்விட்டுப் பேசவில்லை. ஆனால், அவரது மனம் தெளிவாக ஒன்றைச் சிந்தித்துக்கொண்டே இருந்தது.

ஆதரவு அற்ற பெண்கள் மட்டுமே நிறைந்த வீடு ஒரு பக்கம்... அராஜக ஆட்சியால் அல்லல்படும் நாடும்... அப்பாவி மக்களும் மற்றொரு பக்கம். தான் யாருக்குப் பயன்பட வேண்டும்? தன்னுடைய பணி இனிமேல் வீட்டுக்கா? அல்லது நாட்டுக்கா என்ற தீவிர சிந்தனையில் இருந்தார். இறுதியில் நாடு வென்றது. தேசப்பற்றிலும் விடுதலையிலும் மனம் முழுமையாக, உறுதியாக நின்றது.

இனியும் பொறுப்பதற்கு இல்லை என்று சுதந்திரப் போராட்டத்தில் முழுமையாக தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். போராடுவதற்கு வசதியாக தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியில் உறுப்பினராகச் சேர்ந்தார்!

https://t.me/tamilpdfebooks

2

இளைய போராளி 1920-1929

‘கட்சிப் பணியில் தீவிரமாக இறங்கப் போகிறேன்’ என்று காமராஜர் அறிவித்ததும் தாய் சிவகாமியும் பாட்டி பார்வதியும் கலக்கம் அடைந்தார்கள். மனதை மாற்றிக்கொள்ள வேண்டி காமராஜரிடம் அழுது புலம்பினார்கள். ஆனால், அவர்களது கண்ணீர் காமராஜரின் இதயத்தைக் கரைக்கவில்லை. ‘இருவரது கண்ணீரைவிட, இந்தியத் தாயின் கண்ணீரைத் துடைப்பதே முக்கியம்’ என்பதில் தெளிவாகவும் உறுதியாகவும் இருந்தார்.

‘தந்தையில்லாத பிள்ளை என்று சுதந்திரம் கொடுத்து வளர்த்தது தப்பாகிப் போனதே... சொன்ன சொல் கேட்காமல் இப்படி நாடு, நாடு என்று அலைந்தால் வீட்டை யார் கவனிப்பது? தேசப் பணியில் ஈடுபடுபவர்களை போலீஸ் கொன்று போடுகிறதே, இவனுக்கு இந்த வயதில் இது தேவைதானா?’ என்று தாயும் பாட்டியும் தவித்தார்கள்.

ஒரு கட்டத்தில் தாய், பாட்டி இருவரையும் சமாதானம் செய்தால்தான், முழுமையாக சுதந்திரப் பணியில் ஈடுபட முடியும் என்ற நிலையில், இருவரிடமும் நிதானமாகப் பேசினார்.

https://t.me/tamilpdfebooks

காங்கிரஸ் தொண்டராக காமராஜர்

"பாட்டி... நான் ஒரு விஷயம் சொல்றேன். நம்ம பக்கத்து வீட்டு எண்ணெய்க் கடைக்காரர் வீட்டுச் சடை நாய் அழகா இருக்குன்னு சந்தோஷப்படுறீங்க. பார்க்க வெள்ளை வெளேர்னு, சடைசடையா இருக்குன்னு சொல்றீங்க. ஆனா, அந்த நாய் நம்ம வீட்டு சமையல் அறைக்குள்ள நுழைஞ்சா சும்மா இருப்பீங்களா? அடிச்சு விரட்ட மாட்டீங்களா? அதுமாதிரித்தான் நம்ம நாட்டுல அத்துமீறி நுழைஞ்சு, வெள்ளைக்காரன் அட்டூழியம் பண்றான். நம்ம நாட்டு மக்களை ஈவு இரக்கம் இல்லாம கொல்றான், அதைப் பார்த்துக்கிட்டு சும்மா இருக்க முடியுமா? அதை நாம கண்டிக்காம யாரோ பாத்துக்கிடுவாங்கன்னு சும்மா இருக்கலாமா? சொல்லுங்க!" என்று ஆவேசமாகக் கேட்டார்.

'வியாபாரம் செய்து பணம் சம்பாதித்துக் குடும்பத்தைக் காப்பாற்றுவான்' என்று நினைத்துக்கொண்டு இருந்த பாட்டியும் தாயும் அன்றே காமராஜரைப்பற்றி தெளிவான முடிவுக்கு வந்தார்கள். இனி காமராஜர் நாட்டுக்கு சொந்தமே தவிர, வீட்டுக்கு அல்ல என்று அறிந்துகொண்டார்கள். ஆனாலும் முழுமையாக ஆதரிக்கவும் முடியாமல், அவரைத் தடுக்கவும் முடியாமல் தவித்தார்கள். இந்த நேரத்தில், அவருக்குத் திருமணம் செய்துவிடலாம் என்ற யோசனையை தாய் தெரிவித்தார். ஆனால், ஆரம்ப கட்டத்திலேயே, 'இப்போ இது பத்தி பேசக் கூடாது' என்று திருமணப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தார் காமராஜர்.

கட்சி உறுப்பினர்

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் உறுப்பினராகச் சேர்ந்தவுடன், முழு நேரமும் கட்சி செயல்பாடுகளில் ஈடுபட்டார். முதலாம் உலகப்போர் முடிந்திருந்த நேரத்தில், நாட்டு விடுதலைக்காக காங்கிரஸ் கட்சி பல்வேறு போராட்டங்களை அறிவித்தது.

'சட்டத்துக்கு உட்பட்டு கிளர்ச்சி செய்ய வேண்டும்' என்ற நோக்கம் கொண்ட மிதவாதிகள் காங்கிரஸ் கட்சியில் இருந்தார்கள். அதே சமயம்,

https://t.me/tamilpdfebooks

‘சுயராஜ்யம் நமது பிறப்பு உரிமை, அதை அடைந்தே தீருவோம். இந்த உரிமையை அடைய அந்நியர் தயவோ, சட்டத்தையோ எதிர்பார்க்கப் போவதில்லை. ஆயுதம் ஏந்திப் போராடவும் தயார்’ என்று வீரம் பேசிய தீவிரவாத காங்கிரஸ்காரர்களும் இருந்தார்கள். ஆனால், இருவரும் விடுதலை என்ற ஒரே கண்ணோட்டத்தில் தீவிரமாகச் செயல்பட்டனர்.

மிதவாதியான காந்திஜியின் பேச்சு, நடவடிக்கை ஆகியவையே காமராஜருக்கு விருப்பம். அதனால், கண்மூடித்தனமாக காந்திஜியின் தீவிர பக்தராக மாறினார். காந்தியடிகளின் வாக்கையே வேதவாக்காகக் கருதினார்.

‘காங்கிரஸ்காரர்கள் அனைவரும் கதர் அணிய வேண்டும்’ என்று காந்திஜி ஒரு பொதுக்கூட்டத்தில் பேசினார். உடனே அன்று முதல் கதர் உடுத்தத் தொடங்கினார். அந்தக் காலத்தில் நினைத்ததும் கதர் துணி கிடைக்காது. அதைப் பெறுவதற்கு வழியை யோசித்தபோது, நினைவுக்கு வந்தவர் பம்பாய் அண்ணாச்சி என்று அழைக்கப்பட்ட விருதுநகரைச் சேர்ந்த கோவிந்தசாமி நாடார்.

எட்டுமுழ வேட்டி, நீண்ட ஜிப்பா, பாக்கட் கடிகாரம், அதில் தங்கச் சங்கலி, நறுக்கு மீசை, ‘சேட்’ குல்லாய் என்று வித்தியாசமான உடை அலங்காரத்துடன் இருந்தவர். வியாபாரத்தில் சூரப்புலி. வடக்கே பம்பாய், கல்கத்தா, கராச்சி, லக்னோ, சூரத் போன்ற நகரங்களுக்கு எல்லாம் சென்று வியாபாரம் செய்து வந்ததால், பெரும்பாலும் சுற்றுப்பயணத்தில்தான் இருந்தார்.

ஊருக்கு வந்தால் பிள்ளையார் கோயில் திண்ணையில் அமர்ந்து வந்தேமாதரம் சங்கதிகளையும், பல்வேறு ஊர்களில் அவருக்குக் கிடைத்த அனுபவங்களையும் கதைகதையாகச் சொல்வார். அவரைச் சுற்றி பெரும் கூட்டம், வாயில் ஈ போவது தெரியாமல் அமர்ந்து கேட்டுக்கொண்டு இருக்கும். காமராஜர், ஞானம் பிள்ளை நண்பர் கூட்டம் கடைசிவரை இருந்து கேட்கும்.

ஒருநாள் மீட்டிங் முடிந்ததும், காமராஜர், நண்பர் கூட்டம் அவரைச் சூழ்ந்துகொண்டு, கதர் துணி வாங்கித் தர வேண்டும் என்று கோரிக்கை வைத்தது. ஒரு கணம், ‘இது நீதிக்கட்சி ஊராச்சே’ என்று யோசித்த பம்பாய் அண்ணாச்சி பின் அந்தத் தயக்கத்தை உதறித் தள்ளிவிட்டு கதர்

https://t.me/tamilpdfebooks

துணிகள் வாங்கி வந்தார். ஞானம் பொடிக் கடையில் இருந்த அனைவருக்கும் அந்தத் துணிகளைக் கொடுத்து கதர்ச் சட்டை போட்டுக்கொள்ளச் செய்தார். பம்பாய் அண்ணாச்சி தலைமையில்தான் அன்று விருதுநகரில் காங்கிரஸ் இயங்கி வந்தது.

அந்தக் காலத்தில், கதர் ஆடை உடுத்தியவர்களை ஒரு காட்சிப் பொருளாக மக்கள் பார்த்தனர். இருந்தாலும், கரை போடாத நாலு முழ வேட்டியும், தொளதொளவென்ற கதர்ச் சட்டையும் தைத்துப் போட்டார் காமராஜர். இந்தச் சீருடையை, தன் மரணம் வரை அவர் மாற்றிக்கொள்ளவே இல்லை.

அந்தக் காலத்தில் மதுரை வழக்கறிஞர் ஜார்ஜ் ஜோசப் கதர் ஆடை அணிந்து நீதிமன்றத்தில் வாதாடுகிறார் என்ற செய்தியே பரபரப்பாக பேசப்பட்டது. அப்போது திருமலை நாயக்கர் மஹாலில் செயல்பட்ட நீதிமன்றத்தில் கதர் ஆடையுடன் வாதாடும் ஜார்ஜை ஆசையுடன் சென்று தரிசித்து வந்தார் காமராஜர் என்பது குறிப்பிடத்தக்கது.

தலைவர்களின் வீராவேச பேச்சுகளை கேட்பது, பிரசார, விளம்பர சுவரொட்டிகளை விருதுநகரின் முக்கிய இடங்களில் ஒட்டுவது, தண்டோரா அடித்து பொதுக்கூட்டத்துக்கு ஆள் சேர்ப்பது என்று முழு நேரக் கட்சித் தொண்டராக மாறிப் போனார் காமராஜர்.

மேலும், அனைத்து ஊர்களுக்கும் கதர் துணி கிடைக்க வேண்டும் என்று விரும்பினார். அப்போதுதான் நிறைய பேர் கதர் அணிய முன்வருவார்கள். அதனால் கதர் துணியை மொத்தமாக வரவழைத்து, சைக்கிளில் வைத்து பக்கத்து கிராமங்களுக்கு சென்று விற்றுவரும் பணியையும் மேற்கொண்டார். ஆனால், இதில் லாபம் பார்க்காமல், இதையும் கட்சிப் பணியாகவே செய்தார்.

ஒத்துழையாமை இயக்கம்

காந்தியடிகள், 1920-ல், ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கும் எண்ணத்தில் இருந்தார். அந்த வருடம் ஜூலை 31-ம் தேதி பாலகங்காதர திலகர் மறைந்தார். அந்தத் துயர சம்பவம் இந்தியத் தலைவர்கள் அனைவரையும் ஒன்று சேர்த்தது. பல ஆயிரக்கணக்கான தொண்டர்கள் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தினார்கள்.

காந்திஜி, நேரு ஆகியோரின் தலைமையில் பத்து லட்சம் பேருக்கு மேல் கலந்துகொண்ட திலகரின் இறுதி யாத்திரையைக் கண்டு ஆங்கில அரசு அச்சம் அடைந்தது. இந்தியர்களின் ஒற்றுமை அவர்களின் தூக்கத்தைக் கெடுத்தது. ஆனால், அதைப்பற்றிக் கவலைப்படாமல், மக்கள் கொடுத்த தெம்பால், முக்கிய முடிவு எடுக்க கல்கத்தா நகரில் காங்கிரஸ் பேரியக்கம் லாலா லஜபதிராய் தலைமையில் ஒன்று கூடியது.

இந்த கூட்டத்தில்தான், 'பஞ்சாப் படுகொலை, கிலாபத் இயக்கத்தை அழிக்க ஆங்கில அரசு எடுத்த கொடுமையான அடக்குமுறை ஆகியவற்றைக் கண்டித்து' ஒத்துழையாமை இயக்கத்தை அறிவித்தார் காந்திஜி. இந்த அறிவிப்பு இந்தியா எங்கும் மக்களை ஒன்று திரட்டியது,

https://t.me/tamilpdfebooks

பெரும் எழுச்சி உண்டானது.

அந்நியர்களான ஆங்கிலேயர்களுக்கு ஆட்சி நடத்துவதற்கு உதவி செய்ய மறுத்தல், அரசு நிகழ்ச்சிகளைப் புறக்கணித்தல், அரசு வேலையிலிருந்து ராஜினாமா செய்தல், வரி செலுத்த மறுத்தல், ஆங்கிலேய அரசு அளித்த பட்டங்கள், மரியாதை ஆகியவற்றைத் துறத்தல், நீதி மன்றம், சட்டமன்றங்களைப் புறக்கணித்தல், அந்நிய துணிகளை பகிஷ்கரித்தல் என ஏராளமான அம்சங்கள் ஒத்துழையாமை இயக்கத்தில் இடம் பெற்றன.

நாடு எங்கும் இருந்த சுதந்திர பக்தர்களை இந்தப் போராட்டம் ஒன்று சேர்த்தது. ஏராளமானவர்கள் ஆங்கில அரசு வழங்கிய பட்டங்களைத் தூக்கி எறிந்தார்கள்; வகித்த பதவிகளிலிருந்தும் விலகினார்கள். மக்களிடையே சுதந்திர தாகம் கொழுந்துவிட்டு எரிந்தது.

சரோஜினி நாயுடுவுக்கு வரவேற்பு கொடுத்தபோது, சத்தியமூர்த்தியுடன் காமராஜர்

வேல்ஸ் இளவரசர் வருகை

இந்தியாவில் தோன்றிய ஒத்துழையாமை இயக்கத்தை முறியடிப்பதற்காக வேல்ஸ் இளவரசர் வருகையை அறிவித்தது ஆங்கில அரசு. அதனால், காங்கிரஸ் கமிட்டி அவர் வருகையை நிராகரிக்குமாறு தேச மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தது. வேல்ஸ் இளவரசர் 1921, நவம்பர் 17-ம் தேதி இன்றைய மும்பை துறைமுகத்துக்கு வந்து இறங்கினார். அவர் வந்த நாளில் இந்தியா எங்கும் பந்த் கடைப்பிடிக்கப்பட்டு, வேலை நிறுத்தமும், கண்டன ஊர்வலங்களும் நடந்தன. மூடிய கடைகளையும், வெறிச்சோடிய வீதிகளையும் மட்டுமே வேல்ஸ் இளவரசரால் பார்க்க முடிந்தது.

தமிழகத் தலைநகரான சென்னைக்கு 1922, ஜனவரி 22-ம் தேதி இளவரசர் வருவதாக அறிவிக்கப்பட்டது. 'வேண்டாத விருந்தாளி வேல்ஸ் இளவரசரே! திரும்பிப் போ' என்று தமிழகம் சிலிர்த்து எழுந்தது. சென்னையில் வேல்ஸ் இளவரசருக்கு எதிராகப் பெரும் போராட்டம் நடக்க இருப்பதை அறிந்த காமராஜர், சென்னை சென்று, மக்கள் எழுச்சியை நேரில் கண்டுவர ஆசைப்பட்டார்.

https://t.me/tamilpdfebooks

வியாபார நிமித்தமாக சென்னைக்கு அடிக்கடி சென்றுவந்த தேயிலைத் தூள் வியாபாரி சண்முகத்திடம் தன் ஆசையைச் சொன்னார். அவரும் ஒப்புக்கொண்டு, விருதுநகரிலிருந்து மதுரைக்கு இருவரும் சென்று, அங்கிருந்து சென்னைக்கு ரயிலில் சென்றனர். மிகச் சாதாரண தொண்டன் ஒருவனாக காமராஜர் முதன்முதலாக சென்னையில் கால் வைத்தார்.

அப்போது சென்னை மாகாணத்து காங்கிரஸ் கமிட்டித் தலைவராக ஈ.வெ.ராமசாமி நாயக்கர் இருந்துவந்தார். இவர்தான் பிற்காலத்தில் பெரியார் என்று அழைக்கப்பட்டு, காமராஜருக்கு பெரும்பாலான நேரத்தில் ஆதரவு அளித்தவர். அன்று நீதிக் கட்சியின் ஆதிக்கம் நிறைந்து இருந்ததால் திரு.வி.க., ஈ.வெ.ரா., சிங்காரவேலர் ஆகியோர் நீதிக்கட்சியின் அன்றைய தலைவராக இருந்த சாமி வெங்கடாசலத்தைச் சந்தித்தார்கள்.

‘வேல்ஸ் இளவரசர் வரும்போது கொத்தவால் சாவடி கடைகளை மூடி வைக்க வேண்டும்’ என்று கோரிக்கை வைத்தனர். ஆனால், அவரோ கோரிக்கையை ஏற்க மறுத்து, "கண்டிப்பாக அனைத்துக் கடைகளும் திறந்தே இருக்கும்" என்று உறுதியாகத் தெரிவித்தார். நீதிக்கட்சியின் நிலைப்பாட்டை முறியடிக்க முடிவு எடுத்த காங்கிரஸ் கட்சியினர், ஊரெங்கும் தீவிரப் பிரசாரம் செய்தனர். அடுத்தநாள் வேல்ஸ் இளவரசர் வந்த நேரத்தில் கிட்டத்தட்ட அனைத்து கடைகளும் மூடப்பட்டு இருந்தன. அதனால் நீதிக்கட்சியினரும், அரசினரும் சேர்ந்து சாலையில் போவோர், வருவோர் மற்றும் மருத்துவமனைகளில் நோயாளிகளாக இருந்தவர்களை எல்லாம் அழைத்து வந்து வேல்ஸ் இளவரசரை பார்க்கச் செய்தனர்.

ஆனாலும் ஜார்ஜ் டவுன், சூளை, வேப்பேரி, புரசைவாக்கம், பெரம்பூர் என்று சென்னையின் அனைத்துப் பகுதிகளிலும் எதிர்ப்பு அலையே வீசியது. மவுன்ட்ரோடு வெலிங்டன் திரை அரங்குக்கு அருகே வேல்ஸ் இளவரசரை வரவேற்று வைக்கப்பட்டிருந்த அலங்கார வளைவுகள் தீ வைத்து எரிக்கப்பட்டன. அதனால் போலீஸ் குவிக்கப்படவே, சென்னை பரபரப்பாக இருந்தது.

சென்னைக்கு வந்த காமராஜர் இந்தக் காட்சிகளை எல்லாம் கண்டு மனம் மகிழ்ந்தார். அதன்பின் சென்னையின் முக்கியமான பல பகுதிகளையும், குறிப்பாக வெள்ளையன் கொடி பறந்த ஜார்ஜ் கோட்டை, சுதேசமித்திரன் அலுவலகம், மெரீனா கடற்கரை ஆகியவற்றைக் கண்டு ரசித்து விருதுநகருக்குத் திரும்பினார். விருதுநகரில் நண்பர்களிடம் சென்னை சமாசாரங்களைப் பகிர்ந்துகொண்டு ஆனந்தம் அடைந்தார்.

நாடு எங்கும் ஒத்துழையாமை இயக்கம் பலத்த வரவேற்பு பெற்ற நேரத்தில், உத்திரபிரதேசம் சௌரி சௌரா என்ற இடத்தில் ஏற்பட்ட கலவரத்தில் பெரும் வன்முறை வெடித்தது. காங்கிரஸ் கட்சித் தொண்டர்களுக்கும், காவலர்களுக்கும் நடந்த மோதலில் 23 காவலர்கள் கொல்லப்பட்டார்கள். வேதனை அடைந்த காந்திஜி, ‘அகிம்சைக்கு மக்கள் இன்னும் பக்குவப் படவில்லை’ என்று சொல்லி ஒத்துழையாமை இயக்கத்தைத் திரும்பப் பெற்றார்.

https://t.me/tamilpdfebooks

பெரியாருடன்...

சாத்தூர் தாலுகாவின் காங்கிரஸ் மாநாடு ஈ.வெ.ராமசாமி தலைமையில் 1922-ல் நடந்தது. ஓடியாடி மாநாட்டு வேலைகளைச் செய்ததால் மாநாட்டு வரவேற்புக் குழுவில் கமிட்டி மெம்பராக நியமனம் செய்யப்பட்டார் காமராஜர். உழைத்துக்கொண்டு மட்டுமே இருந்த காமராஜருக்கு காங்கிரஸில் கிடைத்த முதல் பதவி இதுதான். பதவி கிடைத்ததால், முன்னிலும் அதிகமாக வேலை செய்தார் காமராஜர்.

காந்திஜி வருகை

காங்கிரஸ் கட்சியில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. நான்கு அணா கொடுத்து கட்சி உறுப்பினராதல், ஒழுங்கு விதிகள், அமைப்பு விதிகள், மொழிவாரி மாகாண கமிட்டிகள், மாவட்டம், தாலுகா, நகரம், கிராமம் என கமிட்டிகள் அமைக்கப்பட்டு உறுப்பினர் சேர்க்கை, நிர்வாகிகள் சேர்க்கை எல்லாமே முறைப்படி நடந்தன. கட்சியை வளர்ப்பதற்காக, 'திலகர் சுயராஜ்ய நிதி' என்ற பெயரில் ஒரு கோடி ரூபாய் நிதி திரட்டத் தொடங்கினார் காந்திஜி. நாடு முழுவதும் அறுபது லட்சம் ராட்டைகள் சுழன்றுகொண்டிருக்க வேண்டும் என்பதும் காந்திஜியின் விருப்பம்.

கட்சியின் கட்டளைப்படி கிராமங்கள்தோறும் காங்கிரஸ் கமிட்டிகள் முறைப்படி அமைக்கப்பட்டன. விருதுநகர் கமிட்டியில் ஞானம் பிள்ளை, முத்துசாமி, காமராஜர், பம்பாய் அண்ணாச்சி, சுப்பராய பந்துலு, சால்வாடி ஐயர் ஆகியோர் இருந்தனர். இந்த நிலையில் காந்திஜி தமிழகத்தில் சுற்றுப்பயணம் செய்ய வந்தார். அவரது பயணத்தில் மதுரை இடம்பெற்று இருந்ததால், காந்திஜியை நேரடியாக பார்த்து தரிசிக்க பொடிக்கடை ஞானம் பிள்ளை, ஹோட்டல்காரர் சுப்பராய பந்துலு, முத்துசாமி ஆகியோருடன் புறப்பட்டார் காமராஜர்.

மதுரை ரயில் நிலையத்தில் காந்திஜியைக் காண மக்கள் கூட்டம் அலைமோதியது. காந்திஜி, ராஜாஜி, சென்னை மாகாண காங்கிரஸ் கமிட்டி செயலாளர் எஸ்.ராமநாதன், இன்னும் பலர் வந்து இறங்கினார்கள். ரயில் நிலையத்திலிருந்து நேரடியாக பொதுக்கூட்டம்

https://t.me/tamilpdfebooks

நடக்கும் இடத்துக்கு வந்தார் காந்திஜி. அன்று பஞ்சகச்சம் வைத்துக் கட்டிய வேட்டி, ஜிப்பா, கதர் குல்லாய் போன்ற உடைகளுடன் இருந்தார் காந்திஜி. அவரைக் கண்ட மகிழ்ச்சியில் மக்கள் ஆரவாரம் செய்தனர். மேடையில் அவரைக் காண முண்டியடித்து நெருங்கினர். மேடையின் அருகே சென்று காந்திஜியை பார்த்துக்கொண்டே இருந்தார் காமராஜர். கூட்டத்தினரின் கூச்சல், முட்டல், மோதல்களைக் கட்டுப்படுத்த இயலாததால், "நாளை காலை இதே மேடையில் பேசுகிறேன்" என்று சொல்லிவிட்டு, அன்று பேசாமலேயே கிளம்பினார் காந்திஜி.

காந்திஜியின் பேச்சைக் கேட்காமல் விருதுநகர் திரும்புவதில்லை என்ற முடிவில் உறுதியாக இருந்தார் காமராஜர். அதனால் மதுரையிலேயே தங்கினார். காரைக்குடி சென்றுவிட்டுத் திரும்பிய காந்திஜி, அடுத்தநாள் மதுரையில் கூட்டத்தில் உரை நிகழ்த்த மேடை ஏறினார்.

அன்று காந்திஜியிடம் பெரும் மாற்றம் ஏற்பட்டு இருந்தது. ஆம், அவர் அணிந்திருந்த வேட்டி, ஜிப்பா போன்ற உடைகள் காணாமல் போய், இடுப்பில் மூன்று முழ வேட்டியும் மேலே ஒரு துண்டுமாக அரை ஆண்டிக் கோலத்தில் இருந்தார். உடை மாறியதை மேடைக்குக் கீழே, தலைவர்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டு இருந்தார்கள்.

காரைக்குடிக்குச் சென்று மதுரைக்கு காரில் திரும்பிக்கொண்டு இருந்த காந்திஜி, திருப்பத்தூர் அருகே கொளுத்தும் வெயிலில் பாறைகளை உடைக்கும் கூலியாட்களைப் பார்த்தார். உடனே காரை நிறுத்தச் சொல்லி தொழிலாளர்களை நோக்கிச் சென்றார். ஒருவரிடம், "ஏன் இவ்வளவு அழுக்கான வேட்டியைக் கட்டிக் கொண்டு வேலை செய்கிறீர்கள், துவைத்துக் கட்ட வேண்டியது தானே?" என்று கேட்டார்.

காந்திஜியுடன்...

அதற்கு அந்தத் தொழிலாளி, "என்னிடம் இருப்பது இந்த ஒரு வேட்டிதான். இதைத் துவைத்துக் காயப்போட்டால், கட்டுவதற்கு வேறு வேட்டி இல்லை. அதனால் குளித்ததும் இதையே கட்டிக்கொள்கிறேன்...

https://t.me/tamilpdfebooks

அதனால் அழுக்காக இருக்கிறது" என்று விளக்கம் அளித்தார்.

காந்திஜி அதிர்ச்சி அடைந்தார்! உழைக்கும் தொழிலாளர்கள், ஏழைகள் பாரத தேசத்தில் எத்தனை அவல நிலையில் இருக்கிறார்கள் என்பதை உணர்ந்து வேதனை அடைந்தார். வறுமை என்பது இத்தனை கொடுமையாக இருக்கும் என்பதை அறியாத காந்திஜியின் மனதை அந்த நிகழ்ச்சி அரித்தது. ஏதாவது செய்ய வேண்டும் என்ற துடிப்பு ஒவ்வொரு கணமும் அவருக்கு அதிகமானது. அந்தச் சிந்தனையிலேயே தூங்கப் போனார்.

விழித்து எழுந்தபோது தெளிவான ஒரு முடிவுக்கு வந்திருந்தார். தான் கட்டியிருந்த எட்டு முழ வேட்டியை இரண்டாகக் கிழித்து ஒன்றை வேட்டியாகவும், இன்னொரு பகுதியை மேல் அங்கியாகவும் அணிந்துகொண்டார்.

‘இந்தியாவில் வாழும் ஏழைகளின் உடையையே இனி நானும் உடுத்தப் போகிறேன். அவர்கள் அனைவரது வாழ்விலும் மாற்றம் ஏற்படும் நாளில்தான் என் உடையிலும் மாற்றம் ஏற்படும்’ என்று சூளுரைத்தார். இந்த உலகிலேயே மக்களின் உடையில் வலம் வந்த ஒரே தலைவன் காந்திஜிதான்.

மதுரை மேடையில் அன்று மதுவிலக்கு, பிரம்மசரியம், தீண்டாமை, கதர் இயக்கம், அகிம்சை போன்றவற்றைப் பேசினார். கூட்டம் முடிந்ததும் திருநெல்வேலிக்குப் புறப்பட்டார்.

காந்திஜி பயணம் செய்த அதே ரயிலில் காமராஜரும் ஏறிக் கொண்டார். விருதுநகரில் முத்துசாமியும், சுப்பராய பந்துலுவும் இறங்கிக்கொள்ள, ஞானம் பிள்ளையுடன் பயணத்தைத் தொடர்ந்தார் காமராஜர். திருநெல்வேலி பொதுக்கூட்டத்தில் காந்திஜி பேசியதைக் கேட்டு காமராஜர் மனதில் தெளிவு பிறந்தது. பிரம்மசரியம் பற்றிய தெளிவான முடிவுக்கு வர, காந்தியடிகளின் மதுரை, நெல்லை பேச்சுகளே காரணம் என்று உறுதியாகச் சொல்ல முடியும்.

திருநெல்வேலி பொதுக்கூட்டத்தை முடித்துக்கொண்டு ரயிலில் சென்னைக்கு காந்திஜி கிளம்பியதும், அதே ரயிலில் காமராஜரும் ஏறிக்கொண்டார். விருதுநகர் வந்ததும், இறங்கிக்கொண்டு, தலைவன் முகத்தை மீண்டும் ஒரு முறை தரிசித்து, ‘காந்திஜிக்கு ஜே... பாரத மாதா கி ஜய்’ என்று விண்ணதிர குரல் கொடுத்து விடைபெற்றார்.

கட்சிப் பேச்சாளர்

காந்தியடிகள் வருகைக்குப் பிறகு தமிழக காங்கிரஸ் கட்சியில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. அது வரை போராட்டத்தில் இறங்காமல் வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்த ஆசிரியர்கள், பேராசிரியர்கள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், முதலாளிகள் என அனைவரும் போராட்டத்தில் கலந்துகொள்ள முன்வந்தனர். ஒவ்வொரு ஊரிலும் காங்கிரஸ் கட்சிக்குப் பொதுக்கூட்டம் அடிக்கடி ஏற்பாடு செய்யப்பட்டது. அந்தக் காலத்தில் ராஜாஜி, ஈ.வெ.ராமசாமி நாயக்கர், திரு.வி.க., சத்தியமூர்த்தி, ஜார்ஜ் ஜோசப், டாக்டர் வரதராஜுலு நாயுடு

https://t.me/tamilpdfebooks

போன்றோர்தான் காங்கிரஸ் கட்சியின் திறமையான பேச்சாளர்களாக இருந்தார்கள். ஆனால், இவர்களை அழைத்து வந்து கூட்டம் போடுவது மிகவும் அரிது.

‘பொதுக்கூட்டம் போட்டுக் கட்சியை வளர்க்க வேண்டும்... ஆனால், பேசுவதற்குத் தலைவர்கள் வரமுடியாத சூழல்’ என்ற நிலையில்தான், காமராஜரின் நண்பர்கள் அவரை மேடையில் பேச வைக்க நினைத்தார்கள். பம்பாய் அண்ணாச்சி, ஞானம் பிள்ளை போன்றோர் மேடை ஏறிப் பேசிக் கட்சியை வளர்க்கும்படி காமராஜரிடம் சொன்னார்கள்.

"நான் என்னத்தைப் பேசுறது? அழகா பேச வராதே..." என்று சொல்லி ரொம்பவும் தயங்கினார் காமராஜர்.



ஆனாலும் காமராஜருடைய நண்பர்கள், "எங்களிடம் எப்படி சகஜமாகப் பேசுகிறாயோ அப்படியே மேடையிலும் பேசு. அதுவும் புதுமையாக, நன்றாகவே இருக்கும். அதனால் தைரியமாகப் பேசு" என்று ஊக்கம் கொடுத்தனர்.

என்னதான் நண்பர்கள் துணை இருந்தாலும் காமராஜருக்கு மேடையில் பேசுவதற்கு தயக்கம் இருந்தது. அதனால், முதலில் உள்ளூரில் பேச வேண்டாம். பக்கத்து கிராமங்களில் பேச வைப்போம். அதன் பிறகு சொந்த ஊரில் பேசலாம் என்று முடிவு எடுத்தார்கள். இந்த யோசனை காமராஜருக்கும் பிடித்து இருந்ததால் சம்மதம் தெரிவித்தார்.

அதன்படி காமராஜர் முதன்முதலில் மேடை ஏறிப் பேசிய இடம் விருதுநகருக்கு மேற்கே இருக்கும், பாவாடி ஜமீனுக்கு அருகே இருக்கும் எளிமை நாயக்கன்பட்டி என்ற கிராமம்தான். நண்பர்களிடம் பேசுவதைப் போன்றே மேடையில் மிக எளிமையாகப் பேசினார் காமராஜர்.

தங்களைச் சேர்ந்த ஒருவர், தங்களைப் போன்றே பேசுவதை மக்கள் ரசித்துக் கேட்டனர். முதல் மேடைப்பேச்சு வெற்றிகரமாக அமையவே,

https://t.me/tamilpdfebooks

தொடர்ந்து அடுக்குமொழி, வசனம், எதுகை மோனை போன்ற அழகியல் எதுவும் இன்றி, மக்களிடம் உரையாடுவதைப் போன்று தொடர்ந்து மேடைகளில் பேசினார் காமராஜர்.

அடுத்ததாக சாத்தூர், திருமங்கலம் போன்ற இடங்களில் கூட்டம் ஏற்பாடு செய்து பேச வைத்தனர். சில கூட்டங்களில் பேசியதும் காமராஜருக்கு இருந்த மேடைத் தயக்கம் விடைபெற்றது. மனதில் பட்டதை அப்படியே பேசினார். மக்களுக்கு அவரது இயல்பான பேச்சு ரொம்பப் பிடித்திருந்தது. கட்சியின் பேச்சாளராகவும் மாறிவிட்டதால், அதிகம் படிக்கத் தொடங்கினார் காமராஜர்.

விருதுநகரில் அப்போது பழனிக்குமார் பிள்ளை என்பவர் நடத்திவந்த, 'மெய்கண்டான் புத்தகசாலை' என்ற நூல்நிலையத்தில் லெனின், கரிபால்டி, நெப்போலியன் போன்றவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல்களைப் படித்தார். அறிஞர்களின் நூல்களைப் படித்து ஏராளமான தகவல்களை மனதில் குறித்துக் கொண்டார்.

விருதுநகர் ரயில் நிலையம் அப்போது காமராஜர் நண்பர்களின் சந்திப்பு இடமாகத் திகழ்ந்தது. அங்கே அமர்ந்து நாட்டு நடப்பையும், அரசியல் செய்திகளையும் பகிர்ந்துகொள்வார்கள். எந்தெந்த விஷயங்களை எல்லாம் மக்களிடம் பேச வேண்டும் என்பதை நண்பர்களுடன் அலசி ஆராய்ந்து முடிவு செய்வார். அப்படியே மேடையில் பேசவும் செய்வார். காமராஜர் பேச்சுக்கு மக்கள் மத்தியில் வரவேற்பு கிடைத்தது.

காமராஜரின் எழுச்சி, விருதுநகர் ஜஸ்டிஸ் கட்சிப் பிரமுகர்களுக்கு அதிர்ச்சியாக இருந்தது. காங்கிரஸ் கட்சி செல்வாக்கு பெற்றுவிடக் கூடாது என்று ஒரு சில கூட்டங்களில் கல்வீச்சு நடந்தது. ஆனால், அதற்காகக் கலங்கவோ, பயப்படவோ செய்யாமல் தொடர்ந்து கூட்டம் போட்டுக்கொண்டே இருந்தார் காமராஜர். அப்போது விருதுநகரில், காமராஜரின் நண்பர்களான கிருஷ்ணசாமி நாயுடு, முருக தனுஷ்கோடி, முத்துசாமி, அப்துல் ரஹ்மான் போன்றவர்கள் அவருடன் செல்வது உண்டு.

வெளியூர் கூட்டங்களுக்கு, பேச்சாளரான காமராஜரே அரிக்கன் விளக்கு, தமுக்கு போன்றவற்றைச் சுமந்து செல்வார். கிராமங்களுக்குச் சென்று தமுக்கு அடித்துக் கூட்டம் சேர்ப்பார்.

கூட்டம் ஆரம்பிக்கும்போது நன்றாகப் பாடக்கூடிய அப்துல் ரஹ்மானைப் பாடச் சொல்வார். அவர் உரத்த குரலில் தேசிய பாடலைப் பாடியதும் எங்கிருந்தாலும் கூட்டம் வந்து சேர்ந்து விடும். பாடலில் கூட்டம் கட்டுண்டு கிடக்கும். பாடல் முடிந்ததும், 'மகாத்மா காந்திஜிக்கு' என்று காமராஜர் உரக்கக் குரல் கொடுக்க, மக்கள், 'ஜே' என்று ஆவேசமாவார்கள். அதற்குப் பின் முத்துசாமி, கிருஷ்ணசாமி, முருக தனுஷ்கோடி போன்றவர்களைப் பேசச் சொல்லிவிட்டு இறுதியில் காமராஜர் பேசுவார்.

கூட்டம் முடிந்ததும் சில கிராமங்களில் தடபுடலாக சாப்பாடு போட்டு அனுப்புவார்கள். சில கிராமங்களில் பச்சைத் தண்ணீர் கூட கொடுக்க

https://t.me/tamilpdfebooks

மாட்டார்கள். எதையும் பொருட்படுத்தாமல் இரவு பன்னிரண்டு மணிக்குப் பிறகு கிளம்பி சைக்கிளில் விருதுநகர் வந்து சேருவார்கள்.

ஒரு சில ஊர்களில் கடுமையான எதிர்ப்பு இருந்ததும் உண்டு. நள்ளிரவில் திரும்பிய நேரத்தில் அடியாட்கள் காமராஜரை அடித்து, காயப்படுத்திய சம்பவங்கள் நிகழ்ந்தது உண்டு. ஒரு சில ஊர்களில் அவர் அணிந்திருந்த உடைகளைக்கூட கிழித்து எறிந்து விடுவார்கள். ஆனால், எதிர்ப்புகளைக் கண்டு கொஞ்சமும் அஞ்சமாட்டார். முதல் நாள் நடந்தவற்றைப்பற்றி மனதில் வைத்துக்கொள்ளாமல் மறு நாள் நிகழ்ச்சிகளுக்குக் கிளம்பி விடுவார்.

இள ரத்தம்

இளமை துள்ளிய காலத்தில் காமராஜர் செய்த அரிய செயல்கள் இன்றும் வியப்புக்கு உரியது. இரண்டு செயல்களை மட்டும் பார்க்கலாம்.

அப்போது விருதுநகர் பஞ்சாயத்துத் தலைவராக ஹரிஹர ஐயர் என்பவர் இருந்தார். ஊரில் போலீஸுக்கு வேலை எதுவும் இல்லாத அளவுக்கு சமூக அமைப்பு இருந்தது. நாடார்கள் சமூக முன்னேற்றத்துக்கு மகமை அமைப்பு இருந்தது. தகராறுகள், வழக்குகள், பிரச்னைகளை தீர்த்து வைப்பதற்கு தலைக்கட்டு கூட்டங்களும், நாட்டாண்மைக்காரரும் இருந்து வந்தார்கள். இதைப் போன்றே பிற சமூகத்தவர்களும் செயல்பட்டு வந்தார்கள். இதைத் தவிர

https://t.me/tamilpdfebooks

ஊர்க்காவலுக்கு ஆட்கள் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தார்கள்.

ஜவுளிக்கடையை மூடிவிட்டு நண்பர்களுடன் சங்கிலி கருப்பசாமி கோயில் அருகே சடுகுடு விளையாடுவதும், நாட்டு விஷயங்களை பரிமாறிக்கொள்வதும் சில சமயங்களில் ஊர்க் காவலாளியை ஓய்வு எடுக்கச் சொல்லிவிட்டு, இவர்கள் காவலுக்காக ஊர் சுற்றுவதும் வழக்கம்.

சாத்தூருக்குத் தென்புறம் உள்ள சிப்பிப்பாறை என்ற ஊரில் திருட்டுக்குப் பெயர் போனவர்களாகச் சிலர் வாழ்ந்து வந்தார்கள். அந்த ஊரைச் சேர்ந்த வெள்ளையத் தேவன் என்ற திருடன் விருதுநகரில், கன்னமிட்டுத் திருட இருப்பதாகத் தகவல் இருந்தது.

இந்தத் தகவல் அறிந்த காமராஜர் அவனைப் பிடிக்க முடிவு எடுத்தார். ஊர் சுற்றி வந்தால், அவன் உஷாராகிவிடுவான் என்று நினைத்து, அனைவரும் ஒவ்வோர் இடத்தில் ஒளிந்திருந்து அவன் நடவடிக்கையை கண்காணித்தனர். நள்ளிரவுக்குப் பின்னர் பஞ்சாயத்துப் போர்ட் ராந்தல் கம்பத்தைத் தாண்டி ஓர் உருவம் போனதைக் கண்டு, காவல்கார முனியாண்டி காமராஜரை உஷார் செய்தான்.

சந்திக்கூடத் தெருவுக்குள் நுழைந்த சிப்பிப்பாறை வெள்ளையன், சடையப்ப நாடார் கடையை நோட்டம் இட்டான். அதைக் கவனித்த காமராஜர் உடனே நண்பர்களை ஒன்று சேர்த்தார். திடும் என்று அந்தத் திருடன் மீது அவர்கள் மிளகாய்ப் பொடி கலக்கப்பட்ட தண்ணீரைப் பீய்ச்சி அடித்தனர். கண்களில் பட்ட மிளகாய்பொடியின் காரம் தாங்காமல் அலறிய திருடன், தட்டுத் தடுமாறி ஓட, அவன் காலைத் தட்டிவிட்டு, அவன் தலையில் கோணிப் பையை மாட்டிவிட்டனர். அவன் கைகளைக் கயிற்றால் கட்டிப் பின்னர் பிள்ளையார் கோயில் தூணில் அவனைக் கட்டி வைத்தனர். பொழுது விடிந்ததும் அந்தத் திருடன், போலீஸில் ஒப்படைக்கப்பட்டான்.

கில்லாடித் திருடனைப் பொடி வைத்துப் பிடித்த காமராஜர் மற்றும் அவரது நண்பர்களை காவல் துறையும், பொதுமக்களும் மனதாரப்

https://t.me/tamilpdfebooks

பாராட்டினர்.

காந்திஜியின் கொள்கைகளைக் கண்மூடித்தனமாக நம்பிய காமராஜருக்கு, விருதுநகரில் நிகழ்ந்து வந்த தீண்டாமைக் கொடுமை வேதனை கொடுத்தது. விருதுநகரில் புகழ்பெற்ற மாரியம்மன் ஆலய விக்கிரகம், ஆவாரங்காட்டுப் பள்ளர் வயலில் கிடைத்தது. ஆனால், பள்ளர் போன்ற மிகவும் தாழ்த்தப்பட்டவர்கள் கோயிலில் நுழைய முடியாது என்ற விதி அன்று நடைமுறையில் இருந்தது.

பங்குனி மாதப் பௌர்ணமி நாளில் மாரியம்மன் கோயில் தீச்சட்டி விழா இன்றும் பிரசித்தம். திருவிழா அன்று ஆயிரக்கணக்கான பக்தர்கள் கையில் தீச்சட்டியுடன் வீதி வலம் வந்து கோயிலில் கொண்டுவந்து செலுத்துவார்கள். அன்று இருந்த ஊர்க் கட்டுப்பாட்டின்படி தலித்துகள் நேரடியாக கோயிலுக்குள் சென்று தீச்சட்டியைச் செலுத்திவிட முடியாது. கோயிலின் மேற்குப் புறம் இருந்த அக்னி கிடங்கில் கொண்டு போய்ச் சேர்ப்பார்கள்.

ஒருமுறை, கோலாகலமாக நடந்துவந்த கோயில் விழாவில் தடங்கல் ஏற்பட்டுவிட்டது என்று ஊரில் பெரும் பதைபதைப்பு ஏற்பட்டது. என்ன என்று அறிந்துகொள்ள மாரியம்மன் கோயிலை நோக்கி மக்கள் ஓடினார்கள். அங்கே, குமரன் என்ற அரிஜன இளைஞனின் கையைப் பிடித்தபடி கோயிலுக்குள் நுழைய முயன்றுகொண்டு இருந்தார் காமராஜர். அவரைத் தடுத்து நிறுத்தப் படாதபாடு பட்டுக்கொண்டு இருந்தார் கோயில் பூசாரி.

"நாட்டாண்மைக்காரர் வீட்டுப் பிள்ளை ரகளை செய்கிறது, தடுத்து நிறுத்த பொடிக்கடை ஞானம் பிள்ளையைக் கூப்பிடுங்கள்" என்ற குரல் கேட்டு ஓடி வந்தார் ஞானம் பிள்ளை.

ஆவேசமாக நின்றுகொண்டு இருந்த காமராஜரிடம், "ஊர்க் கட்டுப்பாட்டை மீறலாமா தம்பி?" என்று கேட்டார் பூசாரி.

உடனே காமராஜர், "காந்திஜி தீண்டாமையை அடியோடு ஒழிக்க ஆசைப்படுறதா நீங்கதானே சொன்னீங்க... அப்படிச் சொன்ன நீங்களே இதை எதுத்தா நியாயமா? இவன் ஏன் கோயிலுக்குள்ள வரக்கூடாதுன்னு சொல்லுங்க. இவன் கறந்து கொடுத்த பாலை எல்லோரும் வாங்கத்தானே செய்றீங்க, பால் வேணும், இவன் வேண்டாமா?" என்று கூறியபடியே உள்ளே நுழைய முயன்றார்.

"காமராஜா! நீ சொல்றது எல்லாம் சரிதான். ஆனா உடனே இதை மாத்த முடியாது. இதை எப்படி சரி செய்யறதுன்னு பேசலாம், வா! இப்போ இதை அப்படியே விடு" என்று சமாதானம் சொன்னார் ஞானம் பிள்ளை.

ஆனால், காமராஜர், "ஐயா... நியாயம் இன்னைக்கே கிடைக்கணும்" என்றபடி கோயிலுக்குள் நுழைந்துவிட்டார். அத்துடன் நிற்காமல் பூசாரி கையால் பிரசாதமும் கொடுக்க வைத்தார்.

காமராஜரின் இந்த செயல் ஊருக்குள் பலருக்கு எரிச்சலையும், வேறு பலருக்கு சந்தோஷத்தையும் கொடுத்தது. இந்த சம்பவத்துக்குப் பிறகு

https://t.me/tamilpdfebooks

காமராஜர், அனைவருக்கும் தெரிந்தவராக மாறினார்.

ஆதரவற்ற குழந்தைகள் வளர்ப்பு இல்லத்தில்...

இந்தக் காலகட்டத்தில் விருதுநகரிலிருந்து வியாபாரிகள் பல்வேறு நகரங்களுக்குப் போய் தொழில் செய்து வந்ததால், ஊர் நாகரிகம் அடைந்தது. அதனால், விருதுபட்டி என்ற பெயரை 1923-ல் விருதுநகர் என்று மாற்றிக்கொண்டனர்.

திருவனந்தபுரத்தில் காமராஜர்

காங்கிரஸ் கட்சியின் சாதாரண தொண்டனாக, பார்வையாளனாக இருந்த காமராஜர் ஒரு பேச்சாளராக உயர்ந்து ஊர் ஊராகச் சுற்றிகொண்டு இருந்ததைக் கண்டு, பெருமைப் படுவதற்குப் பதிலாக குடும்பத்தினர் அச்சப்பட்டனர். ஏனென்றால் உள்ளூரில் ஜஸ்டிஸ் கட்சியினர் தொடர்ந்து காமராஜருக்குத் தொல்லை கொடுத்துக்கொண்டு இருந்தனர். ஊர்ப் பெரியவர்கள் அனைவரும் ஜஸ்டிஸ் கட்சியினராக இருந்ததால், தங்களுடைய ஒரே ஆண் வாரிசான காமராஜரின் உயிருக்கு ஆபத்து நேரலாம் என்று குடும்பத்தினர் பயந்தனர்.

காமராஜரை எப்படியாவது தங்கள் வழிக்குக் கொண்டுவர வேண்டும் என்று தாயும் பாட்டியும் தொடர்ந்து முயன்றனர். திருவனந்தபுரத்தில் மரக்கடை வைத்திருந்த சிவகாமியின் இன்னொரு சகோதரர் காசி நாராயண நாடார் விருதுநகருக்கு வந்தார். அவரிடம் பேசினார்கள். காமராஜர் அரசியலில் அதீத ஈடுபாடு காட்டுவதற்கு நண்பர்களே காரணம் என்று குடும்பத்தினர் முடிவுக்கு வந்தனர். அதனால், நண்பர்களை விட்டு சிறிது காலம் காமராஜர் விலகி இருந்தால் அவருடைய மனம் மாறிவிடும் என நினைத்தனர்.

உடனே, அவர்கள் திட்டப்படியே, ‘காமராஜர் தனக்கு உதவி செய்வதற்காக சில மாதங்களாவது திருவனந்தபுரம் வந்தே தீர வேண்டும்’ என்று அடம்பிடித்தார் காசி நாராயணன். சில நாட்களில் அவர் கிளம்பிப் போய்விடுவார் என்று காமராஜர் அசட்டையாக இருந்தும் பலன் இல்லை. தன்னால் தாய் மாமன் குடும்பம் சங்கடப்படக்

https://t.me/tamilpdfebooks

கூடாது என்ற எண்ணத்தில், "சில நாட்களே தங்கி இருப்பேன்" என்று கூறி திருவனந்தபுரம் புறப்பட்டுச் சென்றார். அங்கேயும் காமராஜருக்குக் காத்திருந்தது போராட்டம் என்பதுதான் ஆச்சர்யம்!

திருவனந்தபுரத்தில் சில நாட்கள் கடை வேலையில் மும்முரமாக ஈடுபட்டார். காங்கிரஸ் கட்சிப் பொதுக் கூட்டம் எங்கு நடக்கிறது என்று தேடிச் சென்று கண்டுபிடித்து ஓய்வு நேரத்தில் கலந்து கொண்டார். காமராஜர் கேரளம் சென்ற சில நாட்களிலேயே பெரிதாக வெடித்தது ஒரு போராட்டம்.

வைக்கம் போராட்டம்

அது 1924-ம் வருடம். கேரளாவில் உள்ள வைக்கம் என்ற ஊரின் நடுவே ஒரு கோயில் இருக்கிறது. 'கோயில் மற்றும் அதை சுற்றி இருக்கும் வீதிகளில் கீழ் ஜாதிக்காரர்களும் தீண்டத்தகாதவர்களும் போகக்கூடாது. ஒரு மைல் தொலைவு சுற்றி வேறு பாதையில் போக வேண்டும்' என்று கட்டுப்பாடு இருந்தது.

வைக்கம் அரசரின் அரண்மனை வளாகத்தில் நீதிமன்றம் ஒன்று இருந்தது. ராஜாவின் பிறந்த நாள் விழாவுக்காக வீதி எங்கும், பாதைகளை அடைத்துக் கொட்டகை போடப்பட்டு இருந்தது. கோர்ட் நடக்கும் இடமும் கொட்டகை போடப்பட்டு இருந்தது.

மாதவன் என்ற, பி.ஏ.பி.எல்., படித்த, ஈழவ சமுதாயத்தைச் (நாடார்) சேர்ந்த வழக்கறிஞர், ஒரு வழக்குக்காக அந்த கோர்ட்டுக்குள் நுழைய முயன்றார். உடனே அவரைத் தடுத்து நிறுத்தினார்கள். வழக்கறிஞர் மாதவன் தடுத்து நிறுத்தப்பட்ட சம்பவம் பலருக்குக் கோபத்தை உண்டாக்கியது. அதனால் இதை எதிர்த்து உடனே சத்தியாகிரகப் போராட்டம் தொடங்கியது. ராஜாவின் ஆணைப்படி போராட்டத்தில் ஈடுபட்ட, வழக்கறிஞர் மாதவன், பாரிஸ்டர் கேசவமேனன், டி.கே.மாதவன், ஜார்ஜ் ஜோசப் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

அப்போது தமிழகத்தில் ஈ.வெ.ராமசாமி நாயக்கர் காங்கிரஸ் தலைவராக, தீண்டாமையை எதிர்த்துக் குரல் கொடுத்துக்கொண்டு இருந்தார். தகவல் தெரிந்து உடனே அவர் வைக்கம் விரைந்தார். 'மன்னர் ஏற்கெனவே அறிமுகமானவர் என்பதால், போராட்டத்தை பெரியார், பெரிய அளவில் நடத்தமாட்டார்' என்று அனைவரும் நினைத்தனர். ஆனால், வழக்கத்தைவிட ஆவேசமாகப் போராட்டத்தில் குதித்தார் பெரியார். ஆத்திரம் அடைந்த மன்னர், போராட்டத்துக்கு தடை உத்தரவு பிறப்பித்து, பெரியாரைக் கைது செய்து சிறையில் அடைத்தார்.

https://t.me/tamilpdfebooks



பெரியாருடன் காமராஜர்

இதற்குப்பின் பெரியாரின் மனைவி நாகம்மாள், சகோதரி கண்ணம்மாள் ஆகியோரும் தொடர்ந்து போராட்டத்தில் குதித்தனர். போராட்டத்துக்கு மக்கள் ஆதரவு குவிந்தது. ஜாதிக் கொடுமைக்கு எதிரான போராட்டத்துக்கு ஆதரவாக மணியார்டர்கள் குவிந்தது. சத்தியாகிரக ஆசிரமத்தில் ஆயிரம் பேருக்கும் மேல் ஒன்று திரண்டனர். இவர்கள் தினமும் ஊர் முழுவதும் சத்தியாகிரக பஜனையும் ஊர்வலமும் நடத்தினர்.

போராட்டத்தைத் தடுத்து நிறுத்துவதற்காக, கேரள நம்பூதிரிகளும், சில வைதீகர்களும் சேர்ந்து, 'சத்ரு சம்ஸ்கார யாகம்' நடத்தினர். இந்த யாகத்திலிருந்து புறப்படும் பூதம் பெரியாரின் கழுத்தை நெரித்துக் கொன்றுவிடும் என்று நம்பப் பட்டது. ஆனால், அந்த யாகம் முடியும் முன்னரே மன்னர் மரணம் அடைந்தார்! அதனால் கைது செய்திருந்த அனைவரையும் அரசாங்கம் விடுதலை செய்தது. ராணி, சமாதான உடன்படிக்கை செய்துகொள்ளவே, போராட்டம் விலக்கிக்கொள்ளப்பட்டது. அங்கு தீண்டாமை உடைத்து எறியப்பட்டது.

திருவனந்தபுரம் சென்றிருந்த காமராஜருக்குப் போராட்டம் ஒரு புதிய பார்வையைக் கொடுத்தது. காமராஜரும் போராட்டத்தில் கலந்துகொண்டு தீவிரமாகப் பணியாற்றினார். திருவனந்தபுரம் சென்றும் தேச விடுதலை, தீண்டாமை எதிர்ப்பு என்று போராட்டம் நடத்துகிறான் என்று ஆத்திரமடைந்த, அவரது தாய் மாமா கருப்பையா நாடார், திருவனந்தபுரம் சென்று காமராஜரைத் திருப்பி அழைத்து வந்தார்.

திருமண ஏற்பாடு

விருதுநகர் துணிக்கடை வியாபாரம், திருவனந்தபுரம் மரக்கடை வியாபாரம் என எதுவுமே காமராஜரைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்பதால் குடும்பத்தினர் தீவிரமாக ஆலோசனை நடத்தி, அவரைக் கட்டுப்படுத்தும் புதிய வழி ஒன்றைக் கண்டு பிடித்தார்கள்.

https://t.me/tamilpdfebooks

கால்கட்டு ஒன்று போட்டுவிட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்று முடிவு எடுத்தார்கள். மாமன் மகள் ஒருத்தியைத் திருமணம் செய்து வைப்பது என்று ஏற்பாடு ஆனது. திருமண நிச்சயம் வைத்துக்கொள்ளலாம் என்ற நிலையில் காமராஜர் காதுக்கு இந்த செய்தி எட்டியது.

வீட்டுக்கு வந்த காமராஜர் பாட்டியிடம், "எனக்கு கல்யாண ஏற்பாடு செய்றீங்களா?" என்று கேட்டார். பாட்டி தயக்கத்துடன் தலை அசைத்தார்.

"நாடு அடிமைப்பட்டுக் கிடக்கிறப்போ, நான் எப்படிக் கல்யாணம் முடிச்சு, குடித்தனம் நடத்த முடியும்? அதெல்லாம் இப்போ வேண்டாம்" என்றார்.

"நீ கட்சி வேலையே பாருப்பா... ஆனா ஒரு பெண்ணை கல்யாணம் பண்ணிக்கிட்டா எங்களுக்கும் துணையா இருக்கும், உனக்கும் ஆதரவா இருக்கும்" என்று சொல்லிப் பார்த்தார்கள்.

"எதுவா இருந்தாலும் நாடு சுதந்திரம் அடைஞ்ச பிறகுதான் பேச முடியும்" என்று திருமணத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தார் காமராஜர். எப்போதும் பையன்கள் எடுத்தவுடன் திருமணப் பேச்சுக்கு சம்மதம் தெரிவித்துவிட மாட்டார்கள் என்பதால் பாட்டியும் தாயும் திருமணப் பேச்சை விடுவதாக இல்லை. தொடர்ந்து பேசினால் தலையை ஆட்டிவிடுவான் என்று அக்கம்பக்கத்தினர் சொன்னதைக் கேட்டு அவ்வப்போது திருமணப் பேச்சை எடுத்தனர்.

கிராமம்தோறும் நடைபயணம்...

"இந்த வீட்டுல இனியும் கல்யாணப் பேச்சை எடுத்தீங்கன்னா, என் உயிரே போனாலும், இங்க வரமாட்டேன்" என்று ஓங்கிக் குரல் கொடுத்தார்.

அவ்வளவுதான், அதற்குப் பிறகு அந்த வீட்டில் காமராஜர் எதிரே கல்யாணப் பேச்சு எடுக்கப்படவே இல்லை. தன் ஒரே மகனை முழுமையாக நாட்டுக்கு அர்ப்பணித்ததாக நினைத்துத் தன்னைத்தானே தேற்றிக்கொண்டார் சிவகாமி.

https://t.me/tamilpdfebooks

கள்ளுக்கடை மறியல்

காங்கிரஸ் கட்சியின் கொள்கைகளை முழுமையாக ஏற்றுக் கொண்டு, அதன்படி நடந்தவர் காமராஜர். கள்ளுக்கு எதிராக காந்தியடிகள் பேசியவுடன் கள் உண்ணாமைக்கு ஆதரவாக உரக்கக் குரல் கொடுத்தார் காமராஜர். தன்னுடைய நண்பர்களை கள் குடிக்கக் கூடாது என்று வற்புறுத்தினார். அப்படியும் திருந்தாத நண்பர்களை விட்டு விலகினார்.

மதுரையில், கள்ளுக்கடை மறியலை 1923-ல் முன் நின்று நடத்தினார் காமராஜர். மாடியில் இருந்த காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் போராட்டத் திட்டங்களைப்பற்றி பேசி முடித்துக் கீழே இறங்கினார். பக்கத்துத் தெருக்களில் போராட்ட ஏற்பாடுகள் எந்த அளவில் இருக்கிறது என்பதை அறிந்துகொள்ளச் சென்றார். அந்த நேரத்தில் காங்கிரஸ் அலுவலகத்துக்கு வந்த போலீஸ்காரர்கள், அங்கிருந்த அனைவரையும் கைது செய்து அலுவலகத்துக்கு பூட்டுப் போட்டுவிட்டார்கள்.

விவரம் கேள்விப்பட்டு, காமராஜர் திரும்பி வருவதற்குள் போலீஸார் போய்விட்டார்கள். போராட்டத்தை ஏற்பாடு செய்த தான் வெளியே இருக்கும்போது, மற்றவர்களை எல்லாம் கைது செய்துவிட்டார்களே என்ற வேதனையுடன் ஊர் திரும்பினார் காமராஜர்.

தேர்தல் பிரசாரம்

பிரிட்டிஷ் அதிகாரத்துக்கு உட்பட்ட மாகாண சட்டசபைக்கு நடக்கும் தேர்தலில் காங்கிரஸ் கலந்துகொள்ள வேண்டுமா, வேண்டாமா என்பதில் கட்சிக்குள் பல்வேறு குரல்கள் ஒலித்தன. தேர்தலில் கலந்துகொள்ள வேண்டியது இல்லை என்பது காந்திஜியின் எண்ணம். ஆனால், மோதிலால் நேரு, சித்தரஞ்சன் தாஸ் உள்ளிட்ட தலைவர்கள் தேர்தலில் கண்டிப்பாகப் போட்டியிட வேண்டும் என்று கருதினர். அதனால் தேர்தலில் காங்கிரஸ் நேரடியாகப் போட்டியிடாமல், ஆதரவு தலைவர்கள் தலைமையில் சுயராஜ்யக் கட்சியைத் தொடங்கி தேர்தலில் போட்டியிடலாம் என்று காங்கிரஸ் முடிவு செய்தது. அதன்படி 1923-ல் சுயராஜ்யக் கட்சி தொடங்கப்பட்டது.

தமிழகத்தைப் பொறுத்தவரை ராஜாஜி, சட்டசபைத் தேர்தலை பகிஷ்கரித்தார். ஆரம்பத்தில் காமராஜரின் நிலையும் அதுவே. ஆனால், பின்னர் சுயராஜ்யக் கட்சி சட்டசபை வேலைகளை கவனிக்கும்படி காங்கிரஸ் கட்சி கேட்டுக்கொண்டதால் காமராஜர் தேர்தல் பிரசாரத்தில் தீவிரமாக இறங்கினார்.

தன் அரசியல் குரு சத்தியமூர்த்தியுடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் காமராஜருக்கு இந்தத் தேர்தலில்தான் வாய்த்தது. சுயராஜ்யக் கட்சியின் கொள்கைகளைப்பற்றி விவாதிப்பதற்காக முக்கிய தலைவர்கள் எல்லாம் மதுரையில் கூடுவதை அறிந்து காமராஜரும் மதுரைக்குச் சென்றார். கே.ஆர்.வெங்கட்ராம ஐயர் இல்லத்தில் நடந்த கூட்டத்தில் சத்தியமூர்த்தி, சுயராஜ்யக் கட்சியின் கொள்கைகளை தெளிவாக, ஆணித்தரமாக விளக்கினார்.

https://t.me/tamilpdfebooks

இந்தத் தேர்தலுக்காக விருதுநகரிலிருந்து ஒரு தொண்டர் படையுடன் தென் தமிழகப் பகுதிகளுக்குப் போய்த் தேர்தல் வேலைகள் செய்தார் காமராஜர். பிரசாரத்தில் இறங்கிவிட்டால் பசி, தூக்கம் எதுவும் இன்றி வேலை செய்துகொண்டே இருப்பார். ஆனால், உடன் அழைத்து வந்த தொண்டர்களையும் நண்பர்களையும் சாப்பிட வைப்பதும், அவர்களுக்குத் தூங்க ஏற்பாடு செய்வதற்கும் தனி கவனம் எடுத்துக்கொள்வார். அதனால், அவருடன் செல்வதற்கு இளைஞர் படை எப்போதும் தயாராக இருந்தது.



குழந்தை நல மருத்துவமனையில்...

அடுத்தடுத்து போராட்டம்

நாகபுரியில் ஆங்கிலேயர்கள் குடியிருந்த தெருவில், காங்கிரஸ் கொடியுடன் இந்தியர்கள் நடப்பதற்கு தடை போடப்பட்டது. இதை எதிர்த்து 1925-ல் நாகபுரியில் கொடி போராட்டம் நடத்த காங்கிரஸ் அழைப்பு விடுத்தது. நாடு எங்கும் இருந்து நாகபுரி நோக்கி காங்கிரஸ் தொண்டர்கள் கொடியுடன் சென்றனர்.

இதை அறிந்த காமராஜர், தமிழ்நாட்டிலிருந்தும் ஒரு தொண்டர் படையை அனுப்புவதற்கான ஏற்பாட்டில் இறங்கினார். முக்கிய நகரங்களிலிருந்து தொண்டர்களை முதலில் அனுப்பிய காமராஜர் இன்னும் கொஞ்சம் தொண்டர்களுடன் நாகபுரி நோக்கிப் பயணமானார். ஆனால், காமராஜர் போய்ச் சேர்வதற்குள் ஆங்கிலேயர்களுடன் காங்கிரஸ் கட்சியினருக்கு உடன்பாடு ஏற்பட்டதால் நாகபுரி போராட்டம் நிறுத்தப்பட்டது. போராட்டத்தில் கலந்துகொள்ள முடியாமல் திரும்பி வந்தார் காமராஜர்.

வாள் ஏந்திய காமராஜர்

விடுதலைப் போராட்டம் தீவிரம் அடைவதைக் கண்ட ஆங்கிலேய அரசு. போராட்ட வீரர்கள் வன்முறையில் இறங்கினால் ஆபத்து என்று

https://t.me/tamilpdfebooks

அஞ்சி, 'ஆறு அங்குல நீளத்துக்கு மேல் உள்ள கத்தியை யாரும் வைத்திருக்கக் கூடாது. அப்படி வைத்திருக்க வேண்டுமானால் அரசு அனுமதி அவசியம்' என்று 1927-ல் ஒரு சட்டம் போட்டது.

இந்த சட்டத்தின் விளைவாக, அரிவாள், கத்தி ஆகியவற்றைப் பயன்படுத்தி மரம் வெட்டுதல், மற்ற சாதாரண வேலைகள் ஆகியவற்றைச் செய்ய முடியாமல் போய்விடுமோ என்று ஏழை மக்கள் அதிர்ச்சி அடைந்தனர். இந்தச் சட்டத்தை மீற வேண்டும் என்பதற்காக அவாரி என்ற தேசியவாதி போராட்டம் நடத்தினார். விருதுநகரில் அந்தப் போராட்டத்தை நடத்த முன்வந்தார் காமராஜர். அந்தப் போராட்டத்துக்காகவே மதுரையிலிருந்து ஐந்து பெரிய வாள்களை தயார் செய்து எடுத்து வந்தனர். கைகளில் வாள் தாங்கி விருதுநகரில் முக்கிய கடைவீதிகளில் சுற்றி வருவது என்று திட்டம் போட்டிருந்தனர். ஊர்வலமாகச் செல்லப் பலர் முன் வந்தனர்.

அந்த நேரத்தில் போராட்டத்தை அடக்குவதற்காக போலீஸ் தயாராக இருப்பதாகவும், கிளர்ச்சியில் ஈடுபடுபவர்களை கைது செய்யத் திட்டம் இட்டிருப்பதாகவும் செய்தி கிளம்பியது. அதனால், போராட்டத்துக்கு வந்தவர்கள்கூட வாள் ஏந்தி வரத் தயங்கினார்கள். அதோடு, 'காவலர்கள் எதிர்பாராத தினத்தில் இன்னொரு நாள் போராட்டத்தை வைத்துக்கொள்ளலாம்' என்று காமராஜருக்கு யோசனை தெரிவித்தார்கள்.

உடனடியாக அவர்களது யோசனையைத் தூக்கி எறிந்த காமராஜர், இடையில் உறையைக் கட்டிக்கொண்டு கையில் வாளை ஏந்தியபடி ஊர்வலம் கிளம்பினார். பின்னே யார் வருகிறார்கள் என்றெல்லாம் பார்க்காமல், உரத்த குரலில் பாரதி பாடல்களை பாடியபடி கிளம்பினார் காமராஜர்.

நெஞ்சில் உரமுமின்றி

நேர்மைத் திறமுமின்றி

வஞ்சனை சொல்வாரடி கிளியே

வாய்ச்சொல்லில் வீரரடி...

-என்று பாடியபடி முக்கிய வீதிகளில் எல்லாம் துள்ளிக் குதித்து வலம் வந்தார். எதற்கும் அஞ்சாத போர் வீரனைப் போல அவரது நடையும் பாடலும் இருந்தன என்கிறார் அன்றைய போராட்டத்தில் காமராஜருடன் கலந்துகொண்ட முருக தனுஷ்கோடி. தமிழகம் எங்கும் சட்டத்துக்கு மக்கள் எதிர்ப்பு அதிகமாக இருப்பதைக் கண்டு, ஆறு அங்குலத்துக்கு மேல் கத்திக்கு அனுமதி வாங்க வேண்டும் என்ற திட்டம் வாபஸானது.

https://t.me/tamilpdfebooks

காந்திஜியுடன் சந்திப்பு

காந்தியடிகளை நேரில் பார்த்து இருந்தாலும், சந்தித்துப் பேசும் வாய்ப்பு காமராஜருக்கு 1927-ல்தான் கிடைத்தது. அப்போது, நீல் என்பவனின் சிலையை அகற்றும் போராட்டம் நடந்தது. 1857-ல் நடந்த சிப்பாய்க் கலகத்தில் ஈடுபட்டவர்களை சித்ரவதை செய்தவன் நீல். அவனுக்கு சென்னை மவுன்ட்ரோட்டில் சிலை வைக்கப்பட்டு இருந்தது. இந்தியர்களை கொடுமைப் படுத்தியவனின் சிலை அந்த இடத்தில் இருக்கக்கூடாது என்று கிளர்ச்சி நடத்திய குடியாத்தம் சாமிநாத முதலியார், சோமையாஜுலு ஆகியவர்களை ஆங்கில அரசு கைது செய்தது.

இந்தப் போராட்டத்தை அடுத்த கட்டமாக ஏற்று நடத்துவதற்கு முன்வந்தார் காமராஜர். அந்த நேரத்தில் சென்னைக்கு வந்திருந்த காந்திஜி, சீனிவாச ஐயங்கார் வீட்டில் தங்கி இருந்தார். நீல் சிலையை அகற்றும் போராட்டத்தை எப்படி நடத்தலாம் என்பது குறித்து காந்தியடிகளுடன் ஆலோசனை நடத்தினார் காமராஜர். போராட்டத்துக்கு ஆதரவு தந்த காந்திஜி, 'பலாத்காரம் அற்ற முறையில், நமது வெறுப்பை மட்டும் உணர்த்தும் வகையில் போராட்டம் இருக்க வேண்டும். சின்னச் சின்ன களிமண் உருண்டைகளை நீல் சிலை மீது எறிந்து போராட்டம் நடத்துங்கள்' என்று வழிகாட்டினார்.

https://t.me/tamilpdfebooks

காமராஜருக்கு டெல்லியில் வரவேற்பு...

அதே ஆண்டில் பண்டித நேருவையும் சந்தித்துப் பேசும் வாய்ப்பு காமராஜருக்குக் கிடைத்தது. 1927-ல் ஐரோப்பிய சுற்றுப் பயணத்தை முடித்துவிட்டு, சென்னை எழும்பூரில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் கலந்துகொண்ட நேருவை சந்தித்துப் பேசினார்.

அந்த மாநாட்டில், நீல் சிலையை அகற்ற வேண்டும் என்று தீர்மானம் போடப்பட்டது. 'முழு சுதந்திரமே தனது லட்சியம்' என்று, மாநாட்டில் ஓங்கிக் குரல் கொடுத்தது காங்கிரஸ். இந்தத் தீர்மானம் ஆங்கிலேயர்களுக்கு ஆத்திரத்தைக் கொடுத்தது. நீல் சிலை போராட்டத்தை நடத்துவதற்கு முன்னர் சைமன் கமிஷன் விவகாரம் பெரிதாக உருவெடுக்கவே, அதற்காகப் போராடினார் காமராஜர்.

பிரிட்டிஷ் அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்ளும் முயற்சியாக சைமன் கமிஷன் 1928-ல் இந்தியாவுக்கு வந்தது. மும்பை, கல்கத்தா, சென்னை, பாட்னா, டெல்லி வழி எங்கும் கூட்டமாக ஒன்று சேர்ந்து மக்கள், 'சைமனே திரும்பிப் போ' என்று வீர முழக்கமிட்டார்கள். கறுப்புக் கொடி காட்டினார்கள்.

https://t.me/tamilpdfebooks

நேருஜி, ராஜாஜியுடன்...

லக்னோவில் பண்டித நேருவும், லாகூரில் பழம்பெரும் தலைவரான பஞ்சாப் சிங்கம் லாலா லஜபதிராய் தாக்கப்பட்டனர்.

"என் மீது விழுந்த ஒவ்வோர் அடியும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் மீது அறையப்படும் ஆணி" என்று, காயத்துடன் பேசினார் லாலாஜி. அவர் தாக்கப்பட்டதற்கு எந்த விசாரணையும் நடக்கவில்லை. படுகாயம் அடைந்த லஜபதிராய், சிகிச்சை பலன் அளிக்காமல் இறந்துபோனார்.

இதனால், நாடு முழுவதும் சைமன் கமிஷனுக்கு எதிர்ப்பு அதிகமானது. லஜபதிராயை தாக்கிய போலீஸ் ஆபீஸர் சாண்டிரஸ் என்பவனை பகத்சிங்கும், அவரது தோழர்களான ராஜகுரு, சுகதேவ் ஆகியோரும் சுட்டுக் கொன்றார்கள்.

சைமன் கமிஷன் மதுரைக்கு வந்து, திருமலை நாயக்கர் மஹாலில் தங்கி இருந்தது. எதிர்ப்புத் தெரிவித்து, கறுப்புக் கொடியுடன் நின்ற சுதந்திரப் போராட்ட வீரர்களை அருகே நெருங்க விடாமல் தூரத்திலேயே நிறுத்திவிட்டார்கள். கறுப்புக் கொடியுடன் யாரும் நிற்கக்கூடாது என்று உத்தரவிட்டனர்.

இந்த போராட்டத்தை தலைமை ஏற்று நடத்திய காமராஜரும், ஜார்ஜ் ஜோசப்பும் தொண்டர்களை இரண்டு பிரிவுகளாகப் பிரித்தனர். கையில் கொடியுடன் திருமலை நாயக்கர் மஹாலின் எதிரே முன்னும் பின்னும் இரண்டு பிரிவினரும் நடந்து கொண்டிருந்தனர். சட்டப்படி, கறுப்புக் கொடியுடன் நிற்கக் கூடாது என்பதால் நடந்துகொண்டே இருந்த காமராஜரின் தொண்டர் படையை என்ன செய்வது என்று புரியாமல் விழித்தனர் வெள்ளை அதிகாரிகள்.

https://t.me/tamilpdfebooks

துப்புரவு தொழிலாளர்களுடன்...

தொண்டர்களை அடித்தால் பெரிய சிக்கல் ஏற்படலாம் என்று ஆங்கில அதிகாரிகள் அமைதியாக இருந்தனர். சைமன் கமிஷன் எதிர்ப்பை அனைவரும் வியக்கும் வண்ணம் சிறப்பாகச் செய்து முடித்து, அனைவருடைய பாராட்டையும் பெற்றார் காமராஜர்.

இங்கிலாந்தில் 1929-ல் நடந்த தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சி தோல்வி அடைந்து, தொழிற்கட்சி ஆட்சிக்கு வந்தது. ஆனாலும் விடுதலை வீரர்களைக் கொடுமைப்படுத்தும் போக்கில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. சுதந்திரப் போராட்டக் கைதிகளை கேவலமாக நடத்துவதைக் கண்டித்து 63 நாட்கள் ஜதீந்திரதாஸ் உண்ணாவிரதம் இருந்து உயிர் துறந்தார்.

இந்தச் சம்பவம் நாடு எங்கும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்தக் கொடுமைகளால் எல்லாம் சுதந்திரப் போராட்டத்தில் இன்னமும் தீவிரமாக ஈடுபட வேண்டும் என்ற வேகம் காமராஜருக்குக் கொழுந்துவிட்டு எரிந்தது. தன் தீவிரத்தைக் காட்ட அவருக்கு மேலும் ஒரு சந்தர்ப்பமும் வாய்த்தது.

https://t.me/tamilpdfebooks

3

விடுதலைப் போராட்டம் 1930-1942

சுதந்திரத்தையும், மூவர்ணக் கொடியையும் தவிர வேறு எதையும் பேசாதவர் காமராஜர். அவரது பேச்சில் மட்டுமல்ல மூச்சிலும் காங்கிரஸ், போராட்டம் என்பதுதான் இருந்தது. அவரது ரத்தத்தில் சுதந்திர தாகம் ஆறாக ஓடியது.

காந்தியடிகளின் உப்பு சத்தியாகிரகம் உலகையே குலுக்கியது. காந்திஜியின் உண்மை சீடராக, ஒரு தலைவனாக காமராஜரை தமிழகத்துக்கு அடையாளம் காட்டியது இந்தப் போராட்டம்தான்.

தண்டி யாத்திரை

உலகப் புகழ் பெற்ற சத்தியாகிரக போராட்டமான தண்டி யாத்திரையை மகாத்மா காந்தி 1930, மார்ச் 12-ம் தேதி தொடங்கினார். இந்தப் போராட்டம் தொடங்கிய விதம் அலாதியானது. உப்பு என்பது சாதாரண பொருளாக இருந்தாலும், ஏழைகளுக்கு மிகவும் அவசியமானது. இந்தியாவில் பெரும்பாலான ஏழைகள் கிழங்குகளையும் தானியங்களையும் வெறுமனே உப்பு தொட்டுக்கொண்டுதான் சாப்பிட்டனர். குறிப்பாக, விவசாயக் கூலிகள் பணம் கொடுத்து வாங்கக்கூடிய பொருள், உப்பு மட்டுமே.

இந்தச் சூழலில் இந்தியர்களால் தயாரிக்கப்பட்ட உப்புக்கு வரி விதித்தது ஆங்கில அரசு. மேலும், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட உப்பை, பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு விற்பதைத் தவிர, வேறு யாருக்கும் விற்கக்கூடாது என்ற சட்டத்தையும் இயற்றியது. உப்புக்கு வரி போட்டு பல கோடி ரூபாய் சம்பாதித்தது பிரிட்டிஷ் அரசு. ஒரு கட்டத்தில் அரசின் வருமானத்தில் பதினெட்டு சதவிகிதம் வரை உப்பு வரி இருந்தது.

இதை விலக்கிக்கொள்ள வேண்டும் என்று காங்கிரஸ் விடுத்த கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. கடலோரம் இயற்கையாக விளைந்த உப்பை அள்ளினால், அது ராஜதுரோகம் என்று சொல்லி கைது செய்தது அரசு. இந்தியாவின் ஒவ்வொரு குடிமகனையும் பாதிக்கும் பிரச்னை என்பதால், இதைத் தீவிரமாக எடுத்துப் போராடத் திட்டம்

https://t.me/tamilpdfebooks

இட்டார் காந்திஜி.

ஒத்துழையாமை இயக்கம் வன்முறையில் முடிந்ததை கவனத்தில் கொண்டு, தனது ஆசிரமத்திலிருந்து சத்தியாகிரகத் தொண்டர்கள் 78 பேரை தேர்வு செய்து, தண்டி நோக்கி நடைபயணத்தைத் தொடங்கினார். தொடர்ந்து 25 நாட்கள் நடந்த அந்தப் பயணச் செய்தி உலகம் எங்கும் காட்டுத் தீயாகப் பரவியது. இந்தியா எங்கும் கோடானுகோடி மக்கள் அன்றாடம் இந்தச் செய்தியைபற்றித்தான் பேசினார்கள். 78 பேருடன் தொடங்கிய பாதயாத்திரை 390 கிலோமீட்டர் கடந்து ஏப்ரல் 6-ம் தேதி தண்டியை அடைந்தபோது லட்சக்கணக்கான தொண்டர்கள் சேர்ந்திருந்தனர்.

உப்பு சத்தியாகிரக தொண்டர்களை போலீஸார் அடித்து ரத்தக்களறி ஆக்கினாலும், கைகளைக்கூட உயர்த்தாமல், எதிர்க்காமல், வலியைத் தாங்கிக்கொண்டு அமைதியாக ரத்தம் சிந்தினர். இந்தக் காட்சிகள் உலகம் எங்கும் பரவி, இந்தியப் போராட்டத்தை வலிமையாக்கியது.

வடக்கே தண்டி யாத்திரை போல, ராஜாஜி தலைமையில் வேதாரண்யத்தில் உப்பு சத்தியாகிரக போராட்டம் தமிழகத்தில் நடந்தது. ஏப்ரல் 13-ம் தேதி வேதாரண்ய போராட்டத்தில் காமராஜர் தீவிரமாகக் களம் இறங்கினார். இதில் கலந்து கொண்டதற்காக காமராஜர் கைது செய்யப்பட்டு, அவருக்கு இரண்டு ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இதுதான் சுதந்திரப் போராட்ட களத்தில் காமராஜர் சந்தித்த முதல் சிறை தண்டனை. பெல்லாரி அருகே உள்ள அலிபூர் சிறையில் காமராஜரும் அவரது நண்பர் முத்துசாமியும் சிறைபட்டனர். ஏழு நாட்களுக்கு முன்னர்தான் முத்துசாமிக்குத் திருமணம் முடிந்திருந்தது. காமராஜருக்காகவே போராட்டத்தில் குதித்தவர்.

https://t.me/tamilpdfebooks



நூல் நூற்கும் காமராஜர்

சிறையில் இருந்தபோது, ஒவ்வொரு கைதியையும் சந்தித்து, அவரைப்பற்றி விலாவாரியாகக் கேட்டுத் தெரிந்துகொண்டார் காமராஜர். மேலும், புத்தகம், நாளிதழ் ஆகியவற்றைப் படித்து நாட்டு நடப்புகளை அறிந்துகொள்வதில் கவனமாக இருந்தார். ஒவ்வொரு தேசபக்தர் மீதும் அன்பு கொண்டு விசாரித்ததால், சிறையில் இருந்தவர்கள் காமராஜர் மீது அதீத பாசமாக இருந்தனர். இங்குதான் காமராஜர் ஒரு தலைவராக உருமாறினார்.

சிறையில் இருந்தபோது காமராஜருக்கு ஒரு சத்தியசோதனை ஏற்பட்டது. ஆம், அவரது பாட்டி பார்வதிக்கு உடல் நலம் சரியில்லாமல் அவதிப்பட்டுக்கொண்டு இருந்தார். தன்னுடைய பேரன் ஜெயிலில் எப்படி எல்லாம் சிரமப்படுகிறானோ என்று நினைத்தே அவருக்கு உடல் நலம் கெட்டுப்போனது. பாட்டி உயிர் பிழைப்பதே கடினம் என்ற நிலை வரவே காமராஜரின் நண்பர்கள் முருக தனுஷ்கோடியும், நாட்டாண்மை துரைசாமியும் அலிபூர் சென்று காமராஜரை சந்தித்தார்கள்.

"பாட்டியின் உடல் நலம் மோசமடைந்து வருவதால், உடனே பரோலில் வந்து ஒரு முறை பாட்டியை பார்த்துச் செல்ல வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்கள். முகத்தில் வருத்தத்தை காமராஜர் காட்டினாலும், உள்ளத்தில் உறுதியுடன் இருந்தார். இங்கே இத்தனை தொண்டர்கள் சிறையில் வாடிக்கொண்டு இருக்கும்போது, நான் மட்டும் வெளியே வருவதற்கு இல்லை என்று உறுதியாக மறுத்துவிட்டார். உப்பு சத்தியாகிரக போராட்டம் நாடு எங்கும் பரவியதால், ஆங்கில அரசு

https://t.me/tamilpdfebooks

பணிந்தது. காந்தி - இர்வின் ஒப்பந்தப்படி உப்பு வரி விலக்கப்பட்டது, கைது செய்யப்பட்ட தொண்டர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

1931, மார்ச் 12-ம் தேதி விடுதலை அடைந்த காமராஜர் விருதுநகர் திரும்பினார். ஊர் திரும்பும் காமராஜருக்கு அவரே எதிர்பார்க்காத வண்ணம், மக்கள் திரண்டுவந்து வரவேற்பு கொடுத்தனர். ரயில் நிலையத்தில் காமராஜரை வரவேற்ற மக்கள், 'காந்திஜிக்கு ஜே... காமராஜருக்கு ஜே' என்று விண் அதிர முழங்கினர். ரயில் நிலையத்திலிருந்து வீட்டுக்கு காமராஜர் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார். அப்படி உணர்ச்சிபூர்வமான ஓர் ஊர்வலத்தை விருதுநகர் அது வரை கண்டது இல்லை.

வீட்டுக்கு வந்த காமராஜர், வீட்டுக்கு அருகே இருந்த காளி கோயிலின் முன் இருந்த பீடத்தில் ஏறி தனக்கு வரவேற்பு அளித்த அனைவருக்கும் நன்றி கூறினார்.

"எனக்கு மகத்தான வரவேற்பு கொடுத்தீர்கள். உங்கள் அன்புக்கும் வரவேற்புக்கும் நன்றி. நீங்கள் அனைவரும் எனக்காக ஒன்று செய்ய வேண்டும், அதாவது எனக்காக கடவுளை பிரார்த்திக்க வேண்டும். நீங்கள் கொடுத்த இந்த வரவேற்பால் எனக்கு தலைகனம் ஏற்பட்டுவிடக் கூடாது என்று கடவுளிடம் பிரார்த்திக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

தனக்கு எந்த நேரத்திலும் தலைக்கனம் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் காமராஜர் எத்தனை எச்சரிக்கையாக இருந்திருக்கிறார் என்பதற்கு இந்தப் பேச்சே சாட்சி.

சத்தியமூர்த்தியுடன் காமராஜர்

காமராஜர் சிறைக்குப் போனதைக் கண்டு அவர் குடும்பம் எவ்வளவு வேதனைப்பட்டதோ அன்றைய வரவேற்பைக் கண்டு அவ்வளவு சந்தோஷம் அடைந்தது. ஆனால், இன்பத்தைப் பகிர்ந்துகொள்ள முடியாதபடி பாட்டியின் உடல் நலம் தொடர்ந்து மோசமாகிக்கொண்டே வந்தது. காமராஜரைப் பார்த்ததுமே பாட்டி பார்வதி நிம்மதியாக உயிர்

https://t.me/tamilpdfebooks

விடத் தீர்மானித்துவிட்டார் என்பதைப் போல சில நாட்களிலேயே மரணம் அடைந்தார். பாட்டியின் ஈமக்கிரியையை காமராஜர் முன்னின்று செய்தார். பாட்டியின் மறைவுக்குப் பின்னர் காமராஜர் உடையில் சிறிய மாற்றம் ஏற்பட்டது. அது வரை துண்டு போடாமல் இருந்த காமராஜர், துண்டை மடித்துத் தோளில் போட்டுக்கொள்ளும் புதிய வழக்கத்தைத் தொடங்கினார்.

குரு தட்சணை

சத்தியமூர்த்தியின் மேடைப் பேச்சு அனைவரையும் கவர்ந்து இழுக்கும் சக்தி வாய்ந்தது. அந்தப் பேச்சில் மயங்கியவர் காமராஜர். அவருடன் அடிக்கடி தமிழகத்தில் சுற்றுப்பயணம் செய்த நேரத்தில், சத்தியமூர்த்தியின் எளிமை, நேர்த்தி, போராட்ட குணம் போன்றவற்றைக் கண்டு நெகிழ்ந்து போனார். அதனால் சத்தியமூர்த்தியைத் தன் அரசியல் குருவாகவே ஏற்றுக்கொண்டார். கட்சி, போராட்டம் ஆகியவற்றில் இருவரது சிந்தனையும் ஒன்றாகவே இருந்தன.

உப்பு சத்தியாகிரகப் போராட்டத்தில் சிறையில் இருந்த காலத்தில் காமராஜர், அங்கே இருந்த தேச பக்தர்கள் அனைவரையும் ஒன்று திரட்டி, 'சத்தியமூர்த்தியை காங்கிரஸ் தலைவராக்க வேண்டும்' என்று உறுதி எடுத்துக்கொண்டார். ஏனென்றால் போராட்டம், சிறைச்சாலை என்றால் முதல் ஆளாக இருக்கும் சத்தியமூர்த்தி, அது வரை எந்தப் பதவியையும் அனுபவிக்காதவர்.

அப்போது காங்கிரஸில் ராஜாஜி செல்வாக்குடன் இருந்தார். பெரும்பாலும் பணக்காரர்கள், செல்வாக்கு உடையவர்களே பதவியில் இருந்தார்கள். அந்த நிலையை மாற்ற வேண்டும் என்று உறுதி எடுத்துக்கொண்டார் காமராஜர். அதற்கும் ஒரு நேரம் வந்தது.

குருவுக்கு மரியாதை

மதுரையில் 1931-ல் நடந்த காங்கிரஸ் மாநாட்டுக்கு சத்தியமூர்த்தி தலைவராக நியமிக்கப்பட்டார். அதனால் இது வரை இல்லாத அளவுக்கு அவருக்கு மரியாதை கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்த காமராஜரின் தொண்டர்கள் அவரை ஊர்வலமாக அழைத்து வந்தனர். சத்தியமூர்த்திக்குக் கொடுக்கப்பட்ட மரியாதையைக் கண்டு ராஜாஜி கோஷ்டியினர் ஆத்திரம் அடைந்து ஊர்வலத்தைப் புறக்கணித்தனர்.

ஒரு பொது விழாவை ராஜாஜி கோஷ்டியினர் புறக்கணிப்பதா என்று காமராஜர் ஆத்திரம் அடைந்தார், இதற்கு சரியான பதிலடி தர வேண்டும் என்று மனதில் நினைத்துக்கொண்டார்.

'தீண்டாமை போன்ற ஒரு சில கொள்கைகளில் காங்கிரஸ் கட்சி உறுதியாக இல்லை' என்று குற்றம் சாட்டி அந்த வருடம்தான் காங்கிரஸ் கட்சியிலிருந்து ஈ.வெ.ரா.பெரியார், டாக்டர் பி.வரதராஜுலு நாயுடு, திரு.வி.கல்யாணசுந்தரனார், சீனிவாச ஐயங்கார் ஆகியோர் விலகினர். அதனால் காங்கிரஸ் கட்சிக்கு கமிட்டித் தேர்தல் நடத்த வேண்டிய சூழல் ஏற்பட்டது.

https://t.me/tamilpdfebooks

ராஜாஜியைத் தலைவராக்கி, சத்தியமூர்த்தியை துணைத் தலைவராக்க வேண்டும் என்று காங்கிரஸ் தொண்டர்கள் முடிவு செய்தனர். இது குறித்து ராஜாஜியிடம் பேசியபோது, அவரும் இதற்கு சம்மதித்தார். அதனால் தலைவருக்கு நடந்த தேர்தலில் ராஜாஜி தேர்வு செய்யப்பட்டார்.

துணைத் தலைவர் தேர்தல் நடந்த சமயம் சத்தியமூர்த்தியின் பெயர் முன்மொழியப்பட்டது. அந்த சமயம் யாரும் எதிர்பாராத வண்ணம் ராஜாஜி கோஷ்டியைச் சேர்ந்தவர்கள், சர்தார் வேதரத்தினம் என்பவரைத் துணைத் தலைவர் பதவிக்கு முன் மொழிந்தனர்.

ராஜாஜியுடன்...

இதைக் கொஞ்சமும் எதிர்பார்க்காத சத்தியமூர்த்தி கோஷ்டியினர் கடும் அதிர்ச்சி அடைந்தனர். உடனே காமராஜர், தொண்டர்களிடம் பேசி ராஜாஜி குழுவினருக்கு ஆத்திரம் ஏற்படுத்தும் வகையில், அண்ணாமலை பிள்ளை என்பவர் பெயரை துணைத் தலைவர் பெயருக்கு முன்மொழிந்தனர். சிக்கல் திசைமாறிச் செல்வதைக் கண்ட ராஜாஜி கோஷ்டியினர் வேறுவழி இன்றி இறங்கி வந்தனர். உடனே சத்தியமூர்த்தி துணைத் தலைவராக தேர்வு செய்யப்பட்டார்.

அடுத்து நடந்த காரியக் கமிட்டிப் பதவிகள் முழுவதையும் கைப்பற்றிவிட வேண்டும் என்று தீவிரமாக வேலை செய்தார் காமராஜர். அதனால் அனைத்து உறுப்பினர்களிடம் பேசி, காரிய கமிட்டி முழுவதையும் சத்தியமூர்த்தி கோஷ்டியினரே கைப்பற்றி ஆக்கிரமிப்பு செய்தனர். காமராஜரும் காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் ஆனார். இது ராஜாஜி கோஷ்டியினருக்கு பெரும் அதிர்ச்சியையும் ஆத்திரத்தையும் கொடுத்தது.

ராஜாஜி தலைவராக இருந்தாலும் அதிகாரம் முழுவதும் காரிய கமிட்டிக்கே இருந்தது. அதனால் காங்கிரஸில் காமராஜர் மற்றும் சத்தியமூர்த்தியின் செல்வாக்கு உயர்ந்தது.

https://t.me/tamilpdfebooks

சிறைப் பறவை

இந்தியாவுக்கு சுதந்திரம் கொடுப்பது குறித்து லண்டனில் 1931-ல் வட்ட மேஜை மாநாடு நடந்தது. காங்கிரஸ் சார்பில் காந்திஜி அந்த மாநாட்டில் கலந்துகொண்டார். ஆனால், சுதந்திரம் குறித்து எதுவுமே பேசப்படாமல் அந்த மாநாடு முடிவடையவே, 'மாநாடு தோல்வி அடைந்தது' என்றார் காந்திஜி. உடனே ஆங்கில அரசு மீண்டும் வன்முறை வெறியாட்டத்தைத் தொடங்கியது. காங்கிரஸ் தலைவர்கள் பலரையும் கைது செய்து சிறையில் அடைத்தது.

தமிழகத்தில் காமராஜர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். காமராஜர் மீது ஜாமீன் வழக்கு தொடங்கப் பட்டது, ஆனால், ஜாமீன் தொகை கொடுத்து வெளியே வருவதை காமராஜர் விரும்பவில்லை. அதனால் காமராஜருக்கு ஓர் ஆண்டு கடுங்காவல் சிறைத் தண்டனை கிடைத்தது. திருச்சி சிறைச் சாலையில் தண்டனையை அனுபவித்தார்.

காமராஜரைக் கைது செய்தது விருதுநகரில் பெரும் கொந்தளிப்பை உண்டாக்கியது. ஆவேசம் அடைந்த, முகம் தெரியாத தொண்டர் ஒருவர், விருதுநகர் தபால் நிலையம் அருகே, 'போலீஸ்காரர் தலைகள் வாங்கப்படும்' என்று கையால் எழுதப்பட்ட போஸ்டர் ஒன்றை ஒட்டிவிட்டார். தபால் நிலையம் அருகே ஒட்டப்பட்டிருந்த போஸ்டர் விருதுநகர் முழுவதும் பெரும் பரபரப்பை உண்டாக்கியது. கூட்டம் கூட்டமாக மக்கள் வந்து பார்த்துச் சென்றனர்.

போஸ்டரை ஒட்டியவர் என்று குற்றம் சுமத்தி காமராஜரின் நண்பர் முருக தனுஷ்கோடியைக் கைது செய்து, காவலில் அடைத்து, இரண்டு ஆண்டு கடுங்காவல் தண்டனையும், ரூபாய் 500 அபராதமும் போட்டது காவல் துறை. இவரும் திருச்சி சிறைச் சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். சிறைச்சாலையில், காமராஜர், சிறைக்குள் இருந்த காங்கிரஸ் தொண்டர்களிடம் கலந்து பேசினார். அதனால் காமராஜருக்கு ஆதரவு பெருகியது.

இதைக் கண்ட போலீஸார் உடனே காமராஜரை வேலூர் சிறைக்கு அனுப்பி வைத்தனர். அப்போது வேலூர் சிறையிலும் ஏராளமான காங்கிரஸ் தொண்டர்கள் இருந்தனர். அது மட்டும் இன்றி பகத்சிங்கின் நண்பர்களான ஜெயதேவ் கபூர், கமல்நாத் திவாரி ஆகியோர் சதி வழக்குக் குற்றம் சாட்டப்பட்டு, இங்கே அடைக்கப்பட்டு இருந்தனர். சிறைக் காவலர்களுக்கு பயந்து, அவர்களைச் சந்தித்துப் பேச காங்கிரஸ் கட்சியினர் பலரும் தயங்கினர். ஆனால், காமராஜர் எந்த பயமும் இன்றி அவர்களுடன் அளவளாவினார், நட்பு ரீதியில் பழகி பல்வேறு தகவல்களை பரிமாறிக்கொண்டார்.

https://t.me/tamilpdfebooks

ஒரு வருடம் சிறைத் தண்டனை முடிந்து காமராஜர் வெளியே வந்த பின்னர் காங்கிரஸ் கட்சிப் பணிகளில் தீவிரமாக இறங்கினார்.

காங்கிரஸ் கட்சி வெகு வேகமாக வளர்வதைக் கண்ட ஆங்கில அரசு, காமராஜர் மீது பொய் வழக்கு ஒன்றை ஜோடித்து சிறையில் தள்ள முயற்சி செய்தது. அதன் முதல் கட்டமாக, சதி வழக்கு குற்றம் சாட்டப்பட்டவர்களை வேலூர் சிறையில் ரகசியமாக சந்தித்து ஆலோசனை நடத்தினார் என்று காமராஜர் மீது 1933-ல் சதி வழக்கு தொடரப்பட்டது.

ஊட்டிக்கு வர இருந்த கவர்னர் சர் ஜான் ஆண்டர்சனை சுட்டுக் கொலை செய்ய முயற்சி செய்ததாக காமராஜர், கே.அருணாசலம் ஆகியோர் மீது வழக்கு தொடர்ந்தனர். வங்காளத்தில் அடக்குமுறை செய்த ஆங்கில கவர்னரை சுட்டுக் கொலை செய்வதற்காக அருணாசலத்துக்கு இரண்டு கைத் துப்பாக்கிகள் கிடைக்க காமராஜர் ஏற்பாடு செய்தார் என்று போலீஸ் தரப்பில் கூறப்பட்டது. ஆனால், இதற்கு வலுவான ஆதாரங்கள் எதையும் போலீஸ் தரப்பில் சமர்ப்பிக்க முடியாததால், வழக்கு தோல்வி அடைந்தது.

இதற்குப் பின்னும் விடாமல் போலீஸ், 'ஸ்ரீவில்லிபுத்தூர் - விருதுநகர் போலீஸ் ஸ்டேஷன் வெடிகுண்டு வழக்கு' என்ற இன்னொரு வழக்கைத் தொடர்ந்தனர். விருதுநகர் போலீஸ் ஸ்டேஷன் மீது வெடிகுண்டு வீசியதாக கே.எஸ்.முத்துசாமியை முதல் எதிரியாகவும், இரண்டாவது எதிரியாக காமராஜரையும், மூன்றாவது எதிரியாக நிருபர் மாரியப்பனையும், நான்காவது எதிரியாக நாராயணசாமியையும் சேர்த்து இருந்தனர். இந்த வெடிகுண்டு வழக்கை திறம்பட செயல்படுத்த வேண்டும் என்பதற்காகவே சென்னையிலிருந்து ஒரு சிறப்பு காவல் அதிகாரி வந்திருந்தார்.

ஒரு குறிப்பிட்ட நாள் இரவில் காவல் நிலையத்தின் மீது வெடிகுண்டு வீசியதாக அறிக்கை தாக்கல் செய்தார்கள். ஆனால், அந்த குறிப்பிட்ட நாளில் விருதுநகர் சப் இன்ஸ்பெக்டர் அனந்தராமகிருஷ்ணனும் முத்துசாமியும் அப்போது நடந்து கொண்டு இருந்த பாம்பே ஷோ

https://t.me/tamilpdfebooks

சர்க்கஸ் நிகழ்ச்சியை இரவு இரண்டு மணி வரையில் பார்த்துக்கொண்டு இருந்தார்கள். எனவே, அந்த சப் இன்ஸ்பெக்டர் பொய் சாட்சி சொல்ல மறுத்து விட்டார். ஆனாலும், அசராத காவல் துறை சப் இன்ஸ்பெக்டருக்கு மாறுதல் உத்தரவு கொடுத்துவிட்டது. அதற்குப்பின் சிவகாசி, போலீஸ் டெப்டி சூப்பரின்டென்ட் ஆக இருந்த பார்த்தசாரதி என்பவர், தானே களத்தில் இறங்கி வழக்கை ஜோடித்தார்.

காமராஜர் வீட்டில் சோதனை நடத்தி, ஏதாவது தடயம் எடுக்க வேண்டும் என்று காவல்துறையினர் திட்டமிட்டனர். அதனால் ஒருநாள் காமராஜர் வீட்டில் இல்லாத நேரம் பார்த்து திடும் என போலீஸார் நுழைய முயன்றார்கள். இவர்களின் முயற்சியை, ஒரு சுதந்திரப் போராட்ட வீராங்கனை போன்று புத்திசாலித்தனமாகத் தடுத்து நிறுத்தினார் சிவகாமி.

வாசலுக்குள் நுழைய முயன்ற காவலர்களிடம், "நீங்கள் என் வீட்டை சோதனை செய்ய வேண்டும் என்றால், எனக்குத் தெரிந்த ஆண்கள் கண்டிப்பாக உடன் இருக்க வேண்டும், இல்லை என்றால் உங்களை உள்ளேவிட மாட்டேன்" என்று போர்க் குரல் கொடுத்தார். இதை எதிர்பாராத காவல் துறை ஒரு கணம் தயங்கி, வேறு வழியின்றி உறவினர் ஒருவரை உடன் இருக்க அனுமதி கொடுத்தது.

உறவினர் ஒருவர் அழைத்து வரப்பட்டதும், காவலர்கள் ஒவ்வொரு அறைக்கும் சென்று சோதனை போட்ட சமயத்தில் அருகிலேயே நின்றார் சிவகாமி. அதனால், அந்த சோதனையில் ‘தடயங்கள் கிடைத்ததாக தில்லுமுல்லு செய்ய நினைத்த’ போலீஸார் தோல்வியுடன் வெளியேறினார்கள்.

அதன்பின் வெங்கடாசலம் என்பவரை அடித்து உதைத்து ‘அப்ரூவர்’ என்று சொல்லி கோர்ட்டில் நிறுத்தினார்கள். ஆனால், காவல் துறையினரின் சித்திரவதையை வெங்கடாசலம் கோர்ட்டில் சொல்லிவிட்டார். காமராஜருக்காக வழக்கை எடுத்து நடத்திய ஜார்ஜ் ஜோசப், திறம்பட வாதாடி இந்த வழக்கை உடைத்தார்.

https://t.me/tamilpdfebooks

மலைவாழ் மக்களுடன்...

இந்த வழக்கை விசாரித்து தீர்ப்பு அளித்த முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் முழுமையாக காமராஜர் மற்றும் அவரது நண்பர்களைப்பற்றிக் கேட்டு அறிந்து பின்பு, நெத்தி அடியாக ஒரு தீர்ப்பு வழங்கினார்.

"இத்தனை அறிவுள்ள இளைஞர்கள், ஒரு வெடிகுண்டு சதியை இவ்வளவு பலவீனமாகத் திட்டமிட மாட்டார்கள். காவல் துறையின் சாட்சியங்கள் நம்பத்தகுந்தவையாக இல்லை" என்று சொல்லி அனைவரையும் விடுதலை செய்தார்.

இந்த வழக்கில் காமராஜர் நிரபராதி என்று தீர்ப்பு வந்து விட்டாலும், உண்மையில் அத்தனை எளிதாக அதை சாதித்துவிட முடியவில்லை. காமராஜருடைய தாயார் வைத்திருந்த நகைகள், பணம், ஒரு வீடு ஆகிய அத்தனையும் வழக்கு செலவுக்காக கரைந்துபோனது. ஆகவே, காமராஜர் குடும்பம் மிகவும் ஏழ்மை நிலைக்கு வந்தது. அது வரை குடும்பத்தை எளிதாகச் சமாளித்து வந்த சிவகாமி, சகோதரர்களின் உதவியை நாடவேண்டிய நிலை ஏற்பட்டது.

உழைத்துக் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய தலைமகன், தாய் நாட்டின் மீது மட்டுமே கண்ணாக இருந்தாரே தவிர தாய், தங்கை ஆகியோரைப்பற்றியோ, வீட்டைப்பற்றியோ சிந்திக்கவே இல்லை. அவரது நோக்கம், செயல் எல்லாம் நாட்டு விடுதலையின் மீது மட்டுமே இருந்தது.

இந்த நிகழ்ச்சிக்குப் பின் காவல் துறையின் கறுப்புப் பட்டியலில் காமராஜரின் பெயர் நிரந்தரமாக இடம்பெற்றுவிட்டது. ஊரில் எந்தச் சிக்கல் என்றாலும், எந்தப் பிரச்னை என்றாலும் காமராஜரைக் கைது செய்தனர். தமிழ்நாட்டில் வைசிராய் வெலிங்டன் சுற்றுப்பயணம் செய்ய இருக்கிறார் என்ற தகவல் கிடைத்ததும் முதல் வேலையாக காமராஜரைப் பிடித்துச் சிறையில் போட்டார்கள். வைசிராய் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு, போன பின்னரே அவரை விடுதலை செய்தார்கள்.

https://t.me/tamilpdfebooks

காங்கிரஸ் கட்சித் தொண்டனாகவே, குறிப்பாக காந்திஜியின் உத்தரவுக்கு கீழ்ப்படிந்து நடக்கும் தொண்டனாகவே கடைசிவரை இருந்தார் காமராஜர். ஆனால், தவறு செய்தால், அது காந்திஜியே என்றாலும், எதிர்த்து நிற்கவும் தயங்கியது இல்லை என்பதை பின்னர் நடந்த ஒரு சம்பவத்தின் மூலம் அறியலாம்.

சிக்கனக்காரர்

பீகார் மாநிலத்தில் 1934, ஜனவரி 15-ம் தேதி, 8.4 ரிக்டர் அளவில் பெரும் பூகம்பம் ஒன்று ஏற்பட்டது. முங்கூர், மொஷபர்பூர், சிட்டமார்கி ஆகிய கிராமங்கள் கிட்டத்தட்ட அடியோடு அழிந்து போய், ஏறத்தாழ 30,000 பேர் உயிர் இழந்தனர். பாதிக்கப்பட்ட பகுதிக்குச் சென்ற காந்திஜி நிவாரணப் பணிக்காக நாடு எங்கும் இந்தியர்களிடம் இருந்து உதவித்தொகை கேட்டார்.

காமராஜர் உடனே களத்தில் இறங்கி நிவாரணப் பொருட்கள் திரட்டுவதில் கவனம் செலுத்தினார். ஏராளமான பொருட்களையும் மருந்துகளையும் பணத்தையும் திரட்டி பீகாருக்கு அனுப்பி வைத்தார்.

1935-ல் காங்கிரஸ் கட்சியின் பொன்விழா நாடெங்கும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பட்டாபி சீதாராமையா எழுதிய, 'இந்திய தேசிய காங்கிரஸ் வரலாறு' என்ற புத்தகம் இந்த விழாவில் வெளியிடப்பட்டது.

இந்தப் பொன்விழாவை விருதுநகரில் சிறப்பாகக் கொண்டாட விரும்பினார் காமராஜர். உடனே விழாக் குழு ஒன்றை அமைத்து பணத்தை வசூல் செய்து பிரமாண்டமான விழாவுக்கு விருதுநகரில் ஏற்பாடு செய்தார். கடைவீதி எங்கும் வாழைமரம், மாவிலைத் தோரணம் கட்டி, வண்ணக் கோலங்கள் போட்டு, பலவிதமான வாத்தியங்களுடன் கச்சேரிகள் நடந்தன. இதைத் தவிர பலவகைக் காய்கறிகளுடன் சமபந்தி விருந்து படைத்தார். விருதுநகரில் இப்படி ஒரு விழா நடந்தது இல்லை என்பதைப் போன்று, விழாவைச் சிறப்பாக நடத்தி அனைவரையும் வியக்க வைத்தார், காமராஜர்.

https://t.me/tamilpdfebooks

விழா செலவுகளைக் கவனித்த, பணப்பொறுப்பை ஏற்று இருந்த காமராஜரின் நண்பர் முருக தனுஷ்கோடி, "67 ரூபாய் 3 அணாவுக்கு கணக்கு எழுத மறந்துவிட்டேன், அதனால் அந்தத் தொகையை இதர செலவுகள் என்று போட்டுக்கொள்ளவா?" என்று கேட்டார்.

அவரை உற்று நோக்கிய காமராஜர், "இது பொதுக் காசு, அதனால அரை மணி நேரம் நல்லா யோசிச்சுப் பாத்துக் கணக்கை சரியா எழுதிக் கொடு. இல்லைன்னா நீதான் அந்தப் பணத்தைக் கொடுக்கணும்" என்று உறுதியாகச் சொல்லி விட்டார்.

தன்னைப்பற்றி நன்றாகத் தெரிந்திருந்தும் காமராஜர் இப்படிச் சொல்லிவிட்டாரே என்று வருத்தப்பட்ட தனுஷ்கோடி உடனே சொந்தப் பணத்தைக் கட்டிவிட்டார். அவர் வருத்தப்படுவதைப் பார்த்த மற்றவர்கள், "காமராஜரைப் பத்தி உனக்குத் தெரியாதா? காசு விஷயத்தில அவர் எப்பவும் இப்படித்தான கணக்கா இருப்பார்" என்று சொல்லி சமாதானப்படுத்தினார்கள். பால்ய நட்பு அல்லது பொதுப் பணக் கணக்கு, இந்த இரண்டில் எது முக்கியம் என்ற நேரத்திலும் காமராஜருக்கு சிறு தடுமாற்றம்கூட ஏற்படவில்லை என்றால் அவர் எப்படிப்பட்ட மன நிலையில், ஞானியின் மன நிலையில் இருந்திருக்க வேண்டும்! இந்தப் பற்றற்ற நிலைதான் அவரை வானம் வரை உயர்த்தியது.

திருப்புமுனை

தொடர் போராட்டங்களால், தமிழ்நாட்டு காங்கிரஸில் காமராஜர் நிலையான ஓர் இடத்தைப் பிடித்துவிட்டார். எந்த ஊரில் மாநாடு, கூட்டம் என்றாலும் காமராஜர் தானாகவே ஆஜராகிவிடுவார். அதனால், ஒவ்வொரு ஊரிலும் காமராஜரை அறிந்து இருந்தார்கள். 1936-ம் வருடம் காரைக்குடியில் நடந்த தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தேர்தலில்

https://t.me/tamilpdfebooks

சத்தியமூர்த்தியைத் தலைவராகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று தீவிரமாக வேலை செய்தார் காமராஜர்.

"நான் தலைவராக இருக்க வேண்டும் என்றால் காமராஜர் செயலாளராக இருக்க வேண்டும்" என்ற தன் ஆசையைத் தெரிவித்தார் சத்தியமூர்த்தி. ஆரம்பத்தில் பிடிவாதமாக மறுத்தார் காமராஜர். "அப்படி என்றால் நானும் தலைவர் பதவிக்கு நிற்கப் போவதில்லை" என்று சத்தியமூர்த்தி பின்வாங்கவே, வேறு வழி இன்றிச் சம்மதம் தெரிவித்தார், காமராஜர்.

அந்த மாநாட்டில் குரு, சத்தியமூர்த்தி காங்கிரஸ் தலைவராகவும், காமராஜர் செயலாளராகவும் பதவி ஏற்றுக்கொண்டனர். 1936-ல் ஜவஹர்லால் நேரு தமிழக சுற்றுப்பயணம் வந்த நேரத்தில் இவர்கள் இருவரும்தான் முழுமையாகக் கூடவே இருந்தனர். இதனால் நேருவுக்கும் காமராஜருக்கும் அதிக நெருக்கம் ஏற்பட்டது. செயலாளர் பதவியும், நேருவிடம் ஏற்பட்ட நெருக்கமும்தான் காமராஜரின் எதிர்கால வாழ்க்கைக்கு போடப்பட்ட அஸ்திவாரம்.

சட்டமன்றத் தேர்தலில் காமராஜர்

தமிழகத்தில், 1920-ம் ஆண்டு முதல் ஆங்கிலேயர் ஆசியுடன் நீதிக் கட்சி எனப்பட்ட ஜஸ்டிஸ் கட்சி ஆட்சியில் இருந்தது. இந்தியாவில் அரசியல் சீர்திருத்தம் ஏற்படவும், சுயாட்சி வழங்கவும் பிரிட்டிஷ் அரசாங்கம், இந்திய அரசாங்கச் சட்டத்தை 1935-ல் இயற்றியது. அதன்படி இதற்கு முன்னர் வழக்கில் இருந்த இரட்டை ஆட்சி முறை ஒழிக்கப்பட்டு, நாட்டின் பாதுகாப்பு, நிதி போன்ற முக்கிய துறைகள் தவிர மற்ற பொறுப்புகள் இந்தியர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டன. இந்தப் புதிய ஆட்சி முறை மாநில சுயாட்சி என்று அழைக்கப்பட்டது.

இதன் கீழ் 1937-ல் தமிழகத்தில் தேர்தல் நடத்தப்பட்டது. அப்போது ஜஸ்டிஸ் கட்சியின் சார்பில் முதல் அமைச்சராக இருந்த பொப்பிலி அரசர் மீது பொதுமக்களுக்குக் கடும் அதிருப்தி இருந்தது. மேலும், உப்பு சத்தியாகிரகத்தால் காங்கிரஸ் கட்சிக்கு நல்ல செல்வாக்கு இருந்தது.

https://t.me/tamilpdfebooks

அப்போது காங்கிரஸ் கட்சியில் ராஜாஜி தலைவராக இல்லாமல் புதியவர்களான சத்தியமூர்த்தி, காமராஜர் ஆகியோர் பதவியில் இருந்ததால் காங்கிரஸை எளிதில் தோற்கடித்துவிடலாம் என்று ஜஸ்டிஸ் கட்சியும் ஆங்கிலேயர்களும் கருதினார்கள்.

தேர்தலில் காமராஜர்

இந்தத் தேர்தலில் சத்தியமூர்த்தி போட்டியிட்டு வெற்றிபெற்று முதல்வராக வேண்டும் என காமராஜர் ஆசைப்பட்டார். பொதுக்கூட்டங்களில் சத்தியமூர்த்தி, "எந்தப் போலீஸ்காரர்கள் காங்கிரஸ்காரர்களைத் தடியால் அடித்தார்களோ, அதே போலீஸ்காரர்களைக் கதர் குல்லாய்க்குச் சலாம் போட வைக்கிறேன்" என்று ஆவேசமாகப் பேசுவது உண்டு. அவர் ஆசைப்படியே, போலீஸ்காரர்கள் சத்தியமூர்த்திக்கு சலாம் போடவேண்டும் என்று விரும்பிய காமராஜர், தேர்தலில் அவர் பங்கெடுக்க வேண்டும் என ஆர்வம் காட்டினார்.

ஆரம்பத்தில் தேர்தலை எதிர்த்த ராஜாஜி, மனம் மாறி தேர்தலுக்கு ஆதரவு தெரிவித்தார். அதனால் முதல்வர் வேட்பாளர் ராஜாஜி என்று காங்கிரஸ்காரர்கள் முடிவு செய்து விட்டார்கள். இந்த முடிவு காமராஜருக்குப் பெருத்த ஏமாற்றமாக இருந்தது.

காமராஜரின் வற்புறுத்தலால் பல்கலைக்கழகப் பட்டதாரிகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதியில் போட்டியிட விரும்பினார் சத்தியமூர்த்தி. ஆனால், அந்தத் தொகுதியை ராஜாஜிக்கு விட்டுத் தரவேண்டும் என்று காங்கிரஸ் கட்சி மேலிடத் தலைவர்கள் சத்தியமூர்த்தியிடம் கோரிக்கை வைத்தனர். அப்போது, ராஜாஜிக்குத் தொகுதியை விட்டுக் கொடுத்தால், காங்கிரஸ் ஆட்சி அமைக்கும்பட்சத்தில் சத்தியமூர்த்தி மேலவை உறுப்பினராக சேர்க்கப்பட்டு மந்திரி சபையில் சேர்த்துக் கொள்ளப்படுவார் என்று உறுதி அளிக்கப்பட்டது. இது குறித்து காமராஜரிடம் ஆலோசனை செய்தார் சத்தியமூர்த்தி. தலைமைப் பொறுப்பு இல்லாவிட்டாலும் பரவாயில்லை, ஏதாவது ஒரு மந்திரி பதவி கிடைக்கிறதே என்று ஆறுதல் அடைந்த காமராஜர் சம்மதம் தெரிவிக்கச் சொன்னார். காங்கிரஸ் வெற்றிக்காக சத்தியமூர்த்தி ஓடியாடி உழைத்தார். தமிழ்நாடு எங்கும் இரவு பகல் பார்க்காமல் சுற்றுப்பயணம் செய்து பிரசாரம் செய்தார்.

சாத்தூரில் காமராஜர்

நண்பர்களின் கட்டாயத்தின் பேரில் சாத்தூர் தொகுதியில் காமராஜர் போட்டியிட்டார். சாத்தூர் தொகுதியில்தான் விருதுநகர் அடக்கம். மேலும், சாத்தூர் தொகுதியிலேயே இரண்டு தொகுதிகள் இருந்தது. அதாவது பொதுத் தொகுதியாக ஒன்றும் ரிசர்வ் தொகுதியாக மற்றொன்றும் என இரண்டு இருந்தன. காமராஜர் பொதுத் தொகுதியில் போட்டியிட்டார்.

முன்பு கட்சிகளுக்கு சின்னம் எதுவும் கிடையாது. ஓட்டுப் பெட்டியின் நிறத்தை வைத்தே ஓட்டுப் போடவேண்டும் என்பதால் காங்கிரஸ் கட்சிக்கு ஒதுக்கப்பட்ட மஞ்சள் நிறம் ஊரெங்கும் ஜொலிஜொலித்தது.

https://t.me/tamilpdfebooks

அன்று விருதுநகரில் புகழ்பெற்று விளங்கிய வி.வி.ராமசாமி, காமராஜருக்கு எதிர் வேட்பாளராக நீதிக்கட்சி சார்பில் அறிவிக்கப்பட்டார். பண பலம், ஆள் பலம், செல்வாக்கு என எல்லா தகுதிகளும் கொண்ட வி.வி.ராமசாமியை காமராஜர் வெற்றிகொள்ள இயலாது என்றே கருதப்பட்டது. ஊரில் தேர்தல் பிரசாரம் படு சூடாக நடந்தது.

இந்த நிலையில் விருதுநகரில் போட்டியிட்ட இருவருமே நாடார் சமுதாயத்தினர் என்பதால், யாருக்கு ஓட்டுப் போடுவது என்று சமுதாய மக்கள் தடுமாறினர். அதனால் அன்றைய நாடார் சமுதாயத்தில் புகழ்பெற்று விளங்கிய தலைவரான டபுள்யூ.பி.சௌந்திரபாண்டிய நாடார் தலைமையில் ஊரில் இருந்த நாடார் பிரமுகர்கள் ஒன்றுகூடி ஆலோசனை நடத்தினார்கள்.

சாத்தூரில் தேர்தல் பிரசாரம்...

அந்தக் கூட்டத்தில் பல விஷயங்கள் அலசி ஆராயப்பட்டன. காங்கிரஸ் கட்சிக்கே வெற்றி வாய்ப்பு அதிகம் இருந்ததால், சாத்தூர் தொகுதியில் காமராஜர் வெற்றி பெற்றால் அவருக்கு மந்திரி பதவி கிடைக்கும் வாய்ப்பு இருந்தது. அதேநேரம் ஜஸ்டிஸ் கட்சிக்கு வெற்றி வாய்ப்பு குறைவு, அப்படியே ஜெயித்தாலும் வி.வி.ராமசாமிக்கு மந்திரி பதவி கிடைக்க வாய்ப்பு குறைவு. அதனால் 'மந்திரி பதவி வாய்ப்பு உள்ள வேட்பாளர் ஒருவரை நமது தொகுதியில் ஆதரிப்போம்' என்று முடிவு செய்தனர். மேலும், வி.வி.ராமசாமி போட்டியிலிருந்து விலகிக்கொள்ள வேண்டும் என்று நாடார் சமுதாயம் கேட்டுக்கொண்டது. கட்சியா, சமுதாயமா என்று யோசித்த வி.வி.ராமசாமி சமுதாயத்துக்கே முன்னுரிமை கொடுத்ததால், கடைசியில் போட்டியிலிருந்து விலகிக்கொண்டார். அதனால் காமராஜர் சாத்தூர் தொகுதியில் போட்டியே இல்லாமல் வெற்றி பெற்றார்.

காமராஜருடைய வெற்றி விருதுநகர் தொண்டர்களால் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. இரட்டை குதிரை சாரட்டில் அவரை வைத்து, ஊர்வலமாக ஊருக்குள் அழைத்து வந்தனர். ஏராளமான தொண்டர்கள் மத்தியில் வெற்றி வீரராக ஊருக்குள்

https://t.me/tamilpdfebooks

சாரட்டில் வலம் வந்தார் காமராஜர்.

விருதுநகர் மையப் பகுதியில் இருக்கும் தெப்பக்குளம் நோக்கி ஊர்வலம் வந்தது. அப்போது யாரும் எதிர்பாராதவிதமாக ஒரு சந்துக்குள் இருந்து வந்த சிறு கும்பல், காமராஜர் அமர்ந்திருந்த சாரட் மீது திராவக பல்புகளை சரமாரியாக வீசியது. தூரத்திலிருந்து வீசப்பட்டதால் காமராஜர் மீது எதுவும் படவில்லை. எல்லாமே குதிரைக்கு அருகே விழுந்து நொறுங்கியது. ஆனால், தொண்டர்கள் ஆவேசமானார்கள். உடனே, திராவகம் வீசிய கும்பலை நோக்கிப் பாய்ந்து, அடித்து நொறுக்கினார்கள். காமராஜர் கூட்டத்தினரை சமாதானப்படுத்தி வழக்கமான புன்முறுவலுடன் ஊர்வலத்தைத் தொடரச் செய்தார். தேசபந்து மைதானத்துக்கு ஊர்வலம் வந்து சேர்ந்ததும் அனைவருக்கும் உணர்வுபூர்வமாக நன்றி தெரிவித்து ஊர்வலத்தை முடித்து வைத்தார் காமராஜர்.

காமராஜர் ஏமாற்றம்

காங்கிரஸ் தொண்டர்களே எதிர்பாராத வண்ணம் சட்டமன்றத் தேர்தலில் அமோக வெற்றி கிட்டியது. காங்கிரஸ் கட்சி ஒட்டுமொத்தமாக 64.5 சதவிகித வாக்குகள் பெற்று, சென்னை மாகாணத்தில் இருந்த 215 இடங்களில் 159 இடங்களைக் கைப்பற்றியது. பொப்பிலி அரசர் உள்ளிட்ட நீதிக்கட்சித் தலைவர்கள் பலர் படு தோல்வி அடைந்தார்கள்.

1935-ம் வருடம் இயற்றப்பட்ட சட்டத்தின்படி, சட்டமன்றத்தில் நிறைவேற்றப்படும் முடிவுகளை ரத்து செய்யும் அதிகாரம் கவர்னருக்கு இருந்தது. இந்த அதிகாரத்தை நீக்கினால் மட்டுமே பதவி ஏற்போம் என காங்கிரஸ் போர்க் குரல் கொடுத்தது.

காங்கிரஸ் எதிர்ப்புக்குப் பணியாத ஆங்கில அரசு, நீதிக்கட்சியின் கூர்ம வெங்கட ரெட்டி தலைமையில் ஓர் இடைக்கால அரசை அமைத்தது. அதற்குப்பின், இரண்டு மாதங்களுக்குள் குறிப்பிட்ட அதிகாரம் நீக்கப்படும் என்று உறுதிமொழி வழங்கப்பட்டதால் காங்கிரஸ் ஆட்சியமைக்க ஒப்புக்கொண்டது.

மந்திரிசபை அமைக்கப்படுவதற்கு முன்னர் சத்தியமூர்த்தி கட்சி வேலையாக டெல்லி செல்ல நேர்ந்தது. அப்போது ராஜாஜியை சந்தித்துப் பேசினார். "கவுன்சிலுக்கு நீங்கள் நியமிக்கப்பட்டு, மந்திரி சபையில் சேர்க்கப்படுவீர்கள்" என்று ராஜாஜி உறுதியளித்தார். ஆனால், சத்தியமூர்த்தி டெல்லிக்கு கிளம்பிய உடனேயே, அவர் இல்லாமலேயே மந்திரிசபையை அமைத்துவிட்டார் ராஜாஜி. சத்தியமூர்த்தியின் நியமனத்துக்குப் பதிலாக டாக்டர் டி.எஸ்.எஸ்.ராஜனை நியமனம் செய்து மந்திரியாகவும் ஆக்கிவிட்டார்.

டெல்லியில், சர்தார் வல்லபபாய் பட்டேல் மூலம் தகவலைக் கேள்விப்பட்டு அதிர்ச்சி அடைந்தார் சத்தியமூர்த்தி. தான் வஞ்சிக்கப்பட்டதைப் பதிவு செய்தார். சத்தியமூர்த்தியைவிட இந்த விஷயத்தில் அதிக ஏமாற்றம் அடைந்தது, காமராஜர்தான். ராஜாஜி போன்ற பெரும் தலைவர் ஒருவர் சொன்ன சொல்லை மீறலாமா;

https://t.me/tamilpdfebooks

கோஷ்டி பூசலுக்கு இப்படிப்பட்ட தலைவரே வழி காட்டலாமா என்று வருந்தினார்.

களத்தில் பெருந்தலைவர்...

இந்த சம்பவம் காமராஜர் மனதில் மறையாத வடுவாகத் தங்கியது. அது வரை கோஷ்டி சேர்ப்பதில் ஆர்வம் காட்டாமல் இருந்த காமராஜர், தன்னைச் சேர்ந்தவர்களுக்காக அரசியலில் ராஜதந்திரங்களைக் கையாள வேண்டியதும் அவசியம் என்பதை அறிந்துகொண்டார். அதன் பிறகு காமராஜரும் வெகுளியாகப் பேசுவதைக் குறைத்துக் கொண்டு, தீவிரமாக செயல்பட்டார். அந்த வகையில் காமராஜரை அரசியல் தந்திரியாக மாற்றியது ராஜாஜி என்றுதான் சொல்ல வேண்டும்.

ராஜாஜி மீது இருந்த வருத்தத்தை அதிகரிக்கும் வண்ணம் இன்னொரு நிகழ்ச்சியும் 1939-ல் நடந்தேறியது. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தேர்தலில் தலைமைப் பதவிக்கு சத்தியமூர்த்தி போட்டியிட்டார். மந்திரி சபையில் இடம் கொடுக்காமல் விட்டதால், தலைமைப் போட்டியில் சத்தியமூர்த்திக்கு ஆதரவாக ராஜாஜி இருப்பார் என அனைவருமே நினைத்தார்கள். ஆனால், ராஜாஜி, ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாரைத் தலைமைப் பதவிக்கு நிறுத்தினார். போட்டி இருக்காது என்று நினைத்த வேளையில் இப்படி ஒருவரை காமராஜர், சத்தியமூர்த்தி போன்றவர்கள் எதிர்பார்க்கவே இல்லை. அதனால் அந்தத் தேர்தலில் சத்தியமூர்த்தி தோற்றுவிட்டார்.

அப்போதே சத்தியமூர்த்தி மனம் உடைந்துவிட்டார். அன்றைய இரவு காமராஜரை சந்தித்து, "காமராஜா! நான் இனி தேர்தலில் போட்டி இடப்போவதில்லை. அடுத்த தேர்தலில் உன்னை நிறுத்தப் போகிறேன். காங்கிரஸ் கட்சியில் வகுப்பு வாதம் பெருகுகிறது. இதை உன்னால் மட்டும்தான் சமாளிக்க முடியும்" என்று கேட்டுக்கொண்டார். அப்போதைக்கு காமராஜர் எதுவும் சொல்லாமல், "அடுத்த வருடம் பார்த்துக்கொள்ளலாம்" என்று தள்ளிப் போட்டார்.

அடுத்த வருடம் இரண்டாம் உலகப்போர் ஆரம்பித்துவிட்டது

https://t.me/tamilpdfebooks

என்றாலும், போரின் ஆரம்பத்தில் இந்தியாவில் எந்த பாதிப்பும் இல்லை. சென்னை சர்வகலாசாலையின் துணைவேந்தர் பதவி 1940-ல் சத்தியமூர்த்தியைத் தேடி வந்தது. இந்த பதவிக்கு ஆங்கிலேயர்களிடமும் செல்வாக்கு இருந்தது. அதை ஒப்புக்கொள்ள சத்தியமூர்த்திக்கு ஆசை இருந்தாலும், காமராஜரிடம் கேட்டு முடிவு செய்ய நினைத்தார்.

காமராஜர் ஒரு கணம்கூட யோசிக்காமல், "காங்கிரஸ் கட்சியின் சார்பில், விரைவில் தனிப்பட்டவர்கள் சட்ட மறுப்புப் போராட்டம் வரப்போகிறது. துணைவேந்தர் பதவி ஏற்றால், உங்களால் அந்தப் போராட்டத்தில் கலந்துகொள்ளவோ, அரசை எதிர்த்துப் பேசவோ முடியாமல் போய்விடும். அதனால் அந்தப் பதவி ஆசையைத் தூக்கிப் போட்டுவிடுங்கள்" என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டார். காமராஜர் தன்னுடைய சீடனாக இருந்தாலும், அவரது பேச்சுக்கு மதிப்புக் கொடுத்து அந்தப் பதவியை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார் சத்தியமூர்த்தி.

காங்கிரஸ் தலைவரானார்

காங்கிரஸ் கட்சிக்கு, 1940-ல் தேர்தல் வந்தது. இந்த தேர்தலில் சொன்னபடியே காமராஜரைத் தலைவர் பதவிக்கு நிறுத்தினார் சத்தியமூர்த்தி. காமராஜர் தேர்தலில் நிறுத்தப்பட்டு இருந்ததால், எப்படி வெற்றிபெறுவது என்று புரியாமல் அன்றைய காங்கிரஸ் தலைவர்கள் முத்துரங்க முதலியார், அவிநாசிலிங்கம், ராமசாமி ரெட்டியார் ஆகியோர் ராஜாஜியை சந்தித்துப் பேசினார்கள். அவர்களிடம் எந்தக் கருத்தும் சொல்லாமல் அனுப்பி வைத்த ராஜாஜி, சத்தியமூர்த்தியை அழைத்துப் பேசினார்.

"காங்கிரஸ் கட்சிக்கு சி.பி.சுப்பையாவைத் தலைவராக்க வேண்டும். அதற்கு நீங்கள் ஆதரவு தர வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். ராஜாஜி தன்னை நேரிலேயே அழைத்து ஆதரவு கேட்டதும் மனம் நெகிழ்ந்துபோன சத்தியமூர்த்தி, "சி.பி.சுப்பையாவையே தலைவராக்கலாம்" என்று சொல்லிவிட்டுத் திரும்பினார். உடனே காமராஜரை சந்தித்து, "கோவையைச் சேர்ந்த சி.பி.சுப்பையாவை தலைவர் தேர்தலுக்கு நிறுத்தி வைக்கலாம் என்று ராஜாஜி கருதுகிறார். எனக்கும் அதுவே சரி என்று படுகிறது. அடுத்த தேர்தலில் நீ போட்டி இடலாம்" என்று சொன்னார்.

https://t.me/tamilpdfebooks

காமராஜருக்கு வெற்றித் திலகமிடும் மகளிர் அணி

காமராஜரின் தோழர்கள் பம்பரமாகச் சுழன்று ஆதரவு திரட்டிக்கொண்டு இருந்தார்கள். அதனால் காமராஜர், "நான் தேர்தலில் போட்டியிட வேண்டும் என நீங்கள்தான் சொன்னீர்கள். அதனால்தான் போட்டியிடுகிறேன். இதிலிருந்து பின்வாங்கும் பேச்சுக்கே இடம் இல்லை" என்று உறுதியாகச் சொன்னார். இதனால் சத்தியமூர்த்தி செய்வது அறியாது திகைத்தார்.

தேர்தல் பரபரப்பாக, கடும் போட்டியுடன் நடந்தது. ஓட்டு எண்ணிக்கை முடியும் வரை அத்தனை நெருக்கமாக இருவருக்குமே ஆதரவு இருந்தது. ராஜாஜி நிறுத்தியவர்தான் வெற்றிபெறுவார் என்றே பேச்சு நிலவியது. தேவை இல்லாமல் போட்டி இட்டு, காமராஜர் தன் பெயரைக் கெடுத்துக்கொள்கிறார் என்றும் பேசினார்கள்.

ஓட்டு எண்ணிக்கை முடிந்தது. ராஜாஜி ஆதரித்த சுப்பையாவுக்கு 100 வாக்குகள் கிடைத்தன. காமராஜர் 103 வாக்குகள் கிடைத்து வெற்றி பெற்றார். அந்த மூன்று வாக்குகள்தான் காமராஜரின் அரசியல் வாழ்க்கையையே புரட்டிப் போட்டது. ராஜாஜிக்கு இணையான தலைவராக காமராஜர் ஒரே நாளில் உயர்ந்து நின்றார்.

உயர் ஜாதிக்காரர்கள் மட்டுமே தலைவராக இருந்த காங்கிரஸ் கட்சியில் பிற்படுத்தப்பட்ட ஜாதியில் இருந்து வந்து வெற்றி வாகை சூடி நின்றார் காமராஜர். விவரம் தெரிந்த வயதிலிருந்து காங்கிரஸ் கட்சிக்காகவே பாடுபட்ட காமராஜருக்கு, அவரது 37 வது வயதில் காங்கிரஸ் கட்சிக்கே தலைவராகும் அற்புத வாய்ப்பு கிடைத்தது.

காமராஜருக்கு உதவியாக இருப்பதற்காக சத்தியமூர்த்தி, காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளராக பதவி ஏற்றார்.

காங்கிரஸ் கட்சிக்கு இளம் ரத்தம் பாய்ச்சப்பட்டு புது வேகத்தில் பயணம் செய்தது. இந்த ஆண்டில்தான், தனது அரசியல் குருவை கண்டிக்க வேண்டிய நிலையும் காமராஜருக்கு வந்தது.

https://t.me/tamilpdfebooks

ஆம், இந்த வருடம் சென்னை மேயராகத் தேர்வு செய்யப்பட்டர் சத்தியமூர்த்தி. பூண்டி நீர்த்தேக்கத்துக்கு அன்றைய சென்னை கவர்னராக இருந்த ஆர்தர் ஹோப் அஸ்திவாரக் கல் நட்டார். இந்த விழாவுக்கு சத்தியமூர்த்திக்கு அழைப்பு அனுப்பப்பட்டது, அதனால், அவரும் விழாவில் முக்கிய விருந்தினராக கலந்து கொண்டார்.

காங்கிரஸ் கட்சியில் அப்போது ஒரு கட்டுப்பாடு இருந்தது. வெள்ளையர்கள் கலந்துகொள்ளும் விழாக்களில் காங்கிரஸ்காரர்கள் கலந்துகொள்ளக்கூடாது என்று தீர்மானம் போட்டு இருந்தார்கள். ஆனால், சென்னை மேயர் என்ற முறையிலேயே சத்தியமூர்த்தி அந்த விழாவில் கலந்து கொண்டார்.

விழாவில் அவர் கலந்துகொண்டது பெரும் சர்ச்சையைக் கிளப்பியது. உடனே சத்தியமூர்த்தியை சந்தித்த காமராஜர் ஒரு தலைவருக்கே உரிய தொனியில், "காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் வெள்ளையர்களுடன் எந்த நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளக்கூடாது என்று விதி இருக்கும்போது ஏன் கலந்து கொண்டீர்கள்?" என விளக்கம் கேட்டார்.

இது குறித்து காமராஜரே நேரில் கேட்பார் என்பதை எதிர்பாராத சத்தியமூர்த்தி அதிர்ச்சி அடைந்தார். ஆனாலும் தவறு நடந்துவிட்டதால், "மேயர் என்ற முறையில் கலந்து கொண்டேன், உன்னிடம் ஆலோசனை கேட்டிருக்கலாம். இப்போது நான் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சொல்" என்று கேட்டார்.

ஒரு கணம் யோசித்த காமராஜர், "நீங்கள் அந்த கூட்டத்தில் கலந்துகொண்டது தவறு என்பதை ஒப்புக்கொண்டு ஒரு மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுங்கள்" என்று கேட்டார்.

தன்னுடைய சீடனா தன்னிடம் இப்படிக் கேட்பது என்று அதிர்ந்தார் சத்தியமூர்த்தி! அங்கே, காமராஜர் ஒரு காங்கிரஸ் தலைவராக இருந்தாரே தவிர, ஒரு சீடனாக அல்ல. வேறு எதையும் செய்ய முடியாத

https://t.me/tamilpdfebooks

சூழலில் அப்படியே ஒரு கடிதம் எழுதிக் கொடுத்தார் சத்தியமூர்த்தி.

அந்தக் கடிதத்தைப் பத்திரிகைகளுக்குக் கொடுத்துவிடப் போகிறார் என்று சத்தியமூர்த்தி எதிர்பார்த்துக்கொண்டு இருக்க, அப்படி எதுவும் நடக்கவில்லை. அதற்குப்பின் எப்போதும் போல் சகஜமாக பேசிக்கொண்டுதான் இருந்தார் காமராஜர்.

காமராஜர் எடுத்த நடவடிக்கை வெளியே எவருக்கும் தெரியாததால், எதிர் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் டெல்லி காங்கிரஸ் தலைமைக்கு சத்தியமூர்த்தியைப்பற்றி புகார் அனுப்பி வைத்தார்கள். அதனால் டெல்லியிலிருந்து, 'தவறு செய்த சத்தியமூர்த்தி மீது என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்?' என்று ஒரு கடிதம் வந்தது.

உடனே காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் இருந்தே, 'சத்தியமூர்த்தி மன்னிப்புக் கடிதம் கொடுத்து இருக்கிறார் என்பதால் மேல் நடவடிக்கை தேவை இல்லை என்று தீர்மானித்து விட்டேன்' என்று பதில் அனுப்பி வைத்தார்.

காமராஜர் எதற்காக அத்தனை வம்படியாகக் கடிதம் வாங்கினார் என்பதை அப்போதுதான் அறிந்துகொண்டார் சத்தியமூர்த்தி. எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதை யூகித்து செயல்படத் தொடங்கிவிட்டதால், இனி அரசியலில் காமராஜரை யாரும் வெல்ல முடியாது என்று புரிந்துகொண்டார். அதையே வாழ்த்தாக அனுப்பினார்.

அந்தக் காலகட்டத்தில் இரண்டாம் உலகப்போர் தீவிரம் அடைந்தது. அதனால் நிதி உதவி வழங்குமாறு இந்தியர்களிடம் வெள்ளையர் அரசு கோரிக்கை விடுத்தது. இந்தியாவுக்குச் சம்பந்தம் இல்லாத இரண்டாம் உலகப்போருக்கு நிதி தர வேண்டியது இல்லை என்று முடிவு செய்த காங்கிரஸ், 'யுத்த நிதி யாரும் தரவேண்டாம்' என்று அறிவித்தது.

சென்னை கவர்னர் ஆர்தர் ஹோப் யுத்த நிதி வசூல் செய்தார். ஆனால், காமராஜர் தமிழ்நாடு எங்கும் புயல் வேகத்தில் யுத்த நிதிக்கு எதிராகக் கடுமையாகப் பிரசாரம் செய்தார். அதனால் நிதி பெறுவது பாதிக்கப்பட்டது.

யுத்த நிதிக்கு எதிர்ப்பு தெரிவித்தவர்களை நாடு எங்கும் ஆங்கிலேயர்கள் கைது செய்தார்கள். சட்டசபை, நகராட்சி போன்ற குழுவில் பொறுப்புகளில் உள்ள தலைவர்கள் அனைவரும் இதற்காக சத்தியாகிரகப் போராட்டம் நடத்த வேண்டும் என்று காங்கிரஸ் அறிவித்தது. சத்தியாகிரக போராட்டம் நடத்துபவர்கள் முன்கூட்டியே காந்திஜியின் ஒப்புதலைப் பெற வேண்டும் என்பதால், போராட்டம் நடத்த இருப்பவர்கள் பட்டியலை எடுத்துக்கொண்டு காந்திஜியைப் பார்க்கச் சென்றார் காமராஜர்.

காந்திஜியின் அங்கீகாரத்துக்காகப் பட்டியலைக் கொண்டு சென்றபோது கூடூர் ரயில்வே நிலையத்தில் காமராஜரைக் கைது செய்து, வேலூர் சிறையில் அடைத்தார்கள். 'தான் கைது செய்யப் பட்டால், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக வேலூர் ஜனாப் உபயதுல்லா செயல்படுவார்' என்று காமராஜர் முன்கூட்டியே

https://t.me/tamilpdfebooks

அறிவித்துத்தான் இந்த போராட்டத்தில் இறங்கினார் என்பது இங்கே குறிப்பிடத்தக்க விஷயம்.

நகரசபைத் தலைவர்களும் சத்தியாகிரகப் போர் நடத்தி கைது ஆனார்கள். அதன்படி விருதுநகர் சேர்மன் சங்கரபாண்டியன் கைது செய்யப்பட்டுச் சிறைக்குச் சென்றார். இதனால் காமராஜர் சேர்மன் ஆகும் நிலை ஏற்பட்டது சுவாரஸ்யமான ஒரு சம்பவம்.

சேர்மன் ஆசனத்தில் ஒரு நாள்

விருதுநகர் முனிசிபல் சேர்மன் தேர்தல் 1937-ம் வருடமே நடந்தது. பெரும்பாலும் விருதுநகர் முழுவதும் காமராஜரின் நண்பர்கள் போட்டியிட்டனர். அதனால் காமராஜர் 7-வது வார்டில் போட்டியிட வேண்டும் என்று வற்புறுத்தி நிறுத்தி வைத்தனர். காமராஜரின் நண்பர் முருக தனுஷ்கோடி 19-வது வார்டில் போட்டியிட்டார். விருதுநகரில் இருந்த 24 வார்டுகளுக்கு நடந்த தேர்தலில் 22 வார்டில் காங்கிரஸ் கட்சியே வெற்றி பெற்றது.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அத்தனை கவுன்சிலர்களும், காமராஜர்தான் சேர்மனாக இருக்க வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். ஆனால், காமராஜர், "சேர்மன் பதவியில் இருப்பவர்கள் உள்ளூரிலிருந்து பொது வேலையைக் கவனிப்பவராக இருக்க வேண்டும். நான் கட்சி வேலையாக அடிக்கடி வெளியூர் செல்லக்கூடியவன். அதனால்

https://t.me/tamilpdfebooks

என்னைத் தேர்வு செய்ய வேண்டாம்" என்று கேட்டுக்கொண்டார். அதனால் வேறு வழி இன்றி சங்கரபாண்டியன் நாடார் சேர்மனாகத் தேர்வு செய்யப்பட்டார்.

இந்த சங்கரபாண்டியன் நாடார்தான் சத்தியாகிரகப் போராட்டம் நடத்தி ஜெயிலுக்குப் போனார். அதனால் சேர்மன் பதவி காலியாக இருந்தது. 1941, மே, 31-ம் தேதி சேர்மன் தேர்தல் நடைபெறும் என்று அப்போது துணைத் தலைவராக இருந்த ரா.குருசாமி அறிவித்தார்.

விருதுநகர் சேர்மனாக யாரைத் தேர்வு செய்ய இருக்கிறார்கள் என்பது மிகவும் ரகசியமாக இருந்தது. கூட்டம் நடந்தது. கூட்டத்தில், சிறையில் இருந்த காமராஜர் பெயர் நகராட்சி சேர்மன் பெயருக்கு வழிமொழியப்பட்டது. யாருடைய எதிர்ப்பும் இல்லாமல் அனைவருமே இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டதால் காமராஜர் சிறையில் இருந்தபடியே விருதுநகர் நகராட்சி சேர்மனாக தேர்வு செய்யப்பட்டார். இதற்கு முன்பு கல்கத்தாவில் தேசபந்து சித்தரஞ்சன் தாஸ் சிறையில் இருந்தபோதே மேயராகத் தேர்வு செய்யப்பட்டிருந்தார். அதைப் போலவே காமராஜரைத் தேர்வு செய்து பெருமைப்பட்டுக் கொண்டது விருதுநகர் நகராட்சி.

காமராஜர் சிறையில் இருந்த காலத்தில் நகராட்சிக் கூட்டம் மிக எளிமையாக நடத்தப்பட்டது. அப்போது, பெயர்க் கல் இல்லாமலேயே ஒரு வாசக சாலை திறக்கப்பட்டது வரலாறு.

சேர்மனாகத் தேர்வு செய்யப்பட்டு சுமார் 9 மாதங்கள் கழித்து, அதாவது 1942, மார்ச் முதல் வாரம் காமராஜர் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார். விடுதலையாகி விருதுநகர் வந்தபோது காமராஜருக்கு அமோக வரவேற்பு கொடுக்கப்பட்டது.

நந்தா, நேரு, காமராஜர், ராஜாஜி

1942, மார்ச் 16-ம் தேதி. விருதுநகர் கவுன்சில் கூட்டம் வைஸ் சேர்மன் தலைமையில் நடந்துகொண்டு இருந்தது. 90-வது தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பதிவாகிக்கொண்டு இருந்த வேளையில் சேர்மன் என்ற முறையில் கவுன்சில் கூட்டத்துக்கு வந்தார் காமராஜர்.

https://t.me/tamilpdfebooks

அனைவரும் எழுந்து நின்று மரியாதை கொடுத்தார்கள். சேர்மன் ஆசனத்தில் அமர்ந்தார் காமராஜர். 91 வது தீர்மானம் வாசிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. உடனே ஆசனத்திலிருந்து எழுந்து நின்று பேசினார்.

"என்னை சேர்மனாகத் தேர்ந்தெடுத்ததைப்பற்றி சந்தோஷம். ஆனால், எனக்குப் பல முக்கிய வேலைகள் இருப்பதால் என்னால் இங்கேயே இருந்து சேர்மன் வேலை செய்ய இயலாது. எந்தப் பதவியாக இருந்தாலும் சரி, அந்த பதவியை வகிப்பவர்கள் அதைச் சரியாக கவனித்துச் செயலாற்ற வேண்டும். அது முடியாதவர்கள் பதவிக்கு வரக் கூடாது. அதனால் நான் சேர்மன் பதவியிலிருந்து விலகிக்கொள்கிறேன்" என்று சொல்லிவிட்டு ராஜினாமா கடிதத்தை வைஸ் சேர்மனிடம் கொடுத்தார். பின்னர் அனைவரிடம் விடைபெற்றுக்கொண்டு வெளியேறினார்.

கட்சி வேலைக்காகப் பதவியைத் தூக்கி எறிந்து தியாகியாக மாறிய காமராஜரை, விருதுநகர் மட்டுமல்ல, தமிழகமே வியந்து பாராட்டியது. சிறையில் இருந்த காலத்தையும் சேர்த்து ஒன்பது மாதங்கள் சேர்மனாக இருந்த காமராஜர் சில மணித் துளிகள் மட்டுமே சேர்மன் ஆசனத்தில் அமர்ந்து விடைபெற்றார். சுதந்திரத்துக்கான இறுதிப் போர் ஆரம்பமானது.

https://t.me/tamilpdfebooks

4

சுதந்திர வீரர் 1942-1951

அரசியல் போராட்டங்களில் சத்தியமூர்த்தி - காமராஜர் இருவரது நெருக்கம் நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது. காமராஜருக்கு எந்தக் குடும்பப் பொறுப்பும் கிடையாது என்பதால் முழு நேரமும் காங்கிரஸ் கட்சியைப்பற்றியே நினைத்தார். ஒவ்வோர் ஊராகச் சென்று தலைவர்களையும் தொண்டர்களையும் நேரில் பார்த்துப் பேசினார். அவர் கால் படாத கிராமங்களே இல்லை. அந்த அளவுக்கு தமிழகம் எங்கும் சுற்றிக்கொண்டே இருந்தார்.

இதனால், காமராஜருக்கு ஒரு பெரிய ஆதரவு வட்டம் உருவானது. குறிப்பாகச் சொன்னால், விருதுநகர் முத்துசாமி, தூத்துக்குடி கந்தசாமி பிள்ளை, ரா.கிருஷ்ணசாமி நாயுடு, சாத்தூர் லட்சுமண பிள்ளை, மதுரை சிதம்பர பாரதி, நித்யானந்தம், வெங்கடாத்திரி நாயுடு, திருச்சி அருணாசலம், சங்கிலியாபிள்ளை, சீர்காழி சாமிநாதன் செட்டியார், சேலம் தீர்த்தகிரி முதலியார், பண்ருட்டி தேவநாகய்யா, கடலூர் சுதர்சனம், முத்து முதலியார், சிதம்பரம் நயினியப்பன், வட ஆற்காடு உபயதுல்லா, வேலூர் குப்புசாமி முதலியார், திருவண்ணாமலை அண்ணாமலை பிள்ளை, சென்னை ஆதிகேசவலு நாயகர், லட்சுமணசாமி முதலியார், எஸ்.வெங்கட்ராமன், நாகராஜன் என்று மாபெரும் தேசியவாதிகள் அனைவரும் காமராஜரின் பின்னே அணிவகுத்து நின்றார்கள். சுதந்திரப் போராட்டத்தில் காமராஜரின் போராட்டத்துக்கு தீவிர ஆதரவு தந்தார்கள். தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரை ராஜாஜிக்கு ஈடு கொடுக்கக்கூடிய ஒரு தலைவராக காமராஜரைப் பார்த்தனர்.

https://t.me/tamilpdfebooks

நேருஜி, ராஜாஜி, காமராஜர்

வெள்ளையனே வெளியேறு

இரண்டாம் உலகப்போரில் இந்தியரைக் கேட்காமலேயே, இந்தியாவும் பிரிட்டனுக்கு ஆதரவாகப் போரில் குதிப்பதாக வெள்ளையர் ஆட்சி அறிவித்தது.

‘இந்தியாவே அடிமைப்பட்டு, உரிமை இழந்து கிடக்கும்போது, அது எப்படி வேறு நாடுகளுக்காகப் போரில் குதிக்க முடியும்?’ என்று எதிர்க் குரல் எழுப்பினார் காந்திஜி. மேலும் அவர், ‘ஒரு வேளை போரின் முடிவில் இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்கப்படும் என்று உறுதி வழங்கப்பட்டால் போருக்கு ஆதரவு அளிப்பது குறித்து யோசிக்கலாம்’ என்றார்.

ஆனால், அப்போது பிரிட்டிஷ் பிரதமராக இருந்த வின்ஸ்டன் சர்ச்சில், ‘இது என்ன முட்டாள்தனம்? நான் பிரிட்டிஷ் நாட்டுக்கு பிரதமராக இருப்பது, எங்கள் சாம்ராஜ்யத்துக்கு கல்லறை கட்டும் பணிக்கு தலைமை தாங்குவதற்கு அல்ல. அந்த அரை நிர்வாணப் பக்கிரி காந்தியையும் அவரது சீடர்களையும் அடக்க, எனக்கு துப்பாக்கிகூடத் தேவையில்லை. வெறும் லத்திக் கம்புகளே போதும்’ என்று அதிகாரத் திமிரில் பதில் சொன்னார்.

அதைக் கேட்டு ஆவேசம் அடைந்த இந்திய தேசிய காங்கிரஸ், ‘போருக்கு எங்கள் ஆதரவு கிடையாது’ என்று வெளிப்படையாக அறிவித்தது.

காங்கிரஸை சரிக்கட்டுவதற்காக 1942, மார்ச் மாதம், சர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் என்பவரை இந்தியாவுக்கு அனுப்பி, சுதந்திரத்தைப்பற்றி ஆய்வு செய்து வரும்படி தூது அனுப்பியது பிரிட்டிஷ் அரசு. இந்திய சுதந்திரத்தை எப்படியேனும் தள்ளிப் போட வேண்டும் என்று முடிவெடுத்த வெள்ளையர்கள், ராஜதந்திரத்துடன் இந்தியா - பாகிஸ்தான் பிரிவினையைப்பற்றி வெளிப்படையாகப் பேசினார்கள். காந்திஜி, மௌலானா அபுல் கலாம் ஆசாத் ஆகியோர் கிரிப்ஸை

https://t.me/tamilpdfebooks

சந்தித்துப் பேசியபோது, சுதந்திரத்துக்கு ஒரு சில நிபந்தனைகள் விதித்து, போருக்குப் பின்னர் ஆங்கிலேயர்கள் மனம் வைத்தால் சுதந்திரம் கொடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

‘இது, பின் தேதியிட்ட ஒரு செக். அதனால் இதை ஏற்பதற்கு இல்லை’ என்று அறிவித்தார் காந்திஜி.

வெள்ளையர் கொளுத்திப்போட்ட தீ இந்தியா எங்கும் பரவியது. இந்தியா - பாகிஸ்தான் பிரிவினையைப்பற்றி ஆளாளுக்குப் பேசினார்கள். காங்கிரஸிலும் ஒரு சிலர் பிரிவினைக்கு ஆதரவு காட்டினார்கள். தமிழகத்திலிருந்து ராஜாஜி வெளிப்படையாகவே பாகிஸ்தான் பிரிவினைக்கு ஆதரவு தெரிவித்தார்.

ராஜாஜியின் அறிவிப்பு காந்திஜிக்கு வெறுப்பை உருவாக்கியது. உடனே ஒரு கடிதம் எழுதி ராஜாஜியை காங்கிரஸ் கட்சியில் இருந்து ராஜினாமா செய்ய வைத்தார். இந்தியா எங்கும் சுதந்திர தாகமும், பாகிஸ்தான் பிரச்னையும், இரண்டாம் உலகப்போரும் தீவிரமாக இருந்த காலகட்டத்தில், அதாவது 1942, ஆகஸ்ட் 8-ம் தேதி இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை மும்பையில் கூடியது.

பரபரப்பான சூழலில் கூடிய இந்தக் கூட்டத்துக்கு மௌலானா அபுல் கலாம் ஆசாத் தலைமை வகித்தார். தமிழகத்திலிருந்து காங்கிரஸ் தலைவர் காமராஜர், சத்தியமூர்த்தி, முத்துரங்க முதலியார், எம்.பக்தவத்சலம் உள்ளிட்ட 30-க்கும் மேற்பட்டவர்கள் சென்று கலந்துகொண்டனர்.

காந்திஜியின் விருப்பப்படி நேரு பேசினார்.

‘இந்தியாவின் தன்மானம் பேரம் பேசக்கூடிய பொருள் அல்ல. முடிவற்ற போராட்டம் என்பதே ஆங்கிலப் பேரரசுக்கு காங்கிரஸ் தரும் பதில். வெள்ளையனே வெளியேறு!’ என்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானத்தை முன்மொழிந்தார். சர்தார் வல்லபபாய் பட்டேல் தீர்மானத்தை வழிமொழிந்தார்.

தொடர்ந்து தலைவர்கள் பேசிய பின்னர் இறுதியாக காந்திஜி 140 நிமிடங்கள் வீர் உரை நிகழ்த்தினார்.

"உடனே இந்தியாவுக்கு சுதந்திரம் வந்தாக வேண்டும். இன்று இரவு சுதந்திரம் கிடைப்பது உறுதியானால், அது விடியும் முன்னரே கிடைத்தாக வேண்டும். இந்த நிமிடம் முதல் இந்தியர்கள் யாருக்கும் அடிமை அல்ல. சுதந்திர மனிதராக அனைவரும் எண்ணிக்கொள்ளுங்கள். தான் அடிமையல்ல என்ற உணர்வு ஏற்பட்ட உடனேயே, அடிமைத் தளைகள் உடைந்து நொறுங்கி விடும்.

இன்னொரு தாரக மந்திரம் சொல்கிறேன். இதை மறக்காமல் மனதில் பதிய வைத்துக்கொள்ளுங்கள். செய் அல்லது செத்துமடி... இந்தியாவை விடுவிப்போம் அல்லது அந்த முயற்சியில் செத்து மடிவோம். அடிமைத்தனம் நிலைத்திருப்பதைப் பார்க்க நாம் உயிர் வாழத் தேவையில்லை" என்று வார்த்தைகளில் அனல் தெறிக்கப் பேசி முடித்தார்.

https://t.me/tamilpdfebooks

அதற்குப்பின் நான்கு அம்ச தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி பிரிட்டிஷ் ஆட்சி உடனேயே முடிவுக்கு வர வேண்டும் என்பது முதல் தீர்மானம். நாசிசம், பாசிசம், ஏகாதிபத்திய முறைகளை இந்தியா ஒழிக்க உதவும் என்பது அடுத்த தீர்மானம். பிரிட்டன் உடனே சுதந்திரத்துக்கு இணங்காவிட்டால், காந்திஜியின் தலைமையில் அகிம்சை தர்ம சுதந்திரப் போர் நடத்தப்படும் என்பது மூன்றாவது தீர்மானமாகவும், அந்நிய ஆட்சி ஒழிந்ததும் வகுப்பு ஒற்றுமை ஏற்படும், அதன் பின்னர் சகல வகுப்புகளையும் கொண்ட தற்காலிகமான இந்திய அரசாங்கம் ஒன்று அமைக்கப்படும் என்பது இறுதித் தீர்மானமாகவும் ஏகோபித்த பாராட்டுகளுடன் நிறைவேற்றப் பட்டது.

ஆகஸ்ட் புரட்சி

காங்கிரஸ் கட்சியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஆங்கிலேயர்களை அசைத்துப் பார்த்தது. இன்னமும் தாமதித்தால் ஆபத்து என்று பயந்துபோன ஆங்கிலேய அரசு, உடனே அதிகாலை ஐந்து மணிக்கு காந்திஜி, கஸ்தூரிபாய், மீராபென் பட்டேல், மகாதேவ தேசாய், சரோஜினி தேவி, வல்லபபாய் பட்டேல், அபுல் கலாம் ஆசாத், நேரு போன்ற முக்கிய தலைவர்கள் அனைவரையும் கைது செய்து ரகசியமாகக் கொண்டு சென்றது.

ஆகஸ்ட் 9-ம் தேதி காலை காங்கிரஸ் கொடி ஏற்றிவைக்கும் வைபவம் நடக்க இருந்தது. காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு ரகசியமாகக் கொண்டு செல்லப்பட்டு விட்டதால், கொடியேற்று வைபவத்தை எப்படி நிகழ்த்துவது என்று தெரியாமல் இதர காங்கிரஸ் நிர்வாகிகள் தடுமாறிக்கொண்டு இருந்தனர்.

இவர்களது தடுமாற்றத்தைக் கவனித்த இளம் பெண்ணான அருணா ஆசப் அலி கொஞ்சமும் தயக்கம் இன்றி, வெள்ளையர் காவலை மீறி இந்தியக் கொடியை கம்பத்தில் ஏற்றி பறக்க வைத்தார். நாடு எங்கும் ஆகஸ்ட் புரட்சி ஆரம்பமானது.

பம்பாயில் வெளியிடப்பட்ட தீர்மானங்களை நாடு எங்கும் பரப்பத் தொண்டர் படை உடனே விரைந்து சென்றது. தமிழக காங்கிரஸ் குழுவும் ரயில் ஏறியது. காமராஜர் சென்ற ரயிலில் ஆந்திரத் தலைவர் என்.சஞ்சீவரெட்டியும் டி.பிரகாசமும் ஏறியிருந்தார்கள். சஞ்சீவரெட்டியுடன் குண்டக்கல் வரை சென்று அதன்பின் பெங்களூர் மார்க்கமாக ஆந்திராவுக்குப் போய் அவருடன் இரண்டொரு நாட்கள் தங்கியிருந்து போராட்டத் திட்டங்களை வகுத்தபின் தமிழகம் திரும்ப வேண்டும் என நினைத்திருந்தார் காமராஜர். சஞ்சீவரெட்டியும் அன்போடு அதை ஏற்றுக்கொண்டார். ஆனால், ஆந்திர எல்லையைத் தொட்டதும் ஆந்திரத் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். கைது நிகழ்ச்சி காமராஜரை எச்சரித்தது. ரயிலுக்குள்ளேயே தீவிரமாக ஆலோசனை நடத்தினார். அடுத்தடுத்து செய்ய வேண்டிய செயல்கள், நடைபெற வேண்டிய திட்டங்கள் உருப்பெற்றன.

சென்னையில் இறங்கியதும் தான் கண்டிப்பாகக் கைது செய்யப்படுவோம் என்பதை உணர்ந்தார் காமராஜர். கைது செய்யப்படுவதற்குள் பம்பாய் தீர்மானத்தை தமிழ்நாட்டு காங்கிரஸ்

https://t.me/tamilpdfebooks

தொண்டர்களிடம் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டும், ஆகஸ்ட் புரட்சியை ஓங்கி ஒலிக்கச் செய்ய வேண்டும் என முடிவு எடுத்தார். அதனால், தீர்மானம் தமிழகம் முழுவதும் போய்ச் சேரும் வரை காவலர்கள் பிடியில் மாட்டாமல் தப்பிக்க நினைத்தார்.

சென்னை, அரக்கோணம் சந்திப்பில் ரயில் நின்றது. ஒரு துண்டை எடுத்து தலையில் முண்டாசாகக் கட்டிக்கொண்டு, ஒரு சாதாரண விவசாயி போல இறங்கி நடந்தார் காமராஜர். மற்றவர்கள் அனைவரும் ரயிலிலிருந்து இறங்கவில்லை.

காமராஜர் கையில் இருந்த துண்டில் பம்பாய் தீர்மானங்கள் மூட்டையாக கட்டப்பட்டு இருந்தன. ஒரு பட்டிக்காட்டான் போன்று மூட்டையைத் தூக்கித் தோளில் வைத்தபடி விடுவிடுவென நடந்து ஸ்டேஷனுக்கு வெளியே போய் ஒரு வண்டியைப் பிடித்து சோளிங்கபுரம் போனார். அங்கே தேவராஜ ஐயர் என்ற காங்கிரஸ்காரர் நடத்திய ஹோட்டலில் சாப்பிட்டார். அதன்பின் பஸ் ஏறி ராணிப்பேட்டைக்குச் சென்ற காமராஜர், நேராக மாவட்ட காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் கே.ஆர்.கல்யாணராம ஐயர் வீட்டுக்குச் சென்று கதவைத் தட்டினார்.

வினோபாஜியுடன் காமராஜர்

'போலீஸார்தான் கைது செய்ய வந்திருக்கிறார்கள்' என்ற எண்ணத்தில் கதவைத் திறந்த கல்யாணராம ஐயர், எதிரே காமராஜர் நிற்பதைக் கண்டு ஆச்சரியமும் அதிர்ச்சியும் அடைந்தார். உடனடியாக காமராஜரை உள்ளே அழைத்துச் சென்று, தன் வயதான தாயாரிடம் அறிமுகப்படுத்தி வைத்தார். அந்தத் தாய் பழங்களும், சிறிது உணவும் காமராஜருக்குக் கொடுத்தார். காமராஜரும், தன் மகனும் ஈடுபடும் சுதந்திரப் போராட்டம் குறித்து அந்தத் தாய்க்குப் பெருமையாகவே இருந்தது.

கல்யாணராமன் ஒரு காங்கிரஸ் தலைவராதலால் எந்த நேரமும் போலீஸ் வரலாம் என்ற சிந்தனையில் காமராஜரை, தேசியவாதியான

https://t.me/tamilpdfebooks

ஜனாப் சுலைமான் என்பவரின் தோட்டத்தில் தங்க வைக்க முடிவு செய்தார். சுலைமான் காமராஜரை வரவேற்றுத் தங்க வைத்தார். அந்த இடத்தில் காங்கிரஸ் இளைஞர்கள் பலரும் காமராஜரை வந்து சந்தித்து போராட்ட ஆலோசனை பெற்றுச் சென்றார்கள். அனைவரிடமும் பம்பாய் தீர்மானத்தைப்பற்றியும், அடுத்தடுத்து நடத்த வேண்டிய போராட்டங்கள் குறித்தும் விவரித்தார். அன்று சுலைமான் தோட்டத்து வீட்டில் காமராஜர், கல்யாணராமன் இருவரும் விவாதம் நடத்திக்கொண்டு இருந்தனர். அந்த நேரம் கதவு தட்டப்பட்டது. வருவது யார் என்று தெரியவில்லை என்றாலும், முன்னெச்சரிக்கையாக உள்ளே போய் மறைவாகப் படுத்துக் கொண்டார் காமராஜர்.

காங்கிரஸ்காரரா அல்லது காவலரா என்று பயந்தபடியே கதவைத் திறந்த கல்யாணராமன் அதிர்ச்சி அடைந்தார். அங்கே நின்றுகொண்டு இருந்தது போலீஸ் சப் இன்ஸ்பெக்டர். அவரிடம் என்ன பேசுவது என்று தெரியாமல் கல்யாணராமன் விழிக்க, "எங்கள் மாவட்ட உயர் அதிகாரி இன்று இந்த ஊருக்கு விஜயம் செய்கிறார். அதனால் அவர் தங்குவதற்கு இந்த வீடு உபயோகப் படுமா என்பதைப் பார்க்கவே வந்தேன்" என்றவர், முன் அறை சிறியதாக இருப்பதைக் கண்டு முகம் சுளித்து, "இது போதாது. வேறு வீடு பார்த்துக்கொள்கிறேன்" என்றபடி கிளம்பினார்.

காப்பாற்றி வைத்த தலைவரைக் கைது செய்துவிடுவார்களோ என்று பயந்த கல்யாணராமன் நிம்மதிப் பெருமூச்சு விட்டார். இனியும் தாமதிப்பது ஆபத்து என்று கருதி அடுத்தடுத்த காரியங்களை விறுவிறுவென நடத்தத் திட்டம் போட்டார்கள். காங்கிரஸ் அலுவலகங்களுக்குச் சென்று தீர்மானங்களைக் கொடுத்தால் காவல் துறையினரிடம் பிடிபட வேண்டியிருக்கும் என்பதால், அந்தந்த ஊருக்குச் சென்று எவர் மூலமாவது தீர்மான நகலை காங்கிரஸ் ஆட்களுக்குக் கிடைக்கச் செய்வது என்று முடிவு எடுத்தனர். அதன்படி அடுத்த நாள் டாக்ஸியில் இருவருமாகக் கிளம்பி கண்ணமங்கலம் ரெயில்வே ஸ்டேஷன் வரை சென்று, ரயில் பயணத்தைத் தொடங்கினார்கள்.

திருவண்ணாமலை ரயில் நிலையத்தில் காங்கிரஸ்காரர் இருந்தால், தீர்மான நகலைக் கொடுத்து அனுப்பலாம் என்று காத்திருந்தார்கள். யாரும் காங்கிரஸ்காரர் தட்டுப்படவில்லை. ஓர் ஆசிரியரைக் காண நேர்ந்தது. அவரிடம் அப்போதைய சூழலை விளக்கி, தீர்மான நகலை திருவண்ணாமலை காங்கிரஸ் நிர்வாகிகளிடம் எப்படியாவது சேர்ப்பித்துவிடவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள்.

அடுத்ததாக விழுப்புரம் ரயில்வே நிலையம். அங்கே ஏராளமான போலீஸ் குவிக்கப்பட்டிருந்ததால், காமராஜர் சால்வையைப் போர்த்தியபடி அமர்ந்திருக்க, கல்யாணராமன் மட்டும் கீழே இறங்கிச் சென்றார். அங்கே இருந்த பத்திரிகை விற்பனையாளரை சந்தித்து தீர்மான நகலைக் கொடுத்து காங்கிரஸ் ஆட்களிடம் சேர்த்துவிடச் சொல்லிவிட்டு வந்தார்.

அடுத்ததாக தஞ்சைக்குச் சென்று காங்கிரஸ் தலைவர் டி.ஆர்.வி.நாராயணசாமியை சந்தித்து நிலைமையை விளக்கினார்கள். காங்கிரஸ் ஊழியர்களை அழைத்துப் போராட்டத் திட்டங்களை

https://t.me/tamilpdfebooks

விளக்கினார்கள்.

அங்கிருந்து ரயில் மூலம் திருச்சிக்குச் சென்றார்கள். வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு, தலையில் துண்டு கட்டிக்கொண்டு கிராமத்தான் போலவே காமராஜர் திருச்சியில் இறங்கி, ஏராளமான காவலர்களைக் கடந்து அன்றைய திருச்சி காங்கிரஸ் தலைவர் எஸ்.எஸ்.ரங்கசாமியின் இல்லத்துக்குச் சென்றார். திருச்சி சென்ற வேலை முடிந்ததும் ஒரு கார் மூலம் கல்யாணராம ஐயருடன் மதுரைக்குக் கிளம்பினார்.

அன்று இரவு மதுரையில் காங்கிரஸ் தலைவரையும், மற்ற தீவிர தொண்டர்களையும் சந்தித்துப் போராட்ட திட்டங்களைப்பற்றி விளக்கினார். அப்போது பி.எஸ்.குமாரசாமி ராஜா அங்கே வந்து காமராஜருடன் சேர்ந்துகொண்டார். அதற்குப்பின் தூத்துக்குடி, நெல்லை, சேலம், கோவை ஆகிய ஊர்களுக்கு மட்டும் செல்ல வேண்டியிருந்தது. காமராஜர் நினைத்தாலும், தமிழகத்தின் தென் பகுதியில் மறைந்து செல்ல முடியாது என்பதால், கல்யாணராமன் மட்டும் நெல்லைக்குச் செல்வது என்றும் அதன்பின் கோவை, சேலத்துக்குச் சென்ற பின்னர் ராணிப்பேட்டைக்கு அவர் செல்லட்டும் என்றும் முடிவு எடுக்கப்பட்டது.

அதன்படி கல்யாணராமன் தூத்துக்குடி, நெல்லைக்குச் சென்று பம்பாய் தீர்மான நகல்களை ஒப்படைத்தார். அதற்குள் அவரிடம் இருந்த பணம் தீர்ந்துபோனதால், அங்கிருந்து நேராக ராணிப் பேட்டைக்குச் சென்றார். ஊருக்குள் கால் வைத்ததும் போலீஸ், பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அவரைக் கைது செய்து வேலூர் சிறைக்கு அனுப்பி வைத்தது.

மீண்டும் சிறைப் பறவை

யாருக்கும் தெரியாமல் மறைந்திருந்து மதுரையிலிருந்து விருதுநகருக்கு ரயில் ஏறிய காமராஜர், ஊருக்கு இரண்டு கிலோ மீட்டர் முன்னாலேயே இருக்கும் ரெட்டியார்பட்டியில் இறங்கி, நண்பர்களுக்குத் தகவல் சொல்லி அனுப்பினார். நண்பர்கள் வந்து சேர்ந்ததும் நள்ளிரவு 12 மணிக்குப் பின் வியாபாரிகளைப் போன்று விருதுநகருக்குக் கிளம்பினார்கள். நடந்து வரும்போதே போராட்டத் திட்டங்களை விளக்கிக்கொண்டே வந்தார் காமராஜர். தான் செய்ய வேண்டிய கடமைகள் அனைத்தும் சிறப்பாக முடிந்தது என்று நிம்மதியாக அன்று இரவு வீட்டில் தூங்கினார் காமராஜர்.

காலையில் எழுந்ததும் தன்னை சந்திக்க வந்த நண்பர் ஜெயராம ரெட்டியாரிடம், "தான் கைதாகத் தயாராக இருப்பதாக காவல் நிலையத்தில் சொல்லுங்கள்" என்று சொல்லி அவரை அனுப்பி வைத்தார். இன்று இருந்து சாப்பிட்டுவிட்டு பின் கைதாகலாம் என்று தாயார் கெஞ்சிப் பார்த்தார். ஆனால், காமராஜர் ஏற்றுக்கொள்ளவில்லை. தகவல் அறிந்து விருதுநகர் இன்ஸ்பெக்டர் எழுத்தச்சன் ஓடோடி வந்தார்.

நல்ல தேசியவாதியான அவர், "காமராஜ்! நீங்கள் அவசரப்பட வேண்டாம். உங்களைக் கைது செய்வதற்கான வாரன்டுடன் போலீஸார் இப்போது அரியலூர் சென்று இருக்கிறார்கள். அவர்கள் வரும் வரை

https://t.me/tamilpdfebooks

நீங்கள் ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள்" என்று கேட்டுக்கொண்டார்.

ஆனால், காமராஜர், "நான் செய்ய வேண்டிய பணிகளை எல்லாம் செய்து முடித்துவிட்டேன். என் நாட்டின் மணியான தலைவர்கள், நண்பர்கள் எல்லாம் சிறையில் வாடும்போது நான் மட்டும் இங்கே ஓய்வு எடுப்பதும், நல்ல உணவு சாப்பிடுவதும் நியாயம்தானா? சுதந்திரம் இல்லாத நாட்டில் வெளியில் இருப்பதும், ஜெயிலில் இருப்பதும் ஒன்றுதான். அதனால் இப்போதே என்னைக் கைது செய்து சிறைக்கு அனுப்புங்கள்" என்று கேட்டுக்கொண்டார்.

வேறு வழி இன்றி இன்ஸ்பெக்டர் எழுத்தச்சன் காமராஜரைக் கைது செய்து வேலூர் சிறைக்கு அனுப்பினார். தன்னுடன் நிறைய புத்தகங்களை மட்டுமே அவர் எடுத்துச் சென்றார். முதலில் வேலூர் சிறைக்குச் சென்றவர், பின்பு அமராவதி சிறைக்கு அனுப்பப்பட்டார். அங்குதான் தமிழகத்தின் காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் அடைக்கப்பட்டு இருந்தனர்.

இந்தச் சிறையில் சத்தியமூர்த்தி இருந்தபோது கடுமையாக நோய் வாய்ப்பட்டார். வெயில் மிக அதிகமாக இருந்ததாலும், சூட்டைத் தணிக்க ஏதுவாக எந்த உணவும் கிடைக்காததாலும் அநேகருக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டது. சிறை மருத்துவமனையில் சத்தியமூர்த்தி இருந்ததால், அவரைப் பார்ப்பதற்காகவே காமராஜர் உடல் சரியில்லை என்று சொல்லிவிட்டு அங்கே போய் பேசி அவருக்கு ஆறுதல் சொல்லிவிட்டு வருவார்.

சிறையில் கடுமையான வெப்பம் என்பதால் முதுகுத்தண்டு பிரச்னை காரணமாக சத்தியமூர்த்தியின் உடல்நிலை பாதிக்கப்படவே, சென்னை மருத்துவமனைக்கு கொண்டுவரப் பட்டார். 1943 மார்ச் 28-ம் தேதி மரணமடைந்தார். இவரது இறப்பில் இருந்து மீள காமராஜருக்கு பல நாட்கள் ஆனது.

காமராஜர் மற்றும் நண்பர்கள் எல்லாம் வெயில் கொடுமையைத் தணித்துக்கொள்வதற்காகத் தண்ணீர் தொட்டிக்குள் போய் அமர்ந்துகொள்வார்கள். இந்த நேரத்தில்தான் காமராஜர் ஏராளமான புத்தகங்களைப் படித்து தனது அரசியல், சரித்திர அறிவை வளர்த்துக்கொண்டார். அதிக நாட்கள் அங்கே இருந்ததால் தமிழகத்தின் அனைத்துப் பகுதித் தலைவர்களுடன் கலந்து பேசவும் பழகவும் வாய்ப்பு கிடைத்தது. இந்த நட்புதான் பின்னாட்களில் காமராஜருக்குப் பெரும் பலமாக இருந்தது.

இரவு நேரங்களில் பாட்டு, நாடகம் என்று பொழுதுபோக்குவார்கள். நீண்ட நாட்கள் கழிந்த பின்னர் மீண்டும் வேலூர் சிறைக்கு அனுப்பப்பட்டார், காமராஜர். கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகள் சிறைக்குள் இருந்தார் காமராஜர். இதுதான் காமராஜர் அனுபவித்த கடைசி சிறைத் தண்டனை.

1945-ல், இரண்டாம் உலகப்போர் முடிந்து பிரிட்டன் அமோக வெற்றி பெற்றது. அதனால் எந்த விசாரணையும் இல்லாமல் பாதுகாப்பு கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். ஆகஸ்ட் புரட்சி

https://t.me/tamilpdfebooks

வீரர் காமராஜர் சிறையிலிருந்து வெளியே வந்து, ரயில் மூலம் திருநெல்வேலி வந்து இறங்கினார். அங்கே அவருக்கு மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டது. விடுதலை அடைந்து வந்தவரை ஓய்வு எடுக்கவிடாமல் கட்சி வேலைகள் அழைத்தன.

ராஜாஜியுடன் மோதல்...

பாகிஸ்தான் பிரிவினைக்கு ஆதரவு கொடுத்து காங்கிரஸிலிருந்து வெளியேறிய ராஜாஜி மீண்டும் காங்கிரஸில் நுழைய முயற்சி செய்தார். ஆனால், காங்கிரஸில் ராஜாஜிக்கு எதிர் கோஷ்டி ஆட்கள் நிறையவே இருந்ததால், அவரை நுழையவிடக்கூடாது என்று நினைத்தார்கள். ஆகஸ்ட் போராட்டத்துக்குப் பின் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் 1945, அக்டோபர் 31-ம் தேதி மதுரையில் கூடுவதாக முடிவு செய்யப்பட்டது. சட்டசபைத் தேர்தலுக்குப் போட்டியிடும் வேட்பாளர்களையும், பார்லிமென்டரி கமிட்டி மெம்பர்களையும் இந்தக் கூட்டத்தில் தேர்வு செய்வதாக இருந்தது.

இந்த நிலையில் ராஜாஜியின் ஆதரவாளர்கள் 80 பேர் கையெழுத்துப் போட்டு ஒரு தீர்மானத்தை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு அனுப்பி வைத்தார்கள். அதில், 'தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிப் பணிக்கு ராஜாஜியை அழைக்க வேண்டும்' என்று கேட்டிருந்தார்கள்.

இதை எதிர்பாராத காங்கிரஸ் ஊழியர்கள், இதற்குத் தக்க பதிலடி தர வேண்டும் என்பதற்காக குறிப்பிட்ட தேதிக்கு முதல் நாள், அதாவது அக்டோபர் 30-ம் தேதி தமிழ்நாடு காங்கிரஸ் ஊழியர் மாநாடு ஒன்றை திருப்பரங்குன்றத்தில் கூட்ட முடிவு செய்தனர். தேசியவாதி சிதம்பர பாரதி தீவிரமாகச் செயல்பட்டு, ஆயிரமாயிரம் ஊழியர்கள் தங்கவும், சாப்பிடவும் ஏற்பாடு செய்தார். மாநாட்டுக்கு வந்த தலைவர்களுக்கு பிரமாண்டமான வரவேற்பு வழங்கப்பட்டது. தொண்டர்களிடம் பெரும் எழுச்சி காணப்பட்டது.

மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டும் என்று மதுரை வந்திருந்தார் ராஜாஜி. தானாகக் கலந்துகொண்டால் சரியாக இருக்காது என்ற எண்ணத்தில் காமராஜரை சந்தித்து, "நீங்கள் அழைத்தால் நான் இந்த மாநாட்டுக்கு வருகிறேன்" என்று கேட்டார். ஆனால், காமராஜர் கொஞ்சமும் பிடிகொடுக்காமல், "தாராளமாக வரலாம். மாநாட்டுக்கு வருவதற்கு என்னிடம் ஏன் கேட்கிறீர்கள்?" என்று கேள்வியையே பதிலாக்கி மடக்கினார்.

'காமராஜர் அழைத்ததால் வந்தேன்' என்று சொல்லி மாநாட்டில் பங்கேற்க வந்திருந்த ராஜாஜி, நிலைமை சாதகமாக இல்லை என்பதை உணர்ந்ததும் 30-ம் தேதி காலையே குற்றாலம் கிளம்பிப் போய்விட்டார்.

முத்துரங்க முதலியார் மாநாட்டை ஆரம்பித்து வைக்க, கல்லிடைக்குறிச்சி தேசபக்தர் சர்மா மாநாட்டுக்குத் தலைமை வகித்தார். அந்த மாநாட்டில், 'ராஜாஜிக்கு காங்கிரஸில் தலைமைப் பதவி அளிக்கக்கூடாது' என்ற தீர்மானம் முன்மொழியப்பட்டு பலத்த ஆரவாரத்துடன் நிறைவேற்றப்பட்டது.

https://t.me/tamilpdfebooks

ராஜாஜி ஆதரவாளர்கள் தாங்கள் அனுப்பிய தீர்மானத்துக்கு பதில் கேட்டபோது காமராஜர், "காங்கிரஸ் தீர்மானங்களை ராஜாஜி ஏற்று நடப்பதாக இருந்தால், அவர் கட்சிக்குள் வருவதைப்பற்றி ஆட்சேபம் இல்லை. ஆனால், அதற்கு முன் உங்கள் தீர்மானத்தை வாபஸ் வாங்க வேண்டும்" என்றார். உடனே அவர்கள் தீர்மானத்தை திரும்பப் பெற்றுக் கொண்டனர்.

அடுத்ததாக, "திருச்செங்கோடு தொகுதியிலிருந்து ராஜாஜி காங்கிரஸ் கட்சி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டார், இதற்கு காங்கிரஸ் கட்சித் தலைவர் மௌலானா ஆசாத் ஒப்புதல் அளித்திருக்கிறார்" என்று தெரிவித்தனர்.

உடனே முத்துரங்க முதலியார், "தமிழகத்தில் 37 இடங்கள் காலியாக இருக்க, திருச்செங்கோட்டுக்கு மட்டும் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவருக்குத் தெரியாமல் எப்படித் தேர்தல் நடத்தமுடியும்?" என்று கேட்டார். அதனால் திருச்செங்கோடு தேர்தல் செல்லாது என்று ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றினார்கள்.



ராஜாஜியுடன்...

இதற்குப் பின்னும் ராஜாஜி கோஷ்டியினர் தங்களுடைய குறுக்குவழியைக் கைவிடவில்லை. காந்திஜியிடம் ராஜாஜிக்கு இருந்த நல்ல பெயரைப் பயன்படுத்தி எப்படியாவது ராஜாஜியை முதல் மந்திரியாக்கிவிட வேண்டும் என முடிவு எடுத்தார்கள்.

அதன்படி கல்கத்தாவில் நடக்க இருந்த அகில இந்திய காங்கிரஸ் காரிய கமிட்டிக்குத் தூது அனுப்பினார்கள். அங்கே போய், "தமிழகத்தில் காமராஜர் கோஷ்டி, ராஜாஜி கோஷ்டி என்று இரண்டு கோஷ்டிகள் இருக்கின்றன. எனவே, சட்டசபை காரிய கமிட்டி எனப்படும் பார்லிமென்டரி போர்டை அமைக்கும் பொறுப்பை, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியிடம் விடக்கூடாது, அகில இந்திய காங்கிரஸ் தலைமையே இதற்கு நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள்.

https://t.me/tamilpdfebooks

நிலைமை சிக்கலாவதை உணர்ந்த அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் மௌலானா ஆசாத், தமிழகத்தின் நிலைமையை சரிகட்டுவதற்காக காரிய கமிட்டி உறுப்பினர் ஆசப் அலியை தமிழகத்துக்கு அனுப்பி வைத்தார். சென்னைக்கு வந்து அனைவரிடமும் பேசிய ஆசப் அலி, பம்பாய் சென்று சர்தார் படேலை சந்தித்து சகல விவரங்களையும் கூறினார். விசாரணை அறிக்கையை அகில இந்திய காங்கிரஸ் தலைமையிடம் கொடுக்கும் முன்னர், "ராஜாஜியுடன் பேசி சமரசத்துக்கு வர முடியுமா?" என்று காமராஜரிடம் கேட்டார் ஆசப் அலி.

அதன்படி காமராஜர், ராஜாஜி இருவரும் சந்தித்துப் பேசினார்கள். பார்லிமென்டரி போர்டில் மொத்தம் 8 உறுப்பினர்கள் இருப்பார்கள். இதில் காங்கிரஸ் கட்சித் தலைவர், துணைத் தலைவர் தவிர ஆறு பேர்களில் மூவர் காமராஜர் கோஷ்டியைச் சேர்ந்தவர்களாகவும், அடுத்த மூவர் ராஜாஜி கோஷ்டியைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது. காமராஜர் இந்தத் திட்டத்தில் உறுதியாக இருக்கவே, வேறு வழி இன்றி இதற்கு ராஜாஜி ஒப்புக்கொள்ள வேண்டி வந்தது.

இதன்படி தமிழ்நாடு காங்கிரஸ் பார்லிமென்டரி போர்ட் நியமனம் செய்யப்பட்டது. இதில் காமராஜர், முத்துரங்க முதலியார், ருக்மிணி லட்சுமிபதி, ராமசாமி ரெட்டியார், அவிநாசிலிங்கம் செட்டியார் ஆகிய ஐந்து பேர் ஒரு கோஷ்டியாகவும் சி.பி.சுப்பையா, முனுசாமிபிள்ளை, அண்ணாமலை பிள்ளை ஆகியோர் ராஜாஜி கோஷ்டியாகவும் இருந்தனர்.

ராஜாஜிக்கு இந்திய காங்கிரஸ் தலைவர்களின் ஆதரவு பலமாக இருந்தது. ஆனால், காமராஜருக்கோ காங்கிரஸ் தொண்டர்களின் ஆதரவு பலமாக இருந்தது. இந்த நேரத்தில்தான் தமிழகத்துக்கு காந்திஜியின் வருகை நிகழ்ந்தது. எந்த ஒரு தலைவனை தன் உயிரினும் மேலாக நினைத்தாரோ, அந்த காந்திஜியே காமராஜரை தவறாக நினைக்கவும், அதை காமராஜர் எதிர்த்து நிற்கவும் நேர்ந்தது.

காந்திஜி வருகை

இந்தி பிரச்சார சபை வெள்ளி விழாவில் கலந்துகொள்வதற்காக 1946-ல் தமிழகம் வந்த காந்திஜி, ஒரு வார காலம் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்தார்.

ஆகஸ்ட் புரட்சிக்குப் பின் இந்தியா எங்கும் காந்திஜியின் புகழ் வெகுவாகப் பரவியிருந்தது. அதற்கு தமிழகமும் விதிவிலக்கு அல்ல. காந்திஜி தமிழகம் வருகிறார் என்பது தெரிந்ததுமே தமிழகம் விழாக்கோலம் பூண்டது. காந்திஜி செல்லும் திசை எங்கும் கூடி நின்று மக்கள் குரல் கொடுத்தார்கள்.

அப்போது தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக காமராஜர் இருந்தாலும், காந்திஜி வருகையைப்பற்றி முறையான தகவல் காமராஜருக்கு வழங்கப்படவில்லை. இந்தி பிரச்சார சபை நிர்வாகிகளும், ராஜாஜியும் கலந்து பேசி காரியங்களை நிகழ்த்திக் கொண்டு இருந்தார்கள்.

https://t.me/tamilpdfebooks

தமிழகத்துக்கு வரும் காந்திஜிக்கு முதல் மரியாதை தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்தான் தர வேண்டும் என்பதை எப்படியாவது மாற்றி அமைக்க வேண்டும் என்று முடிவு எடுத்த ராஜாஜி, காந்திஜி எப்போது வருகிறார், எங்கு அவருக்கு வரவேற்பு வழங்கப்படுகிறது போன்ற தகவல்களைச் சொல்லவே இல்லை. காந்திஜியை வரவேற்க இந்தி பிரச்சார சபைக்குப் போன காமராஜருக்கு ஏமாற்றமே காத்திருந்தது. ராஜாஜி மற்றும் இந்தி பிரச்சார சபை பிரதிநிதிகள் ஏற்கெனவே வரவேற்க போய்விட்டார்கள் என்று சொல்லிவிட்டார்கள். அங்கே இருந்த காவலர்களுக்கும் காந்திஜி வருகையைப் பற்றிய தெளிவான விவரம் தெரியவில்லை.

அப்போதுதான் அங்கே காரில் வந்தார் பத்திரிகையாளரும் காமராஜரின் நண்பருமான கணபதி. குறிப்பிட்ட சில பத்திரிகையாளர்களுக்கு மட்டும் காந்திஜி வருகையைப்பற்றி தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதில் கணபதியும் ஒருவர். எனவே, அவர் காரில் உடனே காமராஜரை அழைத்துக்கொண்டு புறப்பட்டார். அம்பத்தூர் ஸ்டேஷனில் காந்திஜியை வரவேற்கக் காத்திருந்த ராஜாஜி மற்றும் நிர்வாகிகள் எதிர்பாராமல் காமராஜர் வந்ததைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். ரயிலில் வந்து இறங்கிய காந்திஜிக்கு, மாநில காங்கிரஸ் தலைவர் என்ற முறையில் காமராஜர் முதல் மாலையைப் போட்டு அன்போடு வரவேற்றார்.

அன்று இந்தி பிரச்சார சபையின் வெள்ளிவிழா முடிந்ததும் காந்திஜி, பழனிக்கும் மதுரைக்கும் ரயில் மார்க்கமாக பயணம் செய்தார். காமராஜரும் ராஜாஜியும் காந்திஜியுடன் சென்றார்கள். ஆனாலும், காந்திஜியுடன் ராஜாஜிக்கு அதிகப் பழக்கத்தால், அவரே நெருக்கமாக இருந்தார். காமராஜர் அதைக் கண்டு கொள்ளாமல், ஒவ்வோர் ஊரிலும் காந்திஜிக்கு உரிய மரியாதை கிடைக்கவும், வரவேற்பு கொடுக்கவும் தேவையான ஏற்பாடுகளைச் செய்துகொண்டு இருந்தார்.

பழனி ஆண்டவர் சந்நிதியில் காந்திஜிக்கும் ராஜாஜிக்கும் மட்டுமே பரிவட்ட மரியாதை வழங்கப்பட்டது. ஒரு சில இடங்களில் ரயில்வே

https://t.me/tamilpdfebooks

ஸ்டேஷனில் காந்திஜி பேசுவதற்கு தனி மேடை போடப்பட்டிருந்தது. காந்திஜியைப் பார்த்து மக்கள் ஆரவாரம் செய்தனர், கரகோஷம் விண்ணைப் பிளந்தது.

ஒரு முறை மக்கள் கூட்டத்தின்போது, "நான் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்குப் போகிறேன். அதற்குக் காரணம் உங்கள் ராஜாஜிதான். அவர் எல்லோருக்கும் அந்தக் கோயிலை திறந்திருக்காவிட்டால், நான் அங்கே செல்லப் புறப்பட்டிருக்க மாட்டேன்" என்று ராஜாஜியை உயர்த்தி காந்திஜி பேசினார். ஆனால், மக்கள் கூட்டமோ அமைதியாக இருந்தது. இதை கவனித்தார் காந்திஜி.

அந்தப் பயணத்தின்போது காந்திஜி தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் என்ற வகையில் காமராஜரிடம் பழகினாரே தவிர, சகஜமாகப் பேசும் அளவுக்கு நெருங்கவில்லை. அதை காமராஜரும் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை.

தமிழ்நாட்டில் சுற்றுப்பயணம் முடிந்து காந்திஜி சென்னையை விட்டுப் புறப்பட்டார். இடையில் நின்று போயிருந்த 'ஹரிஜன்' பத்திரிகையை 1946, பிப்ரவரி, 10-ம் தேதி தொடங்கினார். அதில், தமிழக சுற்றுப்பயணத்தைப்பற்றி கீழ்க்காணுமாறு குறிப்பிட்டு எழுதினார்.

'ராஜாஜி எனது பழைய நண்பர்களில் ஒருவர். என்னுடைய கொள்கைகளை விமர்சனம் செய்வதில் அவர் சிறந்தவர். இது எல்லோரும் அறிந்த விஷயம். 1942-ல் கருத்து வேறுபாடு கொண்டார் என்பது எனக்குத் தெரியும். இந்தக் கருத்து வேறுபாட்டை அவர் பகிரங்கமாக ஒப்புக்கொண்டார் என்பதற்காக அவரைப் பாராட்ட வேண்டும்.

சர்தார் வல்லபபாய் பட்டேலுடன்...

ராஜாஜி ஒரு பெரிய சமூக சீர்திருத்தவாதி. அவர் நம்பிக்கைப்படி அவர் நடந்துகொள்பவர். அவரது அரசியல் அறிவும் நாணயமும் சந்தேகத்துக்கு இடமில்லாதவை. ஆனால், தமிழகத்தில் அவருக்கு எதிராக ஒரு கோஷ்டி (கிளிக்) இருப்பது கண்டு என் மனம் வேதனைப்படுகிறது. சென்னையில் இந்த கோஷ்டியின் ஆதிக்கம்

https://t.me/tamilpdfebooks

அதிகமாக இருக்கிறது. ஆனால், மக்கள் அனைவரும் ராஜாஜியின் மீது பக்தியுடன் இருக்கிறார்கள் என்பதை அறிந்தேன். நான் சாமி தரிசனத்துக்காகச் சென்றபோது மக்கள் வழி நெடுக எனக்குக் கூடி நின்று ஆதரவு தெரிவித்தார்கள்; ஆர்ப்பரித்தார்கள். மக்களிடம் ராஜாஜிக்கு அதிக அளவு செல்வாக்கு இருந்ததாலேயே இந்த அளவு கூட்டமாக மக்கள் வந்தார்கள்.

மக்கள் கூட்டம் எனக்காக வந்தது என்று எண்ணுவதற்கு நான் தற்பெருமைக்காரனோ அல்லது அறிவில்லாதவனோ இல்லை. தங்களுக்கு எது நல்லது என்று தோன்றுகிறதோ அதையே தென்னாட்டு காங்கிரஸ்காரர்கள் செய்கிறார்கள். ராஜாஜியைத் தவிர வேறு யாரும் தற்போதைய நிலையில் பொறுப்பு ஏற்க முடியாது என நினைக்கிறேன். அதனால் ராஜாஜியின் சேவையை இழக்க வேண்டாம் என்று நான் எச்சரிக்கை செய்யாவிடில், காங்கிரஸுக்கு நான் உண்மையானவனாக இருக்க முடியாது' என்று எழுதியிருந்தார்.

காந்திஜியின் எழுத்து காமராஜருக்கு மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் இருந்த காங்கிரஸ் தொண்டர்களுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது; அவர்கள் மனம் நெருப்பாக எரிந்தது.

ராஜாஜிக்கு மக்களிடையே இருந்த எதிர்ப்பை அறியாத காந்திஜி, எதிர்ப்புக் கூட்டத்தை 'கிளிக்' என்று எழுதியதைக் கண்டு ஆவேசமானார் காமராஜர். காந்திஜியை எதிர்த்து அறிக்கை வெளியிடுமாறு அவரது ஆதரவாளர்கள் கேட்டுக்கொண்டார்கள். காந்திஜி மீது கோபம் இருந்தாலும், அதை சரியான முறையில் மட்டுமே வெளிக்காட்டுவது என்று முடிவெடுத்தார்.

1946, பிப்ரவரி, 12-ம் தேதி காமராஜர் ஓர் அறிக்கை வெளியிட்டார்.

'மகாத்மா காந்திஜி அவர்கள், 'ஹரிஜன்' பத்திரிகையில் ராஜாஜியைப் பற்றியும், தமிழ்நாடு காங்கிரஸைப் பற்றியும் எழுதியிருந்த கட்டுரை எனக்கு மிகுந்த திகைப்பை உண்டாக்கியது. நான் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவன் என்பதால், விதிமுறையின்படியே காரிய கமிட்டியை நியமனம் செய்தேன். அதனால் காந்திஜி சொன்னது எனக்குத்தான் பொருந்தும்.

காந்திஜியிடம் நான் மிகவும் மரியாதை வைத்திருக்கிறேன். காந்திஜி தமிழகத்தில் சுற்றுப்பயணம் செய்த நேரத்தில் நானும் காரிய கமிட்டி உறுப்பினர்களும் அவருடன் இருந்தோம். அவர் கூப்பிடும் தூரத்தில்தான் இருந்தோம். தமிழ்நாட்டில் காந்திஜி இருந்தபோது, தமிழ்நாடு காங்கிரஸ் விஷயமாக எங்களிடம் எதுவும் பேசவில்லை. ஆனால், இங்கிருந்து சென்ற பின்னர், கோஷ்டி கும்பல் என்பதைக் குறிப்பிடும்படி 'கிளிக்' என்ற பதத்தை உபயோகப்படுத்தி இருக்கிறார். இது மிகுந்த வேதனை அளிக்கிறது. இந்தத் தகராறுக்கு அடிப்படைக் காரணம் பார்லிமென்டரி போர்டுத் தலைவர் பதவிதான் என்பதை அறிவேன். இது சுதந்திர போராட்டத்தைப் பலப்படுத்துவதற்கு ஒரு சாதனம் என்பதைத் தவிர, அதில் எனக்கோ என் சகாக்களுக்கோ அதிக நம்பிக்கை கிடையாது.

https://t.me/tamilpdfebooks

காந்திஜியின் கட்டுரைக்குப் பின் பார்லிமென்டரி போர்டில் இருந்து நான் ராஜினாமா செய்வதைத் தவிர, எனக்கு வேறு வழியில்லை. ஏனென்றால் இந்த சண்டை முழுவதும் சட்டசபை திட்டத்தால் ஏற்பட்டதுதான். என்னோடு சேர்ந்து டி.எஸ்.அவிநாசிலிங்கம், சி.என்.முத்துரங்க முதலியார், ஓ.பி.ராமசாமி ரெட்டியார், ருக்மிணி லட்சுமிபதி ஆகியோரும் ராஜினாமா செய்ய விரும்பினார்கள். ஆனால், தேர்தலுக்கு குறுகிய அவகாசமே இருப்பதால் அனைவரும் ராஜினாமா செய்ய வேண்டாம் என்று அவர்களை கேட்டுக் கொண்டுள்ளேன்.

இருபது ஆண்டுகளாக நான் விசுவாசத்துடன் பின்பற்றி வந்துள்ள தலைவர் காந்திஜி மீது என் பக்தி இன்றும் எள்ளளவும் குறையவில்லை.

ஆனால், என்னால் அவருக்கு வருத்தம் ஏற்பட்டு உள்ளதால் நான் ராஜினா செய்கிறேன். மாகாண போர்டும், மத்திய போர்டும் எந்த முடிவுகளைச் செய்தாலும், அவற்றை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வேன் என்று இதில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் உறுதி கூறுகிறேன்' என்று இருந்தது.

காங்கிரஸ் தொண்டர்கள், தமிழகத் தலைவர்கள் அனைவரும் காமராஜர் பக்கம் இருந்ததால், 'கிளிக்' என்ற சொல்லைப் பயன்படுத்தியது தவறு என்று காந்திஜிக்கு ஏராளமானவர்கள் கண்டனம் தெரிவித்துக் கடிதம் எழுதினார்கள். அதில் காந்திஜியால் மதிக்கப்படக்கூடிய பி.வரதராஜுலு நாயுடுவும் ஒருவர். அவர் எழுதிய கடிதத்தில், 'தென்னாட்டில் காந்திஜி தர்மத்திலும், காங்கிரஸ் திட்டத்திலும் பரிசுத்தமான பக்தியுடன் உழைப்பவர் காமராஜர். உயர்தரமான நாடார் அவர்களைக் குறித்து தாங்கள் தவறாக எழுதியது நல்லது அல்ல. இந்த விஷயத்தில் தாங்கள் தலையிடாமல் இருப்பது நல்லது என்பதை தங்களுக்குத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்' என்று குறிப்பிட்டு இருந்தார். தேசபக்தர் பட்டாபி சீதாராமையா காந்திஜியை நேரில் சந்தித்து காமராஜரைப்பற்றி தெளிவாக எடுத்துரைத்தார்.

அதனால் தமிழக நிலவரங்களை ஓரளவு அறிந்துகொண்ட காந்திஜி உடனே ஹரிஜன் பத்திரிகையில் விளக்கம் எழுதினார்.

'கிளிக்' என்ற சொல்லுக்கு ஆங்கில அகராதியில் தவறான அர்த்தம் எதுவும் இல்லை. அதனால் காமராஜர் தன் ராஜினாமாவை வாபஸ் வாங்கிக்கொள்ள வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

வரதராஜுலு நாயுடுக்கு பதில் எழுதிப்போட்டார். அதில், 'நீங்கள் சொன்னபடியே செய்கிறேன். இனி நாடார் தகராறில் நான் ஈடுபடுவதில்லை' என்று உறுதிபட எழுதினார். இதைத் தொடர்ந்து, இந்தப் பிரச்னையை மேலும் பெரிதாக்க வேண்டாம் என காமராஜர் அனைவரிடமும் அன்போடு கேட்டுக்கொண்டார். அதனால் காந்திஜிக்கு எதிராகத் தமிழகத்தில் நடைபெற இருந்த செயல்கள் அனைத்தும் தடுத்து நிறுத்தப்பட்டன. ஆனாலும் காமராஜர் தன்னுடைய ராஜினாமா முடிவை மாற்றிக் கொள்ளவில்லை.

தேர்தல் பரபரப்பு...

https://t.me/tamilpdfebooks

1946-ம் வருட சட்டசபைத் தேர்தலுக்கு வேட்பாளர்களை தேர்ந்தெடுக்கும் பணியை, பார்லிமென்டரி போர்டில் அங்கம் வகித்த அனைவரும் மேற்கொண்டனர். காமராஜர் இந்த விஷயத்தில் தலையிடாமல் ஒதுங்கி நின்றார். வேட்பாளர் பட்டியலில் பெரும்பாலோர் ராஜாஜி ஆதரவு ஆட்களாகவே இருந்தனர். இந்தப் பட்டியலை இறுதி செய்வதற்காக பக்தவத்சலமும், ருக்மிணி லட்சுமிபதியும் சர்தார் வல்லபபாய் பட்டேலிடம் கொண்டு சென்றனர். இதை முடிவு செய்யும் முன்னர் காமராஜரை சந்தித்துப் பேச வேண்டும் என அவரை அழைத்தார் பட்டேல். பம்பாய்க்கு உடனடியாகப் புறப்பட்டுச் சென்ற காமராஜர், 'பட்டியல் இறுதி செய்யப்பட்ட பிறகே சந்திப்பேன்' என்று சொல்லிவிட்டார். அதன்படி வேட்பாளர்கள் அங்கீகாரம் செய்யப்பட்ட பின்னர் பட்டேலை சந்தித்துப்பேசினார் காமராஜர்.

இந்தச் சூழலில் ராஜாஜியை எதிர்த்து மதுரையில் ஆர்ப்பாட்டமும் கலவரமும் நடந்தன. இதை சமாளிக்க முடியாமல் ராஜாஜி காங்கிரஸ் கட்சியில் இருந்தே ராஜினாமா செய்து வெளியேறினார்.

மாநில சுயாட்சி அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் இரண்டாவது தேர்தல் 1946-ல் நடந்தேறியது. அப்போது தமிழகத்தில் சட்டமன்ற கீழவைக்கு 215 இடங்களும், மேலவைக்கு 46 இடங்களும் இருந்தன. அதற்கு முந்தைய தேர்தல் வரை காங்கிரஸுக்குப் போட்டியாக இருந்த நீதிக்கட்சிக்கு, பெரியார் தலைவராக வந்த பின்பு, 'இனி தேர்தலில் போட்டியிடுவது இல்லை' என்று அறிவித்து தேர்தல் களத்தில் இருந்து வெளியேறியது நீதிக்கட்சி. அந்தக் கட்சியின் பெயரும் 'திராவிடர் கழகம்' என்று மாறியிருந்தது.

'பாகிஸ்தானைப் பிரிக்க வேண்டும்' என்ற கொள்கையுடன் போட்டியிட்ட, 'காயிதே மில்லத் முஸ்லீம் லீக்' மட்டுமே களத்தில் இருந்தது. அதனால் காங்கிரஸ் கட்சி கீழவையில் 163 இடங்களும், மேலவையில் 32 இடங்களும் பிடித்து அமோக வெற்றி பெற்றது.

காமராஜர் இந்தத் தேர்தலில் சாத்தூர் - அருப்புக்கோட்டை தொகுதியில் நின்று, போட்டியே இல்லாமல் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அமோக வெற்றி பெற்று இருந்தாலும், முதல் அமைச்சர் தேர்வு உட்கட்சி பூசலால் பெரும் பிரச்னையாக அமைந்தது. ஆந்திர மக்களின் ஆதரவு பெற்ற பிரகாசம், பிராமணர்கள் ஆதரவு பெற்ற ராஜாஜி, கேரள மக்கள் ஆதரவு பெற்ற மாதவ மேனன், காமராஜர் ஆதரவு பெற்ற முத்துரங்க முதலியார் என்று முதல்வர் பதவிக்கு அதிகப் போட்டி இருந்தது.

பிரச்னையை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக பிரகாசம், காமராஜர், மாதவ மேனன் ஆகியோர் டெல்லிக்குச் சென்று காந்திஜி, பட்டேல், ஆசாத் ஆகியோரை சந்தித்துப் பேசினார்கள்.

காங்கிரஸ் மேலிடம் ராஜாஜியை முதல் மந்திரியாக்குவதற்கு ஆதரவு தெரிவித்தது. ஆனால், மற்ற தலைவர்கள் எவரும் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. பொதுமக்கள் கொடுத்த பணமுடிப்பை, பிரகாசம் தன் சொந்த செலவுக்குப் பயன்படுத்திக்கொண்டார் என்ற

https://t.me/tamilpdfebooks

குற்றச்சாட்டு இருந்ததால், அவரை முதல்வர் பதவியில் அமர வைப்பதற்கு காந்திஜி சம்மதிக்கவில்லை.

பட்டாபி சீதாராமையாவுக்கு வாய்ப்பு கொடுப்பதை ராஜாஜி ஆதரிக்கவில்லை. குழப்பம் ஏற்படவே, தமிழ்நாட்டிலேயே முடிவு எடுத்துக்கொள்ளும்படி அனுப்பி வைத்தார்கள்.

பிரகாசம் முதல்வர் வேட்பாளராக போட்டியிடப்போவதாக சொன்னார். காந்திஜிக்கு விருப்பம் இல்லாத பிரகாசம் வெற்றி பெறுவதை விரும்பாத காமராஜர், முத்துரங்க முதலியாரை போட்டியிடச் செய்தார். முத்துரங்க முதலியாருக்கு ராஜாஜி கோஷ்டியினர் ஆதரவு தருவார்கள் என நினைத்தார். ஆனால், ஓட்டெடுப்பின்போது யாரும் எதிர்பாராதவிதமாக ராஜாஜி கோஷ்டியினர் 33 பேர் நடுநிலை வகிக்கவே, 7 ஓட்டு வித்தியாசத்தில் பிரகாசம் வெற்றி பெற்றார்.

முதல்வர் வேட்பாளராக ராஜாஜியை நிறுத்தாத காமராஜரை எப்படியும் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பதவியிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்று ராஜாஜி கோஷ்டியினர் தீவிரமாக வேலை செய்தனர். 1946, மே மாதம் காங்கிரஸ் கமிட்டித் தேர்தல் நடந்தது. காமராஜரை எதிர்த்துப் போட்டியிட்டு வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கத்தில், முத்துராமலிங்க தேவரை தேர்தலில் நிறுத்த ராஜாஜி கோஷ்டியினர் முடிவு செய்தனர்.

ஆனால், காமராஜரை எதிர்த்து நிற்க முத்துராமலிங்க தேவர் சம்மதிக்கவில்லை. அதனால் காமராஜருக்கு வேண்டப்பட்ட சா.கணேசனை தாஜா செய்து போட்டி வேட்பாளராக நிறுத்தினார்கள்.

சா.கணேசன் போட்டியிலிருந்து பின்வாங்கிவிடுவார் என்று கருதப்பட்ட சூழலிலும் எதிர்த்து நின்றார். சா.கணேசனை ராஜாஜி கோஷ்டியினர் முழுமையாக ஆதரித்து வேலை செய்தனர். தேர்தல் நடந்தது. 62 ஓட்டு வித்தியாசத்தில் காமராஜர் மீண்டும் வெற்றி பெற்றார்.

வெற்றி பெற்ற நேரத்தில் ராஜாஜியை சந்தித்த காமராஜர் வெளிப்படையாகவே, "என்னை எதிர்த்து சா.கணேசனால் ஜெயிக்க முடியாது என்று தெரிந்தும் ஏன் நிறுத்தினீர்கள்?" எனக் கேட்டார்.

அதற்கு ராஜாஜி கொஞ்சமும் சளைக்காமல், "உங்களை எதிர்த்துப் போட்டியிட வேறு ஆட்கள் யாருமே கிடைக்கவில்லை. அதனால்தான் சா.கணேசனை நிறுத்தினோம். சா.கணேசனுக்கு இந்தத் தேர்தலால் என்ன நஷ்டம் வந்துவிடப் போகிறது? ஜெயித்தால் லாபம்... தோல்வி அடைந்தால் நஷ்டம் எதுவும் இல்லையே!" என்றார்.

பிரகாசம் மந்திரி சபை!

பிரகாசம் வெற்றி பெற்றதால், "அவருக்கு ஆதரவு தர வேண்டாம். ஒத்துழைக்க வேண்டாம்" என்று பலர் காமராஜரை கேட்டுக் கொண்டார்கள். ஆனால், காமராஜர், "தேர்தல் நடந்து, ஓட்டெடுப்பும் சட்டப்படி நடந்து முடிந்துவிட்டது. இனியும் குழப்பமும் சிக்கலும் இருப்பது காங்கிரஸ் கட்சிக்கு நல்லது அல்ல" என்று உறுதிபட பதில்

https://t.me/tamilpdfebooks

அளித்தார் காமராஜர்.

ஆனால், காமராஜரை மீறி வெற்றிபெற்று விட்டதால் அவரது சொற்களைக் கேட்க வேண்டியதில்லை என்றே நடந்துகொண்டார் பிரகாசம்.

அன்று நினைத்திருந்தால் காமராஜர் மந்திரியாகி இருக்க முடியும். ஆனால், அதைப்பற்றி கொஞ்சமும் யோசனை செய்யாமல், "மாதவ மேனனை மந்திரி சபையில் சேர்த்துக் கொள்ளுங்கள்" என்று பிரகாசத்திடம் வேண்டுகோள் வைத்தார். அதை பிரகாசம் ஏற்றுக்கொள்ளவில்லை. வேண்டுமென்றே ராஜாஜி கோஷ்டியைச் சேர்ந்த ராகவ மேனனை மந்திரியாக்கினார்.

கொஞ்ச நாட்களிலேயே பிரகாசம் மந்திரிசபை ஆட்டம் கண்டது. பிரகாசத்தின் மீது நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வர வேண்டும் என்று வேலை செய்யப்பட்டது.

ஆனால், உடனடியாக முதல்வரை மாற்றுவதில் காமராஜருக்கு விருப்பம் இல்லை. அதனால் "இன்னும் சில நாட்களில் சட்டசபைக் கட்சித் தலைமைக்குத் தேர்தல் நடக்கப் போகிறது. அந்த சமயத்தில் வேண்டுமென்றால், பிரகாசத்தை நீக்கிவிட்டு வேறொருவரை அமர வைக்கலாம்" என்று சொன்னார்.

ஆனால், அது வரை பொறுக்காதவர்கள், டெல்லியில் உள்ள ராஜாஜி வீட்டில் ஒன்றுகூடி ஆலோசனை செய்தார்கள். பிரகாசத்தின் மீது நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வருவது என்றும், அடுத்து ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாரை பதவியில் அமர வைப்பது என்றும் திட்டம் தீட்டினார்கள்.

தகவல் அறிந்ததும் சமரசப் பேச்சு நடத்துவதற்காக ஆசாரிய கிருபளானி டெல்லியிலிருந்து சென்னைக்கு வந்தார். அது வரை காமராஜரைக் கண்டுகொள்ளாமல் இருந்த பிரகாசம் உடனே ஓடோடி வந்து, "யாரை வேண்டும் என்றாலும் மந்திரி ஆக்கிக்கொள்ளுங்கள்... நானே முதல் அமைச்சராக இருக்கிறேன்" என்று கேட்டுக்கொண்டார். கிருபளானியின் சமாதானம் மற்றும் பிரகாசத்தின் மன மாற்றத்தால், மற்றவர்களுடைய நம்பிக்கை இல்லா தீர்மானத்தை கிடப்பில் போட முடிவெடுத்தார்கள்.

ஆனால், பிரகாசத்தின் பதவி ஆசையை வெறுத்தார் காமராஜர். அதனால் அவரிடம், "இப்போது புதிய முதல்வரை தேர்தெடுக்கத்தான் போகிறோம், நீங்கள் இந்த நேரத்தில் எங்களுக்கு வேண்டப்பட்டவர்களை எல்லாம் மந்திரி சபையில் சேர்த்துக்கொள்கிறேன் என்கிறீர்களே... முதலில் நீங்கள் வெளியே போங்கள்" என்று சீறினார். இந்த சீற்றத்தைக் கண்டு மிரண்டு வெளியேறினார் பிரகாசம்.

1947, மார்ச் மாதம் நடந்த சட்டசபை காங்கிரஸ் கட்சித் தலைமைத் தேர்தலில் காமராஜரின் ஆதரவுடன் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழ்நாட்டின் முதல்வரானார்.

https://t.me/tamilpdfebooks

ஆனந்த சுதந்திரம்...

குடும்பத்தை மறந்து, தனக்கென்று ஒரு குடும்பத்தை அமைத்துக் கொள்ளாமல், சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு, ஜெயிலில் ஒன்பது ஆண்டுகள் வாடி, காந்திஜியின் வழியில் அகிம்சை போராளியாக வாழ்ந்த காமராஜருக்கு ஆனந்தம் தந்த ஆண்டு 1947. ஆகஸ்ட் மாதம் 14-ம் தேதி நள்ளிரவு 12 மணிக்கு கிடைத்த சுதந்திரத்தை ஆனந்தக் கூத்தாடி வரவேற்றார்.

அரசு அலுவலகங்களில் பிரிட்டிஷ் யூனியன் கொடி இறக்கப்பட்டு, மூவர்ண தேசியக் கொடி ஏற்றப்படுவதைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்தார். காண்பவர்களிடம் எல்லாம் காந்திஜியின் அருமை பெருமைகளை, வாய் வலிக்கச் சொல்லிக் கொண்டே இருந்தார்.

இந்திய மக்கள் அனைவரையும் ஒன்று திரட்டிய சாதனைக்காகவும், பாமர மக்களுக்கும் சுதந்திர தாகத்தை உருவாக்கியதற்காகவும், வெள்ளையர்களை எதிர்த்து நிற்கும் சக்தியை இந்திய மக்களுக்குக் கொடுத்ததற்காகவும், சுதந்திரம் பெற்றுத் தந்ததற்காகவும் காந்திஜியை வாயாரப் புகழ்ந்தார்.

சுதந்திரம் பெற்றதுடன் கடமை முடிந்துவிடவில்லை என்பதையும் காமராஜர் உணர்ந்தே இருந்தார்.

நாட்டில் கோடிக்கணக்கான மக்கள் வயிறார சாப்பிட உணவு இல்லாமல் இருக்கிறார்கள். உடுத்துவதற்கு துணி இல்லை. மக்கள் சென்று, வருவதற்கு ரோடு இல்லை. குடிக்கத் தண்ணீர் இல்லை. மின்சார வசதி இல்லை. இவை எல்லாம் மக்களுக்குக் கிடைத்தே ஆக வேண்டும். இவற்றை எல்லாம் பெற்றுத் தர வேண்டிய கடமை காங்கிரஸ் கட்சிக்கு இருப்பதை உரத்துப் பேசினார்.

பட்டாபி சீதாராமையா தேர்வில் காமராஜர்

இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னர் 1948-ல் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தேர்தல் நடந்தது. இந்தத் தேர்தலில் பட்டாபி சீதாராமையாவும், தாண்டனும் போட்டியிட்டனர். அப்போது நேருவின் கொள்கைகளை தாண்டன் வெளிப்படையாக எதிர்த்தார். அதனால் காமராஜர் முழுமூச்சுடன் பட்டாபிக்கு ஆதரவு தெரிவித்து, அவர் வெற்றிபெற அரும்பாடுபட்டார். கடுமையான போட்டியைத் தாண்டி, பட்டாபி சீதாராமையா வெற்றிபெற்றார் என்றால் அதற்குக் காரணம் காமராஜர் தேடி, திரட்டிய பெரும் ஆதரவுதான். இதன் மூலம் நேருவுக்கும் பிரியமானவராக மாறினார் காமராஜர். காந்திஜியின் விருப்பமும் பட்டாபியின் தேர்வு என்பதால், இந்த வெற்றியால் ஆனந்தப்பட்டார் காமராஜர்.

ஒளி மறைந்தது... கண்ணீர் பெருகியது

1948, ஜனவரி 30-ம் தேதி. ஆற்காட்டில் சிறுவர் பூங்கா ஒன்றைத் திறந்து வைக்கும் நிகழ்ச்சியில் இருந்தார் காமராஜர். விழா நல்லபடியாக முடிந்து, உணவு அருந்த உட்கார்ந்தனர். அப்போதுதான் பேரிடியாக அந்தச் செய்தி வந்து சேர்ந்தது.

https://t.me/tamilpdfebooks

ஆம், அண்ணல் காந்தியடிகள் சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற அதிர்ச்சிச் செய்தி கிடைத்தது. கையால் தொட்ட உணவை அப்படியே வைத்துவிட்டு எழுந்தார். கண்களில் கண்ணீர் வழிந்தது. யாரிடமும் எதுவும் பேச மனம் இன்றி கலங்கிப் போனார். உடனே தகவல் கேட்டறிந்தார். நடந்தது அப்படியே சொல்லப்பட்டது.

டெல்லியில் பிரார்த்தனைக்கு வழக்கத்தைவிட பத்து நிமிடங்கள் தாமதமாகவே அவசரமாகக் கிளம்பினார் காந்திஜி. ஆபாகாந்தி, மனுகாந்தி ஆகியோரின் தோள்களைப் பற்றிக்கொண்டு, சாய்ந்து, சிரித்தபடியே மேடையை நோக்கி வந்தார்.

பிரார்த்தனைக் கூட்டத்தில் இருந்தவர்கள், காந்திஜியை நமஸ்கரித்து வழிவிட்டனர். அப்போது இடது பக்கக் கூட்டத்திலிருந்து பாதையின் குறுக்கே வந்தான் ஒருவன். பாதங்களைத் தொட்டுக் கும்பிட வருகிறான் என நினைத்து, அவன் கையைப் பிடித்து தடுக்க முயன்றார் மனுகாந்தி. ஏனென்றால் யாரும் காலில் விழுவது காந்திஜிக்குப் பிடிக்காது. ஆனால், அவன், தடுக்க வந்த மனுகாந்தியை தள்ளிவிட்டதும், அவள் கையில் இருந்த புத்தகம், ஜபமாலை ஆகியவை தூர விழுந்தன. அவற்றை எடுக்க மனுகாந்தி குனிந்தார். வந்தவன் மிகச் சரியாக காந்திஜிக்கு இரண்டடி தூரத்தில் நின்றபடி, தன் கைத்துப்பாக்கியால் மூன்று முறை சுட்டான்.

காந்திஜியுடன் நேரு, வல்லபாய் பட்டேல்

ஒரு குண்டு பாய்ந்ததும் காந்திஜியின் கால்கள் தடுமாறின. வணங்கியபடி வந்த கைகள் தொங்கின. இரண்டாவது குண்டு பாய்ந்ததும், 'ஹே ராம்' என்று இரு முறை கூறினார். முகம் வெளுத்தது, ரத்தம் பீறிட்டு ஆடைகளில் வழிந்தது. மூன்றாவது குண்டு பாய்ந்ததும் கீழே சரிந்தார், மூக்குக் கண்ணாடி கீழே விழுந்தது; செருப்புகள் நழுவின. காந்திஜி மிகச் சரியாக 5.17 மணிக்கு அமரர் ஆனார். இரண்டு குண்டுகள் மார்பிலும், ஒரு குண்டு இதயத்திலும் பாய்ந்தன. நேருஜி, பட்டேல் ஆகியோர் ஓடோடி வந்தனர். தேசப் பிதாவின் அருகே முழந்தாளிட்டு ரத்தத்தைப் பார்த்து அழுதனர்.

நாடு எங்கும் மரண ஓலம் கேட்டது. தான் அநாதையாகி விட்டதைப் போல உணர்ந்தார் காமராஜர். அவரைத் தேற்ற யாராலும் இயலவில்லை. எதற்கும் கலங்காத இரும்பு இதயம், காந்திஜியின்

https://t.me/tamilpdfebooks

மறைவால் கதறி அழுதது. காமராஜர் அழுதது அப்போது மட்டும்தான்.

நாடு எங்கும் கலவரம் பரவுவதைக் கேள்விப்பட்டதும் பதறினார். தமிழகத்தில் எந்த பாதிப்பும் ஏற்பட்டுவிடக்கூடாது என நினைத்தார். மதவாத சக்திகள் தமிழகத்தில் கால் வைத்துவிடாதவாறு கட்டிக்காத்தார். தன் சோகம் பிறரையும் பாதித்துவிடக்கூடாது என்பதற்காகவே தைரியமாக உலா வந்தார்.

முதல்வராக குமாரசாமி ராஜா

ஆண்டுதோறும் சட்டசபைக் காங்கிரஸ் கட்சித் தலைமைக்கு தேர்தல் நடப்பது போலவே 1949-ம் ஆண்டும் அறிவிக்கப்பட்டது. ராஜாஜி கோஷ்டியினரும், பிரகாசம் கோஷ்டியினரும் சேர்ந்து ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாரைப் பதவியிலிருந்து இறக்கிவிட்டு, டாக்டர் சுப்பராயனை முதல்வராக்கும் முயற்சியில் இறங்கினார்கள். ஓமந்தூரார் செயல்பாடுகள் காமராஜருக்கும் அவ்வளவு உடன்பாடு இல்லை. அதனால் முழு மனதாக ஆதரிக்காமல் மாற்று யோசனையில் இருந்தார். பக்தவத்சலத்தை நிறுத்தலாம் என காமராஜர் ஆதரவாளர்கள் ஆசைப் பட்டார்கள்.

எது செய்வதாக இருந்தாலும், அது ராமசாமி ரெட்டியார் மனம் உவந்து செய்வதாக இருக்க வேண்டும் என்பதற்காக, குமாரசாமி ராஜா, டி.எஸ்.சொக்கலிங்கம், சி.சுப்ரமணியம் ஆகியோரை அனுப்பித் தகவல் தெரிவிக்கச் சொன்னார்.

ஆனால், ராமசாமி ரெட்டியார், "நான் கண்டிப்பாக பக்தவத்சலத்தை ஆதரிக்க மாட்டேன், வேண்டுமென்றால் குமாரசாமி ராஜாவை நிறுத்துங்கள், விலகிக்கொள்கிறேன்" என்று சொன்னார். அதன்படியே குமாரசாமி ராஜா போட்டியில் நிறுத்தப்பட்டு வெற்றி அடைந்தார். காமராஜரின் இந்த நடவடிக்கைகளை எல்லாம் ராஜாஜி கோஷ்டியினர் எதிர்பார்க்க வில்லை. அதனால் பெருத்த ஏமாற்றம் அடைந்தார்கள்.

அதன் விளைவாக, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தேர்தலில் காமராஜரைத் தோற்கடிக்க வேண்டும் என ராஜாஜி விருப்பப்பட்டு, அதை காமராஜரிடமே சொல்லவும் செய்தார். தலைவர் பதவிக்கு சி.பி.சுப்பையாவைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற தன் ஆசையைத் தெரிவித்தார்.

காமராஜர் அதற்கு ஆட்சேபம் எதுவும் தெரிவிக்கவில்லை. அதனால் சி.பி.சுப்பையா தீவிரமாக ஆதரவு திரட்டினார். காமராஜர் இதைக் கண்டுகொள்ளவில்லை என்றாலும், அவரது ஆதரவாளர்கள் ஆத்திரம் அடைந்தார்கள். காமராஜர் கண்டிப்பாகப் போட்டியிட வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள்.

ஆகஸ்ட் 29-ம் தேதி தேர்தல் நடந்தது. காமராஜர் தீவிரமாக ஆதரவு திரட்டாமலேயே வேட்பாளராக நின்றார். ஆனாலும் காமராஜருக்கு 155 ஓட்டுகள் கிடைத்தன. சி.பி.சுப்பையாவுக்கு 99 ஓட்டுகள் மட்டுமே கிடைத்தன. மீண்டும் காமராஜர் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரானார்.

அஞ்சா நெஞ்சர்

https://t.me/tamilpdfebooks

காங்கிரஸ் கட்சி சார்பில், 1949-ல், திருச்சி நகர மண்டபத்தின் முன்னால் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடந்தது. மற்ற தலைவர்கள் பேசி முடித்தபின் காமராஜர் பேசினார் அன்றைய எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் காமராஜர் பேச்சின் போது குழப்பம் உருவாக்கி, காமராஜருக்கு ஆபத்தை விளைவிக்க நினைத்தார்கள். அதனால் வெங்காய வெடிகளை மேடையை நோக்கி வீசினார்கள். அவை காமராஜர் மேல் படாமல், சுற்றிலும் விழுந்து வெடித்தது. கூட்டத்தினர் கலைந்து ஓடினார்கள்.

"யாரும் ஓடாதீங்க... பயப்படாம நில்லுங்க... கூட்டத்தில் குழப்பம் விளைவிக்க நினைத்தால் வெடியால் இந்த மாதிரி அடிப்பதால் பயன் இல்லை. வீரம் இருந்தால் என் நெஞ்சிலே துப்பாக்கியால் சுடுங்கள். காந்தியடிகளை கோட்சே சுட்டுக் கொன்றான். அவர் அமரர் ஆனதைப் போல பெருமை எனக்கும் கிடைக்கட்டும். வீர பரம்பரையில் வந்தவர்கள் வியாதியால் கஷ்டப்பட்டு இறந்தார்கள் என்பதில் பெருமை கிடையாது. க்ஷத்திரிய குலத்தில் பிறந்தவர்கள் யாருக்கும் பயப்படுவது இல்லை" என்று அஞ்சாமல் காமராஜர் பேசியதைக் கேட்டு கூட்டம் கலையாமல் அப்படியே கட்டுண்டு நின்றது.

காந்திஜியின் பக்தராக இருந்ததால், 'வடக்கே காந்திஜி... தெற்கே காமராஜர்' என்று மக்கள் கூறினார்கள்.

அதிகம் பேசும் பழக்கம் எப்போதும் காமராஜரிடம் கிடையாது. வாதம் புரிய மாட்டார். கேட்கும் கேள்விகளுக்கு வழவழா என்று பதில் சொல்லாமல், நறுக்குத் தெறித்தாற்போல் பதில் சொல்வார். அவரே நினைத்தால் தவிர அவரிடம் இருந்து ஒரு கருத்தை வாங்கிவிட முடியாது. அவரது முகபாவங்களில் இருந்தும் எதையும் கண்டுகொள்ள முடியாது. எந்த விஷயமாக இருந்தாலும் சுருக்கமாக, 'யோசிக்கலாம்... பார்க்கலாம்... ஆகட்டும் பார்க்கலாம்' என்று பதில் சொல்லியே அனுப்பிவிடுவார்.

இதே போன்று தஞ்சை மாவட்டம் தம்பிக்கோட்டை என்ற ஊருக்கு அருகே மரவக்காட்டில் ஒரு பொதுக்கூட்டம் காமராஜர் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. அவர் மேடையில் அமர்ந்த நேரத்தில் முன்பின் அறிமுகம் இல்லாத ஒரு பஸ் டிரைவர் மேடையேறி காமராஜர் காதருகே, "ஐயா, தம்பிக்கோட்டைக்கு நீங்க திரும்பிப் போகும்போது வழியை மடக்கி உங்களை அடிக்கிறதுக்கு ஆட்களை ஏற்பாடுசெஞ்சிக்கிட்டு இருக்காங்க, நீங்க தயவுசெஞ்சு ராத்திரி அந்தப் பக்கம் போயிடாதீங்க. உயிருக்கு ஆபத்தாயிடும்" என்று சொன்னார்.

"ஆகட்டும் பார்க்கலாம்" என்று சொல்லி அவரை அனுப்பி வைத்த காமராஜர், வழக்கம்போல் மற்றவர்கள் எல்லாம் பேசி முடித்ததும் பேசினார்.

பேசி முடிக்கும் தருணத்தில், "கார்ல திரும்பிப் போகும்போது என்னய அடிக்கிறதுக்காக வழியிலே ஆட்களை ஏற்பாடு செஞ்சிருக்காங்களாம். அதனால நான் கார்ல போகப்போறதில்லை. நடந்தே போகப்போறேன். எனக்குத் துணையா வர நினைக்கிறவங்க வரலாம்" என்றபடி துண்டைத் தோளில் போட்டுக்கொண்டு நடந்தார்.

https://t.me/tamilpdfebooks

காமராஜருடன் கூடியிருந்த மக்கள் அனைவருமே, "காமராஜருக்கு ஜே..." என்று கோஷமிட்டபடி நடந்துவந்தனர். வண்டி போகும் வழியில் குறுக்கே கட்டை போட்டுக் கட்டி வைத்துக் காத்திருந்தவர்கள், கூட்டமாக காமராஜர் வருவதைப் பார்த்ததும் அப்படியே தலைதெறிக்க ஓடிப் போனார்கள்.

நேருவின் மானம் காத்தார்

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினராக 1949-ல் காமராஜர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது முதல் அகில இந்திய காங்கிரஸ் கட்சியில் அசைக்க முடியாத ஒரு சக்தியாக உருமாறினார். முதன்முதலாக இந்த ஆண்டுதான் இலங்கை சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.

1950-ல் நாசிக்கில் நடந்த காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தேர்தல் நடந்தது. அந்த முறை கடுமையான போட்டி இருந்தது. நேருவுக்கு எதிர் கருத்துகளைக் கூறிவந்த புருஷோத்தம் தாஸ் தாண்டன் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட ஆசாரிய கிருபளானியைவிட அதிக ஓட்டு வாங்கி வெற்றி பெற்றார்.

எல்லோரும் எதிர்பார்த்தது போலவே நேருஜியின் மந்திரிசபையைக் கடுமையாக விமர்சித்தார் தாண்டன். அதனால் நேருவுக்குப் பிடிக்காத ஆட்களை எல்லாம் காரிய கமிட்டியில் நியமித்தார். இதனால் நேரு ஆவேசமாகி, காரிய கமிட்டி பதவியிலிருந்து விலகினார். இருவருக்கும் எப்போதும் ஏழாம் பொருத்தமாகவே இருந்தது.

இந்த நிலை நீடிப்பது நாட்டுக்கும், வர இருந்த தேர்தலுக்கும் நல்லது அல்ல என்பது காங்கிரஸ் அபிமானிகள் கருத்து. குறிப்பாக நேருஜியின் கரங்களை வலுப்படுத்த காமராஜர் விரும்பினார். 1951, செப்டம்பர் மாதம் நடந்த காங்கிரஸ் காரிய கமிட்டிக் கூட்டத்தில் இதை சாதித்தும் காட்டினார். நேருவின் கரங்களை வலுப்படுத்துவதற்காக தமிழக, கேரள, ஆந்திர, கர்நாடக உறுப்பினர்களிடம் நேருவுக்காகத் தீவிர ஆதரவு திரட்டினார்.

https://t.me/tamilpdfebooks

தமிழகத்தில் நேருஜிக்கு வரவேற்பு

இதை அறிந்த தாண்டன், இனியும் பதவியில் நீடிக்க முடியாததை உணர்ந்து ராஜினாமா செய்தார். அதனால் நேருஜி அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக ஆனார். தமிழகம் மட்டுமே அறிந்தவராக இருந்த காமராஜர், இந்த நிகழ்ச்சியின் மூலம் அகில இந்தியத் தலைவர்கள் அனைவரும் அறிந்தவரானார். தமிழகத்தில் ராஜாஜியை மட்டுமே அறிந்திருந்த காங்கிரஸ் மேல் மட்டத் தலைவர்கள் அனைவருமே, இந்த சம்பவத்துக்குப் பின் காமராஜரை அகில இந்தியத் தலைவராகவே பார்த்தார்கள்.

https://t.me/tamilpdfebooks

5

தேடி வந்த பதவி 1952-1956

தமிழகத்தில் 1951-ல் பருவ மழை தவறியதால் 1952-ம் ஆண்டு பஞ்சத்துடன் தொடங்கியது. எதிர்க் கட்சிகள் போராட்டம் நடத்தின. ஊரெங்கும் கஞ்சித் தொட்டி திறக்க வேண்டும், நிலங்களுக்கு நில வரியை ரத்து செய்ய வேண்டும் என்பதைப் போன்ற கோரிக்கைகள் வலுப்பெற்றன. ஆனால், குமாரசாமி ராஜா மந்திரிசபை இந்த விஷயங்களைத் திறம்பட கையாள வில்லை.

சுதந்திரம் அடைந்ததும் நாட்டில் பாலும் தேனும் ஆறாக ஓடும் என்று கனவு கண்ட இந்தியர்கள், பஞ்சத்தால் வெறுப்படைந்தார்கள், வேதனைப்பட்டார்கள். 1951-ம் ஆண்டிலேயே இந்தியக் குடியரசு அரசியல் நிர்ணய சபை நிறுவப்பட்டுவிட்டாலும், நிர்வாகக் காரணங்களால் 1952, ஜனவரி மாதம் பொதுத்தேர்தல் நடந்தது.

அது வரை நடந்த தேர்தல்களில் நில வரி, வீட்டு வரி கட்டியவர்கள் மட்டுமே ஓட்டுப் போட முடியும் என்ற நிலை இருந்து வந்தது. ஆனால், அந்தத் தேர்தலில் 21 வயது நிறைந்த அனைவரும் வாக்கு அளிக்கும் நிலை வந்தது.

https://t.me/tamilpdfebooks



1952-ல் சென்னை சட்டமன்றத்தில் மொத்தம் 375 உறுப்பினர்கள் என நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. ஒரு லட்சத்துக்கு மிகுந்த வாக்காளர்களைக் கொண்ட தொகுதிகளுக்கு இரண்டு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பொதுப் பட்டியல் மற்றும் தனிப் பட்டியல் என இரு பட்டியல்களுக்கும் தனித்தனியே இரு முறை வாக்களிக்க வேண்டி இருந்தது.

பஞ்சத்தாலும், உட்கட்சிப் பூசலாலும் காங்கிரஸ் கட்சியின் மீது பொதுமக்களுக்கு அதிருப்தி நிலவியது. அது வரை ஆட்சியாளர்களுக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடி வந்த கம்யூனிஸ்ட் கட்சி, வன்முறையைக் கைவிட்டுவிட்டு பொதுத் தேர்தலில் குதிக்க முடிவுசெய்ததால் முக்கிய எதிர்க்கட்சியானது.

பெரியார் ஈ.வெ.ராமசாமியின் திராவிடர் கழகம் போட்டியிடவில்லை. திராவிடர் கழகத்திலிருந்து 1949-ல் பிரிந்து வந்த அண்ணாதுரையின் திராவிட முன்னேற்றக் கழகம் அந்தத் தேர்தலில் நேரடியாகப் போட்டியிடவில்லை. தனி திராவிட நாடு கொள்கையில் உறுதியாக இருந்ததால், அந்தக் கொள்கைக்கு ஆதரவளித்த கட்சிக்கே ஆதரவு என்று அறிவித்து, பல்வேறு சுயேச்சைகளுக்கு ஆதரவு அளித்தது. பெரியாரின் தலைமையை ஏற்காமல் திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்த பி.டி.ராஜனின் நீதிக்கட்சி, முத்துராமலிங்க தேவரின் ஃபார்வர்டு ப்ளாக் போன்றவை முக்கிய கட்சிகளாகக் களத்தில் இருந்தன.

காங்கிரஸுக்குப் பின்னடைவு

வாக்குப் பதிவு ஜனவரி 2 முதல் 25 வரை ஒன்பது கட்டங்களாக நடந்தது. இந்தத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி 152 இடங்களையும், கம்யூனிஸ்ட் கட்சி 62 இடங்களையும் பிடித்தன. சுயேச்சை மற்றும் பல கட்சிகள் இணைந்து 161 இடங்களைக் கைப்பற்றவே காங்கிரஸ் பெரும்பான்மை பெறவில்லை. முதல்வர் குமாரசாமி ராஜா உட்பட ஆறு

https://t.me/tamilpdfebooks

அமைச்சர்கள் தேர்தலில் தோற்றுப் போனார்கள்.

இதே நேரத்தில் நாடாளுமன்றத் தேர்தலும் நடந்தது. சென்னை மாநிலத்தில் மொத்தம் 62 நாடாளுமன்றத் தொகுதிகள் இருந்தன. அதில் 49 தொகுதிகள் 'ஓர் உறுப்பினர்' தொகுதிகளாகவும், மீதம் உள்ளவை இரண்டு உறுப்பினர் தொகுதிகளாகவும் இருந்தன. இதில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி 35 தொகுதிகளில் வெற்றி பெற்றது. கம்யூனிஸ்ட் கட்சி 8 இடங்களைப் பெற்றது, மற்ற தொகுதிகளைப் பிற கட்சிகளும், சுயேச்சைகளும் பெற்றனர்.

சாத்தூர் தொகுதியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் காமராஜர். ஆனால், சட்டமன்றத் தோல்வியால் அந்த வெற்றியை அனுபவிக்க முடியவில்லை. காங்கிரஸ் கட்சிக்கு மெஜாரிட்டி கிடைக்காததால், தோல்விக்கு காரணமேற்று, காமராஜர் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பதவியை ராஜினாமா செய்தார். காமராஜரின் ராஜினாமாவால் 1952, ஏப்ரல் 30-ம் தேதி தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பதவிக்கு தேர்தல் நடந்தது. குமாரசாமி ராஜா தலைவராக வேண்டும் என்று ராஜாஜி விரும்பினார். ஆனால், காமராஜர் விருப்பப்படி சுப்பராயன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சட்டசபை எதிர்க் கட்சிகள் எல்லாம் ஒன்றுகூடி பிரகாசத்தைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். ஆனால், அப்போதைய ஆளுநர் ஸ்ரீபிரகாசாவும், மத்தியில் ஆண்ட காங்கிரஸ் கட்சியும் கம்யூனிஸ்ட் ஆதரவுடன் ஆட்சி அமைப்பதை விரும்பவில்லை.

காங்கிரஸ் கட்சித் தலைமையில் எப்படியாவது ஆட்சியை அமைக்க வேண்டும் என்று காங்கிரஸ் தலைமை விரும்பியது. ஆனால், காமராஜருக்கு இதில் கொஞ்சமும் உடன்பாடு இல்லை. எதிர்க் கட்சியாக இருக்க வேண்டும் என்று விரும்பினார். ஆளும் கூட்டணி ஒற்றுமையாக இருக்க மாட்டார்கள், விரைவில் உடைந்துவிடுவார்கள். அதன்பின் ஆட்சி அமைக்கலாம் என்று கருதினார்.

ஆனால், டி.டி.கிருஷ்ணமாச்சாரி, ராம்நாத் கோயங்கா ஆகியோரின் வற்புறுத்தலால் இந்த ஏற்பாட்டுக்கு ஒப்புக்கொண்டார். அதனால் முதல்வரைத் தேர்ந்தெடுக்க 1952, மார்ச் 29-ம் தேதி, சட்டசபை காங்கிரஸ் கட்சிக் கூட்டம் நடந்தது. ராஜாஜியை முதல்வராகத் தேர்ந்தெடுப்பது என்று கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானம் குறித்து ராஜாஜியை சந்தித்து விளக்கினார்கள். உடனே, அவர் தீர்மானத்தை நேருவிடம் சொல்லி ஆலோசனை பெற்று வாருங்கள் என்று சொல்லி அனுப்பினார்.

https://t.me/tamilpdfebooks

பி.சுப்பராயன்



பி.எஸ்.குமாரசாமி ராஜா

அதன்படி நேருவை சந்தித்துப் பேசினார்கள். நேரு, "சட்டசபைக் காங்கிரஸ் கட்சிக்குத் தலைவரைத் தேர்ந்தெடுப்பது கட்சியின் கடமை; பொறுப்பு. நீங்கள் யாரைத் தேர்ந்தெடுத்தாலும் நான் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன். சட்டசபைக் காங்கிரஸ் கட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்படுபவர் சட்டசபை உறுப்பினராக இருக்க வேண்டும். அப்படி ஒருவேளை உறுப்பினராக இல்லை என்றால், விரைவில் சட்டசபைத் தேர்தலில் நின்று உறுப்பினராக வேண்டும்" என்று சொன்னார்.

நேருவின் ஒப்புதல் கிடைத்ததும் மார்ச் 31-ம் தேதி சட்டசபை காங்கிரஸ் கட்சிக் கூட்டம் நடந்தது. தலைவர் பதவிக்கு ராஜாஜி பெயரை காமராஜர் முன்மொழிய, சஞ்சீவரெட்டி, ஷெட்டி, குட்டியம்மாள் ஆகியோர் வழிமொழிந்தனர்.

உடனே ராஜாஜி, குமாரசாமி ராஜாவை சந்தித்துப் பேசினார். அதன்படி மேல்சபை உறுப்பினராக ராஜாஜி நியமனம் செய்யப்பட்டுவிட்டார். மேலும் எதிர்க் கட்சிக் கூட்டணியை உடைத்தும், சுயேச்சைகளை தங்கள் பக்கம் இழுத்தும் காங்கிரஸ் சட்டமன்ற பலத்தை ராஜாஜி பெருக்கினார். ஜூலை 3-ம் தேதி சட்டமன்றத்தில் 200 உறுப்பினர்களின் ஆதரவுடன் தன் பெரும்பான்மையை நிரூபித்தார்.

காமராஜர் இந்த நிலைமையை அடியோடு வெறுத்தார். நேரு சொன்னதை மறந்துவிட்டு சாதுர்யம் காட்டுவதை விரும்பவில்லை. தேர்தலில் நிற்காமல் பதவிக்கு வந்ததைப்பற்றி ராஜாஜியிடம் கேட்காமல் விடவில்லை. 14 அமைச்சர்களுடன் பதவி ஏற்றுக் கொண்டார் ராஜாஜி.

அக்டோபர் 1-ம் தேதி தெலுங்கு மொழி பேசும் பகுதிகள் சென்னை மாநிலத்திலிருந்து பிரிந்து, 'ஆந்திரம்' என்ற தனி மாநிலம் உருவானது. அதனால் சென்னை சட்டமன்றத்தின் உறுப்பினர் எண்ணிக்கை 230 ஆகக் குறைந்தது. வெளியேறிய உறுப்பினர்கள் பெரும்பாலும் காங்கிரஸ் கட்சியை சேராதவர்கள் என்பதால், காங்கிரஸ் கட்சிக்குத் தானாகவே பெரும்பான்மை பலம் ஏற்பட்டது.

https://t.me/tamilpdfebooks

மீண்டும் தலைவர்

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தேர்தல் 1952, டிசம்பர் 26-ம் தேதி மீண்டும் நடந்தது. முதல்வராக இருந்த ராஜாஜி கட்சிப் பொறுப்பிலும் தன் அதிகாரத்தைக் காட்ட நினைத்தார். அதனால் பக்தவத்சலம் தலைவராக வர வேண்டும் என்று ராஜாஜி சொல்லி அனுப்பினார். இது காமராஜருக்குப் பிடிக்கவில்லை. அதனால் தானே தேர்தலில் நிற்பது என்று முடிவெடுத்தார். காமராஜர் நிற்கப்போவதாக அறிவித்ததும், ராஜாஜி கூட்டத்துக்கே வரவில்லை. காமராஜர் பெயர் முன்மொழியப்பட்டது. வேறு யாருமே போட்டியிட முன்வராததால், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக காமராஜர் மீண்டும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

நேருவின் தோழர்

பிரதமர் நேருவுக்கு என்னென்ன சிக்கல்கள், தொந்தரவுகள் வந்தாலும் அதைத் தீர்ப்பதில் காமராஜர் முதல் மனிதராக இருந்தார்.

எதேச்சையாகக் காரிய கமிட்டிக் கூட்டத்துக்காக டெல்லி சென்றிருந்த காமராஜர், நேருவின் முகத்தைப் பார்த்தபோது பெரும் சோர்வு தென்பட்டதை கவனித்து ‘உடம்புக்கு சரியில்லையா?’ என்று கேட்டார். ஆனால், காமராஜரிடம் எதையும் சொல்லும் மனநிலையில் இல்லாத நேரு, "இல்லை சரியாகத் தூங்காததால் ஏற்பட்ட சோர்வு" என்று சொன்னார். ஆனால், காமராஜர் விடாமல் தொடர்ந்து உண்மையைச் சொல்லும்படி கேட்கவே வேறு வழி இன்றி பேசினார்.

https://t.me/tamilpdfebooks



நேருவின் தோழராக...

எந்த நாட்டுடனும் ராணுவ உடன்பாடு கொள்வதில் நேருவுக்கு விருப்பம் இல்லை. அணிசேரா நாடுகள் ஒன்று சேர்ந்து போரைத் தவிர்க்க வேண்டும் என்பதுதான் நேருவின் உயர்ந்த எண்ணம். ஆனால், அப்போது ராணுவ தலைமைத் தளபதியாக இருந்தவர் நேருவின் கருத்துக்கு எதிர்க் கருத்துக் கொண்டவர். தனது கொள்கையை நிலைநிறுத்த எதையும் செய்யத் துணிந்தவராகவும் இருந்தார். "ராணுவப் புரட்சி செய்யவும் தயாராக இருப்பதாகத் தெரிகிறது" என்றார் நேரு.

நேரு சொன்னதைக் கேட்டதும் கொஞ்சமும் யோசிக்காத காமராஜர், "அதனால என்ன? ராணுவ தளபதியை மூணு மாசம் வெளிநாட்டுச் சுற்றுப்பயணம் அனுப்புங்க" என்றார்.

"வெளிநாட்டுக்கு அனுப்பினா, இப்போதைக்குப் பிரச்னை தீரும். ஆனா அவர் வந்த பின்னரும் இதே பிரச்னை மீண்டும் வரத்தானே செய்யும்?"

காமராஜர் அமைதியாக, "அவருக்குப் பதவி உயர்வு கொடுத்து அனுப்புங்கள். அவர் திரும்பி வருவதற்கு முன்னர் முப்படைகளையும் தனித்தனியாகப் பிரித்து, தனித்தனி தளபதிகளை நியமித்துவிடுங்கள்" என்றார்.

காமராஜர் இப்படிச் சொன்னதுதான் தாமதம். நேருவின் முகத்தில் பிரகாசம் ஏற்பட்டது. ‘இந்த யோசனை எனக்குத் தோன்றவே

https://t.me/tamilpdfebooks

இல்லையே' என்று காமராஜரைக் கட்டித் தழுவிக் கொண்டார். தன்னுடைய பிரச்னைக்கு நல்ல தீர்வு தந்த காமராஜரை அன்று முதல் உற்ற நண்பராக ஏற்றுக் கொண்டார்.

காமராஜருக்கு எப்படியாவது தனது நன்றியைத் தெரிவிக்க ஆசைப்பட்ட நேரு, தனது பங்களாவில் ஆசை ஆசையாக வளர்த்து வந்த ஒரு புலிக் குட்டியை காமராஜருக்குப் பரிசாக வழங்கினார்.

காமராஜர் மறுக்காமல் வாங்கிக்கொண்டார். ஆனால், சொந்த உறவுகளே தனக்கு பாரம் என்று நினைப்பவர் ஆயிற்றே காமராஜர், அதனால் அந்தப் புலிக்குட்டியை சென்னைக்குக்கூட கொண்டு வராமல், டெல்லி மிருகக்காட்சிசாலைக்கு தன்னுடைய பரிசாகக் கொடுத்துவிட்டார்.

டெல்லிக்குப் போகும்போது நேருவுக்குப் பிடித்த அல்போன்சா மாம்பழங்களை வாங்கிக்கொண்டு செல்வார். அதைப் போலவே காமராஜர் டெல்லிக்கு வரும்போது, காஷ்மீரில் விளையும் விதை இல்லாத கொய்யாப்பழத்தை வரவழைத்து அன்புடன் தருவார் நேரு. வடக்கும் தெற்கும் சேர்ந்து ஒரு வலுவான நட்புக் கூட்டணி அமைத்தது என்றால் அது மிகையாகாது.

ராஜாஜிக்கு எதிர்ப்பு!

மனதுக்குத் தோன்றியதை எல்லாம் வெளிப்படையாகப் பேசுபவர் ராஜாஜி. காமராஜர் இந்த விஷயத்தில் நேர் எதிர். எந்த விஷயமானாலும் எவர் மனமும் புண்படாமல் கருத்து சொல்வார்.

ராஜாஜி பதவி ஏற்றதும் காங்கிரஸ் கட்சியைப்பற்றி ஒரு கருத்து வெளியிட்டார். அதாவது, "நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்து விட்டது. ஆகவே, இனி காங்கிரஸ் கட்சி அவசியம் இல்லை. காய் பழமாகிறது, பிறகு பழத்துக்கும் மரத்துக்குமான உறவு அறுந்து விடுகிறது. அதைப் போல சுயராஜ்யம் கிடைத்துவிட்டது, இனி காங்கிரஸ் கட்சி வேண்டாம்" என்றார். இந்தக் கருத்து காங்கிரஸ் தொண்டர்கள், தலைவர்கள் ஆகியோரிடையே பெரும் கொந்தளிப்பை உருவாக்கியது.

அடுத்ததாக, 'சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு இனி நிலம் கொடுக்கக் கூடாது' என்று ஓர் உத்தரவு போட்டார். அத்துடன் நில்லாமல், "நிலம் வாங்கியவர்கள் திரும்பிக் கொடுத்துவிட வேண்டும்" என்றும் சொன்னார். ராஜாஜியின் இந்த அறிக்கை தியாகிகள் மற்றும் மக்களின் வெறுப்பை சம்பாதித்தது.

இதைத் தவிர எப்போதும் வார்த்தைகளில், 'பிராமணர்... சூத்திரர்' என்று கிளறினார். நாட்டின் பொறுப்பான பதவியில் இருக்கும் ஒருவர் இப்படி ஜாதி துவேஷமாகப் பேசுவதையும் செயல்படுவதையும் மக்கள் சகித்துக்கொள்ள முடியாமல் தவித்துக்கொண்டு இருந்தார்கள்.

சென்னை திருவான்மியூரில் நடந்த சலவைத் தொழிலாளர்கள் மாநாட்டில் தலைமை தாங்கிப் பேசிய ராஜாஜி, "எல்லோரும் படிக்க ஆரம்பிச்சுட்டா வேலை வாய்ப்பு எங்கே இருக்கு? அதனால நீங்க உங்க தொழிலை சிறப்பா செய்யுங்க... துணியைக் கிழிக்காம துவைக்கக்

https://t.me/tamilpdfebooks

கத்துக்கோங்க!" என்று பேசியதும் பெரும் கிளர்ச்சி உருவானது. கட்சியின் நிர்வாகிகள்கூட, அவரிடம் தங்கள் கருத்துகளைச் சொல்லமுடியாத நிலையில் இருந்தார்கள்.

குலக் கல்வித் திட்டம்

அந்த நேரம் யாரும் எதிர்பாராத வண்ணம், குலக் கல்வித் திட்டம் என்ற புதிய ஆரம்பக் கல்வித் திட்டம் ஒன்றை வெளியிட்டார் ராஜாஜி. சிறுவர் சிறுமியர் முழு நேரம் படிப்பதற்குப் பதில், அரை வேளை படித்தல், அரை வேளை குலத் தொழில் கற்றல் என்று பள்ளிக் கல்வியில் புதுமை புகுத்தினார். நகரங்களில் இந்தத் திட்டத்தை முதலில் புகுத்தினால் எதிர்ப்பும் கிளர்ச்சியும் வெடிக்கலாம், ஆனால், நாட்டுப் புறங்களில் செயல்படுத்தினால் மக்கள் வேறு வழி இன்றி பொறுத்துக் கொள்வார்கள் என்று கணக்குப் போட்டார் ராஜாஜி. எனவே, குலக் கல்வித் திட்டத்தை நாட்டுப்புறப் பள்ளிகளில் முதலில் நடைமுறைப்படுத்தும்படி, அப்போதைய பொதுக் கல்வி இயக்குநர் கோவிந்தராஜுலுவிடம் கூறினார்.

இயக்குநர், இந்தக் கல்வி முறையில் இருக்கும் சிக்கல்களை மனதில் கொண்டு மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல், பல நாட்களைக் கழித்தார்.

பின்னர் ஒரு நாள் மாலை, "அரை வேளைப் படிப்பு முறையை நடைமுறைப்படுத்த, நீங்கள் தயங்குவதாகத் தெரிகிறது. அப்படியானால், நான் பொது வாழ்க்கைப் பிரமுகர் ஒருவரைத் தனி அலுவலராகப் போட்டு, நடைமுறைபடுத்தும் பணியை அவரிடம் ஒப்படைக்கட்டுமா? உங்கள் நிர்வாகத்தில் தலையிடாமல் செயல்படும்படி அவருக்கு ஆணை பிறப்பிக்கட்டுமா?" என்று அதிரடியாக கேட்டார்.

அதற்கு இயக்குநர், "அரசு, அரை வேளைப் படிப்புதான் கொடுப்பது என்று முடிவு செய்துவிட்டால் அதை நிறைவேற்றுவது இயக்குநர் கடமை. அப்படி இருக்க, அதற்குத் தனி அலுவலர் தேவை இல்லை. தாங்கள் ஆணையிட்டால், நாட்டுப்புறத் தொடக்கப் பள்ளிகளில், அரை வேளையே பாடம் சொல்லிக் கொடுக்கும்படி ஆணையிட்டுவிடுகிறேன்" என்றார்.

"உடனே சுற்றறிக்கை மூலமாக அரை வேளை படிப்புத் திட்டத்தை ஆணையிட்டுவிடுங்கள். அப்புறம் அரசுக்குத் தெரிவியுங்கள். அரசின் முன் ஒப்புதலுக்கு அனுப்பினால், அந்தக் கோப்பு இங்கும் அங்கும் போய்க்கொண்டு இருக்கும்; முடிவு எடுக்க நாளாகும்" என்று முதலமைச்சர் ராஜாஜி கூறினார்.

இயக்குநர், மாலை ஐந்தரை மணிக்கு மேல் உட்கார்ந்து, புதிய கல்வி முறைக்கான சுற்றறிக்கையை ஆயத்தம் செய்து இரவோடு இரவாகப் படிகள் எடுத்து, கல்வித் துறை அலுவலர், ஆய்வாளர், அதிகாரி ஆகியோருக்கு அனுப்ப ஏற்பாடு செய்தார். இரவு பத்து மணி வாக்கில், சுற்றறிக்கை நாளிதழ்களுக்குக் கிடைத்தது. அடுத்த நாள் காலைச் செய்தித்தாள்களில் புதிய கல்வி முறையைப்பற்றிய செய்தி பரபரப்பாக

https://t.me/tamilpdfebooks

வெளியானது.

அப்போது, காமராஜர் விருதுநகரில் தங்கியிருந்தார். அன்று மாலை, அங்கு நடந்த காங்கிரஸ் பொதுக்கூட்டத்தில் பேசிய காமராஜர், குலக் கல்வித் திட்டத்தை 'பைத்தியக்காரத் திட்டம்' என்று வெளிப்படையாகவே கருத்துத் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் முன்னர் கல்வி மந்திரியைக் கலந்து ஆலோசிக்கவில்லை. மந்திரிசபைக் கூட்டத்தில் ஆலோசிக்கவில்லை. காங்கிரஸ் கட்சித் தலைவர்களைக் கலந்து பேசாததால் கட்சிக்காரர்கள் அதிருப்தி அடைந்தார்கள்.

தன்னிச்சையாக திடீரென்று குலக் கல்வித் திட்டத்தைக் கொண்டுவந்ததை மக்கள் அனைவரும் கடுமையாக எதிர்த்தனர். யாரைக் கேட்டு இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தீர்கள் என்று காங்கிரஸ் தலைவர்கள் ராஜாஜியிடம் கேள்வி கேட்டார்கள். அதற்கு ராஜாஜி, "சங்கரரும் ராமானுஜரும் தங்கள் கொள்கைகளை வெளியிடும் முன்னர் மற்றவர்களிடம் கலந்து ஆலோசித்தா வெளியிட்டார்கள்?" என்று பதில் சொன்னார். ராஜாஜி சொன்ன பதில் சூடான விவாதமாக மாறி நாடெங்கும் பற்றி எரிந்தது.

இதனால் பள்ளிகளில் படிக்கும் மாணவர் எண்ணிக்கை மளமளவெனக் குறைந்தது. மாணவர் எண்ணிக்கை குறைந்ததால், நிதி நிலைமை சிக்கலானது. அதைத் தொடர்ந்து நிதி நிலைமையைக் காரணம் காட்டி. சுமார் 6,000 ஆரம்பப் பள்ளிகள் தமிழ்நாடு எங்கும் இழுத்து மூடப்பட்டன.

எதிர்க் கட்சிகள், காங்கிரஸ் தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவருமே இந்தத் திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்த பின்னரும் ராஜாஜி கொண்ட கொள்கையில் பிடிவாதமாக இருந்தார். இந்தத் திட்டம் குறித்து வாக்கெடுப்பு நடத்துவோம் என்று காமராஜரிடம் காங்கிரஸ் தலைவர்கள் கோரிக்கை வைத்தபோது, "மக்களின் எதிர்ப்பைப் பார்த்து ராஜாஜியே திட்டத்தை வாபஸ் வாங்கி விடுவார்" என்று சொல்லி

https://t.me/tamilpdfebooks

அமைதிகாக்கச் சொன்னார் காமராஜர்.

இந்த நேரத்தில் மதுரையில் நடந்த ஒரு விழாவில்தான் ராஜாஜியுடன் காமராஜர் நேரடியாக, முதன்முறையாக மோதினார்.

மதுரையில் டி.வி.எஸ். கட்டடத் திறப்பு விழாவில் ராஜாஜி, காமராஜர், சி.பி.ராமசாமி ஐயர் ஆகியோர் கலந்துகொண்டனர். அந்த விழாவில் ராஜாஜி பேசியபோது, "சூத்திரன் செய்ய வேண்டிய மோட்டார் தொழிலை டி.வி.சுந்தரம் ஐயங்கார் சிறப்பாகச் செய்து வருகிறார். அதற்காக அவரைப் பாராட்டுகிறேன். மேலும், வயதானதால் புத்திரர்களிடம் தொழிலை ஒப்படைத்திருக்கிறார். அதையும் பாராட்டுகிறேன்" என்று சொல்லி அமர்ந்தார்.

சூத்திரன், பிராமணன் போன்ற பேச்சுகளால் எரிச்சல்பட்ட காமராஜர், "வாலிபர்களிடம் வயோதிகர்கள் பொறுப்பை ஒப்படைப்பதைப் பற்றி ராஜாஜி பேசினார். ராஜாஜி பேசியதை நான் ஆதரிக்கிறேன். வர்த்தகத்தில் மட்டுமல்ல, ராஜ்ய நிர்வாகத்திலும் வயோதிகர்கள் இந்த முடிவை எடுக்க வேண்டும்" என்று அதிரடியாக பேசினார். ராஜாஜி பதவியைவிட்டு இறங்க வேண்டிய நேரம் வந்துவிட்டது என்பதை சூசகமாகக் குறிப்பிட்டார்.

இதற்குப் பின்னரும் காமராஜரிடம் மோதல் போக்கையே கடைப்பிடித்தார் ராஜாஜி. ஆந்திர மாநிலம் பிரிந்த பின்னர் அவரது அமைச்சரவையில் 9 மந்திரிகள் இருந்தனர். இது போதாது, கூடுதலாக மந்திரிகளை நியமிக்க வேண்டும் என்று காமராஜரிடம் ஆலோசித்தார் ராஜாஜி. ஆனால், இந்தக் கோரிக்கையை பலமாக எதிர்த்தார் காமராஜர்.

ஆனால், ராஜாஜி உடனே காங்கிரஸ் டெல்லி தலைமையை தொடர்பு கொண்டு, 'நிர்வாகம் சீராக நடைபெற வேண்டும் என்றால் கூடுதல் மந்திரிகளைக் கண்டிப்பாக நியமிக்க வேண்டும்; அதற்கு அனுமதி வேண்டும்' என்று வேண்டுகோள் வைத்தார். அவரது கோரிக்கையைத் தட்ட முடியாமல் ஏற்றுக்கொண்டது காங்கிரஸ் மேலிடம். இதைப் பெரிய வெற்றியாகக் கருதி மேலும் 3 மந்திரிகளை நியமித்து தனக்கான ஆதரவை அதிகமாக்கிக் கொண்டார் ராஜாஜி.

இந்த நேரம் ராஜாஜியின் மீது நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வர எதிர்க் கட்சிகள் ஒன்றுகூடி முடிவு செய்தன. ராஜாஜிக்கு நெருக்கடி அதிகமானது. காமராஜர் மனது வைத்தால் மட்டுமே ஆட்சியைக் காப்பாற்ற முடியும் என்று நினைத்த நேரு காமராஜரைக் கூப்பிட்டுப் பேசினார். ராஜாஜி தொடர்ந்து நீடிக்க வேண்டும் என நேரு விரும்பினார். தமிழகத்தின் நிலையை தெளிவாக எடுத்துச் சொன்னதும் தன்னுடைய கருத்தை மாற்றிக்கொண்டார் நேரு.

1954, ஜனவரி 6-ம் தேதி தமிழக சட்டசபை காங்கிரஸ் கட்சிக் கூட்டம் நடந்தது. "கல்வித் திட்டத்தின் மீது ஓட்டெடுத்து என்னை அவமானப்படுத்த வேண்டாம், நானே விலகிக்கொள்கிறேன்" என்று அறிவித்தார் ராஜாஜி. உடனே, கூட்டத்தை ஒத்தி வைத்தார் காமராஜர்.

தனக்குப்பின், பக்தவத்சலம் முதல்வராக வரவேண்டும் என்று

https://t.me/tamilpdfebooks

ஆசைப்பட்ட ராஜாஜி, உடனே அவரை அழைத்துப் பேசினார். ‘காமராஜர் ஆதரவு இல்லாவிட்டால் எனக்கு ஆதரவு கிடைக்காது’ என்று தெளிவாகச் சொன்னார் பக்தவத்சலம். இந்த நிலையில் உடல் நலத்தைக் காரணம் காட்டி சட்டசபைக்கு வராமல் இருந்த ராஜாஜி, மார்ச் 25-ம் தேதி வந்தார். அப்போது, "எனக்கு உடல் நிலை சரியில்லை, ஆகவே, முதன்மந்திரி பதவியிலிருந்து விலகிக்கொள்கிறேன்" என்று சட்டசபையில் அறிவித்தார்.

போட்டியில் காமராஜர்

அதனால் அன்று மாலையே சட்டசபை காங்கிரஸ் கட்சிக் கூட்டம் நடந்தது. அப்போது காமராஜரிடம், "இப்போது மந்திரிகளாக உள்ளவர்களில் யாரையாவது முதன்மந்திரியாக்கி, பட்ஜெட் கூட்டம் முடிந்த பிறகு புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்கலாம். பக்தவத்சலம், சி.சுப்ரமணியம், ஷெட்டி ஆகியவர்களில் யாரையாவது ஒருவரைத் தேர்ந்தெடுங்கள்" என்று ஆலோசனை சொன்னார், ராஜாஜி. இதை காமராஜர் ஏற்றுக் கொண்டார்.

அதன்படி சட்டசபை காங்கிரஸ் கட்சிக் கூட்டம் ஆரம்பமானது. கூட்டத்தில் சுப்பிரமணியம் பெயரை ராஜாஜி முன்மொழிந்து, "சுப்பிரமணியம் முதன்மந்திரியாக இருப்பார்" என்று அறிவித்தார்.

உடனே காமராஜர் எழுந்து, "இந்த ஏற்பாடு பட்ஜெட் கூட்டத்துக்காக இரண்டு மாதங்களுக்கு மட்டுமே. அதன் பிறகு புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவார்" என்று ராஜாஜியுடன் பேசிய ஒப்பந்தத்தை பகிரங்கமாக அறிவித்தார்.

முதலில் இதற்கு சம்மதித்திருந்த ராஜாஜி, "பட்ஜெட் கூட்டத்துக்குப் பிறகு நடக்க வேண்டியதை இப்போதே பேச வேண்டாம்" என்றார். உடனே, ராஜாஜி பேச்சுக்கு கூட்டத்தில் எதிர்ப்பு கிளம்பியது.

"அப்படியானால் வரும் 30-ம் தேதி சட்டசபை காங்கிரஸ் கட்சித் தேர்தல் நடத்தித் தலைவரைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம்" என்று ராஜாஜி தெரிவித்தார். இதற்கு காமராஜர் ஒப்புக் கொண்டார். மிகவும் குறுகிய அவகாசமே இருப்பதால் தற்போது மந்திரிசபையில் இருக்கும் ஒருவரைத்தான் முதல்வராக தேர்ந்தெடுக்க வேண்டி வரும் என்று ராஜாஜி கருதினார். அதனால் சி.சுப்பிரமணியத்தை முதல்வர் வேட்பாளராக களம் இறக்க ராஜாஜி கோஷ்டி முடிவு செய்தது.

எதிர் கோஷ்டியைச் சேர்ந்த அனைவரும் ஒன்றுகூடி, "புதியதாக ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்கு அவகாசம் இல்லாததால் காமராஜர் முதல்வராக வேண்டும்" என்று முடிவெடுத்தனர். ராஜாஜி கோஷ்டியைத் தோற்கடிக்க வேண்டும் என்பதற்காக இந்தத் தேர்தலுக்கு சம்மதம் தெரிவித்தார் காமராஜர். சட்டசபை காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு முதல்வர் வேட்பாளராக வேறு ஒருவரை நியமித்துக்கொள்ளலாம் என்று காமராஜர் மனதில் நினைத்திருந்தார்.

இந்தத் தேர்தலில் காமராஜர் நிற்பார் என்று நினைத்துக்கூடப் பார்த்திராத ராஜாஜி கோஷ்டி அதிர்ச்சி அடைந்தது. காமராஜரை

https://t.me/tamilpdfebooks

தேர்தலில் தோற்கடிக்க இயலாது என்பதை அறிந்து மீண்டும் ஒரு முயற்சி செய்தனர்.

சி.சுப்பிரமணியத்தை காமராஜரிடம் அனுப்பி, "பேச்சுவார்த்தையின் மூலம் தலைவரைத் தேர்ந்தெடுக்கலாம். தேர்தலை ஒத்திப்போட வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்கள். ஆனால், "கட்சி மேலிடத்தில் தேர்தல் நடத்த அனுமதி வாங்கிய பின்னர் தள்ளிப்போட முடியாது" என்று காமராஜர் உறுதியுடன் தெரிவித்தார்.

1954, மார்ச் 30-ம் தேதி. தேர்தல் பார்வையாளராக டெல்லி மேலிடத்திலிருந்து வந்திருந்த இந்திராகாந்தி முன்னிலையில் தமிழக சட்டசபை காங்கிரஸ் கட்சித் தலைவர் தேர்தல் ஆரம்பமானது. சி.சுப்பிரமணியத்தின் பெயரை பக்தவத்சலம் முன்மொழிய, டாக்டர் யு.கிருஷ்ணராவ் வழிமொழிந்தார். காமராஜரின் பெயரை டாக்டர் வரதராஜுலு நாயுடு முன்மொழிய, என்.அண்ணாமலை பிள்ளை வழிமொழிந்தார்.

உறுப்பினர்கள் வரிசையாக நின்று வாக்குப் பதிவு செய்தார்கள். வாக்குகள் எண்ணப்பட்டன. சி.சுப்பிரமணியம் 41 வாக்குகள் பெற, காமராஜர் 93 வாக்குகள் பெற்று சட்டசபைக் காங்கிரஸ் கட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். தமிழக வரலாற்றில் புதிய அத்தியாயம் ஆரம்பமானது.

நேருஜி, சி.சுப்பிரமணியம், காமராஜர்

https://t.me/tamilpdfebooks

காமராஜர் நிபந்தனை!

வெற்றிபெற்றதும் டெல்லி சென்று கட்சி மேலிடத் தலைவர்கள் அனைவரையும் சந்தித்துப் பேசினார், காமராஜர். முதல்வராக வேறு ஒருவரை நிறுத்தும் எண்ணத்தைத் தெரிவித்தார். ஆனால், சட்டசபை காங்கிரஸ் கட்சித் தலைவரே முதல்வர் பதவியில் இருக்க வேண்டும் என்று தெளிவாக அறிவுறுத்தப்பட்டது.

"முதல்வர் பதவியில் அமர்ந்து நாட்டை நிர்வகிக்க, அதிகாரிகளை வேலை வாங்குவதற்கு படிப்பறிவு தேவை ஆயிற்றே..." என்று தன்னுடைய தயக்கத்தை நேருவிடம் தெரிவித்தார்.

ஆனால், நேரு கொஞ்சம்கூட யோசிக்காமல், "ஏன் தயங்குறீங்க... நல்ல புத்திசாலியான அதிகாரியைத் தனி அதிகாரியாக வைத்துக் கொள்ளுங்கள். படிப்புக்கும் நிர்வாகத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. கட்சித் தலைவராக அனைவரையும் அரவணைத்துச் செல்லும் உங்களால் முதல்வராகவும் திறம்பட செயல்பட முடியும்" என்று சொல்லி அனுப்பினார்.

சென்னை திரும்பிய காமராஜர் தன்னுடைய நண்பர்கள், கட்சித் தலைவர்கள் ஆகியோரிடம் டெல்லியின் முடிவைச் சொல்லி ஆலோசித்தார். அனைவருமே காமராஜர்தான் முதல்வராக வேண்டும் என்று ஆசைப்பட்டனர்; ஆதரவு தெரிவித்தனர். அதைப் போல காங்கிரஸ் தொண்டர்களும் காமராஜரே முதல்வராக வரவேண்டும் என்று வற்புறுத்தினார்கள்.

முதல்வர் பதவியை காமராஜர் எதிர்பார்க்கவில்லை என்பது மட்டுமின்றி அதைப் பெரியதாகக் கருதவும் இல்லை. ஏனென்றால் அவர் நினைத்திருந்தால் எப்போதோ முதல்வர் பதவிக்கு வந்திருக்க முடியும். அதனால் அன்றைய நிலைமையைத் தெளிவாக யோசித்து முடிவெடுத்த காமராஜர், காங்கிரஸ் கட்சியில் இருக்கும் தன்னுடைய ஆதரவாளர்கள் அனைவரையும் அழைத்தார்.

"நான் முதல்வர் பதவியில் அமர வேண்டும் என்றால், நீங்கள் அனைவரும் எனக்கு ஒரு வாக்குறுதி தர வேண்டும். நீங்கள் வக்குறுதி கொடுத்த பின்னரே நான் பதவி ஏற்பதைக் குறித்து உறுதி அளிப்பேன்" என்றார். தன் நிபந்தனையைச் சொல்லும்படி காமராஜரை அனைவரும் ஆவலுடன் கேட்டார்கள். இந்த உலகில் எந்த தலைவனாவது பதவி ஏற்பதற்கு முன்னர் இப்படி ஒரு வேண்டுகோளை அல்லது நிபந்தனையை விதித்திருப்பாரா என்பது சந்தேகமே!

"நான் மந்திரிசபை அமைக்கும்பட்சத்தில், 'மந்திரியாக அவரைப் போடு, இவரைப் போடு' என்று யாரும் சொல்லக் கூடாது. எந்தக் காரியத்துக்காகவும் சிபாரிசு கேட்டு வரக்கூடாது. இதற்கெல்லாம் சம்மதம் என்றால் நான் முதல்வர் பதவியை ஏற்றுக்கொள்கிறேன்" என்றார்.

அனைவரும் சந்தோஷமாக ஒப்புக்கொண்டனர். ஏனென்றால் எப்படியும் ராஜாஜி மந்திரிசபையில் இருக்கும் யாரையும் காமராஜர்

https://t.me/tamilpdfebooks

பயன்படுத்திக்கொள்ள மாட்டார் என்று உறுதியுடன் நம்பினார்கள்.

காமராஜருக்கு ராஜாஜியுடன் கொள்கை ரீதியிலான வேறுபாடுகள் அதிகம். ஆனால், அவரது நிர்வாகத் திறனின் மீது அதீத நம்பிக்கை உள்ளவர். ராஜாஜி கொண்டுவந்த மதுவிலக்கு, ஊழல் எதிர்ப்பு போன்றவற்றின் மீது காமராஜருக்கு அதீத நம்பிக்கை இருந்தது மற்றவர்களுக்குத் தெரியாது. அதைப் போலவே இருவரும் கொள்கைகளில் எதிரெதிராக இருந்தாலும் ஒருவர் மீது ஒருவர் நல்ல மரியாதை வைத்திருந்தார்கள்.

ராஜாஜி முதல்வராக இருந்த சமயத்தில் காங்கிரஸ் கட்சியைப் பற்றி நிருபர்கள் கேட்டபோது, "காமராஜர் தலைவராக இருப்பதால், காங்கிரஸ் கட்சியைப்பற்றி எனக்கு எந்தக் கவலையும் இல்லை. அதைப் போலவே நான் ஆட்சிப் பொறுப்பில் இருப்பதால் நிர்வாகத்தைக் குறித்து அவருக்கு எந்த கவலையும் இல்லை" என்று வெளிப்படையாகவே தெரிவித்தார்.

தன்னுடைய சகாக்கள் அனைவரும் நிபந்தனையை ஏற்றுக் கொண்டதுமே, "என்னுடைய மந்திரி சபையில் எட்டுப் பேர் மட்டுமே இருப்பார்கள்" என்று அறிவித்தார். அன்றைய ராஜாஜியின் மந்திரிசபையில் 12 பேர் இருந்தார்கள். அதில் யாருக்கும் பதவி இருக்காது என்று அனைவருமே நம்பினார்கள். ஆனால், நடந்தது வேறு.

பதவியேற்பு!

1954, ஏப்ரல் 13-ம் தேதி காமராஜர் முதன்மந்திரியாக பதவியேற்கும் தமிழ்ப்புத்தாண்டு தினம். பதவியேற்பதற்காக திருமலைப் பிள்ளை வீதி வீட்டிலிருந்து வெளியே வந்து எம்.டி.டி. 2727 என்ற காரில் ஏறினார். அவருக்கு முன்னே சென்ற போலீஸ் வண்டி சைரன் ஒலியை பலமாக எழுப்பிச் சென்றது. இதைப் பார்த்த காமராஜர் உடனே காரை நிறுத்தச் சொன்னார். முன் வண்டியில் இருந்த காவல் துறை அதிகாரியை

https://t.me/tamilpdfebooks

அழைத்து எதற்காக அந்த சைரனை ஒலிக்க விடுகிறார்கள் என்று கேட்டார்.

காவல் துறை அதிகாரி, "இது முதலமைச்சர் செல்லும்போது போக்குவரத்தை சீர் செய்வதற்காக எழுப்பப்படும் ஒலி. இது வரை இருந்த அனைத்து முதல்வர்கள் செல்லும்போதும், இந்த நடைமுறை வழக்கம்தான். அப்போதுதான் உங்களால் விரைவாகச் செல்ல முடியும்" என்றார்.

உடனே, காமராஜர் அவரிடம், "இதோ பாருங்க, இதுக்கு முன்னால இந்த சம்பிரதாயம் எல்லாம் இருந்திருக்கலாம். எனக்கு இதெல்லாம் வேண்டாம்னேன். யாருக்கும் தொந்தரவு கொடுக்காம, சத்தம் போடாமப் போங்க" என்று கூறிவிட்டு காரில் ஏறினார். அதற்குப்பின் காமராஜர் முதல்வராக இருந்த வரை எப்போதும் சைரனை ஒலிக்கவிட்டதே இல்லை.

ஒரு முறை சைரன் ஒலி இல்லாததால், நுங்கம்பாக்கம் சந்திப்பில் போக்குவரத்தைச் சீர் செய்துகொண்டு இருந்த காவலர், காமராஜர் சென்ற வண்டியை நிறுத்தி, எதிர்ப்புற வாகனங்கள் சென்ற பின்னரே இவருடைய வண்டியை அனுமதித்தார். காமராஜர் பொறுமையாக இருந்தாலும், அவர் காருக்கு முன் இருந்த காவல் அதிகாரிகள் எரிச்சல் அடைந்தார்கள். கார் தாண்டிச் சென்ற பிறகு காருக்குள் இருந்தவர் யார் என்பதை அறிந்தார் காவலர் நடுநடுங்கிப் போனார். முதல்வர் காரையே நிறுத்திவிட்டோமே என்று பயந்துபோய், அன்று மாலை காமராஜர் வீட்டுக்கு திரும்பும் நேரம் மன்னிப்புக் கேட்கக் காத்திருந்தார்.

காமராஜர் வீடு திரும்பியபோது அந்த காவலரைப் பார்த்து விவரம் கேட்டார். நடந்ததைச் சொல்லி மன்னிப்பு கேட்க வந்தவரை தட்டிக் கொடுத்து, "நீ சரியாத்தான் செஞ்சே. எல்லோரையுமே ஒண்ணாத்தான் நடத்தணும். அதுதான் சரின்னேன்" என்று அவரது கடமை உணர்வைப் பாராட்டினார். பதவியில் இருந்தவரை தன்னை ஒரு தலைவராக எண்ணிக் கொள்ளாமல் மக்களில் ஒருவராகவே தன்னைப் பாவித்தவர் காமராஜர்.

காமராஜர் ஏற்படுத்திய அமைச்சரவை விசித்திரமானது மட்டுமல்ல, யாருமே எதிர்பாராதது. எதிர்த்துப் போட்டியிட்ட சி.சுப்பிரமணியத்தையும், அவரை வழிமொழிந்த பக்தவத்சலத்தையும் மந்திரி சபையில் சேர்த்துக்கொண்டார். காங்கிரஸை எதிர்த்துப் போட்டியிட்டு தி.மு.க. ஆதரவுடன் வெற்றி பெற்று மக்கள் செல்வாக்குடன் திகழ்ந்த ராமசாமி படையாச்சி, மாணிக்கவேலு நாயக்கர் இருவருக்கும் பதவி கொடுத்தார். ராஜாஜி ஆதரவாளரான ஏ.பி.ஷெட்டிக்கும் பதவி கொடுத்தார்.

https://t.me/tamilpdfebooks

முதல்வராக பதவியேற்பு...

காமராஜர் அமைச்சரவையில் அனைவரும் வியக்கும் அம்சம் என்றால், பி.பரமேஸ்வரனை தாழ்த்தப்பட்டோர் நலம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சராக நியமனம் செய்ததுதான். அன்றைய கால கட்டத்தில் கோயில்களில் தாழ்த்தப்பட்டோர் நுழைவதற்குக் கடுமையான எதிர்ப்பு இருந்தது. என்னதான் தீண்டாமையைக் குறித்து சட்டம் இயற்றி தண்டனை கொடுத்தாலும், அந்தக் கொடுமை ஆங்காங்கே தலைவிரித்து ஆடியது. கண்டிப்புக் காட்டி அதைத் திருத்த முயல்வதைவிட, புத்திசாலித்தனமாக தீர்க்க முடிவு செய்தார். அறநிலையத் துறை அமைச்சர் ஒருவருக்கு பூரண கும்ப மரியாதை தர வேண்டியது கோயில் நிர்வாகக் கடமை. அதனால், தாழ்த்தப்பட்ட ஒருவரை அறநிலையத் துறை அமைச்சராக்கி, கோயிலில் மரியாதையுடன் நுழைய வைத்து ஒரு மகத்தான புரட்சியை செய்தார் காமராஜர். எதிர் கோஷ்டி, எதிர் அணி என்று எந்தப் பாரபட்சமும் இல்லாமல் கச்சிதமாக அமைக்கப்பட்டிருந்தது அமைச்சரவை.

முதன்மந்திரியாக பதவி ஏற்ற சமயத்தில் காமராஜர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார். மந்திரியாகப் பதவி ஏற்பவர்கள் ஆறு மாதத்துக்குள் சட்டசபை உறுப்பினர் ஆகவேண்டும் என்பது விதி. மேல்சபை வழியாக எளிதாக சட்டசபைக்குள் நுழைய முடியும் என்றாலும், அந்த வழியை காமராஜர் விரும்பவில்லை.

தான் தேர்தலில் நிற்க வேண்டும் என்பதற்காக, அப்போது விருதுநகர் சட்டசபை உறுப்பினராக இருந்தவரை, பதவி விலகச் சொல்லவும் இல்லை. அப்படிச் செய்வது ஜனநாயகத்துக்கே அவமானம் என நினைத்தார். அதனால் தமிழகத்தில் அப்போது காலியாக இருந்த குடியாத்தம் தொகுதியில் வேட்பாளராக நிற்பது என்று முடிவு செய்தார். குடியாத்தம் தொகுதி காங்கிரஸுக்கு சாதகமானது அல்ல. மேலும், காமராஜர் அந்தத் தொகுதியைச் சேர்ந்தவர் இல்லை என்றாலும் அங்கே நிற்பதற்கு முடிவு செய்தார்.

‘குடியாத்தம் பாதுகாப்பான தொகுதி இல்லை, தோல்வி அடைந்தால் அவமானமாக இருக்கும்’ என்று காமராஜரிடம் நண்பர்களும்

https://t.me/tamilpdfebooks

கட்சியினரும் சொல்லிப் பார்த்தார்கள். ஆனால், அவர், "நான் தமிழ்நாட்டுக்கே முதலமைச்சர். அதனால் அனைத்து மக்களும் என்னை ஏற்றுக்கொள்கிறார்களா என்பதை நான் அறிந்துகொள்ள வேண்டும். முடிவு எப்படி இருந்தாலும் அதைப்பற்றி கவலை இல்லை. எனக்காக ஒரு தொகுதியை காலி பண்ணச் சொல்வது சரியில்லை" என்று உறுதியுடன் சொல்லிவிட்டார்.

யாரும் எதிர்பாராத வண்ணம் கம்யூனிஸ்டுகளைத் தவிர அனைத்து முக்கிய கட்சிகளுமே காமராஜருக்கு ஆதரவு தெரிவித்தன. அதனால், எதிர் வேட்பாளரை யாரும் நிறுத்தவில்லை. காமராஜரை ஆதரிக்காவிட்டால், மீண்டும் ராஜாஜி ஆட்சிக்கு வந்துவிடுவார் என்பதுதான் எதிர்க் கட்சிகளின் பயம். அதனால் திராவிடக் கட்சிகள் இந்தத் தேர்தலில் காமராஜரை தீவிரமாக ஆதரித்ததன; பிரசாரமும் செய்தன.

கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் வி.கே.கோதண்டராமன் நின்றார். காமராஜர் கிராமம் கிராமமாகப் போனார், குடிசைகளில் அமர்ந்து மக்களுடன் பேசினார். ஒரு முதல்வர் என்ற தோரணை இல்லாமல், சாதாரண மனிதராகவே அந்தத் தேர்தலை எதிர்கொண்டார். அதனால், எளிதில் வெற்றியும் பெற்றார். எதிர்த்து நின்ற வேட்பாளர்கள் டெபாசிட் இழந்து தோல்வி அடைந்தார்கள். வெற்றிபெற்றதும் உடனே முதல் காரியமாக குடியாத்தம் சென்று வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவித்துவிட்டு வந்தார்.

பெரியார் வாழ்த்து!

ஆரம்பத்தில் காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறிய பெரியார், அதன்பின் காங்கிரஸ் கட்சியை கடுமையாக விமர்சித்து வந்தார். ஆனால், அவரே காமராஜர் முதல்வர் பதவிக்கு வந்ததும் பாராட்டி 'விடுதலை' இதழில் தலையங்கம் எழுதினார்.

'இப்போதுதான் சென்னை மாகாணத்தில் உண்மையில் ஒரு தமிழனின் ஆட்சி மலர்ந்துள்ளது. ஜாதிகளை ஒழிக்க இதுவே தக்க தருணம். திரு.காமராஜருக்கு ஜாதிகளை ஒழிப்பதில் தனி அக்கறை உண்டு என்பது நமக்கும் தெரியும். இதைப்பற்றி அவர் பல தடவைகள் பேசியுள்ளார். நாட்டுக்கு சுயராஜ்யம் வழங்கப்பட்ட பின்னர் ஜாதி வெறி பல மடங்கு வளர்ந்துவிட்டது என்று பல முறை கூறியுள்ளார். குறிப்பாக, இவர் ஜாதி மாநாடுகளில் கலந்துகொள்வது இல்லை என்றே நினைக்கிறேன். இப்பேர்ப்பட்டவர் தன் செயல்பாடுகள் மூலம் தன்னுடைய லட்சியத்தைப் பெறவேண்டும். அதற்கான கால்கோள் விழாவை அவர் நடத்திவிட்டார் என்றே நாம் கருதுகிறோம்.

ஜாதி ஒழிப்பு உணர்வை மக்களிடையே பரப்ப இது ஒரு நல்ல தருணம். அவருக்கு மட்டுமல்லாமல் சுயமரியாதைக்காரர்களுக்கும் இது நல்ல தருணம். சட்டதிட்டங்களின் மூலம் முதன்மந்திரி இதை சாதிக்கலாம்.

புத்தர், சித்தர், பிரம்ம சமாஜத்து தலைவர், சமுதாய சீர்திருத்தவாதி ஆகிய பலரால் சாதிக்க முடியாத ஒரு காரியத்தை ஒரு சாதாரண

https://t.me/tamilpdfebooks

முதன்மந்திரி சாதித்துவிட்டார் என்ற நிலை ஏற்பட்டால் அது இந்திய வரலாற்றிலேயே ஏற்படக்கூடிய மகத்தான சாதனை அல்லவா? அதனால், ஜாதி ஒழிப்பில் முதன்மந்திரி காமராஜர் அதிக கவனம் செலுத்துவார் என்றே நாம் எதிர்பார்க்கிறோம்' என்று எழுதினார்.

பெரியார் இப்படி வெளிப்படையாக ஆதரித்து, அரவணைத்து அதை காமராஜர் ஏற்றுக்கொண்டாலும், பெரியார் மற்றும் திராவிடர் கழகத்துக்காக சலுகை காட்ட முதலமைச்சர் கடமையிலிருந்து துளியளவும் தடுமாறியதில்லை. ஏனென்றால் 1956, 1957-ம் ஆண்டுகளில் தேசியக் கொடி எரிப்புப் போராட்டம், இந்திய அரசியல் சட்ட எரிப்புப் போராட்டம், இந்தி எதிர்ப்புப் போராட்டம் என்று பல போராட்டங்களை திராவிடக் கழகத்தினர் நடத்தியபோது, தயவுதாட்சண்யம் இல்லாமல் சட்டப்படி நடவடிக்கைகளை எடுத்தார். போராடியவர்களை கைது செய்து சிறையில் அடைத்தார். பெரியாரை மட்டும் சிறையில் அடைக்காமல், மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளிக்க உத்தரவிட்டார்.

கல்விப் புரட்சி

காமராஜர் முதல்வர் பொறுப்புக்கு வந்ததும், படிக்காத ஒருவர் பதவிக்கு வந்திருக்கிறார். அவருக்கு நம் நாட்டைப்பற்றியும், பொருளாதாரத்தைப்பற்றியும், மக்கள் நலனைப்பற்றியும் என்ன தெரியும் என்று எதிர்க் கட்சிகள் வெளிப்படையாகவே குற்றம் சாட்டின.

இதற்குக் காமராஜர் அளித்த பதில் எந்தக் காலத்திலும் வியந்து பாராட்டக்கூடியது:

"நான் எந்த சர்வகலாசாலையிலும் பயின்றதாகச் சொல்ல வில்லை. ஆனால், எனக்கு பூகோள சாஸ்திரம் நன்றாகவே தெரியும். தமிழ்நாட்டில் எல்லாப் பகுதியும் எனக்குத் தெரியும். எங்கெல்லாம் நதிகள் இருக்கின்றன, ஏரிகள் இருக்கின்றன என்பதெல்லாம் எனக்குத் தெரியும். எந்த நகரில் மக்கள் எந்த மாதிரித் தொழில் செய்து பிழைக்கிறார்கள் என்பது தெரியும். ஆனால், நேர் கோடுகளையும், வளைந்த கோடுகளையும் கொண்டிருக்கும் புத்தகங்கள்தான் பூகோள சாஸ்திரம் என்றால், அதைப்பற்றி நான் தெரிந்துகொள்ளாமலேயே இருந்துவிடுகிறேன்."

காமராஜர் பதவிக்கு வந்ததும் முதல் காரியமாக ராஜாஜியால் இழுத்து மூடப்பட்ட 6,000 ஆரம்பப் பள்ளிகளை உடனே திறந்தார். பள்ளிகள் திறக்கப்பட்டாலும், படிக்க வந்த மாணவர் எண்ணிக்கை குறையாகவே இருந்தது. இது அவருக்குப் பெரும் வேதனை.

ராஜாஜி கொண்டுவந்த குலக் கல்வித் திட்டத்தைக் குறை சொல்லி ஆட்சிக்கு வந்த காமராஜர், கல்வித் திட்டத்தில் தோற்று விட்டார் என்று வெளிப்படையாகப் பேசினார்கள்.

கல்வி அதிகாரிகளையும் அமைச்சர்களையும் கூட்டி வைத்துப் பேசியும் எந்த உருப்படியான யோசனையும் கிடைக்காத நேரத்தில்தான் ஒரு சுற்றுப்பயணத்துக்காக நெல்லையிலிருந்து தூத்துக்குடி

https://t.me/tamilpdfebooks

மாவட்டத்துக்குப் போய்க்கொண்டு இருந்தார். இடையில் ரயில் செல்வதற்காக சேரன்மாதேவி ஊரின் அருகே ரயில்வே கேட் மூடியிருந்தது. பயணக் களைப்பைப் போக்கிக்கொள்ள அங்கே இறங்கி நின்றார்.

தூரத்தில் சிறுவன் ஒருவன் ஆடு மேய்த்துக்கொண்டு இருந்தான். ரயில் கடந்து செல்லும் வரை அவனை அருகில் அழைத்துப் பேச்சுக் கொடுத்தார். அவனுக்கு காமராஜர் யாரென்றே தெரியாததால் சாதாரணமாகவே பேசினான்.

"என்ன தம்பி ஆடு மேய்ச்சுக்கிட்டு இருக்கே... பள்ளிக்கூடம் போகலியா?" என்று கேட்டார்.

"எங்க ஊர்ல பள்ளிக்கூடம் இல்லையே... நான் எப்படி படிக்கப் போக முடியும்?" என்று திருப்பிக்கேட்டான்.

"உங்க ஊர்ல பள்ளிக்கூடம் இருந்தா நீ படிக்கப் போவியா?"

"அதுவும் முடியாது. நான் படிக்கப் போயிட்டா எனக்கு யாரு சோறு போடுவா?"

"ஓ? அப்படின்னா சோறு போட்டா படிக்கப் போவியா?"

"ம்... எதுக்கும் எங்க ஐயாகிட்ட கேளுங்க" என்றான்.

பள்ளிக் குழந்தைகளுக்கு நிதி உதவி...

அவன் பேசிய பேச்சு காமராஜருக்கு ஒரு புதிய சிந்தனையைக் கொடுத்தது. எந்த நேரமும் அதைப்பற்றியே யோசித்தார். அந்த நேரத்தில்தான், எட்டயபுரம் மகாராஜா பள்ளியில் படிக்கும் மாணாக்கர்களுக்கு தினமும் மதிய உணவு கொடுத்து படிப்பு சொல்லித் தருகிறார்கள் என்று கேள்விப்பட்டார்.

கல்வி ஒன்றின் மூலம்தான் இந்திய நாட்டின் வறுமையைப் போக்கவும், மூடப் பழக்கவழக்கங்களைத் தடுத்து நிறுத்தவும் முடியும்

https://t.me/tamilpdfebooks

என்று உறுதியாக நம்பினார் காமராஜர். அதனால் பசிக்கு உணவும் கொடுத்து, படிக்கப் பள்ளி வசதியும் செய்து தர வேண்டும் என்று மனதில் உறுதி எடுத்துக்கொண்டார்.

1955, மார்ச் 27-ம் தேதி சென்னை பூங்கா நகர் மெமோரியல் மண்டபத்தில், 'சென்னை மாகாண தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் மாநா'ட்டைத் தொடங்கி வைத்தார் காமராஜர், அருகில் பள்ளிக் கல்வி இயக்குனர் நெ.து.சுந்தரவடிவேலு அமர்ந்திருந்தார்.

"தொடக்கப் பள்ளிகளில் படிக்கும் ஏழைக் குழந்தைகள் அனைவருக்கும் இலவச மதிய உணவு வழங்கினால் எவ்வளவு செலவாகும்?" என்று சுந்தரவடிவேலுவிடம் காமராஜர் விசாரித்தார்.

"இப்போது தொடக்கப் பள்ளிகளில் சுமார் 16 லட்சம் பேர் படிக்கிறார்கள். அவர்களில் ஐந்து லட்சம் பேருக்கு மதிய உணவு கொடுக்கக் குறைந்தபட்சம் ஒரு கோடி ரூபாய் செலவாகும்" என்று சுந்தரவடிவேலு கூறினார்.

அந்த மாநாட்டில் காமராஜர் பேசும்போது, "தமிழ்நாட்டில் ஒவ்வோர் ஊரிலும் தொடக்கப்பள்ளி அமைக்க வேண்டும். பள்ளிக்கூடம் இருக்கிற ஊர்களில்கூட, எல்லாக் குழந்தைகளும் படிக்கப்போவது இல்லை. ஏழைப் பையன்களுக்கும் பெண்களுக்கும் வயிற்றுப்பாடு பெரும்பாடாக இருக்கிறது. ஒருவேளை கஞ்சி கிடைத்தால் போதும் என்று, ஆடு, மாடு மேய்க்கப்போய், தங்கள் எதிர்காலத்தைப் பாழாக்கிக் கொள்கிறார்கள்.

அவர்களைப் பள்ளிக்கூடத்துக்கு வரச்செய்வது முக்கியம். அதனால், ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்க வேண்டியது அவசியம். அப்போதுதான் படிக்க வருவார்கள், படித்தால்தான் நாடு முன்னேற முடியும்.

இந்தத் திட்டத்துக்கு, தொடக்கத்தில் ஒரு கோடி ரூபாய் செலவாகும் என்று தெரிகிறது. அனைத்துப் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தும்போது, சில ஆண்டுகளில் மூன்று கோடி, நான்கு கோடிகூட ஆகும். நம் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு இது பெரிய பணம் அல்ல. தேவைப்பட்டால் அதற்காகத் தனி வரிகூட போடலாம்" என்று பேசினார்.

இதைத் தொடர்ந்து மதிய உணவுத் திட்டத்தைப்பற்றி, அமைச்சரவைக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

வருவாய்த் துறை செயலாளர் பல ஆட்சேபணைகளையும், சந்தேகங்களையும் எழுப்பினார். அதற்கெல்லாம் காமராஜர் பொறுமையாக பதில் அளித்தார். நிதித் துறை பெரும் சுமையை சந்திக்கும் என்று எச்சரிக்கப்பட்டது. ஆனாலும், காமராஜர் மதிய உணவுத் திட்டத்தை அமல்படுத்துவதில் உறுதியாக இருந்தார். அதனால், முதலில் எட்டையபுரம் மகாராஜா பள்ளியில் நடந்து வந்த மதிய உணவுத் திட்டத்தை, முறைப்படி தொடங்குவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

அதன் பின்னர் சோதனை முயற்சியாக 1,000 பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பிறகு கலந்தாய்வுக்

https://t.me/tamilpdfebooks

கூட்டம் நடந்தது.

காமராஜர், கல்வி அமைச்சர் ஆகியோர் பேசும் முன்னர் வருவாய்த் துறை செயலர் பேசினார்.

"நாம் சோதனைக்காக சில பள்ளிகளில் போட்ட பகல் உணவால் கான்ட்ராக்டர்கள், ஆசிரியர்கள் மட்டுமே பலன் அடைந்தார்கள். சிறுவர், சிறுமியர்க்குக் கிடைத்த பலன் மிகக் குறைவே. 1,000 பள்ளிகளில் இந்தத் திட்டத்துக்காக செலவிடப்பட்ட பணம் விரயம்தான். இதை அடுத்தகட்டமாக 15,000 பள்ளிகளுக்கு விரிவுபடுத்த வேண்டாம் என்று சொல்ல வேண்டியது எனது கடமை. இந்தத் திட்டத்தை கைவிடுவதே அரசுக்கு நல்லது" என்று சொல்லி முடித்தார்.



பள்ளிக் குழந்தைகளுடன் உரையாடல்..

ஒரு நொடிகூட தாமதிக்காமல் காமராஜர் மிகவும் சாதாரணமாக சிரித்தபடியே, "இயக்குநர் இதைக் குறித்துக்கொள்ளட்டும். விரிவான ஆணை பிறப்பிக்கும்போது பள்ளிப் பகல் உணவுத் திட்டத்தைக் கான்ட்ராக்ட் முறையில் நடத்தக் கூடாது" என்று கூறினார்.

அதன் பிறகும் செயலர், "மாணவர்களுக்கு சமைக்கும் சாப்பாட்டை ஆசிரியர்கள் சாப்பிட்டுவிடுகிறார்கள், தங்கள் வீட்டுக்கும் அனுப்பிவிடுவார்கள். மாணவர்களுக்கு அரை வயிற்றுக்கே கிடைக்கும்" என்றார். காமராஜர், எந்தத் தயக்கமும் இன்றி, சிரித்த முகத்தோடு, "திட்டத்தில் ஞாபகமாக இன்னொரு விதியைச் சேர்த்துவிடுங்கள். 'பகல் உணவுத் திட்டத்தைச் செயல்படுத்தும் ஆசிரியர்களும் பிள்ளைகளோடு சேர்ந்து சாப்பிடலாம்.' அந்தக் கூடுதல் சாப்பாட்டுச் செலவு நியாயமானது என்று ஏற்றுக்கொள்ளப்படும்" என்று கூறினார். காமராஜர் இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதில் மிகவும் தீவிரமாக இருக்கிறார் என்பதை புரிந்துகொண்ட பிறகு யாரும் குறுக்கிடவில்லை. பகல் உணவுத் திட்டம் ஏற்றுக்கொள்ளப் பட்டது.

பகல் உணவுத் திட்டத்தை அரசுத் திட்டமாக நிறைவேற்றுவதற்கு முன்னரே, பல ஊர்களில் பொதுமக்கள் காமராஜரின் வேண்டுகோளை

https://t.me/tamilpdfebooks

ஏற்றுத் தங்கள் சொந்தப் பொறுப்பில் அதை நிறைவேற்ற முன்வந்தனர். பகல் உணவுத் திட்டத்தை முதலில் பாரதி பிறந்த எட்டயபுரத்தில் தொடங்கினர்.

பகல் உணவுத் திட்டத்தைத் தொடங்கி வைத்துப் பேசிய காமராஜர், "நாம் பெறத் தவறிவிட்ட படிப்பை, வரும் தலைமுறையாவது பெற்று, வளர்ந்து வாழட்டும். அன்னதானம் நமக்குப் புதியது அல்ல. இது வரை வீட்டுக்கு வந்தவர்களுக்கு உணவு போட்டோம். இப்போது, பள்ளிக்கூடத்தை தேடிப்போய் உணவு போடச்சொல்கிறோம். அப்படிச் செய்தால் உயிர் காத்த புண்ணியம், படிப்பு கொடுக்கும் புண்ணியம் இரண்டும் சேரும். கல்விக் கண்ணைத் திறப்பதைவிட முக்கியமான வேலை இப்போதைக்கு வேறு எதுவும் இல்லை. எல்லாவற்றிலும் முக்கியமானதாக இதையே நான் கருதுகிறேன். எனவே, மற்ற வேலைகளை ஒதுக்கி வைத்துவிட்டு ஊர் ஊராக வந்து, பகல் உணவுத் திட்டத்துக்காகப் பிச்சை எடுக்கவும் சித்தமாக இருக்கிறேன்" என்று உணர்ச்சிபூர்வமாகப் பேசினார்.

வாழ்க்கைத் தத்துவம் ஒன்றாக, மதிய உணவுத் திட்டத்தைக் கருதித் தன் சக அமைச்சர்களோடும் அதிகாரிகளோடும் இணைந்து, முனைப்புடன் செயல்படுத்தினார். செல்வந்தர்களும் வள்ளல்களும் பொருள் உதவி செய்தனர். காமராஜரின் மதிய உணவுத் திட்டத்தால் பள்ளிகளுக்கு மாணவர்களின் வருகை அதிகமானது.

தென்மாவட்டங்களில் அறுவடை காலங்களில் இந்தத் திட்டத்துக்காக ஒரு மரக்கால், இரண்டு மரக்கால் என்று தானியங்களை அளந்து கொடுத்து உதவினார்கள். ஆனால், அவர்களால், குறிப்பிட்ட பள்ளிக்குச் சீராக உணவு வழங்க இயலவில்லை. மழைக் காலத்திலும், உற்பத்தி குறைவானபோதும் உதவி செய்ய முடியவில்லை. இதைக் கருத்தில் எடுத்துக்கொண்டார் காமராஜர். உணவுத் திட்டம் எதற்காகவும் நிற்கக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தார்.

அப்படி என்றால், மதிய உணவுத் திட்டத்தை முழுமையாக அரசு ஏற்று நடத்தினால் மட்டுமே சீராகக் கிடைப்பது சாத்தியம் என்பதை உணர்ந்துகொண்டார். உடனே, இந்தத் திட்டத்தை அரசு செலவில் நாடு எங்கும் நடைமுறைப்படுத்த உத்தரவிட்டார். கல்விக்காக ஆண்டுதோறும் ஒதுக்கப்படும் தொகையில் இந்தத் திட்டத்துக்காகவும் சேர்த்து அதிகப் பணம் ஒதுக்கினார்.

தமிழ்நாட்டில் 300-க்கு மேல் மக்கள்தொகை உள்ள எல்லா கிராமங்களிலும், ஒரு மைல் சுற்றளவுக்குள் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தும் திட்டத்தில் இறங்கினார் காமராஜர்.

குழந்தைகளின் பசியைப் போக்கி எழுத்தறிவிக்க, காமராஜர் செயல்படுத்திய மதிய உணவு திட்டம் இன்னொரு வகையில் நாட்டுக்குப் பெரும் நன்மை செய்தது. இந்தத் திட்டம், பல்வேறு இனத்தை சேர்ந்த பிள்ளைகளும் ஒன்றாக அமர்ந்து உணவு அருந்த வழி செய்தது. அதனால், அந்தக் காலத்தில் நிலவி வந்த ஜாதிப் பாகுபாடு வெகுவாகக் குறைந்தது.

https://t.me/tamilpdfebooks

பள்ளிக்கூடத்தைத் திறந்தால் மட்டும் போதாது. பள்ளிக் கூடத்துக்கு நிலையான சொத்து ஏற்படுத்தப்பட வேண்டும், அதுதான் எந்தச் சிக்கலும் இல்லாமல், பள்ளிக்கூடம் தொடர்ந்து செயல்பட வழிவகுக்கும் என்பதையும் காமராஜர் உணர்ந்தார். ஆனால், அரசிடம் போதிய நிதி இல்லாததால் சமுதாய பங்கேற்பை ஊக்குவிக்கும் மாநாடுகளை தமிழ்நாடு எங்கும் நடத்த ஆணையிட்டார்.

பள்ளிக்கூடத்துக்கு அடிப்படைத் தேவைகள் எவை என்று பட்டியல்கள் தயாரிக்கப்பட்டன. தொடக்கப் பள்ளிகளுக்கு ஒரு பட்டியல், இடைநிலைப் பள்ளிகளுக்கு ஒரு பட்டியல், உயர் நிலைப் பள்ளிகளுக்கு ஒரு பட்டியல் என்று மூன்று பட்டியல்கள் உருவாயின. தொடக்கப் பள்ளிக்கூடங்களுக்கு என்னென்ன வசதிகள் இல்லை என்பது கிராம மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டு, உதவுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். கிராம மக்கள் உற்சாகத்துடன் உதவினர். இந்த அனுபவத்தின் அடிப்படையில் பள்ளிக்கூட மேம்பாட்டுக்கான விரிவான மக்கள் இயக்கம் தொடங்கியது.

‘பள்ளிக்கூடம் கட்டுவது, பகல் உணவு அளிப்பது, ஆசிரியர் நியமனம் போன்றவை எல்லாம் அரசாங்கத்தின் வேலை’ என்று அசட்டையாக இருந்த மக்களையே கல்விப் புரட்சி செய்ய வைத்தார்.

‘கல்வி என் பொறுப்பு! கல்வி வளர்ச்சிக்கு நான் பாடுபட வேண்டும்’ என எண்ணி செயல்படுவதற்கு அந்த இயக்கம் காரணமாயிற்று. ‘பள்ளி வளர்ச்சித் திட்ட மக்கள் இயக்கம்’ என்பதை உருவாக்கி, கல்வி வளர்ச்சிக்கு உதவ, மக்கள் முன்வரும்படி செய்தார்.

இந்தத் திட்டம் 1958-ல் செங்கற்பட்டு மாவட்டம் கடம்பத்தூரில் துவங்கியது. இந்த முதல் முயற்சி வெற்றி அடைந்ததால், தமிழ் நாட்டில் மேலும் 159 பள்ளிகளில் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இந்த இயக்கத்தைத் தொடங்கிய 25 மாதங்களில், தமிழகம் எங்கும் 133 மாநாடுகளை நடத்தி 4 கோடி ரூபாய் பணத்தையும், 2.47 கோடி பெறுமானமுள்ள பொருட்களையும் நன்கொடையாகப் பெற்றார்.

1958-ல் திசையன்விளை மாநாட்டில் காமராஜர் கலந்து கொண்டார். இதில் முன் வைக்கப்பட்ட திட்டங்களின் மதிப்பு ரூபாய் 1,38,000. மாநாட்டின் மூலம் பெறப்பட்ட நிதியின் மொத்த மதிப்பு ரூபாய் 1,36,000. முதலமைச்சர் காமராஜர் கலந்துகொண்ட ஒரு மாநாடு செங்கற்பட்டிலும் நடந்தது. இதில் இந்தியக் கல்வி அமைச்சர் சி.கே.பந்த் கலந்துகொண்டு, "பிற மாநிலங்களில் முளைக்காத மேம்பாட்டுத் திட்டங்கள் சென்னை மாகாணத்தில் மட்டும் பயிராவது வியப்பானது" என்று மனதாரப் பாராட்டினார். பிரதமர் நேருவிடம் மாநாட்டைப்பற்றி வியந்து கூறவே, காரைக்குடி அருகில் உள்ள ஆ.தெக்கூரில் நடந்த பள்ளி சீரமைப்பு மாநாட்டில் நேரு, 1959-ல் கலந்துகொண்டு, அரசின் செயல்பாடுகளைக் கண்டு ஆச்சர்யமும் அடைந்தார். அதுமட்டுமின்றி, ‘கல்வி மேம்பாட்டுத் திட்டங்களில் தமிழகத்தின் வழியில் செயல்படுங்கள்’ என்று அனைத்து மாநில முதலமைச்சர்களுக்கும் பிரதமர் நேரு கடிதம் எழுதினார்.

இதே முறையில் ஏழைக் குழந்தைகளுக்கு இலவசப் புத்தகம், பலகை

https://t.me/tamilpdfebooks

ஆகியவற்றை வழங்கவும் ஏற்பாடு செய்தார் காமராஜர்.

1956--ல் தொடங்கப்பட்ட மதிய உணவுத் திட்டத்தின் மூலம் 29,017 பள்ளிகளில் மதிய உணவு அளிக்கப்பட்டது. 15 லட்சம் மாணவர்கள் பயன் அடைந்தார்கள்.

மதிய உணவுத் திட்டத்துடன் காமராஜர் நிற்கவில்லை. கிராமம்தோறும் பள்ளிகள் தொடங்கினார். பள்ளிக்கூடம் இல்லாத ஊரே இல்லை என்ற நிலைமை ஏற்பட்டது. 1954-ல் இருந்த தொடக்கப் பள்ளி எண்ணிக்கை 21 ஆயிரம். இது 1962-ல் 30 ஆயிரமாக உயர்ந்தது. மாணவர் எண்ணிக்கை 29 லட்சத்திலிருந்து 42 லட்சமாக உயர்ந்தது. இதைப் போலவே உயர்நிலைப் பள்ளி மாணவர் எண்ணிக்கை 4 லட்சத்து 98 ஆயிரத்திலிருந்து 10 லட்சத்து 98 ஆயிரமாக அதிகரித்தது.

இத்தனை பள்ளிக்கூடம் திறந்து வைத்து, மதிய உணவு கொடுத்தாலும் வறுமையில் வாடுபவர்கள் கல்விக் கட்டணம் கட்ட வழியில்லாமல் தடுமாறுவதைக் கண்டார். இதனாலும் மாணவர் வருகை சிரமப்படுவதை அறிந்தார். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில்தான் கல்விக்குக் கட்டணம் வசூலிக்கப்பட்டது.

பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம்

உடனே, பத்தாம் வகுப்பு வரை இலவசக் கல்வித் திட்டத்தையும் 1960-ல் கொண்டு வந்தார். ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 1,200--க்குக் குறைவாக வருமானம் உள்ள குடும்பத்தின் மாணவனுக்கு இலவசக் கல்வி அளிக்கப்பட்டது. இந்த வருமான உச்ச வரம்பு பின்னர் ரூபாய் 1,500 ஆக உயர்த்தப்பட்டது. 1962-ல், 'வருமான உச்ச வரம்பு இன்றி எல்லோருக்கும் இலவசக் கல்வி' என்று காமராஜர் அறிவித்தார்.

1963--ல் தமிழக அரசாங்கத்தின் ஓர் ஆண்டு மொத்த செலவே ரூபாய் 127 கோடியே 19 லட்சம்தான். ஆனால், அதில் கல்விக்கு மட்டுமே ரூபாய் 27 கோடியே 58 லட்சம் ஒதுக்கப்பட்டது. இந்த ஒதுக்கீடுகளில் இருந்தே கல்வியின் மீது காமராஜர் எத்தனை ஆர்வமாக இருந்தார் என்பதை

https://t.me/tamilpdfebooks

அறிந்துகொள்ள முடியும்.

கல்வி என்பது உயர்குடிப் பிறந்தோர் மற்றும் பணக்காரர் வீட்டுப் பிள்ளைகளுக்கு மட்டும்தான் என்ற நிலைமை மாறியது. ஏழை, எளியவர்களுக்கும் கல்வி என்றானது.

பெண் கல்வியும் பெருகியது. கிராமங்களில் சிறுமிகள் கல்வி கற்றார்கள். கையெழுத்துப் போடு என்று பேப்பரைக் காட்டினால், இடது கைக் கட்டை விரலை நீட்டுகிறவர்களே அந்தக் காலத்தில் அதிகம். இந்த நிலை மாறியது. காமராஜர் ஆட்சியால் இளைய தலைமுறையினர், கல்வி நலம் பெற்றார்கள்.

மாணவர்கள் ஒன்றாக அமர்ந்து படித்தாலும், உணவு உண்டாலும் அவர்களுக்குள் பணக்காரர், ஏழை என்ற பாகுபாடு இருக்கத்தான் செய்தது. அந்தக் காலத்தில் பணக்கார வீட்டுப் பிள்ளைகள் பள்ளிகளுக்கு ஆடம்பர உடைகளில் வந்தார்கள். ஏழை, எளிய பிள்ளைகள் கிழிசல் சட்டைகளைப் போட்டுக் கொண்டு பள்ளிக்கூடம் வந்தார்கள். இந்த இடைவெளி மாணவர்களுக்கு நல்லது அல்ல என்ற முடிவுக்கு வந்தார் காமராஜர். அதனால், பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் சீருடைத் திட்டம் கொண்டுவந்தார். தமிழகம் எங்கும் சீருடைத் திட்டம் அமல்படுத்தப்பட்டது. சீருடைத் திட்டத்தால் பள்ளிகளில் ஏழை, பணக்காரப் பாகுபாடு நீங்கியது.

இதைப் போலவேதான் இலவச மதிய உணவுத் திட்டத்தால்,- பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் புத்தக மூட்டையோடு கட்டுச்சோற்று மூட்டையையும், சுமக்கும் நிலைமை மாறிற்று. இதனால் மிகவும் பின் தங்கிய சமுதாயத்தினரும், ஏழை, எளியவர்களும்கூடத் தங்கள் பிள்ளைகளைப் பள்ளிகளுக்குத் தயங்காமல் அனுப்பி வைத்தார்கள். ‘வீட்டில் இருந்தால்தான் பசி, பட்டினி. பிள்ளை பள்ளிக்கூடம் சென்றாலாவது நாலு எழுத்துக் கற்றுக்கொள்ளும்.- மதியம் வயிறாரச் சாப்பிடும்’ என்று நினைத்துத் தங்கள் பிள்ளைகளைத் தயங்காமல் பள்ளிகளுக்கு அனுப்பி வைத்தார்கள்.

எல்லா கிராமங்களிலும் ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் திறக்கப் பட்டன. ஆனால், ஆயிரக்கணக்கான பள்ளிகளுக்கு ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமே. அத்தனை பள்ளிகளுக்கும், ஆசிரியர் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு எங்கே போவது என்ற கேள்வி ஒரு பெரிய பிரச்னையாக எழுந்தது. ஆனால், இதற்கும் ஒரு வழியைக் காமராஜரே, கண்டுபிடித்துச் சொன்னார்.

‘நாட்டில் படித்துவிட்டு வேலை கிடைக்காமல் ஆயிரக் கணக்கானவர்கள் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம், ஓராசிரியர் பள்ளிகளுக்கு ஆசிரியர்களாக நியமித்துவிடலாமே’ என்று யோசனை தெரிவித்தார் காமராஜர்.

பள்ளிக் கல்வி இயக்குநராக அன்றைக்கு இருந்த நெ.து.சுந்தரவடிவேலுவும் காமராஜர் யோசனையை ஏற்றுக் கொண்டார். தமிழகம் எங்கும் ஓராசிரியர் பள்ளிகளுக்கு வேலைக்கு ஆட்கள் அமர்த்தப்பட்டார்கள். இரண்டு, மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் அரசு

https://t.me/tamilpdfebooks

செலவிலேயே அவர்களுக்கு ஆசிரியர் பயிற்சி அளிக்கப்பட்டது.

ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில்...

படித்துவிட்டு வேலை இல்லாமல் தடுமாறிக்கொண்டு இருந்த ஆயிரக்கணக்கானவர்களுக்கு இந்தத் திட்டத்தால் வேலை வாய்ப்பு கிடைத்தது. ஆசிரியர்களின் தரம் சிறப்பாக இருந்தால்தான் ஆர்வத்துடன் படிப்பு சொல்லித் தருவார்கள். ஆதலால் அவர்களுடைய தரத்தை உயர்த்துவதற்காக சம்பள உயர்வு வழங்கப்பட்டது. ஆசிரியர்களுக்காக பென்ஷன்,பிராவிடண்ட் ஃபண்ட், இன்ஷூரன்ஸ் போன்ற திட்டங்களும் அமல்படுத்தப் பட்டன. கிராமங்களில் இருந்த ஆசிரியர்களுக்கு அரசாங்கமே வீடு கட்டிக் கொடுக்கும் திட்டமும் நடைமுறைப் படுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து எல்லா கிராமங்களிலும் இரவுப் பாடசாலைகள் தொடங்கப்பட்டன. முதியோர் கல்வியும் கற்பிக்கப்பட்டது.

ஏழை மாணவர்கள், பாடப் புத்தகங்கள், நோட்டுகள் வாங்குவதற்கு சிரமப்படுவதை அறிந்து, இலவசப் பாடப் புத்தகங்கள் கொடுத்தார். இந்தத் திட்டங்களுக்குப் பணக்காரர்களிடமிருந்து நிதி வசூல் செய்தார். பெரும்பாலான திட்டங்களில் அரசுப் பங்கு 60 சதவிகிதமாகவும், மக்கள் பங்கு 40 சதவிகிதமாகவும் இருக்கும்படி பார்த்துக்கொண்டார். முதன்முதலில் தமிழில் பாடப் புத்தகங்கள் வெளியிட வழி செய்தவர் காமராஜரே! கோவை அரசினர் கலைக் கல்லூரியில், மூன்று ஆண்டு பட்டப் படிப்பில் அரசியல் பாடங்களைத் தமிழில் கற்றுத் தருவதற்கும் காமராஜரே வழி செய்தார். இதைத் தவிர ஏழை, எளிய மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்கினார்.

தொழில் நுட்பம், கல்வித் துறை, மருத்துவத் துறை, வேளாண்மைத்

https://t.me/tamilpdfebooks

துறை, கால்நடைத் துறை, அரிசன நலத் துறை ஆகிய துறைகளில் மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்கி, இந்தத் துறையில் சிறந்த மாணவர்களை உருவாக்கி நாட்டுக்கு அவர்களை வழங்கினார் காமராஜர். இந்த உபகாரச் சம்பளத்தாலேயே மாணவர்கள் அதிக அளவு மேற்படிப்பு படித்தனர்.

மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, விவசாயம் மற்றும் தொழில் கல்லூரிகளில் படிக்கும் தகுதி உள்ள மாணவர்களுக்கு வட்டியில்லாத கடன் கிடைக்கவும் ஏற்பாடு செய்தார் காமராஜர். இவருடைய காலத்தில்தான் மருத்துவமனைகளில் நர்சிங் பயிற்சி வகுப்பு தொடங்கப்பட்டது. மேலும், உடற்பயிற்சிக் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் ஆகியவையும் தொடங்கப்பட்டன.

அறிவு வளர்ச்சியை கவனத்தில் கொண்டு, இந்தியாவிலேயே முதன்முதலாகப் பொது நூலகச் சட்டத்தை ஏற்படுத்தி, 454 கிளை நூலகங்களை காமராஜர் அமைத்தார். எல்லா மாவட்டங்களிலும், மாவட்ட மத்திய நூலகங்கள் இவ்வாறு ஏற்பட்டன. இந்த நூலகங்களுக்கு மக்களிடம் இருந்து நூல்களை வாங்கிக் கொடுத்தார். எந்த நேரமும் கல்வி, படிப்பு, மாணவர், ஆசிரியர் என்பதுதான் காமராஜரின் சிந்தனை. படிக்காத காமராஜர்தான் தமிழகத்தில் படித்தவர் எண்ணிக்கையை அதிகப்படுத்தினார்.

காமராஜரைப் படிக்காத மேதை என்பார்கள். ஆனால், காமராஜர் உண்மையிலேயே ஒரு படித்த மேதை. ஆம், அவர் முதல்வர் பதவிக்கு வந்ததும் தனது கல்வி அறிவை நாள்தோறும் வளர்த்துக்கொண்டார்.

மகாகவி பாரதியாரின் கவிதைகளை அவர் விரும்பிப் படித்தார். பிரயாணம் செய்தபோதெல்லாம் பாரதியின் கவிதைப் புத்தகத்தை உடன் எடுத்துச் சென்றார். தமிழ் நூல்களைப் படிப்பதில் ஆர்வம் காட்டினார். அன்றாடம் ஆங்கிலச் செய்தித் தாள்களையும் வரவழைத்துப் படித்தார். ஆங்கிலத்தில் நல்ல நூல்களையும் படித்தார். தனது கல்வியைத் தானே வளர்த்துக் கொண்ட காமராஜர்தான், ‘கல்வியில் சிறந்த தமிழகம்’ என்று தமிழகத்தைப் போற்றும் வண்ணம் செய்தார்.

மனிதாபிமானம்

டிசம்பர் 1955. காமராஜர் முதல்வராக இருந்த காலம். தென் மாவட்டங்களில் திடீரென்று புயலும் பேய் மழையும் தாக்கின. வானம் பார்த்த சீமை எனப்படும் ராமநாதபுர மாவட்டத்தில் வெள்ளப் பெருக்கால் பலர் வீடு இழந்தனர். தங்கள் உடமைகளை எல்லாம் இழந்து, பல்லாயிரக்கணக்கான மக்கள் பசியால் துடித்தனர். ரோடு, மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகள் பாதிக்கப்பட்டன. அப்போது, பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிடவும், பாதிக்கபட்டவர்களுக்கு ஆறுதல் கூறவும் முதல்வர் காமராஜர் உடனே கிளம்பினார். ஒரு கிராமத்தை முற்றிலும் நீர் சூழ்ந்துகொண்டது, வெளித் தொடர்பே அற்றுப் போனது. அடுத்த வேளை உணவுக்குக்கூட வழியில்லாமல் மக்கள் பட்டினியால் தவித்தனர்.

https://t.me/tamilpdfebooks



அதைக் கேள்விப்பட்ட காமராஜர், அவர்களுக்கு நிவாரணம் வழங்க அதிகாரிகளோடு புறப்பட்டார். ஆனால், அந்தப் பகுதிக்குச் செல்வதற்காக இருந்த ஒரே ஒரு பாலம் உடைந்து போய் இருந்தது. அதனால் அதிகாரிகள் காமராஜரிடம், "ஐயா, இதற்கு மேல் நாம் செல்ல முடியாது. நிவாரணம் வழங்கும் பணியை நாங்கள் எப்படியாவது கவனித்துக்கொள்கிறோம். நீங்கள் மற்ற இடங்களுக்குச் சென்று மக்களுக்கு ஆறுதல் சொல்லுங்கள்" என்றார்கள்.

ஆனால், காமராஜர், "அதிகாரிகளே எல்லாத்தையும் கவனிக்கச் சொல்றதுன்னா, நான் கோட்டையிலிருந்தே உத்தரவு போடலாமே. மக்கள் கஷ்டத்தை நான் நேரடியாப் பாக்கணும். தேவையானா நிவாரணத்துக்கு உடனே ஏற்பாடு செய்யணும். அவங்களுக்கு ஆறுதல் சொல்லணும். நம்மளைக் காப்பாத்த அரசாங்கம் இருக்குன்னு அவங்க நம்பணும், அதுக்குத்தான் நானே வந்தேன்" என்று சொல்லியபடியே வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு, துண்டைத் தலையில் முண்டாசாகக் கட்டிக்கொண்டு தண்ணீரில் இறங்கிவிட்டார். சாரக் கயிற்றைப் பிடித்துக்கொண்டு மார்பளவு நீரில் கால்வாயைக் கடந்து மறு கரைக்குச் சென்றார்.

தமிழக முதல்வரே அச்சமின்றி தண்ணீரில் இறங்கிவிட்டதால், அதிகாரிகளும் வேறு வழி இன்றி அவரைப் பின் தொடர வேண்டியதாயிற்று. மழைநீர் வடியும் வரை யாரும் நம்மைக் கவனிக்கப் போவதில்லை என்று பயந்து கிடந்த மக்கள், முதல்வரே நிவாரணப்

https://t.me/tamilpdfebooks

பொருட்களுடன் வந்து நின்றதைப் பார்த்து ஆனந்தப்பட்டனர். துன்ப வேளையிலும் காமராஜருக்கு நன்றி சொன்னார்கள். அவர்கள் வாழ்வுக்குத் தேவையான வசதிகளுக்கு உத்தரவு இட்டு, மறுநாளும் காமராஜர் திட்டமிட்டபடியே பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து ஆறுதல் வழங்கினார்.

காமராஜரின் இந்தச் செயலைப் பாராட்டி அண்ணா, தன்னுடைய திராவிட நாடு இதழில் ஒரு கடிதம் எழுதி இருந்தார்.

‘சேரிகள், பாட்டாளிகளின் குடிசைகள், உழவர் உழன்று கிடக்கும் குச்சுகள் யாவும் நாசமாகிவிட்டன. வீடில்லை, வயலில்லை, உள்ளத்தில் திகைப்பின்றி வேறில்லை. ஆனால், தம்பி, நமது முதலமைச்சர் காமராஜர் அந்த மக்கள் மத்தியில் இருக்கிறார். பெரும் நாசத்துக்கு ஆளான மக்களின் கண்ணீரைத் துடைத்திடும் காரியத்தில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார். கவலையில் இருக்கும் எமக்கு, இதோ ஆறுதல் அளிக்க எமது முதலமைச்சர் வந்துள்ளார். எமது கண்ணீரைக் காண்கிறார். தன் கண்ணீரைச் சிந்துகிறார். ஆறுதலை அள்ளித் தருகிறார். கோட்டையிலே அமர்ந்துகொண்டு உத்தரவு போடும் முதலமைச்சர் அல்ல இவர். மக்களை நேரில் சந்திக்கும் தலைவர் என்று மக்கள் வாழ்த்துகின்றனர். தம்பி! சொல்லித்தானே ஆக வேண்டும். முதலமைச்சர் காமராஜரின் பொறுப்பு உணர்ச்சியைக் கண்டு நாம் பெருமைப்படுகிறோம்’ என்று மனதாரப் பாராட்டி எழுதியிருந்தார்.



https://t.me/tamilpdfebooks

எதிர்க் கட்சி பாராட்ட வேண்டும் என்பதற்காக காமராஜர் இந்தச் செயலில் ஈடுபடவில்லை. அவரது இயல்பே மக்களோடு மக்களாக இருப்பதுதான். ஜாதி, மதம், கட்சி, மொழி என்று எந்தப் பாகுபாடும் இன்றி எல்லா மக்களுக்கும் உழைத்தார் காமராஜர். கல்வியில் மட்டுமின்றி விவசாயம், தொழில் துறைகளிலும் பெரும் புரட்சியை செய்தார் காமராஜர்.

குமரிப் போராட்டம்

சென்னை மாகாணம், பசல் அலி கமிஷனின் பரிந்துரையின்படி கேரளம், ஆந்திரம், கர்நாடகம் மற்றும் சென்னை மாகாணம் என்று நான்காகப் பிரிக்கப்படும் நிலை ஏற்பட்டது.

அன்றைய திருவாங்கூர் பகுதியில் இருந்த தமிழ்ப் பகுதிகளான கொச்சி, சித்தூர், தேவிகுளம், பீர்மேடு, உடும்பன் சோலை, செங்கோட்டை, நெய்யாற்றின் கரை, வளவன்கோடு, கல்குளம், அகஸ்தீஸ்வரம், தோவாளை ஆகிய வட்டங்களைக் கொண்ட 2,000 சதுர மைல் பரப்பளவைத் தமிழ்நாட்டுடன் இணைக்க வேண்டும் என்ற போராட்டத்தில் மக்கள் இறங்கினர்.

தென் எல்லைப் போராட்டத்தை காந்திராமன், நத்தானியேல்,பி.எஸ்.மணி, நூர்முகம்மது, குஞ்சன் நாடார், மார்ஷல் நேசமணி போன்ற தலைவர்கள் தீவிரப்படுத்தினார்கள். ஆனால், தென் கன்னடம், காசர்கோடு, குடகு, மலபார் மாவட்டம் (கொச்சி, சித்தூர் உட்பட), உதகமண்டலம், கோவை மாவட்டத்தின் மேற்குப் பகுதி, தற்போதைய திருவாங்கூர் கொச்சி தாலுகாக்கள், லட்சத் தீவுகள், மாலத் தீவுகள் ஆகியவை கேரளத்துக்கு வேண்டும் என்று அங்கேயும் பெரிய போராட்டம் நடந்தது.

பட்டம் தாணுபிள்ளை தலைமையில் இருந்த அன்றைய திருவாங்கூர் கொச்சி அரசு, போராட்டத்தை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கியது. போராட்டத்தில் நடந்த துப்பாக்கிச் சூடு ஒன்றில், 22 தமிழர்கள் சம்பவ இடத்திலேயே இறந்தார்கள்.

சிலம்புச் செல்வர் ம.பொ.சி-யின் தமிழரசுக் கழகம், பொதுவுடைமை இயக்கத்திலிருந்து தோழர் ப.ஜீவானந்தம், நாடக உலகத்திலிருந்து டி.கே.எஸ். சகோதரர்கள், திரைப்பட உலகத்திலிருந்து கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், இலக்கிய உலகிலிருந்து பன்மொழிப் புலவர் கா.அப்பாத்துரை போன்றோர் போராட்டத்துக்கு முழு ஆதரவு கொடுத்தார்கள். அதே நேரத்தில் ம.பொ.சி-யின் முயற்சியால் பேரறிஞர் அண்ணா தலைமையில், திராவிட இயக்கங்கள் உட்பட அனைத்துக் கட்சி ஆதரவுடன் தேவிகுளம், பீர்மேடு பிரச்னைக்காகத் தமிழகத்தில் ஓரிரு முறை ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், கடை அடைப்புகள் நடந்தன.

https://t.me/tamilpdfebooks

காமராஜருடன் ம.பொ.சி.

1956-ல் கேரளத்திலிருந்து தமிழகத்துடன் இணைக்கப்பட வேண்டும் என்று முன்வைக்கப்பட்ட 2,000 சதுர மைல் பரப்பளவில் 600 சதுர மைல் பரப்பளவு மட்டுமே தமிழகத்துடன் இணைக்கப்பட்டது. இந்தப் போராட்டத்தின் பயனாகத்தான் ஒரு காலத்தில் கேரளத்தின் நெற்களஞ்சியமாகத் திகழ்ந்த கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்தோடு இணைந்தது. தேவிகுளம், பீர்மேடு போன்ற பகுதிகள் கேரளத்திலேயே தங்கிவிட்டது.

ஆனால், இந்தப் போராட்டத்துக்கு தென் தமிழக மக்களும், காங்கிரஸ் கட்சியும் முழு ஆதரவு தரவில்லை. காமராஜர் இந்த விவகாரத்தில் முழுமையான தேசியவாதியாகவே நடந்து கொண்டார். ஒரு தமிழனாக இந்தப் பிரச்னையை அவர் அணுகவே இல்லை. "எல்லாமே இந்தியாவுக்குள்ளதான இருக்கு? இதை எல்லாம் பெரிதுபடுத்தக் கூடாது" என்று அழுத்தமாகச் சொல்லி பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

அன்று காமராஜர் செய்த தவறால்தான் இன்றும் முல்லைப் பெரியாறு, கண்ணகிக் கோட்டம் என்று ஏராளமான பிரச்னைகள் இருக்கின்றன என்பவர்கள் உண்டு. ஆனால், அன்றைய சூழலில் ஒரு தேசியவாதியாக, காங்கிரஸ்காரர் என்ற பார்வையில் பிரச்னையைப் பார்த்ததால்தான் காமராஜர் அந்த முடிவுகளுக்கு உடன்பட்டார் என்பது வரலாறு.

ஆவடி காங்கிரஸ் மாநாடு

காமராஜர் முதல்வர் பொறுப்புக்கு வந்த பின்னர் நடந்த மிகப்பெரிய விழா, 1956, ஜனவரி 20-ம் தேதி, ஆவடியில் நடந்த 'ஆவடி மாநாடு'தான்.

https://t.me/tamilpdfebooks

இந்த மாநாடு நடைபெறுவதற்காக ஓர் ஊரையே நிர்மாணித்து, அந்த இடத்துக்கு அரசியல் குருவான சத்தியமூர்த்தியின் நினைவாக, ‘சத்தியமூர்த்தி நகர்’ என்று பெயர் சூட்டினார். மாநாட்டு அலங்காரம் சிறப்புற இருக்க வேண்டும் என்று சினிமா உலகப் பிரபலம் ஆனந்த விகடன் ஆசிரியர் எஸ்.எஸ்.வாசனிடம் ஒப்படைத்தார். அதைப் போல ஒவ்வொரு பிரிவுக்கும் தகுதியான ஆட்களைத் தேர்ந்தெடுத்து பொறுப்புகளை ஒப்படைத்தார். இதைப் போல பிரமாண்ட மாநாடுகளை நடத்தும் சக்தி, தமிழகத்துக்கு கிடையாது என்ற அவப்பெயர் இருந்தது. அதனால்தான், பிரமாண்ட மாநாடுகள் பெரும்பாலும் வடநாட்டில் நடக்கும். ஆனால், மாநாட்டை அற்புதமாக நடத்தி, ஜெயித்துக் காட்டினார் காமராஜர்.

மாநாட்டு அலங்காரங்களைப் பார்த்த நேரு, "இந்த சத்தியமூர்த்தி நகரை இத்தனை பேரழகுடன் படைத்த விஸ்வகர்மாவாகிய முதன்மந்திரி காமராஜரை வாயார வாழ்த்துகிறேன்" என்று புகழ்ந்தார். மாநாட்டில் சத்தியமூர்த்தி சிலை திறக்கப்பட்டது.

இந்த மாநாட்டில்தான், ‘சமதர்ம சோஷலிச சமுதாயத்தை அமைப்பதே குறிக்கோள்’ என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மாநாட்டைப் பார்க்க அவருடைய தாயார் சிவகாமி ஆசைப் பட்டதால், அதற்கு அனுமதி கொடுத்தார். மாநாட்டு மேடையில் நேருவுடன் சேர்ந்து புகைப்படம் எடுத்துக்கொண்டார் சிவகாமி.

மாநாட்டில் காமராஜர், "கடுமையான உழைப்பே மக்களை வறுமையிலிருந்து மீட்கும். செல்வம் ஒரு சிலர் கைகளில் குவிந்திருக்கக் கூடாது. சமதர்ம சமுதாயம் மலர வன்முறை தேவை இல்லை; அது விரும்பத்தக்கதும் அல்ல. காந்திஜி காட்டிய அகிம்சை வழியில் சமதர்ம சமுதாயம் அமைப்போம்" என்று பேசினார்.

https://t.me/tamilpdfebooks

ஆவடி காங்கிரஸ் மாநாட்டில்...

லட்சக்கணக்கான மக்கள் கூடிய மாநாடு, தமிழ்நாட்டு காங்கிரஸ் கட்சிக்கும், காமராஜருக்கும் அகில இந்திய அளவில் புகழ் பெற்றுத் தந்தது. மாநாட்டுக்கு, முதல் நாள் ஐந்து லட்சம் பேரும், இரண்டாவது நாள் பத்து லட்சம் பேரும், மூன்றாவது நாள் ஏழு லட்சம் பேரும் கூடினார்கள். மாநாட்டுக் கட்டணமாக ஆளுக்கு ஒரு ரூபாய் வசூல் செய்யப்பட்டாலும் கூட்டம் அலை மோதியது.

சிறப்பு விருந்தினராக மாநாட்டுக்கு வந்திருந்தார் யுகோஸ்லோவிய அதிபர் மார்ஷல் டிட்டோ.

ஒரு முறை ஒலிபெருக்கி சரியாக வேலைசெய்யவில்லை என்றதும், கூட்டத்தினர் சத்தம் போட்டார்கள். உடனே மேடையில் இருந்த காமராஜர், துண்டை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு, கூட்டத்தில் இறங்கி அனைவரையும் அமைதிப்படுத்தினார்.

இதைக் கண்டு வியந்த டிட்டோ அதே மேடையில், "நாங்கள் ஜனநாயகத்தைப்பற்றி பேசுகிறோம். இங்கேதான் ஒரு முதலமைச்சர் மக்களோடு மக்களாக நெருங்கி, பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறார். இதுதான் ஜனநாயகம்" என்று பாராட்டினார். மாநாட்டுக்கு வந்த தொண்டர்களுக்கு உணவு, தண்ணீர், கழிவறை வசதி என்று எல்லாவற்றையுமே காமராஜர் பார்த்துப் பார்த்து செய்தார். இந்திய அளவில், மாநாடு காமராஜருக்கு நல்ல பெயர் வாங்கிக் கொடுத்தது.

https://t.me/tamilpdfebooks

6

ஓய்வறியா உழைப்பு 1957-1962

முதலமைச்சர் பதவிக்கு வந்த பிறகும், இப்போது காமராஜர் நினைவு இல்லமாக இருக்கும், சென்னை, தியாகராய நகர், திருமலைப் பிள்ளை வீதியில் உள்ள 8-ம் நம்பர் வீட்டில்தான் இருந்தார். முதல் மந்திரியாக இருந்த காலத்தில் போலீஸ் காவல் இருந்தாலும், அவர்கள் அதிகாரமும் செலுத்த முடியாதவர்களாக இருந்தார்கள். அதனால் காமராஜரை எந்த நேரமும் யாரும் வந்து பார்க்க முடிந்தது.

தினமும், குறைந்தது ஐம்பது பேர் முதல் இருநூறு வரை காமராஜரை சந்திக்க வந்தனர். முடிந்தவரை அனைவருக்கும் ஒரு சில நொடிகளாவது ஒதுக்கிப் பேசுவார். அரசியல்வாதி, அதிகாரி ஆகியோரைப்பற்றி, காவல் துறையைப்பற்றி குறைகூறி வருபவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், 'ஆகட்டும் பார்க்கலாம்' என்று சொல்வார்.

சட்டத்துக்கு உட்படாத காரியமாக இருந்தால் சுற்றி வளைக்காமல், 'அது சரிப்படாது', 'அது முறையில்லை' என்று பட்டென்று சொல்லிவிடுவார், அவர்களிடம் அதற்கு மேல் எதுவும் பேசமாட்டார்.

https://t.me/tamilpdfebooks

கர்ம வீரர் – நாட்டு நலப்பணித் திட்டம்

சிபாரிசு கேட்டு வருபவர்களிடம், "எல்லாம் முறைப்படி நடக்கும், நாமே சட்டத்தை மீறலாமா?" என்று, எதிர்க் கேள்வி கேட்டு அனுப்பிவிடுவார். நண்பர், ஊர்க்காரர், தியாகி ஆகியோருக்குக் கூடுதலாக சில நிமிடங்கள் ஒதுக்குவார். யாருக்கும், எப்போதும் பொய்யான வாக்குறுதிகளைக் கொடுக்க மாட்டார். 'யோசித்துச் சொல்கிறேன்', 'ஒரு வாரம் போகட்டும்' என்று சொல்லி நாட்களைக் கடத்த மாட்டார். சரி என்று தோன்றுவதை அந்தக் கணமே முடித்துக் கொடுத்துவிடுவார்.

எப்போதும் எளிமையாக இருப்பதையே விரும்பினார். உணவு, உடை, பேச்சு இவற்றில்கூட எளிமையைக் கடைப்பிடித்தார்.

காலையில் எத்தனை மணிக்கு எழுப்ப வேண்டும் என்று உதவியாளரிடம் சொல்லிவிட்டுத்தான் காமராஜர் மாடியில் இருக்கும் படுக்கை அறைக்குச் செல்வார். படுக்கை அறையை உட்புறமாகப் பூட்டிக்கொள்ள மாட்டார். ஆனால், வேறு யாரும் அவருக்குத் தொந்தரவு தரக்கூடாது என்று, அவரது உதவியாளர் வெளிப்புறமாகப் பூட்டிவிடுவார்.

படுக்கையில் படுத்துக்கொண்டே புத்தகங்களைப் படிப்பதில் அவருக்கு மிகவும் விருப்பம். இரவு 12 மணிக்கு மேல் படுக்கச் சென்றாலும் ஒரு சில நிமிடங்களாவது புத்தகம் படித்துவிட்டுத் தான் தூங்குவார். தூங்கும்போது குறட்டைச் சத்தம் பலமாக இருக்கும். அதனால் எங்கே சென்றாலும், தனியாகவே படுத்துக் கொள்வார். காமராஜர் எழுப்பச் சொன்ன நேரத்தில் உதவியாளர் தாழ்ப்பாளைத் திறந்து, அவர் அருகே சென்று அவரைத் தொட்டுத்தான் எழுப்ப வேண்டும்.

https://t.me/tamilpdfebooks

உடனே எழுந்து படுக்கையில் சம்மணமிட்டு அமர்ந்து ஃபில்டர் காபியைக் குடிப்பார். காலைச் செய்தித்தாள்கள் முழுவதையும் படுக்கையில் அமர்ந்தபடியே படித்து முடித்து விடுவார். அதன்பின் கண்ணாடி முன் அமர்ந்து தானே முகச் சவரம் செய்துகொள்வார். பிறகு அவரது நேர்முக உதவியாளர் அன்றைய அலுவல்களைப்பற்றி நினைவூட்டுவார்.

காலை 8.30 மணிக்கு மேல் 9-க்குள் மாடியிலிருந்து இறங்கி கீழ் தளத்துக்கு வருவார். அவரைச் சந்திக்க வந்திருப்பவர்களை ஒவ்வொருவராக அழைத்துப் பேசுவார்.

அதன்பின் அவருக்கு வந்த கடிதங்களை ஒவ்வொன்றாக எடுத்துப் படிப்பார். பெரும்பாலான கடிதங்களுக்கு பதில் எழுத வேண்டிய தேவை இருக்காது. ஆனால், எந்த அலுவலகத்துக்கு அனுப்ப வேண்டுமோ, அங்கே அனுப்பிவைக்கச் சொல்வார். மிக முக்கியமான கடிதங்களுக்கு மட்டும் எழுத வேண்டிய பதிலை சுருக்கமாகச் சொல்வார்.

அதன்பின் மாடிக்குச் சென்று குளித்து, சலவை செய்த உடைகளை அணிந்து தயாராகிவிடுவார். அதற்குள் அவர் கையெழுத்துப் போடவேண்டிய கடிதங்கள் டைப் செய்யப்பட்டு தயாராக இருக்கும். அவற்றைப் படித்துப் பார்த்து, திருத்தங்கள் செய்ய வேண்டியிருந்தால் திருத்தி, மீண்டும் டைப் செய்து கையெழுத்துப் போடுவார்.

காலை 11 மணிக்கு கைக்குத்தல் அரிசிச் சாதம் சாப்பிடுவார். காலை 11.30 மணி சமயத்தில் கோட்டைக்குப் புறப்படுவார். அங்கே முதலில், காத்திருக்கும் பார்வையாளர்களை சந்தித்து அனுப்பிவிடுவார். அதன்பின் அரசு அதிகாரிகள் அவரைச் சந்தித்து உரையாடுவார்கள். பகல் 1.30 வரை கோட்டையில் இருப்பார். பிறகு வீடு திரும்பி சற்றே ஓய்வு எடுப்பது உண்டு.

மதியச் சாப்பாடு மிகவும் சுருக்கமான சைவ சாப்பாடாகவே இருக்கும். என்றாவது அரிதாக முட்டை சாப்பிடுவார். அதைப் போலவே எப்போதாவது ரொட்டி வாங்கி, காபியுடன் சேர்த்து சாப்பிடுவார். கோட்டையிலேயே பகல் 2 மணிக்கு மேல் அலுவல் இருந்தால் 3 மணிக்கு ஒரு தோசை, ஒரு காபி சாப்பிடுவார்.

மாலையிலும் காமராஜரைப் பார்வையாளர்கள் சந்திக்க முடியும். அதன்பின் மாலை நேர அலுவல்களில் கலந்துகொள்வார். அவர் கலந்துகொள்ள வேண்டிய நிகழ்ச்சிகளுக்குக் குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னதாகவே சென்றுவிடுவார். காலம் தவறுவது அவருக்கு எப்போதும் பிடிக்காது. மாலையில் வீட்டிலிருந்து புறப்படும்முன், மீண்டும் ஒரு முறை குளித்துவிட்டு உடை மாற்றிக்கொண்டுதான் புறப்படுவார். இரவில் திரும்பி வந்த பிறகும் ஒரு குளியல் உண்டு.

https://t.me/tamilpdfebooks

நேருஜியுடன் உணவு வேளையில்...

இரவில் 2 அல்லது 3 இட்லிகளும் தேங்காய் சட்னியுமே அவரது உணவு. அதன்பின் ஒரு டம்ளர் பால். அதில் ஈஸ்ட் பவுடரும், தேனும் கலந்திருக்கும். அவருக்கு சர்க்கரை நோய் வந்தபின் பாலுக்குப் பதில் காம்ப்ளான் அருந்துவார். அதன்பின் தனது படுக்கை அறைக்குச் சென்று படிக்க ஆரம்பித்துவிடுவார்.

காமராஜர் எப்போதும் பையில் பேனாவோ பென்சிலோ வைத்திருந்தது கிடையாது. கையெழுத்து போடும்போது உதவியாளரிடம் பேனா வாங்கிக் கையெழுத்து போடுவார். கைக் கடிகாரமோ, பாக்கெட் கடிகாரமோ அவர் வைத்திருந்தது இல்லை. அதைப் போலவே தனது சட்டைப் பையில் பணம், சில்லறைக் காசுகளும் வைத்திருந்தது இல்லை.

மாலையில் வேறு அலுவல்கள் இல்லை என்றால் ராட்டையை எடுத்து வைத்துக்கொண்டு நூல் நூற்பதும் உண்டு. அந்த ராட்டை இன்னமும் அவரது நினைவு இல்லத்தில் இருக்கிறது.

ஒரு நாளில் 3 அல்லது 4 முறை உடை மாற்றுவார். பளிச்சென்று சலவை செய்யப்பட்ட கதர் வேட்டி, சட்டை, துண்டு அணிவார். பனியனோ அண்டர்வேரோ அணிந்தது இல்லை. கழற்றிய ஆடைகளை மடித்து உரிய இடத்தில் வைத்துவிடுவார். பின்னர் அவை சலவைக்குப் போகும். வேட்டியோ சட்டையோ கிழியும் வரை அவற்றை உபயோகிப்பார். பெரும்பாலும் குளிர்ந்த நீரில்தான் குளியல் இருக்கும், பகலில் மட்டும் தலைக்குக் குளிப்பார். குளிர் காலத்தில் மட்டுமே வெதுவெதுப்பான நீரில் குளிப்பார்.

https://t.me/tamilpdfebooks

முதலமைச்சராக இருந்தபோது, அவர் வீட்டில் அரசு சார்பில் ஒரு தொலைபேசி இருந்தது. வெளி ஊர்களுக்கு எப்போது பேசினாலும் பேசிய நேரம், பேசிய ஊர் முதலியவற்றை ஒரு நோட்டில் குறித்து வைக்க வேண்டும். அப்போது எல்லாம் எஸ்.டி.டி. வசதி கிடையாது.

டிரங்கால் பதிவு செய்துதான் பேச வேண்டும். டெலிபோன் பில் வந்தவுடன் அந்த நோட்டில் உள்ள விவரங்களைப் பார்த்து அரசு சம்பந்தப்பட்ட தொலைபேசி அழைப்புக்கான கட்டணத்தை மட்டும் அரசுக் கணக்கில் செலுத்தவும், மீதியை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி கணக்கில் செலுத்தவும் ஏற்பாடு செய்வார்.

முதலமைச்சருக்கான சம்பளத்தை அரசு காசோலையாகவே வழங்கும். அதைப் பணமாக மாற்றுவதற்காகவே காமராஜரின் பெயரில் ஒரு வங்கிக் கணக்கு இருந்தது. ஆனால், சம்பளம் முழுவதையும் காமராஜர் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியிடம் கொடுத்துவிடுவார். அந்தக் கணக்கை கட்சிதான் நிர்வகித்து வந்தது.

முதல்வர் பதவிக்கு வரும்வரை, காமராஜர் தன் தாய்க்கு மாதம்தோறும் ரூபாய் 120 அனுப்பி வைத்தார். அதன்பின் மீண்டும் மீண்டும் அவருடைய தாய் கோரிக்கை வைக்கவே ரூபாய் 150 அனுப்ப ஏற்பாடு செய்தார். அதன்படி அவரது அம்மாவுக்குப் பணத்தை காங்கிரஸ் கமிட்டிதான் அனுப்பி வைக்கும். கட்சிக்காக டெல்லிக்கு விமானப் பயணம் செய்தால் விமான டிக்கெட்டை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிதான் வாங்கும். தியாகிகள் யாராவது பண உதவி கேட்டு வந்தால் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு ஒரு கடிதம் கொடுப்பார். அங்கே அவரது கடிதத்தைக் காட்டி பணம் பெற்றுக்கொள்ளலாம்.

மாதத்தில் பாதி நாட்கள்தான் சென்னையில் இருப்பார். மற்ற நாட்களில் தமிழகம் எங்கும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு இருப்பார். முதல்வருக்குப் பயணப்படி உண்டு. ஆனால், காமராஜர் முதலமைச்சராக இருந்த காலத்தில் பயணப்படி கோரியதும் இல்லை, பெற்றதும் இல்லை. வெளியூர்களில் பயணம் செய்யும்போது பயணிகள் விடுதியில்தான் பெரும்பாலும் தங்குவார். பயணிகள் விடுதிக்கான வாடகையை, அந்தந்த ஊர் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி கொடுக்க வேண்டும்.

காமராஜரின் கார் டிரைவராக ஒரு போலீஸ்காரர்தான் இருந்தார். அந்த டிரைவருக்கான சம்பளத்தையும் காமராஜரே கொடுத்துவிடுவார். பெரும்பாலும் யாருடைய மனதும் நோகும்படி பேசமாட்டார். ஆனால், பொய் சொல்வதாகத் தெரிந்தால், சொன்ன தகவலையே திருப்பித் திருப்பிச் சொன்னால், சொல்வதைப் புரிந்துகொள்ளாமல் இருந்தால் அவருக்கு சுருக் என்று கோபம் வரும். ஆனால், அந்தக் கோபம் சில கணங்கள் மட்டுமே நீடிக்கும், விரைவில் சாந்தம் அடைந்துவிடுவார்.

எந்த நிகழ்ச்சிக்குப் போனாலும், பேசுவதற்குத் தனியே குறிப்புகள் எடுக்க மாட்டார். மனதில் தோன்றியதை இயல்பாகப் பேசுவதையே பாணியாகக் கடைப்பிடித்து வந்தார்.

வீட்டுக்கு வருபவர்களுக்கு எந்தத் தனி கவனிப்பும் இருக்காது.

https://t.me/tamilpdfebooks

எப்போதும் அவருக்கும் உதவியாளருக்கும் மட்டுமே உணவு சமைக்கப்படுவது வழக்கம். ஆதலால், சாப்பிடும்போது யாராவது வந்தால் அவருடன் பேசிக்கொண்டே சாப்பிடுவாரே தவிர, வந்தவரை உணவு சாப்பிடச் சொல்ல மாட்டார். நடைமுறைக்கு சாத்தியம் இல்லாத விஷயங்களைப் பற்றி பேசுவதைத் தவிர்த்துவிடுவார். அழகு உணர்ச்சியைவிட மக்களின் அன்றாடப் பிரச்னைகள் தான் முக்கியம் என எண்ணியவர். இதற்கு உதாரணம் - சென்னைத் துறைமுக விரிவாக்கத் திட்டத்தைச் சொல்லலாம்.

சென்னை துறைமுக விரிவாக்கத் திட்டத்தின்போது மத்திய அரசு, கோட்டைக்கு எதிரே இருக்கும் இடத்தைத் தேர்ந்தெடுத்தது. ஆனால், தமிழக அரசு அதிகாரிகள், 'அந்த இடத்தில் துறைமுகம் அமைத்தால் சென்னையின் அழகு கெட்டுப்போய்விடும். அதனால் ராயபுரம் பகுதியில் விரிவாக்கப் பணி மேற்கொள்ளலாம்' என்று பதில் அனுப்பினார்கள்.

ஆனால், அதற்கு மத்திய அரசு ஒப்புக்கொள்ளவில்லை. 'தற்போது தேர்ந்தெடுக்கப்பட்ட இடம்தான் சரியாக இருக்கும். அதனால் அழகு உணர்ச்சி முக்கியமா அல்லது மக்கள் தேவை முக்கியமா என்பதை முடிவு செய்துகொள்ளுங்கள்' என்று பதில் அனுப்பியது. விவகாரம் காமராஜரிடம் சென்றது. உடனே, "எனக்கு அழகைவிட தேவைதான் முக்கியம்" என்று சொல்லி, மத்திய அரசு தேர்ந்தெடுத்த இடத்திலேயே துறைமுக விரிவாக்கப் பணிகளை செய்ய வைத்தார்.

இதைப் போலவே, இப்போது ரிசர்வ் வங்கி இருக்கும் கட்டடத்துக்கு அருகே இருக்கும் பாலம் கட்டும் காலத்திலும் ஒரு சுவாரஸ்யம் நடந்தது. அந்த இடத்தில் ரயில்வே கிராசிங்கை கடந்து செல்ல மக்கள் மிகவும் சிரமப்பட்டார்கள். மேம்பாலம் அமைப்பதா அல்லது தரைவழிப் பாலம் அமைப்பதா என்பதைக் குறித்து பலத்த குழப்பம் நிலவியது. தரைப் பாலமே சரியாக இருக்கும் என காமராஜர் நினைத்தார். ஆனால், அதை ஆய்வு செய்த அதிகாரிகள், தரைப் பாலம் கட்டினால் ரிசர்வ் வங்கியின் அடித்தளம் பாதிக்கப்படலாம், மேலும், கடல் அருகில் இருப்பதால், தண்ணீர் உட்புறம் ஊற வாய்ப்பு இருக்கிறது என்று காமராஜரிடம் சொன்னார்கள்.

அவர்கள் சொன்னதைக் கேட்டுக்கொண்ட காமராஜர், "முடியாதுன்னு சொல்றதுக்கா நீங்க படிச்சீங்க? அங்கே தரைப் பாலம்தான் கட்டுறோம். எந்த குறைபாடும் வராம எப்படிக் கட்டுறதுன்னு பாருங்க. இந்த உலகத்துல மனுஷனால முடியாத காரியம் எதுவுமே கிடையாது" என்று சொன்னார். அதற்குப்பின் மேலும் சில வல்லுநர்கள் வரவழைக்கப்பட்டு, ஆலோசனை செய்யப்பட்டு, நினைத்தபடியே வெற்றிகரமாக தரைப் பாலம் அமைத்தார்.

மீண்டும் முதல்வர்!

காமராஜர் வாழ்வில் 1957-ம் ஆண்டு ஒரு முக்கிய திருப்புமுனை. எதிர்பாராத தருணத்தில்தான் முதல்வர் பதவிக்கு வந்திருந்தார் காமராஜர். அது வரை காங்கிரஸ் கட்சிக்காக மட்டுமே தேர்தல் வேலைகள் செய்து வந்தார். முதல்வர் வேட்பாளர் யார் என்பதைச்

https://t.me/tamilpdfebooks

சொல்லி ஓட்டுக் கேட்கும் பழக்கம் காங்கிரஸ் கட்சியில் இல்லை. காங்கிரஸ் வெற்றிபெற்றதும் எம்.எல்.ஏ-க்கள் ஒன்றுகூடி முதல்வர் பதவிக்குத் தகுதியானவரைத் தேர்ந்தெடுப்பார்கள். ஆனால், இந்தத் தேர்தலில்தான் முதல்வர் வேட்பாளர் யார் என்பது மக்களுக்கு முன்கூட்டியே அறிவிக்கப்பட்டது.

மேலும், அந்தக் காலகட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் மக்களிடம் ஓரளவு சக்தி படைத்த கட்சியாக வளர்ந்துகொண்டு இருந்தது. அவர்கள், 'வடக்கு வாழ்கிறது... தெற்கு தேய்கிறது' என்ற கோஷம் எழுப்பி காங்கிரஸ் கட்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். இந்தச் சூழலில் தமிழக சட்டமன்ற பொதுத் தேர்தலையும், இந்திய நாடாளுமன்றத் தேர்தலையும் சந்தித்தார் காமராஜர்.

பெரியாரின் திராவிடர் கழகத்தின் முழு ஆதரவையும் காமராஜர் பெற்று இருந்தார். ஆனால், எப்போதும் போல காங்கிரஸில் உட்கட்சிப் பூசல் அதிகமாகவே இருந்தது. ராஜாஜி காங்கிரஸ் கட்சியை விட்டு வெளியேறி காங்கிரஸ் சீர்திருத்தக் குழு என்ற புதிய கட்சியைத் தொடங்கினார் (சில ஆண்டுகளில் அதுவே சுதந்திரா கட்சியாக மாறியது). முந்தைய தேர்தலில் முக்கிய எதிர்க் கட்சியாக இருந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மக்கள் ஆதரவை இழந்தது. அதன் இடத்தை திராவிட முன்னேற்றக் கழகம் பிடித்துக்கொண்டது. முஸ்லிம் லீக், ஆசார்ய கிருபளானியின் பிரஜா சோஷலிஸ்ட் கட்சி, முத்துராமலிங்க தேவரின் ஃபார்வர்டு பிளாக் போன்ற கட்சிகளும் தேர்தலில் போட்டியிட்டன.

ஜனாதிபதி, பிரதமருடன்...

https://t.me/tamilpdfebooks

தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்படாததால் தி.மு.க. உறுப்பினர்கள் சுயேச்சைகளாகப் போட்டியிட்டனர். அண்ணாதுரை, அன்பழகன், கருணாநிதி, என்.வி.நடராஜன், சத்யவாணி முத்து உட்பட தி.மு.க-வினர் 117 சட்டமன்றத் தொகுதிகளிலும், 8 நாடாளுமன்றத் தொகுதிகளிலும் போட்டியிட்டனர். ராஜாஜியின் சீர்திருத்த காங்கிரஸ் 55 சட்டமன்றத் தொகுதிகளிலும், 12 நாடாளுமன்றத் தொகுதிகளிலும் போட்டியிட்டது.

கல்லூரிக் கட்டட திறப்பு விழாவில்...

1956-ல் மாநில மறுசீரமைப்புச் சட்டத்தால் மலபார் மாவட்டம் கேரள மாநிலத்துடன் இணைக்கப்பட்டு, கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் செங்கோட்டை தாலுகா சென்னை மாநிலத்தில் இணைந்ததால் 205 உறுப்பினர்களுக்கான தேர்தல் 1957-ல் நடந்தது. 167 தொகுதிகளிலிருந்து இந்த 205 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அப்போது இரட்டை உறுப்பினர் முறை வழக்கில் இருந்ததால் 38 தொகுதிகள் இரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றிருந்தன. இவற்றுள் 37 தொகுதிகள் தாழ்த்தப்பட்டவருக்கும் ஒரு தொகுதி பழங்குடியினருக்கும் ஒதுக்கப்பட்டிருந்தன.

https://t.me/tamilpdfebooks

காமராஜர் அமைச்சரவை...

மார்ச் 31-ல் வாக்குப் பதிவு நடந்தது. சுமார் 47 சதவிகித வாக்குகள் பதிவாயின. காங்கிரஸ் 151 இடங்கள் பெற்று பெரும்பான்மை அடைந்தது. எதிர்க் கட்சியாக தி.மு.க. 13 இடங்களையும், ராஜாஜியின் காங்கிரஸ் சீர்திருத்தக் குழு 9 இடங்களையும் பிடித்தன. இதைத் தவிர இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 4, ஃபார்வார்டு பிளாக் 3, பிரஜா சோஷலிஸ்ட் கட்சி 2, சோஷலிஸ்ட் கட்சி 1, சுயேச்சைகள் 22 என்று முடிவுகள் இருந்தன.

சாத்தூர் தொகுதியிலிருந்து காமராஜர் தேர்ந்தெடுக்கப்பட்டார். காஞ்சிபுரம் தொகுதியிலிருந்து அண்ணா தேர்ந்தெடுக்கப்பட்டார். காங்கிரஸ் கட்சி பெரும்பான்மை பெற்றதால், எந்தக் கேள்விக்கும் இடமின்றி இரண்டாம் முறை காமராஜர் முதல்வரானார். அவரது அமைச்சரவை 1957, ஏப்ரல் 13-ம் தேதி பதவியேற்றது. இந்த முறை, காமராஜர் அமைச்சரவையில் 11 பேர் இடம்பிடித்தனர். எம்.பக்தவத்சலம், சி.சுப்பிரமணியம், வெங்கட்ராமன், கக்கன், லூர்தம்மாள் சைமன் போன்றவர்கள் முக்கிய இடம் பிடித்தனர்.

இந்திய நாடாளுமன்றத்துக்குத் தமிழகத்தில் 41 இடங்களுக்கு நடந்த தேர்தலில் காங்கிரஸ் கட்சி 31 இடங்களைப் பிடித்து வெற்றியடைந்தது. திராவிட முன்னேற்றக் கழகம் 2 இடங்களை பிடித்தது. மற்ற இடங்களை கம்யூனிஸ்ட், ஃபார்வர்டு பிளாக், சுயேச்சைகள் பிடித்தனர்.

https://t.me/tamilpdfebooks



சட்டசபையில்...

தொழில் புரட்சி

தொழில் வளர்ச்சியில் தமிழகத்தை முதல் மாநிலமாக மாற்ற வேண்டும் என்று அயராமல் உழைத்தார் காமராஜர். எந்தத் தொழிலைத் தொடங்கினாலும், அதற்கு முழு ஆதரவு கொடுத்தார்.

தென்கிழக்கு ஆசியாவிலேயே மிகப்பெரிய திட்டமாக, மணலி சுத்திகரிப்பு ஆலை உருவாக இருந்தது. அதனால் ஆலை நிறுவ ஏராளமான நிலம் கையகப்படுத்த வேண்டிய நிலை வந்தது. பொதுவாக நிலத்தை அரசு கையகப்படுத்த வேண்டும் என்றால் அதற்குப் பல நடைமுறைகள் செயல்படுத்தப்படும். காலம் விரயமாகும். ஆனால், இந்தத் தாமதம் ஏற்படக்கூடாது என்று விரும்பினார் காமராஜர்.

ஆலை அமைய இருந்த நிலப்பரப்பில் சுமார் 600 ஏக்கர் நிலம் மணலி ராமகிருஷ்ண முதலியாருக்கு சொந்தமாக இருந்தது. உடனே ராமகிருஷ்ண முதலியாரை நேரடியாக வரவழைத்துத் திட்டத்தின் நன்மையைப்பற்றியும், அவர்கள் அளிக்க வேண்டிய நிலப் பகுதியுடைய தேவையைப் பற்றியும் தெளிவாக எடுத்துச் சொல்லி, அரசுக்கு உதவ வேண்டினார்.

ஆனால், ராமகிருஷ்ண முதலியார் மணலி நிலங்களை இழப்பதில் தங்களுக்கு இருந்த சங்கடங்களை எடுத்துரைத்தார். மணலி நிலம் தவிர வேறு இடங்களில் உள்ள நிலத்தைத் தருவதாகவும் சொன்னார். ஆனால், காமராஜர், "இதுதான் சரியான இடம், இந்த இடம் கிடைக்கவில்லை என்றால் சுத்திகரிப்பு ஆலை தமிழ்நாட்டுக்கு வராது, வேறு மாநிலத்துக்குச் சென்றுவிடும். அதனால், இந்த இடத்துக்கு சென்டிமென்ட் பார்க்க வேண்டாம்" என்றார்.

ஆனாலும் தயக்கத்தில் ராமகிருஷ்ண முதலியார் இருக்கவே, "தமிழ்நாட்டுக்கு பெரிய ஆலை வரும் வாய்ப்பை இழக்க முடியாது. சரி, ஆகட்டும் பார்க்கலாம்" என்று சொல்லிப் பேச்சை முடித்தார்.காமராஜரின் உறுதியைப் பார்த்த ராமகிருஷ்ண முதலியார், ‘இந்த இடத்தை நாமாகத் தரவில்லை என்றாலும் அரசு கண்டிப்பாக

https://t.me/tamilpdfebooks

எடுத்துக்கொள்ளத்தான் போகிறது. அதனால் நாமே முன்கூட்டியே கொடுப்பதுதான் நல்லது' என்று முடிவு செய்தார். அதனால் உடனே தன் நிலங்களைத் தருவதற்கு ராமகிருஷ்ண முதலியார் சம்மதம் தெரிவித்தார்.

இதைப் போல உறுதியான நடவடிக்கைகளின் மூலம்தான் காமராஜர் தொழில் துறையில் புரட்சி நடத்த முடிந்தது. அவரது காலத்தில் ஏற்பட்டதைப் போல பெரும் தொழிற்சாலைகள் எந்த ஆட்சியிலும் ஏற்பட்டது இல்லை.

நினைத்ததை முடித்தவர்

மாபெரும் தொழிற்சாலை ஒன்றை இந்தியாவில் நிர்மாணித்துத் தர செக் நாட்டு நிறுவனம் ஒன்று முன்வந்தது. அந்தத் தொழிற்சாலையை தமிழகத்தில் தொடங்க, மத்திய அரசிடம் ஒப்புதல் வாங்கி வந்தார் காமராஜர். மத்திய அரசு அதிகாரிகளும், செக் நாட்டுத் தொழில் முனைவர்களும் இணைந்து தமிழகம் முழுவதும் சுற்றிப் பொருத்தமான இடத்தைத் தேடினர்.

நல்ல இடம், தூய்மையான நீர், தேவையான மின் வசதி, சாலைப் போக்குவரத்து, ரயில் போக்குவரத்து என அத்தனையும் இணைந்த ஓரிடத்தைத் தமிழக அதிகாரிகளால் செக் நாட்டவர்களுக்குக் காட்ட முடியவில்லை. தமிழகம் முழுவதும் சுற்றி அலைந்து, சோர்ந்து போன செக் நாட்டுத் தொழில் முனைவர்கள், அவர்கள் விரும்பிய இடம் தமிழகத்தில் இல்லை என்ற முடிவுக்கு வந்தார்கள். அதனால் வேறு மாநிலத்தில் இடத்தைத் தேடுவதற்குத் தயாரானார்கள். இதைக் கேள்விப்பட்ட காமராஜர் அதிர்ச்சி அடைந்தார். உடனே செக் நாட்டு அலுவலர்களையும், நம் அதிகாரிகளையும் அழைத்தார்.

தமிழகத்தில் எந்த எந்த இடங்களை எல்லாம் அவர்களுக்கு அதிகாரிகள் காட்டினார்கள் என்று அமைதியாக விசாரித்தார். காட்டிய

https://t.me/tamilpdfebooks

இடங்களை அதிகாரிகள் வரிசையாகப் பட்டியல் இட்டனர். ஒவ்வோர் இடத்திலும், அவர்கள் கேட்ட வசதிகளில் ஏதாவது ஒன்று குறைவதாகவும், அதனால் எல்லா வசதிகளும் நிறைந்த இடத்தைக் காட்ட முடியவில்லை என்றும் சொன்னார்கள்.

சிறிது நேரம் கண்ணை மூடி யோசித்தார் காமராஜர். அவர்தான் தமிழக மூலை முடுக்கை எல்லாம் நன்கு அறிந்தவர் ஆயிற்றே. கண்களைத் திறந்தவர் அதிகாரிகளைப் பார்த்து, "காவிரி ஆற்றின் கரையில் திருவெறும்பூர் என்ற ஊர் இருக்கிறதே, அந்த இடத்தைக் காட்டினீர்களா?" என்று கேட்டார். அதிகாரிகள் இல்லை என்று தலையாட்டினார்கள்.

"ஏன் அந்த இடத்தைக் காட்டல? இவங்க கேட்கற எல்லா வசதிகளும் அங்கே இருக்கே! போய் முதல்ல அந்த இடத்தைக் காட்டிட்டு வாங்க" என்று அனுப்பி வைத்தார்.

செக் நாட்டு தொழில் முனைவர்கள் நம்பிக்கை இல்லாமல்தான் கிளம்பினார்கள். ஆனால், என்ன ஆச்சர்யம்! அந்த இடம் எல்லா வகைகளிலும் பொருத்தமாக இருந்தது. உடனே சந்தோஷமாக அந்த இடத்தில் தொழிற்சாலை அமைக்க ஒப்புக்கொண்டனர்.

அன்று உருவானதுதான் இன்று உலக நாடுகளுக்கு எல்லாம் தன் தயாரிப்பை ஏற்றுமதி செய்யும், 'பெல்' என்று அழைக்கப்படும், பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ் லிமிடெட் என்ற, பெருமை வாய்ந்த நிறுவனம்.

காமராஜர் ஆட்சிக் காலத்தில் உருவான பெரிய தொழிற் சாலைகளின் பட்டியல்:

1. நெய்வேலி நிலக்கரித் திட்டம்.
2. பெரம்பூர் ரயில் பெட்டித் தொழிற்சாலை.
3. பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ், திருச்சி.
4. கச்சா ஃபிலிம் தொழிற்சாலை, ஊட்டி.
5. கனரக தொழிற்சாலை, ஆவடி.
6. அணுமின் நிலையம், கல்பாக்கம்.
7. டெலிபிரிண்டர் தொழிற்சாலை, கிண்டி.
8. இந்தியா சிமென்ட்ஸ், சங்ககிரி.
9. காகிதத் தொழிற்சாலை, மேட்டூர்.
10. அறுவைசிகிச்சை கருவித் தொழிற்சாலை, கிண்டி.
11. துப்பாக்கித் தொழிற்சாலை, திருச்சி.
12. இரும்பு உருக்காலை, சேலம்.

https://t.me/tamilpdfebooks

13. லகு ரக ஸ்டீல் தொழிற்சாலை, அரக்கோணம்.

காமராஜர் பொறுப்பேற்றபோது தமிழகத்தில் புகலூர், நெல்லிக்குப்பம், பாண்டியராஜபுரம் ஆகிய மூன்று இடங்களில் மட்டுமே சர்க்கரை ஆலைகள் இயங்கி வந்தன. காமராஜர் காலத்தில் சர்க்கரை ஆலையின் எண்ணிக்கை 14 ஆக உயர்ந்தது. இதைத் தவிர நூல் நூற்பு ஆலை, துணி நெய்யும் பாவுத் தொழில், மிதி வண்டித் தொழிற்சாலை, உரத் தொழிற்சாலை, சோடா உற்பத்தி தொழிற்சாலை, தோல் பதனிடும் தொழிற்சாலை, ரப்பர் தொழிற்சாலை, காகித உற்பத்தி ஆலை, அலுமினிய உற்பத்தி ஆலை போன்றவை தொடங்கப்பட்டன.

தொழிற்பேட்டைகள் அமைக்கவும் காமராஜர் ஆதரவு கொடுத்தார். கிண்டி, விருதுநகர், அம்பத்தூர், ராணிப்பேட்டை, மதுரை, மார்த்தாண்டம், ஈரோடு, காட்பாடி, தஞ்சாவூர், திருச்சி உள்ளிட்ட 19 தொழிற்பேட்டைகள் உருவாக்கப்பட்டன.

இதைத் தவிர திண்டுக்கல், புதுக்கோட்டை, காரைக்குடி, கோவில்பட்டி, கிருஷ்ணகிரி, அரக்கோணம், தேனி, நாகர் கோயில், கும்பகோணம் மற்றும் சிவகங்கை ஆகிய இடங்களில் புதிய தொழிற்பேட்டைகள் அமைக்க காமராஜர் அரசு முயற்சி மேற்கொண்டது. மேலும், சென்னை, நெய்வேலி, தூத்துக்குடி, சேலம், கோவை, பொள்ளாச்சி, திருச்சி ஆகிய இடங்களில் தொழிற் குழுமங்கள் அமைக்கப்பட்டன. காமராஜர் ஆட்சிக் காலத்தில் தமிழகம் தொழில் வளர்ச்சியில் அதிரடி வளர்ச்சி கண்டது.

புதிய சிந்தனையாளர்

எந்த ஜனநாயக நாட்டிலும் மேற்கொள்ளப்படாத புதிய முயற்சியாக பாகல்மேடு முயற்சியை சொல்லலாம். அரசுக்கும் மக்களுக்கும் இடைவெளி இல்லாத, எல்லா மட்டத்திலும் தொடர்பு இருக்கும் நிலையை உருவாக்க வேண்டும் என விரும்பினார் காமராஜர். அந்த சிந்தனையின் முதல் முயற்சி என்று 1957-ல் நடந்த பாகல்மேடு மாநாடு.

மக்களின் பங்களிப்பு இல்லாமல் சமுதாய மேம்பாடு இருக்காது எனக் கருதினார். அரசு அதிகாரிகள் மக்களோடு ஒன்றிணைந்து உதவி புரியத் தயாராக இருக்க வேண்டும், அலுவலகத்தில் சிகப்பு நாடா முறைகள் ஒழிக்கப்பட்டு, விரைவான நடவடிக்கைகள் வேண்டும் என காமராஜர் விரும்பினார். எனவே, ஆட்சியாளர்களும் மக்களும் ஒரே இடத்தில் கூடி, கலந்துரையாடி, பிரச்னைகளுக்கு அதே இடத்தில் தீர்வு காணப்பட வேண்டும். அப்போதுதான் எதிர்பார்க்கும் சமுதாய மேம்பாட்டுப் பணிகள் நடக்கும் என நம்பினார்.

அந்த வகையில் நடத்தப்பட்டதுதான் செங்கல்பட்டு மாவட்டம், ஊத்துக்கோட்டை பகுதி, பாகல்மேடு பிர்கா மாநாடு. பாகல்மேடு பிர்கா கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் மாநாட்டுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். ‘தமிழக முதல்வர் காமராஜர் கலந்து கொள்ளும் மாநாட்டில், பொதுமக்களால் முன் வைக்கப்படும் சமுதாய மேம்பாட்டுப் பிரச்னைகளுக்கு, உடனடியாக அங்கேயே தீர்வு காணப்படும்’ என்று அறிவிக்கப்பட்டது.

https://t.me/tamilpdfebooks

முதல்வர் காமராஜர், தலைமைச் செயலாளர், சமுதாய மேம்பாட்டுத் துறை இயக்குனர், மாவட்ட ஆட்சித் தலைவர், கீழ் நிலை அதிகாரிகள் ஆகியோருடன் பாகல்மேடு மற்றும் பிர்கா கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் கலந்துகொண்டனர். மாநாட்டின் தொடக்கமாக, அரசின் பல திட்டங்களை விளக்கும் கண்காட்சியைத் தமிழக முதல்வர் காமராஜர் திறந்து வைத்தார்.

மாநாடு என்ன நோக்கத்துக்காக நடத்தப்படுகிறது என்பதை காமராஜர் முதலில் விளக்கினார். "நேரடியாக மக்கள் பிரச்னைகளை அறிந்து, இயன்றவரை உடனடித் தீர்வு காணவே நான் வந்திருக்கிறேன். அரசின் மீது மக்களுக்கு நம்பிக்கையை எற்படுத்தத்தான் இந்தக் கூட்டம். தன் அரசு மக்களுக்காக மக்களால் நடத்தப்படும் அரசு என்பதை நீங்கள் உணர வேண்டும். சுற்றுபுற கிராமத்தில் உள்ளவர்கள் ஒன்றுகூடி சமுதாய தேவைகளைக் குறித்துக் கலந்து பேசுவதால், சமுதாய மேம்பாட்டுத் திட்டங்களை எல்லா கிராமங்களுக்கும் பகிர்ந்து அளிக்க முடியும்" என்றார்.

அங்கே வந்திருந்த அரசு அதிகாரிகளிடம், "மக்கள் நம்பிக்கையைப் பெறுவதுதான் முதன்மைப் பணியாக இருக்க வேண்டும். அப்படி நம்பிக்கையைப் பெறுவதில் வெற்றி அடைவதன் மூலமே மிகப்பெரிய செயல்களை எளிமையாக நிறைவேற்ற இயலும்" என்றும் காமராஜர் விளக்கினார்.

அதன் பின்னர், பிரச்னைகளைப் பற்றி பேச பொதுமக்கள் அழைக்கப்பட்டனர். தங்கள் கிராமத்தில் ஒருவர்கூடப் படித்தவர் இல்லை என்றும், தங்களுக்கு ஒரு பள்ளிக்கூடம் வேண்டும் என்றும் ஒரு கிராமவாசி கூறி, தங்கள் கிராமத்தை சேர்ந்த 36 பேர்களுடைய பெருவிரல் ரேகை இட்ட மனுவை காமராஜரிடம் அளித்தார். முழுமையாக அரசு செலவிலேயே தங்கள் கிராமத்துக்கு சாலை வசதி அமைத்துத் தர வேண்டும் என்று இன்னொரு கிராமவாசி கூறினார். நெடுந்தொலைவில் உள்ள மருத்துவ மனைக்குச் செல்லும் வழியில், வயல்வெளியில் தங்கள் கிராமத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் குழந்தை பெற்றதாகவும், அதனால் தங்கள் கிராமத்துக்கு மருத்துவமனை வேண்டும் என்றும் கோரிக்கை வைக்கப்பட்டது.

பக்கத்து ஊர் பள்ளிக்குச் செல்லும் வழியில் ஆற்றைக் கடக்க முயன்ற சிறுவன் வெள்ளத்தில் மூழ்கிவிட்டான், ஆகவே, தங்கள் கிராமத்திலேயே பள்ளிக்கூடம் வேண்டும் என்று ஒரு கிராமவாசி கூறினார். கிராமத் தொழில்களில் தங்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும் எனப் பெண்களும், தங்களுடைய குடியிருப்புகளில் குடி நீர்க் கிணறுகளும் பள்ளிகளும் வேண்டும், தங்களுக்கு வீட்டு மனைகள் வழங்கப்பட வேண்டும் என்று பொதுவாகவும் கோரிக்கை வைத்தார்கள்.

இரண்டு பெண்கள் உட்பட ஐம்பது கிராமவாசிகள் தங்கள் குறைகளை முதல்வர் காமராஜரிடம் நேரடியாக எடுத்து உரைத்தனர். அதன் முடிவில், தலைமைச் செயலர், மாவட்ட ஆட்சித் தலைவர், பிற அதிகாரிகள் ஆகியோருடன் முதல்வர் காமராஜர் ஆலோசனை மேற்கொண்டார். ஏழு கிராம சாலைகள் அமைக்கவும், ஐந்து கிணறுகள் தோண்டவும், மூன்று பள்ளிகள் திறக்கவும் அந்த இடத்திலேயே முடிவு

https://t.me/tamilpdfebooks

செய்து அறிவிக்கப்பட்டது. மேலும், நிலுவையில் இருந்த பல திட்டங்கள் முழுமை பெற காலக்கெடு வரையறை செய்யப்பட்டது.

மக்களின் மனதில் நம்பிக்கை தீபத்தை ஏற்றிவைத்த பாகல்மேடு மாநாட்டு முறையில், மக்கள் குறைகளுக்கு தீர்வு காணும் முயற்சி காமராஜர் காலத்தில் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் மேற் கொள்ளப்பட்டது. பாகல்மேடு பாணி, மக்களிடையே பலத்த வரவேற்பைப் பெற்றதைக் கண்ட தி.மு.க. தலைவர் அண்ணாதுரை இதற்காக காமராஜர் அரசைப் பாராட்டியதோடு, தன்னுடைய தொகுதியிலும் பாகல்மேடு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று சட்ட மன்றத்தில் வலியுறுத்தினார்.

பஞ்சாயத்து யூனியன்கள்

பாகல்மேடு மாநாட்டைத் தொடர்ந்து, தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம் 1958-ல் கொண்டுவரப்பட்டது. இந்த சட்டப்படி 1960-ல், 75 பஞ்சாயத்து யூனியன்கள் ஆரம்பமாயின; அதைத் தொடர்ந்து 129 பஞ்சாயத்து யூனியன்களும் உருவானது. அதற்கடுத்த வருடங்களில் தமிழகம் எங்கும் 373 பஞ்சாயத்து யூனியன்களும் 12,000 பஞ்சாயத்துகளும் செயல்பட்டன.

இந்தப் பஞ்சாயத்துகள் மூலமாக விவசாயம், சாலை வசதி, கைத்தொழில், மாதர் நலம், சுகாதாரம், கால்நடை, மருத்துவமனை, பள்ளிகள் போன்றவற்றை பொறுப்புடன் அரசு செயல்படுத்தியது.

விவசாயப் புரட்சி

மக்களின் அடிப்படைத் தேவையை பூர்த்திசெய்வதே தனது ஆட்சியின் முதல் பணி என்று எண்ணியவர் காமராஜர். விவசாயம் செழித்தால் மட்டுமே உணவு உற்பத்தி அதிகமாகி, அனைவருக்கும் போதுமான உணவு கிடைக்கும் என்பதில் உறுதியான நம்பிக்கை வைத்திருந்தார். அதனால், விவசாயத்துக்கு முன்னுரிமை கொடுத்தார். விவசாயம் செழிக்க வேண்டுமானால் தண்ணீர்ப் பிரச்னையைத் தீர்க்க வேண்டும் என்று தீவிரமாக இருந்தார். தமிழகத்தில் உள்ள பெரும்பாலான அணைகள் காமராஜர் காலத்தில் கட்டப்பட்டவையே.

காமராஜர் விவசாயத்துக்கு கொடுத்த முக்கியத்துவம், கீழே இருக்கும் பட்டியலைப் பார்த்தால் புரியும்.

1. மலம்புழா அணை - 46,000 ஏக்கர் பாசனம்; திட்டம் ரூபாய் 5 கோடி.

2. மணிமுத்தாறு அணை - 20,000 ஏக்கர் பாசனம்.

3. அமராவதி அணை - 47,000 ஏக்கர் பாசனம்; திட்டம் ரூபாய் 3 கோடி.

4. சாத்தனூர் அணை - 20,000 ஏக்கர் பாசனம்; திட்டம் ரூபாய் 2.5 கோடி.

5. வைகை அணை - 20,000 ஏக்கர் பாசனம்; திட்டம் ரூபாய் 2.5 கோடி.

6. வாலையார் அணை - 6,500 ஏக்கர் பாசனம்; திட்டம் ரூபாய் 1 கோடி.

https://t.me/tamilpdfebooks

7. மங்கலம் அணை - 6,000 ஏக்கர் பாசனம்; திட்டம் ரூபாய் 50 லட்சம்.

8. ஆரணியாறு அணை - 1,100 ஏக்கர் பாசனம்; திட்டம் ரூபாய் 1 கோடி.

9. கிருஷ்ணகிரி அணை - 7,500 ஏக்கர் பாசனம்; திட்டம் ரூபாய் 2 கோடி.

10. வீடூர் அணை.

11. பரம்பிக்குளம் ஆழியாறு அணைகள்.

12. மேட்டூர் பாசனக் கால்வாய் - 45,000 ஏக்கர் பாசனம்; திட்டம் ரூபாய் 2.5 கோடி.

13. காவிரி டெல்டா கால்வாய்கள் புதுப்பிக்கப்பட்டது - ரூபாய் 30 லட்சம்.

14. கீழ் பவானித் திட்டம் - 2,00,000 ஏக்கர் பாசனம்; திட்டம் ரூபாய் 10 கோடி.

15. மேல் கட்டளைக் கால்வாய் திட்டம் - 36,000 ஏக்கர் பாசனம்; திட்டம் ரூபாய் 1.5 கோடி.

16. புள்ளம்பாடி திட்டம் - 22,000 ஏக்கர் பாசனம்; திட்டம் ரூபாய் 1.5 கோடி.

17. மீனக்கரை ஏரித் திட்டம் - 4,000 ஏக்கர் பாசனம்; திட்டம் ரூபாய் 1.5 கோடி.

18. மணிமுக்தா நதித் திட்டம் - 4,000 ஏக்கர் பாசனம்; திட்டம் ரூபாய் 75 லட்சம்.

19. கோமுகி ஆற்றுத் திட்டம் - 8,000 ஏக்கர் பாசனம்; திட்டம் ரூபாய் 75 லட்சம்.

20. தோப்பியார் ஏரி - 2,500 ஏக்கர் பாசனம்; திட்டம் ரூபாய் 75 லட்சம்.

காமராஜர் ஆட்சிக் காலத்தில் மட்டுமே, ஏறக்குறைய 3,73,436 ஏக்கர் நிலம் புதிதாக பாசன வசதி பெற்றது. நீர்ப் பாசனக் குளங்கள் எல்லாமே செம்மைப்படுத்தப்பட்டன. சிதைந்த குளங்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டன. வானம் பார்த்த பூமியில் விவசாய உற்பத்திக்கு உதவும் வகையில், வடிகால் நீர்க் கசிவுக் குட்டைகள் ஏற்படுத்தப்பட்டன.

விவசாயிகளுக்கு கிணறு வெட்ட, 25% மானியத்துடன் நீண்டகாலக் கடன் வழங்கப்பட்டது. கடன் பெறுவதற்கான நடைமுறை எளிதாக்கப்பட்டது.

இதைத் தவிர விவசாயத்துக்குப் பயன்படும் ஆயில் இன்ஜின்களும், பம்ப் செட்களும்கூடத் தவணை முறையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. காமராஜர் விவசாயத்தை நேசித்ததாலும், அதற்கு முன்னுரிமை கொடுத்ததாலும்தான் அவருடைய ஆட்சிக் காலத்தில் சென்னை மாநிலம், 'மிகு தானிய உற்பத்தி' நிலையை அடைந்தது!

https://t.me/tamilpdfebooks

மின்சாரப் புரட்சி

இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு தமிழகத்தில்தான் அதிக அளவில் மின்சாரம் வழங்கப்பட்டது. நகரங்களுக்கு மட்டுமல்லாமல் அனைத்து கிராமங்களுக்கும் மின்சாரம் சென்றடைய வேண்டும் என்று முழுமூச்சுடன் பாடுபட்டு, அதற்கான திட்டங்களைத் தீட்டினார். அதைப் போல விவசாயத்துக்கு மின்சாரத்தைப் பயன்படுத்துவதை தொடங்கி வைத்ததும் தமிழகமே.

பெரியாறு அணைப் பகுதியில் ஒன்பது கோடி ரூபாய் செலவில் நீர் மின் நிலையம் துவக்கப்பட்டது. ஒரு லட்சம் கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது. குந்தா நீர் மின்சாரத் திட்டம் சுமார் 36 கோடி ரூபாய் செலவில், கனடா நாட்டு ஒத்துழைப்புடன் துவக்கப்பட்டது. 1,40,000 கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது. இதைத் தவிர நெய்வேலி அனல் மின் திட்டம், சமயநல்லூர் அனல் மின் நிலையம், சென்னை அனல் மின் நிலையம், கல்பாக்கம் அணு மின் நிலையம் போன்றவையும் ஏற்படுத்தப் பட்டன.

மின்சாரம் குறித்து காமராஜர் பொதுக்கூட்டத்தில் பேசியதிலிருந்து ஒரு பகுதி மட்டும் இங்கே...

‘மேலை நாட்டினர் மின்சாரத்தைப் பயன்படுத்தி இயந்திரங்களை இயக்குகிறார்கள். மின்சாரத்தைப் பயன்படுத்தியதால் தொழில் முன்னேற்றம் அதிகமானது. தொழில் முன்னேற்றம் ஏற்பட்டதால் நாடு பொருளாதார முன்னேற்றம் அடைந்தது. ஆனால், நம் நாடு பின் தங்கிய நாடாக இருந்து, நமக்குத் தொழில் எல்லாம் பின்தங்கிப் போய்விட்டது.

சுயராஜ்யம் வந்த பிறகுதான் நாம் முன்னேறியுள்ளோம். நாமும் மின்சாரத்தைப் பயன்படுத்துவது எப்படி என்று யோசித்தோம். மின்சாரத்தைப் பயன்படுத்தினால் ஏராளமான தொழில் வளர்ச்சி பெறலாம் என்று சொல்ல வேண்டியதில்லை. தொழில் வளம் பெருகும். மின்சாரத்தைப் பயன்படுத்தினால் மட்டும் போதுமா? மின்சாரத்தைப் பயன்படுத்த வேண்டும் என்றால் மின்சார உற்பத்தி பண்ண வேண்டியது இருக்கிறதில்லையா?

மின்சார உற்பத்திக்கு எங்கே போவது. அதற்கு வேண்டிய இயற்கை வசதி இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். மின்சாரத்தையும் தண்ணீரிலிருந்துதான் உற்பத்தி பண்ணுகிறோம். காவிரித் தண்ணீரை எப்படிக் கால்வாய் வெட்டி விவசாயம் பண்ணுகிறோமோ, அது மாதிரி தொழில் நடத்தவும் மின்சாரத்தை உற்பத்தி பண்ண வேண்டும்.

மேட்டூரில் ஏற்கெனவே மின்சார உற்பத்தி இருக்கிறது. ஆனால், அது போதவில்லை. அதைப் போல இப்போது நிறைய இடங்களில் உற்பத்தி பண்ணணும். ஒரு வருஷத்தில் 7 மாதத்துக்கு மேலே காவிரியில் தண்ணீர் விடுகிறோம் இல்லையா? மீதித் தண்ணீர் ஏன் வீணாகப் போகணும்? அதற்காகப் பழையபடி அணையை உயரமாகக் கட்டி, நீரைத் தேக்கி வைத்து, குழாய் மூலம் அதை அனுப்பி மின்சாரம் பண்ணுகிறோம்.

https://t.me/tamilpdfebooks

அதே மாதிரி பவானி ஆற்றிலும், குந்தா என்று ஒரு திட்டம் போட்டு இருக்கிறோம். நம்முடைய மதிப்புக்கு உரிய தலைவர் நேருஜி அவர்கள் சென்ற மார்ச் மாதம் அதைத் திறந்து வைத்தார். இது ஒரு பெரிய திட்டம். இதைப் போல பெரியாறில் ஒரு திட்டம். எத்தனையோ இடத்தில் திட்டம் போட்டும்கூட அத்தனையும் போதவில்லை. எவ்வளவு மின்சாரத் திட்டம் உற்பத்தி பண்ணியும் மின்சாரத் தட்டுப்பாடு இருந்துகொண்டே இருக்கிறது.

இயற்கைத் தண்ணீரை வைத்துக்கொண்டு மின்சார உற்பத்தி செய்ய முடியாத நிலையில் நாம் இருக்கிறோம். ஏன் அப்படி இருக்கிறோம்? நமக்குத் தேவை அதிகரித்து வருகிறது. இப்போது எதற்கெடுத்தாலும் மின்சாரம் கேட்கிறார்கள். விவசாயத்துக்கு மின்சாரம் கேட்கிறார்கள். மாடு கட்டித் தண்ணீர் இறைத்தால் 1 ஏக்கர் தண்ணீர்தான் பாயும். பம்பு செட்டு வைத்தால் எவ்வளவு ஏக்கருக்கு வேண்டுமானாலும் பாய்ச்சலாம். தண்ணீர் இல்லை என்றால் ஆழமாகக்கூட தண்ணீர் எடுக்கலாம். 150 அடிக்குக் கீழே இருந்துகூட தண்ணீர் எடுக்கலாம். அதை எல்லாம் மின்சாரத்தால் தான் செய்ய முடியும்.

அது மட்டுமல்ல, தொழில் செய்ய மின்சாரம் வேண்டியிருக்கிறது. பெரிய பெரிய தொழிற்சாலைகள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன அல்லவா? மின்சாரத்தை வைத்துக்கொண்டுதானே தொழிற்சாலை ஏற்படுத்த முடியும்? கிராமங்களுக்கு எல்லாம் வெளிச்சம் வேண்டி இருக்கிறது. இப்போது இருக்கும் மின்சார நிலையத்திலிருந்து கிடைக்கும் மின்சாரம் இதற்கெல்லாம் போதவில்லை. இன்னும் நிறைய மின்சார உற்பத்தி பண்ண வேண்டியிருக்கிறது.

நெய்வேலியிலே உற்பத்தி பண்ணப் போகிறோம். மின்சார உற்பத்தி பண்ணுவதன் மூலமாக மின்சாரத் தேவையை பூர்த்தி செய்ய முடியுமா என்ன? இவை எல்லாம் உற்பத்தியாகிற காலத்துக்குள் இன்னும் இரண்டு பங்கு தேவை அதிகமாகிவிடும். அதற்கு இதைப் போல இரண்டு பங்கு மின்சாரம் தேவைப்படும்.'

இந்த பேச்சில் இருந்தே காமராஜர் மின்சார விஷயத்தில் எத்தனை

https://t.me/tamilpdfebooks

அக்கறையுடன், எத்தனை பெரிய எதிர்காலத் திட்டத்துடன் இருந்தார் என்பதை அறியலாம்.

தமிழகத்தை மின்மயமாக்குவதில் காமராஜர் அரசு சாதனைகளைப் படைத்தது. குறிப்பாகச் சொன்னால், ஒரு கிராம மின்மயமாக்குதலுக்கு, அப்போது ரூபாய் 80,000 மட்டுமே ஒதுக்கப்பட்டு இருந்தது. ஆனால், அதற்குப் பயன்படும் பொருட்களை வாங்கும் செலவு மட்டுமே அதிகமாக இருந்தது. அதனால் காமராஜர் யோசித்து, மின்மயமாக்குதலுக்கு உள்ளூர் பொருட்களையே பயன்படுத்த வேண்டும் என்று திட்டமிட்டார். அதன்படி, தமிழக மின்சார வாரியமே சொந்தமாகப் பணிமனைகளை உருவாக்கி, மின்சாரப் பொருட்களைத் தயாரித்தது. இந்தத் திட்டம் இந்திய அளவில் முன்னோடித் திட்டமாக மதிக்கப்பட்டது.

மின் வாரியத்தின் மூலமாகத்தான் மின் உற்பத்தி, மின் விநியோகம், பராமரிப்பு போன்றவை மேற்கொள்ளப்பட்டன. மின் வாரியம் அரசின் கட்டுப்பாட்டில் இருந்தாலும், தனி நிர்வாகத்தில் இருந்ததால் பெரும் வளர்ச்சி அடைந்தது.

அதனால்தான் காமராஜர் காலத்தில் இந்திய அளவில் தமிழக மின்சாரத் துறை சாதனை படைத்தது. 1963-ல் இந்தியா முழுவதும் மின் வசதி பெற்ற கிராமங்கள், நகரங்களின் எண்ணிக்கை 32,500. இதில் தமிழகத்தின் எண்ணிக்கை மட்டுமே சுமார் 7,434. இதிலிருந்தே இந்தியாவில் தமிழகம் எவ்வளவு முன்னோடி மாநிலமாக இருந்தது என்று தெரிகிறது.

நிலச் சீர்திருத்தம்

காமராஜர் ஆட்சிக் காலத்தில்தான் நிலச் சீர்திருத்தம் முதன் முதலில் கொண்டு வரப்பட்டது. இந்தச் சட்டத்தைக் கொண்டுவரும் முன்னர் நில உரிமையாளர், குத்தகைதாரர், பொதுமக்கள் ஆகியோரது எண்ணங்களைத் தெரிந்துகொள்ள ஒரு குழுவையும் காமராஜர் உருவாக்கினார். அந்தக் குழு அளித்த அறிக்கையை ஆராய்ந்து நிலச் சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டது.

இதன்படி ஐந்து பேர் கொண்ட குடும்பம் முப்பது ஏக்கர் நிலத்துக்கு மேல் வைத்துக்கொள்ளக் கூடாது என்று நில உச்சவரம்புச் சட்டம் 1962-ல் அறிமுகப்படுத்தப்பட்டது.

உச்ச வரம்பு குறித்து காமராஜர் பேசிய பேச்சு மக்களால் பரபரப்பாகப் பேசப்பட்டது. அதிலிருந்து சில பகுதிகள்...

‘இப்போது உச்ச வரம்பு போடுகிறோம் இல்லையா, அது மாதிரி வளர்ச்சிக்கு வரம்பு கட்ட முடியாது; கட்டவும் கூடாது. வளர்ச்சிக்கு வரம்பே கூடாது. எதுக்கு வரம்பு கட்டணும் தெரியுமா? மற்றவர்களை இல்லாதவர்களாக்கும் தனிப்பட்டவர்கள் வளர்ச்சிக்கு வரம்பு கட்டணும். சமுதாய வளர்ச்சிக்கு வரம்பு உண்டா என்ன? சமுதாய வளர்ச்சிக்கு எல்லா உதவியும் பண்ணி மேன்மேலும் அது வளர்ச்சி அடைவதற்கு உதவி செய்துகொண்டே போக வேண்டும். சமுதாய வளர்ச்சிக்கு உதவி

https://t.me/tamilpdfebooks

பண்ணணும் என்றால் தனிப்பட்டவர்களுடைய வளர்ச்சிக்கு ஒரு வரம்பு வேண்டும் இல்லையா?

அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், 'கிடைத்தவரை பணத்தை எடுத்துக் கொடுத்துவிடு' என்கிறார்கள். அந்தப் பணத்தை யாருக்குக் கொடுக்கணும் என்று கேட்கிறேன். இப்போது வாய்க்கால் வெட்டியதால், தண்ணீர் ஊர் முழுவதும் பாய்கிறது, இல்லையா? அப்படி இல்லாமல் எங்க வீட்டுக்கு மட்டும் தண்ணீர் கொடு என்றால் நியாயமா? எனக்கு மட்டும் தண்ணீர் வருகிற மாதிரி பண்ணிக் கொடு என்றால் என்ன அர்த்தம்? அதிலே என்ன நியாயம் இருக்கிறது? உனக்கு மட்டும் வேண்டும் மற்றவர்களுக்கு வேண்டாமா என்ன?

நீ எவ்வளவு நாளைக்குத் தண்ணீரைத் தேக்கி வைப்பாய்? அப்படித் தேக்கி வைத்தால்தான் நன்றாக இருக்குமா? நாற்றமெடுத்துப் போகும்; கெட்டுப்போகும். அப்புறம் கொசு வரும்; நோய் வரும். வெள்ளம் வந்தால் எல்லாவற்றையும் அடித்துக்கொண்டு போய்விடும். ஆகவே, தேக்கி வைத்தாலும் ஆபத்து. தேக்கி வைக்காவிட்டாலும் ஆபத்து. அதற்காக நாம் என்ன பண்ணுகிறோம்? அணையைப் போட்டு, வாய்க்கால் வெட்டி, பாசன வசதி பண்ணிக் கொடுக்கிறோம். எல்லோருக்கும் வசதியாக ஒரு வழி பண்ணிக் கொடுக்கிறோம். எல்லோருக்கும் வசதியாக இருக்கத்தானே நீரைத் தேக்கி வைத்து அனுப்புகிறோம்?

தண்ணீர் சுற்றிச்சுற்றி வர வேண்டியதுதான். தண்ணீர் மழையாகப் பெய்யுது; ஆறாக ஓடுது. அதை அணை கட்டித் தேக்கி வைக்கிறோம். பிறகு வாய்க்கால் வெட்டி விவசாயத்துக்கு அனுப்புகிறோம். கொஞ்சம் தண்ணீர் சமுத்திரத்துக்குப் போகிறது. பிறகு என்ன ஆகிறது? இந்த மழை நீர் வற்றி மேகமாக மேலே போய் மறுபடியும் மழையாகக் கொட்டுகிறது. இப்படித்தானே அது பழையபடி சுற்றிக்கொண்டே வருகிறது. அதைத் தடுத்து நிறுத்த முடியுமா என்ன? அதைப் போலத்தான் பணமும். சுற்றிச் சுற்றித்தான் வரணும்.

மழை இல்லை என்றால் நம் வாழ்க்கை நடக்காது. பறவைகள் வாழ முடியாது. மிருகங்கள் வாழ முடியாது. மழை இல்லை என்றால் யாரும் வாழ முடியாது. மனிதனுக்கும் மழை அவசியம். மிருகத்துக்கும் மழை அவசியம். பயிருக்கும் மழை அவசியம். மழை இல்லாவிட்டால் வறட்சி ஏற்படும். மழைக்கு இருக்கும் அதே அளவு பெருமை பணத்துக்கும் உண்டு. மழையைப் போலத்தான் பணமும் சுற்றிச்சுற்றி வர வேண்டும். மழை எல்லா இடத்திலும் இருக்கிற மாதிரி, எல்லா இடத்திலும் செல்வமும் இருக்க வேண்டும்.

இயற்கையை ஒருவர் மட்டும் சொந்தமாக உபயோகப்படுத்தக் கூடாது. சொந்தமாகப் பயன்படுத்தினால் அதற்கு உரிய செல்வாக்குப் போய்விடும் என்கிற மாதிரி நிலை உண்டாக வேண்டும். 'சரிதான் போ ஐயா, உன் பணம் வேண்டாம்' என்று சொல்கிற நிலைமை வர வேண்டும். செல்வத்தைப் பெருக்கணும். அதோடு பலருக்கும் பயன்படுவதாக விநியோகம் பண்ண வேண்டும். நம்முடைய அரசாங்கத்தின் கொள்கை அதுதான்.

https://t.me/tamilpdfebooks

அந்தக் கொள்கையை நாம் ஒன்றும் புதிதாகப் பண்ணவில்லை. திடீரென்று சமதர்மக் கொள்கை என்று சொல்லவில்லை. திடீரென்று திட்டம் கொண்டு வரவில்லை. கராச்சி காங்கிரஸ் தீர்மானத்தைப் புரட்டிப் பாருங்கள்.

உங்கள் வீட்டில் காங்கிரஸ் மெம்பர் யாராவது இருந்தால் அந்த ரசீதை எடுத்துப் பாருங்கள். அதில் இது மாதிரிக் கொள்கை இருக்கும். காங்கிரஸ் மெம்பராகச் சேர்ந்தால் இதை எல்லாம் ஒத்துக்கொள்ள வேண்டும்.

ஜாதி, மத பேதம் கிடையாது. வருவாய் இவ்வளவுதான் இருக்கணும். நிலம் இவ்வளவுதான் வைத்து இருக்க வேண்டும். ஜமீன்தார்கள் இப்படித்தான் இருக்கணும், என்றெல்லாம் சொல்லி இருக்கிறது. இல்லை என்று சொல்ல முடியுமா? சொல்ல முடியாது. அதை வகுத்த பிறகு திட்டக் கமிஷன் போட்டிருக்கிறோம். இதை எல்லாம் திடீரென்று பண்ணவில்லை. முன் யோசனையோடுதான் பண்ணியிருக்கிறோம்' என்று தெளிவாகப் பேசியிருக்கிறார்.

சாதனைத் திட்டங்கள்

விவசாயத்துக்காக எத்தனை தூரம் தீவிரமாக காமராஜர் உழைத்தார்... சிந்தித்தார் என்பதற்கு சான்றாக இரண்டு திட்டங்களை மட்டும் இங்கே பார்க்கலாம்.

தமிழகத்தின் மேற்கு எல்லையில் அமைந்த சிற்றூர் ஆனைமலை. உயர்ந்து செல்லும் மலைப் பகுதியில் சென்றால் கரிமலை, கொம்பன் மலை, சுங்க மலை, பரம்பிக்குளம் மலை இவற்றுக்கு இடையே பொழியும் மழை நீர் பரம்பிக்குளம் ஏரியாக உருவெடுத்து இருந்தது. ஆனால், நில அமைப்பால் கிழக்கிலிருந்து மேற்காகத் திரும்பி, கேரளத்தில் ஓடி, தண்ணீர் கடலில் கலந்து வீணாகிக் கொண்டு இருந்தது.

தமிழகத்துக்குக் கிடைக்காமல் நதி நீர் வீணாவதைக் கண்டு வேதனை அடைந்தார் காமராஜர். நமக்குக் கிடைக்க வேண்டிய தண்ணீர், நில அமைப்பால் மேற்கே ஓடி, வீணாகக் கூடாது. இந்த நீர் முழுவதையும் தமிழகத்துக்கே திருப்பிவிட வேண்டும் என்று அந்தத் துறை நிபுணர்களை திட்டமிடச் சொன்னார் காமராஜர். கேரள அரசோடும் சகோதரத்துவ உணர்வோடு பேச்சுவார்த்தை நடத்தி அணை கட்டுவதற்கு அனுமதியும் பெற்றார்.

மலைமுகடுகளின் அமைப்பை ஆராய்ந்து, மலையைக் குடைந்து மேற்கே ஓடும் நீரைக் கிழக்கு முகமாகத் திருப்பிவிடலாம். ஆனால், வரும் நீருக்கு கொள்ளிடம் வேண்டுமே என்று யோசித்தனர். பின்னர் பொள்ளாச்சிக்கு தெற்கே வால்பாறை மலை அடிவாரத்தில் அமைத்திருந்த ஆழியாற்றில் நீரை சேர்த்துவிடலாம் என முடிவெடுத்தனர். பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம் உருவானது. மலையைக் குடைந்து நிறைவேற்றப்பட்டிருக்கும் இந்த சாதனையைக் காணும் மேனாட்டு நீர் வழித் துறை அறிஞர்கள் இன்னமும் வியந்து பாராடுகிறார்கள்.

https://t.me/tamilpdfebooks

இன்னொரு சாதனை, தொட்டிப் பாலம். தண்ணீரை எப்படிக் கொண்டு செல்வது என்று தெரியாமல் விழித்து, பின்னர் தொட்டி மூலம் கொண்டு செல்ல முடியும் என்று கண்டறிந்தனர். அதை சாத்தியமாக்கிக் காட்டினார் காமராஜர். மலைக் காடுகளான மாத்தூர் பகுதியில் உள்ள கணியான் பாறை என்ற மலையையும், கூட்டுவாயுப் பாறை என்ற மலையையும் இணைத்து, பறளியாற்றுத் தண்ணீரைக் கொண்டு செல்வதற்காக இரண்டு மலைகளுக்கு நடுவில் கட்டப்பட்டுள்ளது இந்தப் பாலம்.

இரண்டு மலைகளை இணைக்கும் இந்தப் பாலம் நீளவாக்கில் 1,204 அடியாகவும், தரைமட்டத்தில் இருந்து 104 அடி உயரத்திலும் பிரமாண்டமாகக் கட்டப்பட்டு உள்ளது. இந்தப் பாலத்தைத் தாங்கி நிற்கும் ஒவ்வொரு தூணின் சுற்றளவும் 32 அடி. இப்படி மொத்தம் 28 தூண்கள் உள்ளன. பெரிய பெரிய தொட்டிகளாக தொகுக்கப்பட்டு உள்ளது. தண்ணீர் செல்லும் பகுதிகள் ஏழு அடி அகலம், ஏழு அடி உயரமாகக் கட்டப்பட்டு உள்ளன.

தொட்டி வடிவில் கட்டப்பட்டிருப்பதால் தொட்டிப் பாலம் எனவும் இரு மலைகளுக்கு நடுவே தொட்டில் போன்ற அமைப்பில் இருப்பதால் தொட்டில் பாலம் எனவும் அழைக்கப்படுகிறது. இந்தப் பாலத்தின் நடுப் பகுதிக்கு சென்று கீழே பார்த்தால் ஆறும் அதைக் கடக்கும் சாலையும் அழகாகக் காட்சியளிக்கின்றன. அணையிலிருந்து வரும் நீர் முதலில் மாத்தூர் பாலத்துக்கும் அதன்பின் செங்கோடி மற்றும் வடக்கு நாட்டுப் பாலங்கள் வழியாக தேங்காய்ப் பட்டணம் கிராமத்துக்கும் செல்கிறது. ஆசியாவிலேயே மிகப்பெரிய தொட்டிப் பாலம் நாகர்கோவிலில் இருந்து 45 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது.

முதல்வர் பணியில் காமராஜர் ஆற்றிய செயல்கள் ஏராளம். ஒவ்வொரு செயலையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் முழுமையாக விளக்கம் கேட்டு அறிந்துகொண்டார். ஆனால், முடிவை மட்டும் அவரே எடுத்தார். எந்த இடத்திலும் ஊழல் நுழையவும், அதிகார வர்க்கம் சர்வாதிகாரம் செய்யவும் இடம் கொடுத்ததே இல்லை. அவரது புதுமையான சீர்திருத்த செயல்பாடுகளில் சிலவற்றின் பட்டியல் மட்டும் இங்கே.

நியமனத்தில் புதிய சிந்தனை

காமராஜர் பதவியேற்ற சமயத்தில், ஓர் அதிகாரியின் நியமனத்தைக் குறித்த ஆலோசனை தேவைப்பட்டது. தமிழகத் தலைமைச் செயலாளராக இருந்த ராமுன்னி மேனன் ஐ.சி.எஸ். காமராஜரை சந்தித்து, "திருப்பதியில் நிறுவப்பட இருக்கும் பல்கலைக்கழகத்துக்கு சென்னை மாநிலத்தின் பொதுக் கல்வி இயக்குநர் கோவிந்தராஜுலு நாயுடுவை துணை வேந்தராக நியமிக்க விரும்புகிறார்கள். அவரை ஆந்திராவுக்கு அனுப்ப முடியுமா என்று கேட்டிருக்கிறார்கள்" என்றார்.

"ஆந்திரா இப்போதுதான் பிரிந்து போயிருக்கிறது. இந்த நேரத்தில் நாம் இதைச் செய்து கொடுக்காவிட்டால், பிரிந்து போன மாநிலத்துக்கு உதவியை மறுக்கிறோம் என்று நினைப்பார்கள். நாயுடு அங்கே சென்றுவிட்டால் நாம் இங்கே யாரை நியமனம் செய்தால் சரியாக

https://t.me/tamilpdfebooks

இருக்கும்?" என்று கேட்டார்.

"இயக்குநர் பதவிக்கு வருவதற்கு துணை இயக்குநர்கள் இருவருக்கு சம வாய்ப்பு இருக்கிறது. ஆனால், இருவருக்கும் நாற்பத்தியிரண்டு வயதுதான் ஆகிறது. இந்த வயதிலேயே அத்தனை பெரிய பதவி பெறுவது சரியாக இருக்குமா என்று தெரியவில்லை" என்றார் தலைமைச் செயலர்.

"இரண்டு பேரும் வேண்டாம் என்றால், வேறு யாரை நியமிக்க முடியும்?" என்று கேட்டார் காமராஜர்.

"ஐ.ஏ.எஸ்., அல்லது ஐ.சி.எஸ். அதிகாரிகளை நியமிக்கலாம்" என்று பதில் சொல்லப்பட்டது.

கொஞ்ச நேரம் யோசித்த காமராஜர், "ஒரு முக்கிய பதவிக்குப் போகிறவர், எப்போது பதவிக் காலம் முடியப்போகிறது என்று அதையே பார்த்துக்கொண்டு இருந்தால் காலம் ஓடுமே தவிர வேலை நடக்காது. அந்த இயக்குநர் பதவிக்கு ஆசைப்படும் கல்வி அதிகாரிகளில் ஒருவரை நியமித்தால், அவராவது மகிழ்ச்சியாக வேலை செய்வாரே. அந்த இரண்டுபேர் ரெக்கார்டுகளையும் பார்த்து, யாருடையது நன்றாக இருக்கிறதோ அவரை நியமித்து விடலாம்" என்று ஆணையிட்டார்.

"அதையும் பார்த்துவிட்டேன், நெ.து.சுந்தரவடிவேலு சரியாக இருப்பார்" என்றார் ராமுன்னி மேனன்.

"அப்படின்னா... அவரையே போட்டுடுங்க. தேவைன்னா சர்வீஸ் கமிஷனுக்கு இரண்டு பேர் பேரையும் அனுப்புங்க" என்றார் காமராஜர். அன்று நியமனம் செய்யப்பட்ட நெ.து.சுந்தரவடிவேலுதான் காமராஜர் பல கல்விச் சீர்திருத்தங்கள் கொண்டுவருவதற்கு பக்கபலமாக இருந்தவர்.

https://t.me/tamilpdfebooks

வீண் செலவுக்குத் தடை

சென்னைப் புறநகர்ப் பகுதியில் புதிதாக உருவாக இருந்த நகரங்களைப் புதுமையாக அமைக்க வேண்டும் என்று நகர அபிவிருத்திக் கழக அதிகாரிகள் திட்டமிட்டனர். அதற்காக ஒரு குழு, வளர்ந்த நாடுகளின் நடைமுறைகளைக் கண்டுவந்து தமிழகத்தில் அமல்படுத்த விரும்பியது. அதற்காக வெளி நாடுகளுக்குச் சென்று, அங்கே கட்டப்பட்டுள்ள கட்டட வடிவமைப்புகளை கொண்டுவர வேண்டும் எனப் பயணத் திட்டம் தயாரித்து, அதை சம்பந்தப்பட்ட துறை அமைச்சரை நேரில் சந்தித்து, அனுமதியும் பெற்றுவிட்டது.

துறை அமைச்சரின் பரிந்துரையைப் பொதுவாக முதலமைச்சர் நிராகரிக்க மாட்டார் என்பதால், காமராஜர் கையெழுத்துப் போட்டு வந்ததும் கிளம்ப வேண்டியதுதான் என்று அதிகாரிகள் பயணத்துக்குத் தயாராகக் காத்திருந்தனர். காமராஜரிடம் அந்தக் கோப்பு இறுதி அனுமதிக்காக வந்தது. அதை அமைச்சரும், ஐ.சி.எஸ். அரசு அதிகாரிகளும் அங்கீகரித்து இருந்தனர்.

அந்தப் பயணத் திட்டத்தையும் நோக்கத்தையும் படித்த காமராஜர் உடனே கையெழுத்துப் போடாமல் யோசனை செய்தார்.

நம் நாட்டில் ஒரு நகரை அமைக்க, ஏன் வெளிநாட்டைப் பின்பற்ற வேண்டும்? இந்தியாவில் அப்படிப்பட்ட நகரங்கள் இல்லையா? தமிழகத்தில் இல்லையா? வெளிநாட்டு கட்டட அமைப்புகள் நம் கலாச்சாரத்துக்கும், நடைமுறைக்கும் இசைந்து வருமா என்று பல கோணங்களில் சிந்தித்தார்.

உடனே தன் உதவியாளர்களை சந்தித்து ஆலோசனை செய்தார். அவர் மனதை முழுவதுமாக மதுரை நகரம் ஆக்கிரமித்து இருந்தது. அதனால் சம்பந்தப்பட்ட அமைச்சர் அல்லது அதிகாரிகளிடம் விசாரணைகூட செய்யாமல், அந்தக் கோப்பின் மீதே, 'வெளிநாட்டுச் சுற்றுப்பயணம் தேவை இல்லை. நமது தமிழகத்து அமைப்பைப் பின்பற்றினாலே போதும். மதுரையின் மையப் பகுதியில் இருக்கும் மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில், சுற்றிலும் தேரோடும் ரத வீதிகள், அடுத்த சுற்றில் அளவெடுத்து அமைத்தாற்போல நான்கு மாட வீதிகள், அதற்கடுத்து ஆவண வீதிகள், இடையில் இவற்றை இணைக்கும் சாலைகள் என்று அந்தக் காலத்திலேயே எவ்வளவு தொலை நோக்கோடு நகரை அமைத்திருக்கிறார்கள் நம் முன்னோர். இந்த அமைப்புக்கு மேல் திட்டமிடல் என்ன இருக்கிறது? நமது சென்னைக்கும் இந்த அமைப்பே போதும்' என்று எழுதினார்.

மக்களின் வரிப் பணத்தை உருப்படியாகச் செலவு செய்ய வேண்டும் என்பதில் காமராஜர் மிகவும் தெளிவாக இருந்தார். அவர் இருந்த காலம் வரை வீண் செலவு, விரயம், ஊழல் ஆகியவை அரசுத் துறையில் எட்டிப்பார்க்கவே இல்லை. அதைப் போலவே காமராஜர் காலத்தில் கல்வித் துறை மற்றும் விவசாயத் துறை செழிப்புடன் வளர்ந்து இருந்தன. சில காங்கிரஸ் தலைவர்கள் காமராஜரிடம், "இந்த சாதனைகளை விளம்பர சினிமாவாக எடுத்து வெளியிட்டால், மக்களிடம் நமது காங்கிரஸ் கட்சிக்கு நல்ல செல்வாக்கு கிடைக்கும்.

https://t.me/tamilpdfebooks

உடனே செயல் படுத்தலாமா?" என்று கேட்டார்கள்.

அதற்கு காமராஜர், "இந்த வேலையை செய்யத்தான் மக்கள் நம்மை இங்கே உட்கார வைச்சிருக்காங்க. அவங்க சொல்ற வேலையை செய்ற வேலைக்காரங்கதான் நாம். வேலையை செஞ்சிட்டு, அதை விளம்பரப்படுத்துறது நல்லாவா இருக்கும்? வேண்டாம்" என்று மறுத்தார். ஆனாலும் அந்த தலைவர்கள் விடாமல், "அதிகம் செலவாகாது. மூன்று லட்ச ரூபாய் இருந்தால் சிறப்பாகப் படம் எடுத்துவிடலாம்... தேர்தல் நேரங்களிலும் அதைக் கட்சிக்காக பயன்படுத்திக் கொள்ளலாம்" என்றார்கள்.

"மூன்று லட்சமா? அது இருந்தா நான் எத்தனை பள்ளிக்கூடம் திறப்பேன்..! வேண்டாம்" என்றார்.

அதற்கப்புறமும் விடாமல், "சரி, சாதனை நோட்டீஸாவது அச்சடித்து வெளியிடுவோம். நாம் இதை எல்லாம் செய்து இருக்கிறோம்னு சொன்னாத்தான் நமக்கு மரியாதை கிடைக்கும்" என்றார்கள்.

காமராஜர், "அம்மாவுக்கு சோறு போடுறதை விளம்பரம் பண்ண முடியுமா? அதைப் போலத்தான் இது. மக்கள் காசுல இருந்து ஒரு பைசாகூட இப்படி வெட்டிச் செலவு பண்ண நான் சம்மதிக்க மாட்டேன்" என்றார் காமராஜர். அதற்கு மேல் கட்சிக்காரர்களால் எதுவும் பேச முடியவில்லை.

எல்லோருக்கும் ஒரே சட்டம்

ஜாதி, ஊர், உறவு, நட்பு என்று எந்த வளையத்துக்குள்ளும் காமராஜரை வளைக்க முடியாது.

வண்ணாரப்பேட்டையில் விருதுநகர் நாடார் உறவின் முறையின் சார்பில், உயர்நிலைப் பள்ளி தொடங்க மனுப் போட்டிருந்தார்கள். அந்த அனுமதி கிடைக்கத் தாமதமாகிறது என்று அவரிடம் குறை சொல்லப்பட்டது. அதனால், சம்பந்தப்பட்ட துறையின் துணை இயக்குனரை அழைத்தார் காமராஜர்.

"தனியார் உயர்நிலைப் பள்ளி தொடங்குவதற்கு என்னென்ன தகுதிகள் வேண்டும்?" என்று கேட்டார்.

அதற்குத் தேவையானவற்றை பட்டியல் இட்டார் அதிகாரி. அதை முழுமையாகக் கேட்ட காமராஜர், "வண்ணாரப்பேட்டை பள்ளிக்கு இன்னும் எத்தனை நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும்?" என்று காமராஜர் கேட்டார்.

"உயர்நிலைப் பள்ளிக்குப் பொருத்தமான கட்டடம் தேவை. அதைத் தவிர, மற்ற எல்லா நிபந்தனைகளையும் நிறைவேற்றி விட்டார்கள். இப்போதைக்குப் பெரிய மாடி வீடு வாடகைக்குப் பிடித்துள்ளார்கள். அதில் தொடங்கப் போகிறார்களாம். அடுத்த ஆண்டுக்குள் தனியாகக் கட்டடம் கட்டிவிடுவார்களாம்" என்று பதில் சொன்னார் அதிகாரி.

"இப்படிப்பட்ட நிலையில் ஓர் அதிகாரியாக என்ன முடிவு எடுப்பீர்கள்?"

https://t.me/tamilpdfebooks

என்று காமராஜர் மீண்டும் அவரிடம் கேட்டார்.

"முதல் மூன்று வகுப்புகளுக்கு மட்டுமே அனுமதி கொடுப்போம். கட்டடம் அமைத்த பிறகு அடுத்தடுத்த வகுப்புகளுக்கு அனுமதி கொடுப்போம்" என்றார்.

"சரிதான்! பள்ளிக்கூட அனுமதி இல்லாவிட்டால் பொதுப் பணத்தை எடுத்துக் கட்டடம் கட்ட முடியாது. கல்வித் துறையின் இப்போதைய நடைமுறை சரியாகவே இருக்கிறது. அதனால் அவர்களுக்கு முதல் மூன்று படிவங்களை மட்டும் அனுமதித்தால் போதும்" என்று உத்தரவிட்டார் காமராஜர்.

"தாங்கள் விரும்பினால் நான்கு வகுப்பு வரை ஒப்புதல் தர முடியும் என்று இயக்குனர் சொல்லி இருக்கிறார்" என்று அதிகாரி மீண்டும் சொன்னார்.

ஆனால், காமராஜர் கொஞ்சமும் தயங்காமல், "அது சரி இல்லை. விதிமுறைகள் சரியாகவே உள்ளன. எனக்கு வேண்டியவர்களே சட்டத்துக்குக் கட்டுப்படாமல் சலுகை கேட்டால், மற்றவர்களை நான் எப்படிக் கட்டுப்படுத்த முடியும்? இப்போதைக்கு மூன்று வகுப்புகளோடு நிறுத்திக்கொள்ளுங்கள். சம்பந்தப்பட்டவர்களைக் கூப்பிட்டு அப்படியே சொல்லி விடுகிறேன்" என்று அழுத்தந்திருத்தமாகக் கூறிவிட்டார்.

புதிய உயர்நிலைப் பள்ளிக்கு மனு போட்டவர்கள், அன்று மாலையே வந்து, 'மூன்று வகுப்புகள் மட்டும் அனுமதித்தால் போதும்' என்று திருத்தி எழுதப்பட்ட மனுவைக் கொண்டு வந்தார்கள். ஆம், அவர்களிடமும் பேசி சட்டத்தை மதிக்க வைத்தார் காமராஜர்.

https://t.me/tamilpdfebooks

7

புதிய வழி! 1962-1966

காமராஜர் ஓய்வு அறியாமல் உழைத்துக்கொண்டு இருந்தார். கல்வி, விவசாயம், மின்சாரம், தொழில் என்று அத்தனை துறைகளிலும் தமிழகம் மேம்பட்ட மாநிலமாகத் திகழ வேண்டும் என்று விரும்பினார். அதற்காக மத்திய அரசிடம் போராடி நிதி வாங்கிக்கொண்டு வந்தார். ஒவ்வொரு பைசாவையும் கணக்குப் பார்த்து, நீண்ட நாள் திட்டங்களில் முதலீடு செய்தார்.

உடனடித் திட்டத்துக்கும், இலவசங்களைக் கொடுப்பதற்கும் கடும் எதிர்ப்பு தெரிவித்தார். அதனால், காங்கிரஸ் கட்சிக்குள் மனக் கசப்பு எழுந்தது.

இந்தச் சூழலில் சென்னை மாநிலத்தின் மூன்றாவது சட்டமன்றத் தேர்தல் 1962, பிப்ரவரி 21-ம் தேதி நடந்தது. அப்போது சென்னை மாநிலத்தில் 206 சட்டமன்றத் தொகுதிகள் இருந்தன. இதில் 167 பொதுத் தொகுதிகளாகவும் மற்றவை தனித் தொகுதிகளாகவும் இருந்தன. அந்தத் தேர்தலுக்கு முன்பு வரை அமலில் இருந்த இரட்டை உறுப்பினர் முறை நீக்கப்பட்டு, ஒரு தொகுதிக்கு ஓர் உறுப்பினர் என்று நிர்ணயிக்கப்பட்டது.

காமராஜர் தலைமையில் காங்கிரஸ் போட்டியில் இறங்கியது. வழக்கம்போல் திராவிடர் கழகத்தைச் சேர்ந்த ஈ.வெ.ராமசாமி, காமராஜருக்கு ஆதரவு வழங்கினார்.

முக்கிய எதிர்க்கட்சியாக திராவிட முன்னேற்றக் கழகம் திகழ்ந்தது. மிகவும் வலிமையுடன் திகழ்ந்த திராவிட முன்னேற்றக் கழகத்தில் அப்போது சிறு பிரிவு ஏற்பட்டு இருந்தது. முக்கிய தலைவர்களில் ஒருவரான ஈ.வி.கே.சம்பத் கட்சியைவிட்டு வெளியேறி, தமிழ் தேசியக் கட்சி என்ற புதிய கட்சியைத் தொடங்கினார். ராஜாஜியின் சுதந்திரா கட்சி, முஸ்லீம் லீக், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, ஃபார்வர்ட் பிளாக், சி.பா.ஆதித்தனாரின் நாம் தமிழர் கட்சி, அம்பேத்கரின் குடியரசுக் கட்சி, பொதுவுடமைக் கட்சி ஆகியவையும் அந்தத் தேர்தலில் போட்டியிட்டன.

https://t.me/tamilpdfebooks

எதிர்க் கட்சிகள் அனைத்தையும் ஒன்று சேர்த்து காங்கிரஸுக்கு எதிராகக் களம் இறக்க ஆசைப்பட்டார் அண்ணாதுரை. ஆனால், அவருடைய முயற்சி ஒரு சில இடங்களில் மட்டுமே பலன் அளித்தது.

அந்தத் தேர்தலில் சினிமா கலைஞர்களின் பங்கு அதிகம் இருந்தது. எம்.ஜி.ராமச்சந்திரன் என்கிற எம்.ஜி.ஆர். முழுமையாக களத்தில் இறங்கி தி.மு.க-வுக்கு ஆதரவு திரட்டினார். நடிகர் எஸ்.எஸ்.ராஜேந்திரன் தி.மு.க. சார்பில் தேனி சட்டமன்ற தொகுதியில் நிறுத்தப்பட்டார். நடிகர் சிவாஜி கணேசன் தமிழ் தேசியக் கட்சிக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்தார்.

தேர்தல் நடந்து முடிந்தது. காங்கிரஸ் போட்டியிட்ட 206 இடங்களில் 139 தொகுதிகளை வென்று பெரும்பான்மை பெற்றது. தி.மு.க. கட்சி 143 தொகுதிகளில் போட்டியிட்டு 50 தொகுதிகளில் வென்றது. சுதந்திரா கட்சி 94 தொகுதிகளில் போட்டியிட்டு 6 இடங்களையும், ஃபார்வார்டு பிளாக் 3 இடங்களையும் வென்றன.

சாத்தூர் தொகுதியில் காமராஜர் போட்டியிட்டு வெற்றி பெற்றார். காஞ்சிபுரம் தொகுதியில் அண்ணாதுரை போட்டியிட்டு தோல்வியைத் தழுவினார்.

காமராஜர், மூன்றாவது முறையாக 1962, மார்ச் 15-ம் தேதி கவர்னர் விஷ்ணுராம் மேதி முன்னிலையில் முதல்வர் பதவியை ஏற்றுக்கொண்டார். எம்.பக்தவத்சலம் கல்வி, நிதியைக் கவனிக்க, அப்துல் மஜீத் உள்ளாட்சியையும், ஆர்.வெங்கட்ராமன் வருவாய்த் துறையையும் கவனித்தார்கள். கக்கன் விவசாயத் துறை அமைச்சராக இருந்தார். காமராஜருடன் சேர்த்து ஒன்பது பேர் அமைச்சர்களாக இருந்தார்கள். அப்போது, இந்தியாவிலேயே இதுதான் மிகவும் சிறிய மந்திரிசபை என்பது குறிப்பிடத் தக்கது.

காமராஜருடன் ஈ.வி.கே.சம்பத்

அந்தத் தேர்தலுடன் இந்திய நாடாளுமன்றத்துக்கும் தேர்தல்

https://t.me/tamilpdfebooks

நடத்தப்பட்டது. தமிழகத்தில் இருந்த 41 நாடாளுமன்றத் தொகுதிகளில் 31 இடங்களை காங்கிரஸ் கட்சியும், தி.மு.க. 7 இடங்களையும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 2 இடங்களையும், ஃபார்வர்ட் பிளாக் கட்சி ஓர் இடத்திலும் வெற்றி பெற்றன.

இந்திய அளவில் மொத்தம் இருந்த 492 தொகுதிகளிலிருந்து காங்கிரஸ் 361 தொகுதிகளை வென்று, ஜவஹர்லால் நேரு நான்காம் முறையாகப் பிரதமராகப் பதவி ஏற்றார்.

மீண்டும் தமிழக முதல்வராகப் பதவி ஏற்ற காமராஜர், வழக்கம் போல் செம்மையாக செயல்பட்டார். ஆனால், நாடு எங்கும் காங்கிரஸ் கட்சிக்கு செல்வாக்கு குறைந்துவந்தது. இதைக் கண்ட நேருஜி கலங்கினார். நேருவின் சோகம் காமராஜரையும் தாக்கியது. ஏதாவது செய்ய வேண்டுமே என்று யோசித்தார்.

கே பிளான்

உருப்படியான எதிர்க் கட்சிகள் எதுவும் இல்லாத சூழலில் டெல்லியில் ஆட்சி ஏறியது காங்கிரஸ். காந்திஜியின் வழியில் வந்த அரசியல்வாதிகளின் எண்ணிக்கை குறைந்து, அரசியலை வியாபாரக் கண்கொண்டு பார்க்கும் நிலை அதிகரித்தது.

காங்கிரஸ் கட்சி தீட்டிய தொலைநோக்குத் திட்டங்களால் மக்களுக்கு உடனடிப் பயன் எதுவும் கிடைக்கவில்லை. காங்கிரஸ் தலைவர்களிடம் சேவை மனப்பான்மை குறைந்து சொகுசு வாழ்க்கை அதிகரித்தது. பதவிக்கு வந்ததும் காங்கிரஸ்காரர்களுக்கு லட்சியமும், பொதுஜன சிந்தனையும் குறைந்தன. அதனால் அதிகாரம் செலுத்துவதற்கு ஆசைப்பட்டார்களே தவிர, மக்களுக்காக உழைக்க முன்வரவில்லை.

அந்த நேரத்தில், உத்தரப்பிரதேச தேர்தலில் காங்கிரஸுக்கு ஏற்பட்ட தோல்விக்கு ஆளாளுக்குக் குறை சொன்னார்கள். கட்சியில் பெரும் கோஷ்டி மோதல் ஏற்பட்டது. பதவியில் இருந்தவர்களைப் பார்த்து மற்ற தலைவர்கள் பொறாமைப்பட்டனர்; அவர்களைப் பதவியிலிருந்து இறக்கத் தயாராக இருந்தார்கள். மக்களுக்காக உழைக்க வேண்டும் என்ற சிந்தனையே கட்சிக்காரர்களிடம் இல்லாமல் போனது.

கட்சி மாநாடுகளில் பதவிச் சண்டைதான் உச்சக்கட்டத்தில் நடந்தது. உருப்படியான திட்டங்கள் எதுவும் தீட்டப்படவில்லை. குறிப்பாகச் சொன்னால், காங்கிரஸ்காரர்கள் அனைவரும் அரசுப் பதவிகளைச் சுற்றிவந்தனர். பதவி மோகத்தில் இருந்த அவர்களைத் திசை திருப்ப முடியவில்லை. தமிழகம் மட்டும் இன்றி நாடு எங்கும் இதே நிலை. 'பதவியிலும் அந்தஸ்திலும் இருக்கும் வரை, சோஷலிசம் நம்மிடம் இருந்து விலகிப் போகும்' என்று காந்திஜி சொன்ன வார்த்தைகள் உண்மையாகிக்கொண்டு இருப்பதைக் கண்டு, அவருடைய உண்மை பக்தர் காமராஜர் வேதனைப்பட்டார். இந்தியப் பிரதமராக இருந்த பண்டித ஜவஹர்லால் நேருவும் கிட்டத்தட்ட இதே மனநிலையில் இருந்ததைக் கண்டு மனம் துடித்தார் காமராஜர்.

இந்த அபாய கட்டத்திலிருந்து நாட்டைக் காப்பாற்றவும், பதவி வெறி

https://t.me/tamilpdfebooks

பிடித்த கட்சிக்காரர்களிடமிருந்து காங்கிரஸைக் காக்க வேண்டும் எனவும் இரவு பகலாக சிந்தித்தார் காமராஜர்.

அவரது உள்ளத்தில் ஓர் அற்புதத் திட்டம் உதயமானது. 1963 ஜூலை மாதம் நேருவை சந்தித்து தீவிர ஆலோசனை நடத்தினார். 'பதவியில் இருக்கும் ஒவ்வொரு காங்கிரஸ்காரரும் காரிய கமிட்டியின் ஆணைக்குக் கட்டுப்பட்டவர். அதனால் அவர் எந்தப் பதவியைத் துறப்பதற்கும், அல்லது காரிய கமிட்டி விரும்பும் வேலையைச் செய்யவும் தயாராக இருக்க வேண்டும். அதனால், உயர்ந்த பதவியில் இருக்கும் காங்கிரஸ்காரர்கள் அவற்றைத் துறக்க வேண்டும். அதிகாரத்திலிருந்து சேவை செய்வதைத் தவிர, மக்களுக்கு சேவை செய்ய வேறு மார்க்கங்களும் இருக்கின்றன என்பதைக் காட்ட வேண்டும். இதை உடனடியாக நடைமுறைப் படுத்த வேண்டிய அவசியம் வந்துவிட்டது!' என்று நேருவிடம் விளக்கினார்.

காரிய கமிட்டிக் கூட்டத்தில்...

காமராஜரின் திட்டத்தைக் கேட்டு ஆனந்தப்பட்டார் நேருஜி. காமராஜரின் திட்டத்தை இன்னும் சீரியதாக்கி, இந்திய அளவில் அமல்படுத்தி காங்கிரஸ் கட்சியில் மாபெரும் சீர்திருத்தத்தைக் கொண்டு வர வேண்டும் என்று நேருஜி ஆசைப்பட்டார். இந்தத் திட்டத்துக்கு 'கே பிளான்' (காமராஜ் திட்டம்) என்று பெயர் சூட்டிய நேருஜி, இதை காங்கிரஸ் காரிய கமிட்டிக் கூட்டத்தில் ஒப்புதல் பெற்றே செயல்படுத்த வேண்டும் என்று விரும்பினார். அப்போதுதான் திட்டம் நாடு தழுவிய அளவில், மக்களிடம் விழிப்பு உணர்வை உண்டாக்கும் என நினைத்தார்.

காமராஜரின் திட்டத்தைப் பலர் கடுமையாக எதிர்த்தனர். அவருடைய ஆதரவாளர்களில் பலர்கூட எதிர்த்தனர். 'பதவியில் இருந்தால் மட்டுமே, இன்னும் சிறந்த திட்டங்களைக் கொண்டு வந்து மக்களுக்குத் தேவையானதைச் செய்ய முடியும். பதவியில் இல்லாமல் எந்த சீர்திருத்தமும் செய்ய முடியாது' என்று சொல்லிப் பார்த்தனர். ஆனால், கொண்ட கொள்கையில் பிடிவாதமாக இருந்தார் காமராஜர்.

1963 ஆகஸ்ட் 9-ம் தேதி. காங்கிரஸ் கட்சியில் புதுமையான ஒரு

https://t.me/tamilpdfebooks

முடிவு எடுக்கப்படுவதாக செய்தி பரவி, டெல்லி பரபரப்பாக இருந்தது. அகில இந்திய காங்கிரஸ் காரிய கமிட்டிக் கூட்டம் ஆரம்பமானது.

காமராஜர் எழுந்து, "அரசாங்கப் பதவிகளில் உள்ள அனுபவம் மிக்க முதிர்ந்த தலைவர்கள், தங்கள் பதவிகளை ராஜினாமா செய்துவிட்டு, காங்கிரஸ் கட்சியைப் பலப்படுத்தும் பணியில் ஈடுபட வேண்டும்" என்று பேசினார். இதைக் கேட்ட தொண்டர்கள் ஆனந்தப்பட்டனர்; ஆனால், தலைவர்கள் அதிர்ச்சி அடைந்தனர். இருந்தாலும், காமராஜரின் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மூத்த தலைவர்கள், மத்திய மந்திரிகள், மாநில முதல்வர்கள், மாநில மந்திரிகள், கவர்னர்கள் என அனைவரும் ராஜினாமா கடிதத்தை பிரதமர் நேருவிடம் ஒப்படைப்பது என்றும், நேரு யார் யாருடைய ராஜினாமாவை ஏற்கிறாரோ, அவர்கள் எல்லாம் கட்சிப் பணிக்குத் திரும்ப வேண்டும் என்றும் தீர்மானிக்கப் பட்டது.

அப்போது எதிர்பாராத திருப்பம் ஒன்று ஏற்பட்டது!

பிரதமர் நேரு எழுந்து, "நான், என்னுடைய பிரதமர் பதவியை ராஜினாமா செய்துவிட்டுக் கட்சிப் பணிக்குத் திரும்புகிறேன்" என்று அறிவித்தார்.

உடனே காமராஜர், "நேருஜி எந்தக் காரணம் கொண்டும் பதவியை ராஜினாமா செய்யக்கூடாது. நேருவின் தலைமையில் மட்டுமே நாடு முன்னேற முடியும். ராஜினாமா செய்வதில் நேரு மிகவும் உறுதியாக இருந்தால், என்னுடைய இந்தத் திட்டத்தையே நான் வாபஸ் பெற்றுக்கொள்கிறேன்" என்று அழுத்தந்திருத்தமாகக் கூறினார்.

காமராஜரின் கருத்தை ஏற்று, காரிய கமிட்டி உறுப்பினர்களும் உடனே, நேருவின் ராஜினாமாவுக்குக் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். அதனால் நேரு ராஜினாமா செய்யவில்லை.

ராஜினாமா கடிதம் கொடுத்தவர்களிலிருந்து குறிப்பிட்டவர் களைத் தேர்ந்தெடுத்தார் நேரு. அப்போது, "நான் பதவியில் இருந்துகொண்டு, என்னுடைய நீண்ட நாள் நண்பர்களின் ராஜினாமாவை ஏற்றுக்கொள்ளும் இக்கட்டான நிலை எனக்கு மிகவும் வருத்தம் அளிக்கிறது. ஆனால், காங்கிரஸ் கட்சியின் எதிர்காலத்தையும், தேசத்தின் நலனையும் முன்னிட்டு இந்தக் கடுமையான பொறுப்பை ஏற்றுக்கொண்டு, 42 பேரின் ராஜினாமாவை மட்டும் இப்போது ஏற்றுக்கொள்கிறேன்" என்று அறிவித்தார்.

நேரு அறிவித்த பெயர்களில் முதலாவதாக இருந்தது தமிழக முதல்வராக இருந்த காமராஜரின் பெயர். ஒரிசா முதல்வர் பிஜு பட்நாயக், காஷ்மீர் முதல்வர் பக்ஷி குலாம் முகமது, உத்தரப்பிரதேச முதல்வர் சி.பி.குப்தா, பீகார் முதல்வர் பினோதானந்தா, மத்தியபிரதேச முதல்வர் மண்ட்லாய் ஆகியோருடைய பெயர்கள் அடுத்து இடம்பெற்று இருந்தன.

இவர்களைத் தவிர மத்திய மந்திரிகளாக இருந்த லால் பகதூர் சாஸ்திரி, மொரார்ஜி தேசாய், எஸ்.கே.பாட்டீல், ஜெகஜீவன்ராம்

https://t.me/tamilpdfebooks

ஆகியோருடைய பெயர்களும் இடம்பெற்று இருந்தன.

இப்படி ஒரு சம்பவம் உலக வரலாற்றிலேயே நிகழ்ந்திருக்காது. எப்பாடுபட்டேனும் பதவியைப் பிடிக்கப் போட்டிகளும், போராட்டங்களும் நிகழ்ந்த காலத்தில், தானே முன்வந்து பதவியைத் துறக்கும் திட்டத்தை அறிவித்து, அதன் முதல் நபராகவும் இருந்தார் காமராஜர்.

அதனால் இந்தத் திட்டத்தை உலகப் பத்திரிகைகள் எல்லாம் வியந்து, பாராட்டி எழுதின. இந்திய ஜனநாயகத்தின் மதிப்பை உலக அரங்கில் உயர்த்திக் காட்டியது காமராஜரின் திட்டம்.

காந்தியடிகள் பிறந்த அக்டோபர் 2-ம் தேதி முதல்வர் பதவியிலிருந்து விலகினார் காமராஜர். அப்போது அவர், "பதவியையும் அரசையும் காங்கிரஸ்காரர்கள் சுற்றிவருகிறார்கள். இந்த நேரத்தில் சுயநலம் இன்றி தேசப் பற்று, தாய்நாட்டுக்கு உழைத்தல் போன்ற விஷயங்களில் தலைவர்கள் கவனத்தை திசைதிருப்ப வேண்டியது அவசியம். அதனால் என்னைப் போன்றவர்கள் பதவியிலிருந்து வெளியே வந்தால்தான், பதவி என்பது பெரிதல்ல என்ற எண்ணம் நம் கட்சியினருக்கு உண்டாகும். பதவியிலும் அந்தஸ்திலும் இருக்கும் வரை சோஷலிசம் விலகிச்செல்லும் என்று காந்திஜி சொன்ன வார்த்தைகள் உண்மையாகி வருகிறது. அதனால்தான் நான் கட்சிப் பதவியை ராஜினாமா செய்கிறேன்" என்று உணர்ச்சி மிகுந்த உரை நிகழ்த்தினார்.

‘காமராஜர் முதல்வர் பதவியிலிருந்து விலகப்போகிறார்’ என்ற தகவலைக் கேள்விப்பட்டதும், பெரியார், ‘வேண்டாம். இது தகாத செயல். தாங்களாகவோ அல்லது பிறருடைய ஆலோசனையாலோ, தமிழ்நாட்டு முதல்வர் பதவியிலிருந்து நீங்கள் விலகினால், அது தமிழர்களுக்கும் தமிழ்நாட்டுக்கும், தங்களுக்கும் செய்துகொள்ளும் தற்கொலைக்கு ஒப்பாகும்’ என்று தந்தி கொடுத்தார்.

ஆனால், எதையும் கேட்கும் மனநிலையில் காமராஜர் இல்லை. இத்தனை நாள் சுமந்துவந்த முள் கிரீடத்தை தலையிலிருந்து இறக்கி வைப்பதில்தான் குறியாக இருந்தார். அதனால் பக்தவத்சலத்தை முதல்வர் பதவியில் அமர்த்திவிட்டு வெளியேறினார்.

மீண்டும் தேடிவந்த பதவி

காமராஜர் மற்றும் முக்கிய தலைவர்கள் பலரும் ஆட்சிப் பீடத்திலிருந்து இறங்கி வந்து, மீண்டும் மக்கள் சேவையில் ஈடுபட்டார்கள். இந்த செயல் நாட்டு மக்களிடையே காங்கிரஸ் கட்சிக்கு மீண்டும் செல்வாக்கைக் கொடுத்தது.

இதை ஆராய்ந்து 1963-ல் அகில இந்திய காங்கிரஸ் மகா சபைக் கூட்டத்தில், ‘காமராஜர் திட்டம் அதிசயிக்கத்தக்க பல நற்பலன்களை உருவாக்கி உள்ளது. மக்களிடமும் காங்கிரஸ் ஊழியர்களிடமும் புது உற்சாகத்தை ஏற்படுத்தி உள்ளது. நமது கட்சியில் காமராஜர் திட்டம் புத்துணர்ச்சியையும் புது வேகத்தையும் உண்டாக்கியுள்ளது’ என்று அறிவித்தனர்.

https://t.me/tamilpdfebooks

இந்த மாநாட்டில் நேரு, "இந்த நாட்டின் வரலாற்றிலும், காங்கிரஸ் வரலாற்றிலும் காமராஜர் திட்டம் ஒரு புதிய புரட்சியை ஏற்படுத்தி உள்ளது. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பதவிக்கு மிகவும் தகுதியானவர் நம்முடைய காமராஜர்தான்" என்று பலத்த கரகோஷத்துக்கு இடையே தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சியின் அகில இந்தியத் தலைவர் பதவிக்கு காமராஜர் பெயரை, கூட்டம் அடையாளம் காட்டியது. ஏனென்றால் அடுத்த அக்டோபர் மாதம் காங்கிரஸ் காரிய கமிட்டிக் கூட்டம் டெல்லியில் கூடியபோது, அகில இந்திய காங்கிரஸுக்குப் புதிய தலைவரைத் தேர்ந்தெடுப்பது குறித்து விவாதம் நடந்தது. நேரு ஏற்கெனவே சூசகமாக காமராஜர் பெயரை முன்மொழிந்து இருப்பதால், லால் பகதூர் சாஸ்திரி, அதுல்யா கோஷ் ஆகிய மூவர் பெயர் மட்டுமே தலைவர் பதவிக்கு பரிசீலனை செய்யப்பட்டது. இறுதியில் காமராஜரை அகில இந்திய காங்கிரஸ் தலைவராக ஏகமனதாக தேர்ந்து எடுத்தார்கள்.

தகவலைக் கேள்விப்பட்டதும் காமராஜர் வழக்கம் போல விருப்பம் காட்டாமல் நேருவைத் தொடர்புகொண்டு பேசினார்.

‘தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சியைப் பலப்படுத்த வேண்டிய வேலை எனக்கு இருக்கிறது, இந்த சமயத்தில் அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் பதவி கொடுத்தால், என்னால் முழுமையாக தமிழகத்தில் கவனம் செலுத்த முடியாது. எனவே, என்னைத் தேர்ந்தெடுக்க வேண்டாம்’ என்று நேருவிடம் கேட்டுக் கொண்டார்.

ஆனால், நேரு பிடிவாதமாக, ‘உங்களைப் போன்றவர்கள் மட்டும்தான் இந்த நேரத்தில் தலைவராக இருந்து காங்கிரஸ் கட்சியை வழிநடத்த முடியும்’ என்று உறுதியுடன் சொல்லிவிட்டார். அதனால், வேறு வழி இன்றி பதவியை ஏற்றுக்கொண்டார் காமராஜர். இந்த முடிவு தமிழக காங்கிரஸ் தொண்டர்களையும் ஆனந்தப்படுத்தியது.

https://t.me/tamilpdfebooks

நேருஜி, காமராஜர், இந்திரா காந்தி

1964, ஜனவரி மாதம் ஒரிசாவின் தலைநகரான புவனேஸ்வரத்தில் 68 வது காங்கிரஸ் மகாசபைக் கூட்டம் நடந்தது. இந்தக் கூட்டத்தில் காமராஜர் தலைவராகப் பதவி ஏற்க இருந்தார். அந்த வைபவத்தைக் காண்பதற்காகத் தமிழகத்திலிருந்து ஏராளமான தொண்டர்கள் அவருடன் கிளம்பினார்கள். அவர்களைத் தடுத்து நிறுத்த இயலாமல் உடன் அழைத்துச் சென்றார். சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்து புவனேஸ்வரத்தை நோக்கி, காங்கிரஸ் தொண்டர்களுக்கான சிறப்பு ரயில் கிளம்பியது. இந்த ரயிலில் சுமார் 700 காங்கிரஸ் தொண்டர்கள் சென்றார்கள். வழியில் ஒவ்வொரு பெரிய நகரத்திலும் காங்கிரஸ் தலைவர் காமராஜருக்கும் தொண்டர்களுக்கும் பெரும் வரவேற்பு கொடுக்கப்பட்டது. ஒவ்வோர் ஊரிலும் மாலை, வரவேற்புகளை ஏற்றுக்கொண்ட காமராஜர், சின்னதாக நன்றியுரை நிகழ்த்தினார்.

ஒரிசாவில் காமராஜருக்கு மாபெரும் வரவேற்பு வழங்கப்பட்டது. ஒரிசா முதல்வர் பட்நாயக் ரயில்வே நிலையத்துக்கு வந்து வரவேற்றார். காங்கிரஸ் கட்சியின் 68 வது மாநாட்டைக் குறிக்கும் வகையில், 68 குண்டுகள் முழங்க வரவேற்கப்பட்டார் காமராஜர். மக்களின் அன்பையும் வரவேற்பையும் கண்டு நெகிழ்ந்து இருந்தார் காமராஜர். உடல் நலம் இல்லாததால் நேரு இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை என்பதுதான் காமராஜருக்குப் பெரும் குறை.

காமராஜர் ஊர்வலமாக மாநாட்டு மேடைக்கு அழைத்து வரப்பட்டார்.

https://t.me/tamilpdfebooks

இரண்டு லட்சம் பேர் கலந்துகொண்ட மாநாட்டில் காமராஜர் தலைவராக இருந்து இறுதி உரை நிகழ்த்தினார்.

"இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையின் நிர்வாகத்தை நடத்திச் செல்லும் பெரும் பொறுப்பை சாதாரணத் தொண்டனாகிய எனக்கு அளித்திருக்கிறீர்கள். இந்த உயர்ந்த பதவிக்கு என்னை ஏகமனதாகத் தேர்ந்தெடுத்ததன் மூலம், உங்கள் மட்டற்ற அன்பை என் மீது பொழிந்து இருக்கிறீர்கள். உங்கள் அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமாக, என்னுடைய கடமைகளை நிறைவேற்றி வைப்பேன். உங்கள் மனப்பூர்வமான ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்க வேண்டும்.

சோஷலிசமே நமது லட்சியமாக இருக்க வேண்டும். ஒருவரிடம் மட்டுமே பணம் சேர்வதைத் தடுக்காவிட்டால், பணக்காரர் மேலும் செல்வந்தராவார். ஏழைகள் மேலும் வறுமையில் தள்ளப்படுவார்கள். அதனால், ஒவ்வொரு மாநிலத்திலும் எந்த முன்னேற்றம் நிகழ்ந்திருக்கிறது என்பதை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காந்திஜி வழி வந்த காங்கிரஸ்காரர்கள் சொல்லிலும் செயலிலும் அவரைப் போலவே வாழ வேண்டும். மற்ற இயக்கத்தினரைவிட காங்கிரஸ் கட்சியினர் மகத்தான குணங்களுடன் திகழ வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அதை நிறைவேற்றுவோம்" என்று கேட்டுக்கொண்டார்.

கூட்டத்தினர், காமராஜர் பேச்சைக் கேட்டு கைதட்டி மகிழ்ந்தனர். காந்திஜியைப் போன்று செயல்படும் ஒரு தலைவர் மீண்டும் வந்துவிட்டார் என்று ஆனந்தப்பட்டனர்.

சட்டசபையில் காமராஜர்...

காலா காந்தி!

புவனேஸ்வர மாநாட்டில் காமராஜர் பேசியது இந்தியா எங்கும் எதிரொலித்தது. காந்திஜியின் உண்மை சீடர் காங்கிரஸ் கட்சியின்

https://t.me/tamilpdfebooks

தலைமைக்கு வந்திருக்கிறார் என்று மக்கள் சந்தோஷப் பட்டனர். காமராஜரை 'காலா காந்தி' என்று அன்போடு அழைத்தார்கள்.

ஆனால், இந்தப் புகழுரையை காமராஜர் விரும்பவில்லை. "மகான் காந்திஜியுடன் என்னை ஒப்பிடவே கூடாது. நான் ஒரு சாதாரணத் தொண்டன்" என்று கேட்டுக்கொண்டார். ஆனாலும் வடநாட்டு மக்கள் அவரை, 'காலா காந்தி' என்று அழைப்பதை ஆனந்தமாகவே எடுத்துக்கொண்டனர்.

அகில இந்திய காங்கிரஸ் தலைவராக பொறுப்பு எடுத்துக் கொண்டதும், அகில இந்திய சுற்றுப்பயணம் மேற்கொண்டார் காமராஜர். பஞ்சாப், நேபாளம், ஒரிசா, உத்தரப்பிரதேசம், ஆந்திரம், மைசூர், தமிழகம் ஆகிய பகுதிகளுக்குத் தொடர்ந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டார். ஒவ்வொரு நாளும் குறைந்தது ஐந்து முதல் 15 கூட்டங்களில் கலந்துகொண்டு பேசினார். சென்ற இடங்களில் எல்லாம் காங்கிரஸ் கட்சிக்கு வலிமை சேர்த்துக் கொண்டே சென்றார். ஆடம்பர வரவேற்பை விரும்பாமல், எல்லோருக்கும் எளியராக கூட்டங்களில் கலந்துகொண்டார்.

ஒவ்வோர் இடத்திலும், மக்கள் எப்படி வாழ்கிறார்கள், அடிப்படைத் தேவைகள் அவர்களுக்குக் கிடைத்திருக்கின்றனவா, கிடைப்பதற்கு காங்கிரஸ் கட்சியால் என்ன செய்ய முடியும் என்ற ஆக்கபூர்வ செயல்களை சிந்திப்பதிலேயே காலம் தள்ளினார். ஒவ்வொரு பகுதியிலும் ஏழை மக்களை சந்தித்துப் பேசினார்.

ஒவ்வொரு மாநில முதல்வர்கள், அமைச்சர்களை சந்தித்து விவசாயத்துக்கு முன்னுரிமை கொடுக்கக் கேட்டுக்கொண்டார். மருத்துவம், சாலை வசதி, கல்வி போன்றவை மற்ற மாநிலங்களிலும் பரவ, தன்னால் ஆன உதவியை செய்தார்; வழிகாட்டுதலை மேற்கொண்டார். காந்திஜிக்குப் பிறகு அவரைப் போலவே சிந்திக்கவும், தொண்டர்களை வசீகரிக்கவும் நல்ல தலைமை கிடைத்துவிட்டது என்று பொதுமக்கள் நிம்மதி அடைந்தார்கள். கட்சி வளர்ப்பதையே தலையாய கடமையாகக் கொண்டு கடுமையாக உழைத்தார் காமராஜர்.

ஆசிய ஜோதி அணைந்தது!

காமராஜர் கையில் காங்கிரஸ் கட்சியை ஒப்படைத்துவிட்ட திருப்தியில் இருந்தார் நேரு. அதனால், கட்சியைப் பற்றிய கவலை அவருக்கு ஒழிந்தது. உடல் நிலை சரியில்லாத நிலையிலும், அவ்வப்போது காமராஜரைத் தொடர்புகொண்டு பேசினார். அதிக நாட்கள் காமராஜர் டெல்லியில் இருக்கவேண்டி வந்ததால், அவர்கள் உறவு பலப்பட்டது.

1964, மே 25-ம் தேதி. தமிழ்நாட்டில் தீவிர சுற்றுப்பயணத்தில் இருந்தார் காமராஜர். அந்த நேரத்தில் அவரிடம் 'பிரதமர் நேருவின் உடல் நிலை மிகவும் மோசமடைந்து விட்டது' என்ற அவசரச் செய்தி தயக்கத்துடன் தெரிவிக்கப்பட்டது. பெரும் அதிர்ச்சி அடைந்தார் காமராஜர். உடனடியாக போனில் கட்சித் தலைவர்களிடம் பேசிவிட்டு, விமானம் மூலம் டெல்லிக்குச் சென்றார் காமராஜர்.

https://t.me/tamilpdfebooks

விமானம் டெல்லியை நெருங்கிய, பிற்பகல் 2 மணிக்கு, 'நேருஜி அமரராகிவிட்டார்' என்ற அதிர்ச்சிச் செய்தி காமராஜரைத் தாக்கியது. எதுவும் பேச முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டார் காமராஜர். அவசரகாலப் பிரதமராக நந்தா பதவி ஏற்று இருந்தார்.

17 ஆண்டுகள் இந்திய நாட்டின் பிரதமராக இருந்த நேருஜியின் உடல் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டது. உள்ளம் வெடிக்க, உதடுகள் துடிக்க நேருஜியின் இறந்த உடலைப் பார்த்து கண்ணீர் வடித்தார் காமராஜர்.

நேருவின் உடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக லட்சக் கணக்கான மக்கள், வரிசையில் நின்று அழுதுகொண்டிருந்தார்கள். அனைத்து மாநில முதல்வர்கள், முக்கியத் தலைவர்கள், வெளிநாட்டுத் தலைவர்கள் என எல்லோரும் இந்தியாவில் வந்து குவிந்தார்கள்.

நேருஜி, ராஜாஜி, வல்லபபாய் பட்டேல்

எல்லோர் மனதிலும் ஒரே ஒரு கேள்விதான் நின்றது! நேருஜிக்குப்பிறகு யார் என்று ஒருவரை ஒருவர் கேட்டுக் கொண்டனர். ஆனால், பதில்தான் யாரிடமும் இல்லை.

இந்த நேரத்தில் இந்தியாவைப் பற்றி வெளிநாடுகளில் தவறான கண்ணோட்டமே இருந்தது. அதாவது இந்தியர்களுக்கு ஜனநாயகத்தைப் பற்றி எதுவுமே தெரியாது என நினைத்தார்கள். நேருஜியின் மறைவால், இந்தியாவில் ராணுவ ஆட்சி ஏற்பட வாய்ப்பு இருப்பதாகவே நம்பினார்கள். அதைப் போலவே பிரதமர் பதவியைப் பிடிப்பதற்காக காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் முண்டியடித்துச் சண்டை போட்டு, நாட்டையே அசிங்கப் படுத்துவார்கள் என்றும் நினைத்தார்கள்.

ஆனால், இது எதுவுமே நடக்கவில்லை. தலைவர்கள் அனைவரும் அடுத்து நடக்கப்போவது தெரியாமல் அமைதியாக இருந்தார்கள். எல்லோருமே, அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் காமராஜர்

https://t.me/tamilpdfebooks

பார்த்துக்கொள்வார் என்று நம்பிக்கையுடன் இருந்தார்கள்.

நேருஜியின் இறுதிச் சடங்கு செம்மையாக நடந்து முடிந்தது. ஜனாதிபதி ராதாகிருஷ்ணனை சந்தித்தார் காமராஜர். "தற்காலிகப் பிரதமர் நந்தா நீண்ட காலம் தொடர முடியாது. அதனால் நாடாளுமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். பாரத நாட்டில் அதுவும் காங்கிரஸ் கட்சியில் தலைவர்களுக்குப் பஞ்சம் கிடையாது என்றாலும், யார் அந்தப் பதவிக்கு, அன்றைய தினத்தில் பொருத்தமானவர் என்பதுதான் கேள்வி.

அனைத்து நாளிதழ்களும் காமராஜர் என்ன செய்யப் போகிறார் என்பதையே தலைப்புச் செய்தியாக வெளியிட்டன. நாடாளுமன்றத்துக்குப் புதிய தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காக, மே 30-ம் தேதி அகில இந்திய காங்கிரஸ் காரிய கமிட்டிக் கூட்டம் கூட்டப்பட்டது. காங்கிரஸ் ஆட்சி புரிந்த அத்தனை மாநில முதலமைச்சர்களும் சிறப்பு அழைப்பாளர்களாக அழைக்கப்பட்டு இருந்தனர்.

அந்த நேரத்தில் காமராஜரே பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நெருங்கிய தலைவர்கள் நெருக்கடி கொடுத்தார்கள். ஆனால், அந்தப் பதவியை ஏற்றுக்கொள்வதில்லை என்பதில் திட்டவட்டமாக இருந்தார் காமராஜர்.

"இந்திய தேசத்தின் பிரதமராக இருப்பவர் நல்ல படிப்பாளியாகவும், நல்ல மொழி வளமும் கொண்டவராகவும், உலகத் தலைவர்களுக்கு இணையானவராகவும் இருக்க வேண்டும். நான் உழைப்பை மட்டுமே நம்புபவன், எனக்கு அந்தப் பதவி பொருத்தம் இல்லை" என்று சொல்லி ஆரம்பத்திலேயே அந்தப் பேச்சைத் தவிர்த்துவிட்டார்.

அன்றைய சூழலில் காமராஜர் பிரதமர் பதவியை ஏற்றுக் கொண்டிருந்தால், எதிர்த்துக் கேள்வி கேட்க யாருமே கிடையாது. ஆனாலும், 'பதவி எனக்கு எப்போதும் சுமைதான். அது பாரதப் பிரதமர் பதவியாக இருந்தாலும் தேவையில்லை' என்று தூக்கி எறிந்தார் காமராஜர். இதனால் இந்திய மக்கள் மற்றும் தலைவர்கள் மத்தியில் காமராஜரின் மரியாதை மேலும் உயர்ந்தது.

காங்கிரஸ் காரிய கமிட்டிக் கூட்டத்தில் காமராஜர், "நேருஜியின் மறைவுக்குப்பிறகு, அந்த இடத்துக்கு புதிய ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் பணியில் நாம் ஈடுபட்டு இருக்கிறோம். இது நமது நாட்டின் கௌரவம், மானம் சம்பந்தப்பட்டது. அதனால் அனைவரும் ஒற்றுமையுடன் செயல்பட்டு, போட்டி இன்றி ஏகமனதாக ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

அதன்பிறகு, நாடாளுமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தை காமராஜருக்கு வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தக் கூட்டத்தில் அடிதடி, மோதல், போட்டியை எதிர்பார்த்தவர்கள் ஏமாந்து போனார்கள். அத்தனை சாதுர்யமாகப் பேசி கூட்டத்தை வசியம் செய்து வைத்திருந்தார் காமராஜர்.

https://t.me/tamilpdfebooks

டாக்டர் ராதாகிருஷ்ணன், காமராஜர், லால்பகதூர் சாஸ்திரி

அடுத்த சில தினங்கள் காமராஜர் தீவிர யோசனையில் படுவேகமாக வேலை செய்தார். கட்சியின் தலைவர்களையும், முதல் மந்திரிகளையும், நாடாளுமன்ற காங்கிரஸ் உறுப்பினர்களையும் தனித்தனியே சந்தித்து, கருத்துகளைக் கேட்டுக்கொண்டார். அனைவரிடமும் கருத்து கேட்ட காமராஜர் மனதில் என்ன இருக்கிறது என்பதை மட்டும் யாராலும் படிக்க இயலவில்லை. அந்த அளவுக்கு இரும்பு மனிதராகக் காரியங்களை நிறைவேற்றினார்.

அதற்குள் பத்திரிகைகளில், காமராஜர் பதவிக்கு வரப்போவது இல்லை என்பதால் அடுத்து வரப்போவது லால் பகதூர் சாஸ்திரியா அல்லது மொரார்ஜி தேசாயா என்று பக்கம் பக்கமாக எழுதிக்கொண்டு இருந்தார்கள். காங்கிரஸ் உறுப்பினர்களோ இருவரையும் ஆதரித்தார்கள். ஆனால், போட்டியே இல்லாமல் இந்தச் சிக்கலைத் தீர்க்க வேண்டும் என விரும்பினார் காமராஜர்.

ஜூன் 1-ம் தேதி இரவு மொரார்ஜி தேசாயை சந்தித்துப் பேசினார் காமராஜர். காமராஜர், மொரார்ஜியை சந்தித்துப் பேசியதைக் கண்டதும், அடுத்த பிரதமர் அவர்தான் என்று அனைவரும் முடிவு கட்டினார்.

ஆனால், உள்ளே நடந்தது புதுமையானது. மொரார்ஜி தேசாயைச் சந்தித்த காமராஜர், "பெரும்பாலான உறுப்பினர்கள் லால் பகதூர் சாஸ்திரி பிரதமராக வர வேண்டும் என்று விருப்பம் தெரிவிக்கிறார்கள். அதனால், நீங்கள் போட்டியிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும். மேலும், நீங்களே இந்தத் தகவலை பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தால், நமது ஜனநாயகத்தைப் பற்றி உலகமே அறிந்து பெருமைப்படும்' -- கேட்டுக் கொண்டார்.

லால் பகதூர் சாஸ்திரிக்கு இருந்த ஆதரவை மொரார்ஜியும் அறிவார். ஆகையால் காமராஜருடைய பேச்சுக்கு அப்படியே கட்டுப்பட்டார். வெளியே காத்திருந்த பத்திரிகையாளரை சந்தித்த மொரார்ஜி, "நாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, நாடாளுமன்ற காங்கிரஸ் கட்சித்

https://t.me/tamilpdfebooks

தலைவராக லால் பகதூர் சாஸ்திரியைத் தேர்ந்தெடுக்க இருக்கிறோம்" என்று அறிவித்தார். பிரச்னையே இல்லாமல் சமாளித்த காமராஜரையும், தலைமைக்குக் கட்டுப்பட்டு விட்டுக்கொடுத்த மொரார்ஜி தேசாயையும் காங்கிரஸ் தொண்டர்கள், தலைவர்கள் மட்டுமின்றி அனைவரும் பாராட்டினார்கள்.

கிங் மேக்கர் காமராஜர்

1964, ஜூன் 2-ம் தேதி. காலை 9 மணிக்கே நாடாளுமன்றத்தில் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுகூடினார்கள். பார்வையாளர் கூடத்தில், மாநில முதல் மந்திரிகளும், தலைவர்களும், வெளிநாட்டுத் தலைவர்களும் நடக்க இருப்பதை ஆர்வமாக கவனித்துக்கொண்டு இருந்தனர்.

தலைமை உரை நிகழ்த்தினார் காமராஜர்.

"தன்னிகரற்ற தலைவர் நேருஜியின் இடத்தை நிரப்புவது என்பது யாருக்குமே சாத்தியம் அல்ல. ஆனாலும், இப்போது நம் முன்னே உள்ள கடமையை நிறைவேற்றக் கூட்டுத் தலைமையும், கூட்டுப் பொறுப்பும் தேவைப்படுகின்றன. இது வரை நேருஜி என்ற மாமனிதர் இருந்தார். ஆகையால் நாம் தெம்புடன் இருந்தோம். நாம் தவறு செய்தாலும் நேருஜிக்காக நம்மை மக்கள் மன்னித்தார்கள். அந்த நிலை இனி கிடையாது என்பதால், நாம் அனைவரும் முன்பைவிட கவனத்துடனும் எச்சரிக்கையுடனும் பணியாற்ற வேண்டிய நிலையில் இருக்கிறோம்" என்று பேசினார்.

அன்றைய தினம் வரை, அதாவது ஆறு நாட்கள் வரை தற்காலிகப் பிரதமராக இருந்த நந்தா, நாடாளுமன்ற காங்கிரஸ் தலைவர் பதவிக்கு லால் பகதூர் சாஸ்திரியின் பெயரை முன்மொழிந்தார். அதை மொரார்ஜி தேசாய் வழிமொழிந்தார். வேறு யாரும் போட்டியிடவில்லை என்றதால், லால் பகதூர் சாஸ்திரி ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். உடனே நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுந்து நின்று கரகோஷம் செய்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

'இந்தியாவின் முதல் பிரதமரை மகாத்மா காந்தியடிகள் அடையாளம் காட்டினார். அதைப் போலவே அடுத்த பிரதமரை 'காலா காந்தி', காமராஜர் அடையாளம் காட்டினார்' என்று பத்திரிகைகள் புகழ்ந்து எழுதின. காமராஜரின் ராஜதந்திரத்தையும், ஜனநாயகத்தைக் காப்பாற்றிய மாண்பையும் மக்கள் புகழ்ந்து பாராட்டினார்கள். தனக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்பை சிறந்த முறையில் செய்து காட்டிய காமராஜரை, 'கிங் மேக்கர்' என்று வடமொழிப் பத்திரிகைகள் புகழ்ந்து எழுதின. ஒரு தமிழனாக இருந்து இந்திய தேசத்துக்கே வழிகாட்டும் அரிய காரியத்தை செய்து முடித்தார் காமராஜர்.

தலைநகரில் காமராஜர்

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவராகப் பொறுப்பு ஏற்றதும் பெரும்பாலான நேரத்தை டெல்லியில் கழிக்க வேண்டி இருந்தது. ஜந்தர் மந்தர் பகுதியில் இருந்த அவர் வீடு, எப்போதும் ஒழுங்காகவும்

https://t.me/tamilpdfebooks

சுத்தமாகவும் இருக்கும். அவருடைய டெல்லி வீட்டுக்கு முன்னே, சின்ன எழுத்துகளில், 'காமராஜர்' என்று எழுதப்பட்டு இருந்தது. அகில இந்திய காங்கிரஸ் தலைவர் என்ற அடைமொழியோ அல்லது முன்னாள் தமிழக முதல்வர் என்றோ எதுவுமே குறிக்கப்படாமல் வெறுமனே அடையாளமாகத் தொங்கியது அந்த பெயர்ப் பலகை.

வீடு எப்போதும் திறந்தே கிடக்கும். தமிழகத்திலிருந்து செல்லும் கட்சிக்காரர்கள், பத்திரிகையாளர்கள் யார் வேண்டுமானாலும் சென்று தங்கலாம் என்ற அளவுக்கு இருந்தது வீடு.

நேருஜியின் மறைவுக்குப்பின் நாட்டில் குழப்பம் ஏற்படும்; காங்கிரஸ் கட்சி பல துண்டுகளாகச் சிதறிவிடும் என்பதே பலரின் எதிர்பார்ப்பு. இன்னும் சொல்லப்போனால், அந்நிய நாடுகளும், அண்டை நாடுகளும் இந்தியாவை மட்டமாகவே எடை போட்டு வைத்திருந்தன. ஆனால், தன்னலமற்ற செயலால் இந்தியாவின் மானத்தை காமராஜர் காப்பாற்றினார்.

இந்திப் போராட்டம்!

ராஜாஜி முதல்வராக இருந்த சமயத்தில், 1938-ல் தமிழகத்தில் முதன்முதலாக இந்தி திணிக்கப்பட்டதை எதிர்த்துப் போராட்டம் நடந்தது. சென்னை பள்ளிகளில் இந்தி சொல்லித்தருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, 'இந்தி எதிர்ப்பு மாநாடு' நடந்தது. பெரியார், அண்ணா, மறைமலை அடிகள், பாரதிதாசன், சோமசுந்தர பாரதியார், மூவலூர் ராமாமிர்தம் அம்மையார், தர்மாம்பாள், நாராயணி ஆகியோர் போராட்ட களத்தில் குதித்து சிறைக்குப் போனார்கள். நடராசன், தாளமுத்து என்ற இரு இளைஞர்களின் உயிரைக் குடித்த பின்னர் இந்தப் போராட்டம் முடிவுக்கு வந்தது.

அதற்குப்பின் அடங்கிக்கிடந்த இந்தி எதிர்ப்பு 1965, ஜனவரியில் மீண்டும் வெடித்தது. குடியரசு தினத்தை துக்க தினமாக அண்ணா அறிவிக்கவே, போராட்டக்காரர்களை கடுமையாக எச்சரித்தது பக்தவத்சலம் அரசு. ஆனாலும் போராட்டம் ஓயவில்லை. அய்யம்பாளையம் வீரப்பன், கீழப் பழவூர் சின்னசாமி, கீரனூர் முத்து, கோடம்பாக்கம் சிவலிங்கம், மாயவரம் சாரங்கபாணி, சத்தியமங்கலம் முத்து, விருகம்பாக்கம் அரங்கநாதன் ஆகியோர் தங்கள் உடலில் பெட்ரோல் ஊற்றித் தீவைத்துக்கொண்டு 'தமிழ் வாழ்க! இந்தி ஒழிக!' என்று முழக்கம் இட்டபடியே இறந்தனர். இதைத் தொடர்ந்து பள்ளி, கல்லூரி மாணவர்கள் போராட்டத்தை நடத்தினார்கள். கலவரம் நடத்திய மாணவர்களின் மீது காங்கிரஸ் அரசு துப்பாக்கி சூடு நடத்தியது.

நிலைமை எல்லை மீறிப்போவதையும், காங்கிரஸ் அரசு சமாளிக்க முடியாமல் தடுமாறுவதையும் அறிந்த காமராஜர் தமிழகம் வந்து மேல் நடவடிக்கையில் இறங்கினார். 'தமிழ் மக்கள் விரும்பும் வரை, ஆங்கிலமே இணைப்பு மொழியாக இருக்கும்...' என பிரதமர் லால் பகதூர் சாஸ்திரியைச் சொல்ல வைத்தார். அதன்பிறகே அடங்கியது மொழிப் போராட்டம். காமராஜர், அன்றைய காலகட்டத்தில் காங்கிரஸ் தலைவராக இந்தியா எங்கும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இருந்ததால், உடனடியாக இந்தி விவகாரத்தில் கவனம் செலுத்த

https://t.me/tamilpdfebooks

முடியாமல் போனது. இது காங்கிரஸுக்கும் காமராஜருக்கும் மறக்க முடியாத ஒரு பாடத்தை கற்பித்தது.

பாகிஸ்தான் போர்

நேருவின் மறைவால் பாகிஸ்தான் துணிச்சல் பெற்றது. இதுதான் இந்தியாவைத் தாக்கவும், காஷ்மீரைப் பிடிக்கவும் சரியான சமயம் என்று முடிவெடுத்தது. 1965, ஏப்ரல் மாதம் 600 பாகிஸ்தான் வீரர்கள் இந்தியாவின் எல்லைப் பகுதியில் ஊடுருவினர். ஆனால், சரியான சமயத்தில் இவர்களைக் கண்டுபிடித்து இந்தியப்படை துரத்தி அடித்தது. பலரைப் பிடித்து வைத்தது. அதனால் ஆகஸ்ட் 15-ம் தேதி இந்தியாவின் மீது போர் தொடுத்தது பாகிஸ்தான்.

ராணுவ வீரர்களுடன்...

இந்த போரை வெற்றிகொள்வதற்காக சாஸ்திரியின் வலதுகரமாக செயல்பட்டார் காமராஜர். போர்முனைப் பகுதிகளுக்குச் சென்று நமது வீரர்களுடன் பேசி உற்சாகம் கொடுத்தார். படைகளில் இருந்த தமிழ் வீரர்களை தனிப்பட்ட முறையில் நலம் விசாரித்து அன்பைப் பொழிந்தார் காமராஜர்.

போரின் தொடக்கத்தில் இந்தியாவின் டித்வால், யூரி, பன்ச் ஆகிய பகுதிகளை பாகிஸ்தான் கைப்பற்றியது. அதனால் காமராஜர் முதலான தலைவர்கள் எல்லை வரை சென்று நம் படைகளை ஊக்கப்படுத்தி, பாகிஸ்தானியர்களை விரட்டி அடித்தார்கள்.

தொடர்ந்து போர் நிகழ்ந்துகொண்டு இருந்தது. தரைப் படைக்கு ஆதரவாக விமானப் படையும் களம் இறங்கியது. பாகிஸ்தான் படைகள் இந்தியாவின் அமிர்தசரஸ் நோக்கி நகர, இந்தியாவின் பீரங்கிப் படை லாகூர் நகரைப் பிடிக்க விரைந்தது. அது வரை பேச்சுவார்த்தைக்கு சம்மதிக்காமல் இருந்த பாகிஸ்தான், லாகூர் விழுந்துவிடும் என்ற பயத்தில் நிபந்தனை அற்ற போர் நிறுத்தத்துக்கு ஒப்புக்கொண்டது. அதனால் செப்டம்பர் 22-ம் தேதி சோவியத்தின் தாஷ்கன்ட் நகரில் இந்தியப் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரியும், பாகிஸ்தான் தலைவர்

https://t.me/tamilpdfebooks

அயூப்கானும் அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்து இட்டு, போரை முடிவுக்குக் கொண்டுவந்தனர்

போர் நடைபெற்றுக்கொண்டு இருந்த காலத்தில் இந்தியா எங்கும் யுத்த நிதி சேகரிக்கப்பட்டது. லால் பகதூர் சாஸ்திரி சென்னைக்கு வந்து யுத்த நிதியைப் பெற்றுக்கொண்டார். அந்த கூட்டத்தில் பேசிய சாஸ்திரி, "யுத்த களத்தில் நம் வீரர்கள் முன்னேறிக்கொண்டு இருக்கிறார்கள். இதற்கு நமது அரசாங்கம் எடுத்த முயற்சிகள் வெற்றிபெற உதவிகரமாக இருந்தது காமராஜரின் யோசனைகள்தான். காமராஜ்ஜி என் உடன் பிறவா சகோதரர். அவர் எனக்கு வழிகாட்டியாக விளங்கி, என் மூலம் நாட்டை வழிநடத்திச் செல்கிறார். காமராஜ்ஜி கொடுத்த ஆலோசனைகளும், உற்சாகமுமே எதிரிப் படைகளை விரட்டி நம் படைகளை முன்னேற வைத்தது" என்று உரை நிகழ்த்தி, தமிழர்கள் மனதில் நீங்காத இடம் பிடித்தார்.

கடலுக்குள் தனுஷ்கோடி

1965 டிசம்பர் 23-ம் தேதி. மன்னார் வளைகுடாவில் ஏற்பட்ட புயலால் ராமேஸ்வரம் பகுதியில் மாபெரும் அலைகள் எழுந்தன. ராமேஸ்வரத்தை ஒட்டி இருந்த தனுஷ்கோடி நகருக்குள் கடல் நீர் புகுந்தது. தனுஷ்கோடியையும் பாம்பனையும் இணைத்திருந்த இருப்புப் பாதை கடும் புயலில் வீசியெறியப்பட்டது. சென்னையிலிருந்து ராமேஸ்வரம் சென்றுகொண்டு இருந்த ரயில் அடித்துச் செல்லப்பட்டது. அதில் பயணம்செய்த 123 பேரும் கடலில் அடித்துச் செல்லப்பட்டு மறைந்தனர். அதிகாலையில் நடந்த இந்த கோர விபத்து தமிழகம் எங்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

காங்கிரஸ் கமிட்டிக் காரியக் கூட்டத்தில் இருந்த காமராஜருக்குத் தகவல் சொல்லப்பட்டது. உடனே காமராஜர், அன்றைய முதல்வர் பக்தவத்சலத்துடன் கலந்து ஆலோசனை செய்தார். இருவரும் உடனே விமானம் மூலம் சென்னையிலிருந்து திருச்சி அல்லது மதுரை செல்ல நினைத்து ஏறினர். வானிலையால் விமானம் பழுதடைந்தது. பயணிகள் அனைவரும் அலறித் துடிக்க, அமைதியாகவே இருந்தார் காமராஜர். ஒருவழியாக விமானம் பாதியிலேயே தரை இறக்கப்பட்டது. யாருக்கும் காயம் எதுவும் ஏற்படவில்லை. தப்பித்த அனைவரும் உயிர் பிழைத்த மகிழ்ச்சியில் இருக்க, காமராஜர் ஒரு கணம்கூட அதைப்பற்றி சிந்திக்காமல், "அடுத்து எப்படி நாம் ராமேஸ்வரம் போகலாம்?" என்று கேட்டார்.

பெங்களூருக்கு உடனே தகவல் கொடுக்கப்பட்டு, சில மணி நேரத்தில் ராணுவ விமானம் வந்தது. காமராஜரும் பக்தவத்சலமும் அதில் ஏறி ராமநாதபுரம் சென்றனர். அதன்பிறகு ஹெலிகாப்டரில் ராமேஸ்வரம் தீவுகளின் மீது பறந்து நிலைமையை ஆராய்ந்தார்கள். விமானம் மூலம் உணவுப் பொட்டலங்களும் ரொட்டிகளும் வீசப்பட்டன. ஆபத்தில் அலறிக்கொண்டு இருந்த மக்கள் காமராஜரைப் பார்த்ததும் நிம்மதி அடைந்தார்கள். தங்களை அவர் எப்படியும் காப்பாற்றிவிடுவார் என்று நம்பிக்கை வைத்தனர்.

காமராஜர் உடனே கடற்படைக்குத் தகவல் கொடுக்கவே, சாரதா,

https://t.me/tamilpdfebooks

ஹமீதியா ஆகிய கப்பல்கள் உடனே முழு வீச்சில் மீட்புப் பணியில் இறங்கின. படகுத் துறை, ரயில் நிலையம் ஆகியவற்றில் உயிர் பிழைக்க ஒதுங்கிக்கிடந்தவர்கள் மீட்கப்பட்டார்கள்.

இதற்கு முன்னர் அழகான தீவாகக் காட்சி அளித்த தனுஷ்கோடி, நீருக்குள் மூழ்கிக் கிடக்கவே, பிறகு 'வாழ்வதற்கு லாயக்கு அற்ற இடமாக' அறிவிக்கப்பட்டது. அங்கே உயிருடன் இருந்தவர்கள் மீட்கப்பட்டு ராமேஸ்வரம் வந்தார்கள். இந்த கோர தாண்டவத்தில் சுமார் 2,000 பேர் உயிர் இழந்திருக்கலாம் எனக் கணக்கிடப் பட்டது.

இந்தக் கொடூரப் புயல் மனித அழிவை மட்டும் கொண்டு வரவில்லை, கூடவே தென்னாட்டில் பயிர்களையும் வீடுகளையும் சேதப்படுத்தியது. அதனால் கடுமையான உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. பாகிஸ்தான் போரிலிருந்து மீண்டு வருவதற்குள் புயல் கொடுத்த சோகம் மிக அதிகமானது. அரிசி கிடைக்காமல் மக்கள் பெரும் அவதிப்பட்டார்கள்.

இந்த நேரத்தில் காமராஜர் மிகவும் யோசித்து தெளிவாக ஒரு யோசனையை மக்கள் முன் வைத்தார்.

அப்போது வடநாட்டில் கோதுமை மிக அதிகமாக விளைந்து, மலிவு விலையில் கிடைத்தது. ஆனால், அரிசி எல்லா இடங்களிலும் தட்டுப்பாடாக இருந்ததால், உடனே இறக்குமதி செய்யவும் இயலவில்லை. அதனால் "மக்கள் ஒரு வேளையாவது கோதுமை உணவு எடுத்துக்கொண்டால், செலவும் குறையும், அரிசித் தட்டுப்பாடும் நீங்கும், உடலும் நலன்பெறும்" என்று சொன்னார்.

ஆனால், அந்த யோசனையை எதிர்க் கட்சியினர் குற்றம் சொல்லி, காமராஜரை அவமானப்படுத்தினார்கள். அரிசி கொடுக்க முடியாத காங்கிரஸ் அரசு என்று மக்களிடம் ஆவேசமாகப் பேசினார்கள்.

இன்று தமிழகத்தில் பெரும்பாலான மக்கள் இரண்டு வேளை கோதுமைக்கு மாறிவிட்டார்கள். இந்த யோசனையை அன்றே சொன்னார் பெருந்தலைவர். ஆனால், பசியில் இருந்த மக்களும் அந்த யோசனையை மதிக்கவில்லை. எதிர்க் கட்சிகளும் உண்மையை சிந்திக்கவிடவில்லை. அதனால் போர், இயற்கை சீற்றம், அரிசிப் பஞ்சம் ஆகியவற்றால் மக்களின் அவதி அதிகமானது. இந்தக் காலகட்டத்தில்தான் இந்தியாவுக்கு மீண்டும் ஒரு சோதனை வந்தது!

மறைந்தார் சாஸ்திரி

1965, டிசம்பர் 4-ம் தேதி ரஷ்யத் தலைவர்களின் அழைப்பை ஏற்று லால் பகதூர் சாஸ்திரி தாஷ்கன்ட் சென்றார். பாகிஸ்தான் அதிபர் அயூப்கானுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. தொடர்ந்து இடைவிடாத பேச்சுவார்த்தைகளால் களைத்துப் போய் இருந்தார் சாஸ்திரி. பேச்சுவார்த்தை முடிவடைந்து 1966--, ஜனவரி 10-ம் தேதி அமைதிப் பேச்சு இறுதிக்கு வந்து, ஒப்பந்தம் கையெழுத்தானது.

இரு நாட்டுத் தலைவர்களும் கையெழுத்துப் போட்டதும்தான், மக்கள் நிம்மதிப் பெருமூச்சுவிட்டனர். ஏனென்றால் இரு நாட்டு மக்களும் இந்த போரால் ஏராளமான துன்பங்களை அடைந்து இருந்தார்கள். சமாதானப்

https://t.me/tamilpdfebooks

பேச்சுவார்த்தை நடத்தி வெற்றிகண்ட சாஸ்திரியை உலகத் தலைவர்களும், இந்தியத் தலைவர்களும் பாராட்டினார்கள். ரஷ்யாவுக்கு வந்த கடமை முடிந்தது என்று நினைத்தாரோ என்னவோ, கையெழுத்துப் போட்ட அன்று இரவே சாஸ்திரி மரணத்தைத் தழுவினார்.

ஜனவரி 11-ம் தேதியன்று சாஸ்திரி மரணம் அடைந்த செய்தி கேட்டு நாடே அதிர்ச்சி அடைந்தது. திறமையான மனிதர் ஒருவருடைய கையில் நாட்டை ஒப்படைத்துவிட்டோம் என்று நிம்மதியாக இருந்த காமராஜருக்குப் பேரதிர்ச்சி.

'சாஸ்திரிக்கு விஷம் கொடுத்துக் கொன்றுவிட்டார்கள்' என்ற வதந்தி நாடெங்கும் பரவியது. இந்தியாவுக்கு வந்த அவரது உடல் நீல நிறத்தில் இருந்ததாகச் சொல்லப்பட்டது. ஆனால், ரஷ்ய அமைச்சகத்திலிருந்து நள்ளிரவுக்கு மேல், ஹார்ட் அட்டாக் ஏற்பட்டு சாஸ்திரி இறந்தார் என்று தெளிவாகச் சொல்லப் பட்டது.

காமராஜருக்கும் சாஸ்திரிக்கும் ஏராளமான ஒற்றுமைகள் இருந்ததால் காமராஜர் எதுவும் செய்ய இயலாதவராகத் தவித்தார். இருவரும் நண்பர்களைப் போல, சகோதரர்களைப் போல பழகியவர்கள். இருவரும் ஏழைக் குடும்பத்திலிருந்து வந்தவர்கள். இருவருக்கும் சொந்தமாக சொத்துகள் கிடையாது. இருவருமே பதவிக்கு ஆசைப்படாதவர்கள். பதவிதான் அவர்களைத் தேடிவந்தது.

உத்தரப்பிரதேசத்தில் பிறந்து வளர்ந்த சாஸ்திரி, அங்கே இருந்த கோஷ்டிப் பூசல்களைத் தீர்த்து வெற்றிகண்டவர். ஒருதலைப் பட்சமாக எப்போதும் முடிவு எடுக்காதவர். எதற்காகவும் யாருக்காகவும் கொள்கைகளை விட்டுக்கொடுக்காதவர். அவருடைய மகன் ஹரி, சென்னை அசோக் லேலண்ட் நிறுவனத்தில் பொறியாளர் பணியில் வேலைக்குத் தேர்வான நேரத்தில்கூட, 'நீ என்னுடைய மகன் என்று யாரிடமும் தெரிவிக்கக் கூடாது. என் பெயரைச் சொல்லி யாரிடமும் எந்தச் சலுகையும் பெறக் கூடாது' என்று அறிவுரை சொல்லி அனுப்பியவர்.

ரயில்வேயில் முன்பு ஏராளமான பிரிவுகள் இருந்தன. அவர் பதவிக்கு வந்தபிறகுதான், மேல் வகுப்பு, சாதாரணப் பிரிவு என்று இரண்டு பிரிவுகள் மட்டுமே இருக்கும்படி செய்தார். தன் துறையில் நடக்கும் தவறுகளுக்கும் சீர்கேடுகளுக்கும் அமைச்சர்தான் பொறுப்பு ஏற்க வேண்டும் என்ற தார்மீகக் கொள்கை கொண்டவர் சாஸ்திரி. அவர் ரயில்வே அமைச்சராக இருந்த காலத்தில் சென்னையில் பெரும் ரயில் விபத்து ஒன்று ஏற்பட்டது. உடனே அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார். நேரு எவ்வளவோ மன்றாடிக் கேட்டுக்கொண்டும், ராஜினாமா முடிவிலிருந்து பின்வாங்காமல் பதவியிலிருந்து விலகினார்.

இப்பேர்ப்பட்ட மாமனிதரை இழந்துவிட்டோமே என்றுதான் கலங்கி நின்றார் காமராஜர். நேருவுக்குப் பிறகு பிரதமருக்குப் பொருத்தமான ஒரு நபரை, தேடாமலேயே கண்டறிந்தார் காமராஜர். ஆனால், சாஸ்திரிக்குப் பிறகு..? பெரும் குழப்பத்தில் தவித்தார் காமராஜர். நாடு இருக்கும் சிக்கலான நேரத்தில், அனைத்து மக்களும் விரும்பும்

https://t.me/tamilpdfebooks

வண்ணம் தலைவர் இருக்க வேண்டும், அப்போதுதான் நாடும் மக்களும் தைரியமாக இருப்பார்கள் என்று நினைத்தார்.

தேடிவந்த பிரதமர் பதவி

நேருஜிக்குப் பிறகு யாரைத் தலைவராகத் தேர்ந்தெடுப்பது என்ற குழப்பம் இருந்த நேரத்தில், சரியான விடை தரப்போவது யார் என்பதே மக்களுக்குத் தெரியாமல் இருந்தது. ஆனால், சாஸ்திரி மறைவுக்குப் பிறகு, எல்லோருடைய பார்வையும் காமராஜரை நோக்கியே இருந்தது.

காமராஜர் சுட்டிக்காட்டுபவர்தான் பிரதமராக வர முடியும் என்பதால் அவரைக் கேள்விகளால் மொய்க்கத் தொடங்கினார்கள். காங்கிரஸில் ஏராளமான தலைவர்கள் இருந்தாலும், பிரதமர் பதவிக்குத் தகுதியானவர் இரண்டே இரண்டு பேர் மட்டுமே என்று காமராஜர் நினைத்தார்.

ஒருவர் மொரார்ஜி தேசாய், இன்னொருவர் இந்திராகாந்தி. இருவருமே தகுதியானவர்கள் என்றாலும், யாரைப் பதவியில் அமரவைப்பது?

அந்த நேரத்தில் காங்கிரஸ் தலைவராக இருந்த அதுல்யா கோஷ் திடீரென, 'காங்கிரஸ் கட்சித் தலைவராக இருக்கும் காமராஜர்தான் பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்ள வேண்டும்!' என்று ஓர் அறிக்கை வெளியிட்டதுடன் நில்லாமல், பாராளுமன்ற உறுப்பினர்களிடம் ஆதரவு திரட்டினார்.

ஆனால், இதைப் போன்ற பேச்சை வளரவிடக்கூடாது என்று கருதிய காமராஜர், உடனே, "பிரதமர் பதவி வகிப்பதில் எனக்கு விருப்பமில்லை, யாரும் இதைக் குறித்துப் பேசக்கூடாது" என்று கண்டிப்பான குரலில் சொல்லிவிட்டார். எத்தனையோ தலைவர்கள், நண்பர்கள் இதை வலியுறுத்திப் பேசியும் காமராஜர் மசியவில்லை. "பிரதமர் பதவி மகத்துவம் வாய்ந்தது. நன்கு படித்தவர்கள்தான் அந்த இடத்தில் இருக்க வேண்டும்" என்று இந்த முறையும் கறாராகச் சொல்லிவிட்டார்.

மொரார்ஜி தேசாய், சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு சுமார் பத்து ஆண்டுகள் சிறையில் இருந்தவர். பம்பாய் உள்துறை அமைச்சராகப் பணியாற்றி நல்ல பெயர் எடுத்தவர். எளிமையும், தூய்மையுமான வாழ்க்கை வாழ்ந்தவர்.

இந்திராகாந்தியும் மாணவர் காங்கிரஸில் நுழைந்து சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர். கணவர் ஃபெரோஸ் காந்தியுடன் ஏற்பட்ட மனவேறுபாட்டால் அவரைவிட்டுப் பிரிந்து வாழ்ந்தவர். தந்தைக்கு உதவியாக காங்கிரஸ் பணியை முழுமையாக ஆற்றியவர். தந்தை நேருஜியுடன் இருந்ததால், உலக தலைவர்களுக்கும், இந்தியத் தலைவர்களுக்கும் நன்கு அறிமுகமானவர். அகில இந்திய காங்கிரஸ் தலைவர் பதவியில் இருந்தவர் என்பதால் அனைத்து மாநில தலைவர்களையும் அறிவார்.

இரண்டு பேருமே காமராஜர் மனதில் சமமாக இருந்தார்கள். ஆனால், ஒரே ஒரு விஷயத்தில் மொரார்ஜி தேசாயைவிட இந்திராகாந்தி ஒரு மாற்று முன்னிலையில் இருந்தார். அதுதான் வயது!

https://t.me/tamilpdfebooks

ஆம், உடல் நிலை தளர்ந்ததால் நேருஜி, லால் பகதூர் சாஸ்திரி ஆகியோரை இந்தியா இழந்துவிட்டது. ஆகையால் இனி பிரதமர் பொறுப்புக்கு வர இருப்பவர், மிகவும் முதியவராக இல்லாமல் இளையவராக இருத்தல் நல்லது என நினைத்தார் காமராஜர். அனுபவத்தைவிட ஆற்றல்தான் இந்தியாவுக்கு அப்போது தேவை என முடிவெடுத்தார்.

அந்த வகையில் மொரார்ஜி தேசாயைவிட இந்திரா இளையவர், கட்சிப் பணிகளில் அனுபவம் வாய்ந்தவர், எல்லாத் தலைவர்களுக்கும் அறிமுகமானவர். ஆகையால் இந்திராவை பிரதமராகக் கொண்டுவந்தால் மட்டுமே, இந்தியாவின் எதிர்காலம் சிறப்பாக இருக்கும் என நினைத்தார்.

இந்திரா காந்தி, காமராஜர், மொரார்ஜி தேசாய்

இதை மனதில் வைத்துக்கொண்டு முக்கிய காங்கிரஸ் பிரமுகர்கள் அனைவரையும் அழைத்துக் கருத்துக் கேட்டார்.

1965 ஜனவரி 14-ம் தேதி, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் கூட்டப்பட்டது. நாடாளுமன்ற காங்கிரஸ் கட்சியின் அடுத்த தலைவரைத் தேர்ந்தெடுப்பதைப் பற்றி காமராஜரின் தலைமையில் விவாதம் நடந்தது. விவாதத்தில் காமராஜர், மொரார்ஜி, இந்திராகாந்தி, நந்தா, சவான் ஆகிய பெயர்கள் பரிசீலிக்கப்பட்டன. அனைவரும் ஒன்றுபட்டு யாரையும் தேர்ந்தெடுக்க முடியாததால், 'அடுத்த தலைவரைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம்' காமராஜருக்கு வழங்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர்கள், மாநில முதல் அமைச்சர்கள், மாநில காங்கிரஸ் தலைவர்கள் அனைவரையும் அழைத்துக் கருத்துகளைக் கேட்டறிந்தார். அவர்களை பேசவைத்துக் கேட்டாரே தவிர, இவருடைய மனதில் இருந்ததை யாராலும் அறிந்துகொள்ள முடியவில்லை.

இதற்குள் மொரார்ஜி தேசாயும் இந்திராகாந்தியும் தனித்தனியே தங்களுக்கான ஆதரவைத் திரட்டினார்கள். அப்போது இந்தியாவில்

https://t.me/tamilpdfebooks

மாநிலங்களில் காங்கிரஸ் ஆட்சி புரிந்தது. அதில் 14 மாநில முதல்வர்கள், 'இந்திராவை ஆதரிக்கிறோம்' என்று பகிரங்கமாக அறிவித்தனர். நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைத் திரட்டினார் மொரார்ஜி. ஆனால், காமராஜர், வெளியில் நடப்பது எதையுமே கண்டுகொள்ளாமல், அனைத்து நிர்வாகிகளையும் கலந்து பேசி, முடித்தபிறகு, மொரார்ஜி தேசாயைத் தேடிச் சென்றார்.

"இந்திராகாந்தியை பிரதமராகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதே பெரும்பாலான நிர்வாகிகளின் விருப்பம். அதனால் போட்டி இன்றித் தேர்வு நடைபெற வேண்டும், நீங்கள்தான் அதற்கு உதவ வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

ஆனால், இந்த முறை மொரார்ஜி பிடிவாதமாக இருந்தார். 'ஏற்கெனவே ஒரு முறை போட்டியிலிருந்து விலகி இருக்கிறேன். இந்திராவுக்கு இன்னமும் வயது இருக்கிறது. அதனால் அவரை விலகச் சொல்லுங்கள்...' என்று சொன்னார் மொரார்ஜி. காமராஜர் எவ்வளவோ சமாதானம் சொல்லியும் அவர் பேச்சு எதுவும் எடுபடவில்லை. "யார் தலைவர் என்பதை ஓட்டுப் பெட்டி சொல்லட்டும்" என்று மொரார்ஜி முடிவாகச் சொன்னார். போட்டி இல்லாமல் பாரதப் பிரதமரைத் தேர்ந்தெடுக்க முடியாமல் கிளம்பினார் காமராஜர்.

1966, ஜனவரி 19-ம் தேதி. நாடாளுமன்ற காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்க ஒன்றுகூடினார்கள். காமராஜர் தலைமைப் பீடத்தில் அமர்ந்தார். இந்தியா சுதந்திரம் அடைந்தபிறகு, முதன்முறையாக பாரதப் பிரதமருக்கான தேர்வு நடந்தது.

இந்திராகாந்தியின் பெயரை நந்தா முன்மொழிய, சஞ்சீவிரெட்டி வழிமொழிந்தார். மொரார்ஜி தேசாய் பெயரை கே.அனுமந்தையா முன்மொழிய, டி.ஆர்.பாலிவால் வழி மொழிந்தார். ரகசிய ஓட்டெடுப்பு சுமார் இரண்டு மணி நேரம் நடந்தது. 355 வாக்குகள் பெற்று வெற்றி அடைந்தார் இந்திராகாந்தி. மொரார்ஜி தேசாய்க்கு 169 வாக்குகள் மட்டுமே கிடைத்தன.

காமராஜரின் வலிமை என்ன என்பதை அனைவரும் உணர்ந்து கொண்டார்கள். வெற்றிபெற்ற இந்திராகாந்தியைப் பாராட்டிப் பேசினார் காமராஜர்.

"இன்று நாட்டை எதிர்நோக்கி பயங்கரமான பிரச்னைகள் இருக்கின்றன. அவற்றை எல்லாம் எதிர்கொண்டு வெற்றிபெற புதிய தலைவருக்கு நாம் அனைவரும் உதவிகரமாக இருக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். அடுத்து மொரார்ஜி தேசாய் வெற்றிபெற்ற தலைவரை மனம் திறந்து பாராட்டிப் பேசினார். பாராட்டுரைகள் முடிந்தபிறகு பேசினார் இந்திராகாந்தி.

"என் முன்னோர்கள் காட்டிய பாதையில் நம்பிக்கையுடன் அடியெடுத்து வைக்கிறேன். உங்கள் ஆதரவு முழுமையாக வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

https://t.me/tamilpdfebooks

எதிர்பாராத தருணத்தில் தன்னை இந்திய அரசியலில் மிகப்பெரிய இடத்தில் அமரவைத்த காங்கிரஸ் தலைவர் காமராஜரைப் புகழ்ந்து உரைத்தார். ஆனால், அரசியலில் யாரும் எதிர்பார்க்காத புதிய அத்தியாயம் தொடங்கியது.

ரஷ்யப் பயணம்

அகில இந்திய காங்கிரஸ் தலைவர் பதவிக்கு காமராஜர் வந்ததுமே, உலக நாடுகள் பலவும் அவரை சிறப்பு விருந்தினராக வருமாறு அழைத்தன. அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, ஃபிரான்ஸ் போன்ற மேலை நாடுகளும், ரஷ்யா, பல்கேரியா, கிழக்கு ஜெர்மனி, ருமேனியா, யுகோஸ்லேவியா, செக்கோஸ்லோவாகியா போன்ற கீழை நாடுகளும் அழைத்தன.

இதற்கு முன்னர் இலங்கை, மலேசியா ஆகிய நாடுகளுக்கு காமராஜர் போய் வந்திருக்கிறார் என்றாலும், நீண்ட நாள் பயணமாக எங்கேயும் சென்றதில்லை. ரஷ்யாவுக்கும் மற்ற சில நாடுகளுக்கும் பயணம் செல்ல காமராஜர் முடிவு செய்தார்.

ரஷ்யாவுக்குச் செல்வது என்றதும் அங்கே நிலவும் கடுமையான குளிரை மனதில் வைத்துக்கொண்டு, உடனே 'ஜெர்கின், கோட் போன்றவை எடுத்துக்கொள்ளுங்கள்' என்று ஆலோசனை சொன்னார்கள். ஆனால், காமராஜர் வழக்கமான புன்முறுவலுடன், "எப்பவும் போல வேட்டி, சட்டையே போதும்" என்று சொல்லி விட்டார். சிறப்பு உடை வேறு எதையும் எடுத்துப்போகாமல், வழக்கம் போல ஊருக்குச் செல்லும் பெட்டியை மட்டும் எடுத்துக் கொண்டு புறப்பட்டார், காமராஜர்.

1966 ஜூலை 21-ம் தேதி, காமராஜர் வெளிநாடு செல்வது தொடர்பாக விருந்து நடந்தது. அதில் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர். காமராஜருக்காக என்ன மாதிரியான உணவு ஏற்பாடு செய்ய வேண்டும், எப்படிப்பட்ட பொழுது போக்குகளைக் காண ஏற்பாடு செய்ய வேண்டும் என்று ரஷ்ய நாட்டுப் பிரதிநிதிகள் கேட்டார்கள். 'எந்த ஸ்பெஷல் உணவும் வேண்டியதில்லை. பொழுதுபோக்கு என்று எதுவும் கிடையாது' என்று சொல்லப்பட்டதைக் கேட்டு அவர்கள் ஆச்சர்யம் அடைந்தனர்.

அடுத்த நாள் டெல்லி விமான நிலையத்தில் காமராஜரை அனுப்பி வைக்க ஏராளமான தொண்டர்கள் குவிந்தனர். காமராஜர், வெங்கட்ராமன் மற்றும் சில அதிகாரிகள் டெல்லி பாலம் விமான நிலையத்திலிருந்து ரஷ்யாவின் மாஸ்கோ நகருக்குச் சென்றார்கள்.

https://t.me/tamilpdfebooks

மாஸ்கோவில் அவரை, சோவியத் யூனியனின் உயர்ந்த சபையாகக் கருதப்படும் 'சுப்ரீம் சோவியத்' சபையின் தலைவர்களான ஸ்ப்ரிதினோவ், ஜான்தீவ், பிரூபின் மற்றும் பலர் ஆவலுடன் வரவேற்றார்கள். அனைவரும் கோட், சூட்டுடன் இறங்க காமராஜர் மட்டும் வேட்டி, சட்டையுடன் இறங்குவதைப் பார்த்து 'இப்படியும் ஒரு தலைவரா?' என்று ஆச்சர்யப் பட்டனர்.

அடுத்த நாள் முதல்வேலையாக, மாஸ்கோ நகர மேயரைச் சந்தித்து, நகரின் கட்டமைப்பு, நிர்வாகம் போன்றவற்றை விவாதித்தார். அதற்குப் பின்னரே, ஜார் மன்னர் காலத்தில் கட்டப்பட்ட கிரெம்ளின் மாளிகையைப் பார்வையிட்டார்.

லெனின் வாழ்க்கை வரலாறு, கம்யூனிஸப் புரட்சி போன்றவற்றை காமராஜர் ஏற்கெனவே நூல்களின் மூலம் படித்துத் தெரிந்து கொண்டு இருந்ததால், ஒவ்வோர் இடத்தையும் ஆர்வமாகச் சுற்றிப் பார்த்தார். லெனின் நூலகத்தைப் பார்த்து ஆனந்தப்பட்டார். 'லெனின் வாழ்ந்த இடத்தைப் பார்த்ததில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். எளிய வாழ்க்கை வாழ்ந்த லெனின் இல்லத்தைக் காண்பது பரவசம் ஏற்படுத்துகிறது. அவர் வாழ்க்கை என்றென்றும், எல்லோருக்கும் உற்சாகம் ஊட்டி, ஊக்கம் அளிக்கிறது' என்று பார்வையாளர் புத்தகத்தில் எழுதி வைத்தார்.

https://t.me/tamilpdfebooks

ரஷ்யாவில் காமராஜர்...

அடுத்து, ரஷ்யத் தலைவர் லெனினின் உடல் கெட்டுப்போகாமல் வைக்கப்பட்டிருப்பதைக் கண்டு வியந்து, மரியாதை செய்தார். அந்த தொழில்நுட்பத்தைப் பார்த்து, 'நாமும் காந்திஜி, நேருஜியின் உடல்களை இதைப் போலப் பாதுகாத்து, எதிர்கால சந்ததியினர் பார்வையிடும்படி செய்யாமல் விட்டோமே' என்று வருந்தினார்.

அதைப் போலவே, நாடு எங்கும் இருந்த லெனின் சிலைகளைப் பார்வையிட்டார். எல்லா சிலைகளும் ஒரே அமைப்பில் இருந்தன. அப்போது, 'காந்திஜி சிலைகளை இப்படித்தான் வடிவமைக்க வேண்டும் என்று நாமும் நாடு எங்கும் கட்டுப்பாடுகள் விதிக்காமல் போனோமே. அதனால்தான், இஷ்டப்படி எல்லாம் சிலைகள் செய்து காந்திஜி என்று சொல்கிறார்கள்' என்று வேதனைப் பட்டார்.

அதன்பிறகு ரஷ்யப் பிரதமர் கோசிஜினை சந்தித்தார் காமராஜர். எல்லோரும் கோட் உடையுடன் இருக்க, காமராஜர் மட்டும் எளிய உடையில் வருவதைக் கண்டு ஆச்சர்யப்பட்டு வரவேற்றார். முதல் கேள்வியாக, "இந்த அளவுக்கு எளிமையாக உடை அணிந்து இருக்கிறீர்களே... உங்களுக்கு குளிரவில்லையா?" என்று கேட்டார் கோசிஜின்.

"டெல்லி மாதிரிதானே இங்கேயும் இருக்கு... அதனால பரவாயில்லை" என்று சொல்லிவிட்டு, நீண்ட நாள் நண்பருடன் பேசுவது போலவே பேசினார். இருவரும் ஒரு மணி நேரத்துக்கு மேல் உலக விஷயங்களைப் பேசினார்கள். அதன் பிறகு பொழுதுபோக்குப் பூங்காவைச் சுற்றிப் பார்த்தார்.

ஜூலை 26-ம் தேதி. ரஷ்யர்கள் ஹிட்லரை எதிர்த்துப் போரிட்ட வால்காகிராட் நகரைச் சுற்றிப் பார்த்தார். யுத்த நினைவுச் சின்னத்தையும் பார்வையிட்டார். 1942 - 43 வருடங்களில், அந்த இடத்தில் ரஷ்யப் படைக்கும் நாஜிக்கும் பயங்கர யுத்தம் நடந்தது. லட்சக்கணக்கான மக்கள் பலியானார்கள்.

https://t.me/tamilpdfebooks

அந்த யுத்தத்தில் சிதறிய வீடுகள், உடைந்த பீரங்கிகள், துப்பாக்கிக் குண்டுகள் மற்றும் போர்க் கருவிகளைக்கொண்டே நினைவுச்சின்னம் வடிவமைக்கப்பட்டு இருந்தது. இந்தத் துயரக் காட்சிகளைக் கண்ட காமராஜர் வேதனைக்கு உள்ளானார். "போர் எத்தனை கொடூரமானது என்பதை அறிந்துகொள்ள, இங்கே வந்து பார்த்தாலே போதும்" என்று வேதனையுடன் சொன்னார்.

அன்று இரவு, லெனின்கிராட் நகர மேயர் அளித்த விருந்தில் கலந்துகொண்டார். விருந்தில் காமராஜரைப் பேசச் சொல்லிக் கேட்டனர். ரஷ்யப் புரட்சியையும், ரஷ்யத் தலைவர்களையும் வெகுவாகப் புகழ்ந்து பேசினார். ரஷ்யப் புரட்சியைப் பற்றி எங்கள் தமிழ்நாட்டில், ஒரு மகாகவி அருமையான பாடல் பாடி இருக்கிறார் என்று சொல்லி, மகாகவி பாரதியின், 'ஆகாவென்றெழுந்தது பார் யுகப் புரட்சி, கொடுங்கோலன் ஜார் மன்னன் அலறி வீழ்ந்தான்' என்று பாடிக் காட்டினார். இந்தியா என்றென்றும் ரஷ்யாவுடன் தோளோடு தோளாக துணை இருக்கும் என்றும் உறுதி கொடுத்தார்.

லெனின்கிராடில் சரித்திரப் பிரசித்தி வாய்ந்த 'பிஸ்கரேவ்' கல்லறையை பார்வையிட்டார். அதாவது, இரண்டாம் உலகப் போரில் நாஜிப் படை, லெனின்கிராடை சுற்றிவளைத்து ஆயிரம் நாள் முற்றுகை இட்டது. ஐந்து லட்சம் வீரர்களும், ஐந்து லட்சம் மக்களும் மடிந்தனர். பத்து லட்சம் உயிர்களுக்கான அஞ்சலிக் கூடம் என்பதால், இதன் நீளம் மட்டுமே ஒரு மைல் தொலைவு. இந்த சமாதியில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார் காமராஜர்.

இதை அடுத்து லெனின்கிராட் பாதாள ரெயிலில் சாதாரண மக்களோடு பயணம் செய்தார். பின்னர் வால்கா நதியில் விசைப் படகில் பயணம் செய்தார். ஜார் மன்னர்கள் வசித்த, ஹெர்மிடாஸ் அரண்மனையில் இருந்த தங்கமுலாம் பூசப்பட்ட அறைகளையும், போரில் குண்டுவீசப்பட்டு சேதமடைந்த கப்பல்களையும் கண்டு ரசித்தார். தொழிலாளர், குழந்தை ஆகியோரை எங்கே காண நேர்ந்தாலும், சிறிது நேரமாவது அவர்களைக் கண்டு ரசித்து, பேசிவிட்டு நகர்ந்தார்.

அடுத்த நாள் மாஸ்கோ திரும்பி, கம்யூனிஸ்ட் கட்சி காரியதரிசி கபினோவை சந்தித்துப் பேசினார். கட்சியின் சட்டதிட்டம், கட்டுப்பாடு, நடவடிக்கை ஆகியவற்றைப் பற்றி கேட்டறிந்தார். ஒவ்வொரு தலைவரும் ஊழியரும் வாங்கும் சம்பளத்தில் குறிப்பிட்ட சதவிகிதம் கட்சிக்கென கொடுக்க வேண்டும் என்று இருக்கும் விதியை மனதில் குறித்துக்கொண்டார்.

அதன்பிறகு, கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் பிரஷ்னேவை சந்தித்தார். இவரை சந்திக்கச் சென்றபோது, காமராஜருக்கு ராணுவ மரியாதை வழங்கப்பட்டது. எளிய உடையில் இருந்த காமராஜரை, பிரஷ்னேவ் கண்டு, மனம் மகிழ்ந்து நீண்ட நேரம் உரையாடினார். ஒவ்வொரு நாளும் காமராஜரின் சுற்றுப்பயணத்தை நாளிதழில் பார்த்தும், ரேடியோவில் கேட்டும் ரஷ்ய மக்கள் அவர் செல்லும் இடங்களில் எல்லாம் கூடி அன்பைப் பொழிந்தார்கள்.

ஜூலை 31-ம் தேதி, மாஸ்கோ வானொலியில் ஓர் உரை நிகழ்த்தினார்

https://t.me/tamilpdfebooks

காமராஜர். அதில், ரஷ்ய மக்களின் விருந்தோம்பல், நட்பு உணர்வு ஆகியவற்றைப் பாராட்டிப் பேசினார். அன்று ரஷ்ய சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு, அடுத்த சுற்றுப்பயணமாக கிழக்கு ஜெர்மனிக்குப் புறப்பட்டார். அன்றைய தினமே, கிழக்கு ஜெர்மனியின் தலைநகரான பெர்லினுக்குச் சென்றார்.

காமராஜர் இறங்கிய நேரம் பெர்லின் நகரில் பேய் மழை கொட்டியது. அதை எல்லாம் பொருட்படுத்தாமல் காமராஜருக்கு சிறப்பான வரவேற்பு கொடுக்கப்பட்டது. நாட்டின் முக்கிய நிர்வாகிகளான ஆல்பர்ட் மார்ட்டர்ன், ஹெர்மன் மேடர்ன் ஆகியவர்களை சந்தித்துப் பேசினார்.

ஒரு நாள் மட்டுமே இங்கு இருந்த காமராஜர், அடுத்த நாள் செக்கோஸ்லோவாகியாவுக்குப் பயணமானார். இந்த நாட்டைப் பற்றியும், மக்களைப் பற்றியும் அதிகம் அறியாமல் இருந்ததால், மிகவும் அக்கறையாக விசாரித்துத் தெரிந்துகொண்டார். அந்த நாட்டுத் தலைவர்களுடன் கலந்து உரையாடினார். ஆகஸ்ட் 4-ம் தேதி வரை இங்கு சுற்றுப்பயணம் செய்துவிட்டு, அடுத்ததாக ஹங்கேரிக்குப் பயணமானார்.

இங்கும், இறங்கியதும் முதல் காரியமாக மக்கள் பழக்க வழக்கங்கள், வாழ்க்கை நடைமுறை, வாழ்க்கைத் தரம் போன்றவற்றைக் கேட்டுத் தெரிந்துகொண்டார். அதன்பிறகு தலைவர்களுடன் கலந்து பேசினார். முக்கியமான இடங்களைச் சுற்றிப் பார்த்தார். இங்கே சுற்றுப்பயணம் முடித்த பின்பு, ஆகஸ்ட் 7-ம் தேதி, பல்கேரியா நாட்டுக்குப் பயணமானார்.

பல்கேரியாவின் தலைநகரான சோபியாவுக்குச் சென்றார் காமராஜர். பல்கேரியா நாட்டின் தந்தை ஜார்ஜ் டிட்ரோவின் உடல் தைலமிட்டு பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கும் நினைவு இடத்துக்குச் சென்று மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். அரசியல் தலைவர்களையும், மக்களையும் சந்தித்துப் பேசினார். அன்று இரவு காமராஜருக்கு அரசாங்க விருந்து அளிக்கப்பட்டது. மறுநாள் காலையில் யுகோஸ்லேவியா நாட்டுக்குப் பயணமானார்.

ஆகஸ்ட் 8-ம் தேதி யுகோஸ்லேவியா நாட்டின் தலைநகரமான பெல்கிரேடில் காமராஜருக்கு மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டது. மார்ஷல் டிட்டோ அன்றைய உலகில் மாபெரும் தலைவராக, புரட்சி வீரராக மதிக்கப்பட்டார். அவர் தனித் தீவில் வசித்து வந்தார். அதனால் அவர் வசித்துவந்த பிரியொனி என்ற தீவுக்குத் தனி விமானத்தில் பயணம் செய்தார் காமராஜர்.

மிகவும் பாதுகாப்புடன் காமராஜர் - டிட்டோ சந்திப்பு நடந்தது. அப்போது, ஏற்கெனவே ஆவடி மாநாட்டில் சந்தித்து உரையாடியதை நினைவுகூர்ந்தார் டிட்டோ. அதன்பிறகு உலகப் பிரச்னைகள், நாட்டுப் பிரச்னைகளை மனம்விட்டுப் பேசினார்கள்.

பின்னர் அங்கிருந்து ரோம் நகருக்குச் சென்று, ரோம் நகரிலிருந்து இந்தியா திரும்புவதாகத் திட்டம் இடப்பட்டு இருந்தது. ஆனால், காமராஜர் வந்து சேர்வதற்கு முன்னரே, இந்திய விமானம் ரோம்

https://t.me/tamilpdfebooks

நகரத்திலிருந்து கிளம்பிவிட்டது, அதனால் இரண்டு நாட்கள் ரோம் நகரில் தங்கிவிட்டு, ஆகஸ்ட் 15-ம் தேதி சென்னைக்குத் திரும்பினார்.

காமராஜர், ஒவ்வொரு நாட்டுத் தலைவருக்கும் கொடுப்பதற்காக எளிய கலைப்பொருளான, தஞ்சாவூர் கோயில் சிற்பத்தைக் கொண்டுபோயிருந்தார். அது விலை மலிவாக இருந்தாலும், கலை உணர்வும், வேலைப்பாடும் மிக்கது. அனைத்துத் தலைவர்களாலும் வெகுவாகப் பாராட்டப்பட்டது.

இருபது நாள் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு சென்னைக்குத் திரும்பிய காமராஜருக்கு, அவரே எதிர்பாராத வண்ணம் மாபெரும் வரவேற்பு வழங்கப்பட்டது. தெரு எங்கும் கொடிகளும் தோரணங்களும் இருக்க, பாதை எங்கும் மக்கள் திரண்டு காமராஜருக்கு வரவேற்பு கொடுத்தார்கள். மலர் மாலைகளால் காமராஜரை மக்கள் மூழ்கடித்தனர். திறந்த காரில் ஊர்வலமாக அழைத்துவரப்பட்ட காமராஜருக்கு முன்னே குதிரை, யானை, சைக்கிள் ஆகியவற்றில் ஏராளமானவர்கள் சென்றார்கள். அந்த ஊர்வலம் தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் முடிவடைந்தது. மகத்தான வரவேற்புக்கு ஏற்புரை கொடுத்தார் காமராஜர்.

"நான் பல நாடுகளுக்கு சுற்றுப்பயணம் செய்து வந்தேன். நான் பொழுதுபோக்கவோ, வேடிக்கை பார்க்கவோ செல்லவில்லை. அங்கெல்லாம் மக்கள் எப்படி வாழ்கிறார்கள், அந்த நாட்டு அரசாங்கம் மக்களுக்கு என்ன வசதிகள் எல்லாம் செய்து கொடுத்து இருக்கிறது என்பதை அறிந்துகொள்ளவே சென்று வந்தேன்" என்று பேசவும், கரவொலி விண்ணைப் பிளந்தது.

காமராஜரைக் கொல்ல சதி

1966 நவம்பர் 2-ம் தேதி. காங்கிரஸ் காரிய கமிட்டிக் கூட்டம் நடந்தது. அந்த கூட்டத்தில், பசுவதைத் தடுப்புக் கிளர்ச்சியைப் பற்றி பேச்சு வந்தது. அப்போது காமராஜர் அந்தக் கிளர்ச்சியை வன்மையாகக் கண்டித்தார். டெல்லியில் கிளர்ச்சி நடத்த அனுமதிக்க முடியாது, கூடாது என்று ஆணித்தரமாக கருத்து தெரிவித்தார். அதனால் காங்கிரஸ் மந்திரிசபையைக் கவிழ்க்கவும், பெருந்தலைவர் காமராஜரைக் கொலை செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டதோ என்று எண்ணும் அளவுக்கு நடந்தது பசுவதைத் தடுப்பு ஆர்ப்பாட்டம்.

புது டெல்லியில், 1966, நவம்பர் 11-ம் தேதி பசுவதைத் தடுப்பு ஆர்ப்பாட்டம் என்ற பெயரில் கலவரங்களும், காலித்தனங்களும் வெடித்துக் கிளம்பின. போராட்டத்தில் கலந்துகொள்வதற்காக உத்தரப்பிரதேசம், பஞ்சாப், மத்தியபிரதேசம், ராஜஸ்தான், பீகார் ஆகிய மாநிலங்களிலிருந்து ஏராளமானவர்கள் வந்து குவிந்தார்கள். போராட்டத்தை முன்னின்று நடத்தியவர்கள் பாரதிய ஜன சங்கம், ஆர்.எஸ்.எஸ்., சங் பரிவார் ஆகியவை. நிர்வாண சாமியார்களை திரிசூலம், ஈட்டி, தடி, கம்பு ஆகியவற்றுடன் டெல்லியில் கொண்டுவந்து நிறுத்தினார்கள்.

அதிகாலை முதற்கொண்டே டெல்லி இவர்கள் கட்டுப்பாட்டில்

https://t.me/tamilpdfebooks

இருந்தது. நகர் முழுவதும் கடைகள், தொழில் நிறுவனங்களை அடைக்கச் சொல்லியும், யாரையும் ரோட்டில் நடமாட விடாமலும் மிரட்டினார்கள்.

அதன்பின் ராஷ்ட்ரிய சுயம் சேவக் தளத் தொண்டர்கள் தங்கள் வன்முறை வெறியாட்டத்தை முதன்முதலில் இர்வின் ஆஸ்பத்திரியில் கல் வீசி தொடங்கி வைத்தார்கள். அதன்பின் ஆச்ப் அலி ரோடு கடைகளின் ஜன்னல்கள், கதவுகளை அடித்து நொறுக்கினார்கள். திறந்திருந்த கடைகளை சூறையாடினார்கள். பஸ் ஒன்று தீ வைத்துக் கொளுத்தப்பட்டது.

திட்டமிட்டபடி ஆர்ப்பாட்டக்காரர்கள் பகல் ஒரு மணிக்கு பார்லிமென்ட் தெருக்களில் நுழைந்தார்கள். நாடாளுமன்றத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட ஜனசங்க எம்.பி-யான ராமேசுர ஆனந்த், "நான் சபையிலிருந்து வெளியே தள்ளப்பட்டுவிட்டேன். வேகமாக அணிவகுத்து முன்னேறுங்கள். பார்லிமென்டை சுற்றி வளையுங்கள். ஒரு மந்திரிகூட கட்டடத்தைவிட்டு வெளியே போகக் கூடாது" என்று ஆவேசக் குரல் கொடுத்தார்.

உடனே நூற்றுக்கும் மேற்பட்ட நிர்வாண சாமியார்கள் போலீஸ் வளையத்தை உடைத்துக்கொண்டு பார்லிமென்ட் வாசற் கதவை நோக்கி ஓடினார்கள். ஆயுதங்கள் ஏதுமின்றி கதவை பாதுகாத்துக் கொண்டிருந்த காவலர்கள் பயந்து ஓடினார்கள். அந்தக் கதவை உடைத்து உள்ளே நுழைய சாதுக்கள் முயன்றபோது, காவலர்கள் ஓடிவந்து கும்பிடு போட்டு தடுத்து நிறுத்த முயன்றார்கள். ஆனால், சாதுக்கள், 'கோமாதாகி ஜே!' என்று முழக்கமிட்டு பார்லிமென்ட் கதவை உடைத்து, நுழைய முயன்றது. அந்த நேரம், இரும்புத் தொப்பி போலீஸார் ஓடிவந்து கண்ணீர்ப் புகை குண்டுகளை வீசினார்கள். உடனே சாதுக்கள் தண்ணீர் தேடி ஓடினார்கள்.

அதற்குள் ஊருக்குள் இருந்த சாதுக்கள் பெட்ரோல், தீப்பந்தம், பஞ்சு உருண்டை, அக்னி திராவக வெடி ஆகியவற்றைக் கொண்டு பஸ், கார்கள், சைக்கிள்கள் என்று கண்ணுக்குத் தட்டுப்படும் அனைத்திலும் தீ வைத்தனர். ஆகாஷ்வாணி பவன் மற்றும் ரேடியோ ஒலிபரப்பு நிலையத்தின் முன்னே இருந்த கார்ட் அறைகள் தீ வைக்கப்பட்டு, அவை பற்றி எரிந்தன. அரசுக் கட்டடங்கள் மீது கற்களை விசினார்கள். தபால் ஆபீஸ், இந்தியன் ஆயில் கம்பெனி போன்ற நிறுவனங்களும் தாக்கப்பட்டன; தீ வைக்கப்பட்டன.

ஆர்ப்பாட்டக்காரர்கள் திடீரென்று சிறு கும்பலாகக் கிளம்பி காமராஜர் வீடு இருந்த சாலையை நோக்கி நடை போட்டனர். அந்த வழியில் இருந்த அமைச்சர் ரகுராமையா இல்லம் கலவரக்காரர்களால் சூறையாடப்பட்டது. அப்போது அங்கே வந்த ஒருவன், "நீங்கள் தவறான இடத்தைத் தாக்குகிறீர்கள். காமராஜர் இல்லம் அந்தப் பக்கம் இருக்கிறது. உடனே அங்கே செல்லுங்கள்" என்று சொல்லவே, அந்த கும்பல் உடனே ஆவேசமாக காமராஜர் இல்லம் நோக்கி ஓடினார்கள்.

சம்பவ தினத்தில் காமராஜர் தங்கியிருந்த ஜந்தர் மந்தர் ரோடு நாலாம் எண் பங்களாவில் இருந்த 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நிருபர் ரங்கராஜன்

https://t.me/tamilpdfebooks

தரும் தகவல் இது...

‘திடீரென இரைச்சலுடன் பெரும் கூட்டம் காமராஜர் வீட்டுக்குள் நுழைய முற்பட்டது. காமராஜரின் உதவியாளர் நிரஞ்சன்லால், சேவகர் பகதூர்சிங் ஆகியோர் கலவரக்காரர்களை தடுக்க முற்பட்டனர். ஆனால், அவர்களால் இயலவில்லை. கூட்டம் அதற்குள் உள்ளே நுழைந்துவிட்டது.

பாதுகாவலர் பகதூர்சிங் ஆகாயத்தை நோக்கிச் சுட்டார். ஆனால், கூட்டம் கல் எடுத்து வீசவே, பதிலுக்கு நிரஞ்சன் கல் எடுத்து வீசினார். துப்பாக்கியில் குண்டு தீர்ந்துவிட்டது. அதற்குள் கல் பட்டு நிரஞ்சனுக்கு அடிபட்டது. உடனே பகதூர்சிங் வேறு வழி இன்றி முன் அறையில் புகுந்து உள்ளே தாளிட்டுக்கொண்டார். அதற்குள் சப்தம் கேட்டு உள் அறையில் இருந்து காமராஜர் வெளியே வந்தார்.

"நான் கலவரக்காரர்களிடம் பேசுகிறேன்" என்று சொல்லிவிட்டு வெளியே செல்ல முற்பட்டார். ஆனால், அதெல்லாம் நடக்கக் கூடியது அல்ல என்று காமராஜரையும் உள் அறையில் வைத்துத் தாளிட்டோம். அதற்குள் கூட்டம் வீட்டின் மறு பக்கமும் சூழ்ந்து கொண்டது. கற்கள் சரமாரியாகப் பொழிந்தன. ஜன்னல் கண்ணாடிகள் எல்லாம் நொறுங்கின. உள் பக்கம் வலை போடப்பட்டு இருந்ததால் கல், உள்ளே வரவில்லை.

அதற்குள் வாசற்கதவை உடைத்துக்கொண்டு உள்ளே வந்து விட்டார்கள். காமராஜரின் உதவியாளர் அம்பி முன்னே வந்து, "காமராஜர் வீட்டில் இல்லை" என்று சொல்ல, அவருக்கு அடி விழுந்தது. என்னைப் பார்த்த கும்பல், "நீதானே துப்பாக்கி வைத்து சுடச் சொன்னாய்?" என்று சொல்லிக்கொண்டே என்னை அடித்தது.

அதற்குள் பெட்ரோல் நனைத்த துணியை என் மீது எறிந்து தீ வைக்கப் பார்த்தார்கள். நான் உடனே என் சட்டையை கழற்றி எறிந்தேன். ஏற்கெனவே ஆபரேஷன் செய்து இருந்ததால், உடலில் தழும்புகள் இருந்தன. அதைக் காட்டி, "நான் ஏற்கெனவே அரை உயிர் உள்ள ஆசாமி. என்னைக் கொல்வதானால் முழுமையாகக் கொன்று விடுங்கள்" என்று சொல்லவே, இன்னொருவன் தடுத்து நிறுத்தினான்.

உள்ளே நுழைந்த வெறியர்கள் ஏர்கண்டிஷன் கருவி மற்றும் பொருட்களை எல்லாம் வெளியே இழுத்துப் போட்டு தீ வைத்தார்கள். வீடு எங்கும் புகை எழுந்தது. காமராஜர் இருந்த அறைக்கும் தீ வைக்க முயன்றார்கள். உடனே காமராஜரை பின்பக்க வழியாக வெளியேறச் செய்தோம். அப்போதும், அவர் எங்களைப் பற்றியே கவலைப்பட்டார்.

"அவர்கள் உங்களைத்தான் குறிவைத்து வந்து இருக்கிறார்கள். அதனால் எங்களுக்கு எதுவும் நேராது" என்று சொல்லி அனுப்பி வைத்தோம். செருப்பு மட்டும் அணிந்து பின் பக்கமாக வெளியேறினார் காமராஜர். அந்த நேரத்தில் வெளியே போலீஸ்காரர்கள் வந்து சேரவும், காமராஜர் வீட்டில் இல்லை என்ற எண்ணத்தில் வெளியேறியது கலவரக் கும்பல்’ என்று எழுதி இருக்கிறார். நிலைமை மோசமானதைத் தொடர்ந்து ராணுவம் வரவழைக்கப் பட்டபிறகே நிலைமை கட்டுக்குள்

https://t.me/tamilpdfebooks

வந்தது.

தான் உயிர் பிழைத்ததைப் பற்றியோ, காங்கிரஸ் கட்சிக்கு எதிராக நடந்த கலவரத்தைப் பற்றியோ காமராஜர் பெரியதாக அலட்டிக்கொள்ளவில்லை. வேறு ஒருவராக இருந்திருந்தால், கொலை முயற்சி சம்பவத்தைப்பற்றி பேசி அனுதாபம் பெற்றிருப்பார்.

இந்த சம்பவம் குறித்து 1966, டிசம்பர் 11-ம் தேதி சேலத்தில் மட்டும் கொஞ்சம் பேசினார். அவர் அன்று பேசியதில் சில வரிகள் மட்டும் இங்கே...

"...சுதந்திரம் வாங்கியதும் காங்கிரஸை ஏன் கலைக்கவில்லை என்று கேட்கிறார்கள். சுதந்திரம் வாங்கியதோடு நமது வேலைகள் நின்றுவிடவில்லை. எல்லோரும் சுபிட்சமாக, சமமாக வாழ வேண்டும். அதற்கான வழிகளைச் செய்தாக வேண்டும். அதற்குத்தான் நேருஜி திட்டமிட்டார். சமதர்ம சமுதாயத்தை அமைக்க வேண்டும் என்றார். அதற்கு சோஷலிச சமுதாயம் என்று ஒரு வடிவம் கொடுத்தார்.

காங்கிரஸை வீழ்த்த வேண்டும் என்று எதிர்க் கட்சிகள் கூட்டணி சேருகிறார்கள். இவர்கள் என்ன கேட்கிறார்கள்? 'அரிசி கொடுக்காத காங்கிரஸ் சர்க்காரே வெளியேறு' என்கிறார்கள். சரி, காங்கிரஸ் வெளியேறிவிட்டால் நீ 3 படி அரிசி போடமுடியுமா? மந்திரத்தில் போடுவதா, தந்திரத்தில் போடுவதா?

சமதர்ம சமுதாயம் அமைக்க வேண்டும் என்று காங்கிரஸ் சொல்கிறது. அதை முறியடிக்க வேண்டும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். குறிப்பாக அவர்களுக்கு என்னைப் பற்றித்தான் பயம். இந்த காமராஜர்தான் சோஷலிச சமுதாயத்தை அமைத்தே தீருவேன் என்று சொல்கிறான். அவன்தான் தீவிரமாக இருக்கிறான் என்று நினைக்கிறார்கள். என் வீட்டுக்குத் தீ வைக்கிறார்கள். ஆனால், நான் இதற்கெல்லாம் பயப்பட மாட்டேன். கடமையைச் செய்தே தீருவேன்" என்று ஆவேசமாகப் பேசினார் காமராஜர்.

சோஷலிசம் மலராமல் தடுத்துவிட முடியும் என்று திட்டமிட்ட பணக்காரர்கள் மற்றும் மதரீதியிலான எதிர்க் கட்சிகள், இந்த விஷயத்தில் மீண்டும் தோல்வியைத் தழுவின.

https://t.me/tamilpdfebooks

8

மீண்டும் போராட்டம் 1967-1975

காமராஜர் அகில இந்திய காங்கிரஸ் தலைவராக செல்வாக்குடன் இருந்த காலத்தில், இந்தியக் குடியரசின் நான்காவது நாடாளுமன்றத் தேர்தல் 1967-ல் நடந்தது. இந்தத் தேர்தலில் தொகுதிகளின் எண்ணிக்கை 520 ஆக உயர்த்தப்பட்டு இருந்தது.

ஜவஹர்லால் நேருவின் தலைமையில் மூன்று பொதுத் தேர்தலை காங்கிரஸ் சந்தித்து இருந்தது. ஆனால், இந்தத் தேர்தலின்போது இந்திராகாந்தி பிரதமராக இருந்தார். அதனால் புதிய பிரதமரை இந்திய மக்கள் ஏற்றுக்கொள்வார்களா என்பதற்கான தேர்தலாகவே இது கருதப்பட்டது. உணவுப் பற்றாக்குறை, கடுமையான விலைவாசி உயர்வு மற்றும் வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவற்றால் மக்களிடம் காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கு குறைந்து இருந்தது.

அகில இந்திய காங்கிரஸ் தலைவராக இருந்ததால், இந்தியா எங்கும் சுற்றுப்பயணம் செய்து தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார் காமராஜர். இந்திராகாந்தியை அவர் பிரதமராக முன்னிருத்தியதால், இந்திராகாந்தியை ஜெயிக்க வைக்க வேண்டிய அவசியம் காமராஜருக்கு இருந்தது. தன் தேர்வை மக்களும் ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையுடன் இந்தியா முழுவதும் சென்று பிரசாரம் செய்தார். இந்திராகாந்தி பரேலி தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். காங்கிரஸ் 283 தொகுதிகளில் வெற்றி பெற்றது; வலுவான எதிர்க் கட்சி எதுவும் இல்லாததால், குறைவான வாக்கு வித்தியாசத்தில் நிறைய இடங்களில் வெற்றி பெற்றது. ராஜாஜியின் சுயராஜ்யா கட்சி 44 இடங்களிலும், பாரதிய ஜனசங் 35 இடங்களிலும், கம்யூனிஸ்ட் பார்ட்டி 23 இடங்களிலும், திராவிட முன்னேற்றக் கழகம் 25 இடங்களிலும் வெற்றி பெற்றன.

இந்த வெற்றியின் மூலம், இந்திராவை மக்கள் பிரதமராக ஏற்றுக்கொண்டதாகவே காமராஜர் நிம்மதி அடைந்தார். ஆனால், தமிழகத்தில் இது வரை இல்லாத பெரும் ஏமாற்றம் காமராஜருக்கு ஏற்பட்டது. மொத்தம் 39 நாடாளுமன்றத் தொகுதிகளில் 3 தொகுதிகளில் மட்டுமே காங்கிரஸ் வெற்றி பெற்றது. மற்ற தொகுதிகளை திராவிட

https://t.me/tamilpdfebooks

முன்னேற்றக் கழகமும், சுயராஜ்யா கட்சியும் பெற்றன. காமராஜர் இந்த தேர்தலில் சட்டசபை வேட்பாளராகவே களம் இறங்கினார்.

காமராஜர் முதல் தோல்வி!

சென்னை மாநிலம் என்று அழைக்கப்பட்ட தமிழ்நாட்டிலும் சட்டசபைக்கான தேர்தல் 1967-ல் நான்காவது முறையாக 234 சட்டசபை தொகுதிகளுக்கு நடந்தது. ஒன்பது வருடங்கள் முதல்வர் பொறுப்பில் இருந்த காமராஜர் பதவி விலகி, அகில இந்திய காங்கிரஸ் தலைவராகப் பொறுப்பேற்று டெல்லி அரசியலுக்குச் சென்றுவிட்டார். அவருக்குப்பின் தமிழக முதல்வராக வந்த பக்தவத்சலத்துக்கு செல்வாக்கு இல்லை. மேலும், கடுமையான உணவுத் தட்டுப்பாடு நிலவியதால் காங்கிரஸின் மீது மக்கள் அதிருப்தியுடன் இருந்தார்கள்.

இதைத் தவிர இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் காங்கிரஸின் செயல்பாடுகள் மிகவும் கடுமையாக இருந்ததை மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. மேலும், அரிசிப் பஞ்சத்தை தி.மு.க. சிறப்பாகப் பயன்படுத்திக்கொண்டது. தாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஒரு ரூபாய்க்கு மூன்று படி அரிசி போடப்படும் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். உணவுப் பற்றாக்குறையையும், விலைவாசி உயர்வையும் சிறப்பாக மக்களிடம் எடுத்துச் சென்றது தி.மு.க.

'பக்தவத்சலம் அண்ணாச்சி அரிசி விலை என்னாச்சு?, காமராஜர் அண்ணாச்சி கடலைப் பருப்பு விலை என்னாச்சு?' என்று மயக்கும் கோஷங்களைப் போட்டு மக்களை காங்கிரஸ் கட்சிக்கு எதிராக வாக்களிக்கத் தூண்டினார்கள்.

காமராஜருடன் மு.கருணாநிதி

இவை எல்லாவற்றையும்விட, வாக்குப் பதிவுக்கு சில நாட்களே இருந்த சமயத்தில், எம்.ஜி.ராமச்சந்திரன், நடிகர் எம்.ஆர்.ராதாவால் சுடப்பட்டார். இது, அவர்கள் இருவருக்குமான தனிப்பட்ட பகையாக இருந்தாலும், சுடப்பட்டுக் கழுத்தில் கட்டுடன் இருக்கும் எம்.ஜி.ஆர். படத்தைப் போட்டு போஸ்டர் அடிக்கவே, மக்களிடம் பெரும் அனுதாபம்

https://t.me/tamilpdfebooks

ஏற்பட்டது. இந்த அனுதாபம் அப்படியே தி.மு.க. வாக்குகளாக மாறியது.

இந்தத் தேர்தலில் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட்டது. தந்தை பெரியார் மட்டும் ஆதரவு தெரிவித்தார். திராவிட முன்னேற்றக் கழகம் அண்ணா தலைமையில் போட்டியிட்டது. இவர்களுடன் ராஜாஜியின் சுயராஜ்யா கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, ஆதித்தனாரின் நாம் தமிழர் கட்சி, ம.பொ.சிவஞானத்தின் தமிழரசுக் கழகம் என்று மேலும் சில கட்சிகள் ஒன்று சேர்ந்து போட்டியிட்டன. அண்ணாதுரை தென்சென்னை தொகுதியில் நாடாளுமன்ற வேட்பாளராகப் போட்டியிட்டார். பக்தவத்சலம் ஸ்ரீபெரும்புதூர் தொகுதியிலும், காமராஜர் விருதுநகர் தொகுதியிலும் போட்டியிட்டனர்.

தேர்தல் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்த நேரத்தில், திருநெல்வேலி போகும் வழியில் காமராஜருடைய கார் விபத்துக்கு உள்ளானது. காலிலும் உதட்டிலும் பலமான காயம் ஏற்பட்டு பாளையங்கோட்டை பயணியர் விடுதியில் தங்கி இருந்தார். "விரைவில் குணமடைந்து விருதுநகரில் தேர்தல் பிரசாரம் செய்ய வந்துவிடுவேன்" என்று கூறி இருந்தார். ஆனால், தேர்தல் முடியும் வரை அவரால் குணமடைந்து நடக்க இயலவில்லை.

"தேர்தலுக்கு முன்பு இப்படி அடிபட்டுவிட்டதே, தேர்தல் பிரசாரம் செய்யாமல் எப்படி வெற்றிபெற முடியும்?" என்று நிருபர்கள் கேட்டபொது, "படுத்துக்கொண்டே ஜெயிப்போம்" என்று தன்னம்பிக்கையுடன் கூறினார் காமராஜர். ஆனால், இதுவும் ஆணவப் பேச்சாக தி.மு.க-வினரால் திரித்துக் கூறப்பட்டது. தேர்தல் முடிவு பிப்ரவரி 23-ம் தேதி வெளிவந்தது. தி.மு.க. கூட்டணி 179 இடங்களைக் கைப்பற்றியது. காங்கிரஸ் கட்சியால் 51 இடங்களை மட்டுமே பெற முடிந்தது. அமைச்சர் பூவராகனைத் தவிர, பக்தவத்சலம் உள்ளிட்ட அனைத்து அமைச்சர்களும் தோற்றுப் போனார்கள். யாருமே எதிர்பாராத வண்ணம், விருதுநகரில் காமராஜர், மாணவர் பி.சீனிவாசன் என்பவரிடம் 1,285 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்றார்.

தி.மு.க. தனிப் பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைத்தது. இந்திய வரலாற்றில் முதன்முறையாக காங்கிரஸ் அல்லாத ஒரு கட்சி தனியாக ஆட்சி அமைத்தது. தமிழ்நாட்டில் நாற்பது ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சி முடிவுக்கு வந்தது. அண்ணாதுரை முதல்வராக பதவி ஏற்க, இரா.நெடுஞ்செழியன், மு.கருணாநிதி, கே.ஏ.மதியழகன், சாதிக்பாட்சா, சத்தியவாணி முத்து, எம்.முத்துசாமி, எஸ்.மாதவன் ஆகியோர் அமைச்சரானார்கள்.

'காமராஜர் போன்ற பெருந்தலைவர்கள் தோற்கும் நிலை ஏற்பட்டிருக்கக்கூடாது' என்று கருத்துத் தெரிவித்த அண்ணாதுரை, நேராக தன் சகாக்களுடன் வந்து காமராஜரை சந்தித்து ஆசி வாங்கிப் போனார்.

தோல்வியை மிகவும் சந்தோஷமாக, தைரியமாக எதிர் கொண்டார் காமராஜர். தோல்வியைப் பற்றி, "காங்கிரஸுக்குக் கிடைத்த தோல்வியை நான் ஒப்புக்கொள்கிறேன். மக்கள் தீர்ப்பைத் தலை வணங்கி ஏற்றுக்கொள்கிறேன். மக்களின் நம்பிக்கையைப் பெற மீண்டும்

https://t.me/tamilpdfebooks

நாம் கடுமையாக உழைப்போம்" என்று கருத்து தெரிவித்தார்.

கையில் ஊன்றுகோலுடன் டெல்லிக்கு விமானத்தில் பயணம் செய்தார் காமராஜர். அகில இந்திய அளவில் காங்கிரஸ் பெரும்பான்மையாக வெற்றி பெற்று இருந்ததால், இந்திராவை மீண்டும் பிரதமர் ஆசனத்தில் அமர வைத்தார். போட்டியாளராக இருந்த மொரார்ஜி தேசாயைத் துணைப் பிரதமர் பதவியில் அமர்த்தினார்.

தேர்தலில், 'திராவிட முன்னேற்றக் கழகம் ரகசிய மை ஏற்பாடு செய்துவிட்டார்கள். அதனால்தான் காங்கிரஸுக்கு போட்ட வாக்குகள் பதிவாகவில்லை' என்று காங்கிரஸ் நிர்வாகிகள் குற்றச்சாட்டு கிளப்பினார்கள். ஆனால், காமராஜர் இதை வன்மையாக மறுத்தார்.

'நாம் தோற்றதை ஒப்புக்கொண்டால் மட்டுமே, அடுத்து ஜெயிப்பதைப் பற்றி ஆராய முடியும். இப்படித் தவறாக பேசி ஜனநாயகத்தையும் தமிழக மக்களையும் அசிங்கப்படுத்தக் கூடாது' என்று ஆவேசப்பட்டார்.

மேலும், சில காங்கிரஸ் தலைவர்கள், 'திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ரூபாய்க்கு மூன்று படி அரிசி என்ற, முடியவே முடியாத வாக்குறுதியை அளித்து வெற்றி அடைந்திருக்கிறார்கள். அதை உடனே நிறைவேற்றாவிட்டால் போராட்டம் நடத்த வேண்டும்' என்று காமராஜருக்கு அழைப்பு விடுத்தனர்.

ஆனால், இந்த கோரிக்கையையும் வன்மையாக மறுத்தார் காமராஜர். "புதிய கட்சியை ஆட்சியேற மக்கள் வாய்ப்பு கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் பதவிக்குப் புதியவர்கள். அரசு கோப்பைப் பற்றி அதிகம் அறியாதவர்கள். அதனால் ஆறு மாத காலம் அவர்களுடைய செயல்பாடுகளைப் பற்றி யாரும் எதுவும் பேசக்கூடாது; விமர்சனம் செய்யக்கூடாது" என்று கட்டளை இட்டார் காமராஜர்.

'தோல்வி அடைந்தாலும், பெருந்தன்மையைக் காட்டி வெற்றி அடைந்துவிட்டார், காமராஜர்' என்று பத்திரிகைகள் பாராட்டி எழுதின. காங்கிரஸ் ஆட்சியில் இல்லாமல்... எதிர்க் கட்சியாக அமர்ந்தது. காமராஜர் பெற்ற முதலும் கடைசியுமான தோல்வி விருதுநகர் தேர்தல்தான்.

மீண்டும் தமிழ்நாட்டுக்கு

அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவராக 1964 முதல் 1967 வரை இரண்டு தடவை பதவியில் இருந்தார் காமராஜர். தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி, தோல்வியைத் தழுவியதால் இனி தீவிரமாக மாநிலத்தில் காங்கிரஸ் கட்சியை பலப்படுத்துவது என்ற முடிவுக்கு வந்தார்.

ஆனால், மூன்றாவது முறையும் அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் தேர்தலில் காமராஜர் நிற்க வேண்டும் என்று பலர் கோரிக்கை வைத்தார்கள். இந்த முறை அந்தக் கோரிக்கையை முழுமையாகத் தட்டிக் கழித்தார். "தலைவர்களாக பலர் வந்தால் மட்டுமே கட்சியில் ஜனநாயகம் நிலைத்து நிற்கும்" என்றார்.

https://t.me/tamilpdfebooks

யாரைத் தேர்ந்தெடுப்பது என்று போட்டி வந்தது. எஸ்.கே.பாட்டீல், அதுல்யா கோஷ், மோகன் தாரியா, அனுமந்தையா மற்றும் நிஜலிங்கப்பா என பலரும் தலைவர் பதவிக்கு ஆசைப்பட்டார்கள்.

யார் நின்றாலும் அவர் போட்டி இன்றி தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று காமராஜர் விரும்பினார். பிரதமர் இந்திராகாந்தியும் காமராஜரும் இது குறித்து கலந்து ஆலோசனை செய்தார்கள். இறுதியில் நிஜலிங்கப்பாவை அழைத்துப் பேசினார். அவரையே தலைவராக நிறுத்தி வெற்றிபெறவும் வைத்தார். இந்திய அளவில் அவரது காங்கிரஸ் கட்சித் தலைவர் பணி முடிவுக்கு வந்தது.

மீண்டும் வெற்றி

மார்ஷல் நேசமணி மரணம் அடைந்ததால் 1969, ஜனவரி மாதத்தில் நாகர்கோவில் தொகுதிக்கு இடைத்தேர்தல் வந்தது. அந்தத் தொகுதியில் காமராஜர் நிற்க வேண்டும் என்று காங்கிரஸ் தொண்டர்கள் விரும்பினார்கள்.

காமராஜர் தோல்வியை ஏற்றுக்கொள்ள முடியாமல் தவித்த தொண்டர்கள், உடனே அவரை வெற்றி பெற வைக்க வேண்டும் என ஆசைப்பட்டார்கள். அதனால் மிகுந்த யோசனைக்குப் பிறகு நாகர்கோவில் தொகுதியில் நிற்க சம்மதம் தெரிவித்தார்.

'அப்பச்சி... அப்பச்சி' என்று மக்கள் வாய் நிறைய அழைத்தார்கள். தமிழகம் முழுவதிலும் காங்கிரஸ் தலைவர்கள் காமராஜருடைய வெற்றிக்காகப் பாடுபட்டார்கள்.

தொண்டர்கள் தங்கள் உடம்பு எங்கும் காங்கிரஸ் கொடியையும், காமராஜர் கொடியையும் குண்டூசி வைத்துக் குத்திக்கொண்டு ரத்தம் சொட்டச்சொட்ட வாக்கு சேகரித்தார்கள். காமராஜரை எதிர்த்து, டாக்டர் மதியாஸ், ராஜாஜியின் சுயராஜ்யா கட்சியின் சார்பில் நிறுத்தப்பட்டார்.

காமராஜரைத் தோற்கடிக்க வேண்டியது கட்டாயக் கடமை என்று சொன்னார் ராஜாஜி. அதனால் அவரது வேண்டுகோளை ஏற்று கருணாநிதி முதலான திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் வாக்கு சேகரிக்க வந்தார்கள். ஆனால், மக்கள் முழுமையாக காமராஜரை ஆதரித்தார்கள்.

1969, ஜனவரி 8-ம் தேதி தேர்தல் நடந்தது. ஒரு லட்சத்து 28 ஆயிரத்து 201 ஓட்டுகள் வித்தியாசத்தில் பெரு வெற்றி பெற்றார் காமராஜர். விருதுநகர் தேர்தல் தோல்விக்கு பரிகாரம் செய்ததைப் போல நாகர்கோவில் நகரமே அவரது வெற்றியால் விழாக் கோலம் பூண்டது!

https://t.me/tamilpdfebooks

தாயின் மறைவு

விருதுநகரில் காமராஜர் தோல்வி அடைந்ததிலிருந்து காமராஜர் தாயாரின் உடலும் மனமும் சுணங்கிப் போனது. "நல்லதுதானய்யா செஞ்சான் என் மகன். அவனைத் தோக்கடிச்சுட்டாங்களே..." என்று சொல்லிச் சொல்லி மாய்ந்து போனார். வீடு தேடி வந்த காங்கிரஸ் நிர்வாகிகளிடம், "காமராஜரை கவலைப்படாம பார்த்துக்கங்கப்பா..." என்று சொல்லி அனுப்பினார்.

நாகர்கோவில் தொகுதியில் காமராஜரின் வெற்றிச் செய்தி சிவகாமிக்குத் தேனாக இனித்தது. மனம் சந்தோஷப்பட்டாலும், உடல் நலம் தேறவில்லை. மகன் வெற்றி பெற்றுவிட்டான் என்ற நிம்மதியில் கண் மூட முடிவெடுத்துவிட்டாரோ?

அவருடைய மோசமான உடல் நிலை காமராஜருக்குச் சொல்லப்பட்டது. சென்னையில் இருந்த காமராஜர் உடனே விருதுநகருக்கு ஓடோடி வந்தார். ஆனாலும் முகத்தில் எந்த உணர்ச்சியும் பதற்றமும் இல்லாமல் நடந்துகொண்டார். படுக்கையில் மயங்கிய நிலையில் இருந்தார் சிவகாமி.

"அம்மா! கண்ணைத் திறந்து பாரும்மா... அண்ணன் வந்துட்டாங்க..." என்று சகோதரி நாகம்மாள் கூறியதும், அது வரை மூடியே கிடந்த சிவகாமியின் விழிகள் விரிந்தன. எதிரே காமராஜர் உட்கார்ந்திருந்ததைப் பார்த்ததும் தாயின் கண்களில் நீர் கரைபுரண்டு ஓடியது. காமராஜரைத் தவிர சுற்றி இருந்த அனைவருடைய கண்களும் நீரில் குளித்தன. ஆனால், காமராஜர் மிகவும் தைரியமாகவே இருந்தார்.

"எதுக்கும் கவலைப்படாம இரு... உடம்பு சரியாப் போயிடும். அப்போ நான் வரட்டுமா?" என்று துண்டைத் தோளில் போட்டபடி கிளம்பினார்.

"ஒரு வாய் சாப்பிட்டுப் போப்பா..." என்று மரணப் படுக்கையிலும் திக்கித் திணறிப் பேசி தாய்ப் பாசத்தைக் காட்டினார் சிவகாமி.

ஆனால், காமராஜர், "வேண்டாம், மதுரையில போய்

https://t.me/tamilpdfebooks

சாப்பிட்டுக்கிறேன்..." என்று கிளம்ப எத்தனித்தார். அந்த நேரம் மீண்டும் தாயின் கண்ணிலிருந்து நீர் பெருகுவதைக் கண்டதும், கிளம்பியவர் நின்றார்.

"சரி... சாப்பிட்டே போறேன்" என்றவர், "நாகம்மா சாப்பாடு போடு" என்றபடி சமையலறைக்குள் நுழைந்தார். சகோதரியும், அவரது உறவுகளும் ஆசை ஆசையாக உணவு பரிமாறினார்கள். வழக்கம்போல், அவசர அவசரமாக சாப்பிட்டு முடித்தார். அதன்பிறகு தாயிடம் வந்து, "இப்போ கிளம்பட்டுமா?" என்று அன்பு ஒழுகக் கேட்டார்.

"மகராசனாப் போயிட்டு வாப்பா" என்று வழி அனுப்பி வைத்தார் சிவகாமி. அதுதான் தாயை உயிருடன் காமராஜர் பார்த்த கடைசி சந்திப்பு. வீட்டைவிட்டு வெளியே வந்த காமராஜரிடம் உடன் வந்த நெடுமாறன், "ஏன் வீட்ல சாப்பிடவே மாட்டீங்களா... அம்மா இவ்வளவு தூரம் வேதனைப்படுறாங்க" என்று கேட்டார்.

"அது... எப்படியும் இருபத்தைஞ்சு வருஷம் இருக்கும், வீட்ல சாப்பிட்டு. இப்போ அம்மா படுத்துக்கிடக்கிறதால தட்ட முடியல..." என்றவர் அடுத்து கட்சி வேலையைப் பற்றி பேசத் தொடங்கிவிட்டார்.

இந்த சந்திப்பு நடந்த சில நாட்களிலேயே, அதாவது, 1969, ஜனவரி 19-ம் தேதி சிவகாமி மரணம் அடைந்ததால் விருதுநகர் வந்தார் காமராஜர். தாயின் உயிரற்ற உடலை சில கணங்கள் பார்த்த பின்பு இயல்பு நிலைக்கு வந்துவிட்டார். அழவோ, ஆர்ப்பாட்டமோ செய்யாமல், மிகவும் சாதாரணமாக துக்கத்துக்கு வந்தவர்களிடம் பேசினார்.

ஒரு மகன் தாய்க்குச் செய்யவேண்டிய அனைத்துச் சடங்குகளையும் செய்துமுடித்தார். தாயாரின் இறுதி ஊர்வலம் கிளம்ப இருந்த நேரத்தில் திடீரென பெரும் சலசலப்பு ஏற்பட்டது!

அதாவது, நாகர்கோவிலிலிருந்து காங்கிரஸ் தொண்டர்கள் ஏராளமானவர்கள் வந்து கலந்துகொண்டார்கள். அவர்கள், 'தாயாரின் உடலை நாங்கள்தான் தூக்கிச் செல்வோம்' என்று அன்புடன் சண்டை போட்டார்கள். உறவினர்களும், விருதுநகர் தொண்டர்களும், எங்கள் அம்மாவை, பிற ஊரிலிருந்து வந்தவர்களைத் தூக்கவிட மாட்டோம் என்று சண்டைக்கு நின்றார்கள்.

"எங்கள் தலைவனின் அருமை தெரியாதவர்கள் நீங்கள். நாங்கள்தான் அவரை வெற்றிபெற வைத்து இருக்கிறோம். அதனால் அவருடைய தாயாரைத் தூக்கும் பாக்கியம் எங்களுக்கு மட்டும்தான்" என்று பதிலுக்குத் தொண்டர்கள் சண்டை போட்டார்கள்.

விஷயம் காமராஜர் காதுக்கு வந்தது. உணர்ச்சியே உருவமாகக் நின்ற நாகர்கோவில் தொண்டர்களைப் பார்த்தார் காமராஜர். உடனே, "நாகர்கோவில்காரங்க சொல்றது சரிதான். அம்மா கடைசி காலத்துல கஷ்டப்பட்டு செத்திருக்கா. அதனால் விருதுநகர்க்காரங்க பத்திக் குச்சி பிடிச்சுட்டு முன்னால போங்க, நாகர்கோவில்காரங்க அம்மாவைத் தூக்கிட்டு வரட்டும்" என்று தீர்ப்பு சொன்னார்.

காமராஜர் சொல்லுக்கு மறுப்பேது? அப்படியே நடந்தது. ஒரு

https://t.me/tamilpdfebooks

மாபெரும் தலைவனாக இல்லாமல், ஒரு தாயின் மகனாக அந்த இறுதி அஞ்சலி நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு சென்னை திரும்பினார் காமராஜர்.

அண்ணாதுரை மறைவு

கருத்து வேறுபாட்டால் பெரியாரிடமிருந்து வெளியேறி தனிக் கட்சி கண்டு ஆட்சியைப் பிடித்த, சி.என்.அண்ணாதுரை என்ற அறிஞர் அண்ணா, ஒரு விஷயத்தில் அப்படியே பெரியாரை அடியொற்றி நடந்தார். அதாவது, காமராஜருக்கு மரியாதை கொடுப்பதிலிருந்து கடைசி நொடி வரை விலகாமல் இருந்தார்.

காமராஜர் விருதுநகரில் தோல்வி அடைந்த சமயத்தில், 'காமராஜர் போன்ற தலைவர்கள் தோற்று இருக்கக் கூடாது' என்று வேதனைப்பட்டார். அதன்பிறகு நாகர்கோவில் தேர்தலில் காமராஜர் நின்றபோது, கட்சியினர் எவ்வளவோ வற்புறுத்திக் கூப்பிட்டும் காமராஜருக்கு எதிராகத் தேர்தல் பிரசாரம் செய்வதற்கு வரவே இல்லை. காமராஜரை அண்ணா எவ்வளவு தூரம் மதித்தார் என்பதற்கு இவை சான்றுகள்.

முதலமைச்சராக இருந்த அண்ணா, 1967, ஏப்ரல் 24-ம் தேதி காஞ்சிபுரம் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் நடந்த விழாவில் கலந்துகொண்டு, காமராஜர் உருவப்படத்தைத் திறந்துவைத்து பேசினார்.

அப்போது அவர், "அரசியலில் கருத்து வேறுபாடு இருக்கலாம், கசப்பு இருக்கக் கூடாது. கட்சி வேறுபாடு இருக்கலாம்; கத்திக் குத்து வரை செல்லக் கூடாது.

காமராஜர் படிக்காத மேதை என்று தலைமை ஆசிரியர் கூறினார். சிலர்தான் படிக்காமலேயே மேதை ஆக முடியும். காமராஜர் படிக்கவில்லையே தவிர, 'கல்லூரியில் படிக்கவில்லையே' என்ற ஏக்கம் கொண்டவர். அவர் இருந்த காலம், குடும்பச் சூழ்நிலை, நேரம் கிடைக்காத தன்மை, அரசியல் ஈடுபாடு ஆகியவற்றால்தான் அவரால் படிக்க இயலவில்லை. கல்லூரியில் படித்துப் பட்டம் பெறவில்லையே தவிர, படிக்கவே இல்லை என்று பொருள் கொள்ளக் கூடாது.

தனக்கு நேரம் கிடைக்கும்போதெல்லாம் அவர் படித்துக் கொண்டுதான் இருந்தார். ஆறடி மேடையில், மாலை நேரத்தில் பொதுக்கூட்டங்களில் மட்டுமே இதைப் பார்ப்பவர்கள் அவரைப் புரிந்துகொள்ள முடியாது. ஆனால், என்னைப் போல நெருங்கிப் பழகுகிறவர்கள், அவருடைய படிப்பு ஆர்வத்தைப் புரிந்துகொள்வார்கள்.

அவர் கல்லூரியில் படிக்கவில்லையே தவிர, வாழ்க்கைப் பாடத்தைப் படித்தவர். மக்களின் புன்னகையை, பெருமூச்சை, கண்ணீரைப் படித்துப் பாடம் பெற்றார். இப்போது நான் திறந்து வைத்த காமராஜர் படத்தை, இந்தத் தமிழ் சமுதாயத்துக்கே பரிசாகத் தருகிறேன். அவர் படத்தைத் திறப்பதிலோ, அவரைப் பாராட்டுவதிலோ எப்போதும் நான் தயக்கம் காட்டியதில்லை, தயக்கம் காட்டவும் மாட்டேன். கருத்து வேறுபாடு இருந்தாலும் பாராட்ட வேண்டியதை பாராட்டுவது தமிழ்ப் பண்பாடு.

https://t.me/tamilpdfebooks

அந்தப் பண்பாடு மேன்மேலும், சிறக்க வேண்டும் என்பதைத்தான் இந்த நிகழ்ச்சி மூலம் நாம் புரிந்துகொள்ள வேண்டும்" என்று பேசினார்.

அண்ணா காமராஜரை இந்த அளவுக்கு மதித்தார் என்றால், காமராஜர் அவரைவிட அண்ணாவை நேசித்தார் என்பதற்கும் ஒரு சான்று.

காமராஜர், நாகர்கோவில் தொகுதி எம்.பி-யாக இருந்த சமயம், டெல்லியில் இருந்தார். அப்போது, அமெரிக்க அதிபராக இருந்த நிக்சன் இந்தியாவுக்கு சிறப்பு விருந்தினராக வந்தார். காமராஜரின் நேர்மை, எளிமையைப் பற்றிக் கேள்விப்பட்டு, சந்திக்க ஆசைப் பட்டார் நிக்சன்.

காமராஜருடன் அறிஞர் அண்ணா

இதைக் குறித்து காமராஜரிடம் தெரிவித்து, "எந்த நேரம் சந்திப்பை வைத்துக்கொள்ளலாம்?" என்று கேட்டார்கள்.

ஆனால், காமராஜர் கொஞ்சம்கூட யோசிக்காமல், "எனக்கும் ஆசைதான், ஆனால், நேரம் இல்லை. நான் உடனே ஊருக்குக் கிளம்ப வேண்டியுள்ளது எனச் சொல்லிவிடுங்கள்" என்றார்.

உடன் இருந்த தலைவர்களுக்கு அதிர்ச்சி. ஆனால், காமராஜர் ஒரு முடிவு எடுத்துவிட்டால் பின்னர் மாறமாட்டார் என்பது எல்லோருக்குமே தெரியும் ஆதலால் யாரும் எதுவும் கேட்கவில்லை.

எல்லோரும் போன பின்னர், டெல்லியில் காமராஜருக்கு உதவியாளராக இருந்த அம்பி மட்டும் தனியே, "நிக்சனைப் பார்க்க எத்தனையோ பேர் காத்துக்கிடக்கிறார்கள், நீங்கள் ஏன் தவிர்த்துவிட்டீர்கள்?" எனக் கேட்டார்.

"நிக்சன் பெரிய ஆளா இருக்கலாம்னேன், யாரு இல்லைன்னது? ஆனா, நம்ம அண்ணாதுரையை இந்த நிக்சன் பார்க்க முடியாதுன்னு சொல்லிட்டாருன்னேன். நம்ம ஊர்க்காரரைப் பார்க்க விருப்பம் இல்லாதவரை நாம ஏன் பார்க்கணும்னேன்..." என்று சொல்லிவிட்டுக் கிளம்பினார்.

https://t.me/tamilpdfebooks

அறிஞர் அண்ணா அமெரிக்கா சென்றபோது, நிக்சனை சந்திக்க விரும்பினார். ஆனால், அது முடியாமல் போனது. இந்த விஷயத்தை அண்ணாவே பெரிதாக எடுத்துக்கொள்ளாமல் சாதாரணமாகத்தான் சொல்லி இருந்தார். ஆனால், அண்ணா மீது எத்தனை பெரிய மதிப்பு வைத்திருந்தால், காமராஜர் நிக்சனை பார்க்க மறுத்திருப்பார். இதைவிட வேறு சான்று வேண்டுமா, என்ன!

அண்ணா, நோயால் கடுமையாக அவதிப்பட்டதை அறிந்த காமராஜர் கலங்கிப் போனார். அண்ணா அப்போது சென்னை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தார்.

தகவல் அறிந்து நேராக மருத்துவமனைக்குப் போனார் காமராஜர். அங்கிருந்த உயர் மருத்துவர்களை அணுகி, "அண்ணாவுக்கு என்ன நோய்? அதை எப்படி குணப்படுத்துவது? இப்படி அவதிப்படாமல் சிகிச்சை அளியுங்கள். உங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை என்றால் வேறு நகரங்களிலிருந்து பெரிய மருத்துவர்களையும் வரவழையுங்கள்" என்று ஆலோசனை கூறினார்.

அதன் பின்னர் மேலும், பல பரிசோதனைகள் செய்தே, அண்ணாவுக்குப் புற்றுநோய் வந்திருப்பது கண்டறியப்பட்டது. சாப்பிட்டால் உணவை விழுங்க முடியாத நிலை. அமெரிக்காவுக்குச் சென்று சிகிச்சை பெற்றுவந்தார். அந்த நேரம் அரசு சுற்றுப் பயணமாக இந்திராகாந்தி அமெரிக்கா செல்ல வேண்டி இருந்தது. உடனே காமராஜர் அண்ணாவைப் பற்றிச் சொல்லி அனுப்பினார். அவர் சொன்னதைக் கேட்டு, நியூயார்க் நகருக்குச் சென்று அண்ணாவைப் பார்த்துவந்தார் இந்திராகாந்தி.

ஓரளவு குணமான பிறகு சென்னை திரும்பினார் அண்ணா. ஆனாலும் நோயின் தீவிரம் குறையாமலே இருந்தது. அடையாறில் உள்ள புற்றுநோய் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தார். காமராஜர் அங்கேயும் சென்று உடல் நலம் விசாரித்தார். ஆனாலும் சிகிச்சை பலனளிக்காமல் 1969, பிப்ரவரி 3-ம் தேதி அண்ணாவின் உயிர் பிரிந்தது. செய்தி கேட்டதும் பதறிப்போன காமராஜர் உடனே அண்ணா உடலுக்கு அஞ்சலி செலுத்தினார். அண்ணா மறைந்தபோது தமிழகம் எங்கும் இருந்து வந்த மக்கள் கூட்டம் அலைமோதியது.

காங்கிரஸ் உடைந்தது

காங்கிரஸ் ஆட்சிக்கு வந்ததும் காமராஜர் மீது பெரும் மரியாதை வைத்திருந்த இந்திராகாந்தியின் போக்கு, கொஞ்சம் கொஞ்சமாக மாறியது. ‘ஒரு நாட்டின் பிரதமர், கட்சிக்கு அடி பணிந்து போக வேண்டியது இல்லை. கட்சியைவிட பிரதமரே உயர்ந்தவர். பிரதமருக்குக் கட்டுப்பட்டுத்தான் கட்சி நடக்க வேண்டும்’ என்று எண்ணினார். அதனால் கட்சியை மதிக்காத போக்கு தொடர்ந்தது. காமராஜர் போன்ற வலிமையான தலைவர், காங்கிரஸ் தலைவராக இல்லை என்பதால், தன் இஷ்டப்படி நடந்தார் இந்திராகாந்தி.

சபாநாயகராக இருந்த சஞ்சீவிரெட்டியை, ஜனாதிபதி தேர்தலுக்கு, 1969-ல் நிறுத்துவது என்று பெங்களூரில் கூடிய காங்கிரஸ் கட்சி முடிவு

https://t.me/tamilpdfebooks

எடுத்தது. காங்கிரஸ் கட்சி யாரை முடிவு செய்கிறதோ அவரே ஜனாதிபதியாக வரமுடியும் என்ற நிலைமை இருந்தது. சஞ்சீவிரெட்டியை ஜனாதிபதியாக நிறுத்த இந்திராகாந்தி விரும்பவில்லை. அதனால் காங்கிரஸ் கட்சியில் ஓட்டெடுப்பு நடந்தது. அதில், சஞ்சீவிரெட்டிக்கு ஆதரவாக எட்டு ஓட்டுகளும், அவருக்கு எதிராக ஐந்து ஓட்டுகளும் பதிவானது. அதனால் கட்சி சார்பில் சஞ்சீவிரெட்டியை ஜனாதிபதியாக்குவது என்று முடிவு செய்யப் பட்டது.

இந்த நேரம் காமராஜர் மனதில் சிறு நெருடல் ஏற்பட்டது. அதாவது பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் நல்ல உறவு இருக்க வேண்டியது அவசியம் என நினைத்தார். அதனால் "இது விஷயமாக அடுத்த கூட்டத்தில் முடிவு செய்துகொள்ளலாம்" என்றார்.

ஆனால், திடீரென இந்திராகாந்தி மனம் மாறி, "இப்போது எடுத்த முடிவே இருக்கட்டும். நான் சஞ்சீவிரெட்டியை ஆதரிக்கிறேன்" என்று சொன்னார். அப்படியே அறிக்கையும் விட்டார். ஆனால், ஜனாதிபதி தேர்தல் நடக்க இருந்த சமயத்தில் போட்டி வேட்பாளராக வி.வி.கிரியை களம் இறக்கினார் இந்திராகாந்தி. அத்துடன் நில்லாமல், 'காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் மனசாட்சிப்படி ஓட்டுப் போடவேண்டும்' என்று வேண்டுகோள் விடுத்தார்.

இப்படி ஒரு சூழலை எதிர்பாராத காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அதிர்ச்சி அடைந்தார்கள். காங்கிரஸ் கட்சி சொல்வதைக் கேட்பதா அல்லது பாரதப் பிரதமர் இந்திராகாந்தி சொல்வதைக் கேட்பதா என்ற இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டனர். பரபரப்பான சூழலில் தேர்தல் நடந்தது.

கிரி 4,20,077 வாக்குகள் பெற்று வெற்றியடைய, சஞ்சீவி ரெட்டிக்கு 4,05,427 வாக்குகள்தான் கிடைத்தன.

சஞ்சீவிரெட்டியின் தோல்வியைப்பற்றி காமராஜர் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. ஆனால், நேருவின் மகள், ஒரு நாட்டின் பிரதமர், கொடுத்த வாக்கைக் காப்பாற்றவில்லையே என்று வேதனை அடைந்தார். காமராஜர் மட்டுமல்ல, காங்கிரஸ் தலைவர்கள் அனைவருமே இந்திராவின் செயலைப் பார்த்து அதிர்ந்து போனார்கள். ஆனால், ஒரு நாட்டின் பிரதமரைப் பார்த்து எப்படிக் கேள்வி கேட்பது என்று அமைதியாக இருந்தனர்.

ஆனால், காமராஜர் அமைதியாக இருக்கவில்லை. கட்சிக் கட்டுப்பாட்டை மீறிவிட்டார் இந்திரா என்று கர்ஜித்தார். அதற்கான விளைவை அவர் சந்தித்தே தீரவேண்டும் என்று ஆவேசமானார். அதனால் காங்கிரஸ் கட்சியிலிருந்து 1969 நவம்பர் 12-ம் தேதி இந்திராகாந்தி நீக்கப்பட்டார். ஆனால், கட்சியிலிருந்து நீக்கப்பட்டதை இந்திராகாந்தி ஏற்காமல் போர்க் குரல் விடுத்தார். அதனால் காங்கிரஸ் இரண்டாக உடைந்தது.

கட்சியை ஆதரித்தவர்கள் பழைய காங்கிரஸ் அல்லது ஸ்தாபன காங்கிரஸ் என்றும், இந்திராவை ஆதரித்தவர்கள் இந்திரா காங்கிரஸ் என்றும் செயல்பட்டார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரை, காங்கிரஸ்

https://t.me/tamilpdfebooks

நிர்வாகிகள், தொண்டர்கள் அனைவரும் ஒன்றுபட்டு காமராஜர் பின்னே நின்றார்கள்.

இந்த பிளவு நாடாளுமன்றத்திலும் எதிரொலித்தது. 60-க்கும் மேற்பட்ட எம்.பி-கள் பழைய காங்கிரஸுக்கு ஆதரவாக செயல்பட்டதால், இந்திராகாந்தி அரசு அறுதிப் பெரும்பான்மை இழந்தது. ஆனாலும், ஆட்சி கவிழ்ந்துவிடாமல் இருக்க தி.மு.க. மற்றும் இடதுசாரிக் கட்சிகள் ஆதரவு தெரிவித்தன.

அப்போதைக்கு ஆட்சி கவிழவில்லை என்றாலும், காங்கிரஸ் கட்சித் தலைவராக அப்போது இருந்த மொரார்ஜி தேசாய் இந்திராவுக்கு எதிராக செயல்பட்டுகொண்டு இருந்தார். தொடர்ந்து போராட்டம் நடந்து வந்தது.

மீண்டும் பாகிஸ்தான் போர்

பாகிஸ்தான் அரசு சுதந்திரம் அடைந்த பிறகு கிழக்கு பாகிஸ்தானுக்கு குறைந்த அளவு நிதி உதவி கொடுத்து வந்தது. அதனால் நாடு வளர்ச்சி அடையவில்லை என்று கிழக்கு பாகிஸ்தான் மக்கள் கண்டித்தனர். வங்காள மொழியை ஆட்சி மொழியாகவும் அமல்படுத்தாமல் இருந்தார்கள். அதனால் கிழக்கு பாகிஸ்தான் மக்கள் வெறுப்பு அடைந்தனர்.

1970-ல் நடந்த தேர்தலில் கிழக்கு பாகிஸ்தானின் அவாமி லீக் கட்சி, நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்றது, ஆனாலும் மேற்கு பாகிஸ்தான் அவாமி லீக் தலைவரை பதவி ஏற்க அனுமதிக்கவில்லை.

இதே ஆண்டில் போலா சூறாவளி தாக்கி 3,00,000 கிழக்கு பாகிஸ்தான் மக்கள் உயிரிழந்தனர். இந்த அழிவுக்கு மேற்கு பாகிஸ்தான் சரியாக நிதி உதவி கொடுக்கவில்லை என்று கிழக்கு பாகிஸ்தான் மக்கள் குற்றம்சாட்டினர். இதைப் போல பல நிகழ்வுகளால் கிழக்கு பாகிஸ்தானில் விடுதலைப் போராட்டம் தொடங்கியது. மேற்கு பாகிஸ்தானுக்கு எதிராக முக்தி பாஹினி என்ற எதிர்ப்பு ராணுவம் உருவாக்கப்பட்டது.

1971, மார்ச் 26-ம் தேதி விடுதலைப் போராட்டத்தை நிறுத்த பாகிஸ்தான் ராணுவம் தாக்கியது. உடனே பாகிஸ்தான் கப்பல்கள் மற்றும் பொருளாதார மையங்கள் மீது முக்தி பாஹினி தாக்குதலில் இறங்கியது. இந்தப் படைகளுக்கு இந்தியா உதவி செய்தது. அதனால் அமெரிக்காவும், சீனாவும் பாகிஸ்தானுக்கு உதவி செய்தன.

அந்த தைரியத்தில், டிசம்பரில் பாகிஸ்தான் இந்தியா மீது தாக்கியது. இந்திராவின் உறுதியான நடவடிக்கையால், 13 நாட்களிலேயே போர் முடிந்து, இந்தியாவும் முக்தி பாஹினியும் வெற்றி பெற்றன.

டிசம்பர் 16-ம் தேதி பாகிஸ்தான் தளபதி நியாஜி சரணடைந்தார். அதனால் கிழக்கு பாகிஸ்தான், 'வங்காள தேசம்' எனும் தனிநாடாக விடுதலை அடைந்தது. இந்தப் போரால் இந்திராவின் செல்வாக்கு, நாடு எங்கும் உயர்ந்தது. இந்த செல்வாக்கை அடுத்த தேர்தலில் சரியானபடி பயன்படுத்திக் கொண்டார் இந்திராகாந்தி.

https://t.me/tamilpdfebooks

1971 பொதுத் தேர்தல்

பெரும்பான்மை பலம் இழந்திருந்த இந்திராகாந்தி, தி.மு.க. மற்றும் சி.பி.எம். ஆதரவுடன் இரண்டு ஆண்டுகள் பதவியில் நீடித்தார். ஆனால், தொடர்ந்து ஏற்பட்ட பிரச்னையால் பதவிக் காலம் முடிய ஒரு வருடம் இருக்கும்போதே ஆட்சியைக் கலைத்து விட்டுத் தேர்தலை சந்தித்தார்.

'வறுமையை ஒழிப்போம்' என்ற கோஷத்துடன் களம் இறங்கினார் இந்திராகாந்தி. இவரை எதிர்த்து ஸ்தாபன காங்கிரஸ் சார்பில் மொரார்ஜி தேசாய், காமராஜர், நிஜலிங்கப்பா ஆகியோர் ஒன்று சேர்ந்து எதிர்த்து நின்றார்கள்.

518 தொகுதிகளில் தேர்தல் நடந்தது. இதில் 352 தொகுதிகளில் இந்திராகாந்தி அமோக வெற்றி பெற்றார். எதிர்த்து நின்ற ஸ்தாபன காங்கிரஸ் கட்சிக்கு நாடு முழுவதும் 51 இடங்களே கிடைத்தன. மீண்டும் மெஜாரிட்டியுடன் ஆட்சியைப் பிடித்தார் இந்திராகாந்தி.

தமிழகத்தைப் பொறுத்தவரை, இந்திராகாந்தி முதன்முதலாக மாநிலக் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டணி வைத்தார். மொத்தம் 39 இடங்களுக்குத் தேர்தல் நடந்தது. இதில் ஒன்பது இடங்களில் மட்டும் காங்கிரஸ் நின்றது. மீதமுள்ள இடங்களையும், ஒட்டுமொத்த சட்டசபைத் தொகுதிகளையும் அப்படியே தி.மு.க-வுக்குத் தாரை வார்த்துக் கொடுத்தது.

இந்த தேர்தலின்போது ராஜாஜி தி.மு.க-வை விட்டு வெளியே வந்தார். அதனால் ராஜாஜியின் சுயராஜ்யா கட்சியுடன் இணைந்து தேர்தலை சந்தித்தது ஸ்தாபன காங்கிரஸ் கட்சி. மீண்டும் நாகர்கோவில் தொகுதியில் நின்றார் காமராஜர். அவர் ஒருவரைத் தவிர மற்ற அனைவருமே தோல்வியைத் தழுவினார்கள்.

சட்டசபைத் தேர்தலைப் பொறுத்தவரை 1969-ல் அண்ணாதுரை இறந்ததால், அவருக்குப் பின் மு.கருணாநிதி தமிழக முதல்வராக வந்திருந்தார். நாடாளுமன்றம் ஒரு வருடம் முன்னரே கலைக்கப் பட்டதும், தமிழக சட்டசபையையும் கலைத்துத் தேர்தலை நடத்தினார்.

தமிழக இந்திரா காங்கிரஸுக்குத் தலைவராக சி.சுப்பிரமணியம் செயல்பட்டு வந்தார். ஆனாலும் பலம் இன்றியே இருந்தது. அதனால் சட்டசபைத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் போட்டியிடவில்லை.

தி.மு.க. கூட்டணியில் இருந்த ராஜாஜி, மதுவிலக்குக் கொள்கையை தி.மு.க. அரசு தளர்த்தியதால், அதிலிருந்து வெளியேறினார். தி.மு.க-வுக்கு ஆதரவாக இந்திரா காங்கிரஸ், நாம் தமிழர் கட்சி, முஸ்லீம் லீக், ஃபார்வர்ட் பிளாக், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவை ஒன்று சேர்ந்தன.

எதிர்க் கூட்டணியில் ஸ்தாபன காங்கிரஸ் எனப்படும் நிறுவன காங்கிரஸ், சுயராஜ்யா கட்சி, குடியரசுக் கட்சி, சோஷலிஸ்ட் கட்சி மற்றும் தமிழ்நாடு உழைப்பாளர் கட்சி ஆகியவை இணைந்து போட்டியிட்டன. மொத்தம் 234 தொகுதிகளுக்குத் தேர்தல் நடந்தது.

https://t.me/tamilpdfebooks

இந்த தேர்தலில் 205 இடங்களில் தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்றது. எதிர்க் கூட்டணி மொத்தம் 21 இடங்களை மட்டுமே பெற்றது. முதல்வராக மு.கருணாநிதி பொறுப்பேற்றார். அவருடன் நெடுஞ்செழியன், ராஜாராம், அன்பழகன், அன்பில் தர்மலிங்கம், சாதிக்பாட்சா, சத்தியவாணி முத்து, கண்ணப்பன், மாதவன், என்.வி.நடராஜன், ஓ.பி.ராமன், சி.பா.ஆதித்தனார், பண்ருட்டி ராமச்சந்திரன் ஆகியோர் அமைச்சர்களாகப் பதவி வகித்தனர்.

காங்கிரஸ் கட்சியில் ஏற்பட்டிருந்த பிரிவு மற்றும் உட்கட்சி மோதலால் இந்தத் தோல்வியை காமராஜர் எதிர்பார்த்தே இருந்தார்; தோல்வியைப் பெருந்தன்மையாக ஏற்றுக் கொண்டார்.

காமராஜர் – கிருஷ்ணசாமி நாயுடு

விவசாயிகளுக்கான போராட்டம்

விவசாயிகளுக்கான மின்சார உயர்வைக் கண்டித்து தமிழகம் முழுவதும் 1972, ஜூலை 5-ம் தேதி விவசாயிகள் போராட்டம் கடுமையாக நடந்தது. தென் பகுதியில் ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம் மற்றும் சிவகாசி வட்ட பொதுமக்கள் மாட்டு வண்டியுடன் காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ.ரா.கிருஷ்ணசாமி நாயுடு தலைமையில் அறவழிப் போராட்டம் நடத்தினார்கள்.

இதைப் போலவே நாடு எங்கும் போராட்டம் நடத்த அனுமதி வழங்கி இருந்தார் காமராஜர். மாட்டு வண்டிகளை கட்டிக்கொண்டு விவசாயிகள் நாடு எங்கும் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்கள் மாட்டு வண்டியை நடுவழியில் நிறுத்தினர். இதனால் போக்குவரத்து மிகவும் சிக்கலாகி, அது நாடு எங்கும் எதிரொலித்தது.

போலீஸைக் கொண்டு இதை அடக்காமல், கட்சித் தொண்டர்களையும், ரவுடிகளையும் ஏவியது தி.மு.க. அரசு. அதனால் விவசாயிகள் மீது தாக்குதல் நடத்தியும், மாட்டு வண்டிகளை சேதப்படுத்தியும், ஆதரவாக மூடப்பட்டு இருந்த கடைகளை உடைத்தும் வெறியாட்டம் ஆடினார்கள். தடுத்த விவசாயிகள் கண்மூடித்தனமாகத்

https://t.me/tamilpdfebooks

தாக்கப்பட்டனர். ஆதரவு கொடுத்த காங்கிரஸ் தலைவர்களும் தாக்கப்பட்டார்கள். காங்கிரஸ் கட்சி அலுவலகங்கள் தீக்கிரையாயின. போராட்டத்தின் உச்சகட்டமாக 17 விவசாயிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

நிலைமை மோசமடைவதைக் கண்டு ஆவேசமானார் காமராஜர். அரசாங்கம் செய்யத் தவறிய செயல்களையும், முறை தவறி செய்த வன்முறையையும் சுட்டிக் காட்டிக் கண்டித்தார். விவசாயிகளுக்கு ஆதரவாக சென்னையில் மாபெரும் கண்டன ஊர்வலம் நடத்தி, ஊர்வலத்தின் முடிவில், "இந்தப் போராட்டத்தில் கைது செய்த அத்தனை விவசாயிகளையும் உடனடியாக விடுதலை செய்யவில்லை என்றால், உடனே என்னுடைய தலைமையில் மீண்டும் போராட்டம் நடைபெறும்" என்று அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

நிலைமை மிகவும் மோசமடைவதைக் கண்டு அரசு பணிந்தது. போராட்டத்தில் கைது செய்யப்பட்டு இருந்த அனைவரையும் உடனே விடுதலை செய்தது. விவசாயிகளின் சோகத்தால், வழக்கமாகக் கொண்டாடப்படும் தனது பிறந்தநாள் கொண்டாட்டத்துக்கு, அந்த வருடம் தடை விதித்தார் காமராஜர்.

அந்த ஆண்டு காந்திஜி பிறந்தநாளை அக்டோபர் 2-ம் தேதி சிறப்பாகக் கொண்டாட முடிவு செய்யப்பட்டது. அப்போது, 'விவசாயிகள் போராட்டத்தால் இந்த வருடம் காமராஜர் பிறந்தநாள் கொண்டாடவில்லை. அதனால் காந்தி பிறந்தநாள் கொண்டாட்டத்துக்கு ஒரு நாள் முன்னதாக, அதாவது அக்டோபர் 1-ம் தேதி காமராஜர் பிறந்தநாளைக் கொண்டாடுவோம். இரண்டாவது நாள் காந்தி பிறந்தநாளைக் கொண்டாடுவோம்' என்று காங்கிரஸ் தொண்டர்கள் முடிவு செய்தார்கள்.

காமராஜரை சந்தித்து தங்கள் முடிவை ஆசையுடன் சொன்னார்கள். அவ்வளவுதான், காமராஜருக்குக் கோபம் வந்து விட்டது. "யாருடைய பிறந்தநாளை காந்திஜியின் பிறந்தநாளுடன் சேர்த்துக் கொண்டாடுவது? அவர் எப்பேர்ப்பட்ட மகான்! ஆனால், நான் அப்படி அல்ல. அதெல்லாம் வேண்டாம்..." என்றார்.

"இன்று காந்திஜியின் கொள்கைப்படி வாழும் ஒரே தலைவர் நீங்கள் மட்டும்தான், அதை மக்களுக்கு நினைவுபடுத்தும் விதமாக மதுரையில் பிரமாண்டமாக கொண்டாடப் போகிறோம்" என்று மீண்டும் அழுத்தமாகச் சொன்னார் நெடுமாறன். மீண்டும் சம்மதம் சொல்ல மறுத்தார் காமராஜர்.

ஆனாலும் நெடுமாறன், "காந்திஜியின் கொள்கைகளை மக்களுக்குச் சிறந்த முறையில் எடுத்துச் சொல்ல வேண்டுமானால், இன்று வாழ்ந்துவரும் உங்களைக் காட்டினால்தான் நம்புவார்கள்" என்று சொல்லி ஒருவழியாக சம்மதிக்க வைத்தார். அதன்படி மதுரையில், 'காந்திஜிக்குப் பிறகு காமராஜர்' என்ற செய்தியுடன் மாபெரும் மாநாடு நடந்தது.

தமிழகத்தில் காங்கிரஸும், காங்கிரஸ் தொண்டர்களும் காமராஜர்

https://t.me/tamilpdfebooks

பக்கம்தான் இருக்கிறார்கள் என்பதை உறுதியுடன் காட்டிய மாநாடு அது.

அநீதிக்கு எதிரான போராட்டம்

1973-ல் காங்கிரஸ் கட்சி தி.மு.க. அரசை எதிர்த்து பகிரங்கப் போராட்டம் நடத்தியது. இந்த போராட்டத்துக்காக ஐந்து அம்ச கோரிக்கைகள் தயாரானது.

1. விலைவாசியைக் குறைத்தல்.

2. வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குதல்.

3. விவசாயிகள் பிரச்னையைத் தீர்த்தல்.

4. நெசவாளர் துயர் துடைத்தல்.

5. பரிபூரண மதுவிலக்கு

போன்ற கோரிக்கைகளை மையமாக வைத்து, 'புனிதன் வழி நின்று போராடுவோம்... புதிய பாரதம் படைப்போம்' என்று கோஷம் போட்டு போராடினார்கள்.

காமராஜர், அந்தப் போராட்டங்களைத் தொடங்கிவைத்து பேசும்போது, "நாட்டின் இன்றைய நெருக்கடிகளுக்கு, பொருளாதார அரசியல் சூழ்நிலைதான் காரணம். வேகமாகத் திட்டம் போட்டார்களே தவிர, வேலை வாய்ப்பு, உறைவிட வசதி ஏற்படவில்லை. ஏமாற்றுக்காரர்கள் நிறைந்துவிட்டதால், பண ஆசை, பதவி ஆசை வந்து நாடு சீரழிந்துவிட்டது.

நாம் காந்திய வழியில் அறப் போராட்டம் நடத்துவோம். நமது போராட்டத்தில் சத்தியம், நீதி, நேர்மை இருக்க வேண்டும். வன்முறை, பலாத்காரம் இருக்கக் கூடாது. அதனால் தொண்டர்கள் அமைதியுடன் போராட்டத்தில் ஈடுபட வேண்டும். போலீஸார் அடித்தாலும், துன்புறுத்தினாலும் தொண்டர்கள் தாங்கிக் கொள்ள வேண்டும். உங்களைக் கைது செய்தாலும், செய்யா விட்டாலும் போராடுங்கள். கைது செய்யப்பட்டால் தைரியமாக சிறைக்குச் செல்லுங்கள், சத்தியம் வெல்லும், தைரியமாக இருங்கள்" என்று அறைகூவல் விடுத்தார்.

போராட்டத்தில் முதல் நாளே 35,000 காங்கிரஸ் தொண்டர்கள் கைது செய்யப் பட்டனர். ஆனால், அனைவரையும் அடைக்க இடம் இன்றி, அன்றே விடுதலை செய்தனர்.

https://t.me/tamilpdfebooks

காமராஜருடன் எம்.ஜி.ராமச்சந்திரன்

அரசியலில் எம்.ஜி.ஆர்.

காங்கிரஸ் அபிமானியாக இருந்து தி.மு.க-வுக்கு மாறியவர் எம்.ஜி.ராமச்சந்திரன் என்ற எம்.ஜி.ஆர். கருணாநிதியும், எம்.ஜி-ஆரும் திரைத்துறையிலும், அரசியலிலும் நண்பர்களாக இருந்தார்கள். அண்ணாவுக்குப் பிறகு யார் முதல்வர் என்ற கேள்வி எழுந்தபோது, கருணாநிதி முதல்வராவதற்கு முழு ஆதரவு கொடுத்தார்.

தி.மு.க-வின் பொருளாளராக ஐந்து ஆண்டுகள் இருந்தார். தி.மு.க. அமைச்சரவையுடன் கருத்து வேறுபாடு ஏற்படவே, மந்திரி பதவி கேட்டார் எம்.ஜி.ஆர். ஆனால், சினிமாவில் நடித்துக்கொண்டு இருந்ததால், அமைச்சர் பதவி தர முடியாமல், சினிமாவை விட்டு அவரை வெளியே வரச் சொன்னார் கருணாநிதி. இதில் தொடங்கியது முதல் பிரச்னை.

தி.மு.க. ஆட்சி மீது கோபம்கொண்ட எம்.ஜி.ஆர்., கட்சியில் நிலவும் குறைபாடுகளைக் கண்டு, பொதுக் குழுக் கூட்டத்தில் கணக்குக் கேட்டார். சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் சொத்துக் கணக்கைப் பற்றி கேள்வி எழுப்பினார். 'பொருளாளரின் வேலை கணக்குக் காட்டுவதுதானே தவிர, கணக்குக் கேட்பதில்லை' என்று கட்சி கோபமடைந்தது. இதனால் தி.மு.க-வில் கொந்தளிப்பு ஏற்பட்டது. ஆகவே, 1972, அக்டோபர் 10-ம் தேதி எம்.ஜி.ஆர். கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

கட்சியிலிருந்து வெளியேறியதும் என்ன செய்வது என்று புரியாமல் திருமலைப்பிள்ளை சாலையில் இருந்த காமராஜர் வீட்டுக்கு வந்தார். அப்போது காமராஜருடன் சிவாஜி கணேசன் மிகவும் நெருக்கமாக இருந்தார். அதனால் எம்.ஜி-ஆரைக் கட்சியில் சேர்க்க நினைக்கவில்லை. அன்று குழப்பத்தில் இருந்த எம்.ஜி-ஆரை, காமராஜர் நினைத்திருந்தால் காங்கிரஸில் சேர்த்திருக்க முடியும். ஆனால், தி.மு.க-வின் மீது இருந்த வெறுப்பு மற்றும் சினிமா மாயை மீதான

https://t.me/tamilpdfebooks

அபிமானம் இன்மையால் அதை காமராஜர் விரும்பவில்லை.

அதற்குப்பின் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்த கல்யாணசுந்தரம் போன்றவர்கள் எம்.ஜி-ஆரை வழிநடத்திச் சென்று புதிய கட்சி ஆரம்பிக்கத் துணை நின்றார்கள். அவர் ஆரம்பித்த கட்சிதான், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். தன் அரசியல் வெற்றிக்குத் திரைத்துறையை மிகவும் சிறப்பாக பயன்படுத்திக் கொண்டார் எம்.ஜி.ஆர்.

மக்கள் எம்.ஜி-ஆரைத் தங்கள் வாழ்க்கைத் துன்பங்களைத் தீர்க்கவந்த சூப்பர்மேன் என்றே நம்பினார்கள், ஆதரவு கொடுத்தார்கள்.

பெரியார் மரணம்

எதிர் முகாமில் இருந்தாலும் என்றென்றும் காமராஜருக்கு ஆதரவு கொடுத்த தலைவர் பெரியார்தான். காமராஜர் முதல்வர் பதவிக்கு வந்தபோது மனம் திறந்து பாராட்டியதும் அவர்தான். தேர்தல்களில், கேட்காமலேயே காமராஜருக்குத் திராவிடக் கழகத்தின் ஆதரவை வழங்கியதும் அவர்தான். அதைப் போலவே, காமராஜர், கே பிளானைத் தயார் செய்து பதவியை உதறியபோது, 'இது தற்கொலை முயற்சி' என்று எச்சரிக்கை செய்ததும் பெரியார்தான். இருவருக்கும் இருந்த உறவு புனிதமானது. இருவரும் அடிக்கடி நேரில் சந்தித்துக்கொள்ள வாய்ப்பில்லை. ஆனாலும் அவர்களுக்குள் அன்பு இருந்தது.

காமராஜர் முதல்வராக இருந்தபோது, விருதுநகரில் பேசுவதற்காகப் போயிருந்தார் பெரியார். அப்போது அவரிடம், "நீங்கள்தான் காமராஜருக்கு ஆதரவாக இருக்கிறீர்கள். அவருடைய தாயார் உங்களைப் பார்க்க விரும்புகிறார், அழைத்து வரலாமா?" என்று கேட்டார்கள்.

உடனே பெரியார், "அவர்களை வரவழைத்துப் பார்ப்பது நன்றாக இருக்காது. நானே நேரில் போய்ப் பார்க்கிறேன்" என்று விருதுநகருக்குப் புறப்பட்டுச் சென்றார். திடீரென பெரியாரை எதிர்பார்க்காத சிவகாமி பாசமாக வரவேற்றார்.

பெரியாரின் கொள்கைகளை அறியாமல், "நீங்க பெரிய சாமியார் மாதிரி இருக்கீங்க. அதனால்தான் நீங்க சொன்னா என் பையன் தட்டாம கேட்குறதா சொல்றாங்க. என் பையனை நல்லா பார்த்துக்கோங்கய்யா" என்று கேட்டுக்கொண்டார். பெரியார் சந்தோஷமாகச் சிரித்தபடி கிளம்பினார்.

பெரியார் மீது காமராஜர் எவ்வளவு பற்று வைத்திருந்தார் என்பதற்கு 1956-ல் நடந்த ஒரு சம்பவத்தைக் கூறலாம்.

தந்தை பெரியாருக்கு மலேசியா, -சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலிருந்து அழைப்பு வந்தது. அதன்படி முதலில் பர்மாவுக்கு போய் பின்னர் அங்கிருந்து மலேசியாவின் பினாங்கு பிறகு சிங்கப்பூர் எனப் பயணம் செய்வதாகத் திட்டம் வகுக்கப்பட்டது.

பெரியாருடன் நால்வர் செல்வதாக இருந்தது. அனைவருக்கும் விசா

https://t.me/tamilpdfebooks

எடுத்து, அடுத்த நாள் பயணம் என்ற நிலையில் எஸ்.எஸ்.ரஜுலா என்கிற புகழ்பெற்ற கப்பல் கம்பெனியில் டிக்கெட் எடுக்கப் போனார்கள். அப்போதுதான், 'கப்பலில் பயணம் செய்ய வேண்டும் என்றால் மாநில அரசு கொடுக்கும் 'நோ அப்ஜெக்ஷன் சர்டிபிகேட்' வேண்டும்' என்பது தெரியவந்தது.

அப்போதே மாலை 6 மணி. அடுத்த நாள் காலை 7 மணிக்குக் கப்பலில் புறப்பட வேண்டும்.

இரவுக்குள் தமிழக அரசின் தலைமைச் செயலாளரிடம் சான்றிதழ் பெறுவது நடக்கிற காரியமா என்று பயணத்தை ஏற்பாடு செய்தவர்கள் மிரண்டு போனார்கள். பெரியாரிடம் சொன்னால் கோபப்பட்டு பயணத்தை ரத்து செய்துவிடுவார் என்று, தகவலை மணியம்மையிடம் சொன்னார்கள்.

சற்று யோசித்த மணியம்மை, "நீ உடனே முதலமைச்சர் காமராஜரைப் போய்ப் பார். அவரால் உடனே ஏற்பாடு செய்ய முடியும். ஐயாகிட்டே இதை எல்லாம் சொல்லிக்கிட்டு இருக்காதே. அவர் சத்தம் போடுவார். முதலைமைச்சருக்கு தொந்தரவு கொடுக்கக் கூடாது என்பார்" என்று சொன்னார்.

உடனே இரவு 8 மணிக்கு திருமலைப்பிள்ளை சாலை காமராஜர் வீட்டுக்கு போய்த் தகவலைச் சொன்னார்கள்.

கொஞ்சநேரம் யோசித்த காமராஜர், "சரி நீ நாளைக்குக் காலைல பத்து மணிக்கு வா. நான் சீல் போட்டுக் கொடுக்கச் சொல்றேன்" என்றார்.

காலை 7 மணிக்கு கப்பல் புறப்படும் தகவல் சொல்லப்பட்டது.

பெரியார் மறைந்த போது...

காமராஜர் உடனே, "அட என்னப்பா நீ? போகப்போறது பெரியார்! அவர் சாதாரண ஆளில்லை. கப்பலை நிக்கச்சொல்லி மத்தியானமா எடுக்கச் சொல்வோம்! போ போ... காலைல வா!" என்றார்.

https://t.me/tamilpdfebooks

இதெல்லாம் நடக்கிற காரியமா என தயக்கத்தோடு நின்றார்கள். உடனே காமராஜர் அங்கிருந்த உதவியாளர்களிடம், "ரஜுலா கப்பல் சதக் தம்பி மரைக்காயருக்கு போனைப் போடு" என்றார். தொலைபேசித் தொடர்பை ஏற்படுத்தி அவரிடம் கொடுத்தனர்.

"இந்தாப்பா... நாளைக்கு பெரியார் பர்மாவுக்கு போறாரு. அவருக்கு அரசாங்க அனுமதி 12 மணிக்குத்தான் கெடைக்கும். அவர் கப்பலுக்கு வந்து சேர 1 மணி ஆயிடும். நீங்க என்ன பண்றீங்க... நாளைக்கு மட்டும் கப்பல் மதியம் ரெண்டு மணிக்கு எடுங்க. பயணிகளிடம் முன்கூட்டியே அறிவிச்சுடுங்க. மற்ற பயணிகளுக்கும் தொல்லை இருக்காதில்லையா? ஞாபகம் இருக்கட்டும்.. போறது நம்ம பெரியார்... புரியுதான்னேன்" என்று உரிமையோடும் அதிகாரத்தோடும் பேசினார்.

அதன்பிறகு காத்துக்கொண்டு நின்றவர்களிடம், "என்னய்யா இப்போதாவது தைரியம் வந்துச்சா. புறப்படுங்க. கவலையே வேண்டாம். கப்பலையே நிறுத்திப்புடுவோம்!" என்றார். சொன்னபடியே அடுத்தநாள் சர்டிபிகேட் வாங்கிக் கொடுத்து, மதியம் கப்பலை செல்ல வைத்தார். ஆனால், இந்த விவகாரம் எதுவுமே பெரியாருக்குத் தெரியாது.

முதல்வர் என்ற அதிகாரத்தில் அன்று இரவே அதிகாரிகளை வீட்டுக்கு வரவழைத்து சான்றிதழ் வழங்கி இருக்க முடியும். அது அதிகார துஷ்பிரயோகம் என்பதால், அதைச் செய்யாமல் மாற்று வழியில் பெரியார் பயணத்துக்கு ஏற்பாடு செய்தார் காமராஜர்.

‘‘காமராஜர் ஒரு பச்சைத் தமிழன்’’ என்று காமராஜரைப் பற்றி பெரியார் பல இடங்களில் பேசி இருக்கிறார்.

"காமராஜர் பதவியை நம்பி வாழ்பவர் அல்ல. தன்னாலானதை மக்களுக்குச் செய்வோம் என்று நினைத்துக் கொண்டு செய்பவர். காலுக்கு ஆகாத செருப்பைக் கழற்றி எறிவது போல, நம் மக்களுக்குத் தொண்டு செய்ய இடம் தராத பதவியை அவர் விரும்புவதில்லை. காரணம் அவர் பெண்டு, பிள்ளை, குட்டி இல்லாதவர். யாருக்கும் சொத்து சேர்க்க வேண்டும் என்ற அவசியமும் இல்லாதவர். எந்த அரசியல் கட்சியை எடுத்துக் கொண்டாலும், அவரைப் போல ஓர் ஆளைக் காட்ட முடியாது.

தமிழ்நாட்டின் சரித்திரத்தில், ஏன் இந்தியாவின் சரித்திரத்தில் காமராஜரின் காலம் ஒரு பொற்காலம். இந்திய அரசியலில் காமராஜருக்கு நிகராக ஒருவரைச் சொல்லமுடியாத அளவுக்கு உச்சநிலையைப் பெற்றவர்" என்று செல்லும் இடமெல்லாம் காமராஜரைப் பாராட்டியே பேசுவார்.

கல்வி சம்பந்தப்பட்ட எந்த நிகழ்ச்சி ஆரம்பித்தாலும், ‘‘கடவுள் வாழ்த்துச் சொல்வதை நிறுத்திவிட்டு, காமராஜருக்கு வாழ்த்து சொல்வதுதான் முறை’’ என்பார் பெரியார்.

94-வது வயதில், பெரியார் சென்னை அரசு மருத்துவமனையில் உடல் நலமின்றிப் படுத்திருக்கிறார் என்ற செய்தி கிடைத்ததும் ஓடோடிப் போய் பார்த்தார் காமராஜர். அதன்பிறகு வேலூர் சி.எம்.சி.

https://t.me/tamilpdfebooks

மருத்துவமனையில் சிகிச்சை நடந்தது.

1973, டிசம்பர் 24-ம் தேதி காலையில் பெரியார் மறைந்த செய்தி கேட்டதும் கலங்கிப் போனார் காமராஜர்.

வேலூரிலிருந்து பெரியார் உடல் சென்னை ராஜாஜி மண்டபத்துக்கு வரும் முன்னரே காமராஜர், அங்கே போய்க் காத்திருந்தார்.

பெரியார் உடல் ராஜாஜி மண்டபத்துக்குள் வந்ததும் எழுந்து நின்று வணங்கினார் காமராஜர். மறுநாள் நடந்த இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டு நடந்தார். காமராஜரின் மனதைப் பாதித்த மரணங்களில் பெரியாரின் மரணமும் ஒன்று.

தாய் இறந்தபோதுகூட அசட்டையாக இருந்த காமராஜர், பெரியாரின் இழப்பில் மனம் உடைந்து போனார்.

மன மாற்றம்

1974-ல் புதுவை மாநில சட்டமன்றப் பொதுத் தேர்தல் நடந்தது. அந்த சமயம் காங்கிரஸ் இரண்டு கட்சிகளாகப் பிரிந்து நின்றதால், எதிரிகளுக்குத்தான் ஆதாயம், புதுவையில் மட்டும் இரண்டு காங்கிரஸும் கூட்டணி அமைத்துப் போட்டியிடலாம் என்று காங்கிரஸ் தலைவர்கள் விரும்பினார்கள்.

அந்த நேரத்தில் இந்திராகாந்தியும், இரண்டு காங்கிரஸும் இணைவதில் அக்கறை காட்டி வந்தார். அதனால் அதற்கு முன்னோட்டமாக புதுவையில் மட்டும் இரண்டு காங்கிரஸும் இணைந்து போட்டியிட்டன.

இந்திராகாந்தியும், காமராஜரும் கூட்டாக ஹெலிகாப்டரில் சென்று தேர்தல் பிரசாரம் செய்தார்கள். ஆனால், அந்த நேரம் புதிய கட்சி தொடங்கி இருந்த எம்.ஜி.ஆரின் மீது மக்களுக்கு இருந்த எதிர்பார்ப்பால் இந்தக் கூட்டணிக்கு பெரும்பான்மை கிடைக்கவில்லை. தேர்தலில் வெற்றி அடைந்தால் உடனே இணைப்பு நடப்பதாக இருந்தது. ஆனால், தோல்வியால் இரண்டு கட்சிகளின் இணைப்பும் நடக்கவில்லை.

காமராஜரை அதிரவைத்த நெருக்கடி நிலை

ரேபரேலி தொகுதியில் இந்திராகாந்தி வெற்றிபெற்றது செல்லாது என்று அலகாபாத் நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது.

அடுத்து என்ன நடக்குமோ என்று மக்கள் கவலை அடைந்தனர். கோர்ட் தீர்ப்பைத் தொடர்ந்து, பதவியை ராஜினாமா செய்து விடுவது என்று இந்திராகாந்தி முதலில் முடிவு செய்தார். ஆனால், அதை மேற்கு வங்க முதல் மந்திரியாக இருந்த சித்தார்த்த சங்கர் ரே தடுத்து நிறுத்தினார்.

"இந்த நேரம் நீங்கள் ராஜினாமா செய்தால் இந்தியா முழுவதும் குழப்பம் ஏற்படும். எனவே, பொறுமையுடன் இருங்கள். இந்திய அரசியல் சட்டத்தை ஆராய்ந்து அடுத்து என்ன செய்யலாம் என்று கூறுகிறேன்"

https://t.me/tamilpdfebooks

என்று கூறினார் ரே. அவர் அரசியல் சட்டத்தை நுட்பமாக ஆராய்ந்து, "நீங்கள் பதவியில் நீடிக்கலாம் என்று கோர்ட் அறிவித்து இருக்கிறது. எனவே, ராஜினாமா செய்ய அவசியம் இல்லை" என்று தெரிவித்தார். அப்போது, உளவுத் துறையிடம் இருந்து வந்த தகவல்களை இருவரும் ஆராய்ந்தனர்.

'இந்திராகாந்திக்கு எதிராக ராணுவத்தினரும், போலீஸாரும் புரட்சி நடத்தவேண்டும்' என்று ஜெயப்பிரகாஷ் நாராயண் ஆவேசமாகப் பேசி இருந்தார். மேலும், இந்திராகாந்தி ராஜினாமா செய்யவில்லை என்றால் முற்றுகைப் போராட்டம் நடத்த இருப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

உடனே ரே, "நீங்கள் பதவி விலகினால், உங்கள் ஆதரவாளர்கள் கிளர்ச்சி செய்வார்கள். சும்மா இருந்தால் எதிர்க் கட்சிகள் கலவரம் செய்வார்கள். உள்நாட்டுக் கலவரம் ஏற்படாமல் தடுக்க இந்தியா முழுவதும் நெருக்கடி நிலை பிரகடனம் செய்வதுதான் ஒரே வழி" என்றார். நீண்ட நேரம் இந்திராகாந்தி ஆலோசனை நடத்தினார். பிறகு ஜனாதிபதி மாளிகைக்கு சென்று ஜனாதிபதி ஃபக்ருதீன் அலி அகமதை சந்தித்து, உளவுத் துறையிடமிருந்து வந்த தகவல்களைத் தெரிவித்தார்.

"உள்நாட்டுக் கலவரம் வெடிக்கக் கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது. எனவே, நெருக்கடி நிலை பிரகடனம் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது" என்று கேட்டுக்கொண்டார். ஜனாதிபதி சில விளக்கங்கள் கேட்டு தெளிவு பெற்றார். அதன்பிறகு, நெருக்கடி நிலை பிரகடனத்தில் கையெழுத்திட சம்மதித்தார்.

அந்தக் காலகட்டத்தில் இந்திராகாந்தியின் இளைய மகன் சஞ்சய் காந்தி அரசியலில் பங்குகொண்டு இருந்தார். தாயாருக்கு அவர் ஆலோசனைகள் கூறுவது வழக்கம். நெருக்கடி நிலைமை பிரகடனம் ஆகப்போகிறது என்று தெரிந்துகொண்டதும் அவர், "நெருக்கடி நிலை கொண்டு வந்தால் மட்டும் போதாது. எதிர்க் கட்சித் தலைவர்கள் வெளியே இருந்தால் முன்பைவிட அதிகத் தீவிரமாகக் கலவரத்தில் ஈடுபடுவார்கள். எனவே, இரவோடு இரவாக அவர்கள் அனைவரையும் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும். அப்போதுதான் பிரச்னை இல்லாமல் இருக்கும்" என்று சொன்னார்.

இந்திராகாந்தி, நீண்ட ஆலோசனைக்குப் பிறகு தலைவர்களைக் கைது செய்யவும், பத்திரிகைத் தணிக்கைக்கும் சம்மதித்தார்.

அதன்படி 1975 ஜூலை 26-ம் தேதி நெருக்கடி நிலை நாட்டில் பிரகடனப்படுத்தப்பட்டது.

தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயணை நள்ளிரவில் போலீஸார் தட்டி எழுப்பி கைது செய்தனர். அடுத்து மொரார்ஜி தேசாய், வாஜ்பாய், ஜார்ஜ் பெர்னாண்டஸ், லல்லுப்பிரசாத் யாதவ் உட்பட இந்தியா முழுவதும் எதிர்க் கட்சித் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். தமிழ்நாட்டில் தி.மு.க. தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டனர். நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்டபோதே பத்திரிகைத் தணிக்கையும் அமலுக்கு வந்துவிட்டதால், தலைவர்கள் கைது பற்றிய விவரங்கள் பத்திரிகைகளில் இடம் பெறவில்லை.

https://t.me/tamilpdfebooks



அன்று காலை 6 மணிக்கு மந்திரி சபைக் கூட்டம் இருப்பதாக காலை 5 மணிக்குத்தான் மந்திரிகளுக்கு போன் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்படி 6 மணிக்கு மந்திரிகள் கூடினார்கள். நெருக்கடி நிலை பிரகடனம் செய்ய வேண்டிய அவசியத்தை இந்திராகாந்தி விளக்கினார்.

"நெருக்கடி நிலையைக் காலதாமதம் இன்றி உடனடியாகப் பிரகடனம் செய்யவேண்டி இருந்ததால், மந்திரிசபைக் கூட்டத்தை முன்னதாகக் கூட்டி ஒப்புதல் பெற முடியவில்லை" என்று கூறிய இந்திராகாந்தி, நள்ளிரவில் தலைவர்கள் கைது செய்யப்பட்ட விவரத்தையும் தெரிவித்தார். சில மந்திரிகளுக்கு இது அதிர்ச்சியை அளித்தாலும் தங்கள் கருத்தை வெளியிட தைரியம் இன்றி மௌனமாக இருந்தனர். பின்னர், நெருக்கடி நிலை பிரகடனத்துக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துவிட்டதாக அறிவிப்பு வெளியானது.

நெருக்கடி நிலைப் பிரகடனம் செய்யப்பட்டது குறித்து, ரேடியோவில் இந்திராகாந்தி பேசினார். அப்போது, "சட்டத்தை மதிக்கும் பிரஜைகளின் உரிமைகளை நெருக்கடி நிலை எந்தவிதத்திலும் பாதிக்காது என்று உறுதியளிக்கிறேன். கூடிய விரைவில் நெருக்கடி நிலையை ரத்து செய்யும் அளவுக்கு உள்நாட்டு நிலைமையில் அபிவிருத்தி ஏற்படும் என்று நம்புகிறேன்" என்று பேசினார்.

நெருக்கடி நிலை அமலுக்கு வந்தபின் இந்திராகாந்தி தன்னுடைய 20 அம்ச திட்டத்தை அறிவித்தார். விலைவாசியைக் குறைப்பது, நில உச்சவரம்பைக் கொண்டு வருவது, ஏழைகளுக்கு வீட்டுமனை வழங்குவது, குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு வருமான வரிச் சலுகை, பாடப் புத்தகங்களை குறைந்த விலையில் வழங்குவது

https://t.me/tamilpdfebooks

முதலியவை 20 அம்ச திட்டத்தின் முக்கிய அம்சங்கள். நெருக்கடி நிலைக்கு ஒப்புதல் அளிக்கும் தீர்மானத்தின் மீது பாராளுமன்றத்தில் ஜூலை 22-ம் தேதி ஓட்டெடுப்பு நடந்தது. நெருக்கடி நிலைக்கு ஆதரவாக 336 ஓட்டுகளும், எதிராக 59 ஓட்டுகளும் பதிவாயின.

நெருக்கடி நிலை அமலில் இருந்தபோது, அதிகாரி, ஊழியர் ஆகியோர் சரியான நேரத்துக்கு வேலைக்கு வந்தனர். முழு நேரமும் அக்கறையுடன் வேலை செய்தனர். வேலை நிறுத்தம், முழு அடைப்பு ஆகியவை இல்லை. கள்ள மார்க்கெட் ஒழிந்தது. அதே சமயம் சஞ்சய் காந்தி அதிகாரத்தைத் தன் கையில் எடுத்துக் கொண்டு, தன் விருப்பப்படி எல்லாம் உத்தரவு பிறப்பித்தார். பிறப்பு விகிதத்தைக் குறைப்பதற்காக, வட இந்தியாவில் கட்டாயமாகப் பலர் கருத்தடை செய்யப்பட்டனர்.

நெருக்கடி நிலை அமலுக்கு வந்த ஐந்து மாதத்துக்குள் இந்தியா எங்கும் சுமார் 37 லட்சம் பேர் கருத்தடை செய்யப்பட்டனர். கருத்தடைக்கு ஆள் பிடிக்கும்படி ஆசிரியர்கள் கட்டாயப்படுத்தப் பட்டனர். அப்போது பத்திரிகைத் தணிக்கை அமலில் இருந்ததால் நெருக்கடி நிலை அத்துமீறல்களைப்பற்றி செய்தி எதுவும் வெளியாகவில்லை. நெருக்கடி நிலை ரத்தான பிறகு இதுபற்றிய செய்திகள் வெளியாயின. நெருக்கடி நிலையை காமராஜர் எதிர்த்தார்.

திருத்தணியில் நடந்த பொதுக்கூட்டத்தில் நெருக்கடி நிலையைக் கண்டித்து பகிரங்கமாகப் பேசினார். அதனால் காமராஜர் கைது செய்யப்படலாம் என்ற கருத்து நிலவியது. பெருந்தலைவர்கள் எல்லாம் ஜெயிலில் இருந்ததால் காமராஜரும் கைதாகத் தயாராகவே இருந்தார். ஆனாலும் கைது நடக்கவில்லை.

"வெள்ளையர்களை எதிர்த்துப் போராட்டம் நடத்தியதைப் போல மீண்டும் நம்மவர்களை எதிர்த்தே போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம்" என்று வேதனையுடன் கூறினார் காமராஜர்.

https://t.me/tamilpdfebooks

9

இறுதி நிகழ்வுகள் - 1975

காமராஜர் எளிய உணவை மட்டுமே சாப்பிடுபவர். வேறு கெட்ட பழக்கம் எதுவும் இல்லாதவர். உடலை நன்றாகவே கவனித்து வந்தவர் என்றாலும் அவருக்கு சர்க்கரை நோயும், ரத்தக்கொதிப்பும் இருந்தன. அதனால் மிகவும் கவனமாகவே இருந்தார்.

இந்திராகாந்தி கொண்டுவந்த எமர்ஜென்ஸி காமராஜரை மிகப்பெரிய சோகத்தில் தள்ளியது. மீண்டும் ஒரு முறை, இந்தியாவில் சுதந்திரத்துக்காகப் போராட வேண்டிய அவசியம் வந்துவிட்டதே என்று மிகவும் வருந்தினார். அந்த வேதனை அவருடைய உடல் நலனையும் பாதித்தது. அவ்வப்போது காய்ச்சல் வந்தது. சில சமயம் 108 டிகிரி வரை காய்ச்சல் ஏற்படும். உடல் தள்ளாடவே, உடல் நலம் தேறும் வரை வெளியே செல்வதைக் குறைத்துக் கொண்டார்.

உடல் நலம் நன்றாக இருந்த வரை மாடியில் இருந்த சின்னஞ்சிறிய அறையில் தனியே தூங்கினார். அதன் பிறகு தன் படுக்கையைக் கீழ் அறைக்கு மாற்றிக்கொண்டார்.

1975 அக்டோபர் 1.

காலை ஒன்பது மணிக்கே குளித்து முடித்தார், காமராஜர். இன்சுலின் ஊசி போடும் மருத்துவர் ஜெயராமன், வழக்கம்போல் வந்து உடலைப் பரிசோதித்து ஊசி போட்டுவிட்டுப் போனார்.

அன்று சிவாஜி கணேசனுக்குப் பிறந்த நாள். உடல் நிலை சரியில்லாததால் போகவேண்டாம் என்று நினைத்தார். ஆனாலும், காலையில் எழுந்து தயாராகிவிட்டதாலும், உடல் ஓரளவு பரவாயில்லை என்பது போல இருந்ததாலும், பா.ராமச்சந்திரனை அழைத்துக்கொண்டு மாலையுடன் போய் சிவாஜி கணேசனை வீட்டில் சந்தித்து, வாழ்த்திவிட்டுத் திரும்பினார். வரும்போதே உடல் மீண்டும் சோர்ந்து இருந்தது. அதனால், அன்று வேறு எந்த அலுவல்களும், சந்திப்புகளும் வைத்துக்கொள்ளவில்லை. முழுமையாக ஓய்வு எடுத்துக்கொண்டார்.

https://t.me/tamilpdfebooks

அடுத்த நாள் காந்திஜி பிறந்த நாள். அன்றைய தினம் மக்களுக்கு முக்கிய அறிவிப்பு வெளியிட இருப்பதாக இந்திராகாந்தி அறிவித்து இருந்தார். அநேகமாக, இந்திராகாந்தி எமர்ஜென்சியை வாபஸ் வாங்கிவிடுவார் என்று காமராஜர் நம்பினார். அதைக் குறித்து காங்கிரஸ் தலைவர்கள் சிலருடன் பேசினார். ஒருவேளை எமர்ஜென்சியை வாபஸ் வாங்கவில்லை என்றால், தீவிரமான போராட்டங்களை அறிவிக்க வேண்டும் என முடிவு செய்திருந்தார். அதைக் குறித்து சில தலைவர்களிடம் பேசினார். மாத்திரைகளைப் உட்கொண்டுவிட்டுத் தூங்கினார்.

1975, அக்டோபர் 2.

காலையில் வழக்கம் போல 6.30 மணிக்கு எழுந்தார். உடல் குணமடைந்து நன்றாக இருப்பதாகத் தெரிந்தது. அன்றைய நாளிதழ்களை முழுவதுமாகப் படித்தார். குளித்து முடித்து, காலை உணவு சாப்பிட்டார். எப்போதும் போல், டாக்டர் ஜெயராமன் வந்து, உடலைப் பரிசோதித்துவிட்டு, இன்சுலின் ஊசி போட்டு விட்டுச் சென்றார்.

அன்று காந்தி ஜெயந்தி ஆதலால், காந்திஜி படத்துக்கு மாலை போட்டுவிட்டு, வணங்கினார். சில நிமிடங்கள் காந்திஜி படத்தைப் பார்த்தபடியே நின்றார்.

காமராஜரைப் பார்க்க கல்லூரி மாணவர்கள் வந்தார்கள். அவர்களுடன் பேச அறையில் இடமில்லாததால், வெளி அறைக்கு வந்து, நின்று பேசினார். ஆனால், அதற்குள் உடல் களைப்பானது. அதனால், அவர்களுடன் தொடர்ந்து உரையாட முடியாமல் விடைபெற்றுக்கொண்டு வந்து, மீண்டும் படுத்தார்.

டெல்லியில் இந்திராகாந்தியின் செயல்பாடுகளைக் கேட்டறிந்தார். அன்று பத்திரிகை நிருபர்களை சந்தித்த இந்திரா காந்தி, எமர்ஜென்சியை வாபஸ் வாங்குவது குறித்து எதுவும் தெரிவிக்கவில்லை என்ற தகவல் தெரியவரவே பெரும் ஏமாற்றம் அடைந்தார். மேலும், அன்றைய தினம் காந்தியவாதியான கிருபளானி கைது செய்யப்பட்டதை அறிந்து அதிர்ச்சி அடைந்தார்.

‘திருந்த மாட்டாங்க... போராட்டம் அறிவிக்க வேண்டியதுதான்’ என்று முடிவு செய்தார். சில காங்கிரஸ் தலைவர்களை அழைத்தார்.

வழக்கம் போல மதிய உணவு சாப்பிட்டார். அன்று பாவக்காய் கறி, முளைக் கீரை மசியல், மோர் சாதம் போன்றவற்றை உதவியாளர் வைரவன் பரிமாறினார். உணவு அருந்தியபோதே வியர்த்தது. துண்டை எடுத்துத் துடைத்துக்கொண்டார்.

சாப்பிட்டதும் சிறிது நேரம் ஓய்வெடுப்பது வழக்கம். அதன்படியே படுக்கை அறைக்குச்சென்று ஓய்வு எடுத்தார். அந்த அறை ஏர்கண்டிஷன் செய்யப்பட்டது என்றாலும், வியர்வை நிற்காமல் வழிந்தது. உதவியாளர் உடம்பைத் தொட்டுப் பார்த்தார். உடல் குளிர்ந்து இருந்தது.

உடனே, "உடல் ஜில்லென்று இருக்கிறதே... டாக்டரை அழைக்கவா?"

https://t.me/tamilpdfebooks

என்று கேட்டார் உதவியாளர்.

காமராஜர், "டாக்டர் சௌரிராஜனுக்குப் போன் போட்டுக் கொடு, நானே பேசறேன்" என்றார். அதன்படி அவருக்குப் போன் போடப்பட்டது, ஆனால், அவரை வீட்டிலோ, மருத்துவ மனையிலோ பிடிக்க முடியவில்லை. அதனால் டாக்டர் ஜெயராமனுக்குப் போன் போட்டுக் கொடுத்தார்கள்.

அவர் காமராஜிடம், "நெஞ்சு வலிக்கிறதா... மூச்சுத் திணறல் இருக்கிறதா?" என்று சில கேள்விகளைக் கேட்டார். ஆனால், காமராஜர், "வியர்வை மட்டும்தான் நிக்காம வருது, வேற எதுவும் பிரச்னை இல்லை" என்றார். ஆனாலும் நேரில் வந்து பார்ப்பதாகச் சொன்னார் ஜெயராமன்.

பிறகு உதவியாளரிடம், "டாக்டர் வர்றேன்னு சொல்லி இருக்கார், வரும்போது பிரஷர் பார்க்க மானிட்டர் கொண்டுவரச் சொல். டாக்டர் வரும் வரை படுத்திருக்கிறேன்" என்று நன்றாக படுத்துக்கொண்டார். வைரவன் கதவை மூடிவிட்டு வெளியேறியபோது, "வைரவா... விளக்கை அணைச்சிட்டுப் போ" என்றபடி கண்களை மூடிக்கொண்டார்.

மதியம் மூன்று மணி.

காமராஜர் வீட்டில் தன்னைத் தேடப்பட்ட செய்தியை கேள்விப்பட்டு டாக்டர் சௌரிராஜன் காமராஜர் இல்லத்துக்கு வந்து, அவர் படுத்திருந்த அறைக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே போனார். கட்டிலின் இடதுபுறம் திரும்பி, இரண்டு கைகளையும் தலைக்கு முட்டுக் கொடுத்து, கால்களை மடக்கியபடி படுத்திருந்தார் காமராஜர். வழக்கமான குறட்டைச் சத்தம் வரவில்லை.

"ஐயா..." என்று அழைத்தார். எந்த அசைவும் இல்லாததால் துணுக்குற்று, காமராஜர் உடலை அசைத்தார். பதில் இல்லை என்றதும், பதறிப்போய் நாடித் துடிப்பைப் பரிசோதித்தார்.

"பெரியவர் போய்விட்டாரே..." என்று கதறி அழுதார் சௌரிராஜன்.

அதற்குள் வந்துசேர்ந்த டாக்டர் ஜெயராமன், ஊசி மருந்தை நேரடியாக இதயத்துக்குள் செலுத்தி சிகிச்சை அளிக்க முடியுமா என்று முயற்சி செய்தார். நெஞ்சைப் பிடித்து அழுத்தி, சுவாசத்தை வரவழைக்க முடியுமா எனப் பார்த்தார். அந்த முயற்சியும் பலனளிக்கவில்லை. அவரும் கதறி அழுதார். சரியாக மாலை 3.20 மணிக்குக் காமராஜர் மரணம் அடைந்தார் என்ற செய்தி அறிவிக்கப்பட்டது.

உடனே தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் இருந்த பா.ராமச்சந்திரனுக்கும், அன்றைய முதல்வர் மு.கருணாநிதிக்கும் தகவல் சொல்லப்பட்டது. உடனே ஓடோடிவந்தார் கருணாநிதி. காமராஜர் உடலுக்கு மாலையிட்டு அஞ்சலி செலுத்தினார். அதற்குள் மரணச் செய்தி தமிழகம் முழுவதும் பரவியது. மக்கள் அழுது புலம்பியபடி அவருடைய வீட்டுக்கு வந்தனர்.

காமராஜரின் உடலை கட்டிலுடன் வெளியே வைத்தார்கள். ஆனாலும்,

https://t.me/tamilpdfebooks

மக்கள் கூட்டம் கட்டுங்கடங்காமல் இருந்தது. உடனே காமராஜரின் உடலை ராஜாஜி மண்டபத்துக்குக் கொண்டு சென்றார் கருணாநிதி.

மாலை 5.30 மணி.

காமராஜர் உடல் ராஜாஜி மண்டபத்தில் வைக்கப்பட்டது. மக்கள் சிந்தும் கண்ணீர் போதாது என்று நினைத்தோ என்னவோ, வானமும் மழையைத் தூவியது. நாடு எங்கும் கடைகள் அடைக்கப்பட்டு, கட்சிக் கொடிகள் அரைக் கம்பத்தில் பறந்தன.

காந்திஜியை மனதார நேசித்த, மனதுள் வைத்து பூஜித்த காமராஜர், காந்திஜி பிறந்த தினத்தில் இந்த உலகைவிட்டுப் பிரிந்ததை எண்ணி காங்கிரஸ் தொண்டர்களும், பொதுஜனங்களும் அழுது புலம்பினார்கள். அவரவர் வீடுகளில் காமராஜர் போட்டோவுக்கு மாலையிட்டு விளக்கு ஏற்றி வைத்தனர்.

தங்கள் வீட்டில் ஒருவர் இறந்ததைப் போலவே, காமராஜர் இறப்பை மக்கள் எடுத்துக்கொண்டனர். வாரிசே இல்லாத காமராஜருக்கு, தமிழ்நாட்டு மக்கள் அனைவருமே வாரிசாக இருந்தார்கள். தென் மாவட்டங்களிலிருந்து வந்த ரயில், பஸ்களில் கூட்டம் நிறைந்து வழிந்தது. காமராஜரின் உடலைப் பார்த்து பலர் அழுது, மயங்கி விழுந்தனர்.

காமராஜர் இறந்தது ஒரு வியாழக்கிழமை. அடுத்த நாளான வெள்ளிக்கிழமை, தமிழக அரசு விடுமுறையாக அறிவித்தது. காமராஜர் உடலுக்கு மூவண்ணக் கொடி போர்த்தி, ராஜாஜி மண்டபத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டது. கடல் வெள்ளம் போன்று மக்கள் கூட்டம் குறையாமல் வந்து அஞ்சலி செலுத்திக் கொண்டே இருந்தார்கள். மழை கொட்டிக்கொண்டே இருந்தது,

ஒரு முதல்வர் வாழ்ந்த இல்லம் என்பதால், அங்கிருக்கும் கோப்பு, நினைவுச் சின்னம் ஆகியவற்றுக்கு ஆபத்து வந்துவிடக் கூடாது என்று, திருமலைப்பிள்ளை வீதியில் இருந்த காமராஜர் இல்லம் மூடப்பட்டு, சீல் வைக்கப்பட்டது.

காமராஜருக்கு நினைவு ஆலயம் அமைப்பதற்கான இடத்தைத் தேர்ந்தெடுப்பதற்காக, அன்று இரவே, கொட்டும் மழையில் வேலை செய்தார் கருணாநிதி. காந்திஜியின் தொண்டராகவே வாழ்ந்து, அவரது பிறந்த நாளில் மறைந்ததால், சென்னை கிண்டியில், காந்தி மண்டபத்துக்கு அருகிலேயே நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டது. கரடுமுரடாக முட் புதர்கள் நிறைந்து கிடந்த அந்த இடம் இரவோடு இரவாக சரி செய்யப்பட்டது. கொட்டும் மழையில், பெட்ரோமாக்ஸ் விளக்கு வெளிச்சத்தில் வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு கருணாநிதி, அமைச்சர் பெருமக்கள் மற்றும் காங்கிரஸ் தலைவர்கள் நினைவு இடத்துக்கான பராமரிப்புப் பணிகளில் இறங்கினார்கள்.

1975, அக்டோபர் 3.

காமராஜர் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொள்வதற்காக டெல்லியிலிருந்து இந்திராகாந்தி வந்தார். காமராஜரின் மறைவைக்

https://t.me/tamilpdfebooks

கேட்டு, பிரிட்டிஷ் அரசு ஆழ்ந்த வருத்தம் தெரிவித்து செய்திக் குறிப்பு வெளியிட்டது. இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலிருந்தும் காங்கிரஸ் தலைவர்கள் ஓடோடி வந்தார்கள். காமராஜரின் தங்கை நாகம்மாள் மற்றும் அவரது வாரிசுகள் அழுது புரண்டபடி அருகில் நின்றார்கள். தமிழக மக்கள் தங்கள் இறுதி அஞ்சலியை, கண்ணீர் அஞ்சலியாக கூட்டம் கூட்டமாக வந்து செலுத்திக்கொண்டே இருந்தார்கள்.

தியாகச் சுடரின் மறைவு

விமான நிலையத்திலிருந்து இந்திராகாந்தி நேரடியாக ராஜாஜி மண்டபத்துக்கு வந்து மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். அவருடன் கவர்னர் ஷா, அன்றைய முதல்வர் கருணாநிதி, மத்திய அமைச்சர் சி.சுப்பிரமணியம், கரண்சிங் மற்றும் பலரும், ராணுவ உயர் அதிகாரிகளும் வந்து அஞ்சலி செலுத்தினார்கள்.

எம்.எஸ்.சுப்புலட்சுமி, சீர்காழி கோவிந்தராஜன் ஆகியோர் தொடர்ந்து பக்திப் பாடல்கள் பாடியபடி, காமராஜர் உடலுக்கு இசை அஞ்சலி செலுத்திக்கொண்டு இருந்தனர்.

ராஜாஜி மண்டபத்தில் காமராஜரின் உடல் இறுதிச் சடங்குக்கு ஆயத்தம் செய்யப்பட்டது. காமராஜரின் சகோதரி நாகம்மாளின் மகன் ஜவஹர் இறுதிச் சடங்குகளைச் செய்தார். காமராஜரின் உடல் குளிப்பாட்டப்பட்டு, புது ஆடை அணிவிக்கப்பட்டது. நெற்றியில் திருநீறு, சந்தனம், குங்குமம் அணிவிக்கப்பட்டன. வைதீக முறைப்படி காமராஜருக்குச் செய்ய வேண்டிய அஞ்சலி அனைத்தும் செய்து முடிக்கப்பட்டதும், உடல் ராணுவத்தின் வசம் ஒப்படைக்கப்பட்டது.

https://t.me/tamilpdfebooks

இறுதி ஊர்வலம்...

வழக்கமாக ராணுவ மரியாதையுடன் இறுதிச் சடங்கு, பதவியில் இருக்கும் ஜனாதிபதி, உதவி ஜனாதிபதி, பிரதமர், மாநில முதல்வர்கள் ஆகியோருக்கு மட்டுமே வழங்கப்படும். ஆனால், எந்தப் பதவியிலும் இல்லாத நிலையிலும், காமராஜருக்கு ராணுவ மரியாதை வழங்கப்பட்டது.

முப்படையைச் சேர்ந்த வீரர்களும் துப்பாக்கியைத் தரையை நோக்கிப் பிடித்தபடி அழுத்தமாக, விரைத்த பார்வையுடன் கண்கள் கலங்க நின்றுகொண்டு இருந்தனர். மக்களின் கதறலுக்கு நடுவே, ராணுவ மரியாதையுடன் காமராஜரின் உடல் பீரங்கி வண்டி மீது வைக்கப்பட்டது. பிற்பகல் 3.30 மணிக்கு இறுதி ஊர்வலம் கிளம்பியது. அந்த பீரங்கி வண்டியில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பா.ராமச்சந்திரன், மத்திய மந்திரி சி.சுப்ரமணியம், ராஜாராம் நாயுடு, சிவாஜி கணேசன் ஆகியோர் நின்றுகொண்டே இருந்தனர். மக்கள் பூக்களைத் தூக்கி எறிந்தார்கள். வானமும் மழையைத் தூவிக்கொண்டே இருந்தது. வழி எங்கும் காமராஜருடைய இறுதி ஊர்வலத்தைக் காண மக்கள் வெள்ளம் எனப் பொங்கி நின்றார்கள். அண்ணா சாலை எங்கும் மனிதத் தலைகள்தான் தென்பட்டன. அண்ணா சாலை வழியாக கிண்டிக்கு சுமார் மூன்று மணி நேரம் கழித்து ஆறரை மணிக்கே காமராஜரின் புகழ் உடல் போய்ச் சேர்ந்தது.

காந்தி மண்டபத்துக்கு அருகே காமராஜருடைய உடலை எரியூட்ட விஷேச மேடை அமைக்கப்பட்டு, சந்தனக் கட்டைகள் அடுக்கி

https://t.me/tamilpdfebooks

வைக்கப்பட்டு இருந்தன.

பீரங்கி வண்டியிலிருந்து முப்படை வீரர்கள் காமராஜரின் உடலைத் தூக்கி வந்து தகன மேடையில் வைத்தார்கள். இந்திராகாந்தி, அந்த இடத்துக்கு ஏற்கெனவே வந்து காத்திருந்தார். அங்கேயும் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். கண்களிலிருந்து வழிந்த நீரைத் துடைத்துக்கொண்டு அமைதியாக ஒதுங்கி நின்றார். தொடர்ந்து கருணாநிதி முதலான அமைச்சர்கள் மற்றும் பெரிய தலைவர்கள் மலர் வளையம் வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினார்கள். ஈமச் சடங்கு நடந்தது. கூடியிருந்த மக்கள் கூட்டம், 'காமராஜர் நாமம் வாழ்க' என்று கத்தி, கதறியபடி இருந்தது.

ஈமச் சடங்கு முழுமையாக நிறைவேறியதும், பீரங்கிகள் மூன்று முறை முழங்கின. ஒவ்வொரு முறை வெடித்தபோதும், மக்கள் கூட்டம் அதைவிட அதிகமாக ஓலமிட்டது. காமராஜர் தங்கையின் பேரன் கனகவேல் சிதைக்குத் தீ மூட்டினார். அதற்கென்றே காத்திருந்தது போல், மழை நின்று போயிருக்க, தீ வானோக்கி எரிந்தது; புகை கிளம்பியது. மக்கள் கூட்டம் கதறி அழுதது.

ஒரு மாபெரும் சகாப்தம் தீயில் கரைந்துபோனது.

சென்னை காந்தி மண்டபத்தில் நடைபெற இருந்த அக்டோபர் 2-ம் தேதி கொண்டாட்டத்தில் கலந்துகொள்ளுமாறு, காமராஜருக்கு அழைப்புக் கடிதம் அனுப்பி இருந்தார், அன்றைய தமிழக கவர்னர் ஷா. அதற்கு நன்றி தெரிவித்துக் கடிதம் அனுப்பிய காமராஜர், காந்தி மண்டபத்துக்கு வருவதாக உறுதி அளித்து இருந்தார். ஆனால், அன்று மரணமடைந்துவிட்டார். ஆனாலும் சொன்ன வாக்கைக் காப்பாற்றுவதைப் போல ஒரு நாள் தாமதமாக, அக்டோபர் 3-ம் தேதி அதே இடத்துக்குச் சென்று, நிரந்தரமாகத் தங்கிவிட்டார் காமராஜர்.

காமராஜர் நினைவகம்

காமராஜரின் அஸ்தி ஆறுகளிலும், கடல்களிலும் கரைக்கப் பட்டது.

https://t.me/tamilpdfebooks

சென்னையில் பா.ராமச்சந்திரன், சிவாஜிகணேசன் ஆகியோர் சென்று கடலில் கரைத்தார்கள். தமிழகம் எங்கும் காமராஜரின் அஸ்தி எடுத்துச் செல்லப்பட்டு, பொதுமக்கள் அஞ்சலி செலுத்த வசதி செய்துதரப்பட்டது.

அக்டோபர் 5-ம் தேதி தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் காமராஜருக்கு இரங்கல் கூட்டம் நடத்தப்பட்டது. அதில் கலந்துகொண்டு பேசிய முதல்வர் கருணாநிதி, "காமராஜர் எரிக்கப்பட்ட இடத்தில் நினைவு இடம் கட்டப்படும்" என்று அறிவித்தார். அதன்படி ராட்டை சின்னம் வைக்கப்பட்டு, 6.04 ஏக்கர் இடத்தில் நினைவு இடம் அமைக்கப்பட்டது.

காந்தி மண்டபத்துக்கு அருகிலேயே காமராஜருக்கும் நினைவு இடம் அமைத்து, தமிழக மக்களின் அன்பைப் பெற்றார் கருணாநிதி.

இந்த நினைவு இடம் 1976, பிப்ரவரி 14-ம் தேதி திறந்து வைக்கப்பட்டது. இந்த நினைவு இடத்தில் 2010, ஜூலை 24-ம் தேதி, கருணாநிதி அணையா விளக்கு ஒன்றையும் ஏற்றிவைத்தார்.

தமிழக அரசு சார்பாக காமராஜர் பற்றி ஒரு செய்திப்படம் தயாரிக்கப்பட்டது. காமராஜரின் நினைவைப் போற்றும் வகையில் 'தியாகச் சுடர்' என்று பெயரிட்டு, பின்னணிக் குரலாக கருணாநிதியே உருக்கமாகப் பேசியிருந்தார்.

விருதுநகரில் காமராஜர் இல்லம்

விருதுநகரில் நினைவு இல்லம்

விருதுநகரில் காமராஜர் பிறந்த இல்லம் அரசுடமை ஆக்கப்பட்டது. காமராஜர் இல்லத்தில் வசித்துவந்த நாகம்மாள் மற்றும் அவரது இரண்டு மகன்களுக்கும் அரசு சார்பில் வேறு வீடு ஒதுக்கித் தரப்பட்டது. இந்த வீடு, இப்போது, பழமை மாறாமல் புதுமையாக்கப்பட்டு, பார்வையாளர்களுக்காக தினமும் திறந்துவிடப்படுகிறது.

காமராஜர் பயன்படுத்திய கட்டில், ஆடை, படித்த புத்தகம் ஆகியவை பார்வைக்கு வைக்கப்பட்டு உள்ளன. மேலும், காமராஜரின் வரலாற்றைச்

https://t.me/tamilpdfebooks

சொல்லும் அளவுக்கு வரிசையாகப் புகைப்படங்களும் வைக்கப்பட்டு உள்ளன. விருதுநகருக்கு நடுவே இருக்கும் தெப்பக் குளத்தின் அருகே, குறுகிய சந்துக்குள் இன்றும் பார்வையாளர்களுக்காக காத்துக்கிடக்கிறது காமராஜர் நினைவு இல்லம்.

அரசு மரியாதை

மத்திய அரசு பாரத ரத்னா விருதை 1976-ல் வழங்கி காமராஜருக்கு கௌரவித்தது. காமராஜரின் தங்கை நாகம்மாள் மற்றும் அவருடைய மகன்கள் ஜவஹர், மோகன் ஆகியோர் டெல்லிக்குச் சென்று ஜனாதிபதியிடமிருந்து விருதைப் பெற்றுக் கொண்டனர். இன்றும் இந்த பாரத ரத்னா விருது மற்றும் பட்டயம் விருதுநகரில் உள்ள காமராஜரின் தங்கை மகன்கள் வீட்டில் காட்சிப் பொருளாக இருக்கின்றன. இதே ஆண்டு காமராஜர் நினைவாக அஞ்சல் தலை வெளியிடப்பட்டது.

விருதுநகர் இல்லத்தில்...

1977-ல் தமிழக சட்டப்பேரவையில் குடியரசுத் தலைவர் நீலம் சஞ்சீவிரெட்டியால் காமராஜரின் திருவுருவப் படம் திறந்து வைக்கப்பட்டது.

1984, ஜூலை 15-ம் தேதி, விருதுநகரைத் தலைநகராகக் கொண்டு காமராஜர் மாவட்டம் உருவானது.

2004-ல் காமராஜர் நினைவாக, இந்திய அரசாங்கம் ஐந்து ரூபாய் மற்றும் நூறு ரூபாய் நாணயங்களை வெளியிட்டு கௌரவித்தது.

சென்னை விமான நிலையத்துக்கும், கடற்கரை சாலைக்கும் காமராஜர் பெயர் சூட்டப்பட்டு, கௌரவிக்கப்பட்டது. மதுரையில் தொடங்கப்பட்ட பல்கலைக்கழகத்துக்கு காமராஜர் பெயர் சூட்டப்பட்டது.

கல்வி வளர்ச்சி நாள்

காமராஜர் பிறந்த தினத்தைக் கல்வி தினமாகக் கொண்டாட

https://t.me/tamilpdfebooks

வேண்டும் என்று பெரும்பாலான மக்கள் கோரிக்கை விடுத்துவந்தனர். அதனால் கருணாநிதி 2006, மே 24-ம் தேதி அரசாணை ஒன்றை வெளியிட்டார். அதன்படி, காமராஜர் பிறந்த நாளை ஆண்டுதோறும் அனைத்துப் பள்ளிகளிலும் மாணவ, மாணவியர் புத்தாடை அணிந்து, விழா எடுத்து, காமராஜர் திருவுருவப் படத்தை அலங்கரித்து மகிழ்ச்சியுடன், 'கல்வி வளர்ச்சி நாள்' என்று கொண்டாட வேண்டும் என்று ஆணையிட்டது.

சென்னை – தியாகராய நகரில் காமராஜர் நினைவு இல்லம்

அன்றைக்கு மாணவ, மாணவியருக்குப் பல போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்க, அரசு பணம் ஒதுக்கி வருகிறது. காமராஜர் பெருமையை மாணவர்கள் உணர்ந்துகொள்ள, இது சரியான திட்டம் என்று அனைவரும் பாராட்டுகிறார்கள். காமராஜர் பிறந்த தினத்தை தியாகிகள் தினமாகவும் அரசு கொண்டாடுவது குறிப்பிடத்தக்கது.

சென்னையில் நினைவு இல்லம்

காமராஜர் இருந்த, திருமலைப்பிள்ளை வீதி 8-ம் எண் இல்லம் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் காமராஜர் நினைவு இல்லமாக மாற்றப்பட்டது.

காமராஜர் பயன்படுத்திய பொருட்கள் முழுமையாக இங்கே காட்சிக்கு வைக்கப்பட்டு உள்ளன. அவர் படித்த புத்தகங்கள், அவர் பயன்படுத்திய ஆடைகள், பெட்டி, கட்டில், உணவருந்திய சாப்பாட்டு மேஜை, மாடி அறை, நாற்காலிகள் அவருக்கு வழங்கப்பட்ட பரிசுப் பொருட்கள் என எல்லாமே பார்வைக்கு வைக்கப்பட்டு இருக்கின்றன.

https://t.me/tamilpdfebooks

கன்னியாகுமரியில் மணிமண்டபம்

காமராஜர் இறந்த தினத்தைக் குறிக்கும் வகையில் அவர் இறந்த அறையில் இருந்த காலண்டர் இன்னமும் அக்டோபர் 2-ம் தேதியைக் காட்டியபடி இருக்கிறது. இந்த இல்லம், தினமும் பார்வையாளர்களுக்காகத் திறந்து வைக்கப்படுகிறது. ஆனால், இத்தனை மகத்தான சாதனையாளர் வாழ்ந்த இல்லத்தைப் பார்க்க மக்கள் நிறைய வருவதில்லை என்பதுதான் வேதனை!

கன்னியாகுமரியில் மணி மண்டபம்

காமராஜரின் அஸ்தியை முக்கடலும் சந்திக்கும் கன்னியா குமரியில் கரைக்கும் முன்னர், காந்தி மண்டபத்துக்கு அருகே பொதுமக்கள் வணக்கத்துக்கு வைக்கப்பட்டது.

அஸ்தி வைக்கப்பட்டிருந்த இடத்தில் ஒரு மணி மண்டபம் கட்டவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார் குமரி அனந்தன். அன்றைய மத்திய அரசு, கடற்கரையில் மணிமண்டபம் கட்டுவதற்கு அனுமதி தர மறுத்தது. ஆனால், கருணாநிதியின் விடாத முயற்சியால் அனுமதி கிடைத்தது. அதன்படி மணிமண்டபம் அமைக்கப்பட்டு, கருணாநிதியால் திறப்பு விழா நடத்தப்பட்டது.

கன்னியாகுமரியில் காந்தி மண்டபத்துக்கு அருகிலேயே காமராஜர் நினைவு மணி மண்டபம் அமைந்திருப்பது தனிச்சிறப்பு. காமராஜர் வாழ்க்கையை விளக்கும் வண்ணம் இங்கு ஏராளமான புகைப்படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டு இருக்கின்றன.

வீட்டில் பணம்

காமராஜர் இறந்தபோது அவருடைய வீட்டில் இருந்த பணம் மொத்தமே 67 ரூபாய்தான். இதை அன்று அமைச்சராக இருந்த ராசாராம் அறிவித்து இருக்கிறார். அவர் பெயரில் வீடு அல்லது நிலம் எதுவுமே இல்லை. அவர் பயன்படுத்திய கார்கூட அவருக்கு சொந்தமானது இல்லை.

https://t.me/tamilpdfebooks

கார்

காமராஜருக்கும் மதுரை தொழிலதிபர் டி.வி.சுந்தரத்துக்கும் நல்ல நட்பு உண்டு. மதுரைக்குச் செல்லும்போது அவர்களுடைய கெஸ்ட் ஹவுசில் தங்குவார். அந்த நட்பின் அடையாளமாக, காங்கிரஸ் கட்சியின் தலைவராகப் பதவி ஏற்றுக்கொண்டதும், 'எம்டிடி 2727' என்ற எண் கொண்ட கறுப்பு நிற செவர்லெ கார் ஒன்றை காமராஜரின் கட்சிப் பணிக்காக வழங்கினார் தொழிலதிபர். தேர்தல் பயணத்தின்போதும், மற்ற சுற்றுப்பயணங்களுக்கும் இந்த காரைத்தான் பயன்படுத்துவார். முதல்வராகப் பதவி ஏற்ற பின்னரும், அரசு கொடுத்த கார் வேண்டாம் என்று, இந்த காரையே தொடர்ந்து பயன்படுத்தினார்.

காமராஜர் இறந்த பிறகு, ஸ்தாபன காங்கிரஸ் கட்சிக்குச் சொந்தமாக இருந்த இந்த காரை சென்னையைச் சேர்ந்த காப்பித் தூள் வியாபாரி சோமசுந்தர நாடாருக்கு விற்பனை செய்தனர்.

இதை அறிந்து கவிஞர் கண்ணதாசன் வருத்தப்பட்டு, 'கார்முகில் வண்ணன் கண்ணபிரான் ஏறிய தேரில், காப்பித் தூள் கடைக்காரரா!' என்று, அவர் நடத்தி வந்த தென்றல் பத்திரிகையில் கவிதை ஒன்றைத் தீட்டினார். அதற்குப் பின்னர்தான், அந்த காரின் அருமை தெரிந்து, விற்பனை செய்தவரிடம் இருந்து மீட்டார்கள். இப்போது, அந்த கார், காமராஜர் அரங்கில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டு இருக்கிறது.

ஆகட்டும் பார்க்கலாம்

காமராஜர் முதல்வராக இருந்த சமயத்தில், அவரை வீட்டில் அல்லது கோட்டையில் வந்து பார்க்க தனியே அப்பாயின்ட்மென்ட் வாங்க வேண்டியது இல்லை. காலையில் வீட்டிலிருந்து கிளம்பும்போது, எத்தனை பேர் காத்திருக்கிறார்களோ, அவர்கள் அனைவரையும் பார்த்துவிட்டே கிளம்புவார்.

அதைப் போலவே கோட்டையிலும் கடைசி நபர் வரை பார்த்துவிடுவார். வேறு ஏதாவது வேலையாகக் குறிப்பிட்ட நேரத்துக்குப் போக வேண்டி இருந்தால் மட்டும், பார்வையாளர்களுக்குக் கட்டுப்பாடு இருக்கும். அதுவும், 'இன்று இந்த நேரத்திலிருந்து இந்த நேரம் வரை வெளியே செல்கிறார். அதனால் அதற்குள் பார்க்க முடிந்தால் மட்டுமே பார்ப்பார்' என்பதை உதவியாளர்கள் முதலிலேயே சொல்லிவிடுவார்கள்.

எந்த விஷயமானாலும், சுற்றிவளைத்துப் பேச மாட்டார். "நேரா விஷயத்துக்கு வான்னேன்' என்று பட்டவர்த்தனமாகக் கேட்பார். எப்படிப்பட்ட கோரிக்கை, வேண்டுகோள், விருப்பமானாலும் கேட்டுக்கொள்வார். ஆனால், மகா அழுத்தக்காரர். அவர் முகத்திலிருந்து, 'இந்த வேலையை முடித்துக் கொடுப்பாரா... இல்லையா' என்பதைப் புரிந்துகொள்ளவே முடியாது. அதைப் போலவே முகத்துக்கு நேராக, 'முடியும்... முடியாது' என்று சொல்ல மாட்டார்.

எந்தக் கோரிக்கை வந்தாலும் முழுமையாகக் கேட்டுவிட்டு,

https://t.me/tamilpdfebooks

‘ஆகட்டும் பார்க்கலாம்’ என்று சொல்லி அனுப்புவார். அடுத்து எப்போது வந்து பார்ப்பது? எவ்வளவு விரைவில் வேலை முடியும்? வேறு யாரையும் இது தொடர்பாக பார்க்க வேண்டுமா என்ற துணைக் கேள்விகள் எத்தனை கேட்டாலும் அசராமல், ‘பார்க்கலாம்’ என்று மட்டுமே சொல்வார்.

கேட்பவர்களுடைய கோரிக்கை சட்டத்துக்கு உட்பட்டு செய்யக் கூடியதாக இருந்தால் உடனே செய்துகொடுத்துவிடுவார். ஆனால், முடியாத செயல் என்றால், உதவியாளர்கள் மூலமாக ‘குறிப்பிட்ட காரணத்தால், உங்கள் கோரிக்கையை ஏற்க முடியாது’ என்று சுருக்கமாக சொல்லிவிடச் செய்வார்.

தவறான நோக்கத்தில் கோரிக்கை கேட்கப்பட்டால், அவரிடம் இருந்து எந்த பதிலும் கிடைக்காது. எந்தக் கோரிக்கையையும் சட்டத்தை மீறி செய்ய வாய்ப்பிருக்கிறதா என்று ஒருபோதும் அதிகாரிகளிடம் கேட்கவே மாட்டார் காமராஜர்!

முதியோர் உதவித் தொகை

காமராஜர் முதல்வராக இருந்த சமயம், அடிக்கடி வயதான பலர் வந்து உதவி கேட்டு நின்றார்கள். அவர்களுக்கு அவ்வப்போது பண உதவி செய்வதில் காமராஜருக்கு விருப்பம் இல்லை. அதனால், அதிகாரிகளிடம், "முதியோர்களுக்கு உதவி செய்வதற்காக ஏதாவது திட்டம் தொடங்க முடியுமா?" என்று கேட்டார். அதன் தொடர்ச்சியாகத்தான், ஆதரவற்ற முதியோருக்கு சிறிய அளவில் உதவித் தொகை வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டது.

அதன்பிறகு, இந்தத் திட்டத்துக்கு மத்திய அரசின் நிதி உதவி பெறப்பட்டு நாடு போற்றும் திட்டமாக அது உருமாறியது.

https://t.me/tamilpdfebooks

10

பிரபலங்கள், உறவினர்களுடன் அணுகுமுறை

கடைசி நொடி வரை தனக்கென வாழாமல், நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் வாழ்ந்தவர் காமராஜர். பெற்ற தாயையும், உறவுகளையும், நண்பர்களையும்விட நாட்டையே பெரிதாக நினைத்தார். இதோ சில மனிதர்கள்... சில நிகழ்வுகள்...

ஜீவானந்தம்

கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர் என்றாலும் ப.ஜீவானந்தம் மீது மிகுந்த மரியாதை வைத்திருந்தார் காமராஜர். காங்கிரஸ் கட்சியை எதிர்த்து ஜீவா போராடிய நேரத்திலும், அவர் மீது காமராஜருடைய அன்பு மாறவில்லை.

காமராஜர் முதல்வராக இருந்தபோது, சென்னை, தாம்பரம் குடிசைவாசிகளுக்குப் பட்டா வேண்டும் என்று ஜீவா போராடினார். அப்போது, தாம்பரத்தில் ஓர் ஆரம்பப் பள்ளியைத் திறந்துவைக்கச் சென்றார் காமராஜர். போகும் வழியில் ஜீவாவின் வீடு இருந்தது. அந்தப் பள்ளிக்கு அடிக்கல் நாட்டியவர் ஜீவா என்பதால், அவரையும் அழைத்துச் செல்வதுதான் சரியாக இருக்கும் என்று நினைத்து, காரை ஜீவாவின் வீட்டுக்கு விடச் சொன்னார்.

ஒழுகும் கூரை வீடு ஒன்றில் குடியிருந்தார் ஜீவா. திடீரெனத் தன்னுடைய வீட்டுக்கு காமராஜர் வந்ததைக் கண்டு ஆச்சர்யப்பட்டு, "என்ன காமராஜ்?" என்று கேட்டார்.

https://t.me/tamilpdfebooks

ஜீவானந்தம்

"என்ன இந்த வீட்டுல இருக்கீங்க..?" என்று ஆதங்கப்பட்டார் காமராஜர்.

உடனே ஜீவா, "நான் மட்டுமா? இங்கே இருக்கிற எல்லோரையும் போலத்தான் நானும் இருக்கேன்" என்று சர்வ சாதாரணமாகச் சொன்னார். காமராஜரை உட்கார வைக்க ஒரு நாற்காலிகூட இல்லாததால் இருவரும் நின்றுகொண்டே பேசினார்கள்.

"நீ அடிக்கல் வைச்ச பள்ளிக்கூடத்தைத் திறக்கணும், அதான் உன்னையும் கூப்பிட்டுப் போக வந்தேன்" என்றார் காமராஜர்.

"காமராஜ், நீ முதலமைச்சர். நீ திறந்தா போதும்" என்று ஜீவா மறுக்க, "அட... ஆரம்பிச்ச நீ இல்லாம, நான் எப்படிப் போக, கிளம்பு போகலாம்" என்று அழைத்தார்.

"அப்படின்னா நீ முன்னால போ. நான் அரை மணி நேரத்துல வந்துடுறேன்" என்று அனுப்பி வைத்தார்.

"கண்டிப்பா வரணும்" என்றார் காமராஜர். விழாவுக்கு அரை மணிக்கு மேல் தாமதமாகவே வந்தார் ஜீவா.

"என்ன ஜீவா, இப்படி லேட் பண்ணிட்டியே..." என்று காமராஜர் உரிமையுடன் கடிந்துகொண்டார்.

உடனே ஜீவா, "நல்ல வேட்டி ஒண்ணுதாம்பா இருக்கு, அதை உடனே துவைச்சு காய வைச்சுக் கட்டிட்டு வர்றேன், அதான் லேட், தப்பா நினைச்சுக்காதே..." என்றார். உடனே கண்கலங்கி விட்டார் காமராஜர்.

இரு தலைவர்களையும் ஒன்றாகப் பார்த்த மக்கள் சந்தோஷமானார்கள். விழா நல்லபடியாக முடிந்தது. ஆனால், ஜீவாவின் வறுமை காமராஜரை மிகவும் வாட்டியது. அதனால் ஜீவாவுக்குத் தெரியாமல், அவரது கம்யூனிஸ்ட் நண்பர்களை அழைத்துப் பேசினார்.

"ஜீவாவுக்கு வீடு கொடுத்தா போகமாட்டான், காரு கொடுத்தாலும் வாங்க மாட்டான். ஆனா, அவனைப் போல தியாகிகள் எல்லாம்

https://t.me/tamilpdfebooks

இத்தனை கஷ்டப்படக் கூடாது, என்ன செய்யலாம்?"என்றார்.

கூட்டத்தில் இருந்த ஒருவர், "ஜீவாவின் மனைவி படித்தவர், அதனால் அவருக்கு ஏதாவது பள்ளியில் அரசு வேலை கொடுத்தா அந்த குடும்பம் நிம்மதியா இருக்கும்" என்றார்.

உடனே காமராஜர், "ரொம்ப நல்ல யோசனை. ஆனா, நான் கொடுத்தா அவன் பொண்டாட்டியை வேலை செய்ய விடமாட்டான். அதனால, நீங்களா ஜீவா மனைவியிடம் பேசி, 'வீட்டுக்குப் பக்கத்துப் பள்ளிக்கூடத்துல ஒரு வேலை காலியா இருக்கு'ன்னு சொல்லி மனு போடச் சொல்லுங்க. உடனே நான் வேலை போட்டுத் தர்றேன். ஆனா, இந்த விஷயம் வேறு யாருக்கும் தெரியக்கூடாது... முரடன், உடனே வேலையைவிட வைச்சிடுவான்" என்று சொல்லி அனுப்பினார். அதன்படியே ஜீவாவுக்குத் தெரியாமல், அவருடைய மனைவிக்கு வேலை கொடுத்தார் காமராஜர். அதற்குப் பின்னரே ஜீவாவின் வாழ்க்கையில் வறுமை ஒழிந்தது.

காமராஜர் - ஜீவா இருவருடைய நட்பும் வார்த்தைகளால் வடிக்க முடியாதது. நோய்வாய்ப்பட்டு சென்னை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் ஜீவா. தனக்கு முடிவு வந்து விட்டதைத் தெரிந்துகொண்டவர், கடைசியாக உதிர்த்த வார்த்தைகள்... "காமராஜருக்கு போன் பண்ணுங்கள்!" என்பதுதான். எத்தகைய நட்பு!

பசும்பொன் முத்துராமலிங்க தேவர்

1936--ல் நகரசபைத் தேர்தல் நடந்த சமயத்தில், காமராஜர் விருதுநகரில் ஒரு சாதாரண காங்கிரஸ் தொண்டர். சிறந்த தேச பக்தராகத் திகழ்ந்தார். அன்று வாக்குரிமை உள்ள நாடார் சமூகத்தில் நூற்றுக்கு தொண்ணூறு பேர் ஜஸ்டிஸ் கட்சியில் இருந்தார்கள். நகரசபைத் தேர்தலில் காமராஜர் நிற்க வேண்டும் என விரும்பினார். ஆனால், காமராஜருக்கு ஓட்டுரிமையும் இல்லை; தேர்தலில் நிற்கவும் முடியாது!

அந்தக் காலத்தில் இன்று போல் 18 வயது வந்தோர் எல்லாம் வாக்களிக்க முடியாது. யாருக்கு சொத்து இருக்கிறதோ, யார் வரி செலுத்துகிறாரோ அவர்தான் வாக்காளராகவோ, தேர்தலில் நிற்கவோ முடியும். காமராஜர் பெயரில் எந்த சொத்தும் இல்லாததால் அவரால் தேர்தலில் நிற்க முடியவில்லை. அப்போது விருதுநகருக்கு வந்த பசும்பொன் முத்துராமலிங்க தேவரிடம் விவரம் சொல்லப்பட்டது. உடனே அவர், காமராஜரின் தாயாரிடம், "உங்கள் மகனைத் தேர்தலில் நிற்க வைக்கப் போகிறேன். உங்கள் பெயரில் உள்ள வீட்டை காமராஜர் பெயருக்கு எழுதி வையுங்கள்..." என்று கேட்டார்.

அதற்கு சிவகாமி, "தேவரையா! எனக்கு இருப்பது இந்த ஒரு வீடுதான். காமராஜன் இப்போதே வீட்டைக் கவனிப்பது இல்லை. எப்போதும் கட்சி வேலைகளிலேயே திரிகிறான். எனக்கு ஒரு பெண் குழந்தை வேறு இருக்கிறது. நானோ விதவை. எங்கள் ஜாதியில் ஒரு வீடாவது இருந்தால்தான் அந்தப் பெண்ணுக்கு நல்ல இடத்தில் மாப்பிள்ளை கிடைப்பார்..." என்று சொல்லித் தயங்கினார்.

https://t.me/tamilpdfebooks

பசும்பொன்
முத்துராமலிங்க தேவர்

சிவகாமி சொன்ன வார்த்தைகளில் உள்ள நியாயத்தை உணர்ந்துகொண்ட முத்துராமலிங்க தேவர், உடனே நான்கு வெள்ளாட்டை விலைக்கு வாங்கி, அதற்கு விருதுநகர் நகரசபையில் காமராஜரின் பெயரில் வரி செலுத்தி, ரசீதைப் பெற்றுக்கொண்டார். நகரசபை கொடுத்த தகர வில்லையை வரி கட்டியதன் அடையாளமாக வெள்ளாட்டின் கழுத்தில் கட்டிவிட்டு, காமராஜரை வாக்காளராக்கி தேர்தலில் நிற்க வைத்து வெற்றி பெற வைத்தார்.

பசும்பொன் முத்துராமலிங்க தேவரின் வழிகாட்டுதலாலும், தேர்தல் பணியாலும்தான், காமராஜர் விருதுநகர் நகரசபை தேர்தலில் வெற்றி பெற்றார் என்றால் அது மிகையல்ல.

விருதுநகரில் காமராஜருக்கு ஜஸ்டிஸ் கட்சியினரால் அவமானமும், பிரச்னைகளும் ஏற்பட்டபோது ஓடிவந்து உதவி செய்தவரும் முத்துராமலிங்க தேவர்தான். காமராஜரின் உயிருக்கு ஆபத்து உண்டாக்கும் அளவுக்கு ஜஸ்டிஸ் கட்சியினர் விரோதம் பாராட்டிக்கொண்டு இருந்தார்கள்.

அந்த நேரத்தில், விருதுநகரில் தேசபந்து மைதானத்தில் பொதுக் கூட்டம் போட்ட முத்துராமலிங்க தேவர், "இங்கே இருக்கிற நாடார் உறவின் முறை மகமை கடைக்காரர்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் சில லட்சங்களை வைத்துக்கொண்டு காங்கிரஸ் தொண்டர்களை மிரட்டுவதாகக் கேள்விப்படுகிறேன். இங்கிருக்கிற ஜஸ்டிஸ் கட்சிப் பிரமுகர்கள் வீட்டுக்கு வெள்ளைக்கார அதிகாரிகள் வந்து, போவதை சாதகமாக நினைத்துக்கொண்டு, காங்கிரஸ் தொண்டர்களை என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று நினைத்தால், அந்த அறியாமைக்காக அடியேன் வருத்தப்படுகிறேன்.

https://t.me/tamilpdfebooks

இந்திரா காந்தி, காமராஜர், அண்ணா

நாங்கள் வெள்ளைக்காரர்களையே எதிர்க்கும் கூட்டம், உங்களை எதிர்ப்பதும், உங்கள் நடவடிக்கைகளுக்கு பதில் நடவடிக்கை எடுப்பதும் எங்களுக்கு முடியாத காரியமல்ல. காமராஜரைக் கொலை செய்துவிடலாம் என்று பேசுவதாகக் கேள்விப்படுகிறேன்.

காமராஜர் ஏழைத் தொண்டன் என்று இங்கே உள்ள ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் நினைத்தால் அவர்களுக்காக அனுதாபப்படுகிறேன். காமராஜருக்குப் பின்னால் காங்கிரஸ் மகா சபை இருக்கிறது. அதே மகா சபையில் எங்களைப் போல, எந்தத் தியாகத்துக்கும் தயாராக உள்ள கோடானுகோடிப் பேர் இருக்கிறார்கள் என்பதை மறந்துவிட வேண்டாம். இதையும் மீறி காமராஜரின் மீது ஒரு சிறு துரும்பு பட்டாலும் இங்கே ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் வீதியில் நிம்மதியாக நடமாட முடியாது. இரும்புக் கவசம் போட்டுக்கொண்டுதான் நடமாட முடியும்!" என்று அனல் பறக்கப் பேசினார்.

கண்ணதாசன்

காமராஜருக்கும் கண்ணதாசனுக்கும் இருந்த உறவு அற்புதமானது. இது குறித்து கண்ணதாசன், "காமராஜரை நான் தாயாகப் பார்த்தேன்; தந்தையாகப் பார்த்தேன்; தெய்வமாகப் பார்த்தேன். அதன் பிறகுதான் தலைவனாகப் பார்த்தேன்" என்று மனமாரச் சொன்னவர்.

https://t.me/tamilpdfebooks

காமராஜருடன் கண்ணதாசன்

காமராஜரைப் பற்றி வியந்து வியந்து பாடல் எழுதியவர். அவர் எழுதிய இந்தப் பாடல் காமராஜரின் வாழ்க்கையின் சுருக்கம் என்றே சொல்லலாம்.

தங்கமே! தண் பொதிகைச் சாரலே! தண்ணிலவே!

சிங்கமே! என்றழைத்துச் சீராட்டுந் தாய் தவிரச்

சொந்தம் என்று ஏதுமில்லை!

துணையிருக்க மங்கையில்லை!

தூய மணி மண்டபங்கள், தோட்டங்கள் ஏதுமில்லை!

ஆண்டி கையில் ஓடிருக்கும்,

அதுவும் உனக்கில்லையே!

கண்ணதாசன் வீட்டில் அசைவம் சமைக்கப்பட்டால், காமராஜர் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்படும். இரவு நேரங்களில் இருவரும் சந்தித்தால் நேரம் போவதே தெரியாமல் பேசுவார்கள். நாகர்கோவில் தேர்தல் பிரசாரத்தை முன்னின்று நடத்தி வெற்றி தேடிக் கொடுத்தவர் கண்ணதாசன்.

கண்ணதாசன் மது அருந்துவார் என்பது அனைவருக்குமே தெரியும். ஆனால், 'மது அருந்துபவர்கள் காங்கிரஸ் உறுப்பினர்களாக இருக்கக்கூடாது' என்று காங்கிரஸ் கட்சி நிபந்தனை விதித்தது. அப்போது கண்ணதாசனை அழைத்துப் பேசினார் காமராஜர்.

"கண்ணதாசா, இந்த சனியன் மதுவை விட்டுத்தொலை. இதனால உன்னைப் பத்தி தப்பாப் பேசுறாங்க பார்..." என்று கேட்டுக் கொண்டார்.

உடனே, கண்ணதாசன் எல்லோரும் சொல்வது போல, சினிமா உலக

https://t.me/tamilpdfebooks

அவசரம், சிக்கல், வீட்டுப் பிரச்னை போன்றவற்றைச் சொல்லி, "அதுக்காகத்தானே குடிக்கிறேன், அதுவும் பெர்மிட் வாங்கித்தானே குடிக்கிறேன்" என்று சமாதானம் சொல்லிப் பார்த்தார். ஆனாலும் காமராஜர் விடுவதாக இல்லை.

"அட, விட்ருப்பா" என்றார்.

யோசித்த கண்ணதாசன், "சரி விட்டுர்றேன்... குடிக்கிறதை இல்லை... காங்கிரஸ் கட்சியை!" என்றபடி கிளம்பினார். காமராஜர் பெரிதாகச் சிரித்து தலை அசைத்தார்.

காமராஜர் மீது திடீரென கோபம்கொள்வது, அப்புறம் சேர்ந்து கொள்வது என்று பிள்ளை விளையாட்டு போலவே இருவருக்கும் உறவு இருந்தது.

காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகி இருந்த கண்ணதாசன் மீண்டும் காமராஜர் அருகே வர ஆசைப்பட்டார். அந்த ஆசையைத்தான் தன் சொந்தத் தயாரிப்பில் வெளிவந்த 'பட்டணத்தில் பூதம்' திரைப்படத்தில் பாடலாக வடித்தார்.

'அந்த சிவகாமி மகனிடம் சேதி சொல்லடி... என்னைச் சேரும் நாள் பார்க்கச் சொல்லடி' என்று எழுதினார். இந்தப் பாடலைக் கேட்டதும் காமராஜர், "கவிஞரை வரச் சொல்லுங்க" என்று அழைப்பு விடுத்தார். இதைப் போலவே 'பட்டிக்காடா பட்டணமா?', 'கர்ணன்' போன்ற படங்களிலும் காமராஜரைக் குறித்து அர்த்தம் பொதிந்த பாடல்கள் எழுதி இருக்கிறார். காமராஜர் மரணம் அடைந்த நேரத்தில் கண்ணதாசன் இந்தியாவில் இல்லாததால் உடனே வர இயலவில்லை. அதற்குப்பின் அவருடைய சமாதிக்குச் சென்று கண்ணீர் அஞ்சலி செலுத்தினார்.

காமராஜரின் நினைவாக நடந்த ஒரு கூட்டத்தில் பேசினார் கண்ணதாசன்: "லட்சக்கணக்கானவர்கள், பேராசிரியர்கள், கலைஞர்கள், அரசியல்வாதிகள் என்னைப் பாராட்டி இருக்கிறார்கள். அவர்கள் எப்படிப்பட்ட வார்த்தைகளால் என்னை அலங்கரித்தார்கள் என்பதை நான் மறந்துவிட்டேன். ஆனால், 'காட்டுக்கு ராஜா சிங்கம்! கவிதைக்கு ராஜா கண்ணதாசன்!' என என் தலைவர் காமராஜர் புகழ்ந்து கூறிய அந்த மொழிகள் ஒரு கல்வெட்டாக என் நெஞ்சம் ஏற்றுக்கொண்டு இருக்கிறது.

என் பிறந்த நாளை அவரும், அவர் பிறந்த நாளை நானும் என்றென்றும் நினைவில் வைத்திருப்போம். ஜூன் 24-ம் தேதி முதல் டெலிபோன் அவரிடம் இருந்து எனக்கு வரும். அதைப் போல ஜூலை 15 அவருக்குச் செல்லும் முதல் போன் என்னுடையதாக இருக்கும்.

நான் ஒரு முறை பெத்தடின் ஊசிக்கு அடிமையாக இருந்தேன். அப்போது காமராஜர், 'அந்த ஊசி எத்தனை மோசமானது. தெரிஞ்சும் இப்படிப் பண்றானே... இந்தப் பாவிக்கு யார் புத்தி சொல்றது?' என்று பதறியதை நான் அறிவேன். ஆன்மீகத்தில் எனக்கு கண்ணபிரான் பிடித்தமானவர். அரசியலில் காமராஜர். தமிழ்நாட்டின் தேசிய பாரம்பரியத்தின் அந்தக் கடைசி மணி மண்டபமும் உடைந்துவிட்டது. இது வரை என் துயரங்களை எல்லாம் அவரிடம் சொல்லி

https://t.me/tamilpdfebooks

அழுதிருக்கிறேன், இனி யாரிடம் சொல்லி அழுவது?" என்று கதறினார்.

காமராஜர் பிறந்த தின விழாவை சிறப்பாகக் கொண்டாட விரும்புவார் கண்ணதாசன். அதன் ஒரு பிரதிபலிப்பாகத்தான் தொடர்ந்து 36 கூட்டங்கள் நடத்தி காமராஜர் புகழ் பாடினார். காமராஜர் பிறந்தநாளுக்காக அவர் எழுதியிருக்கும் பாடல்கள் காலத்தால் அழியாதவை. அவர்கள் இருவருடைய நட்பு போல, என்றென்றும் நிலைத்திருக்கக் கூடியது.

எம்.ஆர்.ராதா

திராவிடக் கழகத்தின் போர்வாள் என்று புகழப்படும் நடிகவேள் எம்.ஆர்.ராதாவுக்கு காமராஜர் மீது அபரிமிதமான அன்பும், மரியாதையும் இருந்தன. காமராஜர் பிறந்த தின ஊர்வலத்தின்போது, குதிரை மீது அமர்ந்து தொண்டரோடு தொண்டராக வந்து பாராட்டு வழங்கியவர் எம்.ஆர்.ராதா.

தனிப்பட்ட விவகாரத்தால் எம்.ஜி.ஆரை சுட்ட நேரம். 'காமராஜர் சொல்லித்தான் எம்.ஜி.ஆரை, எம்.ஆர்.ராதா சுட்டார்' என்று தமிழகம் முழுவதும் வதந்தி பரப்பினார்கள். உடனே, 'தேவை இல்லாம பெரிய மனுஷனை உள்ளே இழுக்காதீங்க' என்று மறுத்து, பொங்கி எழுந்தார் எம்.ஆர்.ராதா.

எந்தப் பாராட்டுக்கும் மயங்காத, விமர்சனங்களைக் கண்டு எரிச்சல் அடையாத எம்.ஆர்.ராதாவுக்கு ஒரு முறை பாராட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டபோது, 'அதெல்லாம் வேலையத்தவன் பண்ற வேலை' என்று மறுத்தார். ஆனால், 'காமராஜர் தலைமை ஏற்றுப் பாராட்ட இருக்கிறார்' என்று சொன்னதும், மறுக்காமல் ஒப்புக்கொண்டார்.

திராவிட இயக்கங்களுக்கு ஆதரவாக இருந்ததால், இந்திரா காந்தி எமர்ஜென்ஸி கொண்டுவந்த நேரத்தில், எம்.ஆர்.ராதாவும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் அவருடைய உடல் நிலை மிகவும் மோசமடைந்தது. அதனால் அவரை, எப்படியாவது சிறையிலிருந்து வெளியே கொண்டுவர வேண்டும் என்று அவருடைய குடும்பத்தார் காமராஜரை சந்தித்தார்கள். உடனே, இந்திராகாந்திக்குக் கடிதம் கொடுத்தார் காமராஜர். டெல்லிக்குச் சென்று இந்திராகாந்தியை சந்தித்துக் கடிதம் கொடுத்ததும், எம்.ஆர்.ராதாவுக்கு விடுதலை கிடைத்தது.

https://t.me/tamilpdfebooks

காமராஜருடன் பாரதிதாசன், சிவாஜி, அசோகன்

காமராஜர் இறந்த தகவலைக் கேள்விப்பட்டதும், 'இந்தியாவுல இருந்த கடைசித் தலைவனும் போயாச்சு. தலைவர்கள் அவ்வளவுதான்' என்று வருத்தப்பட்டு, அழுது அஞ்சலி செலுத்தினார்.

சிவாஜி கணேசன்

திராவிடக் கட்சியின் அரவணைப்பில் இருந்த சிவாஜி கணேசன் 1961-ல் காங்கிரஸ் கட்சிக்கு வந்தது முதல் காமராஜரின் தொண்டராகவே இருந்தார். காமராஜருக்குப் பொதுவாகவே சினிமா, நாடகம் ஆகியவை பார்க்கும் ஆர்வமும், நேரமும் கிடையாது. ஆனாலும் சிவாஜி மீது தனிப்பட்ட அன்பு கொண்டிருந்தார். சிவாஜி கணேசன் நடித்த, 'வீரபாண்டிய கட்டபொம்மன்', 'படிக்காத மேதை' போன்ற ஒரு சில படங்களை மட்டும் பார்த்துப் பாராட்டி இருக்கிறார்.

சினிமா பாடல்களில் அண்ணா, திராவிடக் கட்சிகள் ஆகியவற்றுக்கு எம்.ஜி.ஆர். முன்னுரிமை கொடுத்துவந்த நேரத்தில், சிவாஜி தனது படங்களில் காமராஜர், காங்கிரஸ் கட்சிக்கு ஓரளவு முன்னுரிமை கொடுத்தார். தேர்தல் பிரசாரத்தில் காமராஜருக்காக ஓடியாடி உழைத்தவர் சிவாஜி.

https://t.me/tamilpdfebooks

காமராஜருடன் சிவாஜி கணேசன்

இந்திராகாந்தி காங்கிரஸை உடைத்து, வெளியேறியபோது, காமராஜருடன் இருந்த எத்தனையோ தலைவர்களும் வெளியேறினார்கள். ஆனால், சிவாஜி, கடைசி வரை காமராஜரின் பக்கமே இருந்தார்.

சீனப் படையெடுப்பின்போது, நாடு எங்கும் யுத்த நிதி திரட்டப்பட்டது. தமிழகத்தில் சிவாஜி கணேசன் தலைமையில்தான் யுத்த நிதி திரட்டப்பட்டது.

சிவாஜி நடித்து வெற்றியடைந்த, 'பட்டிக்காடா பட்டணமா' பட வெற்றி விழாவில் காமராஜர் கலந்துகொண்டு கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கினார். அந்த விழாவில் கலந்துகொண்ட காமராஜருக்கும் நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. அன்று சிவாஜி வழங்கிய மரக் கலப்பை இன்னமும் சென்னை, காமராஜர் நினைவு இல்லத்தில் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டு இருக்கிறது.

மரணத்துக்கு முன் காமராஜர் கலந்துகொண்ட கடைசி நிகழ்ச்சி, சிவாஜி கணேசனின் பிறந்த நாள் விழாதான்.

பாலமந்திர்

சென்னையில் ஆதரவற்ற குழந்தைகளுக்காக அமைந்திருக்கும் பாலமந்திர் காப்பகத்தின் மீது மிகவும் ஈடுபாடு கொண்டவர் காமராஜர். ஓய்வு கிடைக்கும்போது இங்கிருக்கும் குழந்தைகளைக் காண வருவார்.

https://t.me/tamilpdfebooks

குழந்தைகளுடன் விளையாடுவார். தனக்குக் கிடைக்கும் வேட்டி, துண்டு, சால்வை போன்ற அனைத்துப் பொருட்களும் இந்த இல்லத்தில் இருக்கும் பிள்ளைகளுக்குத்தான் வரும். அதனால்தான் தனக்குப் பூமாலை போடுவதைவிட கதர்த் துணி அளிக்கப்படுவதையே விரும்பினார்.

இங்கே இருக்கும் குழந்தைகள் நன்றாகப் படிக்கத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க ஆலோசனைகள் வழங்குவார். சென்னையில் பெரிய விருந்து அளிக்கப்பட்டால், விருந்து உணவை இந்தக் குழந்தைகளுக்கும் அளிக்கச் சொல்வார். டிரஸ்ட் மூலம் அமைக்கப்பட்ட பாலமந்திர், காமராஜரின் கனவுப் பள்ளி.

சொந்தமில்லை... பந்தமில்லை

பொறுப்புக்கு வந்தபிறகு காமராஜர், உறவினர் விஷயத்தில் அதிக எச்சரிக்கையுடன் செயல்பட்டார். தன் நேர்மைக்கு யாராலும் கெட்ட பெயர் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தார், தாயாகவே இருந்தாலும் தள்ளி வைத்தே பழகினார்.

காமராஜர் விருதுநகருக்குப் போகும்போதெல்லாம் வீட்டுக்குச் சென்று தாயாரைச் சந்தித்ததில்லை. பயணியர் விடுதியில் தங்கிக்கொள்வார். விருதுநகர் வழியாக காரில் நெல்லை, நாகர்கோவில் ஆகிய நகரங்களுக்குப் போக நேரிடும்போதும் தன் வீட்டுக்குச் செல்ல விரும்பியது இல்லை.

காமராஜரிடம் யுத்த நிதி வழங்கிய திரை நட்சத்திரங்கள்

விருதுநகர் வழியாக ஒரு முறை பிரதமர் நேரு திறந்த காரில் சென்றார். சாலையின் இருபுறமும் மக்கள் வெள்ளம்! அப்போது கல்வி அமைச்சர் சி.சுப்பிரமணியம் நேருவின் அருகே சென்று, "அதோ! கூட்டத்தில் நிற்கிறாரே அவர்தான் சிவகாமி அம்மையார்" என்றார். நேரு காரைவிட்டு இறங்கி சிவகாமியிடம் சென்று நலம் விசாரித்தார். காமராஜர் நினைத்திருந்தால், பாரதப் பிரதமரை தன் வீட்டுக்கே அழைத்துச் சென்று தாயாரிடம் காட்டி இருக்க முடியும். ஆனால், காமராஜர் எப்போதும் அதைப் போல செய்ததே இல்லை.

https://t.me/tamilpdfebooks

காமராஜர் முதலமைச்சராக இருந்தபோது அவருடைய தாயார் சென்னைக்கு வந்து, "திருப்பதிக்குப் போய் சாமி கும்பிடணும்" என்று காமராஜரைக் கேட்டுக்கொண்டார்.

"போயிட்டு வாங்க..." என்றபடி பொறுப்பை உதவியாளரிடம் கொடுத்துவிட்டு காமராஜர் கோட்டைக்குச் சென்றுவிட்டார்.

அந்த நேர்முக உதவியாளர் உடனே, ஒரு தொழில் அதிபரின் காரில் சிவகாமியைத் திருப்பதிக்கு அனுப்பி வைத்தார். தகவலைக் கேள்விப்பட்டதும், பஸ்ஸில் அனுப்பாமல் காரில் அனுப்பி வைத்ததற்காக உதவியாளரைக் கோவித்துக்கொண்டார் காமராஜர். தாயாரையும் கடிந்துகொண்டார்.

கோபிச்செட்டிப்பாளையத்தில் காங்கிரஸ் மாதர் மாநாடு நடந்தது. இந்திராகாந்தி கலந்துகொண்டார் (அப்போது அவர் பிரதமர் இல்லை). காமராஜருக்குத் தெரியாமல் கோபிச்செட்டிப் பாளைய காங்கிரஸ் தலைவர்கள் சிவகாமியை விழாவுக்கு அழைத்து வந்துவிட்டனர். தட்டுத் தடுமாறி அவர் மேடையில் ஏறும்போதுதான் தாயாரை காமராஜர் கவனித்தார்.

தனது நேர்முக உதவியாளரை அழைத்து காமராஜர், "இவங்க எங்கே இங்கு வந்தாங்கன்னேன்?... விழா முடிஞ்சதும் பத்திரமா அனுப்பி வைச்சுடுங்க" என்றதோடு முடித்துக்கொண்டார். தாயார் அருகே செல்லவும் இல்லை; பேசவும் இல்லை.

ஒரு முறை காமராஜர் ரயிலில் திருநெல்வேலிக்குப் போய்க் கொண்டு இருந்தார். விருதுநகர் ரயில் நிலையத்தில் வண்டி நின்றபோது, நிறையப் பிரமுகர்கள் காமராஜரை சந்தித்தனர். காமராஜர் ரயில் பெட்டியின் வாசலில் நின்றபடி அவர்களின் வரவேற்பைப் பெற்றுக்கொண்டார்.

வண்டி நகரும்போது, ஒரு தொண்டர் காமராஜரிடம், "ஐயா, அதோ அம்மா நிக்காக..." என்று கைகாட்ட, ஏறிட்டுப் பார்த்தார். கூட்டத்துக்கு அப்பால் அவருடைய தாயார் மகனைப் பார்த்த மகிழ்ச்சியில் நின்றுகொண்டு இருந்தார்.

வண்டி நகர்ந்ததும் காமராஜர் ரயில் பெட்டியின் வாசலில் நின்றுகொண்டு இருந்தார். பெட்டியின் வாசல் தாயாருக்கு நேர் எதிரே வந்தபோது, "அம்மா! சௌக்கியமா?" என்று கேட்பதற்குள் வண்டி நகர்ந்தது. 'அதுவே போதும்' என்ற நிம்மதியில் நகர்ந்தார் சிவகாமி.

உறவுகளுக்கு உதவி இல்லை

பதவிக்கு வந்துவிட்டால், 'முடிந்த வரை தனது உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் உதவி செய்வோம்' என்பதுதான் பலருடைய நோக்கம். சட்டத்தை மீறாமல் உதவி செய்வதில் தவறு இல்லை என்றாலும், இந்த விஷயத்தில் காமராஜர் நேர் எதிர் குணத்துடன் இருந்தார். தன்னுடைய பதவி அல்லது செல்வாக்கால் உறவினர்கள் பயன் அடைந்தால், அது பல விமர்சனங்களுக்கு உள்ளாகிவிடும் என்பதால், உறவினர்களிடம் மிகவும் கண்டிப்புடன் இருந்தார்.

https://t.me/tamilpdfebooks

அம்மாவாக இருந்தாலும் சரி, தங்கையாக இருந்தாலும் சரி, தங்கை உறவினர்கள் யார் வந்தாலும் சரி, சென்னையில் ஒரு நாள் இருக்கலாம்; சென்னையைச் சுற்றிப் பார்க்கலாம். அவ்வளவுதான். அடுத்த நாளே, "எப்போ ஊருக்குக் கிளம்பறே?" என்று கேட்பதுதான் காமராஜரின் வழக்கம்.

தமிழ்நாட்டையே படிக்கத் தூண்டினார் காமராஜர். ஆனால், சொந்தப் பேரன் படிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டபோது தடுத்து நிறுத்தினார். காமராஜரின் நேர்மைக்கு இது ஒரு சான்று. இந்த சம்பவம் நடந்த சமயம் காமராஜர் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருந்தார். காமராஜால் உருவாக்கப்பட்ட பக்தவத்சலம் தமிழக முதல்வராக இருந்தார்.

'சுப்பலோட்டிய தமிழன்' திரைப்படத்துக்கு வசனம் எழுதிய எஸ்.டி.சுந்தரத்தையும், பின்னணி பாடிய சீர்காழி கோவிந்தராஜனையும் பாராட்டினார் காமராஜர்.

காமராஜரின் தங்கை நாகம்மாவின் பேரன், பதினெட்டு வயது இளைஞனான கனகவேல் காமராஜரை சந்திக்க வந்தார். அவர் கையில் ஒரு கடிதம் இருந்தது.

"என்னடா கனகவேல், என்னா விஷயம்?... என்னது காகிதம்" என்று கேட்டார் காமராஜர்.

"தாத்தா, எம்.பி.பி.எஸ்-ஸுக்கு அப்ளிகேஷன் போட்டேன், இன்டர்வியூ நடந்திருச்சு. நீங்க முதலமைச்சர்கிட்ட ஒரு வார்த்தை சொன்னீங்கன்னா இடம் கிடைச்சுரும். லிஸ்ட் போடுறதுக்குள்ள சொல்லுங்க தாத்தா. நம்ம குடும்பத்துல நான் ஒருத்தனாவது படிச்சு டாக்டராகிறேன்" என்று ஆசைப்பட்டார் அந்த இளைஞர்.

அந்தக் கடிதத்தை வாங்கிப் பார்த்தார். அந்த கவரில் பாதுகாவலர் என்ற இடத்தில் காமராஜர் பெயர் இருந்தது. உடனே, "ஏன் இதுல என் பெயர் எழுதி இருக்கு?" என்று கேட்டார்.

"மெட்ராஸ் அட்ரஸ் கேட்டிருந்தாங்க. எனக்கு இங்கே வேற யாரையும் தெரியாதே... அதான் உங்க பேரையும், இந்த வீட்டு முகவரியையும் போட்டேன்" என்றார்.

https://t.me/tamilpdfebooks

ஒரு கணம் கனகவேலைப் பார்த்தவர், பின் தீர்க்கமாக, "இந்த டாக்டர் படிப்பு, இன்ஜினீயர் படிப்புக்கெல்லாம் அரசாங்கம் ஒரு கமிட்டி போட்டிருக்கு. அவுங்க தேர்வு செஞ்சு எடுக்கிறவங்களுக்குத்தான் இடம் கிடைக்கும். எல்லாத்துக்கும் பொதுவா கமிட்டியை போட்டுட்டு, பிறகு இவனுக்கு சீட் குடு, அவனுக்கு சீட் குடுன்னு சிபாரிசு பண்றதுன்னா, கமிட்டியே போட வேண்டியதில்லையே... நீ நல்லா பதில் சொல்லி இருந்தீன்னா உனக்குக் கிடைக்கும். கிடைக்கலேன்னா பேசாம கோயம்புத்தூரில் 'பி.எஸ்ஸி. அக்ரிகல்சர்'னு ஒரு பாடம் இருக்கு, அதிலே சேர்ந்து படி... அந்தப் படிப்புக்கு நல்ல எதிர்காலம் இருக்கும். நீ டாக்டருக்குப் படிக்கிறதுக்காக என்னால் சிபாரிசு பண்ண முடியாது" என்று அழுத்தமாகக் கூறினார். கனகவேலும் மருத்துவம் படிக்கவில்லை.

உறவுக்கு மரியாதை

காமராஜர் தன்னுடைய தங்கை மகன்களுக்கு தனிப்பட்ட முறையில் எந்த உதவியும் செய்ததில்லை. ஆனால், நாகம்மாவின் மகள்கள் மற்றும் மகன்கள் ஜவஹர், மோகன் ஆகியோருக்குத் திருமணம் நடந்தபோது, உறவுக்கு மரியாதை கொடுத்து விசேஷங்களில் கலந்துகொள்வார். விருதுநகர் நாடார் திருமணங்களில் தாய் மாமன் சாஸ்திரம் என்று ஒரு சடங்கு செய்வார்கள். பெண்ணுடைய தாய் மாமனும், மாப்பிள்ளையுடைய தாய் மாமனும் சடங்கில் பங்கேற்பார்கள். தன் தங்கை மகன்கள் திருமணங்களில் பங்கேற்ற காமராஜர், சடங்குகளிலும் முழுமையாகக் கலந்துகொண்டார். தான் ஒரு தலைவர் என்ற ரீதியில் தனிப்பட்ட மரியாதையை எதிர்பார்க்கவில்லை. தாயார் இறந்த பிறகு விருதுநகர் செல்வதையே குறைத்துவிட்டார். வேறு ஏதாவது காரணத்தால் விருதுநகர் செல்ல நேர்ந்தால், ஒரு நிமிடம் அல்லது இரண்டு நிமிடங்கள் தங்கை உறவினர்களை எட்டிப் பார்த்துவிட்டுப் போய்க்கொண்டே இருப்பார்.

கடவுள் பக்தி

காமராஜருக்கும் பெரியாருக்கும் உள்ள நெருக்கத்தைப் பார்த்து பலரும், 'காமராஜர் ஒரு நாத்திகவாதி' என்று சொல்வது உண்டு. உண்மையில் காமராஜர் கடவுள் பக்தி உடையவர்தான். ஆனால், அதற்காகக் கோயில், குளம் என்று சுற்றுவதோ, பூஜை, பரிகாரம் செய்வதோ கிடையாது. வெளியூர் சுற்றுப் பயணம் செல்லும்போது, நேரம் கிடைத்தால் மட்டும் அந்த ஊரில் இருக்கும் புகழ்பெற்ற கோயில்களுக்குச் செல்வார். ஒரு கணம் மட்டுமே கடவுளைப் பார்த்துக் கும்பிடுவார், அவ்வளவுதான். எந்த நேரத்திலும் நெற்றியில் திருநீறுடன் இருக்க மாட்டார். அதைப் போல, கோயிலுக்கு உதவி கேட்டு வந்தால் பெரிதாக ஆதரிக்க மாட்டார். பள்ளிக்கூடம் கட்டுவதற்கு என்று நிதி கேட்டு வந்தால், முழு விவரங்களும் கேட்டு உதவி செய்வார்.

https://t.me/tamilpdfebooks

புகைப் பழக்கம்

காங்கிரஸ் கட்சித் தலைவராக மாறி, திருமலைப்பிள்ளை வீதி வீட்டுக்கு வந்த பிறகு காமராஜரிடம் ஒரு பழக்கம் தொற்றிக் கொண்டது. அதாவது வீட்டில் விருந்தினர்கள் இல்லாத சமயத்தில், மாடி அறையில் சிகரெட் புகைப்பார். ஒரு நாளைக்கு ஒன்று அல்லது இரண்டு சிகரெட். வீட்டில் எப்போதும் ஆட்கள் இருந்தால், புகைக்க மாட்டார்.

அதைப் போலவே வெளியூர் பயண சமயத்திலும் சிகரெட்டைத் தொடமாட்டார். காசு கொடுத்து சிகரெட்டை வாங்க மாட்டார். வீட்டுக்கு வரும் வெளி மாநில, வெளிநாட்டு நண்பர்கள் பரிசாகக் கொடுக்கும் சிகரெட் பாக்கெட்டுகளை பத்திரமாக வைத்திருந்து, அதிலிருந்தே எடுத்துப் புகைப்பார்.

தன்னிடம் இருந்த புகைக்கும் பழக்கம் வெளியே யாருக்கும் தெரியவேண்டாம் என்று நினைத்தார். ஆனால், மருத்துவர்கள், நெருங்கிய நண்பர்களிடம் இதை மறைத்ததில்லை. நீரிழிவு, ரத்தக் கொதிப்பு ஆகியவை வந்த பிறகு மருத்துவர்கள், சிகரெட் பழக்கத்தை விடும்படி ஆலோசனை சொன்னார்கள்.

‘பார்க்கலாம்’ என்று சொன்னவர், வழக்கம் போலவே புகைத்து வந்தார். ஆனால், ஒரு நாள் திடீரென புகைப்பதை அப்படியே விட்டுவிட்டார். வீட்டில் இருந்த சிகரெட் பாக்கெட்டுகளை எடுத்து, மொத்தமாக கருப்பையா மூப்பனாரிடம் கொடுத்து விட்டார்.

மரத்தடி மகாராஜா!

காமராஜர் முதல்வராக இருந்த சமயம் வெளியூர் கெஸ்ட் ஹவுசில் தங்கியிருந்தார். திடீரென கரன்ட் கட் ஆனது. அங்கே ஜெனரேட்டர் எதுவும் கிடையாது. என்ன செய்வது என்று தெரியாமல் ஆளாளுக்குப் புலம்பினார்கள். காமராஜர், உடனே உதவியாளரைக் கூப்பிட்டு, கட்டிலை மரத்தடியில் போடச் சொன்னார். மரத்தடியில் கட்டில் போடப்பட்டதும், அங்கேயே படுத்து உறங்கினார். பக்கத்திலேயே காவலர் ஒருவர் நிற்பதைப் பார்த்தார்.

https://t.me/tamilpdfebooks

"நீ ஏன் நிக்கறே?" என்று கேட்டார்.

"ஐயா உங்க காவலுக்கு..."

"யேய், என்னய யார் தூக்கிட்டுப் போகப்போறா? நீயும் பேசாமப் போய்த் தூங்கு" என்று சிரித்தபடியே சொல்லி அவரை அனுப்பிவிட்டுத் தூங்கினார்.

'டாக்டர் பட்டமா... எனக்கா..?'

செயற்கரிய செயல்களை ஆட்சிக் காலத்தில் செய்திருப்பதைப் பாராட்டி குஜராத் பல்கலைக்கழகம் காமராஜருக்கு டாக்டர் பட்டம் கொடுக்க முன்வந்தது. அந்தத் தகவலை காமராஜருக்குச் சொல்ல குஜராத்திலிருந்து வந்திருந்தார்கள்.

உடனே அவர், "டாக்டர் பட்டமா... எனக்கா..? நான் என்னத்தைப் பண்ணிட்டேன்னு என்கிட்ட வந்திருக்கீங்க. நாட்டுல எத்தனையோ விஞ்ஞானிகள், அறிவாளிகள், படிப்பாளிகள் இருக்காங்க. அவங்களுக்குப் போய் கொடுங்க. எனக்குக் கொடுக்க நான் ஒத்துக்கவே மாட்டேன்" என்று சொல்லி மறுத்துவிட்டார்.

நேர்மைக்கு மரியாதை

திருநெல்வேலி மாவட்டத்தில் காங்கிரஸ் கட்சிப் பிரமுகர் ஒருவர் திரைப்பட அரங்கம் ஒன்றைக் கட்டியிருந்தார். அரங்கத்தில் சில குறைகள் இருந்ததால் திரையரங்கத்துக்கு அரசு அனுமதி கிடைக்காமலேயே இருந்தது. அந்த நேரம் அந்தப் பகுதியில் காமராஜர் சுற்றுப் பயணம் செய்ய இருந்ததை அறிந்து, காமராஜரை அணுகி, திரையரங்கைத் திறக்க வேண்டும் என்று கேட்டு, தேதி வாங்கிக்கொண்டார்.

முதல்வராக இருக்கும் காமராஜர் திரையரங்கைத் திறக்க வருகிறார் என்றால், மாவட்ட கலெக்டர் பயந்துகொண்டு அனுமதி தந்துவிடுவார் என்பதுதான் அவரது எண்ணம். ஆனால், கலெக்டர் அனுமதி தர மறுத்துவிட்டார்.

இந்த விவரம் தெரியாமலேயே திரையரங்கைத் திறக்க வந்தார் காமராஜர். அப்போதுதான் மற்றவர்கள் காமராஜரிடம் வந்து தகவல் சொன்னார்கள்.

"நீங்கள் வந்து திறக்க இருக்கிறீர்கள் என்று சொன்ன பிறகும், கலெக்டர் லைசன்ஸ் தரவில்லை. மேலும் அதிகப்பிரசங்கித்தனமாகப் பேசுகிறார்" என்றார்கள்.

"அப்படி என்ன பேசினார்?" என்று கேட்டார் காமராஜர்.

"'நான் நாளைக்கே பதவியைவிட்டு அரசியல்ல இறங்கி, அமைச்சராக முடியும். ஆனா, உங்க அமைச்சர் நினைச்சா கலெக்டர் ஆக முடியுமா?'ன்னு கேட்கிறார்" என்றார்கள்.

https://t.me/tamilpdfebooks

"அட, சரியாத்தானய்யா சொல்லி இருக்கார்" என்றவர், திரையரங்கத்தை திறந்து வைத்தார். ஆனால், திரையரங்க அதிபரிடம், "நான் வந்ததுக்காக சும்மா திறந்து வைச்சிருக்கேன். ஆனா, அனுமதி வாங்கினதுக்கு அப்புறம்தான் தியேட்டரில் படம் போடணும்" என்று சொல்லிவிட்டுக் கிளம்பினார்.

ஊரைவிட்டுக் கிளம்பும்போது நேராக கலெக்டர் வீட்டுக்குச் சென்றார் காமராஜர். திடீரென தன்னுடைய வீடு தேடி தமிழக முதல்வர் வந்திருப்பதை அறிந்து பயந்துவிட்டார் கலெக்டர். ஆனால், எதுவுமே தெரியாதவர் போல வீட்டுக்குள் நுழைந்தார் காமராஜர்.

"படிச்ச பிள்ளைங்க, இப்படித்தான் உறுதியா இருக்கணும், யாராச்சும் ஏதாச்சும் சொல்வாங்க. அதைக்கேட்டு பயந்துடக் கூடாது" என்று நேரடியாகவே விஷயத்துக்கு வந்தார். அதற்குப் பிறகுதான் அந்த மாவட்டக் கலெக்டர் நிம்மதி அடைந்தார்.

எதுவும் பேசமுடியாமல் அதிர்ச்சியில் இருந்த அந்த வீட்டுப் பெண்மணியிடம், காபி கேட்டு வாங்கிக் குடித்து, தைரியம் சொல்லி விடைபெற்றார்.

அப்போது கலெக்டர், "இந்தத் திரையரங்கு கட்டப்பட்டதில் சில விதிமுறைகள் மீறப்பட்டு இருக்கின்றன. அதனால்தான் அனுமதி கொடுப்பதை தாமதம் செய்தேன். நீங்கள் விரும்பினால், நிபந்தனைகளுடன் உடனே அனுமதி கொடுத்துவிடலாம்" என்றார்.

"ஐயய்யோ, வேண்டாம். சட்டத்தை மீறி யார் நடந்தாலும் அது தப்புதான். உங்களுக்கு திருப்தி ஏற்பட்ட பிறகே அனுமதி கொடுங்கள்" என்று சொல்லிவிட்டுக் கிளம்பினார் காமராஜர். நேர்மை, தைரியம் எங்கே இருந்தாலும் தட்டிக் கொடுத்து பாராட்டத் தயங்கியதே இல்லை காமராஜர்.

பழகியவரை மறந்ததில்லை

சிறுவயது முதலே காங்கிரஸ் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் முதல் மாவட்டக் கட்சி நிர்வாகி ஒவ்வொருத்தரையும் பெயர் சொல்லி அழைக்கும் அளவுக்கு நினைவாற்றல் கொண்டவர். யாரையும் எந்த நேரத்திலும் மறந்ததும் இல்லை; மறந்ததாகப் பொய் சொன்னதும் இல்லை.

காமராஜர் முதல்வராக இருந்த சமயம் நெல்லைக்கு சுற்றுப் பயணம் சென்றார். அப்போது சிவகிரி பயணியர் விடுதியில் தங்கி இருந்தார்.

அதிகாலையில் எழுந்து நாளிதழ்களைப் படித்துக்கொண்டு இருந்தார். அப்போது, காவலாளி யாரோ ஓர் ஏழையை உள்ளே விடாமல் விரட்டிக்கொண்டு இருப்பதைப் பார்த்தார். உற்றுப் பார்த்தவுடன் அவர் யார் என்பதைக் கண்டுகொண்டார்.

உடனே வெளியே ஓடோடி வந்து, "வேலு நல்லா இருக்கியா? வா உள்ளே போகலாம்" என்று தோளில் கைபோட்டபடி அழைத்துச் சென்றார்.

https://t.me/tamilpdfebooks

சுதந்திரப் போராட்ட காலத்தில் சிறையில் உடன் இருந்த தன்னை அடையாளம் கண்டுகொண்டது மட்டுமின்றி, தோளில் உரிமையுடன் கைபோட்டு அழைத்துச் சென்றதைக் கண்டு மெய்சிலிர்த்தார் வேலு. அருகில் அமரவைத்துப் பழைய கதைகளைப் பேசினார். மாநில முதல்வர் ஒருவர் இத்தனை இயல்பாகப் பேசுவதை நம்பக்கூட முடியாமல் திகைத்த வேலு கொஞ்ச நேரம் பேசிவிட்டு, சொல்லவந்த தகவலைக்கூட சொல்ல முடியாமல் கிளம்பினார்.

அவர் கிளம்பிய பிறகுதான் காமராஜருக்கும் எதற்காக வந்தார் என்று சிந்திக்கத் தோன்றியது. இத்தனை வறிய தோற்றத்துடன், காலை நேரத்தில் தேடி வந்திருக்கிறார் என்றால், ஏதாவது தேவை இருக்கும் என நினைத்தார். உடனே அந்தப் பகுதி காங்கிரஸ் தலைவரை அழைத்து வேலுவைப் பற்றிய தகவலைக் கேட்டறிந்தார். அவர் எதிர்பார்த்தது போலவே குடும்பம் வறுமையில் இருந்தது. உடனே அவருக்கு தியாகி பென்ஷன் வழங்க ஏற்பாடு செய்த காமராஜர், தனக்கு வேண்டப்பட்ட ஒருவரிடம் சொல்லி அவருக்கு வேலையும் வாங்கித் தந்தார். கேட்காமலே உதவி செய்த காமராஜரை நினைத்து வியந்து போனார் வேலு.

பயிற்சி மருத்துவர்களுக்கு சம்பளம்

எம்.பி.பி.எஸ். முடித்த பிறகு ஒரு வருட காலம் இலவசமாக மாணவர்கள் வேலை செய்ய வேண்டிய கட்டாயம் இருந்தது. பயிற்சி காலத்துக்குப் பணம் வேண்டும் எனப் பலரிடம் முறையிட்டும் எதுவும் கிடைக்கவில்லை. இறுதியில் கோட்டைக்குச் சென்று காமராஜரை சந்திக்க முடிவு செய்தார்கள். பணி முடித்து காமராஜர் கோட்டையிலிருந்து வெளியே வந்தபோது ஏராளமான மருத்துவ மாணவர்கள் நிற்பதைப் பார்த்து அருகே வந்து விசாரித்தார்.



மேடையில் உரையாற்றுகிறார் காமராஜர்... அருகில் ஜெயகாந்தன்

கஷ்டப்பட்டுப் பணம் கட்டி, படித்து முடித்த பிறகும் ஒரு வருட காலம் சம்பளம் ஏதுமின்றி வேலை செய்ய வேண்டிய கட்டாயம்

https://t.me/tamilpdfebooks

இருப்பதையும், கைக் காசை செலவழித்தே போக்குவரத்து, உணவு ஆகியவற்றை சமாளிக்க வேண்டி இருப்பதையும் தெரிவித்தனர்.

"தப்பாச்சே... அஞ்சு வருஷம் படிச்ச பிள்ளைங்ககிட்ட ஓசியிலே வேலை வாங்கக்கூடாது. நீங்க கிளம்புங்க, நான் பார்த்துக்கிடறேன்" என்று சொல்லி அனுப்பினார். சொன்னபடியே உடனடியாக மாதம் ரூபாய் 105 உதவித் தொகை வழங்க உத்தரவிட்டார்.

அரசியலில் மாணவர்கள்

படிக்கும் வயதில் மாணவர்கள், கண்டிப்பாக அரசியலில் இறங்கக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தார் காமராஜர். கல்லூரி மாணவர்கள் சந்திக்க வந்தால், அனைவரிடமும் நன்றாகப் பேசுவார். படிப்பு சம்பந்தமான குறைபாடுகளைக் கேட்டு, முடிந்தால் சரிசெய்ய முயற்சி செய்வார். ஆனால், அரசியல் போராட்டங்களில் குதிக்க அனுமதி கேட்பது, கல்லூரிகளில் கட்சி செயல்பாட்டுக்கு அழைப்பது ஆகியவற்றுக்காக வந்திருந்தால் கோபமாகிவிடுவார்.

"வீட்ல எவ்வளவு கஷ்டப்பட்டு படிக்க வைக்கிறாங்க. முதல்ல உங்களுக்குக் கொடுத்த வேலையை சரியா செஞ்சு முடிங்க. படிச்சு முடிச்சு, ஒரு வேலைக்குப் போயிட்டு கட்சி வேலை செய்துக்கிடலாம்" என்று சொல்லிவிடுவார். திராவிட முன்னேற்றக் கழகத்தினர், கல்லூரியில் கட்சி வளர்ப்பதை அதிக அக்கறையுடன் செயல்படுத்தினார்கள். அதைக் குறிப்பிட்டு மாணவர்கள், காங்கிரஸ் கட்சியையும் கல்லூரியில் வளர்க்க வேண்டும் என்று வந்து கேட்பார்கள். அவர்கள் எல்லோருக்குமே, "முதல்ல படின்னேன், அப்புறம் கட்சியைக் காப்பாத்திக்கலாம்" என்பார். மாணவர்கள் போராட்டத்தில் இறங்கவோ, கட்சிப் பணிகளில் ஈடுபடவோ கடைசி காலம் வரை ஆதரவு கொடுக்கவில்லை.

நெய்வேலி சுரங்கம்

நெய்வேலி சுரங்கத்தில் அமைப்பதற்கான மாபெரும் இயந்திரங்கள் சோவியத் நாட்டிலிருந்து சென்னைத் துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தது. துறைமுகத்திலிருந்து நெய்வேலிக்குச் செல்லும் வழியில் உள்ள பாலங்கள் இயந்திரங்களைக் கொண்டு செல்லும் அளவுக்கு வலிமைமிக்கதாக இல்லாததால் எப்படிக் கொண்டுசெல்வது என்று தெரியாமல் விழித்தார்கள்.

காலமோ கழிந்தது. ஆனால், மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வற்புறுத்தியது. இந்த இயந்திரங்களை கடலூர் துறைமுகத்திலிருந்து நெய்வேலிக்குக் கொண்டுசெல்ல முடியுமா என்றும் ஆராயப்பட்டு அதுவும் தோல்வியில் முடிந்தது.

இதைக் குறித்து பலரும் பேசி முடித்து தீர்வே காணமுடியாத நிலையில், காமராஜர் தலைமையில் இறுதிக் கூட்டம் நடந்தது. கூட்டத்தில் பேசிய அனைவருமே, 'ஏன் முடியாது?' என்பதற்கான அத்தனை காரணங்களையும் அடுக்கிக்கொண்டே இருந்தார்கள்.உடனே காமராஜர், "எப்படி இருந்தால் கொண்டு செல்ல முடியும், என்னென்ன

https://t.me/tamilpdfebooks

செய்ய வேண்டும் என்பதை மட்டும் பேசுங்கள். இந்தத் திட்டத்தை வேறு மாநிலத்துக்கு அனுமதிக்க முடியாது. அதனால் தேவையானதை மட்டும் சொல்லுங்கள்" என்றார்.

அதன்பின் பொறியாளர்கள் ஒன்றுகூடி, "நான்கு நாட்கள் டைம் கொடுங்கள்... பாலங்களை எல்லாம் முழுமையாக பரிசோதித்து, என்ன செய்ய வேண்டும்? என்பதைச் சொல்கிறோம்" என்றார்கள்.

அதன்படி சில பாலங்கள் மட்டும் வலிமைப்படுத்தப்பட்டு இயந்திரங்கள் கொண்டுசெல்லப்பட்டன. கிட்டத்தட்ட ஆறு மாதங்களுக்கு மேல் தீர்க்கப்படாமல் இருந்த சிக்கலுக்கு ஐந்தே நிமிடங்களுக்குள் தீர்வு சொன்னவர் காமராஜர்.

வீட்டுக்கும் ஒரு வரலாறு

காமராஜருக்கு மட்டுமல்ல, அவர் வாழ்ந்த திருமலைப்பிள்ளை சாலை வீட்டுக்கும் ஒரு பெரிய கதையே இருக்கிறது.

காங்கிரஸ் கட்சித் தலைவராக வந்ததும், சென்னையில் குடியேற வேண்டிய நிலையில் ஆரம்ப காலத்தில் நரசிங்கபுரத்தில் இருந்த காங்கிரஸ் கமிட்டி அலுவலகத்தில்தான் தங்கியிருந்தார் காமராஜர். அதன் பிறகுதான் திருமலைப்பிள்ளை சாலை வீட்டுக்கு வந்தார்.

அந்த 8-ம் எண் வீடு ஆந்திராவைச் சேர்ந்த கோவிந்தராஜுலு என்பவருக்குச் சொந்தமானது. நீதிக் கட்சியின் முன்னணித் தலைவராக இருந்த டபுள்யு.பி.சௌந்தரபாண்டியனின் மருமகனும், விருதுநகரைச் சேர்ந்தவருமான நடராஜன் அந்த வீட்டை வாடகைக்கு எடுத்திருந்தார். இவரும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவரே. கோவில்பட்டியில் 'லாயல் டெக்ஸ்டைல்ஸ்' என்ற நூற்பு ஆலையை நண்பருடன் சேர்ந்து நடத்தி வந்த நடராஜன் சென்னைக்கு வரும்போது தங்குவதற்காக மட்டுமே அந்த வீடு வாடகைக்குப் எடுக்கப்பட்டிருந்தது. சென்னையில் அவர் இல்லாத தினங்களில் பூட்டப்பட்டுத்தான் இருக்கும்.

காமராஜர் கொசுக் கடியுடன் கட்சி அலுவலகத்தில் தங்குவதைக் கேள்விப்பட்டு, தன் வீட்டில் அவரைத் தங்க வைக்க விரும்பினார். ஆரம்பத்தில் காமராஜர் அதை ஒப்புக்கொள்ள வில்லை. பின்னர், "நான் சென்னை வந்தால் கீழே தங்கிக் கொள்கிறேன். நீங்கள் மாடியை மட்டும் பயன்படுத்துங்களேன்" என்று வற்புறுத்தவே ஏற்றுக்கொண்டார்.

காமராஜருக்கு வீடு பார்த்துக் கொடுத்த நடராஜனே, அவருக்கு சமைத்துப் போடுவதற்கும் உதவி செய்வதற்கும் ஒரு சிறுவனை அனுப்பி வைத்தார். அவர்தான் கடைசி காலம் வரை உடன் இருந்த உதவியாளர் வைரவன்.

முதல்வர் பதவிக்கு வந்த பின்னர், அரசு மாளிகைக்குச் சென்று விடலாம் என்று பலர் ஆசை காட்டியபோதும், "இந்த வீடே போதும்னேன்" என்று சொல்லிவிட்டார். அந்த வீட்டில் ஆடம்பரமும், கெடுபிடிகளும் எப்போதும் இருந்ததே இல்லை. யார் வேண்டுமனாலும் வந்து தலைவரை சந்திக்க முடியும் என்ற நிலையே கடைசி காலம் வரை இருந்தது.

https://t.me/tamilpdfebooks

அதன்பின் கொஞ்சம் கொஞ்சமாக அந்த வீடு முழுமையாக காமராஜருக்கு வந்தது. வாடகை கொடுக்க வேண்டும் என்பதில் காமராஜர் பிடிவாதமாக இருந்ததால் குறைந்த தொகை வாடகையே நிர்ணயிக்கப்பட்டது. காமராஜர் முதல்வர் ஆன நேரத்தில் அந்த வீட்டுக்கு 210 ரூபாய் வாடகை. அதன் அளவே இருந்த பக்கத்து வீட்டுக்கு 900 ரூபாய் வாடகை.

"முதல்வர் ஆனபடியால் அரசு கொடுக்கும் வாடகைப்படி 250 ரூபாயையாவது வாடகையாக உயர்த்திக் கொடுங்கள்" என்று வீட்டு உரிமையாளர் கோவிந்தராஜுலு கேட்டார். காமராஜரைப் பொறுத்தவரை அது பெரிய தொகை. மிகவும் யோசனை செய்த பிறகே அரசிடம் இருந்து அந்தத் தொகையைப் பெற்றுக் கொடுக்க சம்மதித்தார்.

கோவிந்தராஜுலு நிறைய கடன் வாங்கி இருந்தார். காமராஜர் தங்கியிருந்த வீட்டை வைத்தும் கடன் வாங்கிவிட்டார். அந்தக் கடனை அடைக்க முடியவில்லை. அதனால், 'அந்த வீட்டை வாங்கி விடலாம்' என்ற யோசனையை கட்சிக்காரர்கள் காமராஜரிடம் தெரிவித்தார்கள்.

ஆனால், காமராஜர், "அதெல்லாம் வேண்டாம்னேன்" என்று ஒரே வரியில் முடித்துக்கொண்டார். அதாவது தன் பெயரில் எந்தச் சொத்தும் இருக்கக்கூடாது என்பதில் அத்தனை பிடிவாதமாக இருந்தார்.

அதன் பிறகு அந்த வீடு ஏலத்துக்கு வருவதைத் தவிர்க்க கோவிந்தராஜுலுக்கு வங்கியிடம் இருந்து கடன் வாங்கிக் கொடுத்தால் சரியாகிவிடும் என்ற நிலை ஏற்பட்டது. அப்போது வங்கிகள் எல்லாமே தனியார் வசம் இருந்தாலும் காமராஜர் சொல்லி கோவிந்தராஜுலுவுக்கு கடன் கிடைத்தது. ஆனாலும் அவருடைய பிரச்னை தீரவில்லை. காமராஜர் வீட்டின் முன்னே தமுக்கு அடித்து, ஏல அறிவிப்பு செய்ய வேண்டிய நிலை வந்தது. தான் குடியிருந்த வீட்டின் மீது ஏல நோட்டீஸ் வருவதும், தண்டோரா அறிவிப்பதும் காமராஜருக்குப் பிடிக்கவில்லை. அதனால் வேறு வீடு பார்த்தார். ஆனால், காமராஜருக்கு பார்த்த எந்த வீடும் பிடிக்கவில்லை.

இந்தச் சூழ்நிலையில் காமராஜருக்குத் தெரியாமலேயே, பா.ராமச்சந்திரன், ஜி.கருப்பையா மூப்பனார், ராமசாமி உடையார், முருக தனுஷ்கோடி ஆகியோர் ஒன்றாக இணைந்து நவசக்தி பத்திரிகை அறக்கட்டளை சார்பில் இந்த வீட்டை கட்சிக்காக வாங்கும் முயற்சியில் இறங்கினார்கள். கட்சிக்காக என்று சொல்லப்பட்டதும் காமராஜர், "யாரிடமும் வற்புறுத்தாமல் நன்கொடை வாங்குங்கள். கோவிந்தராஜுலுவின் கடனை அடைத்துவிடுங்கள். அதைத் தவிர கோவிந்தராஜுலுக்கும் 25 ஆயிரம் ரூபாய் கொடுத்துவிடுங்கள்" என்று மட்டும் சொல்லி ஒதுங்கிக் கொண்டார்.

https://t.me/tamilpdfebooks

ஜெயலலிதாவின் நாட்டிய அரங்கேற்ற நிகழ்ச்சியில் காமராஜர்

அந்த வீட்டின் மீது பாப்பாலால் என்ற மார்வாடி கடன் கொடுத்திருந்தார். அந்த வீடு காமராஜருக்காக வாங்கப்பட இருக்கிறது என்றதும் விற்பதற்கு சந்தோஷமாக சம்மதித்தார். ஆனாலும் கடைசி வரை பல காரணங்களால் அந்த வீட்டை சொந்தமாக வாங்குவது நிறைவேறவே இல்லை. கடைசி காலம் வரை அந்த வாடகை வீட்டிலேயே வசிக்கவும், கண் மூடவும் செய்தார் காமராஜர்.

காமராஜர் இறந்ததும் இந்த வீட்டை நினைவு இல்லமாக மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை எழுந்ததும், விருதுநகரில் காமராஜர் பிறந்த வீட்டை நினைவு இல்லமாக மாற்றிப் புதுப்பித்தார் கருணாநிதி.

அதன்பின் எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு வந்த பிறகு வீடு நினைவு இல்லமாக மாற்றப்பட்டது. இங்கு காமராஜருடைய அரிய புகைப்படங்கள், அவர் பயன்படுத்திய புத்தகங்கள், பொருட்கள் என எல்லாமே வைத்திருந்தாலும், இன்னமும் உரிய முக்கியத்துவம் கொடுத்து பாதுகாக்கவோ, மக்கள் கவனத்தைத் திருப்பும் வண்ணம் புதுமை புகுத்தவோ இல்லை. அதனால் ஒரு மாபெரும் மனிதரின் இல்லம் கடமைக்காகப் பராமரிக்கப்பட்டு வருகிறது என்பதுதான் உண்மை.

நவசக்தி பத்திரிகை

1957-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் காமராஜர் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தாலும், அப்போது அவருக்கு பத்திரிகைகள் எதுவுமே ஆதரவு கொடுக்கவில்லை. மேலும் அப்போது திராவிடக் கட்சிகள் பரபரப்பாக எதையாவது பேசுவதும் எழுதுவதுமாக இருந்ததால், அவர்களுக்கே பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்தன.

இது காமராஜருக்கு வருத்தத்தைக் கொடுத்தது. காங்கிரஸ் கட்சிக்கும் ஆட்சிக்கும் பயன்படும் வகையில் ஒரு பத்திரிகை ஆரம்பிக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

முருக தனுஷ்கோடியை ஆசிரியராகக் கொண்டு, 'தாய்நாடு' என்ற பெயரில் பத்திரிகை தொடங்கப்பட்டது. பத்திரிகைக்காக அந்தப் பெயரை

https://t.me/tamilpdfebooks

வாங்கிய பின்னர் பல குழப்பங்கள் ஏற்பட்டு, பத்திரிகையை நடத்த இயலாமல் போனது. அதன் பிறகு, 'நவசக்தி' என்ற பெயரில் பத்திரிகை 1960-ல், நன்கொடையால் தொடங்கப்பட்டது. காங்கிரஸ் கொள்கைகளைப் பரப்புவதும், காமராஜர் செயல்பாடுகளை வெளிக்கொண்டு வருவதுமே நோக்கமாகக் கொண்டு செயல்பட்டது. ஆனால், பரபரப்பான பத்திரிகைகளுக்கு நடுவே இதன் விற்பனை எதிர்பார்த்தது போல் நடைபெறவில்லை.

பத்திரிகை விற்பனை சிறப்பாக நடைபெறுவதற்காகப் பலரிடம் ஆலோசனை பெறப்பட்டது. தினத்தந்தி ஆதித்தனார் பல திட்டங்களைச் செயல்படுத்தச் சொன்னார். ஆனால், எதுவுமே நடைமுறைப்படுத்த முடியாததால் இது தோல்விப் பத்திரிகையாகவே அமைந்தது.

விமர்சனங்கள்

தமிழகத்தில் இருந்த அத்தனை பத்திரிகை நிருபர்களையும் நன்றாகவே அறிவார் காமராஜர். எந்த நேரமும் பத்திரிகையாளர்கள் சென்னையிலும், டெல்லியிலும் காமராஜரை சந்திக்க முடியும். காமராஜரிடம் தகவல் கேட்கப் போவார்கள். ஆனால், காமராஜர் அவர்களிடம் ஊர், உலக விவகாரங்கள் எல்லாம் பேசுவார்.

கட்சி சம்பந்தப்பட்ட தகவல்களையும், அடுத்து எடுக்க இருக்கும் நடவடிக்கைகள் பற்றியும் ஆலோசனை கேட்பார். ஆனால், அவற்றை எல்லாம் பத்திரிகையில் எழுத வேண்டாம் என்று கேட்டுக்கொள்வார்.

காலையில் எழுந்தவுடன் அனைத்துப் பத்திரிகைகளையும் படித்துவிடுவார். ஆனால், தன்னைப் பற்றியோ, காங்கிரஸ் கட்சியைப் பற்றியோ தவறாக விமர்சனம் செய்திருந்தால், திட்டி இருந்தால் கண்டுகொள்ள மாட்டார். அதைப் போலவே பாராட்டி இருந்தாலும், உடனே நன்றி சொல்ல மாட்டார். ஆனால், எழுதப்பட்ட அனைத்தையும் மனதில் வைத்திருப்பார். சம்பந்தப்பட்ட பத்திரிகை நிருபரை அடுத்து நேரில் சந்திக்கும் போது, தவறாக எழுத வேண்டிய காரணம் என்ன என்று கேட்டுத் தெரிந்துகொண்டு, உண்மை நிலையை விளக்குவார்.

அந்தக் காலத்தில் காமராஜரைப் பற்றி அடிக்கடி கேலிப் படங்கள் வரையப்படுவது உண்டு. அதுவும் அவரைக் கன்னாபின்னா என்று நையாண்டியாக ஓவியம் வரைவதைக் கண்டு காங்கிரஸ் தொண்டர்கள் ஆவேசமாவார்கள். உடனே பத்திரிகை அலுவலகத்தைத் தொடர்புகொண்டு கண்டனம் தெரிவிக்க வேண்டும் என்று சொல்வார்கள்.

ஆனால், காமராஜர் கொஞ்சமும் கோபப்படாமல், "பொம்மையைப் பார்த்து ஏன் பயப்படறே? உண்மையைக் கண்டு பயப்படு!" என்று சொல்வார்.

பத்திரிகையாளர்கள் எத்தனை பேர் வந்தாலும் சரி, வந்து எவ்வளவு நேரம் காத்திருந்தாலும் சரி, அவர்களுக்கு உணவு, காபி கொடுக்கும் உபசாரம் கிடையாது. இதைக் குறித்து அவரிடமே பல பத்திரிகையாளர்கள் கேட்டார்கள்.

https://t.me/tamilpdfebooks

அதற்கு காமராஜர், "எனக்கே காங்கிரஸ் கட்சி சோறு போடுது. அதில நான் எப்படி உனக்குப் போடுறது?" என்று எதிர்க் கேள்வி கேட்பார்.

எஸ்.எஸ்.வாசன், சோ, சாவி போன்ற பத்திரிகையாளர்களிடம் நெருங்கிப் பழகினார். எப்போது தகவல்கள் கேட்டாலும் பேசுவார். ஆனால், 'இந்த மாதிரி செய்திகள் வெளிவரவேண்டும் என்றோ... என்னைப் பற்றி இதைப் போன்ற செய்திகளை வெளியிடாதீர்கள்' என்றோ கேட்டதில்லை.

'ஹைதராபாத் வங்கி ஒன்றில் ஒன்றரை கோடி ரூபாய் போட்டிருக்கிறார் காமராஜ்' என்று தி.மு.க-வினர் மேடையில் பேசி, அது பெரிய வதந்தியாகக் கிளம்பியது. சில பத்திரிகைகளில் அதைப் பெரிய அளவில் போட்டார்கள்.

இதைக் குறித்து காமராஜரிடம் கேட்டபோது, "எவனோ எதையோ சொல்றான், விடு! எனக்கு யானைக்கால் வியாதின்னு யாராவது சொன்னா, ஒவ்வொருத்தர் கிட்டேயும் நான் போய் என் காலைக் காட்டிக்கிட்டா இருக்க முடியும்?" என்று சாதாரணமாக எடுத்துக்கொண்டவர் காமராஜர்.

கலை ரசிகர்

நாட்டு மக்களின் அன்றாடப் பிரச்னைகளுக்கு மட்டுமே காமராஜர் முன்னுரிமை கொடுத்து வந்தாலும், அவர் சிறந்த கலா ரசிகர் என்பது பலரும் அறியாதது.

உலகிலேயே இரண்டாவது அழகிய கடற்கரையான மெரீனாவை அலங்காரப்படுத்தியவர் காமராஜர். அங்கே என்ன மாதிரி சிலைகள் வைப்பது என்று பலரிடமும் ஆலோசனை செய்தார்.

அந்த நேரம்தான் நேருவின் மேஜையில் இருந்த ஒரு நினைவுப் பொருள் காமராஜரின் நினைவுக்கு வந்தது. ஆம், வங்காள சிற்பியான தேவி பிரசாத் ராய் சௌத்ரி, உழைப்பாளர் சிலை மாடல் ஒன்றை பிரதமர் நேருவுக்குப் பரிசாக வழங்கி இருந்தார். நேருவுக்கு அந்த சிலையை மிகவும் பிடிக்கும் ஆதலால் தன் மேஜையின் மீது எப்போதும் அதை வைத்திருப்பார். நேருவின் விருப்பத்தை காமராஜர் அறிவார். அதனால் அந்த சிலையை மிகப் பெரிதாக சென்னையில் அமைக்க வேண்டும் என ஆசைப்பட்டார்.

மெரீனா கடற்கரையில் உழைப்பாளர்கள் அவ்வப்போது ஒன்றுகூடி போராட்டம் நடத்தும் இடத்திலேயே அந்தச் சிலையை நிறுவ விரும்பினார். புகழ் பெற்ற தேவி பிரசாத் ராய் சௌத்ரியே அந்தச் சிலைக்கு உயிர் கொடுத்தார். இது உண்மையில் வெண்கலச் சிலை. ஆனால், கறுப்பு வண்ணம் பூசப்பட்டு இருப்பதால், கற்சிலை போலவே தோற்றம் அளிக்கும்.

சிலையை 1959, ஜனவரி 25-ம் தேதி காமராஜர் தலைமையில், அன்றைய மாநில ஆளுநர் விஷ்ணுராம் மேதி திறந்து வைத்தார். சென்னையின் அடையாளச் சின்னங்களில் ஒன்றாக விளங்கும் உழைப்பாளர் சிலை, பெருந்தலைவரின் சிந்தனையில் உதித்தது என்பது

https://t.me/tamilpdfebooks

பெரும்பாலோர் அறியாதது.

நேருவின் விருப்பத்தை நிறைவேற்றும் வண்ணம் உழைப்பாளர் சிலையை நிறுவினார் என்றால், தன் ஆதர்ச நாயகனான காந்திஜியின் சிலையையும் நிறுவி ஆனந்தப்பட்டார் காமராஜர். ஆம், 1959, ஏப்ரல் 14-ம் தேதி தேசப் பிதா காந்திஜியின் திருவுருவச் சிலை கடற்கரையில் திறக்கப்பட்டது. இந்தச் சிலையை நிறுவியதும் சிற்பி தேவி பிரசாத் ராய் சௌத்ரிதான். இந்தச் சிலையை பண்டித ஜவஹர்லால் நேரு திறந்து வைத்தார்.

உயிருடன் இருக்கும் தலைவர்களுக்கு சிலை திறப்பதில்லை என்பதைக் கொள்கையாகக் கடைப்பிடித்து வந்தார் நேரு. இது தெரியாமல் காமராஜர் சிலையை நிறுவி, அதை நேருவின் கைகளால் திறந்து வைக்கவேண்டும் என ஆசைப்பட்டார்கள் அவருடைய நண்பர்கள். இதற்காக சிலை அமைப்புக் குழு ஒன்றை ஏற்பாடு செய்தார்கள்.

இந்த தகவல் தெரிந்ததுமே காமராஜர் கோபப்பட்டார். "எனக்கு எதுக்கு சிலை, பேசாமப் போய் உருப்படியா வேலை இருந்தாப் பாருங்க" என்று விரட்டினார். ஆனாலும், அவர்கள் விடாமல், "நேரு கையால் திறந்துவைக்க விரும்புகிறோம், நீங்கள் இடம் மட்டும் கொடுத்தால் போதும்" என்று அன்புத் தொல்லை கொடுத்தனர்.

நேருவின் நிபந்தனையை காமராஜர் அறிவார். ஆகவே, மர்மப் புன்னகையுடன், "நேரு திறந்து வைப்பதாக இருந்தால் சரிதான். ஆனால், மெரீனா கடற்கரையில் வைக்கக் கூடாது" என்று சொல்லிவிட்டார். அதன் பிறகு அண்ணாசாலையில் இடம் கேட்டார்கள். அதற்கும் மறுப்புத் தெரிவித்துவிட்டார். பின்னர்தான், போக்குவரத்துத் தொந்தரவே இல்லாத ஜிம்கானா கிளப் எதிரே இடம் கேட்டார்கள்.

விழாக் குழுவினர் நேருவை சந்தித்து, சிலை திறப்பு விழாவுக்குத் தேதி கேட்டனர். காமராஜருக்குச் சிலை என்றதும் ஒரு கணம்கூட யோசிக்காமல் சம்மதம் சொன்னார் நேரு. தர்மசங்கடத்தில் சிக்கிக்கொண்டார் காமராஜர்.

காமராஜரின் முழு சம்மதம் இல்லாமலேயே 1961, அக்டோபர் 9-ம் தேதி காமராஜர் சிலையைத் திறந்து வைத்தார் நேரு.

அந்த சிலையைத் திறந்துவைத்த நேரு, "நான் உயிரோடு இருபவர்களுக்கு சிலை அமைப்பதை விரும்புவதில்லை. மறைந்தபின் மரியாதை செலுத்துவதே ஏற்றது என எண்ணுபவன். ஆனால், காமராஜர் என் நண்பர் என்பதாலும், அவர் மக்களிடமிருந்து தோன்றிய தலைவர் என்பதாலும் அவரது உருவச் சிலையைத் திறக்க சம்மதிக்கிறேன்" என்று சொல்லித் திறந்து வைத்தார். ஏராளமான மக்கள் கூட்டத்தின் இடையே திறந்துவைக்கப்பட்ட அந்த சிலை இன்னமும் கம்பீரமாகக் காட்சி அளிக்கிறது.

குற்றாலத்தில் காமராஜர்

குற்றால சீசன் களை கட்டி இருந்தது. முதல்வராக இருந்த சமயம்

https://t.me/tamilpdfebooks

நெல்லை பகுதிக்குப் பயணம் மேற்கொண்டிருந்த காமராஜரிடம் குற்றால சீசன் பற்றிச் சொன்னார்கள். உடனே அவரும், "இரவு நேரம் இருந்தா பார்ப்போம்" என்றார்.

சென்ற வேலை சீக்கிரமாக முடிந்துவிடவே இரவில் குளிப்பதற்காக அருவிக்குப் போனார்கள். சீசன் என்பதால் மக்கள் கூட்டம் முண்டியடித்தது.

குற்றாலத்தில் காமராஜர்

காமராஜரும் அருவிக்குள் நுழைந்தார். காவலர் காமராஜரைக் கவனித்ததும், உள்ளே குளித்துக்கொண்டு இருந்த அத்தனை பேரையும் அடித்து வெளியே விரட்டினார். இதைப் பார்த்த காமராஜர் அதிர்ச்சி அடைந்து, உடனே காவலரின் அருகில் வந்தார்.

"ஏன்னேன்?... இவ்ளோ தண்ணி விழுதே... நான் மட்டுமா குளிக்கணும், எல்லோரும் குளிக்கத்தான் அருவி. எல்லோரையும் உள்ளே அனுப்பு" என்று சொன்னபடி உள்ளே நுழைந்தார். அதிர்ச்சி அடைந்த காவலர், உடனே மக்களையும் உள்ளே அனுமதித்தார்.

குளித்து, வெளியே வந்த காமராஜரைக் கண்ட சிலர் காலில் விழுந்தனர். "இதென்ன கெட்ட பழக்கம்... மனுஷன் கால்ல மனுஷன் விழுறது..." என்று செல்லமாகக் கடிந்துகொண்டார். யாரையும் தன்னுடைய காலில் விழ கடைசி வரை அனுமதிக்காதவர் காமராஜர்.

காமராஜரைப் பற்றிச் சொல்ல எவ்வளவோ இருக்கிறது. சொல்லிக்கொண்டே போகலாம். ஆனால், நிறைவாக இந்த வாக்கியத்தைச் சொல்லாமல் இருக்க முடியாது. இப்படிப்பட்ட உன்னதமான தலைவர் ஒருவர் வாழ்ந்த தமிழகத்தில் நாம் பிறக்கவும், இவர் புகழைப் பாடவும் என்ன தவம் செய்துவிட்டோம்!

https://t.me/tamilpdfebooks

எஸ்.கே.முருகன்

சுமை தூக்கும் தொழிலாளியான எஸ்.சுந்தரசாமி - பெரியாயி தம்பதிக்கு, விருதுநகரில் பிறந்தவர் எஸ்.கே.முருகன். அண்ணன் உத்தம பாண்டியனையும், அக்கா வசுகியையும் படிக்க வைக்க முடியாத அளவுக்கு ஏழ்மையில் இருந்த குடும்பத்தில், முதல் நபராக கல்லூரியில் நுழைந்து பி.காம்., பட்டம் பெற்றிருக்கிறார். மேல்நிலைப் பள்ளியில் படிக்கும் போதே, மாலைநேரங்களில் டைப்ரைட்டிங் இன்ஸ்டிடியூட்டில் பணிபுரிந்திருக்கிறார். ஓய்வு நேரங்களில் வீட்டுக்கு அருகே இருந்த நூலகத்தில் புத்தகங்களைப் படித்து, எழுதுவதில் ஆர்வத்தை வளர்த்துக் கொண்டார்.

விருதுநகரில் தட்டச்சு டைப் நடத்தத் தொடங்கி, பத்திரிகை ஏஜென்ட் ஆக பணியாற்றி, பல்வேறு பத்திரிகைகளில் நிருபராக, உதவி ஆசிரியராகப் பணியாற்றி தற்போது ஜூனியர் விகடனில் பொறுப்பாசிரியராகப் பணியாற்றுகிறார்.

விகடன் பிரசுரத்தில் வெளிவந்திருக்கும் இவரது மற்ற நூல்கள்: 'மந்திரச்சொல்', 'ஞானகுரு', 'தலையணை மந்திரம்', 'வெற்றி தரும் மந்திரம்'.

பெருந்தலைவர் காமராஜர்

காந்தி, நேரு, நேதாஜி, படேல், திலகர், வ.உ.சி., ராஜாஜி, பெரியார் போன்றவர்கள் எல்லாம் தலைவராக இருந்தார்கள் என்றால், அவர்களுக்குப் பின்னே வசதியான குடும்பம் அல்லது உயர் கல்வி இருந்தது. ஆனால், இவை எதுவுமே இல்லாமல் உழைப்பையும், உறுதியையும் மட்டுமே காட்டி இமயம் வரை உயர்ந்தவர் காமராஜர் மட்டுமே.

தனக்கென ஒரு குடும்பம் வேண்டாம், சொந்தம் வேண்டாம், நட்பு வேண்டாம், ஏன்... பெற்ற அன்னையின் அரவணைப்புகூட வேண்டாம் என்று பற்றற்ற ஞானியாக அரசியலில் திகழ்ந்தவர் காமராஜர்.

ஒரு நாடு முன்னேற வேண்டும் என்றால், முதல் தேவை, 'அனைவருக்கும் கல்வி' என்பதைக் கண்டுகொண்ட மாமேதை அவர். படிப்புக்கு இடையூறாக உணவு, கட்டணம், தூரம் போன்ற எதுவுமே இருக்கக்கூடாது என்று அத்தனைத் தடைகளையும் உடைத்து, குழந்தைகளை பள்ளிக்கு வரவழைத்த ஏழை பங்காளன்.

PERUNTHALAIVAR KAMARAJAR

₹ 105

விகடன் பிரசுரம்

ISBN 978-81-8476-365-2